MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS
SERIES No. 59

Government of Madras, 1958

# ANTĀDI-K-KOTTU

## VOLUME 2

# அந்தாதிக் கொத்து

## பாகம் 2

*Edited by :*

T. CHANDRASEKHARAN, M.A., L.T.,
CURATOR, GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS;
*and*
THE STAFF OF THE LIBRARY.

*(Under the orders of the Government of Madras.)*

1958

PRICE Rs. 5.25

MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS
SERIES No. 59

# ANTĀDI-K-KOTTU

## VOLUME 2

# அந்தாதிக் கொத்து

## பாகம் 2

*Edited by :*

T. CHANDRASEKHARAN, M.A., L.T.,
CURATOR, GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS ;
*and*
THE STAFF OF THE LIBRARY.

*(Under the orders of the Government of Madras.)*

1958

PRICE Rs. 5.25

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| i | முன்னுரை (ஆங்கிலம்) | ... | i—vi |
| ii | „ (தமிழ்) | ... | i—xx |
| 1. | பழனிப் பதிற்றுப்பத் தந்தாதி | ... | 1 |
| 2. | மயிலாசலத் தந்தாதி | ... | 23 |
| 3. | தில்லை யமக வந்தாதி | ... | 39 |
| 4. | திருத்தணிகை வெண்பா வந்தாதி | ... | 49 |
| 5. | திருச்செந்தில் நிரோட்டக யமக வந்தாதி | ... | 59 |
| 6. | திருவரங்கத் தந்தாதி (உரையுடன்) | ... | 73 |
| 7. | திருக்கடன் மல்லைப் பதிற்றுப்பத் தந்தாதி (உரையுடன்) | | 126 |
| 8. | திருமழிசைப் பதிற்றுப்பத் தந்தாதி (உரையுடன்) | ... | 199 |
| 9. | திருஎவ்வுள் பதிற்றுப்பத் தந்தாதி (உரையுடன்) | ... | 267 |
| 10. | பாலையசுவாமிகள் பதிற்றுப்பத் தந்தாதி | ... | 339 |
| 11. | சித்திர வெண்பா வந்தாதி | ... | 361 |
| 12. | திருவரங்கத் தந்தாதி உரை; பிற்சேர்க்கை : திருத்தங்கள் | | 365 |
| 13. | செய்யுள் முதற்குறிப்பு அகராதி | ... | 381 |
| 14. | பிழையுந் திருத்தமும் | ... | 396 |

# INTRODUCTION

After the advent of 'S'aṅga Kāla' several varieties of poetry appeared in Tamil literature. One of such is called 'Antādi'. A description of this Antādi has been given in the first part of this book.

This second part of 'Antādi-k-kottu' consists of eleven pieces :

1. Palani-p-Patirru-p- Pattantādi
2. Mayilācala-t-tantādi
3. Tillai Yamaka Vantādi
4. Tiruttaṇikai Veṇbā Vantādi
5. Tiruccendūr Nirōṭṭaka Yamakavantādi
6. Tiruvaraṅga-t-tantādi
7. Tirukaḍanmallai-p- Pattirru-p- Pattantādi
8. Tirumalis'ai-p-Patirru-p-Pattantādi
9. Tiruvevvul Patirru-p-Pattantādi
10. Pālaiya Svāmigal Patirru-p-Pattantādi and
11. Cittira Veṇbā Vantādi

**1. Palani-p-Pattirru-p-Pattantādi**

This is in praise of Lord Muruka who is the presiding deity of the temple at Palani. This place is said to be one of the six prominent places of Murukan.

This piece of composition consists of ten individual pieces of ten verses each-as behoves Patirru-p-Pattantādi. The style is quite simple and stresses the necessity of offering prayers to Him for salvation.

The name of the author is however not known. This is based on a paper manuscript bearing No. R 572. This was transcribed in 1923-24 from a manuscript of Ṣri Velukumara Pillai of Palani.

**2. Mayilācala-t-tantādi**

This is sung in praise of Lord Muruka of 'Mayilam' in South Arcot District which is mentioned by S'rī Aruṇagirināthar in his 'Thiruppugal'. Mayilācala-t-tantādi contains one hundred verses all in 'Kaṭṭalai-k-Kaliturai'. The author stresses the need for offering prayers to Him if one wishes to be freed from worldly ties.

This is based on two palm leaf manuscripts described under Nos. D 1667 and 1668 respectively.

The author is S'rī Cinnaiya Dēs'ikar who hailed from 'Poykai-p-Pākkam'. This much has been gleaned from his work and those of his son and grandson Paccaiyappa Upādhyāyar and Sabhāpati Upādhyāyar respectively.

### 3. Tillai Yamaka Antādi.

Cidambaram is one of the holiest of holy places. S'aivaite Saints have praised the Lord Naṭarāja of Cidambaram. There has been an unique adoration and admiration for the Lord Naṭarāja and S'ivakāmasundari. Many are the poems in His praise.

The present piece is composed in Kaṭṭalai-k-Kalitturai, a special feature of which is the intricacy of the usage of "yamakam" throughout. The same word appearing at several points in a poem with different meanings is the peculiarity of 'yamakam'.

The author of the work is not known. This is however different from the work of Mahāvidvān Mīnākṣisundaram Pillai which bears the same name. Only 77 poems are available now out of the 100.

This work is based on two palm leaf manuscripts preserved under Nos. R. 348 (a) and 2704 respectively. In the palm leaf manuscript No. R 2704 which was presented by Sri K. Shanmugam of Kumarakuppam, South Arcot district in 1951–52, a note is found at the end of the last poem that the next 23 poems are not available. In R 348 (a) which was purchased from Sri C. V. Jambulingam Pillai of Tirumayilai, the first twenty-five poems and the poems from 45 to 76 are found.

### 4. Tiruttaṇikai Veṇbā Antādi

Lord Muruka is the deity of the famous Tiruttaṇi and this piece is in His praise.

This Antādi is sung in the style of Veṇbā and is very delightful and lucid. The last two lines in each Veṇbā contain Yamaka.

The author is unknown.

This is based on a palm leaf manuscript preserved in this Library under No. D 255.

**5. Tiruccendūr Nirōṭṭaka Yamaka Antādi.**

This is also in praise of Lord Muruka of Tiruccendūr which is one of the six prime resorts of Lord Muruka. Several songs have been sung in His praise.

The songs are so composed as to exclude the use of lips. This peculiarity is called " Nirōṭṭakam ". All of them form Kaṭṭalai-k-kalitturai.

The first 35 songs have been sung by S'ivaprakās'a Svāmigal of Turaimaṅgalam. He was a great poet and had been very famous in his time which was about 250 years ago. He is the author of Nālvar Nānmaṇi Mālai, S'ivaprakās'am, Tarukka Paribhāṣai, Palamalai Antādi, Vedānta Cūḍāmaṇi, Prabhuliṅga līlai, Siddhānta Sikāmaṇi etc. He passed away at the very young age of 32. Of the 35 songs, the first 30 have already been printed. Since the manuscript in the Library contains 35 songs attributed to him, all of them have been printed now.

The other 65 songs were sung by one Cinnaiyan. Probably it is the Cinnaiya Des'ikar who has sung 'Mayilācalattantādi'. Whoever it is, there is no doubt that he too was a very great poet.

This is based on four palm leaf manuscripts described under Nos. 1644, 1645, 1646 and 1647.

**6. Tiruvaraṅga-t-tantādi.**

Lord S'rī Raṅganātha is the presiding deity of S'rīraṅgam, which is acclaimed to be the greatest of the holy temples and the deity is The Holy Divinity, considered to be the family god of S'rī Rāma – an incarnation of Mahā Viṣṇu. All the Ālvārs and many eminent and great scholars have repeatedly sung in praise of S'rī Raṅganātha and His Divine Consort Raṅganāyaki.

The present work consists of 100 verses and all of them are replete with sincere and straight advice to pray S'rī Raṅganātha. The style is magnificent, very scholarly and majestic.

The author is the much renowned " Pillai-p-Perumāl Ayyaṅgār". His original name is Alagiya Maṇavāla Dāsar. He was born at Tirumaṅgai in 'Cōla Dēs'a' and is a very great scholar and a poet

of his time. He has enriched the Tamil literature by his works which are called "Asta-p-prabandham", He lived about 700 years ago and a few striking incidents in his life have been given in the Tamil introduction to this volume.

There is a commentary for this Antādi which is written by Tirukurukai-p- Perumāl Kavirāyar" of Ālvār Tirunagari. An eminent scholar, he has ably brought out the high lights of the original piece. The commentries for verses 20 and 47 were not available here but the Tanjore Mahārāja Sarfoji's Sarasvati Mahāl Library of Tanjore obliged us by giving the same from their collection.

This is based on two palm leaf manuscripts preserved in this Library under Nos. D. 256 and R. 422 (c) respectively. The manuscript bearing No. D. 256 contains verses beginning from 54 to 100 with commentary. The other manuscript bearing No. R 422 (c) contains commentary to verses 1-64 and 92-100. This was presented to the library in 1919-20 by Alarmēlmaṅgammaṅgār, wife of Gōvindācāriyār, Mēlattirumāligai of Tiruvāymoli-p-Pillai, Ālvār Tirunagari.

Though this Antādi is in print, the commentary is quite new and hence the original together with the commentry is now published.

7. **Tiru-k-kaḍanmallai-p- Pattirru-p- Pattandādi.**

Tiru-k-kaḍanmallai - popularly known as Mahābalipuraṁ - is one of the 108 "Divya Dēs'as" of the Vaiṣṇava lore. One of the Ālvārs - Bhūta-t-tālvār - was born here.

The verses are quite simple, fine and touch the heart. It is evident the author is a very great devotee of Mahāviṣṇu. It is printed with a Pada urai.

The author is S'rī Varadarājappillai of Paiyanūr. It appears the commentary was also written by him. He seems to be of very recent times.

This is based on a paper manuscript preserved in this Library under No. R 2 (a) and has been transcribed from a manuscript of Paiyanūr Varadarājappillai of Mahābalipuram in the year 1910-11.

**8. Tirumalis'ai-p- Patirru-p- Pattantādi**

Tirumalis'ai is a famous village in Chingleput district and is the birth place of one of the Ālvārs "Tirumalis'ai Ālvār". The presiding deity at the temple is S'rī Jagannātha. The Antādi sings in His praise.

This Antādi is published with commentary and the author is S'rī Varadarāja Pillai of Paiyanūr—identical with the author of Tirukadanmallai-p- Patirru-p- Pattantādi. This is based on a paper manuscript described under No. R 2 (b). This was transcribed in the year 1910-11, from one Paiyanūr Varadarāja Pillai of Mahābalipuram.

**9. Tiruvevvul Patirru-p- Pattantādi**

Tiruvevvul - more popularly called - Tiruvellore, is one of the 108 Vaiṣṇava "Sthalas". The present piece is sung in praise of Lord Vīrarāghava who is the presiding deity.

The Antādi and its commentary now published are by S'ri Varadarāja Pillai of Paiyanūr. Both are lucid and simple. This is based on a paper manuscript preserved in this Library, under No. R 2 (c). This was transcribed in 1920-11, from a manuscript of Paiyanūr Varadarāja Pillai of Mahābalipuram.

**10. Pālaiya Svāmigal Patirru-p- Pattantādi.**

This piece of Antādi is sung in praise of S'rī S'ivajñāna Pālaiya Svāmigal of Bommapuram Ādīnam (Mayilam). The author seems to be the same Paiyanūr Varadarāja Pillai referred to earlier, and evidently is greatly devoted to Pālaiyasvāmigal. In fact the author describes the Svāmigal as an incarnation of Lord S'iva.

This is based on a paper manuscript preserved in this Library under No. R 2 (d) and the original manuscript was transcribed from a manuscript of Paiyanūr Varadarāja Pillai of Mahābalipuram in 1910-11.

**11. Cittira Veṇbā Antādi**

This is an exposition of S'aiva Vedānta principles and consists of 29 stanzas - all in Veṇbā style. The author is not known.

This is based on a palm leaf manuscript preserved in the Government Oriental Manuscripts Library under No. D 1797.

We have more or less based our publication on single manuscripts available to us in our Library. During the course of printing, errors might have crept unwittingly. Such of the errors found out by us have been appended in an 'Errata'.

Special mention should be made of, and our thanks are due to, the authorities of Mahārāja Sarfōji's Sarasvati Mahāl Library, Tanjore who have so kindly given us the missing commentary in Tiruvaraṅga-t-tantādi.

My thanks are also due to Vidvān V. S. Krishnan, Tamil Pandit of this Library who prepared the Press copy and corrected the proofs and to THE NURI PRESS LTD., for their neat execution.

Government Oriental Manuscripts Library, Madras,
13-10-1958.

**T. Chandrasekharan,**
M.A., L.T.,
Curator.

# முன்னுரை

ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று; ஏனையது
தன்னேர் இலாத தமிழ்.

தமிழ்மொழியில், சங்ககாலத்துக்குப் பின்பு தோன்றிய நூல்கள் பலதிறத்தன. புராணங்கள், காப்பியங்கள், சிறு பிரபந்தங்கள் முதலியன அவற்றுள் சிறந்தனவாகக் கொள்ளலாம். மக்கள் வாழ்க்கையோடு இயைந்த இயற்கை வருணனைகளையே பெரும்பாலும் சங்கநூல்களில் காண முடியும். சங்க நூல்களுக்குப் பிறகு எழுந்த மேற்கூறப் பெற்ற நூல்களில் புலவர்களின் கற்பனைச் சுவையையும் அணிநலங்களையும் கண்டு மகிழலாம்.

பிற்காலத்தெழுந்த சிறுபிரபந்தங்களில் அந்தாதி என்ற நூல்வகை ஒன்றாகும். அந்தாதியின் இலக்கணம் பற்றி முதற் பாகத்தின் முன்னுரையில் கூறப்பெற்றுள்ளது.

இப்பொழுது வெளிவருவது அந்தாதிக் கொத்து—இரண்டாம் பாகமாகும். இந்தத் தொகுதியினுள் பதினொரு அந்தாதிகள் அடங்கியுள்ளன. அவை, 1. பழனிப் பதிற்றுப் பத் தந்தாதி 2. மயிலாசலத் தந்தாதி 3. தில்லை யமக வந்தாதி. 4. திருத்தணிகை வெண்பா வந்தாதி 5. திருச்செந்தில் நிரோட்டக யமக வந்தாதி 6. திருவரங்கத் தந்தாதி 7. திருக் கடன்மல்லைப் பதிற்றுப்பத் தந்தாதி 8. திருமழிசைப் பதிற்றுப்பத் தந்தாதி 9. திருஎவ்வுள் பதிற்றுப்பத் தந்தாதி 10. பாலைய சுவாமிகள் பதிற்றுப்பத் தந்தாதி 11. சித்திர வெண்பா வந்தாதி என்பன.

## 1. பழனிப் பதிற்றுப்பத் தந்தாதி

இது, பழனிமலையில் கோயில் கொண்டிருக்கும் முருகப் பெருமானைப் பற்றிய அந்தாதியாகும். சிவகிரி, பழனிமலை, தென்பழனி, பழனுபுரி, ஆவினன்குடி என இத்தலத்துக்குப் பல பெயர்களுண்டு. இம் மலைமீது எழுந்தருளியுள்ள பெருமானை, பழனி யாண்டவர், தண்டாயுதபாணி என வழங்குவர். முருகப்பிரானது ஆறுபடை வீடுகளுள் இதுவும் ஒன்றாகும். திருமுருகாற்றுப் படையுள் இத்தலம் பாராட்டப்

பெற்றுள்ளது. அருணகிரிநாதர் இம் மலையையும், இறைவனையும் போற்றிப் பாடியுள்ளார். பழனிக் கோவை, பழனியந்தாதி முதலியன இத்தலத்தைப் பற்றி எழுந்த பிற நூல்களாம்.

இந்நூல் காப்புச் செய்யுளைத் தவிர நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. பதிற்றுப்பத்தந்தாதி என்ற தன்மைக்கேற்ப ஒவ்வொருவகைப் பாவில் பத்துப் பத்துப் பாடல்கள் பாடப்பெற்றுள்ளன.

பாடல்கள் எளிய இனிய நடையுடையன. பழனிக் குமரன் அருளை மனமுருகி ஆசிரியர் வேண்டுகின்றார். முருகப்பெருமானது பெருமை மிக அழகுபட இந்நூலில் எடுத்துக் கூறப் பெற்றுள்ளது. அவனுக்குத் தொண்டு செய்வதே உலகமக்களின் தலையாயகடன் என்பதை நூலாசிரியர் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

இவ்வரிய நூலை இயற்றியவர் இன்னார் எனத் தெரியவில்லை.

இவ் வந்தாதி, இந் நூல்நிலைய மூவருடக் காட்லாக்கு 572 ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றுள்ள காகிதக் கையெழுத்துப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப் பெறுகின்றது. இப்பிரதி 1923-24 ஆம் ஆண்டில், பழனி ஸ்ரீ. வேலுகுமாரபிள்ளை என்பாரிடமிருந்த பிரதியைப் பெயர்த்து எழுதப் பட்டதாகும்.

## 2. மயிலாசலத் தந்தாதி

இது, தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மயிலம் என்னும் தலத்திலுள்ள முருகப்பிரானைப் பற்றிய அந்தாதியாகும். இங்கு மலையின்மீது கோயில் அமைந்துள்ளது. இம் மலைக்கு மயில்மலை, மயிலாசலம் என்று பெயர்கள் வழங்குகின்றன. இத்தலத்தினை அருணகிரிநாதர் தமது திருப்புகழில் போற்றியுள்ளார்.

இந்நூல், காப்புச் செய்யுளைத் தவிர, நூறு கட்டளைக் கலித்துறைகளைக் கொண்டுள்ளது. மயிலவரைக் கந்தனை வணங்கினால் அடையும் பயன்கள் இவையென்றும், அவனை வணங்கி உய்ந்திலே உலக மாந்தர்க்குரிய நெறி என்றும் இந் நூலில் கூறப்பெற்றிருக்கின்றன.

முருகா, மயில்வீரா, மயிலாசலவாசா, குரவமாலை தரித்த வனே! என்று மனமுருகித் தோத்திரஞ் செய்யாதவர்கட்கு இப் பிறவித்துன்பம் ஒருகாலும் நீங்காது என்றும், அரை நொடியளவாவது அம் மயிலாசலக் கந்தனை நினையுங்கள்; இன்னும் அரைவினாடிதான் உடலில் உயிர் நிற்கும் என்று மருத்துவன் கூறிவிட்ட பிறகு நம்மைக் காப்பவர் எவர்? என்றும் இந்நூலாசிரியர் கூறுகின்றார். பின்வரும் பாடலடிகள் இதனை நன்கு உணர்த்தும்.

இளமுரு காமயில் வீரா எப்போது மியமுழங்க
வளமுரு கார்மயி லாசல வாச மகிழும்பரி
மளமுருக் கீரணி யற்குர வம்புனை வாகவென்றே
யுளமுரு கார்பிற விக்கொரு காலு மொழிவில்லையே.

[செய் : 9]

.........................................வன்னெஞ்சர்காள்
அரைமாத் திரையள வேனுமுன் னீர்வயித் தியன்கையைவிட்டு
உரைமாத் திரையெனும் போதெவர் காப்பர்நும் ஊனம்வென்றே.

[செய் : 42.]

இது, இந் நூலகிலைய டிஸ்கிருப்டிவ் காட்லாக் 1667, 1668 ஆம் எண்களில் வருணிக்கப்பட்டுள்ள பனையோலைச் சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வந்தாதி சொல்லழகு பொருளழகுகளிற் சிறந்து விளங்குகின்றது.

இவ்வுலகிலும் இன்ப மடைந்து, இருவினைகளாகிய தளைகளை அறுத்து, இப்பிறவியின் முடிவில் இயமன் அணுகாதபடி முத்திப் பேற்றை அடைவர் என்று பின்வரும் பாடல் தெரிவிக்கின்றது :

"இன்பம் பொருந்தி இருவினைக் கட்டறுத் திம்மையுற்ற
சன்ம முடிவிற் சமனணு காவணஞ் சார்வர் முத்தி
சின்மய போதச் சிவகுரு நாதற்குச் சின்னையன்சொல்
மன்மயி லாசலத் தந்தா தியினென்றை வாழ்த்தினரே."

இப்பாடல், இந் நூலாசிரியரது பேரராகிய சபாபதி உபாத்தியாயர் என்பவரால் பாடப்பெற்றது.

இந்நூலாசிரியர் பெயர் சின்னைய தேசிகர் என்பது. பொய்கைப்பாக்கம் என்னும் ஊரினர். நூல் முடிந்த பிறகு, சுவடியில் காணப்பெறும் பின்வரும் தலைப்புக்களின் கீழுள்ள பாடல்கள் இவற்றைத் தெரிவிக்கின்றன.

## நூல் இயற்றியோர் பெயர்

"நாகமு மாகமு மயிலா சலக்கந்த னற்புலவன்
பாகம் பெறுமுத் தமிழ்தேர்ந்த நீரும்பண் பார்புலவர்.
ஆக மிகவும் பெரியோர் சிறியன்சொற் கன்புசெய்வீர்
தேகங் கறுத்துத் திடங்கவி யென்பெயர் சின்னையனே;

## நூலாசிரியர் புதல்வர் பச்சையப்ப உபாத்தியாயரால் செய்யப்பட்டது

தெய்வப் புலமைத் திருவள் ளுவர்மறை தேர்ந்துரைத்த
மெய்ம்மைப் பொருளுணர் மேதா வியர்வியன் மாமயிலச்
சையத் தினன்குகன் மீதிலந் தாதித் தமிழுரைத்தான்
செய்முத்த மார்பொய்கைப் பாகையன் சின்னைய தேசிகனே."

இந் நூலாசிரியார் கல்வி கேள்விகளிற் சிறந்தவர் என்றும், முருகப் பெருமானிடம் மிக்க பக்தியுடையவ ரென்றும் தெரிகிறது. இவரைப்பற்றி வேறொன்றும் அறியக் கூடவில்லை.

## 3. தில்லை யமக வந்தாதி

இது, தில்லையம்பலத்து இறைவனைப் பற்றிப் பாடப் பெற்ற அந்தாதியாகும். சிதம்பரம் என்றும் கோயில் எனவும் புலியூர் எனவும் இத்தலம் வழங்கப்பெறும். பஞ்சபூதத் தலங்களில் இது ஆகாயத் தலமாகக் குறிக்கப் பெறும். இங்கு,

# முன்னுரை

திருச்சிற்றம்பலத்தில் தேவர்கள் முனிவர்கள் புடைசூழ்ந் திருக்க சிவபெருமான் ஆனந்தத் தாண்டவம் புரிகின்றார். சைவசமய குரவர்களில் தலைமையினராகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்ற நாயன்மார்களும், சிவனடியாரிற் பலரும் இத்தலத்தைப் போற்றிப் பாடல்கள் பாடியுள்ளனர். இத்தலத்துச் சிவபெருமானைக் குறித்து எழுந்துள்ள நூல் கள் பல. திருத்தொண்டர் புராணம் பாடியருளிய சேக்கிழாருக்கு "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத் தது அம்பலத்து ஆடல் புரியும் இறைவனே யாவர்.

இத்தலத்து இறைவனுக்கு, அம்பலத்தாடி, நடராசர், குஞ்சிதபாதர் எனப் பல திருநாமங்கள் உண்டு. அம்மனின் பெயர் சிவகாமசுந்தரி.

இந்நூல், கட்டளைக்கலித்துறை என்ற பாவகையால் ஆயது. பாடல்களனைத்தும் **யமகம்** என்ற சொல்லணி யுடையன. யமகமாவது பல அடிகளிலாயினும் ஓரடியில் பல விடங்களி லாயினும் வந்த எழுத்துத் தொடர்களே மீண்டும் வந்து பொருள் வேறு படுவது. தமிழில் இது 'மடக்கு' எனப்படும். இந்த நூல் செய்யுட்களிலெல்லாம் நான்கு அடிகளிலும் முதல் எழுத்துக்கள் ஒன்றி நின்று வெவ்வேறு பொருள் தோன்றச் செய்தலால் இவை, 'இடையிட்டு வந்த முதல் முற்று மடக்கு' என்று கூறப்பெறும்.

காப்புச் செய்யுள் நீங்கலாக 77 செய்யுட்களே இந்நூலில் கிடைத்துள்ளன. நூல்நிலையத்திலுள்ள ஏட்டுப் பிரதிகள் இரண்டனுள் ஒன்றில் 76 பாடல்களுக்கு மேல் இல்லை. இன் னொன்றில் 77 பாடல்களுள்ளன. நூல் முழுவதும் கிடைத்து வெளியிடுவதே மிக்க மகிழ்ச்சிதருவ தொன்றாயினும், இருக்கும் சுவடிகளும் சிறிது காலத்தில் சிதைந்து விடுமோ என்று அஞ்சி, உள்ளவரை வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூற் பாடல்கள் சொல்லழகும் பொருள் அமைதியும் வாய்ந்து விளங்குகின்றன. திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியுள்ள தில்லை யமக வந்தாதியினும் இது வேறானது. பாடல்கள் பெரும்பாலும் அகப்பொருள் துறைகளுக் கேற்பப் பாடப் பெற்றுள்ளன.

இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

இது, மூவருடக் காட்லாக்கு R. 348 (a), 2704 என்ற எண்களுள்ள பனையோலைச் சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு வெளிவருகின்றது. இவற்றுள் R. 348 (a) எண்ணுடைய பிரதியில் முதல் 25 செய்யுட்களும், 45-ஆம் செய்யுளிலிருந்து 76-ஆம் செய்யுள் முடியவும் உள்ளன. R. 2704-ஆம் எண்ணுள்ள பிரதியில் 1-77 ஆம் பாடல்கள் முடிய இருக்கின்றன. இந்தப் பிரதியின் இறுதியேட்டில் "இதற்கு மேல் 23 பாடல் கிடைக்க வில்லை; மேல்பாட் டெழுபத்தேழில் முற்றுப்பெற்றது" என்று ஒரு குறிப்புக் காணப் பெறுகின்றது.

இச்சுவடிகளுள் முன்னையது திருமயிலை ஸ்ரீ. C. V. ஜம்புலிங்கம் பிள்ளை என்பாரிடத்திலிருந்து 1916-17ஆம் ஆண்டு விலைக்கு வாங்கப்பட்டது. பின்னையது 1951-52ஆம் ஆண்டு தென்னாற்காடு மாவட்டம், குமாரகுப்பம் ஸ்ரீ K. சண்முகம் என்பவரால் இந் நூல்நிலையத்துக்கு நன்கொடையாகக் கொடுக்கப் பெற்றதாம்.

## 4. திருத்தணிகை வெண்பா வந்தாதி

இது, தணிகைமலை, தணிகாசலம் என்று பாராட்டப் பெறும் திருத்தணிகைவரை மீது கோயில் கொண்டுள்ள முருகக் கடவுளைப் பற்றிப் பாடப்பெற்ற அந்தாதிப் பிரபந்தமாகும். இத்தலம் தற்பொழுது திருத்தணி என்று வழங்கப் பெறுகிறது. இங்கு மலைமீது எழுந்தருளியுள்ள பிரானைக் குறித்து அருணகிரிநாதர் திருப்புகழில் போற்றியுள்ளார்.

திருத்தணிகைப் புராண மென்ற ஒரு நூல் இத்தலத்தைப்பற்றி இயற்றப்பட்டுள்ளது. இப் புராணம் சொன்னடை, பொருட்சிறப்பு, கற்பனை நயம் முதலியவற்றில் சிறந்ததாய்க் கற்றோர் பலராலும் போற்றப்படுவது.

இவ்வந்தாதி வெண்பாவினால் ஆயது. ஒவ்வொரு பாடலின் பின்னிரண்டு அடிகளும் 'மடக்கு' என்னும் சொல்லணி யமைந்து விளங்குவன. காப்புச் செய்யுள் தவிர 75 பாடல்கள் உள்ளன. இதற்கு மேல் பாடல்கள் கிடைக்கப் பெறவில்லை.

பாடல்கள் இனிய எளிய நடையுடையன. முருகப் பெருமான் உலகமக்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருப்பவன்; அடியார்கள் உள்ளங்களிலெல்லாம் வீற்றிருப் பவன்; அப்பிரானை வணங்கியுய்வதே மாந்தர் கடமை; நான் உங்களனைவரையும் காப்பேன் என நம்மிடம் தனிதைப் பெருமானே வந்தருளுவான்; அப்படிப்பட்ட பெருமையுடைய முருகப்பிரானை நினைத்துப் போற்றாதவர், இயமன் பாசக் கயிற்றால் கட்டி இழுத்துச் செல்ல வரும்பொழுது எங்ஙனம் விலக்கமுடியும்? என்று பல அரிய செய்திகள் இந்நூலில் கூறப்பெற்றுள்ளன.

இத்துணைச் சிறந்த இந்நூலினை இயற்றி நமக்களித்த ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

இது, இந் நூல்நிலைய டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 255ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றுள்ள பனையோலைப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப் பெறுகின்றது.

## 5. திருச்செந்தில் நிரோட்டக யமக வந்தாதி

இது, 'திருச்செந்தூர்' என வழங்கும் செந்திற்பதியில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானைப் பற்றிப் பாடப் பெற்ற அந்தாதியாகும். இத்தலம் முருகனது ஆறுபடை வீடுகளில் ஒன்று. 'திருச்சீரலைவாய்' என்ற பெயரால் போற்றப் பெறுவது. பத்துப்பாட்டுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையில் இந்தத் தலத்தைப் பற்றிக் கூறப்பெற்றுள்ளது. இங்குக் கோயில்கொண்டுள்ள முருகப்பெருமானைப்பற்றி, பிள்ளைத்தமிழ், பரணி, கந்தர்கலிவெண்பா முதலிய பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

இந்த அந்தாதி நிரோட்டக யமக வந்தாதி எனப்படும். நிரோட்டகம் என்பது இதழ் குவியாமல் பாடுவது. [நிர் + ஓட்டியம் = நிரோட்டியம். ஓட்டியம்—உதடு.]

யமக மென்ற சொல்லணியும் இந்நூற் பாடல்களில் அமைந்துள்ளது. (யமகத்தின் இலக்கணம் பற்றித் தில்லை யமக வந்தாதி முன்னுரையில் காண்க). காப்புச் செய்யுள் தவிர நூறு கட்டளைக்கலித்துறைகளுள்ளன. செய்யுட்கள் சொல் லழகு, பொருட் செறிவு ஆகியவற்றில் சிறந்தன. கற்றறிந்த பெரியோர் பலராலும் பாராட்டப் பெறும் சீர்மை வாய்ந்தது இந்நூல்.

இந்நூலிலுள்ள முதல் முப்பத்தைந்து செய்யுட்களை **துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிக** ளென்பவர் பாடினர். இவர் சிறந்த தமிழ்ப் புலவர். வீரசைவர். முப்பது செய்யுட் களே இவர் பாடியனவாகச் சிலர் கூறுகின்றனர்.

"..............................சிவப்பிர காசன் தொடர்நிலைப்பாத்
தன்னையன் பாக நிரோட்டத்தைந் தேழ்செய்யுட்
செப்பினனே"

என்ற செய்யுளடிகள் முப்பத்தைந்து பாடல்கள் இவர் செய்தன என்பதை வலியுறுத்தல் காண்க.

சிவப்பிரகாசர், காஞ்சீபுரத்திலிருந்த குமாரசாமி தேசிகர் என்பாருக்குப் புதல்வராகப் பிறந்தவர். வேலையர், கருணைப்பிரகாசர் என்ற சகோதரர்களும், ஞானம்பிகை என்னும் சகோதரியும் இவருக்கு உண்டு.

திருவண்ணாமலையில் "குருதேவர்" என்ற பெரியாரிடம் செந்தமிழ் நூல்களைப் பாடங் கேட்டுத் தேர்ந்தவர். திருநெல் வேலி சிந்துபூந்துறை வெள்ளியம்பலத் தம்பிரானிடம் தமிழ் இலக்கண நூல்களைப் பயின்றவர். அண்ணாமலை ரெட்டியார் என்னும் செல்வரால் ஆதரிக்கப்பட்டவர். திருச்செந்தூரில் ஒரு போலிப் புலவருடன் போட்டியிட்டு இவ்வந்தாதிப் பாடல் கள் முப்பத்தைந்தனையும் பாடிமுடித்தார் என்பர். பல தலங்களுக்கும் யாத்திரையாகச் சென்று வழிபட்டார். இறுதி யில் நல்லாற்றூர் என்ற ஊரில் தமது முப்பத்திரண்டாம் ஆண்டில் பூதவுடலை நீத்துப் புகழுடம்பு எய்தினர். நால்வர் நான்மணிமாலை, சிவப்பிரகாசம், தருக்க பரிபாடை, வேதாந்த சூடாமணி, பிரபுலிங்கலீலை, பழமலையந்தாதி, சித்தாந்த சிகாமணி என்பனவும் இன்னும் பல நூல்களும் இவ்வாசிரி

யரால் இயற்றப்பட்டனவாம். இவர் சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்பிருந்தவர் எனக் கூறப்பெறுகின்றது.

இந் நூலின் முப்பத்தைந்து பாடல்களுக்கு மேல் உள்ள 65 பாடல்களைப் பாடிய புலவர் **சின்னையன்** என்பவர். இச்செய்தி,

> "தென்னயன் மாற்கரி யான்றே சிகனெனுஞ் செந்திலர்க்குச்
> சொன்னயன் றேருஞ் **சிவப்பிர காசன்** றொடர்நிலைப்பாத்
> தன்னையன் பாக நிரோட்டத்தைந் தேழ்செய்யுட் டானுரைத்தான்
> **சின்னையன்** முன்னவன் ருள்போற்றி மற்றதுஞ் செப்பினனே.

என்ற செய்யுளால் நன்கு விளங்கும். இப்புலவரைப் பற்றிய வரலாறு ஒன்றும் அறியக்கூடவில்லை. மயிலாசலத் தந்தாதி பாடிய பொய்கைப் பாக்கம் சின்னைய தேசிகரும் இவரும், ஒருவரே எனக் கருதுதலும் கூடியதேயாம். எங்ஙனமாயினும் இப்புலவர் சிறந்த தமிழ்ப் பாவலரில் ஒருவர் என்பதில் ஐயமில்லை. சிறந்த புலமைக்கேற்ப அடக்கமும் இவரிடம் குடி கொண்டிருந்தது.

> "ஆரும் பரவும் **சிவப்பிர காச வமலன்** செஞ்சொற்
> சேரும் பனுவலி லென்புன்சொற் பானண்ணிச் சீருற்றதால்
> நீரும் பயனண்ணிற் பானிற மாமளி நீண்மலர்தேர்
> நாரும் பரிமள மாமென்னுஞ் சொன்னிலை நாட்டியதே."

என்ற செய்யுள் இவருடைய அடக்கத்தை வெளிப்படுத்து கின்றது.

இந்நூல் முன்பே அச்சிடப் பெற்றுள்ளதொன்று. ஆயினும் முதல் முப்பது பாடல்களே அச்சுப் பிரதிகளி லுள்ளன. இந் நூல்நிலையச் சுவடிகளில் நூறு பாடல்க ளிருந்தமையின் முழுவதும் அச்சிடப்பெற்று வெளிவரு கின்றது.

இது, இந் நூல்நிலைய டிஸ்கிருப்டிவ காட்லாக்கு 1644, 1645, 1646, 1647 ஆகிய எண்களின் கீழ் வருணிக்கப் பெற் றுள்ள பனையோலைச் சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப் பெறுகின்றது. இவற்றுள் 1644, 1645 ஆகிய

எண்களுள்ள பிரதிகளில் நூறு பாடல்களுள்ளன. 1646, 1647 ஆகிய எண்கள் கொண்ட பிரதிகளில் 1–96 செய்யுட்களே யுள்ளன. 1647 ஆம் எண் பிரதியின் இறுதியிலுள்ள ஓரேட்டில்;

அத்தத்தை நாடிநி றைந்திந்தி யச்செய லற்றவறி
அத்தத்தை நாடிய லானத்தைத் தாரத்தை யாரநினை
அத்தத்தை நாடினை யாஞ்செந்திற் றேனை யானறிந்தோ
அத்தத்தை நாடிங்க ளாண்டரன் கந்தனை யண்டினரே"

என்ற பாடலொன்று எழுதப்பட்டுள்ளது.

## 6. திருவரங்கத் தந்தாதி (உரையுடன்)

இந்நூல், திருவரங்கம் என்னும் தலத்தில் கோயில் கொண்டுள்ள அரங்கநாதப் பெருமானைப் பற்றிப் பாடப் பெற்றுள்ள அந்தாதிப் பிரபந்தமாகும். திருவரங்கம் என்பது—திருமால் எழுந்தருளியுள்ள திவ்ய தேசங்கள் நூற்றெட்டனுள், தலைமைபெற்றது. "கோயில் திருமலை பெருமாள் கோயில் மாலிருஞ்சோலை" என்று முக்கியமாகக் கூறப்படுகின்ற தலங்கள் நான்கில் முதலாவதாகக் குறிப்பிடப்பெறும் "கோயில்" என்ற சிறப்புப் பெயரை யுடையது இத்தலமே. "பெரிய கோயில், பூலோக வைகுண்டம்" என்ற வேறு பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு. அரங்கம் என்பது ஆற்றிடைக் குறை. காவிரி யாற்றிற்கு இடையிலுள்ள திடல் ஆதலின் அரங்கம் எனப்பட்டது. திரு என்பது அடைமொழி, திருவாய் மொழி, திருவாசகம் என்பன காண்க.

இத்தலத்தில் ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேடனாகிய படுக்கைமீது இறைவன் யோக நித்திரை செய்கின்றான்.

" ஆயிரவாய்ப் பாம்பணைமேல் அறிதுயிலின்
இனிதமர்ந்தோய்!"

என்ற திருவரங்கக் கலம்பகம் இதனை உணர்த்தும். எம்பெருமானின் திருநாமம் அரங்கநாதன் என்பது. நாய்ச்சியார் திருவரங்கநாயகியாராவர். நாயச்சியாரைப் பெரிய பிராட்டியாரெனவும், இறைவனைப் பெரிய பெருமாள் எனவும் கூறுவதுண்டு. ஆழ்வார்கள் பன்னிருவரும், அடியார் பலரும்

இத்தலத்தையும், கோயில் கொண்டுள்ள திருவரங்க நாதனை யும் பிராட்டியாரையும் போற்றித் துதித்துப் பாடியுள்ளனர். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில், இந்தத் தலப் பெருமையும் அரங்கநாதப் பெருமானின் சிறப்பும் பாராட்டப் பெற்றுள்ளன.

## நூல்

இந்நூல் கட்டளைக் கலித்துறைகளால் ஆயது. பாடல்கள் எண் நூறு. இவையனைத்தும் 'யமகம்' என்னுஞ் சொல்லணி யமைந்தவை. யமகத்தின் இலக்கணத்தை தில்லை யமக வந்தாதி முன்னுரையிற் காண்க.

இந்நூல், சொல்லழகு பொருளழகுகளில் சிறந்து விளங்குவது. முதன்மையான அந்தாதிகளில் ஒன்றாகக் கருதப்பெறுவது. திருவரங்கப் பெருமானிடம் அன்பு கொண்டு, அவன் திருவடிகளில் பணிந்து, நல்லற வழியில் நின்று நன்மைபெறும்படி உலகத்து மக்களை வற்புறுத்துவது.

## நூலாசிரியர்

இவ் வரிய நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் **அழகிய மணவாள தாசர்** என்பதனை,

"மணவாள தாசன் யமகவந் தாதி வனைந்தனனே"

என்பதனால் உணரலாம். பிள்ளைப்பெருமாளையங்கார் என்றும் இவரை அழைப்பர். இவர், சோழநாட்டிலுள்ள திருமங்கை என்னுந் தலத்தில் வைணவ மறையவர் மரபில் பிறந்தவர். நல்லாசிரியர்களை அடுத்து இளமையிலேயே தமிழ் மொழியிலுள்ள அரிய இலக்கண இலக்கிய நூல்களையும் வட மொழி நூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். கல்வியறிவுக் கேற்ப அடக்கம், நல்லொழுக்கம் முதலிய நற்பண்புகளையும் மேற்கொண்டு விளங்கினர். திருவரங்கத் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானிடம் பேரன்பு பூண்டிருந்தார்.

அக்காலத்தில் அந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த அரசன், பிள்ளைப்பெருமாளையங்காரின் அருமை பெருமை களைக் கேள்வியுற்று, அவரைத் தனது அரசவைக்கு

அழைப்பித்து, அரசாங்க அலுவல் ஒன்றையும் அளித்து தன் அண்மையிலேயே தங்கியிருக்கச் செய்தான். இவர், திருவரங்க நாதனையே மனத்தில் தியானித்துக் கொண்டு, அரசியல் அலுவலையும் குறைவின்றிச் செய்து கொண்டிருந்தார். ஒருநாள், உடனிருப்பவர்களுடன் அரசாங்க அலுவல்களைப் பார்த்துக் கொண்டிருந்த இவர் திடீரென்று எழுந்து தனது மேலாடையை எடுத்து இரண்டு கைகளாலும் "கிருஷ்ண கிருஷ்ண" என்று கூறிக்கொண்டே தேய்த்தார். பிள்ளைப் பெருமாளையங்காரின் செயலைப் பார்த்த மற்றவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. "ஏன் இவ்வண்ணஞ் செய்தீர்கள்?" என ஐயங்காரைப் பார்த்துக் கேட்டனர். உடனே இவர் "திருவரங் கப் பெருமானுக்குத் திருத்தேர்விழா நடைபெறுகிறது; தெருவில் தேர் சென்று கொண்டிருக்கிறது; தேரின் முன்பு பிடித்துச்செல்லப்பட்டுள்ள தீவட்டியிலிருந்து தேர்ச்சீலையில் தீப்பிடித்துவிட்டது; அதனைக் கைகளால் தேய்த்து அணைத் தேன்" என்றனர். இதனைக் கேட்ட மற்றவர்கள் "ஐயங் காருக்கு மனமருட்சி ஏற்பட்டுள்ளது; அரசாங்க அலுவல் பார்ப்பது இவரால் இயலாது" என எண்ணி அரசனுக்கும் அறிவித்தனர்.

இது நிற்க, திருவரங்கத் திருத்தேர்விழாவில் தேர்ச் சீலையில் தீப்பிடித்ததையும், அதனை அருகில் நின்ற பிள்ளைப் பெருமாளையங்கார் கைகளால் தேய்த்து அணைத்ததையும் அங்கிருந்த அருச்சகர்கள் தம் கண்களாற் கண்டனர். தீப் பற்றியதற்காகச் செய்ய வேண்டிய சாந்திகளைச் செய்து தேர் விழாவை நடத்தி முடித்தனர். இச் செய்தி அரசனுக்குத் தெரிந்தது. அரசன் ஐயங்காரை வரவழைத்து "தாங்கள் எப்பொழுது திருவிழாவுக்குச் சென்றீர்கள்" என வின வினன். அதற்கு இவர், ஏதோ என்மனத்தில் தோன்றியதைச் செய்தேனே யொழிய வேறில்லை என்று விடை கூறினர்.

பின்பு, அரசன் பிள்ளைப்பெருமாளையங்காரின் பெருமை களை உணர்ந்து, "தாங்கள் திருமாலிடம் மிக்க பக்தி பூண்டவராக இருக்கின்றீர்கள்; தங்களை இங்கு வைத்திருத்தல் தகாது; தங்கள் பெருமையறியாது இதுவரை செய்த குற்றங் களை மன்னிக்க வேண்டும்" என்று விண்ணப்பித்தனன்.

ஐயங்கார் அரசனிடம் "நான் திருவரங்கம் கோயிலில் நிலையாகத் தங்கியிருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்" என்று கூறினர். அவ்வரசனும் அவ்வாறே இவர் தங்குவதற்கு வேண்டிய வசதி செய்து கொடுத்தனன்.

இவர் சிறந்த தமிழ்ப் புலவர். ஆழ்வார்கள் அருளிச் செயல்களில் மிக்க ஈடுபாடுடையவர். திருவரங்கத் தந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவரங்கக் கலம்பகம், சீரங்கநாயகர் ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி என்ற எட்டு நூல்களும் இவரால் பாடப்பெற்றன. இவை அஷ்டப் பிரபந்தம் என வழங்கப் பெறும். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்ற நூலிற்குப் பின்பு வைணவச் சார்பாக எழுந்தது இந்தப் பிரபந்தத் தொகுதி எனலாம். தமிழ் இலக்கியங் கற்பவர் முதலில் விரும்பிப் படிக்கும் நூல்கள் இவை. இவற்றில் ஆழ்வார்கள் இயற்றிய பாசுரங்களின் கருத்துக்களும் சொற்றொடர்களும் கலந்துள்ளன.

'திருநறையூர் நம்பி மேகவிடு தூது' என்ற நூலொன்றும் இவர் இயற்றியதாகக் கூறுவர்.

இவரது இறுதிக் காலத்தில், ஒருநாள் அரங்கநாதனை வழிபட்டுக் கொண்டிருந்த போது அங்கு வந்த நொண்டிப் பசுவொன்று இவர்மேல் விழுந்தது. வயது முதிர்ச்சியால் அத்துன்பம் பொறாது,

"துளவ துளவ வென்னுஞ்சொல்லும் போச்சே
அளவில் நெடுமூச்சு மாச்சே—முளரிக்
கரங்கால் குளிர்ந்ததே கண்ணும்பஞ் சாச்சே
இரங்காய் அரங்கா இனி" என்று

பாடிக் கொண்டே பரமபதம் சேர்ந்தார் எனக்கூறுவர். இவர் இற்றைக்குச் சுமார் 700 ஆண்டுகட்கு முன்பு இருந்தவர் என்ப.

## உரையாசிரியர்

இந்நூலுக்கு உரைசெய்த ஆசிரியர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்னும் பெயரினராவர். ஆழ்வார் திருநகரியைச் சேர்ந்தவர். இவ்வுரை முடிவில் "இந்த உரை

எழுதினேன் நம்மாழ்வார் திருநகரித் திருக்குருகைப் பெருமாள் கவிராயன் வேங்கடத் துறைவான்" என்று எழுதப்பட்டுள்ளவற்றால் இது விளங்கும். இவர், தமிழ் இலக்கிய இலக்கணங்களில் நல்ல தேர்ச்சி பெற்றவர் என்பதுடன், ஆழ்வார் அருளிச் செயல்களையும், வைணவ மரபுச் செய்திகளையும் முறையாகக் கேட்டுணர்ந்தவர் என்பது இவரது உரையினால் தெளிவாகின்றது.

இவ்வுரை, அந்தாதிப் பாடல்களின் பொருட் சிறப்புக்களை நன்கு எடுத்தியம்புகின்றது. பொழிப் புரையாக அமைந்து பொருள் முடிவுகளை ஏற்ற வாறு முடித்துக் காட்டுவதும், சில விடங்களில் சில சொற் களுக்கு விசேடப்பொருள்கள் கூறிச்செல்வதும், ஆங்காங்கு இன்றியமையாத இலக்கணக் குறிப்புக்கள் கூறுதலும், பிறநூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் கூறுவதும் இவ்வுரைக்கமைந்த சிறப்புக்களாம்.

### இவ்வுரையிற் காணும் நயமுள்ள பகுதிகள் சில.

"உலகீர்! அரங்கத் துய்த்துங் கண்டானை
வீதியிற் கண்டுவந்தும் இரும் எனமுடிக்க. இருந்தாலது
கைகூடு மென்பது குறிப்பு. உம்மை, மிடிப்படினும்
அரங்கத்திலிருப்பதே வலியுறுத்தினது. கோவில்
புகுதப் போதில்லையாயினும் —வீதியிற் கண்டென்றார்';

[பாட்டு 41 : உரை.]

"உலகீர்! அரங்கன் சிசுபாலன் வைதற்கும்
பரமபதங் கொடுத்தா ஞ்கையாலே, அவன் புகழைப்
பரவுமின்; உமக்கும் பரமபதங் கொடுப்பான் என
முடிக்க. ஆதலாலென அவாய் நிலையும், அவனென்
னுஞ் சுட்டும், உமக்கு முத்தி தருவா னென்னுங்
குறிப்பும், உலகீரெனப் பெயரெச்சமும் சொல்லெச்
சமும் வருவிக்கப்பட்டன. ஆனை படத் தந்தம்
பறித்தானென மாறுக. ஆனை, கஞ்சனால் விடப்பட்டது."

[பாட்டு 51 : உரை.]

"அரங்கா! தந்தை நந்தன் தீமைகண்டால்
இகழார்; ஆனந்தமாவார்; உனக்கு என் தீங்கு,
அத்தன்மைத்து என முடிக்க. தீமையாவன : காலா
லுதைத்தல், கையா லடித்தல் முதலாயின. இவன்
தீமை : பல்காலும் வணங்காமை, புகழாமை முதலாயின
எனக் காண்க.

[பாட்டு 55: உரை]

இவை போன்ற சுவையான பகுதிகள் பல உள்ளன.

திருவரங்கத் தந்தாதி முன்பே அச்சிடப்பட்ட நூலாயினும் இவ்வுரை இதுவரை வெளிவராத தொன்று ஆதலின், உரையுடன் சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வுரை எழுதப்பட்டுள்ள சுவடிகளில் பல இடங்களில் சொற்றொடர்கள் நன்கு விளங்கவில்லை. எப்படியும் இவ் வரிய உரை வெளிவர வேண்டும் என்ற ஆவலின் காரணமாக ஏட்டிலுள்ளதனைப் புரிந்து கொண்டவாறே அவ்வப் பாடல்களுக்கு அடியில் வெளியிடப்பட்டிருக்கிறது. அவற்றில் பல பிழைகளிருத்தல் கூடும். தொடர்கள் முடியுமிடம், சில சொற்களின் உண்மை வடிவம் முதலியன ஒழுங்காக இல்லாமல் இருக்கின்றன. இங்குள்ள பிரதிகள் இரண்டினுள், ஒன்றில் முதலிலிருந்து 64 ஆம் பாடல் முடியவும் 93–100 ஆம் பாடல் முடியவுமே உரையுள்ளது. மற்றொரு பிரதியில் 54 ஆம் பாடல் முதல் 100 ஆவது பாடல் முடிய உரையுள்ளது. உரை முழுவதும் அச்சான பிறகு, பலமுறை உரையைப் படித்ததனால் விளங்கியவற்றையும், உரையில் விடுபட்ட சில தொடர்களையும் "திருவரங்கத் தந்தாதி—பிற்சேர்க்கை ; திருத்தங்கள்" என்ற தலைப்பில் நூலின் இறுதியில் சேர்த்துள்ளோம்.

நூலின் முதலிலுள்ள "ஓராழி வெய்யவன்" முதலான ஐந்து பாடல்களும் இந்நூலைச் சேர்ந்த வாழ்த்து, ஆசிரிய வணக்கம் முதலியவையாக இருப்பதாலும், அச்சிடப் பெற்ற அஷ்டப்பிரபந்த நூல்களில் திருவரங்கத் தந்தாதிக்கு முன்பு இப்பாடல்கள் காணப் பெறுவதாலும் இங்கும் அவை சேர்க்கப் பெற்றன.

இந்நூலின் 20 ஆம் பாடலுக்கும் 47 ஆம் பாடலுக்கும் இந் நூல்நிலையப் பிரதியில் உரை எழுதப் பெறவில்லை. அவற்றிற்குத் தஞ்சை சரசுவதிமால் நூல்நிலையத்திலிருந்த திருவரங்கத் தந்தாதி உரைச் சுவடியிலிருந்து உரையெழுதச் செய்து வரவழைத்துப் பிற்சேர்க்கையாகச் சேர்க்கப் பெற்றுள்ளது.

இப் பதிப்பு, இந் நூல்நிலைய டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 256 ஆம் எண்ணில் வருணிக்கப் பெற்றுள்ள பனையோலைப் பிரதியையும், மூவருடக் காட்லாக்கு 422 (c) ஆம் எண்ணுள்ள பனையோலைச் சுவடியினையும் ஆதாரமாகக் கொண்டு வெளி வருகின்றது. பின்னையது, ஆழ்வார் திருநகரி திருவாய் மொழிப்பிள்ளை மேலைத் திருமாளிகையைச் சார்ந்த ஸ்ரீ கோவிந்தாசாரியார் மனைவியார் ஸ்ரீமதி அலர்மேல் மங்கம் மங்கார் அவர்களால் இந் நூல்நிலையத்துக்கு 1919-20 ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கொடுக்கப்பெற்றதாகும்.

## 7. திருக்கடன் மல்லைப் பதிற்றுப்பத் தந்தாதி

இது, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மாமல்லபுரம் என்ற தலத்தினைப் பற்றிய பதிற்றுப்பத் தந்தாதியாகும். தற்பொழுது இது, மகாபலிபுரம் என்று வழங்கப் பெறுகின்றது. இது, நூற்றெட்டுத் திருமால் திருப்பதிகளில் ஒன்று. ஆழ்வார்களால் பாடப்பெற்ற பெருமையுடையது. இங்குக் கோயில்கொண்டிருக்கும் எம்பெருமானின் திருநாமம் தலசயனப் பெருமாள் என்பது. முதலாழ்வார்கள் என்று சிறப்பித்துக் கூறப்பெறும் மூவரில் நடுவில் வைத்தெண்ணப் படுபவராகிய பூதத்தாழ்வார் இத்தலத்தில் அவதரித்தவர். புண்டரீக முனிவர் என்பவர் இத்தலத்து இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றவர்.

இந்நூல், சடகோபர், மாருதி ஆகியோரைப் பற்றிய துதிப்பாக்கள், குருவணக்கம் என்ற மூன்று செய்யுட்களைத் தவிர நூறு செய்யுட்களைக் கொண்டுள்ளது. இறுதியில் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் புண்டரீக முனிவர் பற்றிய பாடல் ஒன்றும் காணப்பெறுகின்றன.

செய்யுட்கள் சாதாரண நடையுடையன. நூலாசிரியர் திருமாலிடத்து மிக்க அன்பு பூண்டு விளங்கியவர் என்பது இப்பாடல்களால் உணர முடிகின்றது.

இந்நூலாசிரியர் பெயர் வரதராசர் என்பது. கருணீக குலத்தவர். பையனூரைச் சார்ந்தவர். (பையனூர் என்பது செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ளதாகத் தெரிகின்றது). இவர் நாராயணர் என்பாரிடம் தமிழ்க்கல்வி கற்றவர். இவை யனைத்தும் பின்வரும் பாடல்களால் விளங்குகின்றன:

பொங்கு கடலி னலையெனப்
  பொருமங் களவாச் சியத்துழனி
தங்கு மினிய பையநகர்
  தகைசீர்க் கருணன் சந்ததமுந்
துங்கத் தமிழி னியலெற்குச்
  சொல்லி யருள்வோ னனக்கதலி
செங்கைத் தலநா ராயணமால்
  செய்பங் கயத்தாள் துதிபுரிவாம்.

[குருவணக்கப் பாடல்.

" வார்திக ழுலகத் துயிர்களும் வாழ்க
வரதரா சக்கவி வாழ்க "

[நூல் இயற்றியோர் என்ற தலைப்பிலுள்ள பாடலின் இறுதிவரி.]

இவர் மிக அண்மைக் காலத்தில் இருந்தவர் என்று தெரிகின்றது. இந்நூற் பாடல்களுக்குப் பதவுரையொன்று உளது. அதுவும் இவ்வாசிரியரே எழுதியிருத்தல் கூடும்.

## 8. திருமழிசைப் பதிற்றுப்பத் தந்தாதி

இஃது, திருமழிசையைப் பற்றிய பதிற்றுப்பத் தந்தாதி யாகும். இத்தலம் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான் சகநாதன் எனப் பெறுவார். ஆழ்வார்களில் ஒருவராகிய திருமழிசையாழ்வார் என்பவர் இத்தலத்தில் அவதரித்தவரே.

IV

இந்நூலில் நம்மாழ்வார், அநுமன், திருமழிசையாழ்வார் ஆகியோரைப் பற்றிய வணக்கச் செய்யுட்கள் மூன்றினைத் தவிர, நூறு பாடல்கள் உள்ளன. இறுதியில் வாழ்த்துப் பாடல் ஒன்று காணப் பெறுகின்றது.

இவ் வந்தாதி திருமழிசையில் எழுந்தருளியுள்ள பெருமானின் பெருமை, திருமழிசைப் பதியின் மாண்பு முதலியவற்றை நன்கு எடுத்துக் கூறுகின்றது. சாதாரண நடையுடையது. இந் நூலை இயற்றியவரும் பையனூர் வரதராசப் பிள்ளையாவார். இந் நூலுக்கும் பதவுரை யொன்று உளது.

## 9. திருஎவ்வுள் பதிற்றுப்பத் தந்தாதி

இது, திருவள்ளூர் எனத் தற்பொழுது வழங்கும் திருஎவ்வுளில் கோயில் கொண்டுள்ள பெருமானைப் பற்றிய பதிற்றுப்பத் தந்தாதியாகும். நூற்றெட்டு வைணவத் தலங்களில் ஒன்று.இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர் வீரராகவன் என்பது. பிராட்டியார் கனகவல்லி எனப்படுவார். ஆழ்வார்கள் இத்தலத்தையும், வீரராகவப் பெருமானையும் போற்றிப் பாடியுள்ளனர். திருஎவ்வுள் அந்தாதி என்ற சிறு பிரபந்தம் ஒன்று இத்தலத்தைப் பற்றிப் பாடப்பட்டுள்ளது. அந்தாதிக் கொத்து முதற் பகுதியில் அந்நூல் வெளியிடப் பெற்றிருக்கிறது.

இந்நூல் எளிய நடையுடையது. பராங்குசர், மாருதி ஆகியோர் தோத்திரப் பாடல்கள் இரண்டினைத் தவிர, நூறு பாடல்கள் உள்ளன. இறுதியில், வாழ்த்துச் செய்யுள் ஒன்றும், சாலிகோத்திர முனிவர் என்பாரைப் பற்றிய பாடல் ஒன்றும் காணப்படுகின்றன. இந்நூல் முழுவதும் எவ்வுள் இராகவனைப் பற்றிய துதியேயாகும். இவ் வந்தாதிக்கும் பதவுரையொன்று எழுதப்பட்டுள்ளது. அதனையும் வெளியிட்டுள்ளோம்.

### 10. பாலைய சுவாமிகள் பதிற்றுப்பத் தந்தாதி

இது, பொம்மபுர ஆதீனத்தைச் சார்ந்த வீரசைவ மடத்தில் எழுந்தருளியிருந்த பாலைய சுவாமிகள் என்பாரைக் குறித்துப் பாடப்பெற்ற பதிற்றுப்பத் தந்தாதியாகும். மயிலம் என்ற தலத்துக்குப் பொம்மபுரம் என்ற வேறு பெயர் உண்டு.

இந்நூலில், விநாயகர்துதி, சைவ சமய குரவர் நால்வர் துதி என்ற தலைப்பின் கீழுள்ள பாடல்கள் இரண்டினைத் தவிர, நூறு செய்யுட்கள் உள்ளன. இறுதியில் வாழ்த்துப் பாடல் ஒன்றுளது. இந்நூலின், பாட்டுடைத் தலைவர் "சிவஞான பாலைய சுவாமிகள்" எனவும் வழங்கப் பெறுவர் என்பது,

"...........சிவஞான பால யப்பேர்
பெற்றபதிற் றுப்பத்தந் தாதி" .............. என்ற

செய்யுளடியால் அறியக்கிடைக்கின்றது. இவரைச் சிவபெருமானாகவே கருதி இந்நூலில் பாராட்டப் பெற்றுளது. பாடல்கள் எளிய நடையிலமைந்தன.

மேற் கூறப்பெற்ற அந்தாதிகள் நான்கும் இந்நூல்நிலைய மூவருடக் காட்லாக்கு R. 2 (A) (B) (C) (D) என்ற எண்களின்கீழ் முறையே வருணிக்கப்பட்டுள்ள காகிதக் கையெழுத்துப் பிரதிகளை ஆதரமாகக்கொண்டு வெளிவருகின்றன. இவை, பையனூர் வரதராசப்பிள்ளை என்பாரிடமிருந்த காகிதக் கையெழுத்துப் பிரதிகளினின்று 1910–11ஆம் ஆண்டில் பெயர்த்து எழுதப்பட்டனவாம்.

### 11. சித்திர வெண்பா வந்தாதி

இஃது, வெண்பாக்களால் ஆன அந்தாதியாகும். 29 வெண்பாக்களுள்ளன. சைவ வேதாந்தக் கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றது. இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

இவ்வந்தாதி, நூல்நிலைய டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1797 ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பெற்ற பனையோலைப் பிரதியினை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப் பெறுகின்றது.

## முடிவுரை

இவ்வந்தாதிகளில் பெரும்பாலன ஒரே பிரதியை ஆதாரமாகக் கொண்டு வெளிவருவனவாம். பெயர்த்து எழுதுவதிலும், அச்சுத்தாள்களைத் திருத்துவதிலும் ஆங்காங்கு சிற்சில பிழைகள் நேர்ந்திருக்கலாம். பெரும் பிழைகளாகக் காணப்பட்டவற்றைத் தொகுத்து, திருத்தங்களுடன் 'பிழையுந் திருத்தமும்' என்ற தலைப்பில் நூலின் இறுதியில் கொடுத்துள்ளோம்.

திருவரங்கத் தந்தாதியில் உரையில்லாத பாடல்களுக்குத் தமது நூல்நிலையப் பிரதியிலிருந்து உரை யெழுதி உதவிய தஞ்சை சரசுவதிமால் நூல்நிலையத்தாருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வந்தாதிகளை, மூலப் பிரதிகளினின்று பெயர்த்து எழுதி அச்சிடுவதற்கு உரிய வகையில் அமைத்துக் கொடுத்த, இந் நூல்நிலையத் தமிழாசிரியர் வித்வான் வி. ஸ்ரீ. கிருஷ்ணன் அவர்கட்கும், நல்ல முறையில் அச்சியற்றித்தந்த நூற் அச்சகத்தினருக்கும் எனது நன்றி உரியதாம்.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

சென்னை,
13-10-58.

தி. சந்திரசேகரன்

# அந்தாதிக் கொத்து

## பாகம்-2

## 1. பழனிப் பதிற்றுப்பத் தந்தாதி

சிவமயம்

விநாயகர் வணக்கம்

மயிற்பரியான் றென்பழனி வாழ்குமரன் மீதிற்
பயிற்றுப்பத் தந்தாதி பாடக் - கயிற்கனிகொள்
சுப்பிரமண் யக்கணப தித்துரைய நட்பெறதங்
கற்பகம லர்ப்பதமே காப்பு.

நூல்

அருளத் தனைப்போல் வெழுத்துவர்நீர்
அருந்தத் திருமா லெனமுகில்வான்
பொருளுற் றுலகுஞ் செழிக்குமழை
பொழியும் பழனிக் கிரியான்மெய்
தெருளத் தெளிய வடியறையான்
செவ்வேட் குமரன் றினமுமெந்தன்
மருளத் தடிந்து விண்மணியாய்
மலர்க்கண் ணெதிர்வந் துதித்தனனே. 1

உதித்த கிருபை தவப்பயனு
னுனது கருணைத் திருவடியை
மதித்த பொருளா நினைந்துலையில்
வைத்த மெழுகா யுருகிமனங்
கதித்த பதத்தி லீடேறக்
கடைக்க ணருள்தா வெமக்குயிராப்
பதித்த பரனே திருப்பழனிப்
பதியாய் வேற்கைப் படையானே. 2

படைசூ முசுரே சனைச்செயித்துப்
பைம்பொன் னுலகங் காத்தெகின
நடையாள் தெய்வக் குஞ்சரியின்
நயஞ்சேர் பழனிக் குகன்சேவை
கிடையா தெவர்க்குங் கிடைத்திடிலோ
கெதிவே றெண்ணு தவனருளே
யிடையா யுதிக்குந் தீவினையு
மெமவா தனையுந் தடைப்படவே. 3

வேத முதல்வா பழனிமலை
விமலா வமலா குறத்திபங்கா
சோதி வடிவே மெ[ய்]ஞ்ஞானச்
சொரூபா னந்த முருகாவென்
றோதி யுருகி நினையாம
லுதரக் கொடுமைப் பிணிமயக்கம்
மீதி[ல்] மனத்தைச் செல்லவிட்டு
வீணே பொழுது போக்கினனே. 4

போக்கு வரவு முயிர்திரியப்
புலையாஞ் சென்ன மெடுத்தெடுத்துத்
தாக்கு முதரக் கருக்குழியஞ்
சலிக்கும் படிக்கோ வெனைவிதித்தாய்
நோக்கு மயிலா! மயிலாட
உவ்வா னரங்கள் தென்னைமடல்
சாய்க்கு முதிரப் பழனிநகர்
தலைவா! வெவர்க்குந் தயாபரனே. 5

பரனே சரவ ணேறற்பவனே
பழனிக் கிரியா பன்னிரண்டுங்
கரனே யென்று மனவாக்குக்
காய மதனிற் றுதிக்கவல்லார்
புரமூன் றெரித்தோன் வளர்கயிலைப்
பொருப்பி லமரக் கருணையம்பு
திரமே தருவாய் முருகரெனச்
செகத்தில் வேத முரைத்திடுமே. 6

உரையாய் பசும்பொற் கிளிமடவா
ருவகைக் கலவி மயக்கில்நெஞ்சங்
கரையா திருந்து சிவத்தியானக்
கடலின் மூழ்கி யருட்கிருபை
நிரையா நிலத்துத் தபோபலத்தின்
நேர்மை யறிய வடியர்முனம்
விரைவா மயில்மீ தேறிவர
வேணும் பழனிப் பெருமானே. 7

பெருமாங் கன்னி காரவனப்
பிரியா விடையான் றவத்துதித்த
குருமா மணியா வினன்குடிவாழ்
குமரக் கடவுள் தெய்வமென்ன
[வி](யி)ருமா நிலத்திற் றுதித்தோர்க
ளின்பப் பலன்பெற் றிருந்துநல
முருமா றியசெந் திருமாலோ
திமத்தோ னுரைக்க வொண்ணுதே. 8

ஒண்ணு தடங்குஞ் சீவநிலை
யொடுங்குங் கூட்டிக் கிருவினையை
கண்ணு விளைத்து நமன்றூதர்
கட்டிக் கொடுபோம் வேளையிலே
அண்ணு மலையா னருட்பழனி
ஆறு முகவா வெனத்துதிப்போன்
றண்ணுர் கமலப் பதச்சே(ர்)வை
தந்தே யெதிர்வந் தாள்வாயே. 9

வாயே துதிக்க மனம்நினைக்க
மலர்க்கை கூப்பப் பகலிரவும்
நாயே னுனது பணிவிடையால்
நடக்கத் தவம்பெற் றென்னகன்றை[த்]
தாயே நினைத்த படிபோலத்
தனித்தோ ருபதே சம்புரிய
நீயே வருவாய் வடிவேற்கை
நிமலா பழனிக் கிரிவாழ்வே. 10

### வேறு

வாழ்வி னைச்சத மெனும்படி நினைந்துனை
மறந்துளம் புறம்பான
தாழ்வி னைக்கெடுத் தருள்நிலை வழிபடத்
தந்தரு ளென்கோவே
வேழ்வி நத்திய வமரர்க ளசுரரால்
வேதனைப் படுமாய்கை
யூழ்வி னைத்துயர் தவிர்த்தவேற் கையனே
யுயர்சிவ கிரியானே. 11

ஆன தன்மையி லறிவிருந் தேயெம
னுக்கினை வருங்காலம்
ஞான போதக சரவண பவவென
நான்றுதித் திடவாயா
ஊனு டம்புவிட் டுயிர்கயி லாயவீ
டுய்வதற் கருள்பாராய்
தேன லர்ந்தபூஞ் சோலையம் பழனிவாழ்
தேசிகக் குகவேளே. 12

வேளை வந்தடி வணங்கிலேன் நினைக்கிலேன்
மெய்ச்சிவ கிரிக்கோவில்
நாளி னும்வலம் வந்திலேன் பாடிலேன்
நாயினேன் கடைத்தேற
ஆள்வ தெப்படி யோதிரு வுளச்செய
லறிகிலே னருள்பாராய்
தோளி னிற்பசுங் கடம்பனே சேவகத்
தோகைவா கனத்தானே. 13

தானெ னும்பொரு ளாளனைத் தத்துவ
தற்பரங் கடந்தகாரணனை
ஞானபூ ரணனைப் பிரணவ சொரூப
நாதனை நான்மறைமுதலை
வானநா யகனைப் பழனிமா மலைவாழ்
வள்ளலைப் பணியாதா
ரூனமா னிடராய்ப் பிறந்திறந் துழன்று
சோறெனக் கிடந்தலைவாரே. 14

அலையும் வஞ்சமு மாயையும் பொய்ம்மையு
மளவிலாப் பலசீவக்
கொலையுஞ் செய்தபே ராகிலுஞ் சிவகிரிக்
கோவில்சூழ் வலம்வந்தாற்
தொலையும் பாவங்கள் தொலைந்துபின் சுவர்க்கமே
தோற்றுவர் நிசமென்றே
கலையு ஞானமும் வேதமு முரைத்திடுங்
கடவுளர் பதிமேலே. 15

மேலு முப்புரி நூன்மணி மார்பமும்
வேலும்பன் னிருதோளுங்
காலு நூபுரக் கிண்கிணிச் சதங்கையின்
கண்களுங் கனிவாயுங்
கோல ணிந்தகைத் தலங்களு மாகவே
கொலுச்சிவ கிரிக்கோவிற்
சால நித்தமுந் தரிசனை புரிபவர்
தவநிலை யடைவாரே. 16

அடைந்த பேரொளி வடிவுடை யானன்மெய்
யாரணப் பொருளானோன்
கடந்த ஞானவா ரிதியனு வினன்குடிக்
கருணையம் பெருமான்வா
ளிடங்கொள் சேவக வேலினோ னனந்த
மென்மனங் கசிந்தூறிப்
படர்ந்த பேரறி வேதெளிந் திடவயன்
படைத்தன னெனைநன்றே. 17

நன்று நன்றுநீ யெனைத்தடுத் தாண்டதும்
நாயினேன் படும்பாட்டை
யென்று தீரவைத் திடுவையோ வறிகிலே
னென்றலை யெழுத்தேயோ
குன்று தோறுகந் தாயருட் கூத்தனே
குஞ்சரி மணவாளா
வென்றி வேற்படை யாய்பழ னிப்பதி
மேவுசண் முகத்தானே. 18

முகத்த வல்லிசெந் தாமரைக் குவளையின்
முகவிரி மணம்வீச
மகத்து வம்புனைத் தென்பழ னித்திரு
வாவினன் குடிக்கோமான்
இகத்தி லும்பொருள் பரத்திலு மருள்கொடுத்
தின்பபே ரின்பமாம்வாழ்க்கைச்
சுகத்தில் வைத்தெனை யாண்டகா ரணங்களைச்
சொல்லல்பூ ரணமாமே. 19

பூர ணத்திலே சுழிமுனை வாசியின்
பொருளொளி யறிந்தாலும்
வார ணக்கொடி பழனியங் கிரியனை
வணங்கிட வறியாதார்
தார ணிக்குளே பந்தபா சங்களிற்
றகுமிரு வினைமூடி
யோர ணுப்பொழு தாகிலும் பிறவிநோ
யுறுபிணி யேற்பாரே. 20

வேறு

ஏற்றமுந் தாழ்வு மாக விருந்திடுஞ் செனன துன்பம்
மாற்றிலே னடைய மையா வடியனைத் தடுத்தாட் கொள்ள
வேற்றுமை செய்தீ ராகில் வேறெங்குங் கதியைக் காணேன்
ஆற்றிலே பிறந்த மூர்த்தி வருட்சிவ கிரிப்பி ரானே. 21

பிராணதத் துவனே முக்கட் பித்தர்கள் மணியே சோதி
பராபர வடிவே தெய்வப் பழநியங் கிரியாய் ஞானக்
குராவடி வாழ்வே யென்று கூறிய தேவ ரெல்லாம்
தராதல மிசையிற் கோவிற் றவப்பணி விடைக்கா வாரே. 22

வாரதே கருமம் வந்த வழியிலே கருமம் தீர்ந்து
போரதே தரும மந்தப் புன்றொழில் மயக்க மென்னைத்
தீரவே கருணை பாராய் சிவகிரிக் கரசே நீபத்
தாரணி புயத்தாய் வேற்கை சரவண பவத்தை யாவே. 23

ஐயனுக் குபதே சித்தா யருமறைப் பொருளு மானாய்
வெய்யசூர்ப் பகைத டிந்தாய் விண்ணவர் குறையுந் தீர்த்தாய்
வையக முழுதுங் காத்தாய் வளர்சிவ கிரிமேல் நின்றாய்
தெய்வநீ தெய்வ மல்லாற் செகத்தில்வே றறிகி லேனே. 24

அறிவது சிவத்தி யான மகல்வது கருமம் பாவம்
பெறுவது தவப்பிர காசம் பிரிவது வுலகப் பாசம்
நெறிமுறை தவரு வண்ண நெஞ்சினுள் ளொளியாய் நிற்பாய்
அறுமுகப் பரமா னந்த வருட்சிவ கிரிக்கோ மானே. 25

மானெனும் விழியார் மோக வலையில்வீழ்ந் தழுந்தி டாம
லூனுடம் பெடுத்தே கன்ம முறுபிணி நோயு ழுமற்
றுனதர் மங்க ளென்றுந் தபோபல நிலையில் நின்று
ஞானவா ரிதியின் மூழ்க நல்குவாய் பழனி வேந்தே. 26

வேந்தனே கடப்ப மார்பா மெய்யர்க்குள் மெய்யாய் நின்ற
சேந்தனே யானை பங்கா தேவர்க டேவே வள்ளி
காந்தனே பழனி வாழும் கடவுளே யென்று கோவிற்
சூழ்ந்தநே ரமும்போற் றமற் றுயர்க்கட லழுந்தி னேனே. 27

அழுந்தினேன் சிவசி வாவென் றடிக்கடித் துதித்துப் பார்மேல்
விழுந்தெழுந் துனது காட்சி வேடமே காணப் பெற்றேன்
றெழும்பொரு ளெனவு தித்த தூயனே மாசொன் றில்லாச்
செழுங்கனி வாயா தெய்வச் சிவாசல வேற்கை யானே. 28

கையிலே வெண்ணெய் காட்டிக் காய்ச்சுநெய்க் கழுவார் போல
அய்யனே நீயி ருக்க யான்றுயர்ப் படுவ தாமோ
மெய்யனே பழனி வாழ்வே வேதவே தாந்த ரூபச்
சைவநா யகனே யிந்தச் சாட்சியைச் சொல்லு வாயே. 29

சொல்லுவீர் ஞான போதம் தூலசூக் குமச ரீர
மெல்லையின் கார ணங்கள் யானறிந் திடவும் வேண்டும்
பல்கலை போற்றும் நாதா பழனியங் கிரியாய் ஞானச்
செல்விவாழ் சேரர் கோமான் றிருப்பணிக் கோவி லானே. 30

வேறு

கோயிற் புறஞ்சூழ்ந்து குற்றேவல் செய்யாமல்
நாயிற் கடையே னடையுடையும் பாவனையும்
தீயிற் படும்புழுவாய்ச் சென்மவினைக் காவேனோ
தாயிற் சிவகிரியாய்ச் சண்முக சிகாமணியே. 31

மணிவிளக்கைச் சுற்றிவரும் வண்டதுபோல் வீண்மாயைக்
குணிதமிட்டுப் பாவமெனும் கோட்டைகட்டிப் பூதநிலை
பணிதிருத்தி யாங்காரம் பற்றும் பசுபாசுந்
தணிவதினி யெப்பொழுதோ தமிழ்ப்பழனி வாழ்பரனே. 32

பரமபதங் காட்டுவையோ பாவக் கருக்குழியில்
நரகமிசைத் தாழ்த்துவையோ நங்கோவே யுன்கிருபை
திரமதனை யானறியேன் றென்பழனி யங்கிரியாய்
இரவிதொழும் பாதா விளங்குமர நாயகனே. 33

நாயகனே கண்மணியே நந்தா மணிவிளக்கே
தூயசிவ கிரியாய்(ச்) சோதிவடி வேலுடையாய்
மாயன்மரு காவெனவே வாழ்த்து மடியேற்குத்
தாயும் பிதாவும் தமருமெனத் தோற்றுவனே. 34

தோற்ற சமணரைத் தூண்டாக் கழுமுனையி
லேற்றுஞ் சிவகிரியா யீடேற்றங் காட்டாயோ
சோற்றா லடித்துச் சுவரால் வளைத்துநெஞ்சங்
காற்றாடி போல்சுழலக் கண்டிருந்த வாறினுக்கே. 35

கேடில்லாச் செந்தேனே கிட்டா வருமருந்தே
தேடறியாத் தெள்ளமுதே தென்பழனி யங்கிரியாய்
ஈடி[ல்]லா வேல்முருகா யென்றே யவன்புகழைப்
பாட வறியார் படும்பாடு கண்டிலனே. 36

கண்டேன் சிவகிரியைக் கைகூப்பி வேலவர்க்குத்
தொண்டே பரவத் துணிந்தே னிருவினையும்
பண்டே புரிந்த பழவினையுந் தீரவருட்
கொண்டேயான் பெற்றபலன் கூறப் பெரிதாமே. 37

தாமே தனிமுதலாய்த் தாபரசங் கத்துயிராய்ப்
பூமே லயன்மாலும் போற்றுஞ் சிவகிரியாய்
மாமே வியவடிவே வள்ளலரு ளுள்ளவர்கள்
காமேவு மிந்திரன்போற் கற்பகநா டாளுவரே. 38

ஆளாவாய் தென்பழனி யாள்குகவே ளைத்தொழுதால்
மீளார் கருக்குழியில் வேதன்விதி தள்ளிநிற்பாய்
கோளான நெஞ்சங் குறித்தோ ரெமதூதர்
தாளா லுதைதாக்கத் தட்டுண் டிருப்பாயே. 39

இருவினையு மும்மலமு மேற்றமெய்வாய் கண்மூக்கும்
பொருசெவியா வைம்புலன்மேற் பூதமைந்துந் தானுடக்
குருகினம்போற் கூடுகட்டிக் குடியிருந்த சீவனிலே
திரியும்வழி யெங்கேயோ சிவக்குன் றுடையானே. 40

### வேறு

உடையதெனப் பிள்ளைபெண்டீர் கிளையோ ராசை
  யொருநாளும் விலகவொண்ணு துலக மாயை
கிடையில்விழுந் தறிவழிந்து திரியு நாயேன்
  கெடுமதியை விலக்கியுன்றருள் கிடைக்கச் செய்வாய்
படையணிபன் னிருகரத்தாய் வளர்சா யுச்சிய
  பழம்பொருளே தத்துவதற் பரனே நன்னூ
லிடையுளதெய் வக்குறத்தி யானை பாகா
  விறையவனே சிவகிரிவா ழெம்பி ரானே. 41

எம்பிரா னேசரவ ணேற்ப வாயா
  ஏழைபங்கா ளாமுருகா விமையோர் நாட்டத்
தும்பர்நா யகனேதெய் வானை பாகா
  வுயர்பழனிப் பெருமானே வுரைக்கக் கேளீர்
வம்பிலே பொழுதோட்டி யொருசாண் கும்பி
  வளர்த்திடவே தமிழ்ப்பொருளை யிறைத்துப் பொல்லாக்
கும்பிலே சருகரிக்க நேர மல்லாற்
  குளிர்காய நேரமில்லை குறைதீர்ப் பாயே. 42

பாய்மரத்தி லிட்டகொடி யடையா ளம்போற்
  பாருலகி லுனதுபணி விடையே செய்து
வாய்மனத்தி னினைந்துசிவ கதியை நாடும்
  வழிமோட்ச மெய்துமடை யாள மாகும்
ஆய்சித்தி பெறும்படிக்கோ வடிமை கொண்டீர்
  அடியேனை யினிக்கருவி லமரச் செய்தால்
மாயவித்தை யுலகமுன்னே நகைக்கு மையா
  மயிற்பெருமா னேபழனி மலைவாழ் தேவே. 43

தேவருமூ வருமறியாப் பதசா யுச்யந்
  தெரியவடி யேனையொரு பொருளா யெண்ணி
ஆவியது போமுனமே சிவசி வாவென்
  னப்பனே யெனதுநெஞ்சங் கோவி லாக
மேவியிருந் திடவேண்டு முண்மை யாகும்
  வேதியனே யாதியந்த மில்லா ஞானத்
தாவிமயில் வாகனனே பழனி வாழ்வே
  சோதியே பவமகலத் துணைசெய் வாயே. 44

துணையாக வடியவரைத் தடுத்தாள் வானைத்
 துன்பமின்ப மில்லானைத் தோகை வள்ளி
பிணையானை புணர்ந்தானை யயில்வே லானைப்
 பேரின்ப வீட்டானைப் பேதா பேதத்
திணையாது மில்லானைச் சாட்சி யானை
 யெழிற்சிவகுன் றுடையானை யெங்கோ மானை
அணையாத பழம்பொருளைக் குமர வேளை
 யடிபணியா தார்புலைய ராகு வாரே. 45

ஆகுவதீ தென்றறியேன் ஆசை யாலே
 யாகாதீ தென்றறியேன் புத்தி யாலே
சாகுவதீ தென்றறியேன் மாய்கை யாலே
 சண்முகனே பூலோக பந்த பாசம்
போகுவதீ தென்றறியா வறிவி லேனைப்
 புன்றொழிலை மாற்றுதலுன் பார மய்யா
வாகுயர்பன் னிருதோளா பழனி வாழ்வே
 வாரணகே தனம்பிடித்த மலர்க்கை யானே. 46

கையிலே கயிறெடுத்துப் பாச மேந்திக்
 கருங்கடா வாகனத்தின் மீதி லேறி
மெய்யிலே பெரியதண்டஞ் சூலஞ் சாத்தி
 மேனியெல்லாங் கருகருத்த கோலங் கொண்டு
சைகையா யெமதரும னெதிர்க்கும் போது
 தமிழ்ப்பழனி முருகாவென் றனைத்து திப்பேன்
அய்யனே யவ்வேளைக் குதவ வேணும்
 அன்றுசொல்விண் ணப்பமின்றே புகன்றிட் டேனே. 47

புகலிடமுந் தாபரமு மெங்கே யென்னப்
 போதாத விதிக்குறையா லோதி யோதிச்
சகலகலை யறிந்திருந்து மறியா தார்போற்
 சண்டாளர் தமைப்பாடும் புலவீர் நீங்கள்
மகபதியை யாள்பழனி மலைக்கோ மானை
 வாழ்த்தியே திருப்பாடல் செய்தீ ராகில்
சுகநிலையு மிகபரசா தகமுந் தந்து
 துதித்தபொழு தெதிர்வருகத் தொடங்கு வாரே. 48

தொடங்கினே னவனருளைப் பாடிப் பாடிச்
சுற்றினேன் சிவகிரிவாழ் திருக்கூட் டத்தி
லடங்கினே னுறெழுத்தி னுபதே சத்தி
லாணவங்கா மியமாயை யகன்றே ஞானக்
கிடங்கிலே விழுந்தெழுந்த யானை போலக்
கேவலசா யுச்சியமுங் கிடைக்கச் செய்வாய்
மடங்கல்மா முகத்தானைச் செயித்த வள்ளி
மணவாள னடிமைகொண்ட வகைக்கீ தன்றே. 49

அன்றுபூ தரங்கிழித்த வயிற்கை யானை
ஆறுமுகத் தையாவே யமரர் கோவே
பன்றிமா மலையுடையாய் பழனி வேந்தே
பத்தர்தமக் கெளியானே வெட்சி மார்பா
வென்றுநா னிதுவரையுந் துதித்தி டாம
லிடைஞ்சலுற்ற வேளையிலே வியல்பி லாம
லொன்றுவார் திருவுளத்தின் மகிமை காணு
ரோகோகோ மனத்திரும்பை யுருக்கு வாரே. 50

வேறு

வாரும் பிறைமதி சூடுஞ் சடையினர்
வந்தே தொழுதரு ளுங்கோமா
னேருஞ் சிவகிரி மேவுங் குருபர
னிமலன் கிருபைக ளுளதாகி
ஊரும் பகையுற வோரும் பகைதின
முற்றூர் பகையும்வெ றுப்பாதி
யாரும் பகைசெயில் வேலுண் டவர்பகை
யறவே பொருவது நிசமாமே. 51

நிசமா கியவுயி ரதுவே கிமையுட
னின்றே பிடிகொ ளெமன்றூதர்
வசமா கியபொழு ததுவே கிமையுடன்
மயிலே றியமுனம் வரவேணும்
இசைவா ரணமுயர் குமரா சிவகிரி
யிறைவா வடியவர் பணிபாதா
விசையா குறமகள் கணவா சதுர்மறை
வேதா தமிழறி தாதாவே. 52

தாதா வடியிணை தாதா வடியவர்
 தாழ்வா கியகுறை படலாமோ
யேதா கிலுமுல கூடே கதியிலை
 யேனோ திருவுள மறியாயோ
மாதா வுமைதரு பாலா சிவகிரி
 வாழ்வே குரவணி மணிமார்பா
நாதா பரமசொ ரூபா வரியரி
 நாரா யணபுகழ் குமரோனே. 53

குமரன் றிருமகன் மருகன் பிரணவ
 குழகன் சரவண பவநாதன்
சமரம் புரியயி லணியுங் கதன்வளர்
 சதுரன் சிவகிரி முருகேசன்
நமவஞ் சனையுறு பிணியின் றுயரது
 நாடா வகையவ னீடாக
அமையும் படியருள் புரிவன் றினசரி
 யன்பா யடிமைகொள் தென்பாலே. 54

பாலே மொழியிழை நூலே யிடையிரு
 பால்மே ருவைநிகர் முலையாளைச்
சேலே நிகர்விழி மானார் மயல்வினை
 தீரா வகையது தவிர்வேனோ
கோலா கலமயில் மேலே நடமிடு
 குமரன் றிருவரு ளிடமாக
மேலே வருமினி யாலோ சனையென
 மெய்யுற் றவர்முனம் மெய்யாமே. 55

மெய்யிற் பிறவியி லவதிப் படவும்
 விதித்தா யெனையு மதிப்பாக
வுய்யப் படும்வகை செய்யத் திருவுள
 முன்னாள் வருகுவ தெந்நாளோ
கையிற் படையணி சைவக் குழக
 கடம்பா ஞானவி டும்பேசன்
அய்யப் படவளர் தெய்வச் சிவகிரி
 யமருங் குருவடி நின்றேனே. 56

ின்ற திகம்பர தண்டணி செங்கையு
நிமலன் சிவகிரி முகமாக
ன்றி நினைப்பொரு ளுந்தரி சித்தவர்
நன்மைபெ றப்பிணி யணுகாரே
வன்றிப டைத்து நயம்பட மெய்ப்பொருள்
வேணது பெற்றிட வாழ்வார்காண்
ன்றது சத்திய மென்றது நித்திய
மென்று துதித்தனன் வேதாவே. 57

வதனை விஞ்சிய நோயி லழுந்துமெய்
வாய்கள் தளர்ந்துரை தடுமாறிப்
தம லைந்துகண் மூடவி ழும்பொறி
போல வுடம்புயிர் பிரிவாகி
யதினி யென்செய்கு வோமென நங்கிளை
யேயழ முந்திய தருவாயில்
தய வின்படி யேவர அஞ்சல்செய்
நேய பரங்கிரி வேலோனே. 58

வலனை மந்திரவி சாகனை யன்பர்வி
னோதனை யம்பிகை புதல்வோனை
ாலச வுந்திர ரூபனை நன்சிவ
மாமலை தங்கிய கோமானை
மனு முகந்தவர் தாளை வணங்கிமெய்ஞ்
ஞானமி குந்தரி சனமாகச்
ால நினைப்பது சீனி ருசிப்பது
தானினை கண்டில நாவூடே. 59

ாவுயி ருங்கலை வாணிப ணிந்திட
ஞானமெ ழுஞ்சிவ கிரிவாசல்
காவி லெனும்படி சேரலன் முன்புசெய்
கோவிலி டந்தரி சனமாக
மவிய தண்டொடு நூலணி செங்கையும்
வேத வளம்புரி நூன்மார்புங்
ாவியு டன்சிவ ரூபமெ னுங்களை
கண்டசொல் விண்டிட வரிதரிதே. 60

வேறு

அரியயன் றேடும் பதவியைக் குறியேன்
அமரர்விண் ணுலகினை மதியேன்
விரிபொருள் நிதியோன் வாழ்க்கையை நினையேன்
மெய்யர்க்குள் மெய்யுளா நின்ற
பொருளென வுனையென் கனவிலு மறவேன்
பூரணப் பதவிதந் தாள்வாய்
குருபர வரதா பழனியங் கிரியாய்
குழகனே வள்ளிநா யகனே. 61

நாயகன் மணியாய்ப் பருதியி னொளியாய்
நாதமும் வேதமுங் கடந்த
தூயசின் மயமாய்ச் சிவரட் சகனுய்ச்
சுத்தசுத் தங்களா யெவர்க்கும்
தாய்தம ருருவாய்ப் பிரணவப் பிரம
சாரியின் வடிவமா யகில
வேயபூ ரணமாய்ப் பழனிமா மலேமே
லெம்பிரா னிருந்தகா ரணமே. 62

மேருவை வலமா யிமைப்பொழு தளவில்
விரைந்துமா துளங்கனி வேண்டிச்
சாரிவந் தருளாய்ச் சிவகிரிக் கொழுந்திற்
றனித்துவீற் றிருந்ததே சிகனே
ஆரெனக் கிருந்து முதவிநீ யல்லா
லறிகிலேன் செனனமுள் ளளவும்
வாரிசூ ழுலகிற் றிருவுளச் செயலே
வைத்தெனை யாள்வதுன் கடனே. 63

கடக்கரி த[ா]பலத் தொடர்ச்சியான் பிறவி
கடற்கரை நீஞ்சிடாத் துன்பம்
படப்பட முடியா தென்செய்வேன் பிறவாப்
பதவியில் வைத்தெனை யாள்வாய்
மடக்கொடி தெய்வக் குறத்திபங் காளா
வச்சிரவே லாயுதத் தேவே
யடைக்கலப் பொருளே யாவிநன் குடிவா
ழாகரா சரவணேற் பவனே. 64

பவமலை யுருவா யெதிர்த்தசூர் மாவும்
பாதையிற் றாருக னுயிரும்
குவடுதட் டுருவ விடுத்தவே லுடையாய்
குழகனே பழனியங் கிரியாய்
கவலையி லுதரக் கொடுமையி லடியேன்
கருத்துவீண் பொழுதுள தல்லாற்
சிவசிவா வென்று சொலப்பொழு திலையே
தெய்வமே ஞானதே சிகனே. 65

தேசிகன் வடிவாய்ச் சிவகிரிக் கொழுந்திற்
சேரர்கோ னாலயத் துள்ளே
பூசனை புரியத் திருவருட் காட்சி
புரிந்தவேள் கோலமே நினைந்து
மாசிலாத் திருவெண் ணீற்றினை யள்ளி
மருந்திது மருந்தெனக் கொடுத்தால்
தோசமுங் குளிரும் சுரமும்வல் பிணியுந்
துயரமும் பசந்துபோய் விடுமே. 66

இடுவதே யிகழ்ச்சி யேற்பதே புகழ்ச்சி
யின்பமுந் துன்பமுங் கலந்த
வடுவதே வாழ்க்கை யிதற்குடம் பெடுத்து
மயங்குநா ளொழிவதெந் நாளோ
தடியணி கரத்தாய் பழனியங் கிரியாய்
தாணுவே வளர்சரா சரத்துள்
நடுவனே தெய்வ நாயக முதல்வா
ஞானகா ரணபரா பரனே. 67

பாதமா மயிலா வடியருக் கெளியாய்
பண்ணவர் விண்ணவர்க் கரசே
அரகரா பழனி யங்கிரி யுடையாய்
அப்பனே செப்பும்விண் ணப்பம்
விரகமா மடவார் கலவியே னாயினும்
விளருநா வுண்டுறங் கையினும்
வருகன வதிலு முன்பதங் கதியே
மறந்திடா வரமெனக் கருளே. 68

அருளிலே நனைந்தே னறிவிலே தெளிந்தே
  னனந்தக் கண்கணீர் துளிப்ப
விருளையே விலக்குந் திவாகரன் போல
  விருதய கமலத்தின் விளக்காய்
மருவிய பரனே அமுதவா ருதியே
  வாசனை வெட்சிமா லிகையாய்
அரிதிரு மருகா சிவகிரி முருகா
  அன்பிலே விளைந்தபூங் கனியே. 69

கனியிலை சருகுங் காயது பொசித்துங்
  கற்பகா லங்களுள் ளளவும்
பனிவெயில் படவே தவஞ்செயு மியோகம்
  பலித்திடா யோகம தலவே
தினைவளர் புனத்தின் வள்ளிநா யகியைச்
  சேர்ந்தருள் பழனியம் பெருமான்
றனைநினைந் துருகிப் பணிவிடைப் பேறு
  சார்வதே யோகதத் துவமே. 70

வேறு

தத்து வந்து தலைப்பட வென்மனம்
புத்தி சித்தம் புரிந்த பிரியுநாள்
வித்தி யாசர் விளர்மலி யஞ்சல்செய்
பத்த வர்பழ னிக்கும ரய்யனே. 71

அய்ய மின்றிச் சிவாசல நேசர்தாள்
மெய்ய னைத்தொழு தால்வினை தீர்ந்திடும்
செய்வ தென்ன திருவுளத் துண்மையைப்
பொய்யி தென்பர் புலைத்தொழில் வீணரே. 72

வீணி லேபல தெய்வங்கள் வேண்டியே
ஆண வத்தி லழியுஞ்சண் டாளர்காண்
வாணி நாதன் சிவகிரி யைத்தொழ[க்]
காணி யாகுங் கயிலைப் பதவியே. 73

பதவி தந்த பழனிப் பிரானன்பர்க்
குதவி செய்ய வுயர்பொருள் தேடிலா
ரிதவிச் சோரப் பரிகொள வேங்கியே
பதைப தைத்துக் கிடப்பரிப் பாரிலே. 74

பாரில் வாழ்க்கையும் பற்றிப் பிடித்தவாங்
கார மாயையின் கட்டை நெகிழ்த்திடி
ஓரி ஞான முகந்தைதப் பூசத்திற்
றேறி லேவருந் தேசிகக் கந்தனே. 75

கந்த நாயகன் காட்சித் தரிசனந்
தந்த நாயகன் சார்பிடம் சிவகிரி
வந்த நாயகன் வானவர் நாயகன்
எந்த வேளையு மென்னுள் ளிருப்பனே. 76

இருப்ப யோகச் சமாதியி னிட்டையி
னுருக்குங் கற்பத்தி னுள்ளொளி காணுமோ
குருப்பிர காசச் சிவாசலக் கொற்றவ
னருட்ப ராவி லதிசித்தி யாகுமே. 77

மேவ லாருக்கும் மேதினி மாந்தர்க்கும்
மூவ ருக்குண் முழுமுத லாகவே
ஆவி யென்னுஞ்சி வாசலக் கோலத்தைச்
சேவை செய்யிற்கண் பார்வை திகட்டுமே. 78

கட்டு விட்டுமெய் கண்கள்பஞ் சிட்டுவாய்
விட்டு விட்டிமக் கொட்டியின் மூச்சுவிட்
டட்ட காசங்கொண் டாவி பறக்குமுன்
னெட்டி வாபழ னுபுரி யெந்தையே. 79

எந்தை யென்னையு மெய்ப்பொருள் வாஞ்சையு
முன்து ணைப்பத மென்றறி யானமே
சிந்தை செய்து தெளியத் திருவருள்
தந்த வர்பழ னித்தண்ட பாணியே. 80

வேறு

பாணிச்சடை முடிமால்விடை பரமற்கொரு மகவா
நீணித்தில மெனவந்தருள் நிமலன்சிவ கிரியைக்
காணிற்றவ சிவயோகிகள் கயிலைக்கிது வழியா
மேணிப்படி யெனயேறுவ ரிரவும்பக லினுமே. 81

மேகந்தவழ் பழனுபுரி வேலன்சிவ பாலன்
மோகம்புரி குறமாதணை முருகன்றிரு மருகன்
ஆகும்பொரு ளழியும்பொரு ளளவுக்கள வதுவாய்த்
தேகம்பசு பதியாகிய செயல்கண்டறி மனமே, 82

மனமேயினி யபலத்தொழில் மறவாதுகள் சூதுந்
தனையேதவிர் சினமென்பது தணியப்புரி மகிழ்வாய்
முனிவோர்பணி பழனிக்கிரி முருகன்பணி விடையே
நினைவாயொரு நினைவாயிரு நிலையிற்கதி பெறவே. 83

பெறவேயழி வில்லாநிலை பேரூன கொடுஞ்சூ
ரறவேயயில் விடுசேவக னமராபதி யுடையா
னிறைவாழ்சிவ கிரிநாயக னென்னுளநன் னிதியைப்
பிறைபோலடி யவர்வாழ்வது பெருகத்தரு குவனே. 84

தருவாரிரு சரணந்தரி சனமேதக வடியார்
கருவாவியி னுழையாவகை கதிஞானமு மருள்வாய்
பரிபூரண முதலானவர் பழனிச்சிவ கிரிமேற்
குருவாகிய பெருமானனு கூலப்படும் வழியே. 85

வழியென்றறி பலநூல்களும் வளராகம நலமுஞ்
சுழியுந்துறை நதிமூழ்கிமெய் துவளத்துதி புரிவீர்
விழியும்பொருள் பழனிக்குக வேளைப்புகழ் தமிழின்
மொழியுஞ்சுவை தெளிவீரதி முத்திப்பல னுளதே. 86

உளமானது நிலைகெட்டமை யுதரக்கொடு மையினால்
இளகாவகை புரியத்தய விலையோதலை விதியோ
தளவாணகை வள்ளிக்கொடி தன்னைப்புன மிசைசேர்
கிழவாபுன கள்வாசிவ கிரிமேவிய அரசே. 87

அரசேபழ னியில்வாழ்வுள வமுதேயென துள்ளக்
கரவேதணி படவேபுரி கருணைப்பெரு மானே
விரதாசுர பதியேபெரு வெளியேசுட ரொளியே
குரவாசர வணனேவளர் குகனேகுரு பரனே. 88

நேசித்தசொல் முருகோனரு நிலையிற்சிவ னடியா
ராசித்திட வியில்வாழ்குக தழகுப்பெரு மதயா?
தேசிப்பொரி சிவவெற்புறை தெய்வத்திரு வடியைப்
பூசிப்பவர் பலனுவது புகலாயிர மிலையே. 89

இளவேலணி பழனிக்கிரி யெங்கோனடி யவராய்
அளகாவியி னுடைகண்டிகை யணியுந்திரு நீறுந்
தளவாழ்வுள சிவவேடமெய் சார்புற்றில கியபார்
சிலவாசக மதுபேசுதல் திருவாசக நிலையே. 90

வேறு

நிலைநின்ற கோலவொளி ரதுகண்ட பேர்கள்முன
நிசரூப மானசெயலா
னுலகெங்கு மாகவளர் பழனிக்கி ரிக்குள்வரு
முபதேச மானமுருகா
பலவுந்த யாளமுட னெனையன் புணர்த்தியிரு
பார்வைக்கு ளாடுபணிபோல்
வலுவந்த மாகவொரு பொருளென்ப தோதிடுவர்
மயலேறி காண்டலறவே. 91

பாவைக்கு ரம்பையள வில்லா தெடுத்தவர்கள்
பலகாலுள் ளறவிதளந் (?)
தேவிற்ப டுஞ்சருகு போலேய கன்றிடுவி
சேடக்கு றிஞ்சிமுதல்வோ
ராவிக்குள் நின்றசிவ கிரிநாய கன்சேர்வை
யதுவேப ணிந்தபொழுதே
மேவித்தி னம்பணிசெய் யடியார்கள் தம்சரிதை
விண்ணோர்கள் சொலவுமரிதே. 92

அரிவாணு தற்கண்விழி மயிலாள்கு றத்தியிட
மகலாத பக்கமுடையாய்
கரிமா முகத்தன்மகி ழிளையா யயிற்பிடிகொள்
கரனேசி வக்கிரியுளாய்
தெரியாத புத்தியுள வடியேன் மனத்தினிலை
தெளிவாய் மலத்தியருளே
புரியாத பத்தியினி யெனயோச னைச்சொல்வகை
புகழ்தேசி கக்கடவுளே. 93

கடலைக்க டைந்துரச வடிபிட்ட தெள்ளமுது
கருதிப்பு சித்தபுலவோ
ரிடரைக்க ளைந்துவளர் பழனிக்கி ரிக்குமர
னெள்ளெண்ணெய் போலவுயிரின்
றொடர்புக்கு நின்றுனு மதிகப்பிர பலமான
தொண்டர்க்குள் நின்றிடுவாய்
தடவுற்ற திருவுளச் செய்கைப்பிர மாணம
தறிந்திடவும் வல்லருளரே. 94

வல்லமை யிருந்தென்ன வித்தைகள் வளர்ந்தென்ன
மனையின் பெருக்கமதிலே
செல்வமு மிருந்தென்ன நானென்ற வாணவந்
தீராதி ருந்துமென்ன
நல்லமை செயும்பழனி வேல்முருகர் தங்கிருபை
நாடாதி ருக்குமளவில்
கல்லதில் விழுந்தகல மென்னத் தகாதுநிலை
காணுது போகிவிடுமே. 95

விடவும் படாதினிய பிரபஞ்ச மாயையிதை
விட்டாலும் வெட்டவெளியே
தொடவும் படாதுனது செயலினைச் சகாயநிலை
சொல்லுவது மெளிதல்லவே
யிடமுந்து சேவடியை யடியேன் தனக்கருளி
யீடேற வகைசெய்குவாய்
நடனஞ்செய் தோகைமயி லாளா தமிழ்ப்பழனி
நாதாமெய்ஞ் ஞானகுணனே. 96

குணமான கந்தகிரி யரசே யயன்சிரசு
குட்டிப்பு டைத்தபுகழாற்
கணநாதர் வந்தனைசெய் பழனிக்கி ரிக்குள்வரு
காருண்ய ஞானவடிவே
பிணையாக நின்கிருபை யுளமே யிரங்கிவெகு
பேரின்ப வாழ்வுதரவே
துணையே புரிந்திடுத லிதுவேளை நம்புதல்செய்
துயர்தீர வென்றனிடமே. 97

இடர்வந்த வேளையிலு நலம்வந்த வேளையிலு
மென்னுவி பெற்றயமனுர்
படர்வந்த வேலையிலு மறவாம லுன்கிருபை
பதியைப் புரிந்தாளுவாய்
அடல்கொண்ட தாருகனை யுயிருண்ட வேல்முருக
னமர்சங்க பாணிமருகா
தடமுந்து சீர்வயல்கொள் பழனிக்கி ரிக்குள்வரு
தண்டாயு தக்கந்தனே. 98

கந்தா வெமக்குதவி செய்ததாய் தந்தைநீ
காக்கின்ற விறையவனுநீ
சந்தேக மில்லையென துடலாவி யும்பொருள்
தத்தம தளித்தமனமே
நொந்தாலு முன்சித்தம் வந்தாலு முன்சித்தம்
நோக்கத்தி லதிகபதவி
தந்தாலு முன்சித்தம் வைகா புரிப்பழனி
சார்வான தெய்வமுதலே. 99

முதலாய சவுந்தரிய மயிலா தமிழ்ப்பழனி
முத்தே சிறக்குமுமையாள்
மதலாய் குறத்திமண மகனே வயிற்பெருகு
வையா புரிக்காதிபா
சதகோடி சித்தர்பணி சரணு மகிழ்ச்சிநிலை
தருஞான பத்தியுடையாய்
கதையே பிடித்தவிரு கரனே யெமக்குதவி
கமலக் கடாட்சமருளே. 100

முருகன் துணை

பழனிப் பதிற்றுப்பத் தந்தாதி முற்றும்

# 2. மயிலாசலத் தந்தாதி

## கடவுள் வணக்கம்

வெயில்வரைக் கந்தப் பூங்கரத் தாற்பற்றி வெம்பணியிற்
பயில்வரைக் கந்த மாகப் புனையும் பகட்டிபமே
யயில்வரைக் கந்தர னோர்குரல் வள்ளி யன்பரின்பார்
மயில்வரைக் கந்த ரந்தாதி யான்சொல்ல வந்தருளே.

இந்தா ரிதழி யணிந்தா நுயர்ந்த விமையவர்கள்
சிந்தா குலங்கெடத் தந்தாய் மயிலச் சிகரிவந்த
நந்தா விளக்கன்ன கந்தாவுன் மீதினில் நாயடியேன்
அந்தாதித் தரவுன் செந்தாளென சிந்தை யமைத்தருளே.

(மயிலாசல கந்தன் துணை)

## நூல்

சீர்தந்த வாரிசப் பொன்னுந் தளவுந் திகழுமுத்து
நேர்தந்த வாணியும் வாழ்மயி லாசல நேயக்கந்த
னார்தந்த வாதி செயம்பெறு வள்ளிதெய் வானைபதி
யோர்தந்த வானைக் கிளையோரென் புந்தியி லுள்ளவரே. 1

உள்ளத்தி யானந்தன் பாலே செலுத்திடுவர் யோகர்சித்தர்
வெள்ளத்தி யானண்டர் சூழு மயிலவி லங்கற்கந்தன்
மள்ளத்தி யான வெழில்வள்ளி கேள்வன் மறுநரகப்
பள்ளத்தி யானழுந் தாமலெப் போதும் பரிப்பவனே. 2

பவள வரைக்கணி நல்குஞ்செம் மேனிப் பரமர்புற்றேல்
துவள வரைக்கணி வார்சேயர் சேவற் றுவசத்தினர்
திவள வரைக்கணின் மூத்தார் மயிலச் சிலம்பகத்தே
யிவள வரைக்கணின் கண்டாள் கலைசங் கிழந்தனளே. 3

தனதாக னென்று லோபிகள் மீதிற் றமிழுரைத்து
கனதாக னன்மரு வாதாண் மருங்கு கவினிழையிற்
சினதாக னுகந் தனமாக மோகஞ் செழித்தவள்ளி
மினதாக னடு முருகா மயில விலங்கலனே. 4

விலங்க லனந்தம் புடைசூழ் மயிலவி லங்கற்கந்தன்
பொலங்க லனந்தம் பொலிபன் னிரண்டு புயன்கடம்ப
வலங்க லனந்தம் பகைபாவ மச்ச மகற்றிநெஞ்சே
கலங்கல னந்தத் தவிப்பான் கதியுங் கனம்பெறவே. 5

கனக சிகர சினகரஞ் சேர்கவி ஞர்மயில
நகன சிகர மோராறுள் கந்தமுன் னுகரஞ்ச
மினக சிகர வசுரசங் காரமெய் வேதம்புக
ழனக சிகர வுவரிநஞ் சுண்ட வான்குருவே. 6

குருமந்தன் புந்தி குபேர னலரி குசன்பளிங்கும்
பொருமந் தகனும் புலியு மரவும்வெம் பூதங்களுந்
தருமந்த நன்மை யுனதரு ளுண்டெனிற் றண்கடம்பு
மருமந் தனிலணி கந்தா மயில வரையரசே. 7

அரவலர் வேணியன் சேயன் மயில வசலந்தனிற்
குரவலர் கூந்தலெற் கென்கூறிச் சென்றனர் கூறுகிலாய்
புரவலர் நீங்கப் புரப்போ ரிலாத புவியைச்சுற்று
மிரவலர் போல விருவியைச் சுற்று மிளங்கிளியே. 8

இளமுரு காமயில் வீரா வெப்போது மியமுழங்க
வளமுரு கார்மயி லாசல வாச மகிழும்பரி
மளமுரு காரணி யற்குர வம்புணர் வாகவென்றே
யுளமுரு கார்பிற விக்கொரு காலு மொழிவில்லையே. 9

ஏகன மானன கண்ணுமைக் கின்ப மிசையவருள்
பாகன மானருள் செய்மயி லாசலப் பண்ணவனன்
பாகன மானங் கெடவரு நல்குரு வத்தனையும்
வாகன மான மயிலேசொல் வாய்மணி வாய்திறந்தே. 10

திறத்தத்தை சேயனற் பாகன் மருகன் செருக்கடைந்தே
யறத்தத்தை வென்ற வசுரகு லாந்தக னன்பர்க்கென்று
மறத்தத்தை மாற்ற மயிலா சலந்தனில் வாழுங்கந்தன்
குறத்தத்தை சந்தனங் கொட்டும் பெருந்தனக் கோட்டகனே, 11

கோட்டானைச் சூரனை வென்றோன் வயங்கொரு கூன்பிறைநேர்
கோட்டானைச் சூர்க்கிளை யோனயில் வீரன் குகன்மயிலக்
கோட்டானைச் சூரன்பர்க் கொட்டா தவனருள் கூடலர்நேர்
கோட்டானைச் சூரனைப் போலையேற் கார்வசை கூர்பகையே. 12

கூரணி மான வயிலோன் மயிலக் குவட்டின் மின்னார்
வாரணி மான கிலமீது வல்லியு மாமணிகள்
தாரணி மான மதிமுக வேர்வையுந் தங்கடியுந்
தாரணி மானறி யென்றிமைக் குங்கண்கள் தாமிமைத்தே. 13

தாம்பிர வத்திர வோர்கோடி யாதவர் தானன்னபீ
தாம்பிர வத்திர நாகஞ் சிலைகொண்ட சங்கரனார்
தாம்பிர வத்திர மாகி மயில சயிலத்தின்மீ
தாம்பிர வத்திர மாறுடன் றோன்றுஞ் சரவணனே. 14

சரவண லோசன வல்லி வலியத் தழுவிடக்குஞ்
சரவணல் செய்யக் குழைத்தெழும் வாகன் றருமநன்னெஞ்
சரவணன் பாக மயிலா சலத்தினிற் றங்குங்கந்தன்
சரவணப் பொய்கையில் வந்துதித் தோனெழிற் சத்தியனே. 15

சத்தியத் தன்மய லற்றமெய்ஞ் ஞானியர் தானுணருஞ்
சத்தியத் தன்மயி லாசல வாசன் சமரிலெழுஞ்
சத்தியத் தன்னசு ரர்குலம் மாளச் சயம்படைத்த
சத்தியத் தன்குக னென்வல் வினையைத் தடிந்தனனே. 16

தடித்துங் களையெனும் மின்னிடை வள்ளி தனவரைக
ளிடித்துங் களைப்பெறும் வாகன் மயிலவெற் பெந்தையுன்னிர்
குடித்துங் களைநடித் துந்தடு மாறிய கோதகரே
யடித்துங் களைநமன் கொண்டேகு மப்பொழு தார்துணையே. 17

ஆர வரைக்கும்ப னுக்கு முடற்கரித் தோல்கரித்தோ
லார வரைக்கும்புற் றோலணி தேவுக்கு மாரியனு
ரார வரைக்கும்பி டார்மன னேவினை யத்தனையும்
ஆர வரைக்கும் பரமர் மயிலவெற் பார்வணங்கே. 18

வணங்கடி யார்தம் மனத்தா மரையின் மருவமகிழ்ந்
திணங்கடி யார்மயி லாசல வேலரை யேத்தல்செயார்க்
குணங்கடி யார்புரை மாசுணஞ் சீயங் கொடுவரிமா
கணங்கடி யார்வரை நீநண்ண றீது கருத்தண்ணலே. 19

கருத்தனங் கன்மத்தை மாற்றுங் குகன்வள்ளி காணவந்த
விருத்தனங் கன்மகிழ் வெய்து மயில விலங்கல்மின்னே
திருத்தனங் கன்மன மாகா துமதருள் செய்திடுவீர்
உருத்தனங் கன்மறித் தென்மேற்செய் யாம லுயித்தியமே. 20

உயித்திய ராவின் றசையூ ணறவோடு மோம்புகின்ற
பயித்திய ராவி யனல்போற் சுடுந்தொழிற் பாவியரெந்
தயித்திய ராவி தனைவாங்கும் வேலரென் றன்வினைக்கு
வயித்திய ராவி வளஞ்சேர் மயிற்குவட் டன்பினரே. 21

வடம்பணி பூண்ட மகாதேவர் மைந்தன் வயங்குசெம்பொற்
குடம்பணி கொங்கைக் குறவள்ளி காந்தன் கொதித்துமனத்
திடம்பணி வந்த வசுரசங் காரன் செழித்தமலர்க்
கடம்பணி மார்பன் மயிலா சலத்துறை காங்கையனே. 22

காங்கைய னம்மை திருமுலைப் பாலுண்ட கால்பன்னிரு
பூங்கைய னம்மை யடியார்க் குறுமற் புரக்கும்வள்ளல்
நீங்கைய னம்மைப் புரப்பான் மயில நெடுவரைய
னேங்கைய னம்மைய லகல்வோம் புகலும் பண்பினனே. 23

பண்டாலங் காய வயின்றோன் சுதன்புற் பதியினிலாண்
பெண்டாலங் காய தளித்திடப் பாடிய பிள்ளைதிசை
யொண்டாலங் காயம் புகழ்மயி லாசலத் தோர்குகனைக்
கண்டாலங் காயந் துயர்நீங்கு ஞானமெய்க் கண்வருமே. 24

கண்ணுறு மாறுங் கயல்சார் வயலுங் கமலநறுங்
கண்ணுறு மாறுங் கவின்செய் மயில்வரை கண்டுமனக்
கண்ணுறு மாறு துயர்சிந்தித் தேத்துமின் காருணியக்
கண்ணுறு மாறு முகமா றுளவள்ளல் காத்திடுமே. 25

காவல ராயுல காளவு மிக்க கலையுணர்வின்
மாவல ராயுள ராகவும் வேண்டில் வயங்குகொடிச்
சேவல ராயுதம் வேலார் மயிலச் சிலம்பிற்கந்தர்
பூவல ராயும் பதத்தை வணங்கும் பொயிலன்பரே. 26

பொயிரா வணவின்று போய்நாளை வாசண்டை போடவென்ற
மெயிரா வணன்மரு காவிளங் கும்மிரண் டாயிரங்கோட்
டயிரா வணன்றனை யாமயி லாசலத் தாருங்கந்தா
செயிரா வணமென்றன் வல்வினை யோடத் திருவருளே. 27

திருக்குள வனலனை யார்க்க ரியன்றி கழ்பன்னிரு
திருக்குள வனலடி யார்க்கினி யன்சி கித்துரங்கன்
திருக்குள வன்மயி லாசலச் சாரலிற் செங்கமலத்
திருக்குள வன்மனை யாடன் மீதன்பு செய்திலனே. 28

செய்வளை யாரஞ் சொரிமயி லாசலத் தேவைத்தொழ
மெய்வளை யாரவ னன்பர்க் குதவி விரும்பிச்செயார்
பெய்வளை யார்தமக் கீய்ந்திடத் தேடிப் பெருந்தனத்தைப்
பைவளை யார்நச் சுருக்கிட்டுக் கட்டிவைப் பாரகத்தே. 29

பாரங் கரம்பெறும் வேலோன் மயினகப் பாடினிகேள்
வீரங் கரந்தரும் வேங்கையும் பன்றியும் வெங்களிறு
கோரங் கரமத் திரிமேக மாகுமுன் கொற்றவர்க்கு
வாரங் கரந்தபி னெங்கையு மியானுமென் வையகத்தே. 30

வையங் கதிர்மிகும் வேலோன்மெய் யன்பர்க்கு வாழ்வுபெற
வையங் கதிதருஞ் செவ்வேள் மயில வரையினிற்பார்
வையங் கதிகஞ் செவ்வாம் பரிபூட்டி வலவனுந்த
வையங் கதியுடன் மானே மறுகில் வருகின்றதே. 31

வரும்பருந் தும்பொன் மழைசார் மயில வரைமுருகன்
கரும்பருந் துங்கொடி யுஞ்சுழல் வேலன் களித்துச் செந்தேன்
கரும்பருந் துங்கடம் பார்புய னீடிய தொல்வினையாற்
றிரும்பருந் துன்பந் தனைமாற்று வானந் திருக்கறவே. 32

திருக்கும ரன்கயி லாயுச் சிலம்பிற் செழிப்புடனே
இருக்கும ரன்குரு வானோன் மயில வெழில்வரையிற்
றருக்கும ரன்பொடு சங்கர னென்றெனைத் தாழமடற்
கருக்கும ரன்பரி நானேறி வந்துன்னைக் காண்பனின்றே. 33

நின்றவன் மாவிரு கூறாய்க் கிழிந்திட நீடயிலாற்
கொன்றவன் மாமயி லாசல நாடிக் குறியுடனே
சென்றவன் மாசகல் சீரடி போற்றிவெந் தீவினைதீர்
மென்றவன் மாகர் புகழப் பொருந்துவன் மெய்த்திருவே. 34

திருக்கையஞ் சாரக் கிளையோ னருள்மன்னித் திகழ்பன்னிரு
திருக்கையஞ் சாரல் செழிக்கு மயிலச் சிலம்பினன்பர்
திருக்கையஞ் சார்சொல வுன்போலப் பொன்பெறச் சென்றனரே
திருக்கையஞ் சாரலை யேய்கலை யேகிலை தேர்துரந்தே. 35

துரந்தலை வெல்லுங் கதிரோர் பரவுஞ் சுடர்வடிவன்
கரந்தலை பன்னிரண் டாறுள் ளவன்கவி ஞர்மயிலைப்
புரந்தலை மைப்பெறத் தங்கியகந் தன்பொல் லாவசுரும்
பரந்தலை வேலையுஞ் சீவன மாறப் பறித்தவனே. 36

பறந்தந்த ரந்தணிற் பக்கிக ளாயும் பர்களலைதல்
மறந்தந்த வாழ்வுற நல்கிய வேலன் மயிலைவெற்பில்
நிறந்தந் தவளம் பெறுமிருண் மாவின னேரமரிற்
புறந்தந்த வர்தனங் காவலர்க் காகும் புனக்கிளியே. 37

புனக்கவ லைசெந் தினைமா வருந்தும் புளினவள்ளி
தனக்கவ லைபுகுந் தேமயி லாசலந் தங்குங்கந்தர்
சினக்கவ லைசெய மேவு நமன்கையிற் சிக்குமொரு
மனக்கவ லையெனை யண்டா தருள்செய வாகளித்தே. 38

வாகைக் குமரன் மயில்வரைக் கந்தன் வள்ளியெனுந்
தோகைக் குமர புரைத்தொன் பதத்தைத் தொழாவம்பரே
யோகைக் குமர மெனவுதித் தீருங் கணுலர்ந்து
சாகைக் குமரழும் போமெவ ருங்கணிற் சந்திப்பரே. 39

சந்த வலம்புரித் தாரணி வேந்தன் றளங்கலங்கி
நந்த வலம்புரி யூதி மருக நகமயிலைக்
கந்த வலம்புரி கால்விடுந் தூதர் கருணையற்று
வந்த வலம்புரி போதிலென் கண்ணெதிர் வாசெழித்தே. 40

வானாடு தேவர் பெறத்தந்த கந்தன் மறவர்குல
மானாடு வேண்ட மணஞ்செய்த கந்தன் மதுவையுண்டு
தேனாடு தண்டலை சூழ்மயி லாசலஞ் சேர்ந்தகந்தன்
நானாடு மின்னைத் தருவனெஞ் சேநன் னயம்வரவே. 41

நரைமாத் திரையுடன் மாற்றிய கந்த னளிர்மயிலை
வரைமாத் திரைக்கடல் சூழ்புவி வாஞ்சைகொள் வன்னெஞ்சர்காள்
அரைமாத் திரையள வேனுமுன் னீர்வயித் தியன்கையைவிட்
டுரைமாத் திரையெனும் போதெவர் காப்பர்நு மூனம்வென்றே. 42

வெஞ்சினங் காள மெனக்காழ்த்து மின்னி வெடித்துலவும்
மஞ்சினங் காள்கந்த வேள்சார் மயிலை வரையினிற்சங்
கஞ்சினங் காள முழங்கவென் றேர்வரல் காந்திகொள்செம்
பஞ்சிளங் காள மெனுமடிக் கோதும் பரசினனே. 43

சினத்தாசை யெட்டுங் கலங்கப் பொருத திடவசுரன்
மனத்தாசை மாற்றிய வேலோன் மயில வரையன்பனார்
புனத்தாசை யக்கழை யோசைக் கிரங்கந்திப் போதுகண்டுந்
தனத்தாசை கொண்டேன் தனத்தாசை யைமறந் தார்செம்மையே. 44

செஞ்சித் தவிக்குந் திறநினைந் தேசெருச் செய்யவுற்று
வஞ்சித் தவிக்கு மதனுகம் வெந்திட வாகைகொண்டோர்
தஞ்சித் தவிக்குகன் வாழு மயில சயிலம்புகீர்
அஞ்சித் தவிக்கும் படிவரி லாருமக் கானவரே. 45

ஆன வரம்பை பலாமா வசோககி லார்வனமும்
வான வரம்பைய ருஞ்சூழ் மயில வரையகத்திற்
கான வரம்பை நிகர்விழி வள்ளி கணவனுற்றான்
ஞான வரம்பையன் பார்க்கீந்து தீவினை யைவெல்லவே. 46

வெலசங் களையுற வென்றோ னுழுவர்மின் னார்விழிநேர்
சலசங் களையும் வயல்சூழ் மயில சயிலமின்னே
வலசங் களைசெல் களத்தீர் விடத்தை மறைத்தமுத
கலசங் களைத்திறந் தீரெனக் கீந்துயிர் காத்திடவே. 47

காலனஞ் சம்பயி லன்னகண் வள்ளி கணவன்கைமுன்
னுலனஞ் சம்பயில் போரென்ற சூரை யமரில்வென்றோன்
சூலனஞ் சம்பயில் சொல்லருள் பாலன் துலங்குங்கதிர்
வேலனஞ் சம்பயில் செய்சூழ் பயில்வரை மெய்ப்பொருளே. 48

பொருவடி வேலன் குருந்தடி யாலடிப் புண்ணியர்க்குக்
குருவடி வான பரமன் பரவுங் குருமுருகன்
மருவடி யார்தொழ மாமயி லாசலம் வாழ்குகன்றன்
திருவடி யென்மனத் துன்னத் திருவருள் செய்தனனே. 49

## தலைவியை வியந்து கூறல்

செய்தற் கரையணங் காமர னேற்றிய சீர்ப்புலவன்
மெய்தற் கரையணங் காமரன் சேய்மயில் வெற்பகத்திற்
பொய்தற் கரையணங் காமரன் பாகிய பொன்னனையாள்
எய்தற் கரையணங் காம ரனமன்ன நீர்மையளே. 50

நீத கரையும்பர்க் காக வசுரரை நெடுங்கிரியை
மாத கரைவெலும் வீரா மயில வரைமுருகா
பாத கரையுன தன்பர்க் களிப்பவர் பாற்சொலுந்துற்
போத கரையு மடக்கிடிற் றீனர் புலம்பறுமே. 51

புலம்பக ராகிய தேவர்க் கருளைப் பொழிபன்னிரு
நலம்பகர் மேவு மயிலா சலந்தனில் நாவலர்நோய்
இலம்பகங் காமின் கவிநலங் கூற வியற்பெயரூர்
குலம்பக ரென்றுவந் தாரெண்ண மியாதெனக் கூறுவதே. 52

கூற விரும்பலை நெஞ்சே மயிலைக் குகனைத்துயர்
மாற விரும்பலைப் போனமன் றூதர் வருஞ்செயலைத்
தேற விரும்பலைக் கிட்டிப்பு லன்பொறி சிந்திவிக்கிக்
காற விரும்பலை மேலிடும் போதென் கருதுவதே. 53

கரும்பாலை வாய்க்குங் கவின்மயி லாசலக் கர்த்ததமிழ்
விரும்பாலை வாய்த்தென்னன் வெப்பந் தணித்த விதமெனவே
பெரும்பாலை வாற்வெப்பந் தீர்த்தே யருள்செயென் பேதைக்கியான்
றரும்பாலை வாய்வழி யுண்டதொப் பாமின்பந் தான்பெறவே. 54

### சுவடுகண் டிரங்கல்

பெரும்படி தன்னிற் றனையே வணங்கிநற் பேறனைத்தும்
விரும்படி யார்க்கருள் வேண்மயி லாசல மேவலர்போற்
பொரும்படி வந்த புலியடி யிவ்வடி போருக்கஞ்சுங்
கரும்படி யிவ்வடி காளை யடியிக் கழலடியே. 55

அடியவ ரையுவந் தாளுங் கடவுளம் பொற்சிகர
நெடியவ ரையெனு மேட்டினிற் பாரத நீள்கதையை
முடியவ ரைதந்தி பின்னேன் மயிலை முருகன்புலக்
கொடியவ ரைவர் களைவென்ற வர்க்குக் குணமருந்தே. 56

மருவண் டறுத கடம்பன் மயிலை வரைமுருகன்
தருவண்டர் வாடத் தருமங் கலங்கத் தவர்வெருவப்
பொருவண்ட ரான வசுரசங் காரன் பொதியமுனி
குருவண்ட ரில்லில் வளர்ந்தோன் மருகன் குகன்முதலே. 57

முதனுகர் வாழச் சரவணந் தன்னில் முளைத்தழகின்
சுதனுகப் பாலுண்ட தொல்லோன் மயிலைச் சுடர்வரைமே
யிதனுக ரிகமன் னுவுடுப் போந்தழை யேதுகலை
மதனுக மிங்கில்லை யீசரைக் கேட்கின்வன் மஞ்சொல்வரே. 58

### பாங்கன் தலைவனை யுற்றது வினுதல்

மஞ்சங் கவலை வளஞ்சேர் மயிலை வரைக்குகன்றூட்
கஞ்சங் கவலை நிகர்மாயை தீர்த்த கருத்தண்ணலே
அஞ்சங் கவலை கடலேழ் கலங்கினு மஞ்சலிலா
நெஞ்சங் கவலை வரலா றெனக்குரை நீதெளிந்தே. 59

நீருங் களையுத வாருந் தரித்த நிமலன்மைந்தன்
தேருங் களைகெடச் சீரார் மயிலச் சிலம்பன்கண்டீர்
வாருங் களைம்புலன் மாறுக வந்தகன் வாதைசெய்போ
தாருங் களைப்புரப் பார்பணி வீர்மைய லைமறந்தே. 60

## தலைவன் பாங்கனுக் குள்ளதுரைத்தல்

மறவஞ்சி கொங்கை வரைதாக்கும் பன்னிரு வாகுதொறும்
நறவஞ் சிதருங் கடம்பன் மயில நகத்தினண்பா
துறவஞ்சி டாதவ ரும்பர் மயங்கித் தொடருமெழில்
நிறவஞ்சி லோதியைக் கண்டேன் கண்டேனென் னிலையுண்டதே. 61

நிலவலர் சூடுஞ் சடையா னருள்சுத னீபஞ்செச்சை
நலவலர் சேர்புயச் செவ்வேள் மயில நகத்தகத்தே
சொலவலர் காமத் துயரால் வருந்துமென் றோகையஞ்சச்
சலவலர் தூற்றவு மேவலர் காவலர் தன்மைநன்றே. 62

நன்றி யனந்தம் பரிவுட னன்பர்க்கு நல்கும்வள்ளல்
பன்றி யனந்தம் பதஞ்சிரந் தேடப் பருப்பதமாய்த்
துன்றி யனந்தம் பலகடந் தோன்சுதன் சூரைவென்ற
வென்றி யனந்தம் பரன்மயி லாசல மேற்றிரனே. 63

திரம்போக மருந்துய ரேகவும் பர்க்குச் செய்தகந்தன்
நிரம்போக மருந்துங் கார்சூழ் மயில நெடுவரையின்
வரம்போக மருந்தும் பாலையென் றோர்கிலள் மன்னவன்பின்
சுரம்போக மருந்து தாயேயென் றுள்சொற் றுலங்கியதே. 64

துலங்கா தவரந் தரவாண ரஞ்சத் துயர்செயுஞ்சூர்
நலங்கா தவரம் பொருவே லெறிகந்த னன்செய்வினை
நிலங்கா தவர்மிகுந் தென்மயி லாசல நிற்பனெஞ்சே
கலங்கா தவரன் றருவான் றுதிசெய்து காணிரந்தே. 65

இரவல ராகி யிடுவா ரகஞ்சென் றிரங்கிநின்றோர்
புரவல ராணம் புவியாண்டு வாழ்வு பொருந்தவரந்
தரவல ராரணம் போற்று மயில சயிலத்தினூர்
குரவல ராகுங் குரல்வள்ளி கேள்வர் குறையொழித்தே. 66

ஒழியென் பரிவை யுனைநம்பி னேனுனக் குதவிசெய்யா
வழியென் பரிவைச் செயலுன் னியல்முன் வயல்மயிலை
யுழியென்ப ரிவையுரு வாகச் செய்த துனதுகவின்
மொழியென்ப ரிவைபொய் யோமயி லாசல முன்னவனே. 67

### வரைவு முடுக்கம்

முன்பந் தனைதவி லாஞான வீட்டின் முயங்குஞ்சுக
வின்பந் தனையன்பர்க் கீவான் மயில்வெற் பின்மன்னனே
மென்பந் தனைய விளமுலை மின்னிடை மெல்லியலா
மென்பந் தனையைச் செழிப்புட னேவந் தினிவ்வரையே. 68

### தலைவி பாணனை வாயில் மறுப்பு

வரைவி லரிவையம் பாகம் புரமட்ட வன்புதல்வன்
வரைவி லரிவையம் வாழ்த்து மயில வரையன்பனர்
வரைவி லரிவையன் பாகச்செய் பாண வரின்முறியில்
வரைவி லரிவை யடியென்பன் போமுன் மகத்துவமே. 69

மகந்தக்கன் செய்ய வழித்தோன் மதலையை மாமயில
நகந்தக்க தென்று குடிகொண்ட கந்தனை நன்மைமிகுஞ்
சுகந்தக்க டம்பனை நெஞ்சே துதிசெயிற் றாயமனத்
துகந்தக்க ணம்வினை தீர்த்தளிப் பான்மகிழ்ந் தோங்கருளே. 70

### தன்மகள் நிலைமைக் கிரங்கும் நற்றாய் நிமித்தம் போற்றல்

அருவாய சம்பரி தேடும் பொருட்பொரு ளண்டரஞ்சப்
பொருவாய சம்பரி கொண்டோன் மயிலப் பொருப்பகத்தே
வெருவாய சம்பரி வில்லாமற் சென்றவென் மின்னிலைமை
கருவாய சம்பரி வாகப் புகறி கவின்செழித்தே. 71

செங்கு வளையலர் வாவித் திருத்தணி சென்னிவ்வரை
கொங்கு வளையும் பழனி பரங்குன்றங் கூடல்தென்பாற்
பொங்கு வளைகடற் செந்தில் மயிலப் பொருப்பிகலுஞ்
சங்கு வளைவள்ளி கைக்கிட்ட செட்டிதன் தாவிதுவே. 72

வேட வனிதை மகவா னருள்தெய்வ வேழம்புண
ராட வனிதை யமதிற் றனைநினை யன்பர்க்குநன்
னுட வனிதைய னல்கு மயில நகன்புகழைப்
பாட வனிதைநெஞ் சேதரு வானுன் பகைமலைந்தே. 73

### தலைவி பாணனை வாயின் மறுக்கத் தலைவற் கோதல்

மலையாற் றலைமிகும் வேலன் மயில வரையண்ணலே
இலையாற் றலைமை பெறுமுன் றுணைவி யிருகரத்தாற்
கலையாற் றலையுணர் வீணைக் கிசைசுரைக் காயுடைத்து
சிலையாற் றலையுடை யென்றோர்க்கு வேதன் றிருவருளே. 74

### செவிலி சுரம்போக தலைவி மென்மைத்தன்மைக் கிரங்கல்

திருத்துடை யார்புனை வார்மயி லேசெழும் பூந்தருக்க
ளிருத்துடை யார்பணி வேள்வாழ் மயில வெழில்வரைவாய்
உருத்துடை யார்வன்மை செய்திட மான முயர்ந்தகுணக்
கருத்துடை யார்மனம் போலே வெதும்புங் கடுஞ்சுரத்தே. 75

சுரதத் துவகைசெய் மானார் கலவித் தொடரிலுறுந்
திரதத் துவர மயங்குநெஞ் சேதுதி செய்புரப்பான்
சரதத் துவமை யிலான்மயி லாசலந் தங்குங்கந்தன்
பரதத் துவமுத லென்றோதும் வேதம் பலசங்கமே. 76

சங்கங் கலங்கலை சார்கடல் சூழ்புவி தன்னிற்பிறந்
திங்கங் கலங்கலை போலே யுழன்றுழன் றெப்பொழுதுந்
தங்கங் கலங்கலை தேடுநெஞ் சேமயி லாசலஞ்சார்
அங்கங் கலங்கலை கந்தன்செய் வானரு ளானந்தமே. 77

ஆனந்த மான பரியாய் நடத்து மரன்கயிலை
யானந்த மானதி சூடுஞ் சடைய னருளியசே
யானந்த மான நிலைகலங் காம லனுதினமு
மானந்த மான சுகந்தர மயில்வெற் பான்றவனே. 78

### செவிலி முக்கோற் பகவரை வினாதல்

ஆன்றமை சார்மயி லாசல வேல னருளதனா
லீன்றமை யான வெனைவெறுத் தேகந்தல்பின் னேயிருகண்
கான்றமை நீரன்றி நீர்வே றிலாத கடுஞ்சுரத்தே
மூன்றமை யீர்மகள் சென்றாள்கண் டீர்கொல் மொழிந்திடுமே. 79

மொழிவன்னி யன்ன நடையுமை கங்கை முதிரும்பொன்னி
தழிவன்னி சூடி தனையன்முன் மாவேலி தனமகத்தி
னுழிவன்னி யாகி யிரந்தான் மருக னுணர்மதியே
பொழிவன்னி யாரு மயிலான் மயிலப் பொருப்படைந்தே. 80

### தலைவர்க்குப் பாங்கி தலைவி யவயவம் மடலி லெழுதல் அரிதென்றல்

அடையைவ ரையவர் தேவியைக் காத்த வரிமருகன்
உடையைவ ரையயி லேயென் றவன்மயி லோங்கன்மன்னா
இடையைவ ரையன் தோளை வரையினு மேந்திழையாள்
நடையைவ ரைய வருமோ வகையை நவில்வரைந்தே. 81

வரையரை யன்செய்த மாதவத் தாலங்கு வந்துதித்த
பரையரை யன்பெற்ற கந்தன் மயிலப் பருப்பதத்திற்
றரையரை யன்புட ளுவந் தான்பெயர் தன்னைநெஞ்சே
உரையரை யன்றுடன் ரேன்றும் வினையற வுன்னிருந்தே. 82

இருக்கந்த காவி னெழில்மயி லாசலத் திட்டமிகுந்
திருக்கந்த காவினை தீரென நல்லருள் செய்தனன்காண்
தருக்கந்த காவினி யுன்னதி காரந் தனைநினைந்து
செருக்கந்த காவிளை யாட்டல்ல வென்மொழி தேர்வெய்யவே. 83

வெயில்வா கனத்தன் றனையன் பனிரண்டு மேருவினை
குயில்வா கனத்தன் மருகன் மயிலக் குகனருளை
அயில்வா கனத்தனந் தீவினைக் கட்டறுத் தாளநெஞ்சே
மயில்வா கனத்தன் முதல்வா னவருக்கும் வானவனே. 84

வானந்தி யானய னங்கொண்ட வத்தன் வரைதருஞ்சி
வானந்தி யாகன் மதலாய் மயில வரைமுருகா
வானந்தி யாலம் வழிபா ருடலின் மயங்குமக்கால்
வானந்தி யான முனைமற வாமல் மதிநண்ணவே. 85

நண்ணியம் பாவந் தனிலெடுத் தெய்மத னன்செயலாற்
புண்ணியம் பாவ நிகர்விழி யாரைப் புணர்ந்துதுதி
பண்ணியம் பாவனை செய்யிலுண் டாகும் பயன்கொடிதென்
றெண்ணியம் பாவ லுடனே மயிற்குக னேர்கருத்தே. 86

கருத்தே விதனந் தவிர்மயி லாசலன் கண்ணுதலி
னுருத்தே விதனந் தமக்கருள் வானொளி தாளையுன்பா
விருத்தே விதன மிகந்தோர்க ளுக்கிசை வள்ளியெனுந்
திருத்தே விதனங் குழையத் தழுவுந் திருக்கரனே. 87

கராசல மூல மெனுமோசை கேட்டக் கணத்தில்வந்து
கராசலந் தீர வதைத்தோன் மருக கவின்மயிற்சி
கராசலங் கூறு மவுணசங் கார குகர்பன்னிரு
கராசல மீன்ற தனையா குறவள்ளி காதலனே. 88

கார னருண விழையுல கேத்துங் கவிகள்சொன்னார்
வீர னருண மருகன் மயிலச்செவ் வேள்மகிழக்
கீர னருண கிரியென்புன் சொற்கவி கேட்குங்கொல்லோ
பார னருணன் குடையான்றன் சித்தமென் பாக்கியமே. 89

பார்வனம் பாவகன் கால்வெளி யிந்து பருதியணு
வோர்வனம் பாவக மாகும் பரத்தி லுதித்தபொருள்
சீர்வனம் பாவகஞ் சேரு மயிலச் சிலம்பன்களி
கூர்வனம் பாவக னேயென்சொல் வேனுன் குணத்தினையே. 90

குணக்கதி காரன் பரவு மயில குவட்டிற்கந்தன்
குணக்கதி தானற்ற வர்க்கருள் வோன்பதங் கூடல்செய்யாய்
குணக்கதி மாரன்செய் போரில்மின் னுருடன் கூடினையுன்
குணக்கதி யார்செம்மை செய்வார்நெஞ் சேசொல் குறிதெரிந்தே. 91

### தலைவன் கண்படை பெறாது கங்குல் நோதல்

தென்னவன் பாரிற் றிருநீ றிடச்செய்த சேய்மயில
முன்னவன் பாத மலரையுன் னார்த முரண்மனமுங்
கன்னவன் பான கசடர்க்கு மிக்கநற் கல்விவரச்
சொன்னவன் பாவமும் போலே யிருக்குமிச் சூழிருளே. 92

இருளுந் துறக்கமும் போய்வர நல்கு மிருவினைகள்
மருளுந் துறக்கம் விழிப்பது போல்மர ணம்பிறவி
தெருளுந் துறக்கச் சிவஞான தேசிகள் சீருருவா
யருளுந் துறக்க மயிலா சலக்குக னன்புறவே. 93

### செவிலிக்கு மிக்கோ ரேதுக்காட்டல்

அன்பர வையினைப் போற்றிய சுந்தரர்க் காகச்சந்து
முன்பர வையிற்சென் றோன்சேய் மயில முருகன்வெற்பில்
மின்பர வைதிக மாழியன் மார்புற மேவிமகிழ்
பொன்பர வையனை யென்றடைந் தாள்கொல் புகலெனக்கே. 94

புகழப் பணியக் கருத வினிய புனிதகொன்றைத்
திகழப் பணியரன் மைந்த வருத்துமென் றீவினைவே
ரகழப் பணியுன் பதம்பணி யாப்போ லசுரைவிண்ணோ
ரிகழப் பணிய வயிலா மயில்வெற் பெழிற்கந்தனே. 95

எழுத வரிய வெழில்வள்ளி கேள்வ ரிருநிலத்தை
யுழுத வரியின் மருகா மயிலவெற் புற்றுவந்து
முழுத வரிசை தனையோதி வாழ்த்தி முறைமையுடன்
தொழுத வரிய லதனையெப் போதுந் துதிசெய்வனே. 96

### இறைமகன் புறத்தொழுக் கிறைவி பாங்கிக் குரைத்தல்

செயக்கந்தன் மேவச் செழிக்கு மயில்சிலம் பன்பரென
முயக்கந் தவிர்ந்தொரு குழையைச் சேர்ந்த முறைமையெண்ணிந்
நயக்கந்தம் வீசும் நளின மலரி னறவைவிட்டு
மயக்கந்த ரும்பனங் கள்ளை யருந்திடும் வண்டொத்ததே. 97

வண்டாருஞ் செச்சை மலருங் குரவும் வனக்கடம்பின்
தண்டாருஞ் சாரும் புயன்மயில் வெற்பன் சவராிில்லிற்
பெண்டாரு மென்று மணந்தோன் தனதன்பர் பேரவையைக்
கண்டாருங் கண்டவர் தாளைக்கண் டாருங் கடவுளரே. 98

### தலைவன் தலைவிக் கிடமணித் தென்றல்

கடவி கடதட மாவுக் கிளவல் கவினுறையும்
அடவி கடதடஞ் சூழ மயில வசலமின்னே
மடவி கடதட வஞ்சே லணித்தென் வளநகரும்
புடவி கடதட வாவுமா மீதிற் பொறைமிகவே. 99

மிகத்தான வர்செய்த மாயையை வென்றசெவ் வேள்திகழ்சண்
முகத்தா னவருட னேரிலக் கற்குமுன் னேன்மயிலா
நகத்தா னவமுயர் வேதாந்த காரண ஞனிலஞ்சொன்
மகத்தா னவர்மனத் தாமரை நாடி வரும்பரனே. 100

வரும்பத் தரையங்கை மாவுக் கிளவல் மயிலவெற்பன்
விரும்பத் தரையும் வணங்கச்செய் தேசிகன் மெய்யன்புள்ள
பெரும்பத் தரைத்தன் திருவடி யைப்பிரி யாமனரைத்
திரும்பத் தரையிற் பிறவா தளிப்பனற் சீரருளே. 101

மயிலாசலத் தந்தாதி முற்றும்

குறிப்பு: அந்தாதி முடிந்தபிறகு ஒரு ஏட்டில் இந்தப் பாடல்கள் மூன்றும் காணப்படுகின்றன.

நூல் இயற்றியோர் பெயர்

நாகமு மாகமு மயிலா சலக்கந்த னற்புலவன்
பாகம் பெறுமுத் தமிழ்தேர்ந்த நீரும்பண் பார்புலவ
ராக மிகவும் பெரியோர் சிறியன்சொற் கன்புசெய்வீர்
தேகங் கருத்துத் திடங்கவி யென்பெயர் சின்னையனே. 1

இந்நூல் செய்தவருடைய புத்திரராகிய பச்சையப்ப உபாத்தியாயரால் செய்யப்பட்டது

தெய்வப் புலமைத் திருவள் ளுவர்மறை தேர்ந்துரைத்த
மெய்ம்மைப் பொருளுணர் மேதா வியர்வியன் மாமயிலச்
சையத் தினன்தகன் மீதிலந் தாதித் தமிழுரைத்தரன்
செய்முத்த மார்பொய்கைப் பாகையன் சின்னைய தேசிகனே. 2

இச்செய்யுள் இந்நூல் செய்தவருடைய பேரராகிய சபாபதி உபாத்தியாயரால் சொல்லப்பட்டது

இன்பம் பொருந்தி யிருவினைக் கட்டறுத் திம்மையுற்ற
சன்ம முடிவிற் சமனணு காவணஞ் சார்வர்முத்தி
சின்மய போதச் சிவகுரு நாதற்குச் சின்னையன்சொல்
மன்மயி லாசலத் தந்தா தியிஜெனன்றை வாழ்த்தினரே. 3

# 3. தில்லை யமக வந்தாதி

### விநாயகர் வணக்கம்

கந்தன் றமையனற் றந்தஞ் செறிந்த கரத்தன்வந்த
நந்தன் றெழுந்தில்லை யந்தாதி கூற நடிக்தவரந்
தந்தன்பு கூறுவ னையமெழின் றேவிது தந்தைபுகழ்
மைந்தன் வளர்ப்பதல் லால்மற்றி யாவர் வளர்ப்பவரே.

### நூல்

மலையத் தனைவினை யானாலுந் தீர வரந்தருஞ்செம்
மலையத் தனைதில்லை யம்பலத் தானை மலையுதவு
மலையத் தனைநிலை யத்தனை கால்வணங் காமலென்னோ
மலையத் தனைநெஞ்ச மேதஞ்ச மார்நமன் வந்தெய்திலே. 1

திருக்காலை யம்புய நீங்காச்சிற் றம்பலந் திங்கள்செங்க
திருக்காலை யம்புதுக் காவாஞ்சிற் றம்பலச் சிந்தையுள்ளே
திருக்காலை யம்புண ராதெனை யாண்டசிற் றம்பலத்தன்
திருக்காலை யம்புலி கண்டேத்து மையன் றிருப்பதியே. 2

திருநாண் மடந்தைநல் லார்புடை சூழத் தினமளிய
திருநாண் மதன்குல வுந்தில்லை நாதர் சிறந்தவெங்க
திருநாண் மதியுங் கனலுங்கண் ணானவர் தேரில்வருந்
திருநாண் மகிழ்ந்துகண் டாள்கலை நாணினைச் சிந்தினளே. 3

சிந்து வளைக்குழை பாடநின் றாடுஞ் சிதம்பரனார்
சிந்து வளைக்கும் புலியூரில் வேள்பொரச் சிந்தையுட்க
சிந்து வளைக்கு நிகர்கழுத் தாள்வெம்பச் செங்கைநின்று
சிந்து வளைக்கு நிகர்வளை யாமென்பர் தேர்வளையே. 4

வளைக்குழை யானந்தி வானிறத் தாணிம வான்பயந்த
வளைக்குழை யானற் புயத்தணைப் பான்வயல் சூழ்மலர்க்கு
வளைக்குழை யானருந் தும்புலி யூர்சுற்றும் மானினங்காள்
வளைக்குழை யானகண் ணார்புனங் காத்திட வந்திலரே. 5

இலங்கயி லேத்தலே பத்தானுக் கீந்த விறைவர்பொற்ச
இலங்கயி லேத்தண் சயிலமுள் ளார்தில்லை யீசர்வெற்பில்
இலங்கயி லேத்தந்த கண்மயி லேபன்னி ரண்டனமெய்
இலங்கயி லேத்தமி யேற்குவென் காட்ட லிரக்கமன்றே. 6

இரவர விந்தன் றலையிற்கொள் வோர்தொண்ட ரேத்தியவர்
இரவர விந்தழ லும்புரஞ் சாய்த்தவி ரெண்டலையா
இரவர விந்தக லாமுடி யார்தில்லை யீசர்வெற்பில்
இரவர விந்த மர்புக்கும் வாய்மைக்கு மேற்பதன்றே. 7

ஏற்றுத வம்பலங் கொள்ளைசெய் தாசை யெழுபிறப்பில்
ஏற்றுத வம்பல வாவெங்கண் மானுக் கிதழிதந்தால்
ஏற்றுத வம்பலர் தூற்றுது திங்க ளெழுந்துகனல்
ஏற்றுது வம்பலர் சிந்தாது தாயு மிரங்குவளே. 8

இரங்க வலைக்கும் புலனு லலைப்புண் டிராப்பகலா
இரங்க வலைக்குட் படுமன மேயிடர் தீர்கமன்னு
இரங்க வலைக்குப் புறம்போகு முன்ன மிசையளிகள்
இரங்க வலைக்கு நிகர்தில்லை யானை யிறைஞ்சுகவே. 9

சுகமேது வந்த மொழிமட வார்கருத் துவரிதழ்தீஞ்
சுகமேது வந்த கனிகணன் றேமதன் றாய்மலரா
சுகமேது வந்தனைக் கண்களென் பீரது துன்பமினிச்
சுகமேது வந்ததென் றூர்புலி யூரைத் தொழச்செல்வதே. 10

செல்வரை யோதன பரமின் ஞர்க்கென்பர் தீநெறிக்கே
செல்வரை யோதவ முன்புசெய் யாத சிலர்கமலைச்
செல்வரை யோதவன் மீகத்துள் ளாரைத் திருப்புலியூர்ச்
செல்வரை யோதவெண் ணுருரு கார்தங்கள் சித்தமுமே. 11

சித்தத்தை யார்வத் துருக்கிவெண் ணீறிட்டுச் சேவித்துப்பூ
சித்தத்தை யார்த்தர செய்யாத வேள்வியைச் செற்றவர்வா
சித்தத்தை யார்பொழிற் றென்புலி யூர்ப்பொற் றேனுண்டுநே
சித்தத்தை யார்சொல்லு வார்வல்லி யீரச் சிதம்பரர்க்கே. 12

சிதம்பர வாதி முதலேயென் றோதிலர் தேடியசஞ்
சிதம்பர வாதிடர் தீர்ப்பா யெனக்குன் றிருப்புகழ்வாஞ்
சிதம்பர வாதியர் சொல்விட நீயருள் செய்மனது
சிதம்பர வாதிக்குங் காலனை வாட்டிய சிற்பரனே. 13

சிற்றம் பலத்தைய லார்விழி வேலென்று செப்பியுமெய்ச்
சிற்றம் பலத்தை யமுதென்று கோதுஞ் சிறியருமெய்ச்
சிற்றம் பலத்தையன் றாள்பணிந் தாற்சிறப் பாயபரி
சிற்றம் பலத்தை யறிந்த(ா)ளிப் பானமைத் திருக்கண்டனே. 14

கண்டனந் தந்தஞ் சொல்வீறா நடையிடை கால்கமலங்
கண்டனந் தந்த மெனமட வார்பொய்க் கவினைமெய்யாக்
கண்டனந் தந்தமிழ் கூறுகின் றார்சிலர் காளமணி
கண்டனந் தந்தந் தருந்தில்லை யான்புகழ் கற்கிலரே. 15

கல்லாரம் போது மதிகாட்ட வாவிக் கமலமிதழ்க்
கல்லாரம் போது விரிதில்லை நாதர் கயிலைமின்னே
கல்லாரம் போது வலர்போ தலர்ந்த கவிரையிது
கல்லாரம் போலுமென் றாரெண்ண மேதுரங் காவலர்க்கே. 16

காவியம் போதிக்கு நேர்செக்கர் மாலை கலந்ததுவேள்
காவியம் போதிக்கு மீதுவைத் தான்குயில் காவிடத்தே
காவியம் போதிக்கு நீள்தில்லை நாதர் கடுக்கைதந்து
காவியம் போதிக்கு முல்லைபெற் றாளுய்யுங் காலத்தையே. 17

காலருந் தும்புயங் கேசரு நேசங் கனிந்தபுலிக்
காலருந் தும்புரு வுந்தொழு வார்தில்லைக் கண்ணுதலார்
காலருந் தும்புய வீறழித் தார்சிலைக் காமன்வந்தக்
காலருந் தும்பை கொடார்கொள்வர் மாதர் கலைவளையே. 18

கலையா தரிக்கும் பிறைமுடி யார்நவ கண்டமெல்லாங்
கலையா தரிக்கும் விடநுகர்ந் தார்தில்லைக் கற்றுணர்ந்த
கலையா தரிக்கு மணியாது யாது களபமணி
கலையா தரிக்குலஞ் சூழுமுன் னாட்டுறை கன்னியர்க்கே. 19

கனிக்கா வியங்கங் கமலங்க டோறங் கமலமனங்
கனிக்கா வியங்கரை சூழ்தில்லை நாதா கருங்கலைவா
கனிக்கா வியங்கமன் னார்வெள்ளி மால்வரைக் காரிகையீர்
கனிக்கா வியங்கண் புதையாமுன் மூடுங் கனதனமே. 20

கனகத் திலையம் புகுந்திருப் பாய்பணி காணமணி
கனகத் திலையம் பலத்தாடு வாய்நின் கடுக்கைநல்காய்
கனகத் திலையம்பின் மிக்ககண் ணாள்மனக் காதலிற்கோ
கனகத் திலையம் பெனத்தள ராமற் கடைக்கண்வைத்தே. 21

வைத்தலை வேலை நிகராம் விழிமங்கை மார்தனஞ்சு
வைத்தலை வேலை யெனப்பிறந் தேனினி மாகதிக்கே
வைத்தலை வேலை யொழித்தருள் வாய்வெள் வளையுடன்று
வைத்தலை வேலை செறிபுலி யூர்த்தில்லை மன்றத்தனே. 22

மன்றாடி யானந்தத் தாண்டவ னீண்டவன் வாழ்த்துந்தில்லை
மன்றாடி யானித் துறையும்வெண் ணீறிட்டு வார்சிலைக்கா
மன்றாடி யாகச்செல் காற்றேர்செல் லாமல் வழியடையு
மன்றாடி யான்பெற வாங்கீர்பெண் காள்கொன்றை மாலையையே. 23

மாலை மதிக்குஞ் சரபாவ தார வரநதிக்கு
மாலை மதிக்குஞ் சடைகொடுத் தாய்தில்லை மன்னகொன்றை
மாலை மதிக்கு மனத்துக்குஞ் சூட்ட வருந்துமின்னுண்
மாலை மதிக்குந் தரமோ விளக்கு மருங்கியற்கே. 24

மருங்காளை வேல்கரி வந்ததங் கேவர வஞ்சிவஞ்சி
மருங்காளை யார்ந்ததிங் கேபொரு தாவினை மாவினைநம்
மருங்காளை வென்று நடந்ததிங் கேதுத்தி மாசுணத்த
மருங்காளை யார்தில்லை நாட்டிது வேபலம் வந்ததற்கே. 25

வந்தம ராமுழுத் தீச்சொரி யாமணி வாரியர
வந்தம ராமுடி யப்பகை யாமதன் வாளிகொடு
வந்தம ராமுன் குயின்முழங் காதலை மாலைகொடு
வந்தம ராமுடிக் குந்தில்லை யான்றொடை வாய்த்தவர்க்கே. 26

வாய்க்கு மரிக்கும் பொழுதைக்கு நோய்மிடி வந்ததறு
வாய்க்கு மரிக்குந் தெரியா தெனினு மருந்தனைய
வாய்க்கு மரிக்கு மணவா ளரிக்கு மணிகள்வயல்
வாய்க்கு மரிக்குட் சொரிதில்லை நாதர் மலர்ப்பதமே. 27

பதஞ்சலிக் கும்புலிக் காலர்க்குங் காட்டும் பதத்தர்பருப்
பதஞ்சலிக் கும்படி தோளா லெடுத்தவன் பாணியிரு
பதஞ்சலிக் கும்பொழு தன்புசெய் தார்தில்லைப் பாவையிளம்
பதஞ்சலிக் கும்பரற் குங்கரு தாதுகொல் பாலையிலே. 28

பானத் தரியயன் விண்ணோ ருறங்கும் பருமணிச்சோ
பானத் தரிய கயிலைவெற் பார்கையிற் பாசமெடுப்
பானத் தரியற் புலியூரன் னீர்நும் பவனவிடை
பானத் தரியவிச் சைக்காளீர் புளகப் பயோதரத்தே. 29

ஓதிமஞ் சங்கம் புனையுமை பாத னுதகவிம்பம்
ஓதிமஞ் சங்க மலத்தல ராகவு.........தே
ஓதிமஞ் சங்கம் பயில்புலி யூர்வெற்பி லோதிமமே
ஓதிமஞ் சங்கங்கொண் டென்னுவி வாட்டும தூரருக்கே. 30

அருக்கன லங்கைச் சிலைவேளுக் கீந்தவ ரன்றுபகை
அருக்கன லங்கவர் முப்புரத் தேற வமர்புரிந்தார்
அருக்கன லங்கன கைநீக் கியதில்லை யத்தனென்னு
அருக்கன லங்கழிந் தாளிழுந் தாடன் னணிகலமே. 31

கலக மனந்தன மானுர் வருந்தவெங் காலன்வந்தால்
கலக மனந்தன் றெழுந்தில்லை நாதர் கலைமதிச்ச
கலக மனந்தம் புனைந்தார் கொடுப்பர்தங் காற்கமலங்
கலக மனந்தவிர்ந் தேம்பிறப் பாழி கடப்பதற்கே. 32

கடமலை யத்த நகத்துரித் தோன்தென் றற் கானடக்குங்
கடமலை யத்தமிட் டில்லைப்பி ரான்கைக் கணைக்கிடம்வெங்
கடமலை யத்தனி யாலா டரவங் கரத்திலுறிக்
கடமலை யத்துயிர் நெய்வாரு மாயர் கடிமனையே. 33

மனையந் தகநல்கு பங்கய மாக மருவுபிர
மனையந் தகனைச் சிரநூறு முப்புர வாணரைக்கா
மனையந் தகனைத் தெரித்தோன் சலந்தர வஞ்சனைமா
மனையந் தகனைக் கரியவென் றுன்றில்லை மன்னவனே. 34

மற்கடந் தாவமு துகிற்கு லுடைந்து வரையடங்கா
மற்கடந் தாழப் பெருகுதல் பராரி மைந்தனுடன்
மற்கடந் தார்கட மாவுரித் தார்சிலை வாங்கியகா
மற்கடந் தார்தொல்லை யார்தில்லை நாட்டுறை வாணுதலே. 35

வானரம் பைக்குவை செய்தவென் காயம் வருந்திநம்க
வானரம் பைக்குழு நாடக வோசை மழையென்றஞ்சி
வானரம் பைக்குளிர் பூகத்து நாகத்து மாதவிக்குள்
வானரம் பைக்குண் மறைதில்லை மேவிய மாணிக்கமே. 36

மாவடுக் கண்டனை யம்பாக வெய்தென் மனத்தையெல்லாம்
மாவடுக் கண்டனை யன்புசெய் வாயென்றும் வாய்த்தபிர
மாவடுக் கண்டனை யந்தளிப் பான்விடம் வாரியுண்ட
மாவடுக் கண்டனை யன்றில்லை மேவிய மைக்குழலே. 37

மைக்கண்ட ணையகண் முச்சுட் ரானவன் வானவனம்
மைக்கண்ட னைய னெனப்படைத் தோன்றில்லை வஞ்சியினி
மைக்கண்ட னைய நகைவாய் மொழியை மறைமருங்கை
மைக்கண்ட னையனத் தோனுலு மன்ப வரைவரிதே. 38

அரிக்கிடை யானயன் காணாத பாதத்த ரம்பிகைநேர்
அரிக்கிடை யானை துயிலய்யி லாக வம்பலத்தார்
அரிக்கிடை யா......................னைமங்கை யாலவில்வேள்
அரிக்கிடை யாம லளித்தார் வரம்பல மத்தனையே. 39

அத்தன யத்தனை போல்தா னடியற் கயற்கறமா
அத்தன யத்தனை யானனத் தானர னம்பிகையாள்
அத்தன யத்தனை யன்றில்லை நாத னடிதொழுவார்க்[கு]
அத்தன யத்தனை நெஞ்சே யிறப்பிறப் பானதுவே. 40

ஆனம ருங்கொடி யான்றில்லை நாட்டி லணங்கினிழை
ஆனம ருங்கொடி யாதக வீர்சுர வான்கொடடி
ஆனம ருங்கொடி யான்சிலை யானதுண் டார்வுகுதி
ஆனம ருங்கொடி யாவியுட் போதுண் டளியினமே. 41

அளித்தாரை வேலன்ன கண்ணிபங் காளரை யம்பலத்தில்
அளித்தாரை வேய்ந்த சடையர யராம டிக்கவெண்ணி
அளித்தாரை வேகத்த முத்திரு மாலை யயனைமுன்னாள்
அளித்தாரை வேண்டு மடியாரை நண்ணுங்கொ லந்தகனே. 42

அந்தப் புரத்திட மூன்றுமொன் றாக வழனகைத்தோர்
அந்தப் புரத்திட வேலைவென் றார்கஞ்ச னாரிடுமா
அந்தப் புரத்திட பக்கொடி யாருமை யாளுறையும்
அந்தப் புரத்திடப் பாகத்தர் வாழிட மம்பலமே. 43

அம்பலத் தன்செய்த வேள்விக்குப் போய்வந்த வையன்றுய்ய
அம்பலத் தன்னியல் வாசங் குலவு மகல்வயல்பொன்
அம்பலத் தன்ன நடையீ ரெமக்கின் றளிக்குஞ்செந்தேன்
அம்பலத் தன்ன மிமையோ ரமுதொக்கு மம்புவிக்கே. 44

அங்காப் பரவரைக் காவேரி வெள்ள மடுத்தபங்க
அங்காப் பரவரை தில்லைமன் றாரை யடுத்தவர்பால்
அங்காப் பரவரை யேத்தா ரிரந்திரந் தற்பகல்வாய்
அங்காப் பரவரை யவரங் காப்ப தரியதன்றே. 45

அன்று லமருந் தியபெரு மான்தில்லை யம்பலத்தை
அன்று லமருந் திமாற்கரி யான்வெற்பி லன்புசெய்வாய்
அன்று லமருந் துதவுங்கண் ணுயினி யாவமெமை
அன்றால மருந்தி யார்ந்தீர்க்குங் காதலு மாற்றிடுமே. 46

ஆறக் கரவம ராபதி காவென்ற வத்தன்முத்தி
ஆறக் கரவமா வேள்விசெற் றேன்றில்லை யம்பலத்தான்
ஆறக் கரவமர் செஞ்சடை யான்வெற்பி லாடைமின்னார்க்[கு]
ஆறக் கரவ மருந்துண்ட வாவின் றரவத்தையே. 47

அரவத்தத் தைக்கு மரிக்கரிக் கீந்த வமலமொழி
அரவத்தத் தைக்கு நிகர்கங்கை நாத வணிந்தமணி
அரவத்தத் தைக்கவிழ்த் தம்பலத் தாடு மனகனடி
அரவத்தத் தைக்குலைக் கும்பத்தர் பாம்பணி யங்கத்தனே. 48

அங்கஞ்சத் திக்கு மரியார்க்கு மீந்தவ ராணமாறு
அங்கஞ்சத் திக்கு மரியாதன் றில்லையி லன்றெனக்கே
அங்கஞ்சத் திக்கு மரியாடென் செய்த தணங்கனையாய்
அங்கஞ்சத் திக்கு மரியாது காத்தன ரன்பினரே. 49

அனங்கனை யாரண வேதனைக் கூற்றைய டக்கியதீ
அனங்கனை யார்செறி பாகத்தி னுனரி யாற்கரியான்
அனங்கனை யார்புனற் றென்புலி யூரனென் னத்தனென்னை
அனங்கனை யார்கருக் கூட்டா னடியரை யஞ்சலென்றே. 50

சலம்பயந் தான்முத லேழ்கடல் பார்பெற்ற தாயிமையா
சலம்பயந் தான்பங்கி லம்பல வாணநின் றுமநல்காய்
சலம்பயந் தாற்கெளி தேசெய்கை போலத் தளவலர்ப்பூ
சலம்பயந் தார்குழன் மேலெய்யு மாரனைச் சங்கரித்தே. 51

சங்க முகந்த் தமிழுரைத் தோன்சிவ சங்கரன்வா
சங்க முகந்தங்குந் தென்புலி யூரிற் றரளமணி
சங்க முகந்தர வெள்வேல்செவ் வேலைத் தரவணங்கே
சங்க முகந்த சுனைவந்த வாசொலத் தக்கனரே. 52

தக்க மலங்கட் டளையவ மாக்கித் தவிர்த்திடும்வே
தக்க மலங்க ளெனத்தரி யாநிற்குஞ் சாரினுமே
தக்க மலங்கடங் காதாவி மீண்டுந் தடந்தனின்மோர்
தக்க மலங்க ளுகுந்தில்லை நாதர் தனிப்பதமே. 53

தனக்கா வணங்கினர் தாண்டவ மாமயி ருண்டவஞ்சந்
தனக்கா வணங்கிய தென்புலி யூரர் தொடுத்தவன்பன்
தனக்கா வணங்கிலே காணவன் றீந்தவர் தண்சிலம்பா
தனக்கா வணங்கிடை சாயினுந் தாங்கு தனிவள்ளலே. 54

கண்ட நவத்தை யருடில்லை யானுமை கையகலாக்
கண்ட நவத்தையன் மாளா மனஞ்சங் கரந்தவன்மாற்
கண்ட நவத்தைக் குதவுபொற் றாளிணை காண்டுணையாக்
கண்ட நவத்தை யகமே விடாமற் கருதுகமே. 55

கருத்தம ராதுநின் கோலங்கண் பார்க்கில் கைகடொழாக்
கருத்தம ராமென் பிறப்பறு மோபுலிக் காலருர
கருத்தம ராரணங் காணநின் றாடுங் கனகத்தில்லை
கருத்தம ராமர மெய்தவன் றேடக் கரந்தவனே. 56

கராத்திரி யாலைச் சிலையா ளிடத்தினர் கார்முகச்சி
கராத்திரி யார்தென் புலியூ ரிறைவர் கனிமொழியே
கராத்திரி யாறுங் கராத்திரி யாறுங் கடத்தெளிதே
கராத்திரி யான்வரு வேன்வெரு வேலென்பர் கல்லதர்க்கே. 57

கற்க வணங்கை யகத்தே யிருப்பதுங் கண்டுமொழி
கற்க வணங்கை யகலாத பைங்கிளி காளினினீங்
கற்க வணங்கை வனமரிந் தாலுங் கதிர்படுசெங்
கற்க வணங்கைத் தருள்தில்லை நாதர் கனகிரிக்கே. 58

கிரிவரு மைக்கணி யாரடை தோறுங் கிளரலர்த்து
கிரிவரு மைக்கணி யாரங்கள் பூணச்செங் கேழ்வடுவ
கிரிவரு மைக்கணி யார்கல வார்விடங் கிட்டவைத்த
கிரிவரு மைக்கணி யாரணி யார்தில்லைக் கேகயமே. 59

கயவனம் பானந் துடன்சேருந் தில்லைக் கடவுளுமைக்
கயவனம் பானயஞ் சேர்சடை யான்வெற்பிற் காமனென்னுங்
கயவனம் பான வனமா வனங்களைக் காய்ந்துசெம்பங்
கயவனம் பானல் வனங்களை வோஞ்செல் கயற்கண்ணியே. 60

கண்ணுனந் தத்துளி கலைபுலிக் கான்முனி கண்டதில்லைக்
கண்ணுனந் தத்து வினைகளை வாய்புரங் காய்ந்தகறு
கண்ணுனந் தத்து வளஞ்சேர் களத்தியைக் கட்டவிழ்பூங்
கண்ணுனந் தத்துங் குழன்மானைச் சேருன் கரத்திடையே. 61

கரவா மலகம் பயன்போ லடியவர் காணநின்னைக்
கரவா மலகம் பயந்தீர்த் தருள்புங் கவகருணை
கரவா மலகம் பெனக்கயல் பாய்தில்லைக் காவலசங்
கரவா மலகம்ப மாமுடற் சாயினுன் கைதரவே. 62

தந்த மரிக்கும் பிறப்பற மாலயன் சாற்றும்பிரான்
தந்த மரிக்குகுத் தோன்புலி யூர்சுற் றுஞ் சங்குடனே
தந்த மரிக்குந் துறைவா னலனன்று தந்திகளின்
தந்த மரிக்குலம் வாங்குமப் போதிற் றணிவரலே. 63

வருமா தவனன்று நீயெங்கள் பாடியில் வைகிமின்னி
வருமா தவனைந் தரற்றுவெற் பாமக வானுமுனி
வருமா தவனுந் தொழுந்தில்லை நாதர் வரையினிற்றெவ்
வருமாத வன்புகு தப்புகுந் தார்மிக வைகியதே. 64

வைகுந் தனையுந் தரித்தீ ரினித்தினை மாவுண்டிங்கே
வைகுந் தனையுவ மிப்பா ளுடன்விடம் வாரியுண்டு
வைகுந் தனையுந்தி வேதனைக் காத்தவர் வான்மணிக்கோ
வைகுந் தனைய நகைபாகர் தில்லை வனத்திடையே. 65

வனப்புற்ற கத்தன் முடிமீ தணிந்தவன் வாரிநஞ்சின்
வனப்புற்ற கத்த னருணேசன் காசி மருவுமிறை
வனப்புற்ற கத்தன் புலியூர னன்பர் வடிவுகொண்டு
வனப்புற்ற கத்தன்ன மேவரு வேனுங்கள் வண்பதிக்கே. 66

வண்டம ருங்குழ லாய்கழுங் காடில் வளைந்தறத்து
வண்டம ருங்குழ லாய்நிற்கு மேயெங்கள் வான்பொருளும்
வண்டம ருங்குல தெய்வமு மானவர் வாருதிக்குள்
வண்டம ருங்குல வுந்தில்லை நாதர் வரையிடத்தே. 67

இடக்கால னன்றுய்ய மால்காணத் தூக்கி யெடுத்தவன்மை
இடக்கால னன்று விழவுதைத் தோன்றில்லை யீசனுயிர்
இடக்கால னன்றுயிர்க் கின்மருந் தாக்கு மிறைபதங்கள்
இடக்கால னன்றுய்ய லாநெஞ்ச மேவணங் கின்னலற்றே. 68

நற்ற வருக்கையா காவகலா மந்தி நாவசைத்து
நற்ற வருக்கைப் பழந்தேன் சொரிதில்லை நாதர்கண்க
நற்ற வருக்கை பலரா கியமத னூீமுன்கண்
நற்ற வருக்கை மலர்பூட்ட வுங்கொன்றை நல்கலரே. 69

அலமருங் கோகன கஞ்சாய்க்குந் தில்லை யமலன்கண்டத்
தலமருங் கோகன கம்புனை வான்வெற்பி லங்கமுள்ள
அலமருங் கோகன கந்திரு மேனி யணிமுலைவான்
அலமருங் கோகன கம்மயி லேயென்ற னுருயிர்க்கே. 70

ஆரத் தனங்கணற் றிங்களிற் காய்வது மம்பெனுங்கல்
ஆரத் தனங்க னடர்ப்பதும் பார்க்கி லணைந்துசெங்கை
ஆரத் தனங்கனை பாகத்தி னுழ லாயிரவாய்
ஆரத் தனங்கள கத்தில்லை யீச னணியிழையே. 71

அணியத்தந் தித்திக்குஞ் சொல்லார் குழாம்பெற் றரசர்முன்னே
அணியத்தந் தித்திரள் சூழச்செல் வார்தொல்லை யாரணிநார்
அணியத்தந் தித்தி யெனத்தாள மார்க்க வருந்தில்லையார்
அணியத்தந் தித்திரு நட்டமிட் டானுக்கன் பானவரே. 72

ஆனன மஞ்சுங் கண்மூன் றுடையவ னுழியங்கை
ஆனன மஞ்சு நிகர்மிடற் றுனட மாடுந்தில்லை
ஆனன மஞ்சு நடையா ளிடத்தன்முன் னுருயிரே
ஆனன மஞ்சுக மோதுங்கொ லோதணி யாமயலே. 73

ஆமையி னுகஞ் செறியோ டணிந்தவ னுழியொளி
ஆமையி னுக நிகர்புயத் தான்சிங்க மானைபுலி
ஆமையி னுகம் புணர்தில்லை யூர னணிந்தபொற்றூர்
ஆமையி னுகமஞ் செய்கையின் காதலுக் காகுமன்றே. 74

ஆக மரத்த முகத்தானைத் தந்தவ ரைந்தருமட்
டாக மரத்தலை மேற்கயல் பாய்தில்லை யம்பலத்தார்
ஆக மரத்த மலர்போலு வார்முன் பருள்புரிந்த
ஆக மரத்த ரணிமாலை மாலை யகல்வித்ததே. 75

அகலத் தனிமை யறவுமை சேர்ந்தவ னங்கியெரி
அகலத் தனிமை யவர்போற்று மத்த னயன்சிரமாய்
அகலத் தனிமைய வெற்பான் மருகன்பொன் னம்பலத்தான்
அகலத் தனிமை யறிந்துவிற் காம னமர்செய்யுமே. 76

அமரரை மால்தொழு மம்பல வாண ரவிர்புலித்தோல்
அமரரை மாசுணத் தாலணி வாரரண் மூன்றெரிய
அமரரை மாத்திரைக் கேவிளைத் தாரரு ளானவரென்[று]
அமரரை மாத்திய கண்போ லெழுந்ததின் றம்புலியே. 77

## 4. திருத்தணிகை வெண்பா வந்தாதி

### விநாயகர் வணக்கம்

உலகினிரு மைப்பயனு ......................
இலதகரத் தெந்தைதணி கேசன்—..........[தணி]
கையானை யந்தாதி காட்டும்வெண்பா வாகவெழிற்
கையானை மாமுகவன் காப்பு.

### நூல்

எல்லா வளமு மிசைத்தருள நற்றணிகை
வல்லானை யல்லான்மற் றூர்புகல்வாய்—தொல்லுலகின்
மாந்தர்களா நன்மைபுன்மை மன்னுமோ நெஞ்சேயே
மாந்தலையா தேநீ மதி. 1

மதியினா லோதணிகை வாழ்வின் கழலை
விதியினா லோமனமே வேண்டாய்—அதிநயஞ்செய்
யாயெனவே யாதரிப்போ நாற்றிய மற்றதினி
தாயெனவே தோதா யறிந்து. 2

அறிந்துதணி காசலன்ற னாதரவை நெஞ்சே
செறிந்தினிதாய்ச் சேராய் செருக்கின்—மறிந்துழல்வ
தென்னோ தகவுரையா யீதுநல னன்றந்தோ
வென்னோ தகவுணர்ந்து மே. 3

உணர்ந்தொருக்காற் றன்னை யுன்னுவோர்க் கின்பம்
புணர்ந்திருக்க நெஞ்சே புரியுங்—குணஞ்சேர்
திருத்தணிகை யானைமான் சிந்தைமகிழ் காந்தன்
திருத்தணிகை யானையே செப்பு. 4

செப்புந்தன் னன்பருக்குச் செவ்வாய் மலர்ந்துநல
மொப்பத் தருணத் துதவிசெய்யும்—அப்பனிரு
தங்கமலர்த் தாளைத் தணிகையிற்கண் டானெஞ்சே
தங்கமலத் தாக்குமினித் தான். 5

தான்புரியு மெவ்வுலகுந் தங்குமுயிர் தோறிருக்கும்
வான்புரிசை சூழ்தணிகை மால்வரையான்—தேன்கமழ்தாள்
வந்தனைசெய் வோர்பால் வளருநிதி யொத்தேயு
வந்தனைசெ யற்செய்பெரு மான். 6

பெருமான் றணிகைப் பிரான்றெழும் பர்நம்பால்
வருமாகோ ளுள்கள்புரி வன்கண்—ஒருஞான்றுந்
தந்திரத்தின் மாழ்கித் தயங்குவதென் னேகடந்தோர்
தந்திரத்தின் தன்மைநெஞ்சே சார். 7

சார்கதியைக் காட்டுந் தணிகேசன் றண்மலரைச்
சீர்கதிக்க வென்றுநிதஞ் சேராமற்—சூர்கொணெஞ்சே
தந்தனமே யாமருங்குற் றூழ்ந்தநடை மின்னார்கள்
தந்தனமே வத்தகுமோ சாற்று. 8

சாற்றுமிட மும்பொருளுந் தக்க பலவளனு
மாற்றுந் தவத்தியலு மன்புசெய்து—போற்றுவோர்க்
கிட்டபடி யேயமைப்ப னெங்கடணி கேசன்முன்நாம்
இட்டபடி பெறுவ தென. 9

என்னபயன் பெற்றாய்வீ ணேயுழலு மேழைநெஞ்சே
மன்னுதணி காசலனை வாழ்த்தாமல்—மின்னிடையார்
இச்சகத்தின் மாறா திருக்கின்ற நின்கோலம்
இச்சகத்தி னன்றோ விது. 10

இதுநலமோ தீதோவென் றேங்குமட நெஞ்சே
பதுமவத னும்பிகைதன் பாலன்—முதிர்தணிகை
நீதனித்த னெல்லா நிலைசெயுமென் றெண்ணுமல்
நீதனித்தென் னஞ்ச நிகழ்த்து. 11

நிகழ்த்துந் தணிகைவரை நித்தியன்ற னின்பப்
புகழ்த்துதிசெய் யன்பிற் புகுதாச்—சகத்துமூன்று
தங்காலம் போற்காலன் சாரிலென்செய் வார்வீணில்
தங்காலம் போக்குவர் தாம். 12

தாம்பிறவி வெய்யவினை சாரார் சமர்க்கஞ்சார்
தீம்புடையோ ராலூறு சேர்ந்தயரார்—ஆம்பயன்செய்
சத்தியங்கைக் கொண்ட தணிகேச னன்பரென்கை
சத்தியங்கைக் கொண்டபலன் தான். 13

தானவரை யன்றெரித்து தக்கன் மகந்தடிந்து
வானவரைக் காத்தவந்தி வண்ணனருள்—ஞானவின்பச்
சுந்தரமே வுந்தணிகைச் சோதிநிற்கா ளாய்வினைக்கஞ்
சுந்தரமே வத்தகுமோ சொல். 14

சொல்லும் தணிகைச் சுருதிமுத லேயுன்னை
யல்லும் பகலுநினை யாமலந்தோ—புல்லுங்
கலங்கொண்டார் மையல் கலந்தே னையடைக
கலங்கொண் டினிதாள்வாய் காண். 15

காணக் கிடைக்குமோ கங்குலொத்த சிந்தையற்கு
மாணற் புதத்தணிகை மன்னவனைச்—சேணமரா
முன்னாலு கையானை முன்னவனா க்கொண்ட
முன்னாலு கையானை முன். 16

முன்னவனு நீயாய் முயங்குதொண்டன் நானாகி
நன்னிலத்தி லோர்சோர்வு நண்ணுமோ—பன்னுபவம்
ஒய்வில்லாற் கெய்தரிதா யுற்ற தணிகைவரை
ஒய்வில்லார் வேலா யுரை. 17

உரைப்பதற்கு நாவுண் டுணர்வதற்கு நெஞ்சுண்
டருத்தியின்வந் திக்கநெஞ்சுண் டையன்—திருத்தணிகை
மாமலைவாய்த் தோன்கழலை மற்றதெண்ணார் நட்புறலா
மாமலைவாய்த் தோன்ற மதித்து. 18

மதியினிமைப் போதும் வளமார் தணிகைப்
பதிபரிவி னாலுதவும் பான்மை—அதிநலத்தை
உன்னாம லந்தோ வுழல்கின் றதுமனமே
உன்நாம லர்ந்தோது வாய். 19

ஓதுமம ரர்க்கா யுவந்தால முண்டவன்மெய்ப்
பாதியுமை யாளளித்த பாலகனே—தீதகலப்
பாதுகாத் தாட்கொள்வான் பைம்பொற் றணிகையைத்தப்
பாதுகாத் தான்மனமே பார். 20

பாராமல் நீயிப் படியிருந் தாலெமக்கிங்
காராவா ருன்னையன்றி யானதுணை—சீராக
வந்தனஞ்செய் வார்க்கினிய வான்றணிகை யாயுன்பால்
வந்தனஞ்செவ் வாய்மலரு வாய். 21

மலர்வாய் பொழிற்றணிகை வள்ளல் கருணை
இலர்வாழ் வெனக்கிச்சை யின்றார்—பொலன்றார்
கலைமான் விழிமானின் காதலவ னன்பார்
கலைமான் அறிவினரைக் கண்டு. 22

கண்டுலக வாழ்வைக் கனவென் றறிந்துநெஞ்சே
வண்டுழலு மாறேபோன் மாழ்குமுனக்—குண்டோசொல்
மானையணி யோர்கரத்தான் மைந்தன் தணிகையிற்பெம்
மானையணி யோர்தம் வளம். 23

வளங்கொண்ட பொற்றணிகை மால்வரையி னெஞ்சே
உளங்கொண்ட மருமண்ண லூற்றம்—விளம்ப
சுரர்பூ மனைக்காய்ந்த சோதிநெடு வேலோன்
சுரர்பூ மலரிடுதாள் சூழ். 24

சூழைந்து வேடர் துடுக்கற்று நற்றணிகை
வாழ்பரனை யன்பாரு மாநிதியைப்—போழும்
புலியைமுடித் தாரதனைப் போர்த்தோர் குறையும்
புலியைமுடித் தார்சுதனைப் போற்று. 25

போற்றித் தணிகைப் புராந்தகனைப் பூமலர்கொண்
டாற்றுநல நீங்கி யரிவையர்பால்—தோற்று
மரைப்பண வல்கு லாவிநெஞ்சே தீமை
யரைப்பணவ லஞ்சி யகல். 26

அகலாக் கொடியவினை யாளர் செயுஞ்செய்கை
மிகவே யெனினுநமை மேவா—தகையோங்கு
மாற்றலைமீக் கொண்ட வருட்டணிகை யான்பதத்தொண்
டாற்றலைநெஞ் சேவிடவேண் டாம். 27

ஆமா றளிப்ப துணையன்றி மலரவனால்
மாமான் முதலோரால் வாய்ப்பதோ—பூமீதிற்
காசுவற்கங் காட்டுதணி காசலநா தாமயிற்பா
காசுவற்கங் காத்தோய் கதி. 28

கதியெமக்கு நற்றணிகைக் காவலனார் தாளே
யதின்மிகுத்த தோவேனை யாவுந்—துதியார
வார கனமருக வெனவாழ்த்தி யஃதெய்த
வராகன்ம ருக்கு மனம். 29

மனமே பிரவஞ்ச மாயைக்குள் ளாழ்ந்து
கனமேவு நற்றணிகைக் கந்தன்—றனைமேவுங்
காதலைவாய்ந் தோர்மேன்மை கண்டுமதி லன்புமுயங்
காதலைவாய் நன்றோ கருது. 30

கருதிற் றணிகைக் கடவுளைப் போலெங்கு
மொருதுணை நெஞ்சேநிற் குளதோ—பரிவுடனே
யாதரிக்க வல்ல வவன்கழலைச் சென்னிமிசை
யாதரிக்கா யென்னவவ லம். 31

அவலக் குறும்பி யடவிதனிற் சிக்கிப்
பவநெறியே நாளும் பயிலுஞ்—சவலைநெஞ்சே
யுன்னலையே நற்றணிகை யுற்றமன்றா ளிற்பொருந்த
வுன்னலைவி லேதா முயர்வு. 32

உயர்தவத்தி னாலிவ் வுடல்கிடைத்து மந்தோ
பயனிலவாய் வீணாட்படாது—முயலுமனே
மாதணிகை யாதுழலும் வாஞ்சையுடை யோர்க்குவரு
மாதணிகை யானருள்சேர் மாண்பு. 33

மாண்புபெறத் தணிகை மன்னன்றாட் கன்புநிலை
பூண்பவர்போல் வேடநீ பூண்பதனால்—ஈண்டு
வருமா வவனருடான் மானார் நலங்க
வருமாவன் நெஞ்சேசொல் வாய். 34

வாய்புதைத்துக் கைகட்டி வந்தனஞ்செய் துன்பதத்தைத்
தூயமல ரிட்டென்றுந் தொழுதிலேன்—நாயவென
துண்மைக் குறும்பகல வோங்குதணி காசலனே
வுண்மைக் குறுந்துணையா யோம்பு. 35

ஓம்புந் தணிகைவரை யுற்ற பரஞ்சுடர்ப
தாம்புயங்க ளுண்டென்று தான்றேர்ந்து—மாம்பல்சூர்
ஏனோ ரிதையமன்றே யேழைநெஞ்சே யாங்கதெண்ணாய்
ஏனோ ரிதையமென வே. 36

எனக்குன் னிருபதத்தை யீந்தருளப் பெற்றும்
மனக்குரங்கின் செய்கையது மாறா—தனைத்துளநாள்
எல்லா மிருக்குமெனி லென்செய்கே னோதணிகை
யெல்லா மிருக்குமுத லே. 37

முதலினிடை யிற்கடையின் மூன்றுஞ் சுருதி
ஓதலும் திறமுணர்ந்து நோக்கிப்—பதயுகத்தை
நாட்டத்தா தர்கணமு நண்ணியரு ளுந்தணிகை
நாட்டத்தா னமையுநெஞ்சே நாடு. 38

நாடும் புவிபுனல்தீ நன்மருத்து வானமென்ப
தாடுமென்ப ருள்ளத்து முற்றிருக்கும்—ஆடுமயில்
வாகனத்தார் பொற்றணிகை வள்ளலா ரோர்மொழியால்
வாகனத்தா ரைக்கடிந்தார் வந்து. 39

வந்து பிறந்துழலு மாந்தரென வுன்னன்பர்
அந்தவினைக் காளாகா தாள்வதுபோற்—சந்ததமு
மாய்பிணிமு கத்தயரா தாரருள்செய் வாய்தணிகை
யாய்பிணிமு கத்தமல னே. 40

அமலா தணிகைவரை யண்ணலின் னூர்கள்
தமையாசை கூர்தலெனச் சார்ந்துன்—தமரானோர்
தாளாத ரிக்கும்வகை தந்தா ளவுணர்செயல்
தாளாத ரிக்குமெந் தாய். 41

தாயாகித் தந்தையாய்த் தாரணியி னுயேனைச்
சேயாக்கொண் டான்தணிகைச் சிற்பரமாந்—தூயாவோ
கைமா றுருவின் னுங் காட்டுமுனைக் கியான்புரியுங்
கைமாறு தேறேன் கனிந்து. 42

கனிந்துருகி நின்சீர்க் கழனிழலி னின்று
நினைந்தலைக்கு மிந்தவெயி னீங்கிப்—புனைந்தவெழில்
ஆனந்த மார்தணிகை யையநினைப் புகழ்பேர்
ஆனந்த மாம்வாழ் வருள். 43

அருள்பொழியு நற்றணிகை யையனையென் னைமற்
பொருள்மதத்தி னூற்றிரியும் பொல்லா—மருளுடையோர்
தங்களைநா டேல்மனமே தாங்குமவன் றுட்குவிர
தங்களைநா டும்பரிசு சார். 44

சாரு மிருவினைகள் தன்வழிக்கே யாளாக்குஞ்
சீருனக்கு நன்றோ திருத்தணிகை—ஊரரசே
யாறுமைந்தர் சாபநீத் தாண்டதுபோ லத்துயர
மாறுமைந் தமைக்கநினை வாய். 45

நினைவா யுணர்வாய் நிகரி லறிவாகி
மனமாகித் தத்துவமு மான—வுனையென்னுள்
ஐயமறக் கண்டுதெளி வாகவருள் வாய்தணிகை
ஐயமறக் கன்னியணை வோய். 46

ஓயாமற் பற்பலவா யுள்ளமகிழ் சீரளிக்குந்
தாயாந் தணிகைத் தயாநிதியே—வாயாரப்
பன்னிருவா காவென்று பாடியுரு கேனுமுய்யப்
பன்னிருவா காவுட் பரிந்து. 47

பரிந்தெனைநீ காக்கும் பரிசதனை யுன்னி
யரிதரிது வானத் தவர்க்குந்—தெரிந்துமென
துள்ளமுரு காவியவா தோகோ தணிகைவரை
யுள்ளமுரு காவென் னுவந்து. 48

உவக்குமெழி லும்பரிடை யூறுதவிர்த் தாண்ட
சிவக்கொழுந்தே தென்தணிகைத் தேவே—தவத்தான்மெய்
பங்கிட் டுமைக்களித்தான் பாலவெனக் கென்றுனதின்
பங்கிட்டு மோநீ பகர். 49

பகலு மிரவும் பரவுவோ ருங்காண்
டகவருமை யாயிற் றணிகைக்—குகனேபன்
நாளகஞ்சற் றுங்கனிந்து நாடேனுக் கென்றுமுன்
நாளகஞ்சத் தாளிணைநா தா. 50

நாதா திருத்தணிகை நாயகமே நின்னம்பொற்
பாதாம் புயமே பரமன்றே—ஓதாத
வஞ்சத்தா ரெண்ணங்கூ டாவகைபோ லன்பர்பிர
வஞ்சத்தா ரார்வன் பவம். 51

வம்பர்புரி தீவினையால் வாடியயான் மேன்மைபெற
வும்பருக்குஞ் செய்யா வுதவிசெய்தாய்—நம்பியென்று
நின்றா ளிணைபரவ நீடுதணி கேசவென்னுள்
நின்றா ளிணையிலின்ப நேர்ந்து. 52

நேரப் பெறுவதற்குன் நீளடிகட் காளாதல்
பாரத் தவமுன் பயின்றேனோ—சீர்கொடணி
காசலநா டேயமர்ந்த கந்தாயா னென்செயினுங்
காசலநா டேலென்றுங் காண். 53

காணுகிலீ ரந்தோ கதிர்வேற் றணிகேசன்
மாணுறுபொற் பூங்கழல்கண் மாநிலத்தீர்—யாணற்கண்
பஞ்சடைந்து நாக்குழறிப் பன்னழுவிச் சொல்வழுவிப்
பஞ்சமுறு முன்னே பணிந்து. 54

பணியுமன்பர்க் காகாத பாதகராம் பேய்கள்
அணியுலகி லாடுகின்ற தந்தோ—தணிகைவரைக்
காரணவு வாமதிபோற் காட்டுமுக மாதெயினர்
காரணவு மோதிகண வா. 55

கணங்கொள் படர்சூழக் காலன் குறுகி
இணங்குமனை மக்கள்சுற்ற மெல்லா—மணங்குறக்கொண்
டேகந்த நாளுறுமு னின்பத் தணிகையினெஞ்
சேகந்த நாண்மலர்த்தா ளெண். 56

எண்ணமுறு நெஞ்சகமே ஏகாந்தத் தேதணிகை
யண்ணல்கழல் சேவையெனு மாரமுதை—யுண்ணுதற்கே
யாமையைப்போ லைந்து மடக்கியிருக்கவறி
யாமையைக்கொண் டாயென் னறை. 57

அறைகுகையிற் கானகத்தி னூரழலின் வீணே
நிறைதவஞ்செய் வார்தணிகை நித்த—நறைமலர்த்தாள்
ஏதமறத் தோடுநின்றார்க் கெளிதா மீதுநெஞ்சே
ஏதமற நீயுமுன்னு யென். 58

என்பரிவை யாக்கு மிசைதன தன்றேபோல்
முன்பிருந்தன் பாயான்சொன் முத்தமிழி—னின்பவிலா
சத்தைப்பின் றன்னதென்றே சார்தணிகைக் காவலன்மோ
சத்தையென்னென் றோதுவன்நான் றான். 59

நானென்றுங் காப்பனென நண்ணியரு ளுந்தணிகைக்
கோனெம் பெருமான் குகனவனைத்—தானினையார்
அச்சமன்கைப் பாசத்தா லார்த்திடிலெவ் வாறதனை
யச்சமற நீக்கவிழை வார். 60

ஆர்பகைஞ ராரினியர் யாதிகழ்விங் கியாதுபுகழ்
சீர்கொடணி காசலநின் செய்கையதன்—றோருநிலை
காட்டாய லோட்டும்வள்ளி காந்தனே யின்னமுமென்
காட்டாய தேன்வஞ்ச கம். 61

கம்பத் துடையதிரக் காவலனைக் காய்ந்தவயச்
செம்பொற் சிலைமால் திருமருகா—உம்பர்குடி
ஏற்றிவரு வேலா வெனையொன்றுங் காத்தளிப்பாய்
ஏற்றிவரு மீசர்குரு வே. 62

குருதந்தை தாய்தெய்வங் கொற்றவனு மாகும்
ஒருவன் றிருத்தணிகை யுற்றோன்—கருதுமன்பால்
வந்திக்கு மண்சுமந்தான் மைந்தனவன் றாளைநெஞ்சே
வந்திக்கு நன்னெறிக்கண் வா. 63

வாரா வெனவழைத்து வந்துதடுத் தாண்டபுகழ்
சீரார் தணிகைவளர் செல்வமே—பேரான
வத்தன்மைக் கண்ட நகமகிழ வன்றுரைத்த
வத்தன்மை யென்றுரைப்பா யால். 64

ஆலுமொரு தீங்குமணு காதென்றே யாட்கொண்ட
சீலமிகுந் தணிகைத் தேசிகனே—மாலின்
கடைபோக மானுர் கவராம லென்னைக்
கடைபோகங் காத்தல் கடன். 65

கடனுனக்கன் றேதணிகைக் கந்தாநின் னன்பர்க்
கிடர்செய்ய வுன்னுபவர்க் கென்றும்—புடவிதனில்
வெந்தொழிலிற் சிந்தை விடுவித்த வர்தீமை
வெந்தொழியக் காட்டும் விறல். 66

விறல்வே லுடைக்கோ விமலன் றணிகைக்
குரமின் றனைச்சேர் குமரன்—திறலான
பன்னிருதா ளுன்னிப் பணியிலுனை நெஞ்சேகாப்
பன்னிருதாழ் வில்லையினிப் பார். 67

பாரமுதா மெவ்விடத்தும் பார்க்கி லெனக்குநிகர்
ஆர்தணிகை யாறுமுகத் தண்ணல்—நேர்விடமுன்
உண்டான் சுதன்மனமே வுற்றருள்செய் தாளுநலன்
உண்டான தாலதை யுன்னு. 68

உன்னுதற்குன் றாட்பெருமை யெவ்வா தருமறைக்கும்
என்னுளதென் றூற்றணிகை யில்லுறைந்தே—மன்னுமுயிர்
பாவையங்க மாமவை நீ பாராட்டு வாய்வரைபொற்
பாவையங்க மானவர்பா லா. 69

பாலன்முறைக் காய்ச்சமணைப் பாரில்விழத் தாக்குமண்ணல்
சீலமதி னுதித்த தெள்ளமுதே—கோல
மலர்வாய் பொழிற்றணிகை வாழ்வேநின் செவ்வாய்
மலர்வாயா னுய்யும் வகை. 70

வகைதுகையோ ராது மதிமயங்குங் காலைப்
பகையி னெதிர்கால படரைத்—தகைதல்செயச்
சங்கரன்றன் பாலா தணிகைமுதல் வாவிலங்கைச்
சங்கரன்ற னன்மருகா சார். 71

சாறு முனதடியார் தாம்பெற்ற பேறெனமற்
றூர்பெறவல் லார்தணிகை யையனே—பாரிலிந்நாள்
கண்டுமொழி யாமயக்கக் கட்டகற்ற வாராய்கற்
கண்டுமொழி வள்ளிகண வா. 72

கணக்கி லிருவினையாற் காசினியி னுன்றன்
இணைக்கமுறு மன்ப ரினைதல்—குணித்தறிந்துந்
தாமதத்து வத்துறலோ தக்கதணி கையிற்பூந்
தாமதத்து வத்தாணு வே. 73

தாணுவென நின்னு தரவுபெற வேயன்பு
பூணும்வகை பொருந்தாப் புத்திகொண்டு—வீணுறநான்
அந்தோ கடத்துகின்றேற் காரருள்செய் தாய்தணிகை
யந்தோகை யூருமரு ளே. 74

அருளளித் தெப்போது நமையாளுந் தணிகைப்
பொருளிடத்தி லன்பு புகுதா—மருளடுத்து
மானார் கலவி வலைப்பட்ட நெஞ்சேயெம்
மானார் பதமுன்னி வாழ். 75

# 5. திருச்செந்தில் நிரோட்டக யமக வந்தாதி

காப்பு

*கொற்ற வருணனை பின்றன் றுழக்கிய கொக்குநவைச்*
*செற்ற வருணனை யன்னசெவ்* வேற்படைச் சேந்திலர்க்கு
*முற்ற* வருணனை யந்தாதி *யென்று* முதிர்மதப்பேர்
பெற்ற *வருணனை* யானனத் தாதியைப் பேசுவனே.

நூல்

*யானைக்கண் டங்கரி சென்றேத் தெழிற்செந்தி லின்றடைந்தே*
*யானைக்கண் டங்கரி யர்க்கங் கயிலையை யேய்ந்ததகை*
*யானைக்கண் டங்கரி சேரெண்டிக் காக்கினற் கீநலிசை*
*யானைக்கண் டங்கரி தாகிய சீர்க்கதி யெய்தினனே.* 1

*தினகர னந்த நனியிலங் காநின்ற செய்யநற்செந்*
*தினகர னந்த நிதியா யினனடற் சீரெயிலேந்*
*தினகர னந்த கனைச்செற்ற தாளர் திகழ்கனகா*
*தினகர னந்த நடனர் தனயனென் சிந்தையனே.* 2

*சிந்தனை யாகத் திசையந் தணர்க்கிறை சேரகங்க*
*சிந்தனை யாகத் திரையளித் தாடரை சென்றிரந்த*
*சிந்தனை யாகத் திடையியைந் தான்றந்த சேயளியாற்*
*சிந்தனை யாகத்த நற்செந்தி லாய்நினைச் சேர்ந்தனனே.* 3

*தனத்தலங் கார நிறைநா ரியரந் தரத்தசைகே*
*தனத்தலங் கார நிகழரங் காடச்செய் தன்னினயத்*
*தனத்தலங் கார தராயியங் கத்தக்க தண்செந்திற்கந்*
*தனத்தலங் காரனை யானய னேத்திடத் தங்கினனே.* 4

*தங்கந் தனங்க ளடையத் தனியெனைத் தள்ளியங்கே*
*தங்கந் தனங்க டரச்சென் றனரறிந் தாரிலைகா*
*தங்கந் தனங்க ளலர்காக்க ஞரெழிற் றண்செந்திலார்*
*தங்கந் தனங்க நிகர்செக்கர் செய்சஞ் சலத்தினையே.* 5

சலந்தர ஞகந் தரித்தார்தந் தாதன் தனதிடைச்சஞ்
சலந்தர ஞகந் தரைநடந் தாலெனச் சார்ந்ததண்டன்
சலந்தர ஞகந் தளரச்செற் றூர்தன யன்றலநச்
சலந்தர ஞகந் தனக்கிறை சேர்செந்திற் சார்ந்திடற்கே. 6

சாரங்கஞ் சங்கரி கட்கிச்சித் தேய்ந்தகைச் சங்கரனூர்
சாரங்கஞ் சங்கரி தாஞ்சக் கரங்கையிற் றூங்கினன்சேய்
சாரங்கஞ் சங்கரி யாநண் ணினர்க்கந்தத் தந்திரத்தா
சாரங்கஞ் சங்கரி தேயெனச் செய்நின் சரண்தந்ததே. 7

தந்தனஞ் சங்கை யணிகரர்ச் சேர்க்கத் தடங்கணலை
தந்தனஞ் சங்கை யலரென்செய் யாடங்கச் சற்சனர்நித்
தந்தனஞ் சங்கை யகலறத் தீசெந்திற் சார்கதனித்
தந்தனஞ் சங்கை யநக னிளையனற் றூள்தரற்கே. 8

தரங்கனந் தார நனியேற் றெழிற்செந்தில் தந்தைநிறந்
தரங்கனந் தாரக நாடிலென் றேநினே சத்தியரந்
தரங்கனந் தார நகரீசர் சேய்கிரித் தையலர்க்கந்
தரங்கனந் தாரள கஞ்சிற் றிடைசல சங்கண்களே. 9

சங்கங் களங்கழ னிக்கரை சேர்செந்திற் றங்கினநஞ்
சங்கங் களங்கர நண்ணரன் சேயெய்தச் சார்ந்தநஞ்சற்
சங்கங் களங்கனி யைநிகர் தண்ட தரற்கினிய
சங்கங் களங்க ரெனநின்ற யாங்கணெஞ் சங்கரைந்தே. 10

கரத்தரிக் கங்கணங் கட்டர ஞர்தந்த கந்தரழ
கரத்தரிக் கங்கணங் கண்டசெய்ச் செந்திலங் காங்கயர்சா
கரத்தரிக் கங்கணங் கட்கர ஞர்க்கெழில் காசணிசே
கரத்தரி கங்கணங் கற்றிடத் தாங்கினர் கைச்சத்தியே. 11

சத்திக் கரத்த னகச்சேயங் கத்தினைத் தந்தனனற்
சத்திக் கரத்த னகச்சிலை யாளிதன் றூளிணைநே
சத்திக் கரத்த னகத்தியைந் தேத்தரன் தந்தகதிர்ச்
சத்திக் கரத்த னகச்செந்தி லாய்நின் சரண்சரணே. 12

சரிதங்கை யாரக் கலன்றந் தனந்தரித் தார்நரகே
சரிதங்கை யாரக் கரிடத்தி ஞர்தந்த தண்செந்தினே
சரிதங்கை யாரக் கணத்தின்னல் கைத்தல் சரதந்தஞ்சீர்
சரிதங்கை யாரக் கசிந்திசைக் கின்ற தகையினர்க்கே. 13

இனன்ந்தி யங்கி நிகர்த்தசெங் கேழன்கை யீரிரண்டா
யினனந்தி யங்கிரி யைச்சிலை யாக்கிதன் சேயெழிற்செய்
யினனந்தி யங்கி யிருங்கஞ்சஞ் சேர்செந்தி லெந்தைதனை
யினனந்தி யங்கிசை யக்கதி யீந்தன னென்றனக்கே. 14

தனக்கடங் காரெயிற் செற்றகங் காளன் றனயனங்கந்
தனக்கடங் காதிழி தந்திக் கிளையன் றளிரெழிற்சந்
தனக்கடங் காநிறை செந்திலிற் கந்தன் சயிலநங்கை
தனக்கடங் காணினச் சாரிலை யண்ணல் தரணியிலே. 15

தரணி யனைய நிறத்தண்ண லாரிரந் தன்றளந்த
தரணி யனைய னிறைஞ்சயி[1]லாளர் தனிச்சிலையாந்
தரணி யனைய னகனணை யந்தரி தந்திடுகந்
தரணி யனையநெஞ் சேயலர்த் தாள்கள் தரித்திறைஞ்சே. 16

தரிக்கனந் தங்கலை நீள்சடைக் கைக்கனற் சங்கரனந்
தரிக்கனந் தங்கலை நீதிகள் சாற்றரன் றந்தநற்கந்
தரிக்கனந் தங்கலை நீர்செய்க்க ஞஞ்செந்தி லார்தளையா
தரிக்கனந் தங்கலை நீத்திழந் தேங்கரச் சங்கங்களே. 17

சங்கரி யக்க நிகர்த்தநின் றூதை தகையதென்னச்
சங்கரி யக்க ரிறைஞ்செழிற் செந்திற் சடானனக்கஞ்
சங்கரி யக்கதிர் தானிசை கின்ற சரணத்திறற்
சங்கரி யக்கணத் தேயெற் செறியந்த கர்ச்சினந்தே. 18

தகர னலங்க நிறைநிறத் தான்செந்திற் றந்தைசங்கேய்ந்
தகர னலங்க னளிறு தனத்தின்ன றூழளகந்
தகர னலங்க டரநின்ற சத்தியன் றூளெனிலந்
தகர னலங்கனன் றூலெனச் சீறிட்த் தக்கரன்றே. 19

தக்க னகத்தி னடல்தணித் தானயன் தண்கதிர்ச்சந்[2]
தக்க னகத்தி கிரிக்கர னுக்கங்க டந்தளிக்கத்
தக்க னகத்தி யனையாளி யென்னெஞ்ச தாஞ்சலசந்
தக்க னகத்தி னகரன்றன் செந்திலைச் சந்திக்கிலே. 20

சந்தத்த னத்திக டந்திறத் தாசை தலத்தினிச்சை
சந்தத்த னத்தி னசைதீ ரடியன் தனதிலிற்சேர்
சந்தத்த னத்தி யதளான் றனய தடக்கயற்சஞ்
சந்தத்த னத்தி னினங்கீ ழிழிசெந்திற் றங்கினர்க்கே. 21

---

[பிரதி பாடம்]: 1. லார்நற் றனிச்சிலையார் 2. தன்கதிசந்

தங்கச் சினகர நேராக் கலந்திச் சகநிறைந்தார்
தங்கச் சினகர நேயர் தனயன் தனக்கினிதாந்
தங்கச் சினகர நீள்செந்தில் நாட்டிற் றனக்கரித்தந்
தங்கச் சினகர நற்கன னென்னங்க டையலர்க்கே. 22

அலரின னந்தலை யாழிகண் டன்ன சிகியினிடை
அலரின னந்த நிகரயி லான்செந்தி லாயிழையை
அலரின னந்த நினைநிலந் தேர்ந்ததற் கன்றையலார்
அலரின னந்தஞ் சொலற்கிட னாய்நெஞ் சழிகின்றதே. 23

தேயத் தியங்கி யலகி றலங்களிற் சென்றடிகள்
தேயத் தியங்கி யலைய றிடங்கதி சேர்தலறைந்
தேயத்தி யங்கின நித்திலந் தானெறி செந்திலடைந்
தேயத்தி யங்கி தரித்தான் றனயற் றெரிசிக்கினே. 24

சிக்கத் தனங்க டிறக்கின்ற கன்னியர் சிந்தைகணே
சிக்கத் தனங்க ளளித்தழிந் தேற்கெழிற் செந்திறரி
சிக்கத் தனங்க ழலையேத்த நல்கினன் சீர்நிறைகா
சிக்கத் தனங்க ளகிலேசன் றந்த திறற்கந்தனே. 25

கந்தரங் கானந்த னிற்சென் றடங்கிலென் காசிக்கநே
கந்தரங் கானந்த நண்ணிலென் கன்னியர் கட்டளக
கந்தரங் கானந்த நின்றா டெழிற்செந்திற் கண்டிறைஞ்சிக்
கந்தரங் கானந்த நல்கச் சனனங் கடந்திலரே. 26

கடனந்தி னாகத் ததளாடை யாயெனைக் காக்கநிற்கே
கடனந்தி நாணிறத் தாயென நாரணன் கண்டிறைஞ்செங்
கடனந்தி நாதன் தனயனற் செந்திலிற் காரிகையே
கடனந்தி னாயகங் காதலர் தேரிற் கலிக்கின்றதே. 27

கணக்காக நாய்கள்தின் காய நிலையெனக் கண்ணியென்ன
கணக்காக நானலைந் தெய்த்தே னெழிற்செந்திய் கந்தநெற்றிக்
கணக்காக னார்தந்த நின்றனை யேயினிக் காதலினாற்
கணக்காக னாநிகர்த் தேயழி யங்கத்தின் காதலற்றே. 28

காதலை யானின் றனக்காக் கினனினிக் காயந்தந்தே
காதலை யானின் றனக்கா ரணனடிக் கஞ்சங்கணீங்
காதலை யானின் றகங்கரைந் தேத்தரன் கண்ணியராக்
காதலை யானின்ற சங்கரன் சேய்செந்திற் காங்கையனே. 29

காயங் கலைய நலியந் தகனணை காலஞ்செய்ய
காயங் கலையத ளாநில நீழல் காற்றெழிலா
காயங் கலைய னலரிசித் தாயினன் காதலழ
காயங் கலையதி ருஞ்செந்தி லாயென்க கன்றநெஞ்சே. 30

கன்றிக்க லங்கலை யென்னையென் றேசெந்திற் காங்கயசேர்
கன்றிக்க லங்கலை நாணிழுந் தானனங் காந்தியழ
கன்றிக்க லங்கலை நாயக னன்றெனைக் களித்தினடி
கன்றிக்க லங்கலை யாழிசெய் தீங்கைக் கடந்தினியே. 31

கடிக்கயி ரூனயக் கால்களி ரூக்கை யிராக்கதரை
கடிக்கயி ரூநிகர் செங்களத் திட்ட நின்கழற்கால்
கடிக்கயி ரூநிகழ் கைச்செந்தி லாயெனைக் காலன்கட்டக்
கடிக்கயி ரூன தொடாக்கடி தேயெனைக் காரெனக்கே. 32

காரனை யானை நளிஞ லையனை களிற்றிடைச்சிங்
காரனை யானை நடத்தாண்ட கையைக் கலந்தநிரா
காரனை யானை தனக்கிறை செந்திற்க யானனசங்
காரனை யானை நிறையங்கத் தீங்கிறக் காத்தனனே. 33

காத்தன னங்கியர்க் காடிட நாஞ்செந்திற் கண்ணெனையே
காத்தன னங்க ணழகைக்கண் கண்டிடக் காட்டினனீங்
காத்தன னங்களிற் றிற்கிளை யானிக்கற் கண்ணினணங்
காத்தன னங்க னெனச்செய்த தேத்தந்த காரணனே. 34

காரக்க னஞ்சினை நேர்ந்தார்சென் றூடங் கயங்களிற்றங்
காரக்க னஞ்சினை தந்தாற்ற லிற்கிடக் கக்கடலா
காரக்க னஞ்சினைக் காத்தங் கெழிற்செந்திற் கண்டனர்[1] நீங்
காரக்க னஞ்சினை யாதாள ரன்றந்த கந்தனையே. 35

கந்தனஞ் சங்கங் கரையா தயிலரன் கண்டரனி[2]
கந்தனஞ் சங்கங் கலைக்கிசை காட்டிய காரிண்டையான்
கந்தனஞ் சங்கங் கலையா ரகங்களிக் கச்செந்திலார்
கந்தனஞ் சங்கங் கலைதா சதங்கையங் கஞ்சத்தனே. 36

கஞ்சத்த னுக்கரி காலண்டங் காசினி யார்கடிநீள்
கஞ்சத்த னுக்கரி திச்சிட்டி னுனென்ற கந்தகலிக்
கஞ்சத்த னுக்கரி யஞ்சரி யேறி கலங்கச்செயே
கஞ்சத்த னுக்கரி யன்றனை யர்செந்திற் கண்ணரசே. 37

---

[பிரதி பாடம்]: 1. கண்டனர்தீங் 2. கண்டரளி

கண்ணனந் தங்கரன் காதிளங் கந்தரக் குஞ்சத்திசேர்
கண்ணனந் தங்கரன் காணக் கடிசரன் காலேற்கங்கங்
கண்ணனந் தங்கரன் காதலன் செந்திலைக் கண்டிறைஞ்சக்
கண்ணனந் தங்கரன் காலனந் தந்தரக் கற்றிலனே. 38

கற்றடங் காரகங் காரக்க ரிக்கரி யேநெடிய
கற்றடங் காரகங் கா(ர்)க்கின்ற கந்தசேந் தாகலைதங்
கற்றடங் காரகங் காதினர் தங்கைதன் காதலகாற்
கற்றடங் காரகங் காரான டங்கச்செய் காத்தெனையே. 39

காதிக் கரியனைய சேயரி தந்தை சங்கரனார்
காதிக் கரியலத் தன்னரை யத்தி கடியலர்நீள்
காதிக் கரியையர் சேர்செந்திற் காங்கய னேயெனைநீ
காதிக் கரிய நினையண்டி னேன்சற் கதியளித்தே. 40

அளியனந் தங்கந்தத் தேனயில் செச்சை யலங்கல்தனை
அளியனந் தங்கந்த நன்னடைக் கத்தனி லாடச்சக்கால்
அளியனந் தங்கந்த தகையில னைங்கணைக் கஞ்சினணி
அளியனந் தங்கந்த னேசேந்த னேயபி லாரத்தனே. 41

ஆரணங் கற்றிடச் சீரந்த ணர்திக ழுண்டர்சிந்தை
யாரணங் கற்றிடச் செந்திற்க ணார்கந்த னேநினைநா
டாரணங் கற்றிடச் சக்கரந் தென்றவிந் தங்கசநண்
ணாரணங் கற்றிடக் கஞ்சின ளாளிரண் டாறத்தனே. 42

ஆறத்த னந்தன நந்தாத் தானத்த ணாரணந்தேர்
ஆறத்த னந்தன நந்தரா னந்தரை யாசையென்றல்
ஆறத்த னந்தன கையிட்டர்க் கீயிறை யந்திகழீ
ராறத்த னத்தனஞ் சார்கட் சேந்தனி னைக்கநெஞ்சே. 43

ஆக்கணங் கந்தரத் தாவய ராதளித் தானயனை
யாக்கணங் கந்தரி சேயன்செந் திற்கண் நேயங்கனை
டாக்கணங் கந்தா நின்றுடி யேத்தி யகங்களித்த
தாக்கணங் கத்தனென் றுசரித் தாரண்டத் தாரையரே. 44

அய்யானந் தந்திலர் சார்செந் திற்கர சேயெனையாள்
அய்யானந் தந்தந் தனைநீங்கி யேங்கி யணிக்கயிலை
அய்யானந் தன்னெ யரனென் றேத்தந்த நாளரக்கர்
அய்யானந் தத்திக ழுச்சத்திக் கைதந் தணித்தந்தையே. 45

தந்தத்தை யாரஞ் சிதறத் தடிந்திந்தத் தாரணிங்கே
தந்தத்தை யாரிசை யையயார்செய் தாரச் சரித்திரநா
தந்தத்தை யாரத்த னார்சிலை நீட்டத் திதற்கிளையான்
தந்தத்தை யார்நட்டக் கேகையன் செந்திற் சடானனனே. 46

ஆனன னாகத் தரிகிள்ளை யாக நடத்தினர்க்கஞ்
சானன னாகத் தரிநேர் தயித்திய னையடக்கி
யானன னாகத் தரியறந் தாஎனை யாளிறைச
டானன னாகத் தரியீன்ற காரிகை யாரகனே. 47

அகத்திய னஞ்சக் கரநிக ராரிழை யார்நசையை
அகத்திய னஞ்சக் கரந்தீ ரத்தங்க ளகந்தடிந்தார்
அகத்திய னஞ்சக் கரன்றே சிகனெனை யாளிகஞ்சத்(து)
அகத்திய னஞ்சக் கரந்திகழ் செந்திலஞ் சத்தியனே. 48

சந்தனந் தாதலர் காசணி நீத்த னடக்கனின்னே
சந்தனந் தாசெந்திற் காங்கய னேயெனச் சாற்றச்சென்ற
சந்தனந் தான்றனை யன்சடி லத்தினந் தற்கினிதாஞ்
சந்தனந் தானினஞ் சார்ந்தில தென்னையென் சஞ்சலனே. 49

சலஞ்சலஞ் சாரலைச் செந்திற்கந் தன்செய்ய தாணினையஞ்
சலஞ்சலஞ் சாயினி நெஞ்சே சயந்தன் தயித்தியன்சஞ்
சலஞ்சலஞ் சாய்க்க கடச்சி யிந்திரன் றரணியடைஞ்
சலஞ்சலஞ் சாயலை நீக்கினன் றண்ணளிச் சார்கைநன்றே. 50

கைத்தந்தி நேயர் கலஞ்சா ரலைச்செந்திற் கந்தரணங்
கைத்தந்தி லாத சலஞ்செயக் கன்னற் சிலையினரே
கைத்தந்தி லாரக் கிரித்தென்ற லேறிக்கை காணநிலை
கைத்தந்தி நேரங் கலக்கக் கலங்கினள் காரிகையே. 51

காரிகை யாதிய னேகங் கலைதனைக் கற்கிலென்னக்
காரிகை யாதி நீகரித் தார்தலங் கார்க்கிலென்னற்
காரிகை யாதி தனையாதென் செந்திற் கந்தர்தின்னி
காரிகை யாதினி நின்றுளென் நெஞ்சக் கண்டகரே. 52

கண்டலங் கானற் காங்கஞ்ச னேரரி கல்லணையாற்
கண்டலங் கானக ரான்சேய் சடிலங்கள் காலிறங்கிக்
கண்டலங் கானங் களிக்கத் தாந்தரங் கக்கடலே
கண்டலங் கானனெஞ் சேசெந்தி லார்க்கென கங்கைரையே 53

அகங்கரை யார்கலி யாலிரந் தாரினி யார்க்களியார்
அகங்கரை யார்கலி காலக் களியர்க ளாயினென்னீர்
அகங்கரை யார்கலி சார்செந்திற் கந்த ரடிநினைந்தால்
அகங்கரை யார்கலிக் காலர்க்கஞ் சாரடை யார்நரகே. 54

அடையலா னாகரி கக்கா நிறைசெந்தி லத்தனிலை
யடையலா னாகர்க்கென் றுரைச்செற் றுனடி யாரடியை
யடையலா னாக நிகர்சண்டர்க் கஞ்சி யயிலக்கினார்
அடையலா னாகக் கடிதடத் தாரடிக் காசையரே. 55

ஆசைய னந்தந்தி ரைக்கட நீணில னானதனி
யாசைய னந்தந் திறலடி யார்களித் தாளநல்லன்
ஆசைய னந்தந் திரநீ டயிலனென் னாசைக்கிசை
யாசைய னந்தந்தி நேயன்றென் செந்தில னாசிலனே. 56

சித்தறை யாரத்த னேசெந்திற் காங்கய னேதிகழ்கா
சித்தறை யாரத்தன் றேசிக னேநினைச் சிந்தையினே
சித்தறை யாரத்தத் தாலந்தக் காலனைத் தேகத்தையா
சித்தறை யாரத்தந் தேடக் கலங்கினர் தீதளைந்தே. 57

தீத்ததை யானச்சி யிந்திரை திகழ சாக்கிரத்த
தீத்ததை நண்ணிய ஞானிய ராரணன் சீரனந்தா
தீத்ததை யாரலை நாரண னிந்திரன் சித்தர்தினந்
தீத்ததை யேயண்ட நீர்த்தனன் செந்திற் செயக்கந்தனே. 58

செயலைக் கணங்கடி யாராகி யந்தணர் சீரனந்தர்
செயலைக் கணங்கடி யார்சாரச் சார்கந்தன் செந்திலனே
செயலைக் கணங்கடி யார்நாக நீழற்சிங் கங்களரி
செயலைக் கணங்கடி யார்நாக நீநண்ணல் தீதண்ணலே. 59

அத்தத்தை நாடி நிறைந்திந்தி யச்செய லற்றலறி
அத்தத்தை நாடி யலானத்தைத் தாரத்தை யாரநினை
அத்தத்தை நாடினை யார்செந்திற் றேனை யான்றினந்தேர்
அத்தத்தை நாடிங்க ளாண்டரன் கந்தனை யண்டினரே. 60

நங்காயங் காரியங் கக்கழை யானெனை நாடியண்ட
நங்காயங் காரினி யாரில ரேநரை நாகன்றகா
னங்காயங் காரி னிலைதந் தரக்கரி னத்திடந்தா
னங்காயங் காரிய நேரயி லன்செந்தி னாட்டகத்தே. 61

நாட்டகத் தேகந்த னைத்தந் தியறந்த நாதனென
நாட்டகத் தேகந்த னையெணக் காதலி நன்னெயினர்
நாட்டகத் தேகந்த னைநா ரதனஞ்ச நாடியதென்
நாட்டகத் தேகந்த னைச்செந்தி லெந்தையை நல்லநெஞ்சே. 62

நல்லனஞ் சார்கண்டன் சேயன்றன் றுளி னசையினர்க்கே
நல்லனஞ் சார்கண்ட கன்றசை சாயன நற்றியலே
னல்லனஞ் சார்கண்ட கத்தக நாரிதன் றுதனங்கா
னல்லனஞ் சார்கண்ட நீள்கடற் செந்தில் நயக்கந்தனே. 63

தனையனை யானறங் கனையறிந் தார்கந் தங்கிதனீ
தனையனை யானன றுதாந்த னேகன் றகைநிறைந்த
தனையனை யானநற் சேந்தனை யேத்தினன் சக்கரச்சிந்
தனையனை யானண்ண நீர்த்தென்னை யாண்டனன் றுணனைந்தே. 64

அனந்தனந் தானந் தியனயன் றன்னிய லாக்கநின்றான்
அனந்தனந் தானந் திறலிசை சீரடி யார்க்களித்தான்
அனந்தனந் தானந் திசைக்கத் திகழ்சிகி யான்கலைகள்
அனந்தனந் தானந் திரிகடற் சேந்த னகஞ்சகனே. 65

சக்கரஞ் சக்கரந் தாங்கிய நாரி தனஞ்செயன்சேர்
சக்கரஞ் சக்கரக் காரணர் சேய்சற் சத்திலசல்
சக்கரஞ் சக்கரஞ் சாரத் தரித்தகந் தாசேந்தகா
சக்கரஞ் சக்கரந் தற்கா ரெனைநின் சரண்கதியே. 66

சரக்கணங் காரள கர்திகழ் சங்கரி சங்கரனர்
சரக்கணங் கார்கஞ்ச நீள்தடத் தீன்ற தனையன்சேந்தன்
சரக்கணங் கார்கலிச் சண்டர்க்கி றைதண்ட லாளர்நெஞ்ச
சரக்கணங் கார்கந்த னேயென் றிசைத்த தகையினரே. 67

தகையிலைக் கண்டகர் காலன்கந் தன்செந்திற் றண்டலைக்காற்
றகையிலைக் கண்டக நாரியைத் தேனையென் றற்கிசைந்த
தகையிலைக் கண்ட கணிநின் றனங்கன் தழைத்தடர்கே
தகையிலைக் கண்டத் தாலீர நெஞ்சந் தளர்ந்ததின்றே. 68

தளராக் கதிநிறை யானினர் தீயதந் தக்கிரிய
தளராக் கதிரங்கந் தானணிந் தார்நந் தனரக்கர்
தளராக் கதியழ கீர்ந்தார்க் கினியன்சேந் தன்றிகழ்சீ
தளராக் கதிர்நிக ரானன னெந்தை சடாக்கரனே. 69

கரந்தந்தந் தந்திர நீள்கரி யானனக் காதகன்சீர்
கரந்தந்தந் தந்திர கட்டற் றடங்கிடக் காலனணு
கரந்தந்தந் தந்திர ளாகச்செ யத்தண்டர் களித்தணிசே
கரந்தந்தந் தந்திர காத்தனன் செந்திற் கனகந்தனே. 70

கனகந் தரத்தினஞ் சேர்கன்னி யாள கந்தனைக்க
கனகந் தரத்தினந் தானென்ற றீர்க வேனயணிக்க
கனகந் தரத்தினஞ் சாரைய ரேத்தக் கதிக்கிறையாங்
கனகந் தரத்தினற் செந்திலி னேரைக் கழறினியே. 71

ஏதிக்க ணுநிலை சார்தற்கென் றேனெழிற் செந்திலிறை
யேதிக்க ணுனிதஞ் சேயதன் ஞரங்க ளின்னிலத்தில்
ஏதிக்க ணுலல ரேய்தன் நீலத்தை யேந்தினனீ
யேதிக்க ணுரியை யாள யிலங்கை யிசைக்கந்தனே. 72

இசைத்தெனைக் காளகண் டத்தைக் கிளியையின் னங்கைகதைக்
கிசைத்தெனைக் காரிகை யாரிணை யில்லையென் றுனையரில்
இசைத்தெனைக் கானநெஞ் சேயண்ண லண்ண கிணைநண்ணலா
யிசைத்தெனைக் காணிலைத் தந்தகந் தன்செந்தி லோகத்தே. 73

தேக்கா ரகினிறை நாகத் திறையெழிற் சேர்செந்திலார்
தேக்கா ரகினிகர் சேய்கடி லத்தியா தியநயந்
தேக்கா ரகிலி யாரகங் களித்தயில் சீகரநல்
தேக்கா ரகிலந் திசையாகி நின்றசெஞ் சட்டகனே. 74

சடிலங் கடந்தந்த நீணுகஞ் சந்தனந் தந்திரஞ்சீர்
சடிலங் கடந்தந்த கைசார் தயித்தியர் சண்டன்சேந்தன்
சடில்ங் கடந்தந் தணிசே ரகத்தியன் றுனறியச்
சடிலங் கடந்தந்த நாதங் கடந்த தனிநிலையே. 75

நித்தில ணுனந் தழைதன நீங்கிநின் னேயக்கண்ட
னித்தில ணுனந்தக் கண்ணீரில் நின்றவன் செந்திலிற்சே
னித்தில ணுனந்த னேகந்த னேயளி நீயெனையி
னித்தில ணுனந்த றீர்த்தான் கதிர்தந்த நிச்சயனே. 76

சந்திர ஞகந்தென் காலார் கிரியந் தணனகனே
சந்திர ஞகந் திகழ்தே சிகன்செந்திற் றையநல்லீர்
சந்திர ஞகந் தணித்ததே னின்னிரண் டாந்தனத்தாற்
சந்திர ஞகங் கரைதநின் ஞனனந் தன்னந்தத்தே. 77

நந்தன னந்தன னெட்டக்கன் றேடிய நாயகன்ற
னந்நன னந்தனந் தாதியென் றூடிய நாடகனை
னந்தன னந்தன ஞரிதன் சந்ததி நல்லநெஞ்சே
நந்தன னங்சனஞ் சார்கடற் சேந்தனை நாடினியே. 78

நினையா ரினையக னேசெந்திற் கந்தனை நீனிறக்கா
நினையா ரிடரண்ட ரஞ்சலை நீக்கிய நீதியனை
நினையா ரிடரக லானந்த நேயத்தி நீயினித்த
னினையா ரிடத்தை யகலிதை நீசெய் நிசங்கண்டதே. 79

கண்டிகை யத்திரி நேரதன் நாரிதண் கங்கையெழிற்
கண்டிகை யத்தி யணியினன் சேய கதிநிறைசி
கண்டிகை யத்தியி லேறிந டாத்தியற் கந்தசெந்திற்
கண்டிகை யத்தித் திரைசா ரெயினற் சினகரனே. 80

கரனுந் தகனெழிற் சாரங்கந் தண்டங் கனசங்கஞ்சக்
கரனுந் தகந்தரித் தானிசை யாக னக்கனத்தின்
கரனுந் தகனனிந் தக்கினன் சேயன் கடற்செந்திந
கரனுந் தகநலங் காணநின் றூனயக் கற்கியனே. 81

கற்கரி யாயிரஞ் சென்னி யரிசங் கரிநிலைதங்
கற்கரி யான னற்கிளை யானண்ணல் காரகஞ்சங்
கற்கரி யால களத்திறை யீன்றகந் தன்சேந்தன்சீர்
கற்கரி யாரிரங் காரக்கி யானக்க ணந்தகரே. 82

அந்தக ரைக்கடிந் தார்சேயன் ஞானக் கணற்றடல்செய்
யந்தக ரைக்களத் தட்டகந் தன்செந்தி லாரணங்கே
யந்தக ரைக்கஞ்சி நேயரை நாடினை யாரிழையார்க்
கந்தக ரைக்கணத் தேயணங் கேற்றி யரிதலென்னே. 83

அரிதத் தினைக்கண் டகநிறை சேய்கந்தன் சேந்தகநே
யரிதத் தினைக்கண் டகங்களித் தேனிற்றை நாளயர்ந்தேன்
அரிதத் தினைக்கண் டகராகங் கிராதா கத்திசைத்தார்
அரிதத் தினைக்கண் டகங்காத்த னீத்த லணித்தணங்கே. 84

கேழல ராளஞ்சத் தாக்கிற் சினத்தடர் கெண்டையினங்
கேழல ராளஞ்சஞ் சார்செயச் சேர்ந்தா னிசைக்கென்கனே
கேழல ராளஞ் சரண்டலை தேடக் கினிக்கிரியார்
கேழல ராளஞ் சடான னேயென்ற கீர்த்தியனே. 85

கீரங் கனிகண்டி லக்கணங் கானச்சங் கீதங்கற்றீர்
கீரங் கனிகலந் தாலனா காங்கயன் கீர்த்தியிசைக்
கீரங் கனிலையன் றேயடை யீரிங் கிதக்கதிநற்
கீரங் கனிறை தணிகையன் செந்தியற் கேட்டினியே. 86

இந்திரி யத்தித்தி யாலய ராநசை யெண்ணந்தணர்
இந்திரி யத்திரி யாரிட ரேநிலை யென்றிரங்கல்
இந்திரி யத்தி கலங்க லறச்சத்தி யேந்திறையா
றிந்திரி யத்திக ழானான சேந்தனென் காதலனே. 87

காரானந் திக்கக் கலைசார் கடற்சேந்த னேயெனைநீ
காரானந் திக்கணி நீடனை யாகஞ்ச னிந்திரன்றண்
காரானந் திக்கிட ஞாலத் தானியற் காணிக்கதி
காரானந் திக்கித நாதாந்த தேசிக காரணனே. 88

காணிக்கை யாயிரஞ் சத்தியஞ் செய்தக்க னகங்களைக
காணிக்கை யாயக் கணிகையர்க் கிட்டங் கனநிரையக்
காணிக்கை யாயழி யாதளி யீர்தனங் கந்திக்கிணை
காணிக்கை யார்கைதைச் செந்திலன் சத்தியன் காரியர்க்கே. 89

காரிய ரத்தன் கனகனிந் தாதித்த னற்கணக்கன்
காரிய ரத்தத் தயித்தியர் தேசிக னீரண்டகி
காரிய ரத்தகஞ் சத்தாளென் றேத்தக் கடற்செந்திலார்
காரிய ரத்தன் றனையாநங் கந்தர்கைச் சத்தியரே. 90

சத்திரங் காளங் கணையாதி யாலத் தயித்தியர்நெஞ்
சத்திரங் காளந் திகழாக்கை சாய்த்தகந் தர்சேந்தகா
சத்திரங் காளஞ் சலர்க்கணை யங்கசன் சந்தனந்தண்
சத்திரங் காளங் கரியீயத் தாலஞ்சே னஞ்சத்தையே. 91

அஞ்சத்த னத்த நரையத்தி யானண்ட ராதியர்நெஞ்[சு]
அஞ்சத்த னத்த னடற்சந் தனத்தச்சிற் றாகநின்றான்
அஞ்சத்த னத்த நலார்க்கினி யானிளை யானளகை
அஞ்சத்த னத்த நயநீள்சேந் தானென தாண்டகையே. 92

ஆண்டாலங் காயக் களத்தணிந் தான்றினத் தாற்றிங்களா
லாண்டாலங் காயத் தெரியான் றனைய னணிச்செந்திலான்
ஆண்டாலங் காயளிக் கத்திக ழேழிசை யன்றிசைத்தான்
ஆண்டாலங் காயந் தனக்கிட ரேதஞ்ச சேதனனே. 93

சேதாரங் காரகஞ் சாடென நாடிச் சிறந்தகங்கை
சேதாரங் காரகத் தேயாடி நீடிய சிந்தையரே
சேதாரங் காரகஞ் சேராநற் சத்தியன் சீர்நினைந்தே
சேதாரங் காரகஞ் சேர்செந்தி லார்ந்திட்டஞ் சேர்திரன்றே. 94

தித்திக்கத் தேயென நட்டஞ்செய் கேகையன் சேர்ந்தகத்தே
தித்திக்கத் தேன்றனை நான்றாரத் தாயென்ற சிந்தையகத்
தித்திக்கத் தேனர முல்கடஞ் சேர்த்ததை செய்கைநிலை
தித்திக்கத் தேனரிட் டத்திறை யேசங்கை தீர்களத்தே. 95

கள்ளியங் கானனை யேயனை யாளசேய் கண்டியினங்
கள்ளியங் கானந் தழுங்கல றச்செந்திற் கந்தநிசக்
கள்ளியங் கான தனிக்கானை தன்னகத் தைக்கரைக்கக்
கள்ளியங் கானடந் தாளளி நீகடிச் செச்சையனே. 96

செந்தாதி யானந்த னர்க்கன்றிச் சேயிழை யார்களித்தே
செந்தாதி யானந்த நண்ணு தளிசெய்ய கஞ்சத்தியர்
செந்தாதி யானந் தனக்கிசை யாரிடந் தேகக்கத்தார்
செந்தாதி யானந்த நட்டஞ்செய் தார்நயத் தேசிகனே. 97

சிகரசங் காரர்தென் றிக்கிரி யையர்சிந் தைக்கிசைதே
சிகரசங் காரனிக் காற்கேகை யந்திடஞ் சேர்கற்குயார்
சிகரசங் கார தென்செந்தி லிற்கந்தர் சிதானந்தத்தே
சிகரசங் காரய நேரேன் னகந்தனிற் சேர்ந்ததின்றே. 98

இன்றனந் தானங் கனையா ளரிருஞ் சினையிசைந்த
யின்றனந் தானந்த னேயென் றரியய னோத்தியற்கை
யின்றனந் தானங் கிலங்கச்செய் தேசிக னேர்ச்செந்திற்சே
யின்றனந் தானங் கனந்தந்தை தாயணங் கென்றனக்கே. 99

தனக்கீரங் கார்த்திகை யீயச் சரத்தடத் தேதிகழ்கந்
தனக்கீரன் சந்தக் கலைஞ னிசைதனக் கேயிசைசேந்
தனக்கீர நேரத்தி ஞக்கக் [1]கிராதகர் தனையைகண்டன்
தனக்கீரத் தாலென்னை யாண்டன னெந்தை [2]தயாநிதியே. 100

——:x:——

பிரதிபேதம்: 1. கிராதர் 2. தயானந்தனே.

I. தென்னயன் மாறகரி யான்றே சிகனெனுஞ் செந்திலர்க்குச்
சொன்னயன் றேருஞ் சிவப்பிர காசன் றொடர்நிலைப்பா(த்)
தன்(ன)[னை]யன் பாக நிரோட்டத்தைந் தேழ்செய்யுட்
[டானுரைத்தான்
சின்னயன் முன்னவன் ருள்போற்றி மற்றதுஞ் செப்பினனே.

II. ஆரும் பரவுஞ் சிவப்பிர காச வமலன்செஞ்சொற்
சேரும் பனுவலி லென்புன்சொற் பாணண்ணிச் சீருற்றதால்
நீரும் பயனண்ணிற் பா[ணிற] மாமளி நீண்மலர்தேர்
நாரும் பரிமள மாமொன்றுஞ் சொன்னிலை நாட்டியதே.

திருச்செந்தில் நிரோட்டக யமக வந்தாதி
முற்றும்

I. இப்பாடல் நூல்நிலையத்துத் தமிழ் விவரணப்பட்டி D. 1645-ஆம் எண்ணின்கீழ் வருணிக்கப்பட்டுள்ள ஓலைப்பிரதியிலுள்ளது.

II. இந்தச் செய்யுள் காப்புச் செய்யுளையடுத்து D. 1645-ஆம் எண் பிரதியில் காணப் பெறுகின்றது.

# 6. திருவரங்கத் தந்தாதி
(உரையுடன்)

## சிறப்புப் பாயிரம்

மணவாள ரரவிந்தை மார்நோக்க விம்மை மறுமையின்மா
மணவாளர் தம்பதம் வாய்த்திடுங் கோயிலில் வந்தவந்த
மணவாளர் போற்றிருப் பாதாம் புயங்கட்கு மாலையென
மணவாளர் சூடும் யமகவந் தாதியை வாசிமினே.

(திருஞான முத்திரை துணை)

## காப்பு

ஓராழி வெய்யவன் சூழுல கேழுவந் தேத்தரங்கர்
காராழி வண்ணப் பெருமாளந் தாதிக்குக் காப்புரைக்கிற்
சீராழி யங்கையிற் பொற்பிரம் பேந்திய சேனையர்கோன்
கூராழி சங்கந் திருக்கதை நாந்தகங் கோதண்டமே. (1)

## பன்னிரண்டு ஆழ்வார்களின் அருளிச்செயல்

வையம் புகழ்பொய்கை பேய்பூதன் மாறன் மதுரகவி
யையன் மழிசைமன் கோழியர் கோனருட் பாண்பெருமான்
மெய்யன்பர் காற்பொடி விண்டுசித் தன்வியன் கோதைவெற்றி
நெய்யங்கை வேற்கலி யன்றமிழ் வேத நிலைநிற்கவே. (2)

## குரு பரம்பரை

சீதரன் பூமகள் சேனையர் கோன்றென் குருகைப்பிரான்
நாத முனியுய்யக் கொண்டா ரிராமர்நல் லாளவந்தார்
ஏதமில் வண்மைப் பராங்குச தாச ரெதித்தலைவர்
பாத மடைந்துய்ந்த வாழ்வானெம் பரர்பட்டர் பற்றெமக்கே. (3)

## எழுபத்துநான்கு சிங்காசநாதிபதிகள்

திருமாலை யாண்டான் திருக்கோட்டி நம்பி திருவரங்கப்
பெருமா ளரையர் திருமலை நம்பி பெரியநம்பி
யருமால் கழல்சே ரெதிராசர் தாளிற்சிங் காதனராய்
வருமாரி யர்க ளேழுபத்து நால்வரென் வான்றுணையே. (4)

## நம்மாழ்வார்

மாறன்ப ராங்கதி தந்தடி யேனை மருட்பிறவி
மாறன்ப ரானகு மாத்துள்வைப் பான்றெல்லை வல்வினைக்கோர்
மாறன்ப ராமுகஞ் செய்யாம லென்கண் மலர்க்கண்வைத்த
மாறன் பராங்குசன் வாழ்கவென் னெஞ்சினும் வாக்கினுமே. (5)

## நூல்

திருவரங் காவுறை மார்பா திசைமுகன் சேவிப்பக்கந்
திருவரங் காதரித் தின்னிசை பாடத் திருக்கண்வளர்
திருவரங் காவுன் பழவடி யேற்கருள் செய்யவெழுந்
திருவரங் காதலித் தேனுனக் கேதொண்டு செய்வதற்கே.

இதன் பொருள் :

திருவரங்கா—என்பது, பெரிய பிராட்டியார் உள்ளு மனை யாக நீங்காத மார்பையுடையானே! பிரமதேவன் சேவிக் கவும், யாழ்த்தேவர் அவ்விடத்து விசுவாசித்து இனிய சங் கீதம் பாடவுஞ் சிறந்த கண்ணுறங்காநின்ற சீரங்கத்தை யுடையவனே! உன்னுடைய பூர்வதாசனான எனக்கு கிருபை பண்ண வெழுந்திருப்பாயாக! பெருமைக் காடையை விரும் பினேன், உன்னிடத்திலே கைங்கரியம் பண்ணுதற் கென்ற வாறு. திருவரங்கா உனக்குத் தொண்டு செய்வதற்கு வரங் காதலித்தேன்; உன்பழவடியேற் கருள்செய்ய வெழுந்திரு வெனக் கூட்டுக. சிவனயன் சேவிக்கவும் என்க. என்னும், நாம் வருவிக்கவும், கொள்வார்க்குக் கொடுப்பார் கொடுத்த விருந்து கொடுத்தல் வெகுமானமாகையால் எழுந்திரு வென்றுரெனக் கூறுக. 1

செய்ய வளைக்குரு வின்னரு ளாற்றிருத் தாள்வணங்கிச்
செய்ய வளைக்குலஞ் சூழரங் கேசன் சிறிதமுது
செய்ய வளைக்கும் புவிக்குமங் காந்தசெவ் வாய்முகுந்தன்
செய்ய வளைக்குஞ் சிலம்பணி பாதங்கள் சேர்ந்தனமே.

இதன் பொருள் :

செய்யவளை—என்பது, பெரிய பிராட்டியாரை யாசாரியா ருடைய கிருபையினாலே சீபாதத்திலே பணிந்து வயலையுடைய சங்கக் கூட்டஞ் சுற்றுநின்ற சீரங்கத்துச் சுவாமியானவர் அற்பமாகப் புசிக்கத் தயிருக்கும் பூமிக்கும் அண்ணாந்த சிவந்த வாயையுடைய பெருமாளானவர் சிவந்த சுற்றுநின்ற சிலம்பு மீட்டின சீபாதத்தை யடைந்தோம் என்றவாறு. மனமே நாங் குருவின் அருளாற் செய்யவளைத் தாளில் வணங்கி யரங்கேசர் பாதஞ் சேர்ந்தோமென்றவாறு. நமக்குக் குறையில்லை யென்க. 'மனமே' தோன்றுவெழுவாய். சொல் லெச்சங் குறையில்லை யென்பது குறிப்பு. 2

தனமா தரஞ்சொற் குதலைப் புதல்வர் தரணியில்லந்
தனமா தரஞ்செயும் வாழ்வஞ்சி யேதஞ்ச நீயெனப்போந்
தனமாத ரங்கிக்க வெற்பெடுத் தாய்தண் ணனந்தசிங்கா
தனமாத ரங்கமுள் ளாயரங் கா முத்தி தந்தருளே.

இதன் பொருள்:

தனமாதர்—என்பது, முலையுடைய பெண்களுங் குதலை வார்த்தையையுடைய பிள்ளைகளும் ஊரும் மனையுந் திரவியமும் விரும்பப்பட்ட மனைவாழ்க்கையைப் பயப்பட்டுத் துன்பத்தைத் தீர்க்குமிடம் நீயே யென்று வந்தோம். பசுக்களலைகையின் மலையை யேந்தினவனே. குளிர்ந்த சேடனுன சிங்காதனத்தையுடையவனே! அழகிய திருமேனியையுடையவனே! சீரங்கத்தை யுடையவனே! பரமபதத்தைச் சாதிப்பாயாக வென்றவாறு. நாங்க ளில்வாழ்வஞ்சி யரங்கா போந்தனம்: முத்தி தந்தருளெனக் கூட்டுக. பருவப் பெண்களென் பதற்குத் தனமாதரென்ருர். வாழ்வால் வருந்துவதை யஞ்சுதலை வாழ்வஞ்சுதலென்ருர். நாங்கள் வருவிக்க. ஆத்ம சம்பந்திகளைக் கூட்டினது "சேவடி சேர்துமென்றே" யெனச் சிந்தாமணியினுஞ் 'சரணங்களே' யென இராமாயணத் தினுங்காண்க. அனந்தனுன சிங்காதனமென உருவகம். 3

தந்த மலைக்குமுன் னின்றபி ராவெதிர் தாக்கிவெம்போர்
தந்த மலைக்குமைத் தானரங் கேசன்றண் பூவினிடைத்
தந்த மலைக்குத் தலைவன்பொற் பாதஞ் சரணென் றுய்யார்
தந்த மலைக்கும் வினையானை வார்பலர் தாரணிக்கே.

இதன் பொருள்:

தந்த மலைக்கு—என்பது, கொம்பையுடைய மலைபோலும் யானைக்குப் பிரத்யக்ஷமான சுவாமி! எதிராகக் கோவித்து வெவ்விய போரைக் கொடுத்த மல்லரை சூழம்பாகப் பண்ணினுன், அரங்கத்துச் சுவாமியானவன். குளிர்ந்த பூவிலிருக்குமுடையாகிய நூலையுடைய பரிசுத்தையான பெரிய பிராட்டி.

யார்க்கு நாயகன் உடைய பொலிவையுடைய திருவடிகளைத் துன்புந்தீர்க்கு மிடமாக எண்ணிப் பிழையார். தங்கள் தங்கள் மயங்கப் பண்ணும் கன்மங்களால் வருந்துகிறார் அனேகர் பூமியில் என்றவாறு. உய்யார் தாரணி யினையா நிற்பார் எனக் கூட்டுக. உய்ந்தார் மையா ரென்பது அருத்தாபத்தி. தாரணிந்தமலை யானை என்பதற்குப் பெயர். மல்லரை மல்லென்றது. மல்லராவார் கஞ்சனால் விடப் பட்டார். 4

தாரணி தானவன் பாலிரந் தான்சங்கம் வாய்வைத் தொன்னார்
தாரணி தானவஞ் செய்தா னரங்கன் றமர்கள்பொருந்
தாரணி தான வமரா வதியுந் தருநிழலுந்
தாரணி தான வயிரா வதமுந் தருகினுமே.

இதன் பொருள்:

தாரணி தானவன்—என்பது, பூமியை யசுரனிடத்திலே யாசித்தவர். சங்கையூதிச் சத்துருக்களுடைய கூழ்ப் படையையும் வென்றான். சீரங்கத்தையுடையானுடைய தாசரதி காரணனவர் சம்மதியார்: சமீபமான தேவலோகமுங் கற்பக விருக்கத்தினிழலு மாலையா லலங்கரியா நின்ற மத மானவயிராபத யானையுந் தந்தாலு மென்றவாறு. எழுவாய் பயனிலை. தமர்கள் தருகினும் பொருந்தாரெனக் கூட்டுக. ஆகையா லவர்க்குக் கிட்டா மேற்பதவியைக் கொடுப்பார் கொடுக்கத் தக்கார் என்பது குறிப்பு. அவ்விந்திர பதவி முதலானவை விரும்புவார் அரங்கன் றமராகார் என்பதுமாம். என்னை? அவனையே யடைய நினைவாரே யவன்றமர் என்ப தனால் எல்லாவுயிரு மவனதாகிலுங் கிட்டின பந்துக்களே பந்துக்க ளென்பது வழக்கு. 5

தருக்காவ லாவென்று புல்லரைப் பாடித் தனவிலைமா
தருக்காவ லாய்மயி லேகுயி லேயென்று தாமதராய்த்
தருக்காவ லாநெறிக் கேதிரி வீர்கவி சாற்றுமின்பத்
தருக்காவ லாயுதன் பின்றோன் றரங்கர்பொற் றாளிணைக்கே.

இதன் பொருள்:

தருக்காவ லாவென்று—என்பது, கற்பகத் தருவை யுடைய வாசவனே யென்று தாழ்ந்தவரைக் கவியாற் சொல்லி, யொவ்வொருவராகப் பொதுப் பெண்டிருக்கு விருப்பமாகி, மயிலே போல்வாய், குயிலே போல்வாய் என்று சொல்லி அதமகுணத்தராய்க் கெருவித்து ஆகாவழியிலே சஞ்சரிப்பீர்! பாடல் சொல்லுவீராக. மகிழ்ச்சியுடைய மாமன் றேளாற் சுமக்கப்பட்ட கலப்பையான படையானை பலபத்திரனுக்குப் பின்னே பிறந்த கிட்டினனை சீரங்கத்தை யுடையாருடைய பொலிவான பாத மிரண்டிலேயு மென்றவாறு. புல்லரைத் தனி தருக்காவலா வென்று பாடித் தனமா தருக்காவலா யென்று திரிவீர்; தாளிணைக்கே கவிதான் சாற்றுமெனக் கூட்டுக. 6

தாளத் தனத்தத்தைச் சொல்லிய ரால்வருந் தாழ்மலபா
தாளத் தனத்தத்தைத் தப்பகிற் பீர்புடை தங்கியவே
தாளத் தனத்தத்தைத் தீர்த்தா னரங்கன் சகடுதைத்த
தாளத் தனத்தத்தை யாயுதன் பாதந் தலைக்கொண்மினே.

இதன் பொருள்:

தாளத் தனத்தத்தை—என்பது, தாளம் போன் வட்டான முலையுங்கி போலு மினிய சொல்லையுடைய பெண்கள் ஏது வாய் வரப்பட்ட தாழ்ந்த அழுக்கையுடைய கீழுலகமாகிய நல்ல காரியமாகிரத? நாகத்தை விலங்குற வார்வீர். பக்கத்திலே நிலைபெற்ற பேயையுடையனை உருத்திரன் பக்கத்துப் பெருந் துன்பத்தை நீக்கினவன்—சீரங்கத்தையுடையவன்—வண்டிலை யுதைத்த பாதத்தையுடைய வப்பன். கையிலே பஞ்சாயு தத்தை யுடையவனே, திருவடியிலே தெண்டன் பண்ணுவீர் என்றவாறு. உலகீர்! நீர் தலைக்கொண்மின்: கொண்டாற் றப்பகிற்பீர் எனக் கூட்டுக. உலகீர்: சொல்லெச்சம்; கொண்டால், என்பது அவாய்நிலை: பெறினும் எனவும் உம்மை வாசகம் விரிக்க. 7

தலையிலங் காபுரஞ் செற்ற னரங்கனென் றூழ்சொற்புன்கு
தலையிலங் காதரஞ் செய்தபி ரான்சர ணன்றிமற்றோர்
தலையிலங் காநின்ற கண்ணிலங் காண்கைக்குத் தாழுகைக்குத்
தலையிலங் கர்திலங் கேட்கைக்கு வாயிலஞ் சாற்றுகைக்கே.

இதன் பொருள் :

தலையிலங்காதரம்—என்பது முதன்மையான இலங்கையூரினுள்ளாரை வென்றான் சீரங்கத்தை யுடையான்; என்னுடைய தீய வார்த்தையான் பிழைக்கப்பட்ட சொல்லாலே சொன்ன விடத்திலே யன்புசெய்த சுவாமியுடைய பாதங்கட்கல்லது முகத்தினிடத்து விளங்குகிற கண்ணே யில்லேம் பார்ப்பதற்கு. தண்டன் பண்ணுதற்குச் சிரசை யில்லோம். செவியை யில்லேம் கேட்பதற்கு. நாக்கை யில்லேஞ் சொல்லுதற்கு என்றவாறு. நாங்களாங்கணுன் சரணுக்கன்றிக் காண்கைக்குக் கண்ணிலந் தாழத் தலையிலங் கேட்கைக்குக் காதிலஞ் சொல்லுதற்கு நாவிலோ மெனக் கூட்டுக. சரணுக்கென வேற்றுமை விரிக்க. சரணேயே காண்பது முதலான செயலோமென்பது குறிப்பு. கேட்பது சீபாத வர்ணனே. பிறர் சொல்லக், கேட்பது சொல்வது. பிறர்க்குக் கேட்பித்தல். 8

கைக்குஞ் சரமன் றளித்தா யரங்கமண் காக்கைக்குமாய்க்
கைக்குஞ் சரம சரம்படைத் தாய்கட னீறெழுத்து
கைக்குஞ் சரமக ரக்குழை யாயெனைக் கைக்கொளுடல்
கைக்குஞ் சரம தசையிலஞ் சேலென்றென் கண்முன்வந்தே.

இதன் பொருள் :

கைக்குஞ்சரம் — என்பது, படைவகுப்புக்கான யானை யழைக்கப் பட்டவனே ! சீரங்கத்தை யுடையவனே ! பூமியிலே காப்பதற்கு மழிப்பதற்குஞ் சஞ்சரிக்கு முயிர்களையுஞ் சஞ்சரியாத வுயிர்களையு முண்டாக்கினவனே ! கடனீர் வற்றிப் பொடியெழும்ப மிதிக்கும் அம்மை யுடையவனே ! என்னை யங்கீகரிப்பாயாக; சரீரத்தை வெறுக்கு மரணகாலத்திலே பயப்படாதே யென்று என் கண்ணுக் கெதிராக வந்தென்றவாறு. குழையாய் கண்முன் வந்து அஞ்சலென்றென்னைக் கைக் கொள்ளெனக் கூட்டுக. மதயானை என்பதற்குப் படைவகுப்புக்கான குஞ்சர மென்றார். அல்லது கையையுடைய யானை யென்று "இனச்சுட் டில்லாப் பெயர்க்கொடை" யெனின், அவ்வாறு செய்யுளினும் வழக்கமின்மையறிக. 9.

வந்தனை யேற்றனை யென்புன்சொற் கொண்டனை வன்மனத்தே
வந்தனை யேற்றனை யாவையு மாயினை வான்றரவு
வந்தனை யேற்றனைத் தாஞெத்த தாளில்வைப் பாய்பலித்து
வந்தனை யேற்றனைத் தீர்த்தா யரங்கத்து மாதவனே.

இதன் பொருள் :

வந்தனை யேற்றனை—என்பது, தெண்டன் பண்ணினது கைக்கொண்டவன். என்னுடைய தாழ்ந்த சொல்லான பாடலையுங் கொண்டனை. வலிய வுள்ளத்திலே வந்தாய் பொருத்தமுடைய வெல்லாப் பொருளுமாயினை. பெருமை தரும்படி சந்தோஷத்தால் தன்னைத்தா ஞெப்பான பாதத் திலே வைப்பாயாக. இரப்பான துன்பத்தையிட பத்தனை சீவனுக்குத் தீர்த்தவனே! சீரங்கத்துப் பெருமானே! என்ற வாறு. மாதவ நீயேற்றனை, கொண்டனை வந்தாயாயினை யினி யுவந்தாறருளி லவையென முடிக்க. இந்த லீலா விபூதியுடை பெருமை வேண்டாது நித்திய விபூதியினும் நான்காம் பதமே யெனக்கு விருப்ப மென்பது குறிப்பு. 10

மாதங்கத் தானை யரங்கனை வஞ்ச னிலங்கையிலே
மாதங்கத் தானை யிருதிங்க டாழ்த்துப்பின் வாம்பரிதேர்
மாதங்கத் தானை வலத்தானை முன்வதைத் தானைத்தன்பான்
மாதங்கத் தானைவைத் தானைவைத் தேனென் மதியகத்தே.

இதன் பொருள் :

மாதங்கத் தானை—என்பது, பெரிய பொற் கட்டியாற் பண் ணின பிடவையுடைய சீரங்கத்தை யுடையானை மறைந்து தொழில் செய்தவனை விராவணனுடைய விலங்கையிலே யிலக்குமியான சீதை தரித்திருப்பதான பத்து மாதந் தாமதித்தபின் தாண்டுங் குதிரையுந் தேரும் யானையுங் காலாளுமான பெலத்தையுடையானை, அவ்விராவணனைக் கொன்றவனை, தன் பக்கத்திலே பெண் பொருந்தின வுடல னைவனை வைத்தவனை பெருமாளை யிருக்கப் பண்ணி னேன், என்னுடைய புத்தியிடத் தென்றவாறு. நானென் மதியகத்தே வைத்தானை வைத்தேனென முடிக்க. எனவே பெருமாளையே நினைப்பே னென்றானென்க. 11

மதிக்கவ லைப்புண்ட வெண்டயிர் போல மறுகுறுமென்
மதிக்கவ லைப்புண் டணிகின் றிலேன்மண்ணும் வானகமு
மதிக்கவ லைப்புனல் சூழரங்கா நின் மலாத்தருடா
மதிக்கவ லைப்புன் பிறப்பினி மேலும் வருங்கொலென்றே.

இதன் பொருள்:

மதிக்க வலைப்புண்ட — என்பது, கடைய அலைதலைப் பொருந்தின குளிர்ந்த தயிரைப் போல மயங்காநின்ற வென்னுடைய புத்தியிலான பல நினைவான் நோவை யாறுகிறே னில்லை. பூமியுள்ளாரும் வானிலுள்ளாரும் வெகுமாணிக்கத் திரையுடைய நீரான காவிரியாறு சுற்றிய சீரங்கத்தையுடையவனே! உன்னுடைய திருவுளத்துக் கிருபை கால விளம்பனம் பண்ணவலை போலும் பொல்லாத பிறப்பு இன்னம் வருமோவென வென்றவாறு. அரங்கா நின்னரு டாமதிக்கப் புன்பிறப்பின்னும் வருமோவென்று தயிர்போலு மலடை யுனுவாறுகிலேனென முடிக்க. விரைவா யருள்வதாகிலும் நீ வெளிப்படக் கூறென்பது குறிப்பு. 12

வருந்துவ ரைப்பட்ட மங்கைய ரெண்மர் மனங்களைக்க
வருந்துவ ரைப்பட்ட வாயரங் கேசனை வஞ்சப்பகை
வருந்துவ ரைப்பட்ட வேழமட் டானை மறந்துலகோர்
வருந்துவ ரைப்பட்ட வீப்போன் மடந்தையர் மால்வலைக்கே.

இதன் பொருள்:

வருந்துவரைப் பட்ட—என்பது, வாரா நின்ற துவாரகையிலுள்ள வரிசித் தேவிமா ரெட்டுத் தேவியருடைய இதையத்தைக் கிரிக்கும்—பவளத்தைப் பொருந்தின திருவாயையுடைய சீரங்கத்துச் சுவாமியை, மறைந்து துன்பஞ் செய்யுஞ் சத்துருக்கள் விட்ட நெத்தியாபரணங் கட்டிய யானையான குவலயாபீடத்தைக் கொன்றவனை, நினையாது விட்டு வுலகத்துள்ளார் துன்பப்படுவார். செறமா விலகப்பட்ட வியைப் போல பெண்களாசையாகிய வலையிலே யென்றவாறு. உலகோர் அரங்கனை மறந்து மால் வலைக்கே வருந்துவர் என முடிக்க. மறவார் வருந்தார் என்பது, அருத்தாபத்தி. மறத்தலாவது, கெற்ப கொள்கையிலே இவனை நினையும் உயிர் பூமியிலே விழுந்தவுடனே மறத்தல். அவன் குண நூலைக் கற்றலே அவனைக் கற்றல், 13

மாலைக்கல் லார மடவார்புண் ணுக்கையில் வாஞ்சைவைத்து
மாலைக்கல் லாரம் புலிக்குணை யாகிற்பர் மாய்விப்பதோர்
மாலைக்கல் லாரம் புயத்தாளில் வைக்கு மதிலரங்க
மாலைக்கல் லாரஞ் சலியாரென் னேசில மானிடரே.

இதன் பொருள்:

மாலைக் கல்லார்—என்பது, மாலிகை வடிவான இரத்தினப் பதக்கத்தை யுடைய பெண்கள் குறியி லன்புவைத்துச் சாயங்காலத்துக்கும் இராத்திரிக்குஞ் சந்திரனுக்கும் வருத்துகின்ற வாறவர் மரணமாகப் பண்ணும் மாயத்தைப் பிடுங்கார். தாமரைப் பூப்போலுஞ் சீபாதத்திலே யிருக்கப் பண்ணுங் கோட்டை சூழ்ந்த சீரங்கப் பெருமாளைப் பயிலார், கும்பிடார், ஏதோ வெகுவான மானிடர்களென்றவாறு. மானிடர் மாலைக்கல்லார் னையா கிற்பா ரென்னே யென முடிக்க. மாய்விப்பதோர் மாலைக் கல்லினு லம்புயத் தாளில் வைப்பா ரென்பது, அவாய்நிலையது, "பிறவிப் பெருங்கடல் நீந்துவார் சேர்ந்தார்" என்பது போலவாம். 14

மானிட ராக வரலரி தோர்மண் டலத்தினெறி
மானிட ராக மில்ாதவ ராதன் மலரயனர்
மானிட ராகமத் தாலன்ப ராயவ ரங்கத்துளெம்
மானிட ராக மலரடிக் காட்படும் வாழ்வரிதே.

இதன் பொருள்:

மானிடராக—என்பது, மானிடராய்ப் பிறக்கக் கிடையாது பூமியிலே யறிவுள்ளவன் துன்பப் படுத்தும் பிணியில்லாதவனாகிறதும், பிரமதேவ ரிவற்கும் பத்தராய்ப் பிறந்து சீரங்கத்தெங்கள் சுவாமியிடத்துச் சிவந்த பூப்போலுஞ் சீபாதத்திலே கைங்கரியம் பண்ணி யின்பங் கிடையாது என்றவாறு. உயிர்கள் மானிடராய்ப் பிறத்த லரிது; அதனினு மில்லாதவனாதலரிது; அதனினும் பிராமணனாகிப் பிறந்து, சைவனாகி வைணவனாத லரிது என முடிக்க. அதனினும் அவாய்நிலை வருவிக்க. உயிர்களெனச் சொல்லெச்சம். ஓரிடத் தரிது மாற்றுக, பின்பு வைக்க. சிவனைப்பூசித்தவன் பிற்பிறப்பில் வைணவனாவா னென்பது புராணசித்தம். 15

அரிதா மரைக்கணந் தோலுடுத் தாரய னுர்க்கரியான்
அரிதா மரைக்கணம் மான்றிருப் பாத மடைமின்சன்மம்
அரிதா மரைக்கணந் தங்கா துபிரவ னூர்வினைவில்
அரிதா மரைக்கண மீர்த்தோடும் பொன்னி யரங்கமென்றே.

இதன் பொருள்:

அரிதாமரைக்கணம்—என்பது, கிடையாததாம், அரையி னிடத் தழகிய தோலைச் சுற்றினவர், பிரமா இவர்க்குச் சொல்ல, நாராயணன் தாமரை பூப்போலுங் கண்ணையுடைய சுவாமி சீபாதத்தைச் சேருவீராக. பிறப்புமில்லையாம்; பாதிக் கணமான போதுந் தாமதியாது முத்தியடையலாம். பாம்பி னுடனே சிங்கத்தையுந் தாண்டுந் தாமரையுமிழுத்து விரை வாய் நடக்குங் காவேரி சூழ்ந்த சீரங்க மென்று சொல்லி என்றவாறு. உலகீ ருடுத்தா ரயனுற்குச் சொல்லவரி தாமரைக் கணம்மான் றிருப்பா மரங்கமென்றே யடைமின், சென்ம சென்மமடைமின், வீடெய்தலாகுமென முடிக்க. அருமை: சிறிது மில்லாமையுமாம்; 'அருங்கேட; னென்பதறிக' எனவும்; 'அரியதுகேண்மோ' வெனவும் காண்க. 16

அரங்காது வார்கணை கண்வள்ளை கோங்கி னரும்புமங்கை
அரங்காது வார்முலை யென்றைவர் வீழ்ந்தன ராடரவின்
அரங்காது வாரமி லாமணி யேயணி யார்மதில்சூழ்
அரங்காது வாரகை யாயடி யேனுன் னடைக்கலமே.

இதன் பொருள்:

அரங்காது—என்பது, அராவுங் கருவியால் தாக்கப்பட்ட நெடிய அம்பு கண்ணுகை, வள்ளையுங் கோங்கரும்பும் பூவும்—பெண்களழகிய காதும் கச்சு கட்டின முலையுமாக வெண்ணிப் பஞ்சேந்திரியங்களானவர் விரும்பினர்; ஆடும் பாம்பாகிய நிர்த்தசாலையை யுடையவனே; துளைவிடாத மணிபோல வாயழகிய மதில் சூழ்ந்த சீரங்கத்தை யுடையவனே; துவாரகையான திருப்பதியை யுடையவனே; தாசனை நான் செபிக்கும் பொருள் என்றவாறு. அரங்கா! பெண்களை, காது வள்ளை, முலை கோங்கரும்பு என்று ஐவர் விரும்பினர்; நானுன் அடைக்கலமானேன் என முடிக்க. ஐவரென்னை யிவ்வாறு கெடாமலென்னை நீ, கா என்பது குறிப்பு. 17

அடைக்கலந் தாயத் தவர்போ லுடலுறை யைவரையும்
அடைக்கலந் தாயுல கங்கொண்ட தாள்களுக் கண்டமுண்டால்
அடைக்கலந் தாயரங் காவாயர் பாடியி லன்றுநெய்பால்
அடைக்கலந் தாய்வைத்து வாய்நெரித் தூட்ட வமுதையனே.

இதன் பொருள் :

அடைக்கலம்—என்பது, ஒடுக்குறேமில்லே, ஞாதிக்காரர் போலே வெம்மொடு விடாது பொருந்து பஞ்சேந்திரியங்களை யும் தாவி, யுலகளந்த வுன்றிருவடிக்கு நாங்கள் செபிக்கும் பொருள்: உலகக் கொத்தெல்லாம் புசித்து, ஆலிலையிலே பொருந்தின வாயை நெரித்து உண்ணப்பண்ண வமுதப்பனே, நாங்கள் மனமாற மாயையுள் படுத்தினது போல்வாயென்ற வாறு. நாங்கள், உனக்கு என வருவிக்க. ஐயனே! ஐவரையுமடைக்க நின் தாள்களுக் கடைக்கலமானேன் என முடிக்க. ஆனேம் என்று ஆக்கம் வருவிக்க. நீயேற்றபடி என்பது குறிப்பு. 18

ஐய மருந்திவை யுண்ணென்று மாதரட் டூட்டுஞ்செல்வம்
ஐய மருந்தினைப் போதே யவரின்ப மாதலினல்
ஐய மருந்தியக் கங்குறு காமுன் னரங்கற்கன்பாய்
ஐய மருந்தியும் வாழ்மின்கண் மேலுமக் காநந்தமே.

இதன் பொருள் :

ஐய மருந்திவை—என்பது, மூத்தவனே! அமுதிவை புசிப் பாயாக வெனச் சொல்லி பெண்கள் யாகம் பண்ணி யுண் ணப் பண்ணு முணவுகள் சந்தேகம் சிறிய தினையளவான காலமே யந்தப் பெண்களால்வருஞ் சுகமானபடியினலே சென்மா பகைத்து மேலெழக் கண்களொடுங் கானனமா முன்னே சீரங்கநாதரிடத்துப் பத்தியாய் பிச்சையெடுத் துண்டுஞ் சித்தத்துடனே யிருங்கோள். மறுசென்மத்திலே யுங்களுக்குப் பேரின்பமா மென்றவாறு. ஆமென வருவிக்க. உலகீ ரும்மை யூட்டுஞ் செல்வ மையந் தினைப் போதே யவ ரின்பமாதலினல் குறுகாமு னரங்கற்கன்பாய் வாழ்மின்கள். மேலுமக் கானந்தமாமென முடிக்க. உலகீர்: தோன்றுயெழு வாய். அருந்தியுமென்ற உம்மையில், நன்ருய்ப் புசித்தலு மென்க. 19

[1]நந்த மரங்களை மாகடலேழு நலியவெய்த
நந்த மரங்களைப் பற்றுநெஞ் சேவினை நையுமுன்கை
நந்த மரங்களை யார்பயல் போம்வரும் நற்கதிவா
நந்த மரங்களை வர்க்குமெஞ் ஞமெறு நரகில்லையே. 20

நரகந் தரம்புவி யிம்மூன் றிடத்து நனிமருவு
நரகந் தரங்கித்து வெங்காலர்க் கஞ்சுவர் நாயகவா
நரகந் தரம்புட் பிடரே றங்கர்நல் லாய்க்குலத்தி
நரகந் தரங்கமுற் றாரடி யார்க்கு நமனஞ்சுமே.

இதன் பொருள்:

நரகந்தரம்—என்பது, பாதளமு மாகாயமும் பூமியுமாகிய விந்த மூன்றிடத்து மிகுதியும் பொருந்தினவர் மனமலைந்து பொல்லாத வியமனுக்குப் பயப்படுவர். எசமானத்துவத்தை யுடைய குரங்கின் கழுத்திலும் பறவையின் பிடரியிலும் ஏறுகின்ற அரங்கமென்னும் பதியையுடையவர். புண்ணிய முடைய விடைச்சாதியார் மனையு மலையையுடைய கடல்பொருந் தியவருடைய பத்தர்க்கு அவ்வியமன் பயப்படுவனென்ற வாறு. மருவின காலர்க் கஞ்சுவர். அவனரங்கனடியார்க் கஞ்சுவன் எனமுடிக்க. அனுமார் கருடன் நமனவனெனச் சுட்டுப் பெயரா யடங்கும்; கடலையலை யென்ற சூத்திர முடிவால்? அஞ்சுவனென்பதற்கு அஞ்சுமென்றார். காலனுக்குப் பயப்படாதிருத்தல் வேண்டுவார் அரங்கனடியாராவ ரென்பது குறிப்பு. 21

அஞ்சக் கரத்தலைக் கங்கைய னேற்றனு மஞ்சிறைய
அஞ்சக் கரத்தலைக் குண்டிகை யான்மண்டை யங்கைவிட்டே
அஞ்சக் கரத்தலைச் செய்துபித் தேக வருளரங்கன்
அஞ்சக் கரத்தலை வன்றாள லான்மற் றரணிலையே.

இதன் பொருள்:

அஞ்சக் கரத்தலை—என்பது, பஞ்சக்கரமுந் தன் சிரத்துக் கெங்கா நதியு முடையனான சிவன், றுதித்தவுடனே அழகிய சிறகையுடைய அன்னத்தையுங் கையினிடத்துக் கமண் டலமு முடைய பிரமனுடைய கபாலம் அவனுடைய உள்ளங் கைவிட்டுப் பயப்பட்டு வொளிப்பதைப் பண்ணி மயக்கமும்

1. இப்பாடலுக்கு மூலப்பிரதியில் உரை எழுதப்படவில்லை.

நீங்கிக் கிருபை பண்ணின சீரங்கத்தையுடையவனே! அழகிய திருவாழியையுடைய முதல்வனுடைய திருவடிகளல்லாமல் துன்பம் நீக்குமிடமென்றவாறு. எழுவாய் பயனிலை செவ்வே கிடந்தது. அங்கை, யந்த சிவனுடைய கையென்பது, அவாய்நிலையால் வருவித்து மூவருளொருவன் றலை பறி கொடுத்தான்; ஒருவனவன் றலையைப் பறித்து மயங்கினான்; இவன் துன்பத்தை தீர்த்தான், அவனே காப்பான் என்பது குறிப்பு. 22

இலங்கையி லாதர னைங்கரன் மோடி யெரிசுரத்தோன்
இலங்கையி லாத மலையான வீச னிரியவெம்போர்
இலங்கையி லாத படிவாண னைச்செற்ற வென்னரங்கன்
இலங்கையி லாதவன் போகக்கண் டானென் னிதயத்தனே.

இதன் பொருள்:

இலங்கையி லாதரன் — என்பது, பிரகாசியாநின்ற வேலாயுதத்தை யாதரித்தவனான குமரனும், அஞ்சு கையை யுடையவனான விநாயகனும், அக்கினி பகவானும், சுரதேவதையும், கிரகம்-வெள்ளிமலையான சிவனும், வெவ்விய யுத்தத்தில் அழகிய கையிலாது போக, வாணாசுரனைக் கோபித்த என்னுடைய சீரங்கத்தையுடையவன்; இராவணனூரிற் சூரியன் போகும்படி செய்தவன்-என்னுடைய மனத்தை யுடையா னென்றவாறு. 23

தலைவி இரங்கல்

அத்தனை வேதனை யீன்றவ ரங்கனை யைம்படைசேர்
அத்தனை வேதனை வாய்வைத்த மாயனை யாரணங்கோர்
அத்தனை வேதனை தீர்த்தானைச் சேர்க்கில ளாயிரஞ்சால்
அத்தனை வேதனை யப்புவள் சாந்தென் றனலரைத்தே.

இதன் பொருள்:

அத்தனை வேதனை—என்பது, அப்பனைப் பிரமனைப் பெற்ற சீரங்க முடையானை, பஞ்சாயுதம் பொருந்தின கையையுடையானை, மூங்கிலைத் திருவாயிலே வைத்த பெருமானை, அரிய தெய்வப் பெண்ணான, உமாதேவி பக்கத்தனான சிவனை

வருத்தத்திலே நீக்கினனைச் சேரப்பண்ணுகிலார். ஆயிர மிடா வவ்வளவான சுடுநீரை யிறைக்க விடுவள்-சந்தன மென்று அப்புவள்; அரங்கனைச் சேர்க்கிலார், என முடிக்க; நீராகிலுஞ் சேர்ப்பீர் என்பது குறிப்பு. கேட்பார் தோழி முதலானோர். அது, ஆண்டு அசை மொழி. வேயதனை யென்ற தனுள் அகரங் கெட்டது. சிந்தாமணியுள் "பாடுதும் பாவை பொற்பே" (சிந் : சுரமஞ்சரி : 52) யென்றது போலவாம். 24

அரைக்கலை வேலை யுடுத்தமண் பல்பக லாண்டுபற்றல்
அரைக்கலை வேலை யுடைவேந்தர் வாழ்வெண்ண லைவரையும்
அரைக்கலை வேலை யவர்க்கே புரிவையென் றுலுநெஞ்சே
அரைக்கலை வேலை யரங்கனுக் காட்பட வாதரியே.

இதன் பொருள்:

அரைக்கலை வேலை—என்பது, இடையிடத்தே திரையை யுடைய கடலைச் சுற்றின பூமியை அநேகநா ளரசுபுரிந்து சத்துருக்களை யோட்டப் பண்ணு நின்ற வேலாயுதத்தையுடைய அரசர் பாக்கியத்தை விரும்புகின்ற பஞ்சேந்திரியங்களாவா ரைத் துளாக்கினையல்லை; தொழில் அந்தபஞ்சேந்திரியங்கட்கே செய்வாயென்றாலு மனமே கலையென்னுங் காலத்துட் பாதியா கிலும் சீரங்கத்தையுடைய பெருமாட்குக் கைங்கரியம் பண்ண வாஞ்சிப்பாயாக வென்றவாறு. நெஞ்சே! வாழ்வெண்ண லைவரை யரைக்கலை வேலை யவற்கே புரிவை யென்றாலு மரங் கனுக் காட்பட அரைக்கலை வேலை யாதரி யெனமுடிக்க. எனவே சிறிதுபோது நினைக்கினும் பெரிய பாவமுந் தீரு மென்று காட்சியளவு முந்துதலில், மண்ணரசர் செல்வமே கூறப்பட்டது. 25

ஆதவ னந்தரந் தோன்றுமற் கன்மழை யார்த்தெழுநாள்
ஆதவ னந்தர வெற்பெடுத் தானடி யார்பிழைபார்
ஆதவ னந்தரங் கத்தா னரங்க னடியனென்றுள்
ஆதவ னந்தரங் கண்டடர் வினைவந் தடைவதுவே.

இதன் பொருள்:

ஆதவனந்தரம்--என்பது, சூரிய னாகாசத்திலே தெரியாதபடி கல்வருட மாரி பாரித்தெழுந்த காலத்திலே பசுக்கள் தவித் தலைக் கட்ட மலையை யேந்தினவன்; பத்தர் செய்த குற்

றத்தை விசாரியாதவன்; அரங்கத்தை யுடையவன்; தாச னென்று நினையாது அகங்கரித்திருக்கும் காலவிளம்பனமே கண்டீர், கன்மம் வந்து நெருங்குதல் என்றவாறு.

உலகீர் நீர்தா மரங்கன் அடியமென் றுள்ளாத வனந் தரம் வினைவந்தடைவதென முடிக்க. உலகீரென்னுஞ் சொல் லெச்சமும்—நீர் நாம் எழுவாயும் வருவிக்க. நினைத் தார்[க்குங்]கன்ம மடையாது-என்பது குறிப்பு. கன்மமழை யார்த்தெழு நாள் ஆதவனந்தரம் வெற்றெடுத்தானே! ஆர்த் தென்னும் எச்சம் தவனந்தர னென்பதனோடு முடிக்கி னுமாம். 26

அடையப்பன் னாகங் கடிவா யமுதுக வங்கிகுளிர்
அடையப்பன் னாக மருப்பா யுதமிற வன்றுகுன்றால்
அடையப்பன் னாக மிசைதாங்கப் பாலற் கருள்செய்ததால்
அடையப்பன் னாகங் கரியா னரங்கனெட் டக்கரமே.

இதன் பொருள்:

அடையப்பன் னாகம்—என்பது நெருங்கப் பல்லையுடைய பாம்பு கடித்தவிடத்திலே யமுது சிந்த-தீயானது-சீதளத்தைப் பொருந்த பலவான யானைகளின் கொம்புகளு மாயுதமு மிற, முன்னாள் மலையா லடைத்த சலமான கடலந்த மலையை மேலாக வேந்தச் சிறுபிள்ளையான பிரகலாதனுக்குக் கிருபை பண்ணியது. ஆலிலையிற் கிடந்த பிதாவானவன் திருமேனி கறுத்தவன்-சீரங்கத்தை யுடையானுடைய திரு மந்திர மென்றவாறு. அரங்க னெட்டக்கரம் பாலற்கமுதுக தரங்க அருள் செய்ததென முடிக்க. ஆதலா லதுவே காக்குந் தன்மைதென்பது குறிப்பு. அடைதல்—நெருங் குதல். 'சோறடைவில்லை' யென்பதனால், அறிக - அடைதல் பொருந்துதல். 'ஊரடைந்தா' ரென்பதனாலறிக. அடைதல்- நிறுத்தல்: 'பாம்பைக் கடத்தி லடைத்தல்' என்பதனா லறிக. இராமாவதாரத்திற்கும் நரசிங்காவதாரத்திற்கும் பின் முன் னென்பது வேண்டா, இக்கவி கூறுவான் இரண்டு காலத்தி ற்கும் பின்னாதலின் அன்றென்று னென்க. 27

அக்கர வம்புனைந் தாரய னரிடை யாயிருநால்
அக்கர வம்பு மலராள் கொழுந னரங்கன்செங்கோல்
அக்கர வம்புயன் றுன்மூல மென்ப தறிவித்திடான்
அக்கர வம்புவி மேல்வேழ மேவெளி யாக்கியதே.

இதன் பொருள் :

அக்கரவம் புனை—என்பது, உருத்திராக்க மணியும் பாம்புந் தரித்தவரான சிவன் பிரமரிடத்துத் தேடிக் கொண்ட எட்டெழுத்தையுமுடையனை வாசமான தாமரைப் பூவிலிருக்கும் பெரிய பிராட்டியார் நாயகன் சீரங்கத்தை யுடையான், சிவந்த அழகிய உள்ளங்கையோடு கூடின தோள்களை யுடையான், தானே முந்தினவனுவது அறியப்பண்ணுன்; அந்தக் களவைப் பூமியிலே யானையே யெல்லார்க்கும் தெரியப் பண்ணிற் றென்றவாறு. அரங்கன் தான் மூலமென்பது அறிவித்திடான்; வேழமே, அக்கரவு-வெளியாக்கியது என முடிக்க. இதனுனு மறிந்தே னென்பது குறிப்பு. அக்கரவம்புனை இடையாய் என்பதற்குப் படைப்பு முதலிய முத்தொழிற்கு நடுவான காவலுடையானென வீறு னரக வொற்றுக்கினுமாம். சிவன் பிரமனுற் றிருமந்திரம் பெற்றுனென்ற புராணமுண்மையு மறிக. பிரமாதியராற் பிறர் இவன் மூலமென் றறிவது மறித்துபதேசிக்கப் படுதலில். அவ்வா றன்றி யானை ஆரபாரித் தியார்க்குங் கூறுதலால் வேழம் வெளியாக்கியதென்று ரென்க. எம்பெருமானுர் வெளியாக்கின் அடியார் நோக்கி யென்பதன்று. 28

ஆக்குவித் தார்குழ லாலரங் கேசரன் பால்விதுரன்
ஆக்குவித் தார வடிசிலுண் டார்கட லாடையகல்
ஆக்குவித் தாரறி வற்றேனைத் தம்மடி யார்க்கடிமை
ஆக்குவித் தாரடி யேயடி யேன்றுய்க்கு மாரமுதே.

இதன் பொருள் :

ஆக்குவித்தார்—என்பது, பசுக்களை கூட்டமிட்டார் வேய்ங்குழலால், சீரங்கத்துச் சுவாமியானவர்; பத்தியினுல் விதுரன் பாகம் பண்ணின விரிவான அன்னத்தைப் புசித்தார். சமுத்திரமான புடைவை நீங்காத பூமியின் முனையான அரிய அறிவேயில்லாத வென்னைத் தம்முடைய தாசருக்குந் தாசனுகப் பண்ணினுர்; திருவடிகளே தஞ்சனுன நான் அனுபவிக்கும் அரிய பொருள் என்றவாறு. அரங்கேச ரடியே அடியேனுக்கு மாரமுது, எனமுடிக்க. தேவதாந்தரங்களையும் இதரபலங்களையும் விரும்பேனென்பது குறிப்பு. வித்தாரவடிசி

லான ததியோதனம் புளியோதனம் அக்காரவடிசில் முதலா யின. பூமியின் முளை பலவேதும் முத்தி காட்டு மறிவென்ப தற்கு அறிவென்றார். 29

ஆரா தனஞ்செய்து கண்டனின் கீர்த்தி யறைவன் றிரு
ஆரா தனஞ்செய்வன் வேதாவென் றாலடி யேன்புகழ்கைக்(கு)
ஆரா தனஞ்செய்ய போதாந் திருமக ளாகபல்பூண்
ஆரா தனஞ்செயன் பாகா வரங்கத் தமர்ந்தவனே.

இதன் பொருள்:

ஆராதனம்—என்பது, உண்ணாத விடம் பொருந்தின மிடற்றனை சிவ னுன்னுடைய கீர்த்தியைச் சொல்லுவான், சிறந்த பூசைபண்ணுவான். பிரமனென்று புராணஞ் சொன்னால், தாசனான நான்ஸ்தோத்திரம் பண்ணுதற்கு எந்த முறையை யுடையேன்; தேசு சிறந்த பூவான பெரிய பிராட்டியா ரிருக்கு மார்பையுடையவனே! பல ஆபரணங்களும் பதக்கங்களு முடையவனே! அர்ச்சுன னுடைய தேரையூர்ந்தவனே! சிரங்கத்தை நீங்காதவனே! யென்றவாறு. அரங்கத்தமர்ந் தவனே! கண்டன் வுன் கீர்த்தியறைவன்; வேதா திருவாரா தனஞ் செய்வன், அடியேன் புகழ்கைக்கு ஆர்? எனமுடிக்க. புகழ மாட்டேனென்று விடாதென்னை அருள் என்பது குறிப்பு. விடம் மிடறுவிட் டிறங்காமையான், ஆராதனஞ் செய்தார். என்றாலென்பதற்குப் புராணங்களெனச் சொல் லெச்சம் வருவிக்கப்பட்டது. 30

அமர வரம்பையி னல்லார் பலரந்திக் காப்பெடுப்ப
அமர வரம்பையில் வேல்வேந்தர் சூழமண் ணாண்டிருந்தோர்
அமர வரம்பையில் கான்போ யிறந்தன ராதலில்வீடு
அமர வரம்பையின் மஞ்சா ரரங்கருக் காட்படுமே.

இதன் பொருள்:

அமர வரம்பையில்—என்பது, இறவாத தெய்வப் பெண் போலும் பெண்க ளனேகர் சாயங்காலம் ஈரக்கையான் ஆலத்தி யெடுப்ப பொரையுடைய, முனைதிருத்துங் கருவி யுடனே பழகாநின்ற ஆயுதத்தையுடைய வரசர் சுற்றும் பூமியை யேவற்றொழிலைச் செய்து கொண்டிருந்தவர். அழகிய

விருக்க மளவில்லாத காட்டிலே புகுந்து மரணத்தை யடைந் தாராதலால் மோகத்திலிருப்ப வாழையிலே மேகமுறங்குஞ் சீரங்கத்தை யுடைய பெருமாளுக்குக் கைங்கரியம் பண்ணு வீராக வென்றவாறு. உலகீ ரெடுப்பச் சூழ இருந்தோ ரிறந்தா ராதலால் மாவரங்களுக் காட்படுமே யெனமுடிக்க. செல் வமும் யாக்கையும் நிலையா என்பதும், அரங்கனே முத்தி தருவான் என்பதும் குறிப்பு. கான்போதல் = வனவாசம் பண்ணல். 31

ஆளாக வந்த வடியேற் கருள்பரி யானைதிண்டேர்
ஆளாக வந்தனிற் செற்றிலங் கேசனை யட்டவல்வில்
ஆளாக வந்தன் புயந்துணித் தாயரங் காமுளரி
ஆளாக வந்தமி லுன்னடி யார்க்கன்ப னுவதற்கே.

இதன் பொருள் :

ஆளாக வந்த வடியேற்கு—என்பது, ஏவல் செய்வானுகை வடைந்த[தா] (சா) ஏனை வெனக்குக் கிருபைபண்ணு, குதிரை யும் யானையும் வலியதேருங் காலாளுமான படையைப் போர்க் களத்திலே—இராவணனைக் கொன்ற வலிய வில்லிலே முயன் றவனே! தலைக்குறையானவன் ரேளைத் துண்டமாக்கினவ னே! சீரங்கத்தை யுடையவனே! தாமரையுடைய பிராட்டி யிருக்கும் மார்பையுடையவனே! மரணமில்லாத உன் பத்த ருக்கு விசுவாசம் பண்ணுகிறவனுக வென்றவாறு. 32

ஆவாக னத்த ரடியார் மனத்துட்புள் ளானவொப்பில்
ஆவாக னத்த ரரங்கர்பொற் ருளுக் கடிமைப்படார்
ஆவாக னத்த வழுக்குடல் பேணி யறிவிழந்தவ்
வாவாக னத்த ரிருந்தென் னிராமலென் னம்புவிக்கே.

இதன் பொருள் :

ஆவாகனத்த ரடியார்—என்பது, கூட்டப்பட்டவர் பத்த ரிதையத்தீற் பறவையான சமானமில்லாத வூர்தியை யுடைய வர், சீரங்கத்தையுடைய பொலிவையுடையவர் பாதத்திலே தொண்டு பண்ணுர். ஐயோ ஐயோ; பாரமான மல சரீரத்தை பூசித்து ஞான வீட்டு ஆசையாகாநின்ற பிரயோசனங் கெட்ட வர், இறந்தினுல் எது பயன் பூமிக்கென்றவாறு. அரங்கர்

பொற்றாளுக்கடிமை பேணார். உடல் பேணிப்பேணி பூமியி லிருந்தென்? இராம லென்னெனை முடிக்க. அடியார் மனத்து புள்ளான வொப்பில் ஆவாகனத்தர் என்க. 33

அம்பு விலங்கை நகர்பாழ் படச்சங்கு மாழியும்விட்டு
அம்பு விலங்கைகொண் டாயரங் காவன் றிடங்கர்பற்றும்
அம்பு விலங்கை யளித்தா யினியென்னை யாசையென்றிய்
அம்பு விலங்கையிட் டேசுஞ் சிறையி லடைத்திடலே.

இதன் பொருள்:

அம்புவி லங்கைநகர்—என்பது, பூமியிலுள்ள இலங்கை யாகிய பெரிய ஊர் கெட்டுப் போகும்படி சங்கையுஞ் சக்கரத் தையு நீக்கி அம்பையும் வில்லையுங் கையிலெடுத்தவனே! சீரங்கத்தையுடையவனே! முற்காலத்திலே முதலை பிடிக்கப் பட்ட சலத்துள்ள மிருகமான ஆனையைக் காத்தவனே! இனிமே லவாவென்று சொல்லப்பட்ட தளையைப் பூட்டிச் சரீ ரமான காவல்மனையு ளடக்காமலிரு வென்றவாறு. அரங்கா! இனி யென்னைவிட்டு அடைத்திடலென முடிக்க. அன்று அப்புவுள் இடங்கர் பற்றும் விலங்கை யென்பதே யாவிடு வென்று? மென்பது குறிப்பு. "மகனேனல் மக்கட் பதடியேனல்" (குறள்: அறத்துப்பால் 196) என்பதனுள் முந்தின அல்லீறு போல வீண்டு மல்லீறு விலக்கே (எதிர்மறை வியங்கோள்) கொள்க. 34

இடவம லைக்கும் புயங்க மலைக்கு மிலங்குமகல்
இடவம லைக்கு மிருங்க மலைக்கு மிறைவசங்க
இடவம லைக்கும் புனலரங் காவெய்த்த மார்க்கண்டன்கண்டு
இடவம லைக்கு முலகழி யாதுள் ளிருந்ததென்னே.

இதன் பொருள்:

இடவ மலைக்கும்—என்பது, சோலை மலைக்குந் திருவேங்கட மலைக்கும் பிரகாசியாநின்ற பூமியான பரிசுத்தையு பெருமையுடைய தாமரைப் பூவையுடைய-மகாலெக்குமிக்கும் சுவாமியானவனே! சங்கத்தை யுடையவனே! உயர்ந்த மார்க் கண்டேயர் காண சலத்திலே யலையா நின்ற வுலகங் கெடாதே தங்கின தெவ்வா றென்றவாறு. அரங்கா! உயர்ந்த மார்க்

கண்டேயர் வுலகு கண்டிட அவராழியாம விருந்ததென் என முடிக்க. அவரென்று சுட்டு வருவிக்க. ஒய்வு : மாப்பிரளை யத்தை நீந்தி, யோய்ந்து எல்லாரு மிறக்கவும், மார்க்கண் டேய ரிறவாது வுள்ளொடுங்கின உலகையுந் தன்னையுங் கண்டு காணுற்குக் கூறி நீ வைத்தாய் என்பது குறிப்பு. 35

இருந்தை யிலங்க வெளிறுப டாதென்செய் தாலுநிம்பத்
திருந்தை யிலந்தித்தி யாதவை போறபுல்லர் யாவுங்கற்றுய்ந்து
இருந்தை யிலம்பன்ன கண்ணுறக்கல் லால்வெண்ணெ
[யில்லிலொளித்து
இருந்தை யிலங்கை யரங்கர்க்கன் பாகி யிருக்கிலரே.

இதன் பொருள் :

இருந்தை யிலங்க—என்பது, கரியினுருவம் வெளுப்பாகாது ஏதுசெய்தாலும்; வேம்பாலான பெரிய எண்ணெய் இனியாது. அவ்வாறு போற கீழ்மக்களேதும் படித்து விசாரித்துத் தங் கின கூரிய வம்பு போலுங் கண்ணையுடைய பெண்ணையல்லா மல் வுருகாத நெய்யையுடைய ஆயர்மனையிலே மறைந்து நுகர நின்ற சீரங்கம் பெருமாளுக்கு விசுவாசமாகி யிருக்கிருரில்லை யென்றவாறு. புல்லரேதுங் கற்றுய்ந்திருந்தும் வெளிறுபடாது தித்தியாதவை போல கண்ணுற் கல்லா லரங்கற்கன்பாக இருக்கிலரென முடிக்க. இதற் கென்செய்வோ மென்னு மிரக்கக் குறிப்பு. 36

இருக்குமந் தத்தி லறியா வரங்கன்மண் ணேழுண்டுந்தய்
இருக்குமந் தத்திரு வாய்மலர்ந் தானெட் டெழுத்தைக்குறி
இருக்குமந் தப்புத்தி யீர்த்துநல் வீடெய்த லாகுங்கைபோய்
இருக்குமந் தச்செவிட் டுமன்முந் நீர்கடந் தேறிடிலே.

இதன் பொருள் :

இருக்குமந் தத்தில்—என்பது, முதல் வேத மொடுக்க மறி யாத சீரங்கத்தை யுடையான் பூமியேழும் பொசித்தும் தயி ருக்கு மழகிய சிறந்த வாயை அங்காந்தவன்; அட்டக்கரத்தை கிடையாத பேய் போலுவீர்க்குந் தாமத குணத்தை யுடைய வுங்களுக்கும் நல்ல முத்தி யடையலாங் கையுமசை யாது கேட்டுத் தங்குங் குருடுஞ் செவிடு மூமையுமானவன் சமுத் திரத்தைத் தாவிக் கரை சேர்வான் என்றவாறு: அன்று :

அசைமொழி. எழுவாய், பயனிலை; செவ்வுலகீர் அவனுஞ் சமுத்திரங் கடவான்: திருமந்திர மறியாதவர்க்கு வீடில்லை யென்பதற்குச் செவியும் கடலளவு விளைவவாயும் யுத்தியா லறியப் புத்தியுமில்லாதவன் சமுத்திரங் கடப்பா னென்பது சங்கதி. அந்தன் = குருடன். 37

ஏறுங் கரியும் பரியுஞ்செற் றூன்பர னென்றுமன்றுள்
ஏறுங் கரிமறை யாதலி னுலையம் யாதுமக்கீடு
ஏறுங் கரிய வரங்கர்க்கன் பாய்வினை யென்னுமிடி
ஏறுங் கரியு மினிமேற் பிறவி யிடரில்லையே.

இதன் பொருள்:

ஏறுங் கரியும்—என்பது, காளையையும் யானையையுங் குதிரை யையுஞ் செயித்தவன் முதல்வனென்று மம்பலத்திலே சொல் லுஞ் சாட்சி வேதமாகையாலே, சந்தேகம் ஏது உங்களுக்கு; மிகுதியு முய்வீராக. கறுத்த நிறத்தரான சீரங்க ராசருக்கு விசுவாசும் பண்ணிப் பாவமாகிய வுருமுந் தூளாய்ப் போம், பின்னே சொன்ன துன்பம் வாராவென்றவாறு. உலகீர்! பரனென்று மன்றிலேறும் கரி மறையாதலின் உமக்கு ஐயம் யாது? அரங்கற் கன்பா யீடேறும். அன்பரானல் ஏறுங் கரி மிடறு மில்லையென முடிக்க. அன்பரானல்-அவாய்நிலை. ஏறுங் கரியு மாவன கஞ்சனல் விடப்பட்டன. 38

இடராக வந்தென்னைப் புன்சிறு தெய்வங்க ளென்செயுமான்
இடராக வன்பிணி மாநாக மென்செயும் யான்வெருவி
இடராக வன்னி புனலிடி கோண்மற்று மென்செயும்வில்
இடராக வன்னரங் கன்றிருத் தாளென் னிதயத்ததே.

இதன் பொருள்:

இடராக வந்தேனே—என்பது, துன்பமாக வெதிர்ந் தென்னைத் தாழ்ந்த அற்ப தேவதைகளேது செய்யு மானிட சரீரத்துக் கேற்க வலியநோயும் பெரிய பாம்புகளும் ஏது செய் யும்? யான் பயப்படச் சிவந்த தீயும் வெள்ளமும் வுருமும் நவக்கிரகங்களும் ஏது செய்யும்? வில்லை யிடப்பக்கத்திலே யுடைய இராமாவதாரமான சீரங்கத்தையுடைய பெருமாளு டையார் திருவடிகளே என்னுடைய மனத்தையுடையது

என்றவாறு. அரங்கன் றிருத்தா ளென்னிதையத்தது, ஆகையால் நான் பயப்பட வென்செய்யுமென முடிக்க. ஓர் பத்திரமும் பண்ணு தென்பது குறிப்பு. இவற்றின் குணம் பிறருக்குத் துன்பமே செய்வதியற்கை. வெருவியிட யென் பதினி விடவென்பது அசைமொழி யாகாம லகரம் மொழிமுத லானவை, "பூக்குள்—ஆகராகவனே" என்ருர் கம்பரும். 39

அத்திரங் காய மெனவுண ரேனென தாசையுன்கை
அத்திரங் காயத்தி யிற்பெரி தானரை யாகிப்பல்வீழ்
அத்திரங் காயந் நிரம்போற் பொறியைந் தழியுமக்கால்
அத்திரங் காயரங் காவடி யேனுன் னடைக்கலமே.

இதன் பொருள்:

அத்திரங் காயம்—என்பது, நிச்சயமில்லாதது சரீரமென வறி யேன். என்னுடைய அவாவானது, உன்னுடைய கையி லம்பு சுடப்பட்ட சமுத்திரம் போல, மிகுந்தது மயிர் வெளுப்பாய்ப் பல்லும் விழத் தோலசைவாய்ச் சூத்திரம் போலப் பஞ்சேந்தி ரியங்களுங் குலையும். அந்த வேளையில் அருள்புரிவாய். சீரங் கத்தையுடையவனே! தாசனுன நான் உன்னுடைய சேமிக் கும் பொருளானே னென்றவாறு. அரங்கா! வென்னுசை பெரிது; உன்னடைக்கல மானேன். அக்காலத் திரங்கா யென முடிக்க. ஆனேனென ஆக்கம் வருவிக்க. 40

கலக்கூழைக் கைக்குங் கருத்துடை யீரரங் கத்துளிலேக்
கலக்கூழைக் கைக்குங் கறியிட்டுந் துய்த்திருங் காதுபடைக்
கலக்கூழைக் கைக்குள் வருவாணனைக்கண் ணுதலும்விட்ட
கலக்கூழைக் கைக்குப்பை கண்டானை வீதியிற் கண்டுவந்தே.

இதன் பொருள்:

கலக் கூழை—என்பது, மயங்கப் பண்ணும் விதியை வெறு க்கும் புத்தியை யுடையவர்களே! சீரங்கத்திலே பூமியாகிய பாத்திரத்திலே நெகிழ்ந்த அன்ன பேதத்தைக் கசப்பான உபயோகத்தாலும் பொசித்திருப்பீராக. எதிர் சிறு ஆயுத முடைய பின்னணியின் வருகின்ற வாணுசுரனைச் சிவனும் நீங்கி மறையக் குறைக்கையான கூட்டத்தை யுண்டாக்கின பெருமானை வீதியிலே சேவித்து என்றவாறு. உலகீர்! அரங்கத் துய்த்துங் கண்டானை வீதியிற் கண்டுவந்தும் இரும்

எனமுடிக்க. இருந்தாலது கை கூடு மென்பது. குறிப்பு. உம்மை, மிடிப்படினும், அரங்கத்திலிருப்பதே வலியுறுத் தினது. கோவில் புகுதப் போதில்லையாயினும்—வீதியிற்கண் டென்றார். 41

கண்டக னுவின் பொருள்போல யாவும்பொய் காலனென்னுங்
கண்டக னுவி கவர்வது வேமெய் கதிநல்கெனக்
கண்டக னுவிப் பொழுதேசெல் கென்றருள் காரரங்கற்
கண்டக னுவின் புறக்கண்டு வாழ்த்திக் கடிதுய்ம்மினே.

இதன் பொருள் :

கண்ட கனுவின் பொருள்—என்பது, உண்டாக்கின நித்தி ரையிற் காரியம் போலப் பிறருமறியச் செய்யுங் காரியமும் அசத்தியம்: காலனென்னும் பெயரையுடைய, பொல்லாத [வ]னுயிரை கிரகிப்பதுவே சத்திய முத்தியைத் தரவேண்டு மென்று சொல்லக் கண்டாகனனே இப்பொழுதே செல்; இந்த வேளையிலே போ வென்று சொல்லிக் கிருபை பண் ணின மேகம் போலுஞ் சீரங்கத்தையுடையவன். கண்ணிலே பொருந்த நாவிலே யினிக்கச் சேவித்தும் புகழ்ந்தும் விரை வாய்ப் பிழைப்பீராக வென்றவாறு. உலகீர்! நனவும் பொய்; கனவாவதுவே மெய், ஆதலால் அரங்கனைக் கண்டு நாவின்புற வாழ்த்தி யுய்ம்மின் என முடிக்க. காலன் வருமுன் வந்தா லுய்யவொட்டா னென்பதற்குக் கடிது என்றார். கண்டகன் வென்பது அக்காலம் புழங்கிற்றுப் போலும். உலகீர்: ஆதலால்; சொல்லெச்சம் 42

கடிக்கும் பணிநஞ் சமுதாகுந் தீங்குநன் காகும்பராக்
கடிக்கும் பணியலர் தாழ்வார்கல் லாமையுங் கற்றமையாங்
கடிக்கும் பணியற மெல்லா மரங்கர்பைங் கன்னித்துழாய்க்
கடிக்கும் பணியொளிக் குந்நல்ல பாதங் கருதினர்க்கே.

இதன் பொருள் :

“கடிக்கும் பணிநஞ்சு”—என்பது, பல்லாற் கவ்வும் பாம் பின் விடமும் அமுது போலும்; பாவமும் புண்ணியமுமா முகம் பாராது எண்டிக்கும் பகைவரும் வணங்குவர் பயிலாதும் பயின்றதும் போல வுதவும், காக்கும் புண்ணியத்தையுடை

யான், சீரங்கத்தையுடையான், பசியமான துழாய் மணக்கும் ஆபரணம் பிரகாசிக்கும் அழகிய திருவடிகளைத் தியானித்தவற் கென்றவாறு. அரங்கன் பாதங் கருதினற்கும் அமுதாகும். நன்காகும். தாழ்வார் கற்றமையாம் கடிக்குமென முடிக்க. பணியரவெல்லாங் கடிக்குமென மாறுக. நஞ்சும் எனவும் அணியலரு மெனவும் உம்மை வருவிக்க. திருவடிகளை நினைப் பதே யெல்லா நன்மையு மென்பது குறிப்பு. மணக்கும் பதம்: ஒளிரும் பதமென்க. சீரடை யொருமுதற் கேற்றன. ஒலிக் கும் பதமெனின், ஆரவாரிக்கும் பதமென்க. பணியாவது —சிலம்பு. 43

தினகர ஞர்கலி தீர்காற் றொடுங்குஞ் செயலும் விண்மீ
தினகர ஞர்கொண்ட லேழ்செருக் காமையுஞ் சென்றெதிர்மோ
தினகர ஞருயிர் செற்றா ரரங்கர் திகிரிசங்கேந்
தினகர ஞர்நம் பெருமா ளமைத்த திருக்கை கண்டே.

இதன் பொருள்:

"தினகரஞர் கலிதீர் காற்ருேடு"—என்பது, சூரியனுஞ் சமுத்திரமும் அக்கினியும் வாயுவும் அடங்குந்தொழிலும், ஆகா யத்து மேலான பெரிய வூரையுடைய இந்திரனுடைய மேக மேழும் நிக்கிரியாமையும் நடந்து முன்னுகச் சீறின கரனுடைய அரிய வுயிரைச் செயித்தவர், சீரங்கத்தையுடையவர், சக்கரத் தையுஞ் சங்கையு மெடுத்த கையை யுடையவர், அன்புடைய நம் முடைய பெருமானவர், அடக்கின திருக்கைகளை நோக்கி யென்றவாறு. நம்பெருமா ளமைத்த திருக்கை கண்டே ஒடுங் குஞ் செயலும்—செருக்காமையும் ஆம் என முடிக்க. இவன் ஏவியது எல்லாத்தெய்வமும் செய்யுமென்பது குறிப்பு. 44

திருக்கா விரிக்கும் யமுனைக்குங் கங்கைக்குந் தெள்ளமுதாம்
திருக்கா விரிக்குங் கடற்கும் பிரான்றென் னரங்கமென்னத்
திருக்கா விரிக்கு மொழியார்க்குத் தீமெழு காவிரன்புயத்
திருக்கா விரிக்கும தெவ்வா றவனுங்கள் சென்மத்தையே.

இதன் பொருள்:

திருக்கா விரிக்கும்—என்பது, சிறந்த காவிரியிடத்தும் யமுனையிலுங் கங்கையிலுந் தெளிந்த அமுதமானவன். பெரிய

பிராட்டியார்க்குஞ் சோலைவிரிந்த பூமியான பெண்ணுக்கும் எசமானனுடைய சீரங்கமென்று சொல்லுதற்குக் கொண்ட புத்தியாவீர். கரும்புபோலு மினிய வார்த்தையுடைய பெண் களுக்கு நெருப்பிலிட்ட மெழுகாக வுருகுவீர். அன்பில்லாத வுங்கள் சென்மத்தை அவனெவ்வாறு நீக்குவ தென்றவாறு. உலகீர்! திருக்காவீர்! தீமெழுகாவீர்; அன்பில்லாத வுங் கள் சென்மத்தை விரிக்கும தெவ்வாறென முடிக்க. தீ மெழுக்காகாது, திருக்காகீராறு லுங்கள் பிறப்பை யவன் தீர்ப்பானென்பது குறிப்பு. உலகீர், என முன்னிலைப் பேர் குறியால் வழி வருவித்து, "அறிமின் றவநெறி யஞ்சுமின் கூற்றம்" என்னும் பாட்டுள் வருமாறு போலவாம். 45

சென்மந் தரங்கங் கருமஞ் சுழிபிணி சேலினங்கு
சென்மந் தரங்கதிர் பொன்கோள்கண் மாரிதிண் கூற்றசனி
சென்மந் தரங்கவற் றுள்விழு வோர்கரை சேர்க்கும்வங்கஞ்
சென்மந் தரங்கவின் றோளா ரரங்கர் திருப்பதமே.

இதன் பொருள்:

சென்மந் தரங்கம்—என்பது, பிறப்புத் திரை, காரியஞ் சுழி, வியாதி மீனவகை; செவ்வாயுஞ் சனியுஞ் சூரிய சந்திரரும் வியாழமும் வெள்ளியும் புதனும், மேகம் வல்லிய இயமன்—இடியேறு வானின்ற தாமத குணத்தார். அவ்வகைகளுட் பட்டார் கரையேறப் பண்ணுந் தோணி மேகத்துடனான மந்தர கிரியைப் போல அழகிய தோள்களையுடைய சீரங்கப்பெருமா ளுடைய திருவடிக ளென்றவாறு. ஆமென வருவித்து அது போல என உவம உருபும் வருவித்தது. உயிர்களுடைய சென்மம் நித்திரை போலவாம். சுழி போலவாம்—மேகம் போலவாம்—எமன் போலவாம்—அரங்கம் பத்மவங்கம் போல வாம் என முடிக்க. மேகத்தா னீர்வரல் போல, பிறப்ப தற்கு வழியிடத்திற் கா என முடிக்க. கரை; முத்தியென்பது குறிப்பு. 46

[1]பதக்கம லங்க லணிமார்ப பொன்னி படிந்திமையோர்
பதக்கம லங்க ளறுசீ ரரங்க பகட்டயிரா
பதக்கம லங்கரித் தார்வோன் சிவனயன் பார்க்கவந்துன்
பதக்கம லங்க ளடியேன் றலைக்கென்று பாலிப்பதே. 47

1. இப்பாடலுக்கு மூலப்பிரதியில் உரை எழுதப்படவில்லை.

பாலனஞ் செய்யமர் நாடாண்டு பூணொடு பட்டணிந்து
பாலனஞ் செய்ய கலத்துண்டு மாதர்பல் போகத்தையும்
பாலனஞ் செய்ய விருப்ப திலையம் பருகிநந்தன்
பாலனஞ் செய்யவள் கோமா னரங்கம் பையில்கைநன்றே.

இதன் பொருள்:

பாலனஞ் செய்ய—என்பது, வெள்ளை யன்னம் வயலிற் பொருந்து நாட்டை யேவல்கொண்டு, ஆபரணத்துடனே, நல்ல புடைவையைத் தரித்து, பாலுஞ் சோறுஞ் சிவந்த பாத்திரத்தி னற் பொசித்துப் பெண்களுடைய அநேக சுகங்களையும், அழி யாமை பண்ண இருக்கிறதைப் பார்க்கப் பிச்சைச் சோற் றைக் கரைத்துக் குடித்தும், நந்தகோபருடைய பிள்ளை நம்மு டைய பெரிய பிராட்டிக்கு நாயகனுடைய சீரங்கவாசம் பண்ணு வது பெருமை யென்றவாறு. மனமே, நாம் ஆண்டு வுண்டு அணிந்திருப்பதிலையம் பருகியும் அரங்கம் பயில்கை நன்றாம் என முடிக்க. அவ்வின்பஞ் சிறிதாய்ப் பாவமாக்கும். பயில்கை யிப்போது சிலநாள் வருந்தினும் பின் பலனை வீட்டைக் கொடுக்கும் என்று குறிப்பு. வயிறு நிரம்பாவழி நீரொடு பொசித்தாற்குப் பருகி யென்றார். 48

பையிலத்தி மூளை நரம்பூ னுதிரம் பரந்தகுரம்
பையிலத்தி யுள்விளை பாண்டமென் றுமறபுன் பாவையர்தோல்
பையிலத்தி செய்துநர கெய்துவீ ருய்யப் பற்றுமினோ
பையிலத்தி மேவித் துயில்கூ ரரங்கர்மெய்ப் பாதத்தையே.

இதன் பொருள்:

பையிலத்தி மூளை—என்பது, பழகின எலும்பு மூளையும் நரம் புந் தசையும், இரத்தமும் விரிந்த கூடு மலத்தை நடுவேயுண் டாக்கும் குசக்கலமென் றிகழாமல் கீழ்மைப்பட்ட பெண்களு டைய தோலான பரப்பிலே, பிறத்தலைப்பண்ணி, நரகத்தைப் பொருந்துகிறவர்கள் பிழைக்கும்படி தொடுவீராகப் பாம் பின் படத்திலே, கடலிலே மேவி யுறங்குதலைச் சிறந்த சீரங்கப் பெருமாளுடைய பொலிவான திருவடிகளை யென்றவாறு. பெண்களைக் குரம்பை பாண்டமென் றிகழாமல் அதிசயித்து நரகெய்துவீர்! அரங்கர் பாதத்தை, யுய்யப் பற்றுமினென முடிக்க. பெண்ணானை நரகமே தரும். இவனைப் பற்றில் வீடே வருமென்பது குறிப்பு. மூன்றாமடியிற் பை: பரப்பு;

"அதுபத்தங்கோர் நரக" மென்ற சிந்தாமணி யுரையா லறிக. 'பைத்த பாம்பணையா' னென்ருர்—நம்மாழ்வாரும். அத்தி வுண்டதல்—இது வடமொழி. மலத்தை யிலத்தியென்ருர் அறிவில்லாத பொரை விலங்கென்பதாக. 49

பாதகங் கைக்கு மரங்கர்பல் பேய்பண் டிராவணனுற்
பாதகங் கைக்குமென் றெள்ளக்கொய் தார்படிக் கேற்றதிருப்
பாதகங் கைக்குள் விழுமுன் னமேபங் கயன்விளக்கும்
பாதகங் கைக்குளிர் நீர்வீழ்ந்த நீசன் படர்சடையே.

இதன் பொருள் :

பாதகங் கைக்கும்—என்பது, மாபாவத்தை நீக்குஞ் சீரங்கத்தை யுடையார் அநேகம் பசாசுகள் முற்காலத்திலே இராவணனுடைய பொல்லாத அதிசயமான தலைகள் கசக்குமென்றிகழ அறுத்தார். பூமிக் கிரந்துகொண்ட மீளாத (செ)சலங்கை நடுவே விழுவதற்கு முந்தி பிரமா கழுவப்பட்ட ஸ்ரீபாதத்துக் கங்கை விழுந்தது, சிவனுடைய நெடிய சடையிலே யென்றவாறு. அரங்க ரேற்ற திருப்பாத கங்கைக்குள் விழுமுன் பாத கங்கைக் குளிர்நீ ரீசன் படர்சடைக்கே விழுந்ததென முடிக்க. பெருமாள் பாதத்திலே பிரமன் விளக்கிய நீர் சிவன் முடிமேற் கொண்டானகையால், பெருமாளே அதிகனென்பது குறிப்பு. 50

படநாகத் தந்தர மீதிருப் பானெம் பரனரங்கன்
படநாகத் தந்தம் பறித்தோன் புகழைப் பரவுமின்க
படநாகத் தந்தக் கரணம்பொல் லான்சிசு பாலனமுற்பல்
படநாகத் தந்த வசைக்குந்தந் தான்றெல் பரகதியே.

இதன் பொருள் :

படநாகத் தந்தர மீதிரு—என்பது, படத்தையுடைய பாம்பின்மேலே ஆகாயத்து மேலானவன் எம்முடைய விறைவன் ; சீரங்கத்தை யுடையான் ; இறக்க ஆனைக்கொம்பை முறித்வன் ; கீர்த்தியைக் காணத் துதிப்பீராக. வாஞ்சிப்பான சரீரத்தை மனமுதலானவையாலு மதியாதவன் ; சிசுபாலன் வெகுவிதமாக நாவாலே குழறினது, அந்தரந்தனைக் கொடுத்தான்—பழைய முத்தி யென்றவாறு. உலகீர் அரங்கன், சிசுபாலன் வைதற்கும் பரமபதங் கொடுத்தானகை

யாலே, அவன் புகழைப் பரவுமின்; உமக்கும் பரமபதங் கொடுப்பான் என முடிக்க. ஆதலாலென அவாய் நிலையும், அவனென்னுஞ் சுட்டும், உமக்கு முத்தி தருவானென்னுங் குறிப்பும், உலகீரெனப் பெயரெச்சமும், சொல்லெச்சமும் வருவிக்கப்பட்டன. ஆனை படத் தந்தம் பறித்தானென மாறுக. ஆனை கஞ்சனால் விடப்பட்டது. 51

பரவையி லன்னகட் பாஞ்சாலி நின்பர மென்னநிரு
பரவையில் மேகலை யீந்தா னரங்கன் பணிந்திமையோர்
பரவையி லாழிப் பிரானடிக் கீழுற் பவித்தழியும்
பரவையில் மொக்குளைப் போற்பல கோடி பகிரண்டமே.

இதன் பொருள் :

பரவையி லன்னகட் பாஞ்சாலி—என்பது, பரந்த வேலைப் போலுங் கண்ணையுடைய துருபதை; நான் நின்னுடைய காக்கும் பொருளென்று சொல்ல இராச சபையிலே பாவையைக் கொடுத்தான், சீரங்கத்தையுடையவன்; வணங்கித் தேவர் துதிக்கும் கூர்மையுடைய சக்கரத்தையுடைய சுவாமிகளுடைய திருவடிகளின் கீழே யுண்டாய், அடங்குஞ் சமுத்திர நீர்க்குமிழியைப்போல அநேகங்கோடி யண்டவடுக்குகள் என்றவாறு. அரங்கனடிக்கீழ் உற்பவித்தழியும் பரவையின் மொக்குளைப்போலப் பலகோடி பகிரண்டமென முடிக்க. ஆதலா லவனே பரனென்பது குறிப்பு. பாஞ்சாலி நான் நின் பரமென்றாள் என வருவிக்க, அவளுக்குற்ற ஆடையுரியப்பட்டதால்; வந்தனையானையிவன்—இவன் கொடுத்த தாமிவன் பாதம்? 52

அண்ட மடங்க லையுந்தந்து காத்தவை யந்தந்தன்பால்
அண்ட மடங்கலைச் செய்கா ரணமம்பொன் முத்தலைவான்
அண்ட மடங்கலை யீர்த்தோடும் பொன்னி யரங்கன்புட்கார்
அண்ட மடங்கலை முந்நீர் மகளுகப் பாகவென்றே.

இதன் பொருள் :

அண்ட மடங்கலை—என்பது, அண்டங்களெல்லாம் படைத்துக் காத்து அவற்றை யொடுக்கத்திலே தன்னுடைய விடத்திலே ஆகாயத்திலே சுருக்குதலைச் செய்யுங் காரணம் அழகிய பொன்னு முத்துமுடைய திரை, ஆகாயத்திலே பொருந்த சிங்

கத்தை யிழுத்து விரைவாய் நடக்குங் காவேரியுடைய சீரங் கத்தையுடைய பெருமாள் பறவையான நீர்க்காக்கை யடைய வளையுந் திரையுடைய கடலிற் பிறந்த பெண்ணை பெரிய பிராட்டி மகிழ்ச்சியாக வென்றவாறு. அன்றே : அசை; அரங்க னண்டந் தந்துங் காத்து மடங்கலைச் செய் காரண முந்நீர்மக ளுகப்பாக என்றவாறு முடிக்க. இதுவல்லது கன்ம காரணமில்லை யென்பது குறிப்பு. அண்ணனென்பது, அண்ட என்பது வழக்கு. "அண்டை கொண்டு கெண்டை மேயு" மென்பது சந்தவிருத்தம். 53

ஆகம திக்கு முகமென் முகமுடை யானயன்வா
மாகம திக்கு நவநீதக் கள்வ வவனிகொள்வா
ராகம திக்குளஞ் சேரரங் காவுன்னை யன்றித்தெய்வ
மாகம திக்குள் வையே னடியேன்பிற ராரையுமே.

இதன் பொருள்:

ஆகம திக்கு—என்பது, ஆகமத்தையுந் திசைமட்டான நான்முக மேலு மொருமுகமான அஞ்சுமுகத்தையுடைய சிவனும் பிரமனும் இன்பமாக இருக்கும் திருமேனியையுடையவனே! கடைவதாலான வெண்ணை திருடினவனே! பூமியை எடுத்த பன்றியானவனே! சந்திர புட்கரிணி பொருந்திய சீரங் கத்தை யுடையவனே! உன்னையல்லது தெய்வமும் இல்லை என்பதாய்ப் புத்தியுள்ளே தங்கப்பண்ணேன், அடிமையான நான் மற்றவர்க ளாரையு மென்றவாறு. அரங்கா வுன்னை அல்லது பிறராரையு மதிக்குள் வையேனென முடிக்க. நீ அரு ளென்பது குறிப்பு. 'ஏருளு மிறையோ' னென்னும் பாட்டு மறிக. 54

ஆரத்த னந்தருந் தாய்தந்தை யானந்த மாவரிகழ்
ஆரத்த னந்தனன் றீமைகண் டாலங்க வுத்துவப்பூ
ணாரத்த னந்த சயனு வணியரங் காதிகிரி
யாரத்த னந்தன் மதலாயென் றீங்குனக் கத்தன்மைத்தே.

இதன் பொருள் :

ஆரத்த னந்தரும்—என்பது உண்ண மூலைகொடுக்குந் தாயும் பிதாவும் மகிழ்ச்சியாவர்; வெறுப்புச் செய்யார், பொன்போலும் பிள்ளை செய்யுங் குற்றத்தை அறிந்தால்; அழகிய கவுத்துவ

மணி ஆபரணமான பதக்கத்தையும் சேடனை பாயும் உடையவனே! அழகிய சீரங்கத்தையுடையவனே! நந்தகோபருடைய பிள்ளையானவனே! என்னுடைய குற்றமுனக்கு அப்படியுடையதேதென்றவாறு. அரங்கா! தந்தை நந்தன் தீமைகண்டால் இகழார்; ஆனந்தமாவார்; உனக்கு என் தீங்கு, அத்தன்மைத்து என முடிக்க. தீமையாவன: காலா லுதைத்தல், கையாலடித்தல் முதலாயின. இவன் தீமை; பலகாலும் வணங்காமை, புகழாமை முதலாயின எனக் காண்க. 55

அத்தனு மன்புள வன்னையும் பேரு மனந்தமெய்க்கா
யத்தனு மன்புனற் கன்னியும் பூமக ளத்தனிவீ
ரத்தனு மன்புய மீதே றரங்கனஞ் சார்ங்கவயி
ரத்தனு மன்புகல் பேரிரு வோர்க்கு மடியனென்னே.

இதன் பொருள்:

அத்தனு மன்புள—என்பது, தகப்பனும் அன்பு பொருந்தின தாயும் பேரும் அளவில்லாதன சுவபாவமான திருமேனியையுடையவனும் நிலையான சலமான கடலிற் பிறந்தாளான பெரிய பிராட்டியும் தாமரையிற் பெண்ணானவளும் அந்த ஏகவீரனான அனுமார் தோளின் மேல்ஏறுநின்ற சீரங்கத்தை யுடையான்; அழகிய சார்ங்க வில்லையுடைய சுவாமி சொல்லியதாம்பேர் இருவர்க்கும் தொண்டனெனவே என்றவாறு. எனக்குப் பொய்யான தாயும் பிதாவும் பேரும் அனந்தம். மெய்யான தாய் தந்தை முத்தியுடையானு மவன ....... றவியும் இவன் சொன்னபேர் தொண்டனென்று முடிக்க. மெய்யிவை எனவே, அனந்தம் பொய்யென வருவிக்க. தாசனென அறிந்தபின் பிறப்பில்லை என்பதால் பின்னுள்ளன மெய்யதாம். தாசனென்றது குருவாக இட்ட பேர். 56

அடியவ ராகவு மாட்கொள் ளவுமெண்ணி யாருயிர்கட்
கடியவ ராகம் படைத்தமை யாலறி வேபெரிய
வடியவ ராக வரங்கருக் காட்செய் யருட்கதையால்
அடியவ ராகஞ்செய் மாரனுக் காட்செய்யு மைவரையே.

இதன் பொருள்:

அடியவ ராகவும்—என்பது, தொண்டர்கவும் ஏவல் கொள்ளவும் நினைத்து அரிய உயிர்களுக்கு முந்தினவர்; சரீரம் உண்டாக்கினபடியினாலே புத்தியிலே பெருத்த பாதத்தையுடைய பன்றியானவர்; சீரங்கத்தை யுடையவருக்கு ஏவல்செய்; அருளாகிய தடியாலே பிரகரி; பொல்லாத ஆசையை யுண்டாக்கும் மன்மதனுக்கு ஆட்செய்யும் பஞ்சேந்திரிய மாவாரை என்றவாறு. புத்தியே, அடியவ ராருயிர்கட்கு எண்ணிப் படைத்தமையா லவ் வரங்கருக் காட்செய ஐவரை அடியென முடிக்க. ஆட்செய்தா லடிக்கலாம், ஐவரை அடித்தாலுய்யலாம் என்பது குறிப்பு. 57

வரையாழி வண்ண ரரங்கேச ரீசன்முன் வாணன் றிண்டோள்
வரையாழி யார்புள்ளின் வாகனத் தேவந்த நாள்தொட்டிற்றை
வரையா ழியதுய ராய்த்தூசு நாணும் வளையுஞ்செங்கை
வரையா ழியுமறி வுமிழந் தாளென் மடமகளே.

இதன் பொருள்:

வரையாழி வண்ணர்—என்பது, கொண்ட சமுத்திர நிறத்தையுடையார், சீரங்கத்துச் சுவாமியானவர்; சிவனெதிராக வாணசுரனுடைய வலிய தோள்களை நீக்கின சக்கரத்தையுடையவர்; பறவையான கருடவாகனத்திலே எழுந்தருளின நாள் முதலாக இனறுமட்டும் நிலையாத்துன்பமாய் உத்தரியமும் லச்சையும் வளையலும் சிவந்த கையிறையான மோதிரமும் புத்தியும் பிரிந்தாள்; என்னுடைய அறியாமையுடைய பெண் என்றவாறு. பெண்காள்! என் மடமகள், அரங்கேசர் வந்த நாள்தொட்டு வரையாழி இழந்தாள் என முடிக்க. இனி இதற்கென் செய்வோம் என்பது குறிப்பு. ஆழிவரை வண்ணரென மாறுக. மலைபோ லுயர்ந்தாரெனவுமாம். 58

மகரந்த காதலை வாழ்வென்ன வாரிசுட் டாய்திதியின்
மகரந்த காதலை வானினுள் ளோர்க்குமண் ணோர்க்குவட்டா
மகரந்த காதலை வார்குழை யாய்வளர் சீரங்கதா
மகரந்த காதலை வாக்கிற்சொல் லேன்மட வாரெதிரே.

இதன் பொருள் :

மகரந்த காதலே—என்பது, சுறுமீன் பொருந்தாது சலத்து இன்புறுதலென்று நினைக்க, சமுத்திரத்தைச் சுட்டவனே! திதி புத்திரரான அசுரரைக் கொன்றவனே! முதன்மையான தேவர்க்கும் மானிடர்க்குந் தித்திப்பு அடங்காத தேன் குழம்பு போன்றவனே! காதிலே அசையாநின்ற நெடிய குண்டலத்தையுடையவனே! உறங்காநின்ற சீரங்கமான ஊரையுடையவனே! மறைத்த ஆசையை வார்த்தையாலே சொல்லேன் பெண்கள் முன்னே என்றவாறு. சீரங்கத் தாமா மடவாரெதிரே நான் கரந்த காதலை வாக்கிற் சொல்லேனனெ முடிக்கத் தனித்துச் சொன்னேன், பெண்கள்முன் குறிப்பாற் சொல்வேன்; நீ யறிந்து கூடவேண்டு மென்பது குறிப்பு வாரிசுட்டது இராமாயணம். 59

வாராக வாமன னேயரங் காவட்ட நேமிவல
வாராக வாநின் வடிவுகண் டான்மன் மதனுமட
வாராக வாதரஞ் செய்வனென் றுலுய்யும் வண்ணமெங்கே
வாராக வாச முலையேனைப் போலுள்ள மாதருக்கே.

இதன் பொருள் :

"வாராக வாமனனே"—என்பது, பன்றியானவனே! குறளானவனே! சீரங்கத்தையுடையவனே! வட்டவடிவான சக்கரப் போரில் வல்லாண்மையுடையவனே! இராமனானவனே! உன்னுடைய அழகைப் பார்த்தால் மன்மதனும் பெண்களாக வாஞ்சிப்பானென்று புராணம் சொல்லினல் பிழைக்கும்படி எப்படி? கச்சுடனே மார்பிலான மணத்தையுடைய முலையுடைய என்னைப் போலுள்ள பெண்களுக்கு என்றவாறு. அரங்கா! நின் வடிவு கண்டால், மன்மதனும் மடவாராக எண்ணுவனென்றால் மாதருக்கு உய்யும் வண்ணமெங்கே என முடிக்க. நீ புணர்ந்தா லுய்யலா மென்பது குறிப்பு. மன் மதனும் என்ற உம்மை பிறருமாம். ஒருவன் பலராதல் ஏழு பருவ மாதரை குறித்தது. வராகம்; வாராகமாக நீட்டல். 60

மாதம்பத் துக்கொங் கையுமல்குற் றேரும் வயிறுமுலை
மாதம்பத் துக்குறி யுங்கண்டி லேம்வந்து தோன்றினைபூ
மாதம்பத் துக்கெதிர் மார்பா வரங்கத்து வாழ்பரந்தா
மாதம்பத் துக்கருத் தில்லார் பிறப்பென்பர் வையகத்தே.

இதன் பொருள்:

மாதம்பத்துக் கோங்கையும் — என்பது, பெரிய தூணிலே முலையுஞ் சகலமான வயிறுமில்லை, மாதம் பத்தினுலான அடையாளமுங் கண்டோமில்லை; புகுந்து புறப்பட்டனை, பெரிய பிராட்டியார் அழகிய ஒழுக்கத்துக் கேற்ற மார்பையுடையவனே! சீரங்கத்திலே இன்பமான பரமபதத்தை யுடையவனே! தங்கள் வழிபாடான நினைவு இல்லாதவன் செனனமென்று சொல்லுவர் பூமியிலே என்றவாறு. பரந்தாமா! இல்லைக் கண்டிலேம், தோன்றினை, இல்லார் வையகத்தே பிறப்பு என்பார் என முடிக்க. பிறக்குந் தொழிலில்லா திருக்கவும் அறியாதார் பிறப்பென்பர். அறிவார் அவ்வாறு கூறாரென்பது குறிப்பு. அடையாளம், அவள் வயிறு வீங்கல், மண் தின்றல், முலைக்கண் கறுத்தல் முதலாயின வென்க. 61

வைகுந்தம் போருகம் பொற்பாதர் நாகத்து மாதர்புடை
வைகுந்த மேற்கொண் டிருந்தார் வடிவைந்து வாழுமிடம்
வைகுந்தம் பாற்கடன் மாநீ ரயோத்திவண் பூந்துவரை
வைகுந்த மன்பர் மனஞ்சீ ரரங்கம் வடமலையே.

இதன் பொருள்:

வைகுந்தம் போருகம்—என்பது, வைத்த குந்தின தாமரைப் பூப்போலும் பொலிவையுடைய திருவடிகளை யுடையார்; பாம்பின் மேலே பெண்களுடைய சிலையைக் குருந்தமரத்து மேலாகக் கொண்டிருந்தவர்; திருமேனி ஐந்துவகையாய் இன்பமாமிடம் பரமபதமும் திருபாற்கடலும் பெரிய செல்வம் பொருந்தின அயோத்தியுடனே வளமையும் பொலிவுமான துவாரகையும் தங்கும் தம்முடைய பத்த ரிதயமும் சீரங்கத்துடனே திருவேங்கடமலையுமாம் என்றவாறு. நாகத்து வைகுந்தம்போருகப் பொற்பாதா என மாறுக. ஏனைய செவ்வு. வடிவு ஐந்தாவன; பரம், விபவம், வியூகம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என ஆம். பரம்: பரமபதம்; பாற்கடல்: வியூகம்; விபவம்: இராம கிருஷ்ணவதாரம், மனம்: அந்தர்யாமி; ஏனைய அர்ச்சாவதாரம். 62

வடமலை தென்மலை கச்சி குறுங்குடி மானிற்பதும்
வடமலை வேலை யரங்கங் குடந்தை வளருமிடம்
வடமலை கொங்கைத் திருவோ டிருப்புவை குந்தங்கர
வடமலை யன்ப ருளநடை யாட்ட மறையந்தமே.

இதன் பொருள் :

வடமலை தென்மலை—என்பது, திருவேங்கடமுஞ் சோலை மலையும் காஞ்சீபுரமும் திருக்குறுங்குடியும் பெருமாள் நிலையாம். ஆறுத திரையையுடைய பாற்கடலும் சீரங்கமுந் திருக்குடந்தையும் உறங்குமிடம். மணிவட மணியாநின்ற தனத்தையுடைய பெரியபிராட்டியாருட னிருப்பது பரமபதம்; களவை யலைக்கப்பட்ட பத்தருக்குடைய இதயம் நடப்பது ; ஆடுவது வேதாந்தம் என்றவாறு. மால் நிற்பது வடமலை தென்மலை கச்சி குறுங்குடி; மால் வளருமிடம், வடமலை வேலை அரங்கம் குடந்தை; மால் இருப்பு வைகுந்தம்; மால்நடை யுளம்; மாலாட்டம் மறையந்தமென முடிக்க. மால் என்பது இடைநிலைத் தீபகம் ஆக்குக. நிற்பாய் இருப்பாய் கிடப்பாய் என மாறுக. இம்மூன்று விதத்திற்கும் தலம் வேறு முளவாயினும் சிறந்தன எடுத்தார். சிறப்புடைய பொருளைத் தானெடுத்து உரைத்தல் என்பது உத்தி; தொடர்நிலைச் செய்யுட்குப் பிறருங் கொண்டார். பல தலமும் இதனுட் கூறினும் அரங்கத்தை யுடையார்க்கே கொள்வது முன்பின் வெகுவான பாட்டுக்களாலே துணிதலாம். 63

அந்தக ராசலம் வந்தா லுனையழை யாதிருப்பா
ரந்தக ராசலங் காபுரி யாரரங் காமறையின்
அந்தக ராசலங் கூக்குர லோயுமுன் னாழ்தடங்க
லந்தக ராசலத் தேதுஞ்ச னேமி யறுக்கக்கண்டே.

இதன் பொருள் :

அந்தக ராசலம்—என்பது, குருடர் துன்பம் வந்தால் உன்னைக் கூப்பிடா திருப்பர்; இயமன் போல்பவனே ! இலங்கையிராக்கதர்க்கு எசமானத்துவத்தோடு சீரங்கத்தையுடையவனே! வேதத்தி னுபனிடத மானவனே ! கைமலை போலும் யானை கூப்பிட்ட ஓசையடங்குமுன் ஆழமான வாவியிற் பொருந்தின முதலை தண்ணீருள்ளே சாகச் சக்கரம் அறுப்பது[ம்] அறிந்தும் என்றவாறு. அரங்கா! அந்தகர் கராசலங்

கூக்குர லோயுமுன் கராத்துஞ்ச நேமி அறுக்கக் கண்டும். ஆசலம் வந்தா னுனை யழையாதிருப்பரென முடிக்க. கண்டுங் காணுதாராய் அழையாதாரைக் குருடரென்றார். அழைப்பாரே கண்ணால் வரும் பயனுடையார் என்பது குறிப்பு. உலகராதார மொழி முதலாக்கினது பெருவழக்கு. கராசலத்தே ஒற்று மிகாமை வடநூன் முடிபு. லங்காபுரிக் கந்தமென மாறுக. 64

அறுகுத லைப்பெய் பனிபோன்ற தாதுரு வாய்ப்பிறந்த
லறுகுத லைப்பிள்ளை யாய்க்காளை யாய்க்கிழ மாகியைய
ளறுகுத லைச்செய்து வீழ்காய் நானென்னு மாசையினை
யறுகுத லைக்கொள் பணியரங் காநின்க ணுசைதந்தே.

இதன் பொருள்:

அறுகுத லைப்பெய்—என்பது, சிறுபுல்லு தன்னிடத்திற் கொண்ட பனிநீர் போலும் இந்திரிய முறுப்பாகிச் சனித்துக் கூப்பிடப்பட்ட மழலை வார்த்தையுடைய சிறு பாலகனாகி, இளமைப் பருவமாகி, காளைப் பருவமாகி, மூப்பாகிச் சேத்தும மான சேறு சிந்துதலைப் பொருந்திக் கீழ்கிடக்குஞ் சரீரத்தை நானென்று நினைக்கப்பட்ட ஆசையை யறுப்பாயாக, பூமியிலே முடியிலே கொண்ட பாம்பையுடைய சீரங்கத்தையுடையவனே! உன்னிடத்திலே, அபேட்சையைத் தந்து என்றவாறு. அரங்கா நின்கணுசை எனக்குத் தந்து, தாதுருவாய்ப் பிள்ளையாய்க் கிழமாய்ச் செய்து வீழ்காய், நானென்னு மாசையை யறு என முடிக்க. குதலைகொள் பணியரங்கா என்றவிடத்து ஒற்று மிகாமை வடமொழி முடிபு. " நவ பெரும் புவன " மென்றார் பிறரும். 65

ஆசுக விக்கு நிகரெனக் கில்லையென் றற்பனைப்பூ
வாசுக விக்குவில் வேள்வடி வடிவாவறி வாலகத்தி
யாசுக விக்கு வலையமன் ஞவென் றரற்றியிரந்
தாசுக விக்கும் புலவீர் புகழ்மி னரங்கனையே.

இதன் பொருள்:

ஆசு கவிக்கு—என்பது, விரைந்து பாடும் படிக்கு ஒப்பு எனக்கு இல்லையென்று சொல்லிச் சிறியவனைப் புஷ்ப பாண

மும் கருப்பு வில்லையுமுடைய மன்மதனைப் போலும் அழகை யுடையவனே! ஞானத்தினாலே அகத்தியனே! சௌக்யத்தை யுடையவனே! இந்த பூமிக்கு அரசனே! என்று பலகால் கூப் பிட்டு யாசகம் பண்ணிக் குற்றத்தை மூடிக்கொள்ளும் புலவர் காள்! துதிப்பீராக, சீரங்கத்தையுடையானை என்றவாறு. புல வீர்! அரங்கனைப் புகழ்மினென முடிக்க. அரங்கனைப் புகழ்ந்தார் பாவமுட்படாதென்பது குறிப்பு. அற்பனை யென்று ஒரு மையே பாடம். அற்பரையென்றால் ஆசுக வடிவா அகத்தியர் மன்னா என்ற ஒருமைக்குப் பொருந்தாதென்க. ஒருவனிடத் துக் கொடை வேண்டியே பின் ஒருவன் கொடை வேண்டு தலு மறிக. 66

கனகவி மானம் மற்றீனர்க் குரைக்கிலங் கால்பெற்றவர்
கனகவி மானக் கருடப்புள் ளூர்தியைக் கான்மலர்கோ
கனகவி மானம் புவிமான் றடவரக் கண்வளருங்
கனகவி மானத் தரங்கனை நாச்சொல்லக் கற்றபின்னே.

இதன் பொருள் :

கனகவி மானம்—என்பது, பெரியபாட்டுக்களை இலச்சை கெட் டுத் தாழ்ந்தவர்க்குச் சொல்கிலோம். வாயுப் பெற்ற வாகன மான குரங்கையுங் கருடனை பறவை வாகனத்தையு முடை யானைப் பாதமான(ப்) பூவைத் தாமரை பூவிற் பெண்ணான பெரிய பிராட்டியாரும் பூமி பிராட்டியாரும் பிடிப்பக் கண்ணு றங்கா நின்ற சொர்னமயமான விமானத்தையும் சீரங்கத் தையுமுடையானை வாக்கினாலே சொல்லப் பயின்றபின் என்ற வாறு. நாங்கள் விமானத் தரங்கனைக் கற்றபின் உரைக்கிலம் என முடிக்க. நாங்கள் என வருவிக்க. நான் சொல்லவென் றும் பாடமாயின் உரைக்கிலேன் என்க. இதற்குப் புலவீர் என வருவிக்க. வீ என்பது வி எனக் குறுகிற்று; தந்து புணர்ந்துரைத்தலான உத்தியாம், "அறத்தா றிதுவென....... ஊர்ந்தானிடைக் காணப்படும்" (குறள்: அறம்) என்று முற் பாட்டினின்றது கூட்டலின். 67

கற்றின மாயவை காளையர் வான்கண்டு மீணினைவ
கற்றின மாயமு நீகேன்று காளைய ராயப்பல்ப
கற்றின மாயர் பரிபுறச் சேரி கலந்தமையுங்
கற்றின மாயவொண் ணுதரங் காசெங் கமலற்குமே.

இதன் பொருள்:

கற்றின மாயவை—என்பது, பசுக்கூட்ட மானவைகளும் குமாரர்களும் தேவலோகத்தைப் பார்த்து மீண்ட நினைவைத் தீர்த்த மறைவு நீ யந்தக் கன்றுகளும் குமாரருமாகி அநேக நாள் தினந் தினமும் இடையர் அன்புபண்ண இடைக் குடியிற் பொருந்தினதும் படித்து இனிமேலும் விசாரிக்கக் கூடாது, சீரங்கத்தை யுடையவனே! பிரமனுக்கும் என்ற வாறு, அரங்கா, நினைவகத்தின் மாயமும் சேரிகலந்தமையும் செங்கமலற்கு மாய வொண்ணாது என முடிக்க. நீயே அறி வித்தால் அறியலாம் என்பது குறிப்பு. "கற்றின மேய்த் தை" என்பது திருமாலை. 68

கமலங் குவளை மடவார் தனங்கண்க ளென்றுரைத்த
கமலங் குவளை முதுகா கியுங்கரை வீர்புனற்கா
கமலங் குவளை விளையாட் டரங்கன்மின் காற்றுக்கனல்
கமலங் குவளை ரெண்டரா யுய்மின் காமமற்றே.

இதன் பொருள்:

கமலங் குவளை—என்பது, தாமரைப் பூவுங் பெண்களுடைய முலையுங் கண்ணுமென்று சொல்லி மனமயங்கா நின்ற கூனு முதுகாகியுங் கரைவீர்! உருகுவீர்! நீரிலே காக்கையும், மலங்கு என்னும் மீனுஞ் சங்கும் மகிழ்ச்சியுடன் சஞ்சரியா நின்ற சீரங்கத்தையுடையான்; மினனையுங் காற்றையுந் தீயையும் நீரையும் பூமியையும் தயிரையும் உண்டவனுடைய பத்தராய்ப் பிழைப்பீராக, ஆசையைவிட் டென்றவாறு. கரைவீர், அரங்கன் றெண்டராய்க் காமமற் றுய்மின் எனமுடிக்க. மட வார் தனங் கமலம், மடவார்கண் குவளை யெனக் கூட்டுக; நீர் நிறையை சிற்றின்பத்தா லுய்யீர்; இவன் பேரின்பங் கொடுப்பான் என்பது குறிப்பு.

மின்னுதியுடன உலகும் முழுதுமுண்டதும் தயிருண்டதும் பாகவதம். 69

காமனத் தால்வீழ் வூதியக் காவைக் கவரரங்கன்
காமனத் தாவென்று நைவார்க் கமுதங்கன் னெஞ்சர்க்கிரங்
காமனத் தானனக் குங்கடம் பாசலம் போன்றதுமீ
காமனத் தாமரை யோன்கங்கை பாய்மரங் கான்மலரே.

இதன் பொருள் :

காமனத் தால்வீழ—என்பது, கற்பகத் தருவையுடைய........ அரசனான இந்திரன், சங்கத்தொனியால், வீழக் குதித்து, அந்தக் கற்பகத் தருவைக்கொண்ட சீரங்கத்தை யுடையான்; மன்மதனுக்குப் பிதாவே! என்று உருகு மனத்தை யுடையார்க்கு இனிக்கப்பட்டவன்; வலிய மனத்தை யுடையார்க்கு இளகாத் திருவுள்ளத்தான்; அளவாநின்ற சமுத்திரஞ் சூழ்ந்த பூமி தோணி போன்றது; தோணி விடுவான் அந்தத் தாமரை மேலான பிரமன்; கங்கைநதி பாய்மரம்; திருவடிகளான பூ என்றவாறு. பார், கலம் போன்றது; தாமரையோன் மீகாமன் போன்றான்; கங்கை பாய் போன்றது; கான்மலர் பாய்மரம் போன்றது எனக் கூட்டுக. ஒருவயிற் போலி; எழுவாய் பயனிலையு மிது; எண்டிக்கு ளுலக மடங்கிற்று என்பது குறிப்பு. 70

மலருந்தி மேல்விழ மெநெரித் தான்வைய மேழுந்துஞ்சா
மலருந்தி னுனரங் கன்குற ளாய்மண் ணளந்தவன்னுண்
மலருந்தி வாக்கதிர் வண்குடை யாய்முடி மாமணியாய்
மலருந்தி யாய்த்திருத் தாள்விர லாழி மணியொத்ததே.

இதன் பொருள் :

மலருந்தி மேல்விழ—என்பது, மல்லுப்பிடிப்பார் எதிரே தாவி மேல்விழச் சரீரத்தை நெரித்தவன்; உலகமேழும் இறவாமலுண்டவன்; சீரங்கத்தை யுடையவன்; வாமனவதாரமாகிப் பூமியை அளந்த அந்த நாளையிலே விரியநின்ற பகலொளியான சூரியன் வண்மையுடைய குடையாய் முடியிற் பெரிய மணியாய்ப் பூவாய்க் கொப்பூழில் சீபாத விரலின் மோதிரத்தின் மணியை ஒத்ததென்றவாறு. உந்தி மலராய் என மாறுக. எழுவாய் பயனிலை செவ்வு. 71

மணிவா சற்றூங்க வொருகுடை கீழ்வையங் காத்துச்சிந்தா
மணிவா சவனென வாழ்ந்திருப் பார்பின்னை மாதிருக்கும்
மணிவா சமார்பரங் காகேச வாவென் றுவாழ்த்தித்திரு
மணிவா சகங்கொண் டணிவா ரடியை வணங்கினரே.

இதன் பொருள்:

மணிவாசற் றூங்க—என்பது, ஆராய்ச்சி மணி வாசலிலே தூங்க, ஒற்றைக் குடைக்கீழ் பூமியுள்ளாரைக் காத்து, சிந்தா மணியைப் போலவும் இந்திரனைப் போலவும் இன்பமாக விருப்பவர் பின்னைப் பெண்ணான இலக்குமியிருக்குங் கவுத்துவ மணி நீங்காத மார்பையுடையவனே! கேசவனே! யென்று புகழ்ந்து, திருமண்ணை இந்த வார்த்தையான் கேசவமந்திரத்தா லிடுவாராகின் பாகவதரைப் பணிந்தவரென்றவாறு. இருப்போரணி வாரடியை வணங்கினரென முடிக்க. அவ்வரசர் பெருமையினும் பாகவதர் பெருமையே பெருமை என்பது குறிப்பு. நால்வகை, எட்டுவகை, பன்னிரண்டு வகை, பதி மூன்று வகையானது எதுக்கும் முதலாதலில் கேசவாவென்று திருமண் அணிவாரென்றார். இராமானுச மனிதனு ளடங்கும்.? 72

வணங்கரி யானரங் கனடி யார்தொழ வானரவு
வணங்கரி யாடற் பரிதேர் நடத்தெந்தை வானவர்க்கும்
வணங்கரி யானன் றிக் காப்பாரில் லாமைவிண் மண்ணறியும்
வணங்கரி யானவர் வாணன்கண் டாகன் மார்க்கண்டனே.

இதன் பொருள்:

வணங்கரி யான்—என்பது, நிறங் கறுப்பானவன், சீரங் கத்தை யுடையான், பத்தர் சேவிக்க ஒளியுடைய பாம்பையும் கருடனையும் ஆனையையுங் குதிரையையுந் தேரையும் ஏறியுலா வும் என்னுடைய அப்பன் போன்றவன், தேவர்க்கும் பணியக் கிடையாதவன் அல்லாமல் காக்கிறவ ரில்லாதது தேவரு மானி டரு மறியும்படி சா(க்கி) [ட்சி] ஆன வாணசுரனுங் கண்டா கன்னனும் மார்க்கண்டனு மென்றவாறு. எழுவாய் பயனிலை செவ்வு. கரி ஆதற்கு ஏது, வாணன் கைகளை அறுக்கச் சிவனிரந்ததா லிரண்டு கை விட்டதும், கண்டாகன்னன் சிவனால் முத்திபெறாது கிருஷ்ண சுவாமியாற் பெற்றதும் மார்க்கண்டன் மாபிரளையத்திற் பெருமாளையே கண்டதும். 73

கண்டலங் காரள கங்கெண்டை மேகங் கவரிதழ்சொற்
கண்டலங் கார முலையிள நீரென்று கன்னியர்சீர்
கண்டலங் கார மருளேன் புனற்கயல் கொக்கென்றஞ்சக்
கண்டலங் கார மலரரங் கேசர்க்குக் காதலனே.

இதன் பொருள்:

கண்டலங் காரளகம்—என்பது, கண்ணாகிய இடமும் கரிய குழலுங் கெண்டை மீனும் மேகமும் முருக்கம்பூ உதடு வார்த்தை சருக்கரை யிலங்கா நின்ற பதக்கத்தையுடைய முலை இளநீரென எண்ணிப் பெண்களுடைய சிறப்புப் பார்த்து சிங்காரத்தான் மயங்கேன்; சலத்துக்கு அயலான மீன், கொக்கென்று பயப்பட தாமரை நிரம்ப மலராநின்ற சீரங்கத் துச் சுவாமியிடத்து அன்புடையேன் என்றவாறு. நான் மயங்கேன்; காதலனென்ன முடிக்க. இவனை வாஞ்சித் தால் மாதர் மயக்கத்திரு மென்பது குறிப்பு. கெண்டை காரளகம் என நிரனிறை என்க. 74

காதலை வாரிமண் வெண்கோட்டில்வைத்துண் கொட்டியரங் காதலை வார்கழற் குள்ளாக்கி னய்கரந் தெங்குநின்முன் காதலை வார்குழை வைதே கியைநின் கருத்துருக்குங் காதலை வானரர்த் தேடவிட் டாயிது கைதவமே.

இதன் பொருள்:

காதலை வாரிமண்—என்பது, சீறு நின்ற திரை நீரான கடல் சூழ்ந்த பூமியை வெள்ளைக் கொம்பிலே வைத்தும் உண் டும் உமிழ்ந்த சீரங்கத்தை யுடையவனே! முந்தின நீண்ட பாதத்துள்ளே ஆகம் பண்ணினை; ஒளித்த தெல்லாவிடமும் உன் முன்னுகை காதிலே அசையா நின்ற நெடிய குண்டலத்தை யுடைய சீதா தேவியை உனது மனத்தை நெகிழப்பண்ணு மன்பு போல்வாளை குரங்குகள் தேட விட்டாய்; இது வஞ் சகமே யென்றவாறு. அரங்கா, முன் பூமியை வைத்துண்டு காட்டி ஆக்கினை, பின் எங்குங் கரந்து வானரந் தேட விட் டாய், இது கைதவம்; என முடிக்க. உன்னுருவில் ஒடுங்கு வாளைத் தேட விட்டது பிறருன்னைப் பரனென்று அறியாது வஞ்சித்தாய் என்பது குறிப்பு. 75

தவராக வக்கணை யொன்றுற்க டற்றெய்வந் தானென்றிருந் தவராகந் தீர்த்துக் தொழக்கண்ட நீதரை மேற்கிடந்து தவராகப் பாவித்தென் னேதொழு தாய்தண் ணரங்கத்துமா தவராக வாகண்ண னேயெண்ணெ ணுவவ தாரத்தனே.

இதன் பொருள்:

தவராக வக்கணி—என்பது, வில்லுப் போர்க்கு ஆன, அம்பு ஒன்றினாலே வருணன் தெய்வமா வெண்ணான், தானென்று தங்கின ஆசையை விட்டு வணங்கும்படிச் செய்த நீ பூமி மேலே கிடந்து தவறாகப் பாவனை பண்ணியேதோ வணங்கினாய்; குளிர்ந்த சீரங்கத்துப் பெருமானே! இராமபத்திரனே! கோபாலனே! அளவில்லாத பிறப்பை யுடையவனே! என்றவாறு. அரங்கா! கடல், பின்பு தொழக்கண்ட நீ அதனைத் தொழுதென முடிக்க. ஒருகால் மானிட பாவனை. ஒருகால் பரத்துவ பாவனையும் பண்ணினை யென்பதும் நீ நினைத்ததே நினைவும் என்பதுங் குறிப்பு. 76

தாரா கணமண் ணளந்தவர் நாளென்பர் சாத்துந்துழாய்த்
தாரா கணம்புயம் போலரங் காதல மேழுக்குமா
தாரா கணமங்கை யாயும்பர் தூவிய தண்மலர்வீழ்
தாரா கணமுநில் லாவாற்றிற் சூழணை தானொக்குமே.

இதன் பொருள்:

தாரா கணமண்—என்பது, நட்சத்திரத்தை யுடைய தேவலோகத்தையும் பூலோகத்தையும் அளந்த முற்காலத்திலே அன்பரா லணியாநின்ற துளப மாலையை யுடையவனே! கண்கள்தாம் பூப் போன்றவனான சீரங்கத்தை யுடையானே! பூமி ஏழுக்குந் தரிப்பானவனே! கண்ணமங்கை யென்னுந் திருப்பதி யுடையவனே! தேவர் சொரிந்த குளிர்ந்த பூக்கள் விழுதலைச் செய்யாது, சிறுபோது நில்லாது, நிலையாது, ஆற்றிலே சுழன்றுவரும் அணைகளைத் தான் ஒத்ததென்றவாறு. அரங்கா! நீயளந்த நாள் உம்பர் மலர் அணை ஒக்குமென முடிக்க. தாராகணத்தை யுடைய விண்ணைத் தாராகணமென்றது ஆகுபெயர். சினையைக் கூறிய முதலறி கிளவி. ஓடு நீரில் கட்டின அணை சுழல்வது போலும் என உவமம். 77

தானந் தியாகந் தவங்கல்வி வேள்வித் தழலிலவித்
தானந் தியாகந் தருமிழி வாயின தண்ணரங்கத்
தானந் தியாகப் பகல்மறைத் தான்பெயர் தந்திடும்வே
தானந் தியாகண் டலனறி யாப்பரந் தாமத்தையே.

இதன் பொருள் :

தானந் தியாகம்—என்பது, புண்ணியக் கொடையும், புகழ்க் கொடையும், தெய்வத்தை வெளிப்படுத்தும் விரதமும், ஞானமும், தேவரை அக்கினி முகத்தால் ஊட்டுவதும், தாங்கள் கெட்டுச் சரீரத்தாலே தாழ்ச்சியைக் கொடுக்கும்; குளிர்ந்த சீரங்கத்தான், மாலைக் காலமாகச் சூரியனை மறைத்தவன் திருநாமங் கொடுக்கும் பிரமனுஞ் சிவனும் இந்திரனும் அறியாத பரமபதத்தை யென்றவாறு. தானந் தியாகந் தருமிழி பாயின, அரங்கன் பெயர் தந்திடும் பரந்தாமத்தை என முடிக்க. எல்லா அறத்தினுந் திருநாம சங்கீர்த்தனம் முக்கிய மென்பது குறிப்பு. மூன்றாமடியுள், அந்திதான் பகலாக, அப் பகலை மறைத்தவனென்று மாறுக. தான் என்பது அசை மொழியுமாம். 78

தாமரை மாத்திரை மூப்பற்ற வானவர் தாமரையாள்
தாமரை மாத்திரை வந்தாள் கணவரைத் தண்ணரங்கத்
தாமரை மாத்திரை போல்வளைந் தேற்றுத் தருப்பொருட்டால்
தாமரை மாத்திரைக் கேசங்கி னோசையிற் சாய்ந்தனரே.

இதன் பொருள் :

தாமரை மாத்திரை—என்பது, ஒளியுடையவர், சென்மா வான வெப்பமான திரையென்னு நோயான், கிழம் இல்லாத தேவர்கள், தாமரைப் பூவிலுள்ளாள்; தாது மலைக்கப் பட்ட செல்வம் பொருந்தின அலையிலே பிறந்தவளான மாவிலக்கு மிக்கு நாயகரைக், குளிர்ந்த சீரங்கமான ஊரையுடைய வரைப், பெரிய திரைச்சீலைப் போலச்சுற்றி எதிர்த்து, கற்பக விருக்கத்தின் காரணமாகத் தாங்கள் பாதி நொடிப் பொழு திலே சங்கத் தொனியாலே ஓடினரென்றவாறு. மூப்பற்ற வானவர், தருப்பொருட்டால் தாமரை யொத்துச் சாய்ந்தன ரென முடிக்க. அகப்பட்டானைப் பிறருக்குக் காட்டாமைக்குப் பெரிய திரைச் சீலை உவமை கூறினர். 79

சாகைக்குந் தத்துத் துகிறாக்கி மாதர் தமைநகைத்தாய்
சாகைக்குந் தத்துவங் கட்குமெட் டாய்தண் புனலரங்கே
சாகைக்குந் தத்துப் புடையாழி யேந்த றமர்கள்வெய்யோர்
சாகைக்குந் தத்துத் தவிர்கைக்கும் போதுமுன் சங்கற்பமே.

இதன் பொருள்:

சாகைக்குந் தத்து—என்பது, கொம்பையுடைய குருந்த மரத்திலே, புடைவையைத் தூக்கிப், பெண்களைச் சிரித்த வனே! வேதப் பக்கங்களாலும், தத்துவங்களாலும் காணப் படாதவரே! குளிர்ந்த நீர் பொருந்தின சீரங்கத்துச் சுவாமி யைக், கையி லெறியிட்டித் தொழிலையுடைய சக்கரத்தை யேந்தாதிருப்பாயாக. தன்னமையானவரும் பகைத்தவரும் மரணமாகவும் பெருந் துன்பம் தீர்வதற்கும் அமையு முன் னுடைய நியமனம் என்றவாறு. அரங்கேச! உன்றமர்கள், வெய்யோர் சாகைக்குந் தத்துத் தவிர்கைக்கும் நின் சங்கற்பம் போதும்; ஆழி ஏந்தல் என முடிக்க. அல்லீறு விலக்குணர்த் தும்: போலும் எனின், சங்கற்பமென்ப தாகாது. இதுவே பாடம். 80

சங்கத் தமரர் குழாத்தொடு மூழ்வினை தாழ்விலங்கச்
சங்கத் தமரன்ப ராயிருப் பீர்கட ருனவர்தே
சங்கத் தமரம் படவெய்த சார்ங்கத்தன் றண்ணரங்கன்
சங்கத் தமரன் சரணே சரணென்று சார்ந்திருமே.

இதன் பொருள்:

சங்கத் தமரர்—என்ப, மிகுந்த தொகையான தேவர் கூட் டத்தோடும் பழைய கருமமான தாழ்வான கட்டு அலையப் பேர்ந்து சனங்களுடைய சினேகிதராயிருப்பீர்! சமுத்திரத்து இராக்கதர் நாடு கூப்பிட, மராமரமானது பட, அம்பு விட்ட சார்ங்கமான வில்லையுடையான்; குளிர்ந்த சீரங்கத்தை யுடையவன்; சங்கநாதம் பண்ணுகிறவருடைய பாதமே மூற் சென்ம பாவம் நீக்குமிடம் என எண்ணிச் சேர்ந்திருப்பீராக என்றவாறு. உலகீர்! ஊழ்வினைத் தாழ்விலங்க, சங்கச் சங்கத் தமரர் குழாத்தொடுந் தமரன்பரா யிருப்பீர ரங்கத்தம்மான் சரணே சரணென்று சார்ந்திருமென்று முடிக்க. சங்கம்— நாயகனையுடைய சபையெனப் பொருள் கூறினுமாம். அமர ராவார்—நித்திய சூரியர்; அது "அயர்வறு மமரர்க ளதிபதி" (திருவாய்மொழி) என்றதனு லறிக. 81

இருந்தே னுகமுட வன்வரை நோக்கி யிருப்பதுபோல்
இருந்தே னுகந்துனை வைகுந்த நோக்கி யெதிர்பொருங்கே
ளிருந்தே னுகனும் படவதைத் தாய்வெண்ணெ யில்விலொளித்
திருந்தே நுகரரங் காவாளு நாளினி யென்றருளே.

இதன் பொருள் :

இருந் தேனுக முடவன்—என்பது, பெரிய தேன் சிந்தக் காலில்லாதவன் மலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறது போல, இருந்தே னுயர்ந்த வுன்னைப் பரமபதத்தோடும் பார்த்து ; முன்னுகப் பொரப்பட்ட பந்துக்களும் தேனுகன் என்னும் அசுரனும் படக்கொன்றவனே! வெண்ணெயை வீட்டுள்ளே மறைந்து உண்ட சீரங்கத்தையுடையவனே! அடிமையாகப் பண்ணும் போது எப்போது கிருபை பண்ணுவாய் என்றவாறு. அரங்கா! முடவன் இருந் தேனுக நோக்கி இருப்பது போல, உன்னை வைகுண்டம் நோக்கி யிருந்தேன் ; என்னை யாளு நாளினி யென்று அருள் என்று முடிக்க. இந்நாள் எனக் கூறினும் திடமாவேன் என்பது குறிப்பு. ஏனைச்சொல் வரும். 82

அரும்பாக வதரிக் கும்பெய ராய்புள் ளரசினிற்கோர்
அரும்பாக வதரந் துப்பனை யாயரங் காவெனவுண்
அரும்பாக வதர்பத தீர்த்தங் கொள்ளா ரடிகள்கொப்புள்
அரும்பாக வதர்தொலைப் பார்கல் லார்கங்கை யாடுதற்கே.

இதன் பொருள் :

அரும்பாக வதரிக்கும்—என்பது, அரிய சர்க்கரைக் குழம்பு பிறக்குந் திருநாமத்தையுடையவனே! பறவைக் கரசனை கருடன் மேலே யுயரும் வாகனதிபனே! உதடு பவளம் போன்றவனே! என்று அறியும் விட்டுணு பத்தருடைய சீபாதத்துப் பட்ட நல்ல சலத்தை உண்ணுர், காலிலே புண் புடைப்புண்டாக வழியை நடந்து தீர்ப்பர் ; படியாதவர் கங்காநதியில் மூழ்குதற்கு என்றவாறு. கல்லார், பாகவதர் பததீர்த்தங் கொள்ளார், கங்கை யாடுதற்கு அதர் தொலைப் பார் என முடிக்க. கற்றுர் பாகவதர் பத தீர்த்தங் கொள்வர் ; தொலையார் என்பது அருத்தாபத்தி. பகவத் பாததீர்த்தத் திலும் பாகவதர் பாத தீர்த்தம் அதிக மென்பது குறிப்பு. 83

ஆடுமுன் னீர்முதற் றீர்த்தத்தி னுலரு மாதவத்தால்
ஆடுமுன் னீர்மறை வேள்வியி னுலண்ட ராமுடனு
மாடுமுன் னீரது மாயையி னுலென் னரங்கனைக்கொண்
டாடுமுன் னீர்செய்த பாவமும் போய்முத்த ராம்வண்ணமே.

இதன் பொருள்:

ஆடுமுன் னீர்முதல்—என்பது, முழுகப்பட்ட சமுத்திர முதலான தீர்த்தங்களாலும் அரிய பெரிய தவங்களாலும் கிடாயை எதிரா யறுக்கப்பட்ட வேதங்கள் சொன்ன வேள்வி களாலும் தேவராஞ் சரீரமும் அலையும் நினையீர், அந்த வலைவை மாயையினுலே எம்முடைய சீரங்கத்தை யுடையானைத் துதிப்பீராக, முற்காலத்திலே நீங்கள் செய்த பொல்லாத கருமமுந் தீர்ந்து முத்தி பெறுவீராம்படி யென்றவாறு. உலகீர்! தீர்த்தத்தினுல் தவத்தால் வேள்வியா லுடலு மாவேது முன்னீர் மாயையால் கொண்டாடும் வண்ணம் என முடிக்க. இது கெடாத பேறுதரும் என்பது குறிப்பு. 84

வண்ணங் கலிவஞ்சி வெண்பா வகவல் வகைதொடுத்தோர்
வண்ணங் கலிகெட வேண்டுமென் றேமக்கண் மாட்டுரையேன்
வண்ணங் கலிகடல் போல்வா னரங்கன் வகுளச்செல்வன்
வண்ணங் கலியன் புகழ்தாளெ னக்கென்று மாநிதியே.

இதன் பொருள்:

வண்ணங் கலிவஞ்சி—என்பது, சந்தப் பாட்டுங் கலிப்பா வும் வஞ்சிப்பாவும் வெண்பாவும் ஆசிரியப் பாவுமான விகற்பங் களைக் கூட்டி, ஒருவிதமாகத் தரித்திரந் தீர்க்கத்தகும் என்று நினைத்து, மானிடர் பக்கத்திலே சொல்லேன். நிறமொலிக் குஞ் சமுத்திரம் போல்பவன், சீரங்கத்தையுடையவனுடைய மகிழமாலையும் பாக்கியமுமுடைய நம்மாழ்வாருங், கொடையு டைய நம்முடைய திருமங்கை யாழ்வாரும் புகழ்ந்த திருவடிக ளெனக்கு எப்போதும் பேர்பெரிய திரவிய மென்றவாறு. நான் தொடுத்து வேண்டும் என்றுரையேன், புகழ்தா ளெனக்கு மாநிதியாம் என முடிக்க. அரங்கன் றன் புகழ் தாள் எனக்கூட்டுக. துய்க்கும் பொருளையுந் தந்து, தானுங் குறையாமையால் மாநிதி யென்ருர். 85

மானு கவரு நிருதன்புன் மாயையின் மங்கையென்னும்
மானு கவரு மணியைமுன் நீங்கினன் மாயனென்பார்
மானு கவரும் பலர்சோலை சூழு மதிலரங்கா
மானு கவரு மமுதே யதுவுநின் மாயமன்றே.

இதன் பொருள் :

மானாக வருநிதி—என்பது, மானென்னும் மிருகமாக வந்த இராக்கதனான மாரீசனுடைய அற்ப வஞ்சனையினாலே பெண்ணென்று சொல்லப்பட்ட பெரிய பாம்பீன்ற மணி போல்வாளை முற்காலத்தே பிரிந்தான் பெருமானென்று சொல்வார்; மாமரத்துடனே புன்னை யரும்பாநின்ற பூவிரிந்த சோலை சூழ்ந்த மதிலையுடைய சீரங்கத்து விமானத்தை யுடையவனே ! அங்கீகரிக்கு மமுது போல்பவனே ! அந்தச் செயலும் நின்னுடைய மயக்கம் என்றவாறு. அரங்கா ! உலகா ! மாயன் மணியை முன் நீங்கினனென்பர் ; அதுவும் நின்மாயம் என முடிக்க. உம்மையால் நீங்கினதும் மாயமேயாம் என்பது குறிப்பு. 86

மாயா தவர்தலை வாவரங் காவட மாமதுரை
மாயா தவரண்டர் வந்தடைந் தால்மழு வாளிபிர
மாயா தவர்செய்வர் செந்நூன்முந் நூல்கொண்ட வண்ணமொப்ப
மாயா தவரத் தனைக்குடர்க் கோத்ததுன் வாணகமே.

இதன் பொருள் :

மாயா தவர்தலைவா—என்பது, பெருமை பொருந்தின யாதவ இராசாக்களுக்கு எசமானனே ! சீரங்கத்தானே ! வடதிசையிலுள்ள பெரிய மதுரையை யுடைய பெருமானே ! இருடிகளுந் தேவருஞ் சென்று, சரணம் புகுந்தால் சிவனும் பிரமனும் ஏது காரியமவர்கள் செய்வார்கள்? சிவந்த நூலை முப்புரிக் கொள்வது போலச் சாகாவரம் பெற்றவனான இரணியனது குடரைக் கோத்துக்கொண்ட துன்னுடைய வெள்ளை நகம் என்றவாறு. மாயா ! மழுவாளி பிரமர் தம்மைத் தவரண்டர் வந்தடைந்தால் அவர் யாது செய்வர் ; உன் வாணகம் வரத்தனைக் குடரைக் கோத்ததென முடிக்க அவரால் வரம் பெற்றது அழிந்தமையால் இனி உபகாரம் வேறே செய்வதில்லை யென்பது குறிப்பு. 87

நகமுண் டகந்தரித் தார்க்கருண் மாயற்கு ஞாலமுந்நீர்
நகமுண் டகமகிழ்ந் தார்க்கடி யோமென் மினற்கதிவா
னகமுண் டகம்பர னென்று லரங்கனை நாடியய
னகமுண் டகமல ர்தான்குவி யாது நடுக்குளத்தே.

இதன் பொருள்:

நகமுண்டகம்—என்பது, சிரிக்க ஏகாகினுந்தியான் தலையை எடுத்தானை சிவனுக்குக் கிருபை பண்ணின பெருமாளுக்குப் பூமியுங் கடலு மலையும் புசித்துள்ளே மகிழ்ச்சியானவர்க்குத் தாசனென்று சொல்லுவீராக. நல்ல செலவான உயர்ந்த உலகமுண்டாம். மனம் பரிக்கப்பட்டவன் நானென்று நினைத்தால் சீரங்கப் பெருமாளை நினைத்துப் பிரமனு டைய நகம் பொருந்தின கையான தாமரைப் பூக் கூம்பாது நடு நெற்றியில் என்றவாறு. உலகீர்! மகிழ்ந்தார்க்கு நாமடியோ மென்மின்; உண்டு நாடி யகம் பரனென்றால் அயன் நகம் முண்டகம் உம்முடைய நடுக்குளத்தில் குவியாது என முடிக்க. குவிதல்—இலாடத்திலே எழுதுதலாம். பிறப்பில்லாமையால் எழுதான். 88

குளப்படி நெய்யடி சிற்கொத்த தோகொள்ளப் பற்றியதோ
குளப்படி யிற்றிங்கள் சேரரங் காகோல மாயவன்றன்
குளப்படி காட்டும் பிறைமருப் போலொரு கோட்டிருந்து
குளப்படி யின்னகத் துட்பரல் போன்ற குவலயமே.

இதன் பொருள்:

குளப்படி நெய்யடிசிற்—என்பது, சருக்கரையொடு நாழி யால் விடு நெய் பொருந்தின அன்னமானதுபோல் இனித் ததோ! உண்ணநிறைந்ததோ! குளத்தின் பூவிற் சந்திரனி ருந்த சீரங்கத்தனே! வராகவதாரம் பண்ணின முற்காலத் திலே நெற்றியி லேறி இறங்கவைத்த இடம் போலும், பாதிச் சந்திரன் மேலே மறுவைப்போலு ஒரு கொம்பின் மேலே யிருந்து கவடுபட்ட காலி னகத்திலே சிறுகல்லுப் போல் ஆன பூமி யென்றவாறு. அரங்கா! மறுப்போலிருந்து பரல் போன்ற குவலயம் ஒத்ததோ, பற்றியதோ என முடிக்க. ஒவ்வாது பற்றுதென்பதே துணிவு. இவ்வாறுண்ட பாவனை யும் விளையாட்டென்பது குறிப்பு. உயிர்களைக் காண்பதே நினைவு என்பதுமாம் குறிப்பு. 89

குவலையஞ் சூழ்கடல் காயா மரகதங் கொண்டனெய்தற்
குவலையங் கண்டன்பர் நைவரென் றூற்கொற்ற வாணற்குவா
குவலைய நேமிதொட் டாயரங் காகொடும் பல்பிறப்பா
குவலையங் கற்றுனைக் காணிலென் னுங்கொல் குறிப்பவர்க்கே.

இதன் பொருள் :

குவலையஞ் சூழ்கடல்—என்பது, பூமியைச் சூழுங் கடலையும் காயாம் பூவையும் மரகதக் கல்லையும் மேகத்தையும் நெய்தல் நிலத்துக் குவளைப் பூவையும் பார்த்துப் பக்தர் உருகுவாரென் பதனால் வெற்றியுடைய வாணாசுரனுக்குத் தோள்களலைய ஆழியை விட்டவனே! சீரங்கத்தனே! கோடி பல் செனன மாலை வலையை அவ்விடத்திலே நீக்கி உன்னைக் கண்டா லெப்படியாமோ நினைவது அவர்க்கென்றவாறு. அரங்கா! அன்பர் கண்டு நைவரென்றால் அவற்று அங்குனைக் காணில் அவர் குறிப்பு என்னுங் கொலென முடிக்க. பிறப்புள் உன் னுருவம் போன்றது கண்டுருகுவார் பிறப்பு நீங்கி, உன்னையே கண்டால் எத்தனை ஆனந்த மாகார்! அது எனக்கும் வேண்டும் என்பது குறிப்பு. 90

குறியானைச் செங்கணெடியானை வானவர் கோவைச்சங்கக்
குறியானை வித்த திருவரங் கேசனைக் கூவிநின்று
குறியானை காத்த வனைப்பாடினேன்கொடி கூப்பிடினும்
குறியானை யப்பவர் போற்கொடி யேன்சொல்லுங் கொள்வனென்றே.

இதன் பொருள் :

குறியானைச் செங்கண்—என்பது, வாமனாவதாரனைச் சிவந்த கண்ணையுடைய திருவிக்கிரமாவதாரனைத் தேவேந்திரனைச் சங்கத்தாலே வருந்தப் பண்ணினவனைக், கூப்பிட்டு, நின் மூதன்மையுடைய ஆனையைக் காத்தவனைக் கவியாற் சொன் னேன்; காக்கை கூப்பிட்டாலுஞ் சகுனமாகையினாலே வருந் தாத உற்றாரைப் போலே பொல்லாத வென்னுடைய வார்த் தையும் அங்கீகரிப்பான் என்று நினைத்தென்றவாறு. நான் அரங்கனைக் கூப்பிடினுங் குறியானையப்பவர் போல் கொடி யேன் சொல்லுங் கொள்வன் என்று பாடினேன் என முடிக்க. கொடி கூப்பிட்டால் இனம் வரும் என்பது குறிப்பு. 91

வனத்துச் சிலம்பி யிடுநூலுட் பட்டு மசகமெய்த்த
வனத்துச் சிலம்பிலா போற்பிணி வாய்ப்பட்டு வாய்புலம்பில்
வனத்துச் சிலம்பின் குரலன்னம் வாழு மரங்கனிப்பின்
வனத்துச் சிலம்பினின் றுன்கேட்கு மோவும்பர் வாழ்த்தைவிட்டே.

இதன் பொருள் :

வனத்துச் சிலம்பி—என்பது காட்டிலே சிலம்பியான பூச்சியிட்ட நூலிலே யகப்பட்டுக் கொசுகு சரீர தாபத்தோடே ஆரவாரிப்பது போலே நோயிடத்திலே பொருந்தி, பலகாலுஞ் சொன்னல் நீரிலே சிலம்பான ஆபரண ஓசை போலும் மிடற்றோசையை யுடைய அன்னமான பறவை சுபமாகுஞ் சீரங்கத் துள்ளான், இந்தப் பூமியிலே மலையிலே நின்றவன் கேட்பானோ? தேவர் துதியைக் கேளாதே என்றவாறு. நான் சிலம்பின் போற் பிணிவாய்ப்பட்டுப் புலம்பில், நின்றான் உம்பர் வாழ்த்தை விட்டு என் புலம்பலைக் கேட்குமோ? கேளாதென முடிக்க. என் புலம்பல், கேளாதென்பது சொல்லெச்சம். 92

விடத்தேரை மன்னு வனப்பாழ்ங் கிணற்றில்வெம் பாம்புபற்றும்
விடத்தேரை வாய்வண்டு தேன்வேட்டல் போல்விசித்
துக்கொடுபோய்
விடத்தேரை யில்வெங்கட் கூற்றையெண் ணுதெண்ணும்
வேட்கையெல்லாம்
விடத்தேரை யூரரங் கன்றிருத் தாளில் விழுநெஞ்சமே.

இதன் பொருள்:

விடத்தேரை மன்னு—என்பது, விடத்தே ரென்னும் மரத்தை நிலைபெற்ற பாலையிலே பாழ்ங் கிணற்றிலே பிடிக்கப்பட்ட நஞ்சு பொருந்தின தவளையின் வாயிலே வண்டு தேனை விரும்புவது போல, கட்டிக் கொண்டு போவதே செய்ய விசாரிக்கப்பட்ட ஆயுதத்தையும் பொல்லாத குணத்தையு முடைய இயமனை நினையாமல் நினைக்கு மாசையெல்லாம் நீங்கும்படி திருத்தேர் திருநாளை நடத்தும் சீரங்கத்தானை பெருமாள் சீபாதத்திலே தெண்டன் பண்ணு மனமே என்றவாறு. நெஞ்சமே! வண்டு தேரைவாய்த் தேன் வேட்டல் போலக் கூற்றை எண்ணு தெண்ணும் வேட்கை யெல்லாம்விட அரங்கன் றிருத்தாளில் விழு என முடிக்க. துன்பத்துக்குள்ளே துன்பமான சஞ்சாரத்திலே இன்பம் விரும்புதல் என்பது வ்வமை. விடத்தேர் கானலுமாம். 93

விழுங்கூன் றசைச்சுவர் நீர்மலங் கோழைவெம் பித்தொடுங்க
விழுங்கூ னரம்புறி யென்பேணி தோற்சட்டை வீழ்ந்துநொந்த
விழுங்கூந்த லாரழப் பாடையிற் போய்ச்சுடும் வெய்யசெந்தீ
விழுங்கூன நோய்க்குடில் வேண்டே னரங்க விமானத்தனே.

இதன் பொருள்:

விழுங்கூன் றசைச் சுவர்—என்பது, கீழ்ப்படு கூனுந் தசையுமான மூத்திரமும் மலமும் சென்மாவும் பைத்தியத்தோடுங் கொட்டுங் கூனுநின்ற நரம்பினாலே கட்டின உறி, எலும்பிலே செய்த ஏணி, தோலாலே செய்த சட்டை, கீழ்க்கிடந்து, வருந்திக் குலையாநின்ற தலைமயிரையுடைய பெண்க ளழும்படி பிணத் தேரி லெடுக்கப்பட்டு எரியா நின்ற வெப்பமான தீ, உண்ணுவதான பொல்லாதான பிணி குடியிருந்த சிறு வீடு விரும்பேன். சீரங்க விமானத்தை யுடையவனே! என்றவாறு. அரங்க! விமானத்தனே! சுவர் உறி, ஏணி சட்டை, குடிலிவை ஒத்த சரீரம் வேண்டேன் என முடிக்க. சரீரம் பரியந்தம் வேண்டாமை குறிப்பு. 94

மானத்து வண்ட லுழவோ ரெழுத்தின் வடிவுற்றசீர்
மானத்து வண்ட வினையாள ராயினும் மால்வளர்வி
மானத்து வண்டல மாமரங் கம்வழி யாய்வரினு
மானத்து வண்டமர் தாரண்ட ராம்பதம் வாய்க்குமங்கே.

இதன் பொருள்:

மானத்து வண்டல்—என்பது, பெரிய சங்கமானது, குவிந்த மணலிலே உழுகையிலே ஒத்து எழுத்து வடிவுற்ற சிறப்புப் போலத் தொடர்ந்த பாவிகளாயினும், பெருமாளுறங்கா நின்ற விமானத்தையுடைய வண்மையுடைய தலமான சீரங்கம் வழியாய் வந்தாலும் பெருமையுடைய வண்டுகள் பொருந்தும் மாலையுடைய தேவராகும் வரிசை கிடைக்கும் அவ்விடத்தே என்றவாறு. ஒருவர் வினையாளராயினும் வடிவுற்ற சீரங்கமான அரங்கம் வழியாய் வரினும் அங்கே அண்டராம் பதம் வாய்க்குமென முடிக்க. பல வடிவுள் ஒரு வடிவாவது, ஓரெழுத்தாதல் பல தொழிலுள் அரங்கம் வழியாய் வருதலான ஒரு தொழில் வாய்த்த வுவமை—சிறுதொழிலான் நன்மையும் பெரியபேறு தருமென்பது குறிப்பு. 95

அங்காக்கைக் கேமங்கைக் கீந்தா னரங்க னவனிக்குவா
யங்காக்கைக் கேபசித் தானிற்க வேமுத்தி யாக்கித்துய
ரங்காக்கைக் கேசிலர் வேறே தொழுவ ருந்திரவி
யங்காக்கைக் கேதனத் தாள்தரு மோதிரு வன்றியுமே.

இதன் பொருள் :

அங்காக்கைக் கேமங்கைக்கு—என்பது, அழகிய கற்ப தருவைப் பின்னைப்பிராட்டியார்க்குக் கொடுத்தவன், சீரங் கத்தான், பூமியிலே வாயைப் பிளப்பதற்கே யுண்டவனை யொழிந்து பரமபதத்தை உண்டு பண்ணித் துன்பத்தைத் தீர்ப் பதற்குச்சிலர் புறம்பானவரை வணங்குவர்; அரிய பொன்னைக் காகமே கொடியான மூதேவி தருவாளோ! மாவிலக்குமி யல் லாமலென்றவாறு. சிலர், பசித்தானிற்க, வேறே தொழுவர்; திருவன்றியும் திரவியம் கேதனத்தாள் தருவாளோ? தாரா ளென முடிக்க. வேறுதெய்வமும் முத்தி கொடாதென்பது உவமைக் குறிப்பா லறிக. 96

அன்றே யடைய வுனக்கே யடிமையென் றுதரித்தா
ரன்றே யடையப் படுவா ருனையரங் காவனத்தி
யன்றே யடையப் பயில்வோரு மீதறி யாரறியா
ரன்றே யடையப் புலனுலும் நன்கில்லை யாங்கவர்க்கே.

இதன் பொருள் :

அன்றே யடைய—என்பது, அப்போதே நெருங்க வுனதுடைய தொண்டனென்று அன்புசெய்தவ ரல்லரோ, பொருந்தப் படுகின்றவருன்னை, சீரங்கத்தனே! காட்டிலேன் பழகி யிலையும் நீரும் புசிப்பாரும் இந்த விதத்தைத் தெரி யார், அவ்வறியாதவர் ; நிறுத்தப் பட்ட புலன்களாலும் நன் மையில்லை, அவ்விடத்தவர்களுக் கென்றவாறு. அரங்கா, ஆதரித்தா ருனையடையப் படுவரிது, அயில்வோரு மறியார்; அறியார் அடக்கும் புலனுலுமவர்க்கு நன்கில்லை என முடிக்க. புலனடக்கினும் அடக்காதொழியினும் உனை ஆதரிப்பதே பேறு தருமென்பது குறிப்பு. அப்போதே யாவது பிறப்பது. இ ஆண்டு—இளமைக் காலத்தே என்பது. 97

ஆங்கார மாமின்னைத் தோய்மார் பரங்க னனைவெண் ணெயுண்
டாங்கார மாகில முண்டார்க்குத் தொண்டனிவ் வண்டத்தப்பா
லாங்கார மான்பகு திப்புறம் போயமு தாற்றிற்படிந்
தாங்கார மானடி காண்பே னவன்ற னருள்சிந்தித்தே.

இதன் பொருள் :

ஆங்கார மூரமின்னை—என்பது, ஆக்கப்பட்ட மேகத்தழ கான மின்னைப் போல்வாளான பெரிய பிராட்டியாரைத் தழுவின மார்பையும் சீரங்கத்தையு முடையவனே! தயிரும் வெளுத்தநெய்யு முண்டது போல நிறையப் பெரிய பூமியைப் புசித்தவனுடைய தாசன் இந்த வண்டத்துக் கப்புறத்தே அகங்கார முடகானுமான பிரகிருதிக்கு மேலாகப் போய் விரசையாற்றிலே தீர்த்தமாடி அவ்விடத்து அமரனவனு டைய சீபாதத்தைச் சேவிப்பேன், அவனுடைய கிருபையை நினைந்தென்றவாறு. நான் உண்டார்க்குத் தொண்டன் ஆதலால், போய்ப் படிந்து காண்பேன் என முடிக்க. சிந்தித் தலாவதல்லது வேறு உபாயமில்லை என்பது குறிப்பு. 98

சிந்தா குலமுய்ய குன்றெடுத் தாய்த்தென் னரங்கஞ்சுற் றுஞ்
சிந்தா குலகம் படைத்தளித் தாய்நிலஞ் சென்றிரந்த
சிந்தா குலவுசெல் வந்தந்தை தாய்குரு தெய்வமுநீ
சிந்தா குலம்படைத் தேனடி யேன்றுயர் தீர்த்தருளே.

இதன் பொருள் :

சிந்தா குலமுய்ய—என்பது, சிதறின பசுக் கூட்டம் பிழைக்க மலையை எடுத்தவனே! சீரங்கத்தை வளையும் ஆற்றை யுடையவனே! உயிர்களை உண்டாக்கிக் காத்தவனே! பூமியைப் போய் யாசித்தவனே! என்னுடைய துன்பத்தை, நீக்கி யருள்வாயாக வென்றவாறு. எழுவாய்ப் பயனிலை, செவ்வு செனனமான துயர் தீராமையே மனவிசாரமென்க. ஆறுவது காவேரி; குலமாவது வருணம். 99

தீரத் தரங்கப் பவநோய் துடைத்தென்னைத் தேவரொடுந்
தீரத் தரங்கப் பணிகாப்ப வைத்த செயலென்பதோர்
தீரத் தரங்க வபயமென் றூர்க்குந் திரைப்பொன்னிசூழ்
தீரத் தரங்கன் சிலம்பார்ந்த செய்ய திருவடியே.

இதன் பொருள் :

தீரத் தரங்க—என்பது, நீங்க அலைபோலுஞ் சென்ம வியர் தியைத் தள்ளி நித்ய சூரியருடனே உயராநின்ற வன்புடை யார் செய்ய அவயவ கைங்கரியங்களை விடாதபடி வைத்தன, கருமமானது ஓர்ந்திடத்தா, அவ்விடத்திலே அபயமென

ஆரவாரிக்கும் மலையையுடைய காவேரி சூழ்ந்த கரையுடைய சீரங்கத் துள்ளான்; உடைய சிலம்பு பொருந்தின திருவடிகள் என்றவாறு. அரங்கன் றிருவடி என்னைப் பணிகாப்ப வைத்த என முடிக்க. திருவடியடைந்தேன், பரமபதத்துக் குரியனானே னென்பது குறிப்பு. ஈண்டு, அடைதல்=நினைதல். "பிறவிப்பெருங்கடல் நீந்துவர், இறைவனடி சேர்ந்தார்" (திருக்குறள் : கடவுள் வாழ்த்து : 10.) (பரிமேலழகர் உரை) என்றார். பிறரும் தெளிவுபற்றிப் பரமபதம் பெறுவனென்னுது, பெற்றேனென்பதாகப் 'பணிகாப்ப வைத்த' என்றார். அல்லது இறைவன் பரமபதந் தருவானெனத் தேறுதல் வைணவ சம்பிரதாயம்.

இதனுட் பாட்டுத் தோறுந் துறையு மலங்காரமுங் கண்டு எழுதாதது, ஒரு துறையுட் பலபாட்டு வருதலானும், ஓரலங்காரத்தாற் பலபாட்டு வருதலுமாம். அவை அடைவாய் வாராது கலந்து வருதலாலும் பொழிப்பு முடிவுந் துணிவுங் கண்டெழுதினேம். துறையும் அலங்காரமும் வேறே எடுத்து அடிவரையிட்டது, பிறிதாக எழுதினதுங் காண்க. இந்தச் சொற்றொடர்நிலைச் செய்யுளுள் மொழிமுதலாகாதன மொழிமுதலாக்கினர், தொல்காப்பியனார் சகரவரியுள்ளும் யகரவரியுள்ளும் ஞகரவரியுள்ளும் மொழிமுதலாகாதவற்றையும் நன்னூலார் வழக்குப் பற்றி மொழிமுதலாக்கினது போலாம்; அல்லதூஉம் இச்செய்யுட் செய்தார் வரகவி ஆதலின், ஆரிடப்போலியென அமைப்பதுமாம். 100

ஓராதெழுதினே னாயினும் ஒண்பொருளை
யாராய்ந்து கொள்வ தறிவுடையோர்—சீராய்ந்து
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

இந்த உரை எழுதினேன் நம்மாழ்வார் திருநகரித் திருக்குருகைப் பெருமாள் கவிராயன் வேங்கடத் துறைவான்.

ஸ்ரீமத் வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் உரையுடன் பதிப்பிக்கப் பெற்ற, அஷ்டப் பிரபந்தம் திருவரங்கத்தந்தாதியின் இறுதியில் கீழ்க்காணும் பாடல் உள்ளது:—

பணவா ளரவி னரங்கேசர் தாளிற் பரிதிவளை
நிணவாளஞ் சார்ங்கங் கதைதோளிற சாத்தின னிணிலமேற
குணவாள ராம்பட்டர்க் கேழேழ் பிறப்புங் குடியடியான்
மணவாள தாசன் யமகவந் தாதி வகுத்தனனே.

திருவரங்கத் தந்தாதி உரையுடன் முற்றும்.

# 7. திருக்கடன் மல்லைப் பதிற்றுப்பத் தந்தாதி

(உரையுடன்)

சடகோபர்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சீர்மேவு தொண்டர்துதி சிந்தைமகிழ் நறுங்குல்லைத்
தெரியல் சூடுங்
கார்மேவு திருமேனிக் கடன்மல்லைத் தலசயனக்
கண்ணன் றளிற்
பேர்மேவு பதிற்றுப்பத் தந்தாதிப் பாமாலை(ப்)
பெட்பிற் சூட்ட
வார்மேவு மகிழலங்கன் மாறனிரு பங்கயத்தாள்
வணக்கஞ் செய்வாம்.

இதன் பொருள் :

சீர்மேவும் = சிறப்புப் பொருந்திய, தொண்டர் = அடியார்கள், துதி = தோத்திரங்களுக்கு, சிந்தைமகிழ் = மனமகிழும், நறும் = வாசனை பொருந்திய, குல்லை = திருத்துழாய், தெரியல் = மாலை, சூடும் = தரிக்கும், கார்மேவு = நீருண்ட மேகம் போன்ற, திருமேனி = அழகிய உடலுருவத்தை யுடைய, கடன்மல்லைத் = திருக்கடன் மல்லை, தலசயனம் = பூமியில் சயன கோலங் கொண்ட, கண்ணன் = மகாவிஷ்ணுவினது, தாளில் = திருவடியில், பேர்மேவு = கீர்த்தி பொருந்திய, பதிற்றுப்பத் தந்தாதி = பத்து பத்துப் பாடல் ஓரிசையாய் (அது போன்று) நூறு பாடலும் பத்திசையாய் பாட்டின் முடிவு மறுபாடலுக்கு முதலாய் வரும், பாமாலை = பாடலாகிய மாலை, பெட்பில் = அன்பினல், சூட்ட = தரிப்பதற்கு, வார்மேவு = நீட்சி பொருந்திய; மகிழலங்கல் = மகிழம்பூ மாலை தரித்த, மாறன் = சடகோப ஆழ்வான், இருபங்கயத்தாள் = இரண்டு தாமரை மலர் போன்ற பாதங்களை, வணக்கஞ் செய்வாம் = வணங்குவேன், என்றது-ஆம் = ஈற்றசை.

எழுசீர்க் கழிநெடிலடி லாசிரிய விருத்தம்

மாருதி

தோற்றிய காலை யுதயபா னுவின்மேற்
றுகளிறீங் கனியெனப் பாய்ந்த

ஆற்றல்சே ரனும னஞ்சனை பாலன்
அம்புயத் துணைச்சரண் டொழுவாம்

நோற்றல்சேர் முனிவர் நுண்பொருண் மறையை
நுவல்கடன் மல்லைவா மனன்றாள்

போற்றிய பதிற்றுப் பத்தந்தா திப்பா
புதுத்தொடை புனைந்திட மாதோ.

இதன் பொருள் :

தோற்றிய = பிறந்த, காலை = விடியற் காலம், உதயம் = உதயமான, பானுவின் மேல் = சூரியன்பேரில், துகளில் = குற்றமில்லாத, தீம் = மதுரம் பொருந்திய, கனியென = பழமென்று, பாய்ந்த = தாண்டிய, ஆற்றல்சேர் = வலிமை சேர்ந்த, அனுமான் = அனுமான், அஞ்சனைபாலன் = அஞ்சனாதேவியின் புத்திரன், அம்புயம் = தாமரைமலர் போன்ற, துணை = இரண்டாகிய. சரண் = பாதங்களை, தொழுவாம் = வணங்குவாம், நோற்றல்சேர் = தவமகிமை சேர்ந்த, முனிவர் = ரிஷிகள், நுண்பொருள் = நுட்பமாகிய அருத்தங்களையுடைய, மறை = வேதங்களை, நுவல் = வேதாத்தியயனஞ் செய்யும், கடன்மல்லைத் = திருக்கடன் மல்லை, வாமனன்— வாமனவதாரஞ் செய்த விஷ்ணுவின், தாள் = திருவடியில், போற்றிய = தோத்திரஞ் செய்த, பதிற்றுப்பத் தந்தாதி = பத்து பத்து ஓரிசையாய் வரும் பாட்டின் அந்தம் மறுபாட்டுக்கு ஆதியாக வரும், பா = பாடலாகிய், புது = நூதனமான, தொடை = மாலை, புனைந்திட = தரித்திட; மாது, ஓ ஈற்றசைகள்.

## குரு வணக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பொங்கு கடலி னலையெனப்
பொருமங் களவாச் சியத்துழனி
தங்கு மினிய பையநகர்
தகைசீர்க் கருணன் சந்ததமுந்
துங்கத் தமிழி னியலெற்குச்
சொல்லி யருள்வோ னனக்கதலி
செங்கைத் தலநா ராயணமால்
செய்பங் கயத்தா டுதிபுரிவாம்.

இதன் பொருள்:

பொங்கு=மிகுந்த, கடலின்=சமுத்திரத்தின், அலையென=சத்தம் போல, பொரும்=அடிக்கப்பட்ட, மங்கள வாச்சியத்தின்=மங்களவாத்தியத்தின், துழனி=முழக்கம், தங்கும்=நிலைபெற்றிருக்கின்ற, இனிய=இனிமைதரும், பையநகர்=பையனூரில் வசிக்கும், தகை=பெருமை பொருந்திய, சீர் கருணன்=சீர் கருணீகர் மரபினன், சந்ததமும்=எப்பொழுதும், துங்கம்=உயர்வாகிய, தமிழின்=தமிழ்ப் பாஷையின், இயல்=இலக்கணங்களை, எற்கு=எனக்கு, சொல்லியருள்வோன்=தெரியும்படி சொல்லிக்கொடுத்த ஆசிரியன், அனக்கதலி=அன்னக்கொடி, செங்கைத்தல=சிவந்த கையிலேயுள்ள, நாராயணமால்=நாராயணனென்னும் பெருமையுடையவன், செய்=சிவந்த, பங்கயத்தாள்=தாமரை மலர் போன்ற பாதங்களை, துதிபுரிவாம்=தோத்திரம் செய்வாம்-என்றது. 3

## நூல்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பொன்மருவு புடவியெலாம் பெட்பினெடு மருள்புரிவான்
புரிந்தஞ் ஞான்று
மின்மருவு நான்முகனை இலஞ்சியினி லளித்தவனே
விண்ணி னூங்கு
தென்மருவு கடன்மல்லைத் தெய்வவர சேதமியற்
றிருத்தி யாட்கொள்
கொன்மருவு பராஞ்சுடரே கோதிலடி யாரிடம்வாழ்
கொற்ற மாலே.

இதன் பொருள் :

பொன் மருவு = இலட்சுமீகரம் பொருந்திய, புடவியெலாம் = உலகமெல்லாம், பெட்பினொடும் = அன்பினுடன், அருள்புரிவான் = கிருபை செய்வான், புரிந்து = செய்து, அஞ்ஞான்று = அந்நாளில், மின்மருவும் = பிரகாசமுள்ள, நான்முகனை = நான்கு முகத்தையுடைய பிரமதேவனை, இலஞ்சியினிலளித்தவனே = நாபிக் கமலத்தில் பெற்றவனே, விண்ணின் = சுவர்க்கத் தலத்தை, ஊங்கு = உராயாநின்ற, தென்மருவும் = தென்னஞ் சோலையுள்ள, கடன்மல்லை = திருக்கடன்மல்லையின் விளங்கிய, தெய்வ அரசே = தெய்வங்களுக்கெல்லா முதல்வனே! தமியன் = தனிமையாகிய என்னை, திருத்தி = செவ்வைப்படுத்தி, ஆட்கொள் = அடிமை கொள்வாய், கொன்மருவு = பெருமை பொருந்திய, மாலே = நாராயணனே! என்றது. ஏ—ஈற்றசை. 1

மாலையுறழ்க் காருடல வாளவுண னாயிரந்தோள்
வாட்டி வீறு
மாலைபர கதியளித்த மறைமுதல்வன் மாயனென
வழுத்தா தந்தோ
வேலைநிகர் விழிச்சியர்பான் மிகுவேட்கை யானுளத்து
மேவித் தெண்ணீர்
வேலையலை துரும்பினலை யாதருள்வாய் கடன்மல்லை
விளங்குந் தேவே.

இதன் பொருள் :

மாலை = இருளை, உறழ் = ஒத்த, காருடல = கறுத்த தேகத்தை யுடைய, வாள் = ஒளிவு பொருந்திய, அவுணன் = வாணசுரனுடைய, ஆயிரந்தோள் = ஆயிரம் புயங்களை, வாட்டி = சக்கராயுதத்தை விட்டுச் சங்கரித்து, வீறு = தனிமையாகிய, மால் = பெருமையும், ஐ = அழகையுமுடைய, பரகதி = பரமபதம், அளித்த = கொடுத்த, மறை = வேதங்களுக்கெல்லாம், முதல்வன் = ஆதியானவன், மாயனென = மகாவிஷ்ணு என்று, வழுத்தாது = தோத்திரஞ் செய்யாது, அந்தோ = ஐயோ, வேலை = வேலாயுதத்தை, நிகர் = சமமான, விழிச்சியர் பால் = கண்களையுடைய மாதர்களிடத்தில், மிகு = மிகுந்த,

வேட்கை = விருப்பம், யான் = எனது, உளத்து = மனத்தில், மேவி = பொருந்தி, தெள் = தெள்ளிய, நீர் = சலமுள்ள, வேலை = சமுத்திரத்தின், அலை = அலைகளிலே சிக்கிய, துரும்பு = துரும்பைப்போல், அலையாது = வருத்தப்படாமல், அருள்வாய் = கிருபை செய்வாய், கடன்மல்லை = திருக்கடன் மல்லை க்ஷேத்திரத்தில், விளங்கும் = பிரகாசிக்கின்ற, தேவே = கர்த்தனே! என்றது. 2

விளங்குமதி முகச்சுனிதி மதலைதவத் தினுக்குவந்த
விமல யான்செய்
களங்கமதை நீகமித்துப் பெருவரந்தந் தாட்கொளலர்
கயத்தின் மல்கு
வளங்குலவு நறியமுகை வாரிசத்தின் மடன்மலர்த்தி
வண்டர் யாவு
முளங்கனிந்து முருகருந்தி யிசைபாடுங் கடன்மல்லை
யுகந்தண் காரே.

இதன் பொருள் :

விளங்கு = ஒளிவுபொருந்திய, மதி = பூரண சந்திரனை யொத்த, முகச் சுனிதி = முகத்தினையுடைய சுனிதி என்னும் பெயருள்ளவள், மதலை = புத்திரனாகிய துருவன், தவத்தினுக்கு = தபசுக்கு, உவந்த = சந்தோஷித்த, விமல = கடவுளே! யான் செய் = அடியேன் செய்த, களங்கமதை = குற்றத்தை, நீகமித்து = தேவரீர் பொறுத்து, பெருவரம் = பெரிதாகிய வரத்தை, தந்து = கொடுத்தருளி, ஆட்கொள் = ஆளாகக் கொள்வாய், அலர் = பரந்த, கயத்தின் = தடாகத்தின், மல்கு = நிறைந்த, வளம் குலவு = செழுமை பொருந்திய, முகை = மொக்குகளின், மடல் = இதழ்களை, மலர்த்தி = விரித்து, வண்டர் = வண்டுகள், யாவும் = எல்லாம், உளங் கனிந்து = மனம் கனிவுடனே, முருகு = தேன்களை, அருந்தி = புசித்து, இசை = இராகங்கள், பாடும் = பாடுகின்ற, கடன் மல்லை = திருக்கடன் மல்லை ஸ்தலத்தில், உகந்து = சந்தோஷித்து, அண் = பொருந்திவசிக்கும், காரே = மேகம் போன்ற திருமேனியனே! என்றது. 3

உகமுடிவிற் பழுவமடைச் சிறுகுழவி யெனக்குவளை
யுறங்கு மாயா
முகுந்தபர மாத்துமநன் மூவடிவ மெனத்துவன்ற
முதல்வ வன்ப
ரகந்தனினண் ணற்புதமெய் யடியவர்கள் பதசலச
மார்வ மேவி
சகந்தனிலே தொழவருள்வாய் கடன்மல்லைத் தலங்கிளர்கைத்
திகிரி யோனே.

இதன் பொருள் :

உகமுடிவில் = யுகமுடிந்து ஜலப்பிரளய காலத்தில், பழுவமடை = ஆலிலையில், சிறுகுழவியென = சிறிய குழந்தை வடிவத்துடன், குவளை = திருக்கண்கள், உறங்கு = யோகநித்திரை செய்யாநின்ற, மாயா = மாயா விநோதனே, முகுந்த = முகுந்தனென்னும் திருநாமமுள்ளவனே, பரமாத்தும = பரமாத்தும ரூபனே, நல் = நல்ல, மூவடிவமென = பிரம்மன், விஷ்ணு, உருத்திரன் என்னும் திரிமூர்த்திவடிவமாக, துவன்ற = நிறைந்த, முதல்வ = முதன்மையானவனே! அன்பர் = உம்மிடத்தில் பக்தியுடையவர், அகந்தனில் = மனத்தின்கண், நண்ணும் = பொருந்தி வாசஞ்செய்கின்ற, அற்புத = அதிசயமானவனே! மெய் = உண்மையான, அடியவர்கள் = பாகவதர்கள், பதசலசம் = பாத தாமரைமலர், ஆர்வமேவி = ஆசை பொருந்தி! சகந்தனிலே = பூலோகத்தில், தொழ = சேவிக்க, அருள்வாய் = கிருபை செய்வாய், கடன்மல்லை = திருக்கடன் மல்லை, தலங்கிளர் = பூமியில் சயனமாக விளங்கிய, கை = அஸ்தத்தில், திகிரியோனே = சக்கரத்தை யுடையவனே! என்றது. 4

திகிரியெனும் பைங்குழலாற் செறிந்தநிரை குவியவிசை
திறத்திற் பாடுந்
துகிர்வாயா தமியன்மனத் திருளிரியக் கிரணம்விடு
சுடரோ னேயா
லகின்மணக்கு மணிமாட மணிநிரைகொள் கடன்மல்லை
யார்வ மேவி
மகிழ்வாய்ந்து முகில்போலத் திருநயனம் வளரீடில்
வனத்தா ரோனே.

இதன் பொருள் :

திகிரியெனும் = மூங்கிலென்று சொல்லும், பைங்குழலால் = அழகிய புல்லாங்குழலால், செறிந்த = பரவிய, நிரை = பசுக்கூட்டங்கள், குவிய = ஒரு இடத்திற் சேர, இசை = இராகங்கள், திறத்தில் = பராக்கிரமத்துடன், பாடும் = பாடுகின்ற, துகிர் = பவளம் போன்ற, வாயா = வாயினையுடையவனே! தமியன் = என்னுடைய, மனத்து = மனத்திலுள்ள, இருள் = அஞ்ஞானமாகிய இருள், இரிய = ஓடும்படி, கிரணம் விடு = கதிர்களை விடுகின்ற, சுடரோனே = சூரியனே! அகில்மணக்கும் = அகில் மணத்தின் வாசனை கமழ்கின்ற, மணி = அழகு பொருந்திய, மாடம் = மாளிகை, அணி = ஒழுங்கு, நிரை கொள் = வரிசையாக விளங்கும், கடன்மல்லை = திருக்கடன் மல்லை க்ஷேத்திரத்தில், ஆர்வமேவி = ஆசைபொருந்தி, மகிழ் வாய்ந்து = களிப்பு உண்டாகி, முகில் போல = கரிய மேகம் போல, திருநயனம் = அழகிய கண்கள், வளர் = வளர்கின்ற, ஈடில் = நிகரில்லாத, வனத்தாரோனே = துளப மாலையணிந்தவனே! என்றது. 5

தாரணியைப் போனகமா யருந்துநிராமயசிகர
தயங்கு வண்மைச்
சீரணிசேர் கடன்மல்லைத் திருத்தலத்து நாரணசித்
திரித்த செம்பொன்
வாரணியுங் குயமடவார் மையலினி லனுகாதுன்
வனசத் தாளைப்
பேரறிவி னுடன்வணங்கிப் பழிச்சவருள் புரியகத்திற்
பிரியா துற்றே.

இதன் பொருள் :

தாரணியை = உலகத்தை, போனகமாய் = சாதமாக, அருந்து = உண்ட, நிராமய = கர்த்தனே! சிகரி = கோபுரங்கள், தயங்கு = பிரகாசிக்கின்ற, வண்மை = வளமை, சீர் = சிறப்பு, அணி = அழகு, சேர் = சேர்ந்த, கடன்மல்லை = திருக்கடன் மல்லை, திருத்தலத்து = சிறப்புப் பொருந்திய க்ஷேத்திரத்து, நாரண = ஆதிநாராயணா! சித்திரித்த = அழகு செய்யப்பட்ட, செம்பொன் = செம்பொன்னினு லமைத்த, வாரணியும் = கச்சணிந்த, குயம் = தனபாரத்தை யுடைய, மடவார் = மாதர்கள்,

மையலினில் = ஆசையினில், அணுகாது = சேராது, உன் = உமது, வனசத்தாளை = தாமரைமலர் போன்ற பாதங்களை, பேரறிவினுடன் = பெரிதாகிய புத்தியுடன், வணங்கி = சேவித்து, பழிச்ச = தௌத்தியஞ் செய்ய, அருள்புரி = கிருபை செய்வாய், அகத்தில் = மனத்தில், பிரியாது = நீங்காது, உற்றே = பொருந்தியிருந்தே, என்றது. 6

உற்றசது மாமறைக டேடரிய பரம்பொருளா
யுயர்ந்தோ ரேத்து
நற்றகைமை யுளவட்டாக் கரமனுவா யொளிருசித
நண்ணு மாலே
சற்றுமுணர் வில்லாத நாயேனை யாட்கொள்வாய்
தவத்தோர் விண்ணோர்
கற்றவர்க ளனவரதங் கதழ்ந்துபுகழ் கடன்மல்லைக்
கடவுட் கோவே.

இதன் பொருள் :

உற்ற = நல்ல பொருள் பொருந்திய, சது = நான்காகிய, மா = பெருமையுள்ள, மறைகள் = வேதங்கள், தேடரிய = தேடுதற்கும் அருமையாய், பரம்பொருளாய் = பரம்பிரம்ம ரூபமாய், உயர்ந்தோர் = அறிவுடையோர், ஏத்தும் = தோத்திரஞ் செய்யும், நல் = நல்ல, தகைமை = பெருமை, உள = உள்ள, அட்டாக்கர மனுவாய் = எட்டெழுத்துள்ள மந்திரமாய், ஒளிர் = விளங்கும், உசிதம் = தகுதி, நண்ணும் = பொருந்திய, மாலே = மகாவிஷ்ணுவே! சற்றும் உணர்வு இல்லாத = கொஞ்சமும் அறிவில்லாத, நாயேனை = நாய் போன்ற என்னை, ஆட்கொள்வாய் = அடிமை கொள்வாய், தவத்தோர் = தவத்தைச் செய்யும் மகரிஷிகள், விண்ணோர் = சுவர்க்க லோகவாசிகளாகிய தேவர்கள், கற்றவர்கள் = படித்தவர்கள், அனவரதம் = எப்பொழுதும், கதழ்ந்து = மிகுதியாக, புகழ் = புகழப்பட்ட, கடன்மல்லை = திருக்கடன்மல்லைக் கோவிலின் மேவும், கடவுள்கோவே = தேவர்களுக்கும் இராஜனே! என்றது. 7

கடம்பொழிவெங் களிற்றினுயர் மருப்பொசித்த
[திறற்கரச்செங்
கண்ணு முத்து
வடம்பொலியு மிணைக்கலசத் திருவணையுந் தடமார்ப
மலியுந் திண்டோள்
இடம்பெருகிப் பொரும்வாணன் செருக்கழித்த வடிநேமிச்
செம்ம லேயென்
மடமகற்றிப் புலமருள்வாய் வலங்கொடிருக் கடன்மல்லை
வயங்குந் தேவே.

இதன் பொருள் :

கடம்=மதங்களைப், பொழியும்=சொரிகின்ற, வெங்களிற்றின்=கடூரமாகிய குவலயாபீடமென்னும் யானையின், உயர்=உயர்வாகிய, மருப்பு=கொம்பை, ஒசித்த=ஒடித்த, திறல்=பலம்பொருந்திய, கரம்=கையினையுடைய, செங்கண்ணு=சிவந்த கண்களையுடையவனே! முத்துவடம்=முத்துமாலைகள், பொலியும் = பிரகாசிக்கின்ற, இணைக்கலச = இரண்டுகலசம் போன்ற தனபாரமுள்ள, திரு=மகாலட்சுமி, அணையும்=புணராநின்ற, தடம்=விசாலமுள்ள, மார்பா=மார்புள்ளவனே! மலியும்=ஆயிரமாக மிகுந்த, திண்=பலம் பெற்ற, தோள்=புயத்தின், திடம்=வலிமை, பெருகி=அதிகரித்து, பொருவாணன்—உயுத்தஞ் செய்த வாணாசுரன், செருக்கு=களிப்பை, அழித்த=அழியச் செய்த, வடிநேமி—கூர்மை பொருந்திய சக்கராயுதத்தையுடைய, செம்மலே=எப்பொருட்கும் இறைவனே! என் = என்னுடைய, மடம் = அறிவின்மையை, அகற்றி = நீக்கி, புலமருள்வாய்=அறிவைத் தருவாய், வயங்கொள்=பிரகாசங்கொண்ட, திருக்கடன் மல்லை = திருக்கடன்மல்லை, வயங்கும் = விளங்குகின்ற, தேவே=கர்த்தனே! என்றது. 8

வயங்குமணி குயின்றவர வெடித்ததிருக் கடன்மல்லை
 வந்து நீலம்
இயங்குமணி மேனியனே சனனமெடுத் தயராதுன்
 னிடமீந் தாள்பைப்
புயங்கமிசை நடங்குயின்ற பொற்பாத புராரிதுயர்
 போக்கி யாண்டாய்
இயங்கடலி னலைபொருது மெழில்திகழுந் திருக்குடந்தை
 யிலங்கு சோதி.

இதன் பொருள் :

வயங்கு = ஒளிவுபொருந்திய, மணி = இரத்தினங்கள், குயின்ற=பதித்த, அரண்=மதில், உடுத்த=சூழ்ந்த, திருக்கடன்மல்லை=திருக்கடன்மல்லை க்ஷேத்திரத்திற்கு, வந்து=பாற்கடலிலிருந்து வந்து, நீலம் = நீலநிறமானது, இயங்கும்=பொருந்திய, மணிமேனியனே=அழகிய உடலுருவத்தையுடையவனே! சனனமெடுத்து=உற்பவமாகி, அயராது=வருந்தாது, உன்=உமது, இடமீந்து=இடமாகிய பரம

பதத்தைத் தந்து, ஆள் = அடிமை கொள்வாய், பை = படத்தையுடைய, புயங்கம் = காளிங்கன் என்னும் பெயரையுடைய பாம்பின், மிசை = மேல், நடங்குயின்ற = திருநடனஞ் செய்த, பொற்பாத் = அழகிய பாதங்களையுடையவனே! புராரி = திரிபுரங்களுக்கும் பகைவனாகிய சிவபெருமான், துயர் = கபாலங்கொண்டு யாசித்த துன்பத்தை, போக்கி = நீங்கச் செய்து, ஆண்டாய் = ஆண்டு கொண்டாய், இயம் = வாத்தியங்களின் சத்தமானது, கடலின் = சமுத்திரத்தின், அலை = அலைமுழக்கத்தை, பொருது = ஜெயிக்கும், எழில் = அழகு, திகழும் = பிரகாசிக்கும், திருக்குடந்தை = திருக்குடந்தை க்ஷேத்திரத்தில், இலங்கு = விளங்கும், சோதி = மகாவிஷ்ணுவே! என்றது. 9

சோதியனே யென்றெவருந் தொழுங்கமலா சனைவரனே
சுடலை மேவிப்
பூதியணி யான்படுவெம் புன்கணகற் றிடுமுதலே
பொழில்கள் சூழும்
மேதகுநற் கடன்மல்லைத் தலங்கிடந்த மாதவனே
விண்ணோ ரேத்தும்
ஏதமிலாத் தாட்டுணையை யான்வணங்கத் தயைபுரிவாய்
இரங்கி யின்னே.

இதன் பொருள்:

சோதியனே = ஸ்ரீமந் நாராயணா! என்று = என்று, எவரும் = சகலமான பேர்களும், தொழும் = வணங்கும், கமலாசனை = செந்தாமரைக்கமலத்தை யாசனமாகவுடைய மகாலட்சுமியின், வரனே = நாயகனே! சுடலை = மயானத்தில், மேவி = சென்று, பூதி = விபூதியை, அணி = தரித்த, ஆன் = இடபவாகனமுள்ள சிவபெருமான், படு = அடைந்திருந்த, புன்கண் = துன்பத்தை, அகற்றிடும் = நீக்கிய, முதலே = முதன்மையான கர்த்தனே! பொழில்கள் = சோலைகள், சூழும் = சூழ்ந்திராநின்ற, மேதகு = மேன்மை பொருந்திய, நல் = நல்ல, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, தலங்கிடந்த = ஸ்தலமாகிய பூமியில் சயனகோலங் கொண்ட, மாதவனே = மகாவிஷ்ணுவே, விண்ணோர் = சுவர்க்க வாசியாகிய தேவர்கள், ஏதம் = குற்றம், இலா = இல்லாத, தாட்டுணையை = பாதங்கள் இரண்டையும், யான் = உனது அடிமையாகிய யான், வணங்க = சேவிக்க, தயைபுரிவாய் = கிருபை செய்வாய், இரங்கி = உன்மனம் இரக்கமுற்று, இன்னே = இப்பொழுதே, என்றது. 10

கட்டளைக் கலிப்பா

இரவி யைக்குடை யாய்ச்செம் மலர்க்கரம்
ஏந்தி யானிரை காத்தவ னென்னறய்
இரவி யைக்கவர்ந் தின்புட னேயயில்
இறைவ கற்பகப் போதுக டூற்றியே
பரவி யம்பர ரேத்திப் பணியுநற்
பண்ப ரூக்கடன் மல்லைய னேநிரு
பரவி யப்பற் குனன்பரி தூண்டிய
பாக னேயடி யேற்கருள் பாலியே.

இதன் பொருள் :

இரவியை = கோவர்த்தன மென்னும் மலையை, குடையாய் = குடையாய், செம்மலர் = சிவந்த மலர் போன்ற, கரம் = கையினிடத்தில், ஏந்தி = தாங்கி, ஆனிரை = பசுக்கூட்டங்களை, காத்தவ = இரட்சித்தவனே! நென்னல் = முன்னாளில், தயிர் = தயிர், அவி = நெய், கவர்ந்து = கொள்ளை கொண்டு, இன்புடன் = இஷ்டத்துடன், அயில் = உண்ணப்பட்ட, இறைவ = கர்த்தனே! கற்பகப் போது = கற்பகப் புஷ்பங்கள், தூற்றி = சொரிந்து, பரவி = விசாலமாக நின்று, அம்பரர் = தேவர்கள், ஏத்தி = தோத்திரஞ் செய்து, பணியும் = வணங்கும், நல் = நல்ல, பண்பு = குணம், அரு = நீங்காது இராநின்ற, கடன்மல்லையனே = திருக்கடன்மல்லையெனும் க்ஷேத்திரத்தை யுடையவனே ! நிருபர் = துரியோதனன் முதலிய அரசர்கள், அவிய = உயுத்தகளத்தில் மடிய, பற்குனன் = அருச்சுனன் தேரிற் கட்டிய, பரி = குதிரையை, தூண்டிய = நடத்திய, பாகனே = சாரதியாகிய கிருஷ்ணா ! அடியேற்கு = உமது தாசனாகிய எனக்கு, அருள்பாலியே = கிருபை செய்வாய் என்றது, ஏ — ஈற்றசை. 11

பால ளக்கரிற் பைம்மணி யங்கதப்
பாய லிற்கண் வளரது லாவருட்
பால ளித்தடி யேன்றிமி ரத்தினைப்
பாவ கன்படர் பஞ்சென வாக்கிநின்
பால டைந்துற வேபுரி பொன்மதிற்
பாங்கு லாவு திருக்கடன் மல்லையன்
பால டற்புட் கரமுனி தாடொழப்
பாச முற்று வரும்பற்ப நாபனே.

இதன் பொருள்:

பால் அளக்கரில் = பால் சமுத்திரத்தில், பை = படத்தையும், மணி = மாணிக்கத்தையும் உடைய, அங்கதப் பாயலில் = ஆதி சேஷ சயனத்தில், கண்கவர் = யோக நித்திரை செய்யாநின்ற, அதுலா = நிகரில்லாதவனே! அருள் = கிருபையாகிய, பால் = உரிமையை, அளித்து = கொடுத்து, அடியேன் = அடிமையாகிய என்னுடைய, திமிரத்தினை = அஞ்ஞான இருளை, பாவகன் = அக்கினி, படர் = பற்றப்பட்ட, பஞ்சு என = பஞ்சு என்று சொல்லும்படி, ஆக்கி = செய்து, நின்பால் = நின்னிடத்தில், உற = பொருந்தியிருக்க, புரி = செய், பொன் = பொன்னினாற் செய்த, மதில் = மதிலானது, பாங்கு = அழகு, உலாவு = பொருந்திய, திருக்கடன்மல்லை = திருக்கடன்மல்லை க்ஷேத்திரத்தில், அன்பால் = ஆசையால், அடல் = பெருமை பொருந்திய, புட்கரமுனி = புண்டரீக முனிவர், தாள் = திருவடி, தொழ = சேவிக்க, பாசமுற்று = ஆசைகொண்டு, வரும் = வந்த, பற்பநாபனே = தாமரை யுண்டாகிய உந்தியினை யுடையவனே! என்றது. 12

வரைப லப்பல சித்திர மோங்கிய
  மாட மார்கடன் மல்லைப் பராசிறு
வரைப சுக்கன் றறையடை வேத
  வரன்செ ருக்கை யொழித்தவ சீவனை
வரைப லச்சம னண்ணிக் கரத்துறும்
  வடமெனைப்பற் றிடாதருள் வண்ணது
வரைப ணைச்சுடி கைக்கிறை யென்னவ
  யங்கி யத்தண் டுழாய்த்தொடை வாமனே.

இதன் பொருள்:

வரை = மலைகளினிடத்து, பலபல = அநேகவிதமான, சித்திரம் = சித்திரங்களும், ஓங்கிய = உயர்ந்த, மாடம் = மாளிகை, ஆர் = நிறைந்த, கடன்மல்லை = திருக்கடன்மல்லைக் கோயில் கொண்ட, பரா = கடவுளே! சிறுவரை = ஆயர்பாடியில் யாதவப் பிள்ளைகளை, பசுவின்கன்று = பசுவின் கன்றுகளை, அறை = மலைக்குகையில், அடை = சேர்க்கப்பட்ட, வேதவரன் = வேதாத்தியயனஞ் செய்யப்பட்ட பிரமதேவன், செருக்கை = களிப்பை, ஒழித்த கண்ணனே! சீவனை = உயிர்களை, வரை = பிடித்துக்

கொள்ளும், சமன் = இயமன், நண்ணி = என்னிடம் வந்து, கரத்து = கையில், உறும் = வைத்திராநின்ற, வடம் = பாசக் கயறு, எனை = என்னை, பற்றிடாது = பிடித்திடாது, அருள் = கிருபை செய்வாய், வண்ணம் = அழகிய, துவரை = துவாரகா புரிக்கு, பணை = பெருமை பொருந்திய, சுடிகை = கிரீடத்தை யுடைய, இறை = இராஜன், என்ன = என்று சொல்லும்படி, வயங்கிய = விளங்கிய, தண் = குளிர்ச்சி பொருந்திய, துழாய் தொடை = துளபமாலை யணிந்த, வாமனே = அழகுடையவேன ! என்றது. 13

வாம னைக்கன கப்புரி வானவர்
 மாழ்க வேதொனி சங்கனை யம்பிகை
வாம னைக்கடி பிண்ட மகற்றிய
 மாய னைப்புவ னங்கட் கிறைவனை
வாம னைக்கடற் பூமக ணாதனை
 மாத வர்க்கருள் சோதியை விண்ணள
வாம னைக்கடன் மல்லைப் புரத்தனை
 வாழ்த்து மன்பர் பவம்பயந் தோடுமே.

இதன் பொருள் :

வாமனை = பிரகாசமுடையவனை, கனகப்புரி = பொன்னகரமாகிய சுவர்க்கவாசிகள் என்னும், வானவர் = தேவர்கள், மாழ்கவே = மயக்கமடையவே, தொனி = தொனித்த, சங்கனை = பாஞ்சசன்னிய முள்ளவனை, அம்பிகை = பார்வதியின், வாமனை = இடப்பாகமுடைய சிவபெருமானை, கடி = துன்பஞ் செய்த, பிண்டமகற்றிய = யாசித்தலை நிவர்த்தி செய்த, மாயனை = மாயை விளைப்பவனை, புவனங்கட்கு = பதினாலு புவனங்களுக்கும், இறைவனை = கடவுளை, வாம் = தாவுதல், அனை = பொருந்திய, கடல் = அலைகளையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த, பூமகள் = பூமிதேவியின், நாதனை = நாயகனை, மாதவர்க்கு = பெருமையாகியதவத்தையுடையவர்க்கு, அருள் = கிருபை செய்யப்பட்ட, சோதியை = மகா விஷ்ணுவை, விண்ணளவாம் = ஆகாயம் அளவாகிய, மனை = மாளிகைகள் நெருங்கிய, கடன்மல்லை = திருக்கடன் மல்லை, புரத்தனை = நகரத்தை யுடையவனை, வாழ்த்தும் = தோத்திரஞ் செய்யும், அன்பர் = பாகவதர்கள், பவம் = பாவங்கள், பயந்து = பயங்கொண்டு, ஓடுமே = ஓடிப்போம் என்றது. ஏ—ஈற்றசை. 14

வம்ப விழ்க்கு நறுமலர் வேய்குழன்
  மாதரா ரம்ப ரத்தைக் கவர்ந்தோங்கு
நவம்ப டுக்குருந் துந்திய கேசவ
  மாண்பு லாங்கடன் மல்லைய னேவடி
வம்ப ரந்தமெய்ச் சீதையு டன்கடம்
  வாய்ந்த மாட்சிய நல்லுணர் வுற்றிடா
வம்பர் மாட்டுழ லாதுநின் றொண்டர்பால்
  வதிய மேதை வழங்கிசை யேந்தவே.

இதன் பொருள் :

வம்பு=வாசனை, அவிழ்க்கும்=விரியச்செய்யும், நறுமலர்= தேன்பொருந்திய புஷ்பங்களை, வேய்=தரித்த, குழல்=கூந் தலையுடைய, மாதரார்=யாதவ ஸ்திரீகளது, அம்பரத்தை= வஸ்திரத்தை, கவர்ந்து=திருடி, ஓங்கு=உயர்ந்த நவம்= புதுமை, படு=உண்டாகிய, குருந்து=குருந்த மரத்தில், உந் திய=ஏறிய, கேசவ=கேசவனென்னும் திருநாமத்தையுடைய வனே! மாண்பு=மாட்சிமை, உலாம்=பொருந்திய, கடன் மல்லையனே = திருக்கடன் மல்லை க்ஷேத்திரத்தனே ! வடி வம்=உடலுருவம், பரந்த=அழகுமிகுந்த, மெய்=சரீரமுள்ள, சீதையுடன்=சீதாபிராட்டியுடன், கடம்=தண்டகாரண்யத் திற்கு, வாய்ந்த=சென்று வாசஞ் செய்த, மாட்சிய= பெருமையுடையவனே ! நல்=நல்ல, உணர்வு=தெளிவு, உற் றிடா=பொருந்திடா, வம்பர்=நிலையில்லார், மாட்டு=பக்கத்து, உழலாது=வருத்தப்படாமல், நின்=உமது, தொண்டர் பால்=அடியாரிடத்தில், வதிய=வாசஞ் செய்ய, மேதை= பேரறிவு, வழங்கு=இஷ்டம் வைத்துக் கொடுத்தருள்வாய், இசை=புகழ், ஏந்தவே=தாங்கவே, என்றது. 15

ஏந்த லாயுதித் தேதெரு ளுற்றிடு
  மேத மில்சிறு வன்றன் மொழிப்படி
யேந்த லாய்மத லைக்கண்வெஞ் சீயமா
  யேதி யின்றிக் கனக னுயிர்செகுத்
தேந்த லாய்ப்புகழ் பெற்றவி னோதனே
  யினிது மாமறை யோதுங் கடன்மல்லை
யேந்த லாயொளிர் நின்பதத் தாமரை
  யென்று முன்ன வெனக்கருள் செம்மையே.

இதன் பொருள் :

ஏந்தல் ஆய் = இரணியனுக்குப் பிள்ளையாக, உதித்தே = பிறந்தே, தெருளுற்றிடு = தெளிவு பொருந்திய, ஏதமில் = குற்றமில்லாத, சிறுவன் = பிரகலாதன், மொழிப்படி = சொல் பிரகாரம், ஏந்தலாய் = பெருமையாய், மதலைக்கண் = தூணி னிடத்தில், வெஞ்சியமாய் = கடூரமான நரசிங்க ரூபமா யவ தரித்து, ஏதி = ஆயுதம், இன்றி = இல்லாமல், கனகன் = இரணியனுடைய, உயிர் = சீவனை, செகுத்து = கொன்று, ஏந்தலாய் = மேம்பாடாக, புகழ் = கீர்த்தி, பெற்ற = படைத்த, விநோதனே = விநோதங்களையுடைய, இனிது = இன்பந் தருவ தாகிய, மா = பெருமை பொருந்திய, மறை = வேதங்களை, ஓதும் = வேதாத்தியயனஞ் செய்யும்; கடன்மலை = திருக்கடன் மலை ஸ்தலத்தில், ஏந்தலாய் = முதல்வனாக, ஒளிர் = விளங்கு கின்ற, நின் = உம்முடைய, பதத்தாமரை = பாத கமல மலர், என்றும் = எப்பொழுதும், உன்ன = தியானிக்க, எனக்கு அருள் = எனக்குக் கிருபை செய்வாய், செம்மையே = செவ்வை யாக, என்றது. 16

செம்ம லாயுத னாகி யடல்புரி
 தேனு கன்றனைச் செற்றவ பத்திரிச்
செம்ம லான்றவெந் நண்ணிச் சுரர்துனி
 தீர்க்கு நாரண சீர்த்தி தருமநி
செம்ம லாதுரி யோதன னைத்தெறுந்
 தீர வண்கடன் மல்லைச் சினகரச்
செம்ம லாமுத் தொழிலு நடாத்துறுந்
 தேவ நின்பதந் தந்தருள் வாயரோ.

இதன் பொருள் :

செம் = செம்மை பொருந்திய, அலாயுதனாகி = கலப்பை ஆயுதத்தையுடைய பலராமனாக அவதரித்து, அடல்புரி = கொலை செய்யுந் தன்மையுள்ள, தேனுகன்றனை = தேனுகா சூரனை, செற்றவ = சம்மாரஞ் செய்தவனே! பத்திரி = இற குள்ள பட்சிகளின், செம்மல் = அரசனாகிய கெருடாழ்வான், ஆன்ற = விசாலமான, வெந் = முதுகில், நண்ணி = ஆரோ கணித்து, சுரர் = தேவர்கள், துனி = துன்பத்தை, தீர்க்கும் = நீக்கும், நாரண = ஆதி நாராயணா! சீர்த்தி = கீர்த்தி, தருமம் = தருமஞ்செயல், நிசம் = சத்தியம், அலா = அல்லாதவனாகிய, துரியோதனனை = துரியோதன னென்பவனை, தெறும் = அழி யச் செய்த, தீர = தீரமுள்ள கண்ணனே! வண் = வளமை

பொருந்திய, கடன்மல்லை=திருக்கடன்மல்லை, சினகரம்= திருக்கோயிலுற்று, செம்மலா=எப்பொருட்கு நாயகனென்ன, மூத்தொழிலும்=மூன்று தொழிலாகிய சிருஷ்டி-திதி-சம்மாரம், நடாத்தும்=நடத்துந் தன்மை, உறும்=பொருந்திய, தேவ= கடவுளே! நின்பதம்=உமது பரமபதம், தந்து=கொடுத்து, அருள்வாய்=கிருபை செய்வாய். அரோ—அசை. 17

தந்த றிந்த விருபிறப் பாளர்கள்
  தங்கி வாழ்கடன் மல்லைய னேமதத்
தந்த வாரண மாகன் றினைப்பொருந்
  தற்ப ராமட வாரெழிற் கண்டற்பு
தந்த ரப்படர்ந் தேயுழ லாதுநின்
  றாட்ச ரோருக மூழ்த்த வருளனத்
தந்த ரும்பெரு மூல பலத்தினை
  தாக்கு திண்டிறல் வில்லுடைக் கையனே.

இதன் பொருள்:

தந்து=கல்விநூல், அறிந்த=தெரிந்த, இருபிறப்பாளர் கள்=பிராமணர்கள், தங்கி=நெடு நாளாக இருந்து, வாழ்= வாழ்கின்ற, கடன்மல்லையனே = திருக்கடன்மல்லை க்ஷேத் திரனே! மத=மும்மதங்களைப் பொழியப்பட்ட, தந்தம்= கொம்பையுடைய, வாரணம் = குவலயாபீட மென்னும் யானை, மா=குதிரை, கன்று=பசுங்கன்று (இந்த ரூபமாக இருந்த ராக்ஷதர்களை), பொரும்=பொருது வென்ற, தற் பரா = கிருஷ்ணதேவனே! மடவார் = ஸ்திரீ சனங்களின், எழில்=அழகு, கண்டு=பார்த்து, அற்புதந் தர=அதிசயத் தைக் கொடுக்க, படர்ந்தே = நினைத்தே, உழலாது = வருந் தாது, நின்=உமது, தாள்=திருவடி, சரோருகம்=தாமரை மலர், ஊழ்த்த=நினைக்க, அருள்=கிருபை செய்வாய், அனத் தம்=கெடுதியை, தரும்=கொடுக்கும், பெரு=பெருத்த, மூல பலத்தினை=இராவணனுடைய மூலபலச் சேனைகளை, தாக்கு =மோதப்பட்ட, திண்டிறல்=மிகுந்த பராக்கிரமத்தையுடைய, வில்=கோதண்டமென்னும் பெயருள்ள வில்லினை ஏந்திய, கையனே=திருக்கரமுள்ள ஸ்ரீராமஸ்வாமியே என்றது. 18

கைப்பி டித்துக் கடம்படை மேதிவெங்
கண்ணி வர்ந்து கடுஞ்சின மாய்க்கிடக்
கைப்பிர மிக்க தென்றிசைக் கோன்வருங்
கால மாகடன் மல்லைத் தலக்கிடக்
கைப்பி றங்கிய கண்ணனே வீறுபுட்
கரமு னிக்கருள் காட்சிய நெஞ்சுவ
கைப்பி றந்தடி யேன்முனஞ் செய்யதோ
கைப்புண் மீதிற் கடிதின்வந் தாள்வையே.

இதன் பொருள்:

கைப்பிடித்து = கையிற் பிடித்து, கடம் = பாசக்கயிறு; படை = சூலாயுதம், மேதி = எருமைக்கடா, வெம் = முதுகின், கண் = இடத்தில், இவர்ந்து = ஏறி, கடும் = கடூரமாகிய, சின மாய் = கோபமாய், கிடக்கை = பூமியிலிருப்பவர்கள், பிரமிக்க = திகில்லடைய, தென்திசைக்கோன் = தெற்கு திக்கு அரச ஞகிய இயமன், வரும் = வருகிற, காலம் = அந்திய காலத்தில், மா = பெருமை பொருந்திய, கடன்மல்லை = திருக்கடன்மல்லை ஸ்தலத்தில், கிடக்கை = சயனகோலம், பிறங்கிய = பிரகாசித் திராநின்ற, கண்ணனே = கிருஷ்ணஞக அவதரித்தவனே! வீறு = பெருமையுள்ள, புட்கர முனிக்கு = புண்டரீக முனிவருக்கு, அருள் = கிருபை வாய்ந்து, காட்சிய = சேவை சாதித்தவனே! நெஞ்சு = மனம். உவகை = சந்தோஷம், பிறந்து = உண்டாகி, அடியேன் = அடிமையாகிய என், முன் = முன்னே, செய்ய = சிவந்த, தோகை = இறகுகளையுடைய, புள் = கருடப் பட்சியின், மீதில் = மேல், கடிதில் = சீக்கிரத்தில், வந்து ஆள்வை = வந்து ஆட்கொள்வாய் என்றது. ஏ—ஈற்றசை. 19

கடமலிக்குஞ் சரம்புரை தானவ
கணம தைத்தெறுங் கேசரி வேகச
கடம னையசன னத்தெய்க் காமலுன்
கான்ம லர்க்கழற் பாலி லிருத்துவாய்
மடம கன்ற முனிவரர் வானவர்
வாழ்த்த வெண்டிரை வாரணந் தன்னிற்க
மடமெ னப்படி வுற்றவ னேகடன்
மல்லை யொண்ணில யத்துறை மாயனே.

இதன் பொருள் :

கடம் மலி = மும்மதங்கள் மிகுந்த, குஞ்சரம் = யானைகளை, புரை = ஒத்த, தானவ கணமதை = இராக்கதக் கூட்டங்களை, தெறும் = சம்மாரஞ் செய்த, கேசரி = சிங்கமே! வேகம் = வேக முள்ள, சகடம் = வண்டிச் சக்கரத்தை, அனை = அனைய, சன னத்து = பிறப்பில், எய்க்காமல் = இளைக்காமல், உன் = உம் மிட (உம்முடைய), கான் மலர் = வாசனை பொருந்திய மலர், கழலில் = பாதத்தின், பாலில் = இடத்தில், இருத்துவாய் = இருக்கும்படி செய்வாய், மடம் = அறிவின்மை, அகன்ற = நீங்கிய, முனிவரர் = மகரிஷிகள், வானவர் = தேவர்கள், வாழ்த்த = தோத்திரஞ் செய்ய, வெண் = வெண்மையுள்ள, திரை = அலைகளையுடைய, வாரணந்தன்னில் = திருப்பாற்கட லில், கமடமென = ஆமையாக, படிவு = வடிவம், உற்றவனே = எடுத்தவனே ! கடன்மல்லை = திருக்கடன்மல்லை யென்னும் க்ஷேத்திரத்தில், ஒண் = அழகிய, நிலயத்து = திருக்கோயிலில், உறை = கண்வளர்ந்திருக்கிற, மாயனே = மகாவிஷ்ணுவே என்றது. ஏ—ஈற்றசை. 20

வேறு

மாயனே யடியார் பவக்கட லகற்று
மருச்சரோ ருகமலர் மடந்தை
நேயனே பகடாய் வருதயித் தியனை
நெஞ்சிரு கூறெனப் பிளந்த
ஆயனே யென்னை யாண்டருள் முதலே
யானிரை குவியப்பண் ணளித்த
வேயனே பரம பதத்தினை யருளும்
வியன்கடன் மல்லைவா ழமுதே.

இதன் பொருள் :

மாயனே = மாயையைத் தரப்பட்டவனே ! அடியார் = உமது அன்பர்களின், பவக்கடல் = சனன சமுத்திரத்தை, அகற்றும் = நீக்கும், மரு = வாசனை பொருந்திய, சரோருக மலர் = தாமரை மலரிற் பிறந்த, மடந்தை = பெண்பாலாகிய மகாலட்சுமியின், நேயனே = அன்புள்ள நாயகனே ! பக டாய் = ரிஷப ரூபமாய் வந்த அரிட்டனென்னும், தானவனை =

இராக்ஷதனை, நெஞ்சு = மார்பு, இருகூறெனை = இரண்டு கூறாக, பிளந்த = பிளந்த, ஆயனே = ஆயர் குலத்தில் வளர்ந்த வனே! என்னை = என்னை, ஆண்டருள் = அவ்விடத்தில் கிருபை செய்யும், முதலே = சர்வத்துக்கும் முதல்வனே! ஆனிரை = பசுக்கூட்டங்கள், குவிய = ஓரிடம் சேர, பண் = இராகங்கள், அளித்த = கொடுத்த, வேயனே = மூங்கிற்குழலை யுடையவனே! பரமபதத்தை = ஸ்ரீவைகுந்தத்தை, அருளும் = கொடுக்கும், வியன் = பெருமை பொருந்திய, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, வாழமுதே = வாழும்படியாகிய அமுதம் போன்றவனே! என்றது. 21

வாழ்வினைச் சிறப்பென் றுன்னியே நெடிய
மாற்குர வையிலுழ லாமற்
றாழ்விலா நினது பதந்தனை வருடத்
தமியனுக் கிருவர மருள்வாய்
ஆழ்கலி யகட்டிற் பொறைமிதந் திடச்செய்
தாண்டிடு மாதியே நினைத்தோர்
ஊழ்வினை யகற்றுந் திருக்கடன் மல்லை
யுவந்துறை யாயர்க ளேறே.

இதன் பொருள்:

வாழ்வினை = வாழுஞ்செயலை, சிறப்பு = மேன்மை, என்றுன்னியே = என்று நினைத்தே, நெடிய = பெருத்த, மால்குரவை = ஆசையாகிய சமுத்திரத்தில், உழலாமல் = வருத்தப்படாமல், தாழ்விலா = தாழ்வாகிய தன்மையில்லாத, நினது = உமது, பதந்தனை = திருவடியை, வருட = தடவ, தமியனுக்கு = தனியனாகிய எனக்கு, இருவரம் = பெரியவரத்தை, அருள்வாய் = கொடுப்பாய், ஆழ்கலி = ஆழமுள்ள சமுத்திரத்தின், அகட்டில் = மத்தியில், பொறை = மலை, மிதந்திடச்செய் = மிதக்கும்படி செய்து, ஆண்டிடும் = பிரகலாதனை ஆட்கொண்ட, ஆதியே = முதன்மையானவனே! நினைத்தோர் = எண்ணின அன்பர்கள், ஊழ்வினை = முன்செய்த கொடிதான வினைகளை யெல்லாம், அகற்றும் = நீங்கச் செய்கின்ற, திருக்கடன்மல்லை = திருக்கடன்மல்லை க்ஷேத்திரத்தில், உவந்து = சந்தோஷித்து, உறை = சயனித்திருக்கின்ற, ஆயர்களேறே = இயாதவர்கள் சிங்கம் போன்றவனே! என்றவாறு. 22

ஆய்ந்தறி வினர்மெய்த் தவர்சுரர் புனிதன்
அம்புயன் சம்புவுந் துதிக்குந்
தேய்ந்தநுண் மருங்குச் செல்விவாழ் நிறனே
சிறியனை யாள்வனத் தொடலை
வாய்ந்தவொண் புயனே மலர்ப்பொதும் பினிலே
மடந்தையர் கதுப்புகண் டுதக
மேய்ந்தகா ரென்று சிகிநடங் குயிற்று
மிளிர்கடன் மல்லைவாழ் முதலே.

**இதன் பொருள் :**

**ஆய்ந்த**=நூல்களை ஆராய்ந்த, அறிவினர்=அறிவை யுடைய மேலோர், மெய்=உண்மையுள்ள, தவர்=தவத்தை யுடைய ரிஷிகள், சுரர்=தேவர்கள், புனிதன்=இந்திரன், அம்புயன்=தாமரைமலரிற் பிறந்த பிரமதேவன், சம்பு=பரம சிவன், துதிக்கும்=தோத்திரஞ் செய்யும், தேய்ந்த=சிறுத்த, நுண்=நுட்பமாகிய, மருங்கு = இடையுள்ள, செல்விவாழ்= மகாலட்சுமி வாசஞ்செய்யும், நிறனே=மார்பையுடையவனே ! சிறியனை=சிறியவனாகிய என்னை, ஆள்=அடிமைகொள்வாய், வனத்தொடலை=திருத்துழாய் மாலை, வாய்ந்த=பொருந்திய, ஒண் = அழகிய, புயனே = தோளையுடையவனே ! மலர்ப் பொதும்பினிலே=மலர்ச் சோலையினிடத்திலே, மடந்தையர்= ஸ்திரிகளுடைய, கதுப்பு=கூந்தலை, கண்டு=பார்த்து, உதகம்= கடலின் நீரை, மேய்ந்த=உண்ட, காரென்று=மேகம் என்று, சிகி=மயில், நடங்குயிற்று=நடனஞ் செய்கின்ற, மிளிர்= பெருமை பொருந்திய, :கடன்மல்லை = திருக்கடன்மல்லை, வாழ்=வாழ்கின்ற, முதலே=முதன்மையான கர்த்தனே ! என்றது. 23

முதலைவெண் முறுவ லார்தமைப் புகழ்ந்து
முன்னியே யிருப்பனா யினுநின்
முதலைவண் பதத்தை யருள்கடன் மல்லை
முதமுட னமர்ந்தமா தவனே
பதலைமண் டலியா யளக்கம லமுமாய்ப்
பணைக்கவ மந்தர மென்னும்
பதலைகொண் டுததி கடைந்துமுன் சுதையைப்
பண்ணம ரர்க்கருண் முகிலே.

**இதன் பொருள் :**

முதலை=மயிலினிறகடி குருத்து போன்ற, வெண்= வெண்மையுள்ள, முறுவலார்=தந்தங்களையுடைய மாதர்களை, புகழ்ந்து=புகழ்ச்சி செய்து, முன்னி=நினைத்து, இருப்பனாயி

னும் = இருக்கிறவனானவனும், நின் = உமது, முதல் = முதன்மை, ஐ = அழகு, வண் = வளப்பமுள்ள, பதத்தை = வைகுந்தத்தை, அருள் = தருவாய், கடன்மல்லை = திருக்கடன்மல்லை க்ஷேத்திரத்தில், முதமுடன் = சந்தோஷத்துடன், அமர்ந்த = சயனம் பொருந்திய, மாதவனே = மாதவனென்னும் பெயருள்ளவனே! பதலை = சாடி, மண்டலியாய் = பூமியாகவும், அளை = தயிர், கமலமுமாய் = நீராகவும், பணை = பருத்த, கவம் = மத்து, மந்தரமென்னும் = மந்தரமென்னும் பெயருள்ள, பதலை = மலையை, கொண்டு = கொண்டு, உததி = திருப்பாற்கடல், கடைந்து = குடைந்து, முன் = முன்னே, சுதையை = அமுதத்தை, பண் = இசையுள்ள, அமரர்க்கு = தேவர்களுக்கெல்லாம், அருள் = கொடுத்த, முகிலே = மேகம் போன்றவனே! என்றது. 24

முகிலினந் தவழ வோங்குமுய் யான
  முருகுபாய் பணைக்கடன் மல்லை
மகிழுட னமர்ந்த வகிலநா யகனே
  வாசியாந் தகுவனைச் சவட்டு
மிகல்புயா சலனே ஞானம தளித்தே
  வியலுட னென்னையாட் கொள்வாய்
புகலுலா வியவைம் படையனே பூட்கைப்
  பொலிமருப் பிறுத்திடும் புறனே.

**இதன் பொருள் :**

முகிலினம் = மேககூட்டம், தவழ = தவழும்படி, ஓங்கு = உயர்ந்த, உய்யானம் = பூந்தோட்டம், முருகு = தேன், பாய் = பாய்கின்ற, பணை = வயல் சூழ்ந்த, கடன்மல்லை = திருக்கடன்மல்லை ஸ்தலத்தில், மகிழுடன் = மகிழ்ச்சியுடன், அமர்ந்த = சயனம் பொருந்திய, அகில நாயகனே = சகலத்துக்கும் முதல்வனே! வாசியாம் = குதிரை ரூபமாகவந்த, தகுவனை = இராக்ஷதனை, சவட்டும் = வென்ற, இகல் = வலிமை பொருந்திய, புயாசலனே = புயம் மலைபோன்றவனே! ஞானமது = மெய்யறிவை, அளித்து = கொடுத்து, இயலுடன் = அழகுடன், என்னை = என்னை, ஆட்கொள்வாய் = அடிமை கொள்வாய், புகல் = வெற்றி, உலாவிய = பொருந்திய, ஐம்படையனே = சங்கு, சக்கரம், சார்ங்கம், தண்டு, வாள் என்னும் படையுள்ளவனே! பூட்கை = குவலயாபீடமென்னும் யானையின், பொலி = பிரகாசமுள்ள, மருப்பு = கொம்பை, இறுத்திடும் = ஒடித்திடும், புறனே = வீரத்துவமுள்ளவனே! என்றது. 25

புறவதை யளித்தோன் மரபினி லுதித்த
புங்கவ பஞ்சவ ருக்கா
நறவுதோய்ந் தொளிரும் வலம்புரித் தொடலை
நாதன்முன் னுறையுளைக் கேட்ட
இறைவனே இலஞ்சிப் புயலினை மருவு
மியற்கடன் மல்லையா ரமுதே
அறம்பொரு ளின்பம் வயினெனும் பொருளை
யடியனுக் களிப்பதுன் கடனே.

இதன் பொருள் :

புறவு அதை = புறா என்னும் பட்சியை, அளித்தோன் = காத்த சிபிராசன், மரபினில் = வமிசத்தில், உதித்த = இராம ஸ்வாமியாகப் பிறந்த, புங்கவ = உயர்வு உள்ளவனே! பஞ்ச வருக்கா = பாண்டவர்களுக்கு, நறவு = தேன், தோய்ந்து = சார்ந்து, ஒளிரும் = பிரகாசிக்கும், வலம்புரித் தொடலை = நந்தியாவட்டமாலைதரித்த, நாதன்முன் = துரியோதன ராசன் முன்னே, உறையுளை = இராச்சியத்தை, கேட்ட = கேட்ட, இறைவனே = எனது ஆண்டவனாகிய கண்ணபிரானே! இலஞ்சி = மதிலானது, புயலினை மருவும் = மேகத்தையளாவும், இயல் = இயல்புள்ள, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, ஆர் = நிறைந்த, அமுதே = பெருமையுடையவனே! அறம் = தருமம், பொருள் = பொன், இன்பம் = சுகம், வயின் = வீடு, எனும் = என்று சொல்லும், பொருளை = வஸ்து[க்]களை, அடியனுக்கு = உமது தாசனாகிய எனக்கு, அளிப்பது = கொடுப்பது, உன்கடனே = உமது கடமை; என்றது. 26

கடலினிற் றரங்கங் கண்ணுறு மரத்தின்
கலத்துமீ காமன்போற் சனனக்
கடலினிற் கரையை யணுகவோர் வகையுங்
காணிலா வெனைப்புரந் தளிப்பாய்
அடலினிற் சிறந்த விருடிய ரிறைஞ்சு
மணிகடன் மல்லைவாழ் வேபண்
டடலினிற் றசான னன்முடி துணித்த
வண்ணலே விமலவா ழுரனே.

இதன் பொருள் :

கடலினில் = சமுத்திரத்தில், தரங்கம் = கடற்கரையை, கண்ணுறு = கண்ணுக்குத் தோற்றும லையும், மரத்தின் கலத்து = மரத்தினால் செய்த கப்பலின், மீகாமன்போல் = மாலுமியைப்போல, சனனக் கடலினில் = பிறவிச் சமுத்திரத்

தில், கரையை யணுக=நீந்திக்கரையேற, ஓர்வகையும்=ஒரு வகையும், காணிலா=காணாத, எனை=என்னை, புரந்து= காத்து, அளிப்பாய்=இரட்சிப்பாய், அடலினில்=பெருமை யில், சிறந்த=மிகுந்த, இருடியர்=மகரிஷிகள், இறைஞ்சும்= வணங்கும், அணி=அழகு பொருந்திய, மல்லை=திருக்கடன் மல்லை, வாழுவே=வாழ்க்கையுடையவனே! பண்டு=முன்னம், அடலினில்=உயுத்தத்தில், தசானனன்=பத்து முகத்தை யுடைய இராவணன், முடி=தலைகளை, துணித்த=அறுத்த, அண்ணலே=பெருமையுடைய இராமஸ்வாமியே! விமலை=, மகாலட்சுமி, வாழ்=வாழ்கின்ற, உரனே=மார்பையுடைய வனே! என்றது. 27

உரமிகு பூத வடிகள்வந் துதித்த
வொண்மைசேர் திருக்கடன் மல்லைப்
புரமிளிர் வசந்த தண்டுழாய்த் தெரியற்
புநிதனே சுரபியைப் புரக்க
கரமலர்த் தலத்திற் பருப்பத மெடுத்த
கத்தனே வைணவர் பக்தி
பரவிட வருள்வாய் சேனைவா ரணங்கள்
பதறிடத் தொனித்தவா ரணனே.

இதன் பொருள்:

உரமிகு=ஞானமிகுந்த, பூதவடிகள்=பூதத்தாழ்வார், வந்துதித்த=குருக்கத்தி மலரில் அவதாரஞ்செய்த, ஒண்மை சேர்=நன்மை பொருந்திய, திருக்கடன்மல்லை=திருக்கடன் மல்லை யென்னும் பெயருள்ள, புரம்=நகரத்தில், மிளிர்= விளங்கிய, வசந்தம்=வாசனை பொருந்திய, தண்=குளிர்ந்த, துழாய்=திருத்துளப, தெரியல்=மாலை தரித்த, புநிதனே= பரிசுத்த முடையவனே! சுரபியை=பசுக் கூட்டங்களை, புரக்க=இரட்சிக்க, கரம்=கையாகிய, மலர்த்தலத்தில்=மல ரிடத்தில், பருப்பதம்=கோவர்த்தன மென்னு மலையை, எடுத்த=குடையாக எடுத்த, கத்தனே=கிருஷ்ணவதாரனே! வைணவர்=பாகவதர், பக்தி=அன்பு, பரவிட=அதிகம் விளங்க, அருள்வாய்=கிருபை செய்வாய், சேனை வாரணங் கள்=சேனசமுத்திரங்கள், பதறிட=விரைந்து அலறும்படி, தொனித்த=தொனிசெய்த, வாரணனே=பாஞ்சசன்னிய முடையவனே! என்றது. 28

வாரண மெனுமற் குவலயா பீட
மருப்பினை யொசித்தமா தவனே
பூரண மதிய மெனவளர் வதனப்
பூமகண் மருவும்யா தவனே
ஆரண முழங்குந் திருக்கடன் மல்லை
யணிசின கரத்தின்கண் வளரு
நாரண வடியேன் பவத்தினை யகற்றி
நகுசெறி நின்பத மருளே.

இதன் பொருள் :

வாரணம் எனும்=யானை என்று சொல்லும்—குவலயா பீடத்தின், மல்=வலிமையுள்ள, மருப்பினை = கொம்பை, ஒசித்த = ஒடித்த, மாதவனே = மாதவனென்னும் பெயரை யுடையவனே! பூரணம் = பதினாறு கலைகளும் நிறைந்த, மதியம்=சந்திரன், என வளர்=என்று சொல்லும்படி வளர் கின்ற, பூமகள்=இலட்சுமி பிராட்டி, மருவும்=சேரும், யாத வனே=ஆயர்குலத்தில் வளர்ந்தவனே! ஆரணம்=வேதங் கள், முழங்கும்=(வேதாத்தியாயம்) [வேதாத்தியயனம்] செய் யும் வேதகோஷ்டமுள்ள, திருக்கடன்மல்லை=திருக்கடன் மல்லை க்ஷேத்திரத்தில், அணி=அழகிய, சினகரத்தில்=திருக் கோயிலில், கண்வளரும்=யோகநித்திரை செய்யா நின்ற, நாரண=ஸ்ரீமந் நாராயணா! அடியேன்=உமது அடிமை யாகிய என், பவத்தினை=பாவங்களை, அகற்றி=நீக்கி, நகு செறி = பிரகாசமிகுந்த, நின்பதம்=உமது பரமபதம், அருளே =கொடுத்தருள்வாய், என்றது. ஏ—ஈற்றசை. 29

அருண்மிகு படிவ ரிறைஞ்சவா ரணத்தி
லம்பண வடிவுகொண் டினிதாய்
தெருண்மிகு மனத்தே வருக்குண வளித்த
சிற்பரா மெய்ப்பரா பரனே
மருண்மிகு நயன வருணமங் கையர்கள்
மாழ்கலென் றனையுறு தருள்வாய்
இருண்மிகு விசும்பு கண்டுயிற் பொழில்சூழ்
இயற்கடன் மல்லைவாழ் கோவே.

இதன் பொருள் :

அருள்மிகு = கிருபை மிகுதியாகப் பெற்ற, படிவர் = ரிஷிகள், இறைஞ்ச = வணங்க, வாரணத்தில் = திருப்பாற்கடலில், அம்பணம் = கூர்மமாக, வடிவுகொண்டு = ரூபங்கொண்டு, இனிதாய் = இஷ்டத்துடன், தெருள்மிகு = தெளிவு மிகுந்த, மன = மன(து)[மு]டைய, தேவருக்கு = தேவர்களுக்கு, உணவு = அமுதத்தை, அளித்த = கொடுத்த, சிற்பரா = கடவுளே! மெய்ப் பராபரனே = மெய்மையாய் விளங்கும் பராபர வஸ்துவே! மருள்மிகு = மருட்சி மிகுந்த, நயனம் = கண்களுள்ள, அருணம் = மான்போன்ற சாயலுள்ள, மங்கையர்கள் = ஸ்திரீசனங்கள், மாழ்கல் = மயக்கம், என்றனை = என்னை, உறுது = பொருந்தாது, அருள்வாய் = கிருபைசெய்வாய், இருள்மிகு = இருள் மிகுந்த, விசும்பு = மேகங்கள், கண்துயில் = நித்திரை செய்யாநின்ற, பொழில் = சோலைகள், சூழ் = சூழ்ந்த, இயல் = அழகு பொருந்திய, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, வாழ் = வாழ்கின்ற, கோவே = கர்த்தனே! என்றது. 30

வேறு

வேத னத்துறு வாய்கொளும் விண்டுவை
வேத னத்தனை மெய்கடன் மல்லைசு
வேத னத்தனை வேட்பவர் சந்ததம்
வேத னத்தமில் விண்கத்த ராவரே.

இதன் பொருள் :

வே = மூங்கிற்குழலை, தன் = தனது, அத்துறு = செம்மை பொருந்திய, வாய்கொளும் = வாயினிடம் வைத்த, விண்டுவை = கிருஷ்ணனை அவதரித்தவனை, வேதன் = பிரமதேவன், அத்தனை = தந்தையானவனை, மெய் = உண்மை விளங்கிய, கடன்மல்லை = திருக்கடன்மல்லையில் கண்வளர்கின்ற, சுவேதம் = வெண்மை பொருந்திய, நத்தனை = பாஞ்சசன்னியமுள்ளவனை, வேட்பவர் = விரும்பித் துதிப்பவர், சந்ததம் = எப்போதும், வேது = வேதையாகிய, அனத்தம் = அனர்த்தம், இல் = இல்லாத, விண் = சுவர்க்கவாசரான, கத்தராவரே = தேவர்களாவார், என்றது. 31

கத்த னேயருட் காரிகை மேவுமா
கத்த னேகடன் மல்லைய னேபிநா
கத்த னுக்கரன் காணருந் தேவேமா
கத்தரை யளித்த கந்த ரத்தனே.

இதன் பொருள் :

கத்தனே = கடவுளே, அருள் = செல்வத்தைக் கொடுக்கப்பட்ட, காரிகை = மகாலட்சுமி, மேவும் = வாசஞ் செய்யும், ஆகத்தனே = மார்புடையவனே ! கடன்மல்லையனே = [திருக்] கடன்மல்லை யென்னுந் திருப்பதி யுடையவனே ! பிநாகம் = பிநாகமென்னும் பெயருள்ள, தனுக்கரன் = வில்லைக்கையிலே பிடித்த சிவபெருமான், காணரும் = காண்பதற்கு அருமையாகிய, தேவே = தேவனே ! மாகத்தரை = ஆகாயத்தில் வசிக்கும் சுரரை, அளித்த = இரட்சித்த, கந்தரத்தனே = மேகம் போன்ற திருவுருவமுள்ளவனே ! என்றது. 32

கந்த நானக் கணிகையர் சேக்கைமோ
கந்த ணிந்துன் கழறொழ வாற்றுசு
கந்த தைந்த பொழிற்கடன் மல்லைய
கந்த கைப்பொலி வாரிசக் கண்ணனே.

இதன் பொருள் :

கந்தம் = வாசனையுள்ள, நானம் = கஸ்தூரி தரித்த, கணிகையர் = பரத்தையர், சேக்கை = தனபாரத்தின், மோகம் = மயக்கம், தணிந்து = தணிவாகி நீங்கி, உன் = உமது, கழல் = திருவடி, தொழ = வணங்க, ஆற்று = செய், சுகம் = கிளிகள், ததை = நெருங்கிய, பொழில் = சோலைகள் சூழ்ந்த, கடன்மல்லை = திருக்கடன்மல்லை க்ஷேத்திரத்தில், அகம் = இடம், தகை = அலங்காரமாக, பொலி = விளங்கிய, வாரிசக் கண்ணனே = தாமரைமலர் போன்ற நேத்திரமுள்ள விஷ்ணுவே ! என்றது. 33

கண்ணிய புட்கரற் கருள்செய் யுந்துழாய்க்
கண்ணி மார்ப கடன்மல்லை யாலய
கண்ணி யங்கம லாபுவிக் காதலாங்
கண்ணி போந்திடா தாள்கடல் வண்ணனே.

இதன் பொருள் :

கண்ணிய = பெருமை பொருந்திய, புட்கரற்கு = புண்டரீக மகரிஷிக்கு, அருள்செய் = கிருபை செய்த, துழாய்க்கண்ணி = துளபமாலை, மார்ப = மார்பையுடையவனே ! கடன்மல்லை = திருக்கடன்மல்லை நகரத்தில், ஆலயம் = கோயில், கண் = இடத்தில், இயங்கும் = வசிக்கும், அமலா = கர்த்தனே ! புவிக்காதலாம் = பூமிக்கு ஆசையாம், கண்ணி = வலையில், போந்திடாது = அகப்பட்டு வருந்தாது, ஆள் = அடிமைகொள்வாய், கடல் வண்ணனே = கருங்கடல்போலும் திருமேனியனே ! என்றது. 34

வணநி லாவு நவமணி விற்குமா
வணநெ ருங்கு கடன்மல்லை வாழுமு
வணநி ராமய னைப்பணி மாந்தரு
வணநி கப்பதம் வாய்ந்துறை வாரரோ.

இதன் பொருள் :

வணம் = அழகு, நிலவு = பிரகாசமுள்ள, நவமணி = ஒன்பது வகை இரத்தினங்கள், விற்கும் = விற்கின்ற, ஆவணம் = கடைகள், நெருங்கு = நெருங்கியிருக்கின்ற, கடன்மல்லை = திருக்கடன் மல்லைக் கோயிலில் கண்வளர், வாழ் = வாழும், உவணம் = கருடனை வாகனமாகக் கொண்ட, நிராமயனை = கடவுளை, பணி = வணங்கும், மாந்தர் = மனிதர், உவணம் = உயர்வுள்ள. நிகமம் = ஒளிவுபொருந்திய, பதம் = பரமபதத்தில், வாய்ந்து = தங்கி, உறைவார் = வாசஞ்செய்வார். அரோ—அசைச்சொல். 35

வாரி யற்றன மங்கைய ரார்வமாம்
வாரி யிற்புகு தாதெனை யாள்மணி
வாரி யந்த முறுங்கடன் மல்லைகண்
வாரி யண்ணிற முற்றருளிர் மாதவா.

இதன் பொருள் :

வார் = கச்சணிந்த, இயல் = அழகு பொருந்திய, தனம் = தனபாரமுள்ள, மங்கையர் = ஸ்திரீகள், ஆர்வமாம் = ஆசையாகிய, வாரியில் = சமுத்திரத்தில், புகுதாது = போகாது, எனை = என்னை, ஆள் = அடிமை கொள்வாய், மணி = மணிகள் பதித்த, வாரி = மதில், அந்த முறும் = அழகு செய்கின்ற,

கடன்மல்லைக்கண் = திருக்கடன் மல்லையிடத்தில், வாரி = கறுத்தநீரை, அண் = ஒத்த, நிறம் = மேனி, உற்றொளிர் = பொருந்திப் பிரகாசிக்கின்ற, மாதவா = மாதவனென்னுந் திருநாமனே ! என்றது. 36

மாதி ரத்தரு வைத்திரை வாரமன்
மாதி ரத்திற் கொணர்ந்தவ வாளனே
மாதி ரக்கடன் மல்லைய னேகரை
மாதி ரத்தை யுவந்தளி தன்மையே.

**இதன் பொருள் :**

மாதிரத் தரு = அந்தர லோகத்தில் இருந்த பாரிசாத விருட்சத்தை, திரை = அலைகள் பொருந்திய, வாரம் = சமுத்திரம், மன் = மன்னிய, மாதிரத்தில் = பூலோகத்தில், கொணர்ந்தவ = கொண்டு வந்தவ, ஆள்எனை = என்னை ஆளாகக் கொள்வாய், மா = இலட்சுமி பிராட்டி, திரம் = ஸ்திரமாக விளங்கிய கடன்மல்லையனே = திருக்கடன்மல்லை என்னும் க்ஷேத்திரனே! கரை = ஆதிமூலமே என்று அழைத்த, மாதிரத்தை = கஜேந்திரன் என்னும் யானையை, உவந்து = சந்தோஷித்து, அளி = காத்த, தன்மையே = குணம் போலவே என்றவாறு. 7

வந்த யர்த்து மிடித்துயர் மாயவு
வந்த ருட்கண் மதலைமே னோக்குக
வந்தன் மொய்ம்பிகுத் தாய்மன் னடியர்ப
வந்த புங்கடன் மல்லைப்பு ரத்தனே.

**இதன் பொருள் :**

வந்து அயர்த்தும் = வந்து வருத்தப்படுகின்ற, மிடித்துயர் = தரித்திரமாகிய துயரம், மாய = மாய்ந்து நீங்கிப் போக, உவந்து = சந்தோஷித்து, அருட்கண் = கிருபாநோக்கம், மதலை = இச்சிறுவன், மேல் = மேல், நோக்கு = பார்த்தருள்வாய், கவந்தன் = கவந்தனென்னும் இராக்ஷதன், மொய்ம்பு = தோளை, இகுத்தாய் = அறுத்தாய், மன்னு = மிகுந்த, அடியர் = அன்பர்கள், பவம் = பாவம், தபும் = கெடும் மகிமையுள்ள, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, புரத்தனே = நகரத்தை யுடையவனே ! என்றவாறு. 38

தனத்தன் புத்திரர் சாபந் தவிர்த்தசந்
தனத்தண் சோலைக் கடன்மல்லை சார்ங்கவிற்
றனத்தன் றாள்பணி வார்க்குத் தழைந்தசே
தனத்த கைப்பொறை தன்மை யமருமே.

இதன் பொருள் :

தனத்தன் = திரவியமுள்ளவனாகிய குபேரன், புத்திரர் = நளகூபரன் மணிக்கிரீவன் என்னும் இரண்டு பிள்ளைகள், சாபம் = மருதமரமாயிருந்த சாபத்தை, தவிர்த்த = நீக்கி இரட்சித்த, சந்தனத்தண்சோலை = குளிர்ந்த சந்தனத் தோப்புகள் சூழ்ந்த, கடன்மல்லை = திருக்கடன்மல்லையிலிருக்கும், சார்ங்க வில் தன் = சார்ங்கவில்லைத் தன்னுடைய, அத்தன் = அஸ்தத்திலுடையவன், தாள் = திருவடி, பணிவார்க்கு = சேவிப்பவர்க்கு, தழைந்த = தழைவாகிய, சேதனம் = அறிவு, தகை = குணம், பொறை = சாந்தத் தன்மை, அமரும் = பொருந்தும்; என்றது. ஏ—ஈற்றசை. 39

அஞ்ச வீட்டம டர்துயிற் கிஞ்சுக
அஞ்ச ரோச வயக்கடன் மல்லைவாழ்
அஞ்ச னப்புரன் றாணினை மின்பவம்
அஞ்ச லித்துத் துதிசெய் தகலுமே.

இதன் பொருள்:

அஞ்சம் = அன்னத்தின், ஈட்டம் = கூட்டம், அடர் = நெருங்கி, துயில் = நித்திரை செய்யா நின்ற, கிஞ்சுகம் = சிவந்த, அம் = அழகிய, சரோசம் = தாமரைமலர் நிறைந்த, அயம் = தடாகஞ் சூழ்ந்த, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, வாழ் = வாழ்கின்ற, அஞ்சனப்புரன் = கறுத்த தேகத்தையுடையவன், தாள் = திருவடி, நினைமின் = தியானஞ் செய்யுங்கள், பவம் = உங்களைப் பற்றியிருக்கும் பாவங்கள், அஞ்சலித்து = கும்பிட்டு, துதிசெய்து, அகலும் = நீங்கிப்போம்; என்றது. ஏ—ஈற்றசை. 40

வேறு

செய்யகடன் மல்லைவளர் சேடவணை துஞ்சு
மையனை நினைந்துபுக ழன்புலகு ளோர்கண்
மெய்யரு மகிழ்ச்சியுறு வீறுகதி தன்னை
யையமிலை தின்றியே யணைந்திடுவர் மன்னே.

**இதன் பொருள் :**

செய்ய = செவ்வையாகிய, கடன்மல்லை = திருக்கடன் மல்லை, வளர் = வளர்கின்ற, சேடவணை = ஆதிசேஷ சயனத்தில், துஞ்சும் = நித்திரை செய்யாநின்ற, ஐயனை = சுவாமியை, நினைந்து = தியாநஞ் செய்து, புகழ் = துதி செய்யும், அன்பு = பக்தியுள்ள, உலகுளோர்கள் = உலகத்திலுள்ளவர்கள், மெய்யரும் = சத்திய வசனமுள்ள பாகவதரும், மகிழ்ச்சி = சந்தோஷம், உறு = பொருந்தும், வீறுகதி = பெருமையுள்ள மோக்ஷ ஸ்தலத்தை, ஐயம் = சந்தேகம், இஃதின்றியே = இஃதில்லாமல், அணைந்திடுவர் = சேர்ந்திடுவர். மன்னோ—ஈற்றசை. 41

அணைந்திடுமனைச்சுதர்பொ னம்புவியின் வேட்கை
இணங்கிய மனத்தனெனி னுந்தயை யியங்கி
வணங்கிளரு நின்பதம் வழங்கியெனை யாள்வாய்
மணங்குலவு காக்கொள்கடன் மல்லைவளர் தேவே.

**இதன் பொருள் :**

அணைந்திடும் = சேர்ந்திடும், மனை = பெண்சாதி, சுதர் = பிள்ளைகள், பொன் = திரவியம், அம்புவி = பூமி இவைகளின், வேட்கை = ஆசை, இணங்கிய = உடன்பட்ட, மனத்தனெனினும் = மனமுள்ளவனென்றாலும், தயையியங்கி = தயவு கூர்ந்து, வணம் = அழகு, கிளரும் = பிரகாசிக்கும், நின்பதம் = உமது பரம பதம், வழங்கி = கொடுத்து, எனையாள்வாய் = என்னை அடிமையாகக் கொள்வாய், மணம் = வாசனை, குலவு = பொருந்திய, காக்கொள் = சோலை சூழ்ந்த, கடன்மல்லை வளர் = திருக்கடன்மல்லையில் வளர், தேவே = கர்த்தனே! என்றது. 42

தேமருவருக்கைகனி தேமதுர மோடி
மாமருவு செய்யகடன் மல்லைவளர் கோமான்
தாமருவு புட்கர துணைக்கழல் கணிப்பாய்
பாமருவு மாவல்கொடு பாழ்படுபு னெஞ்சே.

இதன் பொருள் :

தேம்=மதுரம் பொருந்திய, வருக்கைகனி=பலாப்பழத்தின், தேம்=வாசனையுள்ள, மதுரம்=சாறுகள், ஓடி, மாமருவு=கழனிகளில் பாயும், செய்ய=செவ்வையாகிய, கடன்மல்லைவளர்=திருக்கடன்மல்லை க்ஷேத்திரத்தில் வளர்கின்ற, கோமான்=சிறந்தோன், தூமருவு=பரிசுத்தம் பொருந்திய, புட்கரம்=தாமரை மலர் போன்ற, துணை=இரண்டாகிய, கழல் = பாதங்களை, கணிப்பாய் = தியானஞ் செய்வாய், பாமருவு=பரவுதல் பொருந்திய, ஆவல்கொடு=ஆசை பொருந்திய, பாழ்படும்=கெடுதியடைகின்ற, புன்னெஞ்சே=அற்பமாகிய மனமே என்றது. 43

நெஞ்சறிய நின்புகழ் நிகழ்த்தவறி வில்லோன்
றஞ்சுத னழைப்பநனி தாவில்கதி யீந்த
கஞ்சமலர் செய்யகடன் மல்லைவளர் கண்ணன்
செஞ்சலச பாதநினை திமிரமறு நெஞ்சே.

இதன் பொருள் :

நெஞ்சறிய=மனம் அறிந்து, நின்புகழ்=உமது புகழுள்ள திருநாமங்களை, நிகழ்த்த=சொல்ல, அறிவில்லோன்=புத்தியில்லாதஅசாமீளன், தன்சுதன்=தன் புத்திரனாகிய நாராயணனை, அழைப்ப=தனது அந்திய காலத்தில் நாரா, நாரா என்று கூப்பிட, நனி=மிகுந்த, தாவில்=இடத்தில், கதி=மோட்சம், ஈந்த=கொடுத்த, கஞ்சமலர்=தாமரை மலர், செய்ய=செவ்வையாக நிறைந்த, புட்கரணியுள்ள, கடன்மல்லை=திருக்கடன்மல்லை, வளர்=வளர்கின்ற, கண்ணன்=கிருஷ்ணமூர்த்தியின், செஞ்சலசம்=சிவந்த தாமரை மலர் போன்ற, பாதம்=பாதங்களை, நினை=சிந்தனை செய்வாய், திமிரமறும்=அஞ்ஞானமாகிய இருள் நீங்கும், நெஞ்சே! என்றது. ஏ—ஈற்றசை. 44

சேய்வடிவு கொண்டுநெரு நற்கொடிய செய்கை
பேய்பவன முண்டிடு பிறங்குகடன் மல்லை
வாய்கடவு ளின்பதம் வணங்கிபுகல் மாந்தர்
ஓய்வுதரு துன்பினை யொழித்திடுவ ரன்றே.

**இதன் பொருள் :**

சேய் = சிறுபிள்ளையாக, வடிவுகொண்டு = உருவுங் கொண்டு, நெருநல் = முன்னாளில், கொடிய = கொடிதாகிய, செய்கை = செய்கையுள்ள, பேய் = பூதகியின், பவனம் = உயிர், உண்டிடு = குடித்த, பிறங்கு = பிரகாசம் பொருந்திய, கடன் மல்லை = திருக்கடன்மல்லைத் திருப்பதியில், வாய் = வாசஞ் செய்கின்ற, கடவுளின் = கர்த்தனின், பதம் = பாதங்களை, வணங்கி = சேவித்து, புகல் = தோத்திரஞ் செய்யும், மாந்தர்கள் = மனிதர்கள், ஓய்வு = ஓயுங்குணத்தை, தரு = கொடுக்கும், துன்பினை = துன்பங்களை, ஒழித்திடுவர் = நீங்குவர்கள் என்றது. அன்று ; ஏ—ஈற்றசை. 45

அன்றரசர் சங்கமதி லாயதுகி லீவா
யென்றுமுறை யிட்டழ விரங்கியருள் செய்த
மன்றுகடன் மல்லையனை வாழ்த்தின்மட நெஞ்சே
நன்றுவகை பூஞ்சரண நண்ணியுறை வாயே.

**இதன் பொருள் :**

அன்று = முன்னாளையில், அரசர் சங்கமதில் = துரியோதனன் முதலிய இராஜர்கள் கூடியிருந்த சபையில், ஆய = ஆயர்பாடியில் வளர்ந்த கிருஷ்ணா ! துகிலீவாய் = மானங் கெடாது வஸ்திரந்தருவாய், என்று = என்று, முறையிட்டு = முறைமைசொல்லி, அழ = துரோபதை புலம்ப, இரங்கி = மனங் கனிந்து, அருள்செய்த = கிருபைசெய்த, மன்று = மங்களாகரமுள்ள, கடன்மல்லையனை = திருக்கடன்மல்லைத் தலசயனனை, வாழ்த்தின் = தோத்திரஞ் செய்யின், மடம் = அறிவின்மையுள்ள, நெஞ்சே = மனமே ! நன்றுவகை = நல்ல சந்தோஷத்துடன், பூஞ்சரணம் = அழகிய பாதங்களை, நண்ணி = சேர்ந்து, உறைவாய் = வாசஞ்செய்வாய், என்றது. ஏ—ஈற்றசை. 46

வாய்ந்திடுபி றங்குகடன் மல்லைதனின் மேவும்
பாந்தள்துணை துஞ்சுபர மாத்மசெக தீசன்
காந்தண்மலர் சேவடிக ணிக்கின்மட நெஞ்சே
சாந்தமுடன் விண்ணின்மிசை சார்வையிது திண்ணம்.

இதன் பொருள் :

வாய்ந்திடு=பொருந்திய, பிறங்கு=பிரகாசமுள்ள, கடன் மல்லைதனின்=திருக்கடன்மல்லை க்ஷேத்திரத்தில், மேவும்=சயனம் பொருந்திய, பாந்தளணை=ஆதிசேஷன் பேரில், துஞ்சும்=யோக நித்திரை செய்யாநின்ற, பரமாத்தும=கர்த்தனே! செகதீசன்=பூமிக்கு நாயகனானவன், காந்தள்மலர்=செங்காந்தள்மலர் போன்ற, சேவடி=சிவந்த பாதங்களை, கணிக்கின்=தியானிக்கில், மடநெஞ்சே=அறிவின்மையான மனமே! சாந்தமுடன்=சாத்வீகமுண்டாகி, விண்ணின்மிசை=தேவலோகத்துக்கு மேலாகிய பதத்தில், சார்வை=சேருவாய், இது=இஃது, திண்ணம்=உண்மை; என்றது. 47

திண்ணிய வளைத்திகிரி செஞ்சிலை கதைக்கூ
ரண்ணிய நவர்ப்படை யலங்கவடி யேன்முன்
நண்ணுகொடு வெம்பிணியை நீக்குநல மீவாய்
விண்ணிய றழைந்தகடன் மல்லைமிளிர் வோனே.

இதன் பொருள் :

திண்ணிய=பலம் பொருந்திய, வளை=பாஞ்ச சன்னியம், திகிரி=சக்கரம், செஞ்சிலை=செவ்வையாகிய சார்ங்கம், கதை=தண்டு, கூர்=கூர்மை, அண்ணிய=பொருந்திய, நவிர்=வாள், படை=பஞ்ச ஆயுதங்கள், அலங்க=பிரகாசிக்க, அடியேன்=உமது அடிமையாகிய என், முன்=முன்னே, நண்ணு=வந்து, கொடு=கொடுமை செய்யும், வெம்பிணியை=வெவ்விய வியாதியை, நீக்கு=நிவர்த்திசெய்து, நலம்=நல்ல காரியங்களை, ஈவாய்=தருவாய், விண்=சுவர்க்க லோகத்தின், இயல்=அழகைப் போல, தழைந்த=செழுமையுள்ள, கடன் மல்லை=திருக்கடன்மல்லை க்ஷேத்திரத்தில், மிளிர்வோனே=பிரகாசமுடைய தலசயனனே! என்றது. 48

சேமனமு டன்கமல னித்தமினி தேத்தும்
மாமன்மகி ழுற்றகடன் மல்லைவர தன்றாள்
தூமனித யத்திெனாடு தொண்டுபுரி யன்பர்
பூமனடை தற்கரிய போகமடை வாரே.

இதன் பொருள் :

நேமனமுடன் = அன்பு பொருந்திய மனத்துடன், கமலன் = தாமரைக் கமலத்தில் பிறந்த பிரமதேவன், நித்தன் = பரமசிவன், இனிது = இஷ்டமாக, ஏத்தும் = தௌத்தியஞ் செய்யும், மா = மகாலட்சுமி, மன் = நாயகன், மகிழுற்ற = மகிழ்ச்சியுற்ற, திருக்கடன்மல்லை = திருக்கடன்மல்லையில் கண்வளர், வரதன் = வரங் கொடு(க்க)ப்ப(ட்ட)வன், தாள் = திருவடியை, தூ = பரிசுத்தமுடைய, மன் = மிகுந்த, இதயத்தொடு = மனத்தினுடன், தொண்டுபுரி = அடிமை செய்யும், அன்பர் = பாகவதர், பூமன் = பிரமதேவன், அடைதற்கரிய = சேருவதற்கும் அருமையாகிய, போகமடைவாரே = போகத்தை அனுபவிப்பார்; என்றது. 49

அடைவுசெயும் வெம்பிணியை யாண்மையோ டருட்கண்
படைகொடு தரித்துனது பக்திதரு வாயே
கொடையினி லுயர்ந்தகடன் மல்லைகுடி கொள்ளுந்
தொடைகமழ்வ னந்திகழ் துளங்குவரை வாகா.

இதன் பொருள் :

அடைவுசெயும் = நெருக்கஞ் செய்யும்படியாகிய, வெம்பிணியை = கொடியவியாதிகளை, ஆண்மையோடு = பராக்கிரமத்துடன், அருட்கண் = உமது கிருபா நேத்திரமாகிய, படைகொடு = ஆயுதங்கொண்டு, தறித்து = வெட்டி, உனது = உம்முடைய, பக்தி = அன்பு, தருவாயே = கொடுப்பாய், கொடையினில் = கொடுக்குந் தன்மையில், உயர்ந்த = அதிகமான, கடன்மலை = திருக்கடன்மல்லை க்ஷேத்திரத்தில், குடிகொள்ளும் = வாசஞ்செய்யும், தொடை = மாலை, கமழ் = மணங் கமழ்கின்ற, வனந்திகழ் = திருத்துழாய் விளங்குகின்ற, துளங்கு வரை = ஒளிவுள்ள மலை போன்ற, வாகா = தோளையுடையவனே! என்றது, ஏ—ஈற்றசை. 50

## வேறு

வரைகுழற்கொண் டார்வமுடன் பாணி யீந்து
மாட்சியுறு கதம்பமட வியினின் மேய்த்த
புரையிலரி மாயவனே தொண்டர் நெஞ்சப்
புட்கரத்தி லுறைமருவே பொலிவு வாய்ந்த
திரைகலித்த வசுதையினிற் சீர்த்தி விஞ்சுந்
திருக்கடன்மல் லைத்தலத்திற் றிகழுங் கோவே
விரைவிலெனை துட்டிமிரந் தனைத்த விர்த்து
மேதையினைத் தந்தருள்வாய் விளரி யுற்றே.

இதன் பொருள் :

வரை = மூங்கிலாகிய, குழல் = புல்லாங் குழலை, கொண்டு = வாயினிடமாகக் கொண்டு, ஆர்வமுடன் = ஆசையுடன், பாணி = இசைப்பாட்டை, ஈந்து = தந்து, மாட்சி = பெருமை, உறு = பொருந்திய, கதம்பம் = பசுக்கூட்டங்களை, அடவி = காட்டில், மேய்த்த = மேய்த்திரட்சித்த, புரையில் = குற்றமில்லாத, அரி = வலிமையுள்ள, மாயவனே = மகா விஷ்ணுவே! தொண்டர் = அடியார்கள், நெஞ்சம் = மனமாகிய, புட்கரத்தில் = தாமரைமலரில், உறை = இருக்கின்ற, மருவே = மணமே, பொலிவு = பிரகாசம், வாய்ந்த = பொருந்திய, திரை கலித்த = அலைகள் சத்திக்கின்ற கடல்சூழ்ந்த, வசுதையினில் = உலகத்தில், சீர்த்தி = கீர்த்தி, விஞ்சும் = மிகுந்த, திருக்கடன் மல்லை = திருக்கடன்மல்லை யென்னும், தலத்தில் = ஸ்தலத்தில், திகழும் = பிரகாசிக்கும், கோவே = கர்த்தனே! விரைவில் = சீக்கிரத்தில், எனது = என்னுடைய, உள் = மனத்திலிருக்கும், திமிரந்தனை = அஞ்ஞானமாகிய இருளை, தவிர்த்து = நீக்கி, மேதை = பேரறிவை, தந்து = கொடுத்து, அருள்வாய் = கிருபைசெய்வாய், விளரி = விருப்பம், உற்றே = பொருந்தி, என்றது. **51**

விளித்தகடம் பொழிகயவிந் திரனைப் பண்டு
மிளிராழிப் பத்திரத்தை விடுத்து நன்கா
யளித்தபர மாத்துமவல் லரிது ணர்ப்பூ
வலர்வனங்க ளடர்ந்தகடன் மல்லை தன்னின்
மிளிர்த்தகின கரத்தினிற்புட் கரனி றைஞ்ச
விசும்பெனக்கண் வளருசித மூலவு வேட்கைத்
தளிர்த்தநள விதலைகிரா மயனே வாழ்த்துந்
தமியேனுக் கருள்புரிவாய் தானு வாழ்வே.

இதன் பொருள் :

விளித்த = ஆதிமூலமே என்று அழைத்த, கடம்பொழி = மும்மதங்கள் பொழியப்பட்ட, கயவிந்திரனை = கஜேந்திராழ்வானை, பண்டு = முன்னாளையில், மிளிர் = பிரகாசம் பொருந்திய, ஆழி = சக்கராயுதத்தை, விடுத்து = பிரயோகஞ் செய்து, நன்கா = நற்காரியமாய், அளித்த = இரட்சித்த, பரமாத்தும = பரமாத்தும ரூபனே! வல்லரி = தளிர், துணர் = பூங்கொத்து பூ = மலர், அலர் = பரந்த, வனங்கள் = சோலைகள்

அடர்ந்த = நெருங்கிய, கடன்மல்லைதன்னின் = திருக்கடன் மல்லை க்ஷேத்திரத்தில், மிளிர்த்த=பிரகாசித்த, சினகரத் தினில்=திருக்கோயிலில், புட்கரன் = புண்டரீக முனிவன், இறைஞ்ச=வணங்க, விசும்பென=நீருண்ட மேகம்போல, கண்வளர்=திருக்கண் வளராநின்ற, உசிதம்=தகுதி, உலவும் =பொருந்திய, வேட்கை = ஆசை, தளிர்த்த = துளிருண்டா கிய, நளம்=தாமரைமலருதித்த, இதலை=உந்திக் கமலமுள்ள, நிராமயனே=கடவுளே! வாழ்த்தும்=தோத்திரஞ் செய்யும், தமியேனுக்கு = தனிமையாகிய எனக்கு, அருள் = கிருபை, புரிவாய்=செய்வாய், தாணுவாழ்வே=நிலைபெற்ற வாழ்வை, அஃதாவது பரமபதம்; என்றது. 52

தாணின்றி வதியுமதி யீனர் தம்மைத்
  தருக்குடனே யினிப்பொடுசந் ததமும் பாடிப்
பாணிசைக்குங் கழுதெனவே யுழன்றேன் வைகும்
  பண்பிலியே னைனும் பரிந்தாட் கொள்வாய்
சேணுலவு மிமையாக்கட் புலவர் காணத்
  திகழ்பொருளே திருக்கடன்மல் லைக்கண் வாழ்வே
ஆணவம்பே தமைக்காமி யங்க டந்திட்
  டரிதுகோற் றவர்புகழுங் கரிய மாலே.

இதன் பொருள்:

தாணு=நிலை, இன்றி=இல்லாமல், வதியும்=வாசஞ் செய்யும், மதியீனர்=அறிவில்லாதவர், தம்மை=தங்களை, தருக்குடனே = சந்தோஷத்துடனே, இனிப்புடன் = மதுர வசனத்துடன், சந்ததமும்=எப்பொழுதும், பாடி=கவிபாடிக் கொண்டு, பாணிசைக்கும்=இராகம்போல் ரீங்காரஞ் செய் கின்ற, கழுது எனவே = வண்டு என்று சொல்லும்படி, உழன்றே=சுழன்று, வைகும்=இருக்கும், பண்பிலியே னைனும்=குணமில்லாதவனை இருந்தாலும், பரிந்து=என் பேரில் இஷ்டம் வைத்து, ஆள்கொள்வாய்=அடிமையாகக் கொள்ள வேண்டும், சேண்=ஆகாயத்தில், உலவு=சஞ்சரிக் கின்ற, இமையாக்கட்=சிமிட்டாத கண்களையுடைய, புலவர்= தேவர்கள், காண=காணும லருமையாய், திகழ்பொருளே= பிரகாசிக்கின்ற தலைமையானவனே! திருக்கடன்மல்லைக்

கண் = திருக்கடன்மல்லை என்னுந் திருப்பதியினிடத்தில் வாழ்வே = வாழ்க்கையுள்ள கர்த்தனே! ஆணவம்—பேதமை —காமியம்—என்னும் மும்மலங்களும், கடந்து = தாண்டி, அரிது நோற்றவர் = அருமையாகிய தவத்தைச் செய்தவர், புகழும் = துதி செய்யும், கரிய = கறுத்த, மாலே = மேகம் போன்ற வடிவமுள்ள மகாவிஷ்ணுவே! என்றது. 53

கரிசிலரி வதனமுங்காம் புறழு மொய்ம்புங்
கதித்ததுணைப் பொறைநகிலக் காவி னாட்டச்
சுரிகுழலா ணிலமங்கை மருவு கேள்வா
சுகிர்தமுட னென்றனையாட் கொண்ட ளிப்பாய்
புரிகமுகு சேகிலிசெஞ் சாலி முத்தம்
புகலுழத் தியர்கள்வாரி நிதநி றைக்கும்
விரிகதிர்க ளெறிக்குமணி மாட மொண்மை
மிளிர்கடன்மல் லைக்கண்வளர் மீளி யோனே.

இதன் பொருள் :

கரிசில் = குற்றமில்லாத, அரி = சந்திரனை ஒத்த, வதனமும் = முகமும், காம்பு = மூங்கிலை, உறழ் = ஒத்த, மொய்ம்பும் = தோளும், கதித்த = பருத்த, துணை = இரண்டாகிய, பொறை = பர்வதம் போன்ற, நகிலம் = தனபாரமும், காவி = நீலோற்பலம் போலும், நாட்டம் = கண்களும், சுரிகுழலாள் = சுழித்த கூந்தலை யுடையவளாகிய, நிலமங்கை = நிலமங்கைப் பிராட்டியாரென்று பெயருள்ள மகாலட்சுமி, மருவு = புணருகின்ற, கேள்வா = நாயகனே! சுகிர்தமுடன் = தருமமுடன், என்றனை = என்னை, ஆட்கொண்டு = ஆளாகக் கொண்டு, அளிப்பாய் = இரட்சிப்பாய், புரி = சங்கு, கமுகு = பாக்குமரம், சேகிலி = வாழை, செஞ்சாலி = செம்மையாகிய பயிர் இவை ஈன்ற, முத்தம் = முத்துகளை, புகல் = சொல்லப்பட்ட, உழத்தியர்கள் = மருதநில மாதர்கள், வாரி = வாரிக்கொண்டு வந்து, நிதம் = தினமும் நிறைக்கும் = நிறைப்பிக்கும், விரி = பரந்த, கதிர் = கிரணங்களை, எறிக்கும் = வீசுகின்ற, மணி = இரத்தினங்கள் பதித்த, மாடம் = மாளிகை, ஒண்மை = மிகுதியாக, மிளிர் = விளங்குகின்ற, கடன்மல்லைக் கண்வளர் = திருக்கடன் மல்லை க்ஷேத்திரத்தில் யோகநித்திரை செய்யாநின்ற, மீளியோனே = பெருமையுடையவனே என்றது. 54

மீளியுட னேதுரோணச் சகுனி யாக
விதப்புடனே வந்தவரன் றனைச்செ றுத்த
வாளிதிக ழானனனே யுனது செய்ய
வணிகவர்ந்த திருவாலிப் புரியு தித்த
கோளிறிரு மங்கையர்கோன் மிச்சை வீட்டிக்
குயிலரிய மெ[ய்]ஞ்ஞானந் தனைய ளித்த
நீளியல்போ னாயேற்கு முணர்வ ளிப்பாய்
நிகரில்கடன் மல்லைதனின் மருவு தூயோய்.

இதன் பொருள் :

மீளியுடன்=பராக்கிரமத்துடன், துரோணச் சகுனியாக =சரபப் பட்சியாக, விதப்புடனே=சீக்கிரமாய், வந்த அரன்= வந்த பரமசிவன், தனை=தன்னை, செறுத்த=அழித்த, ஆளி திகழ்=சிங்கம் போல விளங்கிய, ஆனனனே=முகத்தையுடையவனே ! உனது=உம்முடைய, செய்ய=செவ்வையாகிய, அணி=திருவாபரணங்களை, கவர்ந்த=கொள்ளை கொண்ட, திருவாலிப்புரி= திருவாலி நகரத்தில், உதித்த = பிறந்த, கோளில்=குற்றமில்லாத, திருமங்கையர்கோன் = திருமங்கை மன்னன், மிச்சைவீட்டி=அஞ்ஞானத்தை நீக்கி, குயிலரிய = சொல்லுதற்கரிய, மெஞ்ஞானம்=நல்லறிவு, தனை = தன்னை, அளித்த=கொடுத்த, நீளியல் போல்=பெரிதாகிய குணத்தைப் போல, நாயேற்கு=நாய்போன்ற எனக்கு, உணர்வு=தெளிவு, அளிப்பாய்= தருவாய், நிகரில்=நிகரில்லாத மகத்துவமுள்ள, கடன்மல்லைதனின்= திருக்கடன்மல்லை க்ஷேத்திரத்தில், மருவு =வாசஞ்செய்யும், தூயோய் = பரிசுத்தமுள்ள கர்த்தனே ! என்றது.

55

மருவமரு நினதிண்டைக் கழலைப் போற்றி
வணங்கவர முதவிடுவாய் மன்னு தொண்டர்
மருடமத்தை நீக்குதின கரனே யான்ற
மறைப்பொருளே யுரைக்கரிய மாலே நென்னன்
மருதமர மானவுடைச் சோமன் சேயை
மலர்த்தாளாற் சூளினைத்தீர்த் தாண்ட ஞேயா
மருதமதிற் றேன்பரவ சாலி வேலி
மஞ்சுலவு கடன்மல்லை வளர்மா யோனே.

இதன் பொருள் :

மரு = வாசனை, அமரும்=பொருந்திய, நினது = உம்முடைய, இண்டை=தாமரை மலர்போன்ற, கழலை=பாதங்களை, போற்றி=தோத்திரஞ் செய்து, வணங்க=சேவிக்க, வரம்=வரத்தை, உதவிடுவாய்=தருவாய், மன்னு=மிகுந்த, தொண்டர்=அடியார்கள், மருள்=மயக்கமாகிய, தமத்தை= இருளை, நீக்கு தினகரனே = நீங்கச் செய்யும் சூரியனே, ஆன்ற=விரிவாகிய, மறைப்பொருளே=வேதத்தின் பொருளாக விளங்கினவனே! உரைக்கரிய = சொல்லுவதற்கு அருமையாகிய, மாலே = மகாவிஷ்ணுவே! நென்னல்=முந்நாளில், மருதமரமான =மருதமரமாயிருந்த, உடை=செல்வ மிகுந்த, சோமன்=குபேரன், சேயை=புத்திரர்களை, மலர்த் தாளால்=தாமரைமலர் போன்ற திருவடியால், சூளினை= சாபத்தை, தீர்த்து=விமோசனஞ் செய்து, ஆண்ட=இரட்சித்த, ஞேயா=நேயத்தை யுடையவனே! மருதமதில்=கழனிகளில், தேன்பரவ=தேன்கள் பாய, சாலி = பயிர்மீதில், மஞ்சு=மேகங்கள், உலவு=திரிகின்ற, கடன்மல்லை=திருக்கடன்மல்லை ஸ்தலத்தில், வளர்=கண்வளராநின்ற, மாயோனே =மாயர்விநோதனே ! என்றது. 56

மாயவுழை யெனவருவெவ் வரக்கன் மீது
மல்லலுறு மத்திரியை விடுத்து மாய்த்த
சாயலுறு கொக்கரைசெங் கரனே நாயேன்
றன்றுயரைத் தீர்த்தாள்வா யசல மாதைச்
சேயுறுதா லத்துடையோன் றனைய ளித்த
சேணுந்தி மாயவனே யும்பல் கூவ
தாயகமா யிருந்தளித்த தேவ தேவா
தருக்கமருந் திருக்கடன்மல் லையில்வாழ் மன்னே.

இதன் பொருள் :

மாயவுழை=மாயமான்கை, வரும்=வந்த, வெவ்வரக்கன்= கொடூரமான இராக்ஷதனாகிய மாரீசன், மீது=மேல், மல்லல்= பலம், உறும்=பொருந்திய, அத்திரியை=பாணத்தை, விடுத்து = பிரயோகித்து, மாய்த்த = கொன்ற, சாயலுறு = மேன்மை பொருந்திய, கொக்கரை = கோதண்டமென்னும் வில்லையுடைய, செங்கரனே=சிவந்த கையை யுடையவனே!

நாயேன்றன்=நாய்போன்ற எனது, துயரை=வருத்தத்தை, தீர்த்து=நீங்கச் செய்து, ஆள்வாய்=அடிமை கொள்வாய், சலச மாதை=தாமரைக் கமலத்தில் பிறந்த மாதாகிய மகாசரஸ் வதியை, சேயுறு=சிவந்த நிறமுள்ள, தாலத்து=நாவினிடத்து, உடையோன்=உள்ளவனாகிய பிரமதேவன், தனை=தன்னை, அளித்த=பெற்ற, சேண்=பெரிய, உந்தி=தொப்புளுள்ள, மாதவனே=நாராயணனே! உம்பல் = கஜேந்திரனென்னும் பெயருள்ள யானை, கூவ=ஆதிமூலமே என்று கூப்பிட, தாயகம்=தாயினிடம் போலிருந்து வந்து அளித்த, தேவ தேவா=தேவர்களுக்குத் தேவனே! தருக்கு=களிப்பு, அமரும் =பொருந்திய, திருக்கடன்மல்லையில்=திருக்கடன்மல்லை என்னும் க்ஷேத்திரத்தில், வாழ்=வாழ்கின்ற, மன்னே=முதல்வனே! என்றது. 57

மன்னுபுகழ் பனைத்தகுர வர்கள் வழுத்து
  மண்ணசை பெண்ணசை மாழை யாசை
தன்னிலுழன் றுனதுசரோ ருகம லர்த்தா
  டாழ்ந்திலனை யினும்பொறுத்தா டகைமீக் கூர்ந்து
துன்னுபழ னங்களினீ ரோரு கத்தைத்
  தொழுவர்கணா ளுங்களையுஞ் செழுமை மேவுங்
குன்னமில்லாத் திருக்கடன்மல் லையில்வாழ் வீறுங்
  குருகுவளைப் பரிதிகரக் கொற்ற மாலே.

இதன் பொருள் :

மன்னுபுகழ்=மிகுந்த புகழ்ச்சியைப் பெற்ற, குரவர்கள்= பெரியோர்கள், வழுத்தும் = சொல்லும், மண் = பூமியின், ஆசை = இச்சை, பெண் ஆசை = பெண்களின் இச்சை, மாழை ஆசை=பொன்னின் இச்சை, தன்னில்=அதனிடத்தில், உழன்று = மனஞ்சுழன்று, உனது = உம்முடைய, சரோருக மலர்த்தாள்=தாமரை மலர்போன்ற திருவடியை, தாழ்ந்திலனையினும் = வணங்காதவனையினும், கமித்து = பொறுத்து, ஆள் = அடிமைகொள்வாய், தகை = தயவு, மீக்கூர்ந்து = மேல்ாகப்பொருந்தி, துன்னு = நெருங்கிய, பழனங்களில் = வயல்களில், நீரோருகத்தை = தாமரையை, தொழுவர்கள் = உழவர்கள், நாளும் = தினமும், களையும்= களை பறிக்கும், செழுமை=வளமை, மேவும்=பொருந்திய, குன்னமிலா = குறைவில்லாத, திருக்கடன்மல்லையில்=திருக்

கடன்மல்லை க்ஷேத்திரத்தில், வாழ்வீறும் = வாழ்க்கை விளங்கிய, குருகு = வெண்மை நிறமுள்ள, வளை = பாஞ்சசன்னியம், பரிதி = சக்கரம், கரம் = அஸ்தத்தில் தாங்கிய, கொற்றம் = வெற்றியையுடைய, மாலே = பெருமையுள்ள கர்த்தனே! என்றது. 58

கொற்றவிச யனுக்குநிச வடிவந் தன்னைக்
குவவுடனே யுணரவறி வித்தன் னேன்றன்
பற்றலரைச் செம்புலத்திற் றூளி செய்த
பண்போனே நண்போனே நினது வாஞ்சைப்
பெற்றவடி யார்களகத் துறையுந் தூயா
பெட்புடனே யென்றனையாட் கைலை வாசன்
நற்றகைசேர் மலர்விரிஞ்சன் புனிதன் காணு
நாரணனே பிறங்குகடன் மல்லை வாழ்வே.

இதன் பொருள்:

கொற்றம் = வலிமை பொருந்திய, விசயனுக்கு = அருச்சுனனுக்கு, நிஜ வடிவந் தன்னை = உமது நிஜ உருவத்தை, குவவுடனே = பெருமையுடனே, உணர = தெரிய, அறிவித்து = அறியும்படிசெய்து, அன்னோன்றன் = அவ்வருச்சுனனுடைய, பற்றலரை = சத்துருக்களை, செம்புலத்தில் = உயுத்தகளத்தில், தூளிசெய்த = பொடியாகச் செய்த, பண்போனே = குணமுள்ளவனே! நண்போனே = சிநேகமுடையவனே! நினது = உம்முடைய, வாஞ்சை = அன்பு, பெற்ற = கிடைத்த, அடியார்கள் = பாகவதர்கள், இடத்து = இடத்திலே, உறையும் = வாசஞ் செய்யும், தூயா = பரிசுத்தமுள்ளவனே! பெட்புடனே = அன்புடனே, என்றனை = உன் தாசனாகிய என்னை, ஆள் = அடிமைகொள்வாய், கைலைவாசன் = கைலையங்கிரிவாசனாகிய சிவபெருமான், நற்றகை = நல்ல பெருமையுடைய, மலர்விரிஞ்சன் = கமல மலராசனமுள்ள பிரமதேவன், புனிதன் = இந்திரன், காணு = காணுதற்கு அருமையாகிய, நாரணனே = ஸ்ரீமந் நாராயணனே! பிறங்கு = பிரகாசிக்கின்ற, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, வாழ்வே = வாழ்க்கையுள்ள கடவுளே! என்றது. 59

மல்லன்மலர்ச் சுழியிலோதி மங்க டுன்னி
வாசமுறு கடன்மல்லை வாழ்வே நாயேன்
தொல்லைவனைந் திடுபவத்தை யிரித்து வீறுஞ்
சுகிர்தமுற நற்கருணை செய்வாய் சீர்த்தி
சொல்லமரும் படியிகலோன் றுணைவன் றன்னைத்
துப்பின்றி யாண்டவனே சுரும்பு லாவு
வல்லரிமே ருந்தடமுய் யான மொண்மை
வயங்குதிரு வெவ்வுணகர் மருவு சோதி.

இதன் பொருள் :

மல்லல் = வளமைபொருந்திய, மலர்ச்சுழியில் = மலர் நிறைந்த தடாகத்தில், ஓதிமங்கள் = அன்னப் பட்சிகள், துன்னி=நெருங்கி, வாசமுறு=வாசம் பொருந்திய, கடன் மல்லை = திருக்கடன்மல்லை, வாழ்வே =வாழ்க்கையுடையவனே! நாயேன் =நாய்போன்ற யான், தொல்லை= ஆதி நாளையில், வனைந்திடு=செய்திடும், பவத்தை =பாவங்களை, இரித்து =ஓடும் படிக்கு செய்து, வீறும் =பெருமையுள்ள, சுகிர்தமுற= நன்மை யடைய, நற்கருணை =நல்ல கிருபை, செய்வாய் =செய்திடுவாய், சீர்த்தி=புகழாகிய,சொல் =வசனம், அமரும்படி =பொருந்தும் படிக்கு, இகலோன் =பகைவனுகிய இராவணன், துணைவன் றன்னை =சகோதரனுகிய விபீஷணனை, துப்பின்றி =விரோத மில்லாமல், ஆண்டவனே = இரட்சித்தவனே ! சுரும்பு =வண்டு கள், உலாவு= சஞ்சரிக்கின்ற, வல்லரி =பூங்கொத்துக்கள், மேவும் =பொருந்திய, தடம் =விசாலமுள்ள, உய்யானம் =பூஞ் சோலைகள், ஒண்மை = மிகுதியாக, வயங்கு =பிரகாசிக்கின்ற, திரு எவ்வுள் நகர் =அழகிய திரு எவ்வுள் நகரத்தில், மருவு = வாசஞ்செய்யும், சோதி =பிரகாசமானவனே ! என்றது. 60

வேறு

சோதியுரு வாகிநெடு நிகிலவசு மதியினிற்
றோன்றியுறை யதுல வமலா
பீதறு பொலஞ்சுடர்த் தேவகி தவத்துச்
செனித்தகரு ணைப்பு ணரியே
போதிதென நின்றுவித சேதக மருப்புநித
புட்க ரபதத் தேயுறக்
கோதகல மாணரு ளளிப்பா யகத்துவகை
கொண்டடிய னுக்கு மன்னே.

இதன் பொருள் :

சோதி = சூரிய நராயணனாக, உருவாகி = வடிவமாகி, நெடு = நீண்ட, நிகில வசுமதியினில் = எல்லா உலகத்தும், தோன்றி = காணப்பட்டு, உறை = இருக்கின்ற, அதுல = நிகரில்லாத, அமலா = கர்த்தனே ! நீதறு = குற்றமற்ற, பொலம் = அழகும், சுடர் = பிரகாசமுள்ள, தேவகி = வசுதேவன் மனைவி, தவத்து = தவபலத்தினால், செனித்த = பிறந்த, கருணைப் புணரியே = கிருபாசமுத்திரமே ! போது = புட்பம், இது என = இது என்று சொல்லும்படியான, நின் = உம்முடைய, துவித = இரண்டாகிய, சேதகம் = சிவந்த, மரு = வாசனை தங்கிய, புநித = பரிசுத்தமுள்ள, புட்கரம் = கங்கைபிறந்த, பதத்தே = திருவடியினிடத்தே, உற = வாசம் பொருந்தி இருக்க, கோதகல = குற்றம் நீங்க, மாணருள் = பெருமையுள்ள கிருபையை, அளிப்பாய் = கொடுப்பாய், அகத்து = மனத்தினிடத்தில், உவகை = சந்தோஷம், கொண்டு = உண்டாகி, அடியனுக்கு = உமது அடிமையாகிய எனக்கு ; என்றது. மன்றோ—ஈற்றசை. 61

மன்றநிரு பர்(ப்)பலரு மற்புதமு றத்துகில்
வழங்கியழன் மாது மகிழ்வு
துன்றவனை தற்பரவி நோதமது சூதரத
சூதசக தலநா யகா
கன்றினை யெறிந்துவிள வின்கனி யுகுத்ததிணி
கைத்தலக் கடன்மல் லையா
யென்றுனது திவ்வியத் திருநாம மோதுவர
மெற்கருள்செய் வாய்விரைந் தே.

இதன் பொருள் :

மன்றல் = துரியோதனன் சபையில், நிருபர் = அரசர், பலரும் = அநேகரும், அற்புதம் = ஆச்சரியம், உற = பொருந்திய, துகில் = வஸ்திரம், வழங்கி = கொடுத்து, அழன்மாது = அக்கினியில் பிறந்த பெண்ணாகிய துரோபதை, மகிழ்வு = சந்தோஷம், துன்ற = பொருந்த, வனை = செய்த, தற்பர = கடவுளே ! விநோத = மாயாவிநோதனே ! மதுசூத = மது வென்னும் இராக்ஷதனை சூதுசெய்து கொன்றவனே ! சக தலம் = பூலோகத்துக்கு, நாயகா = நாதனே ! கன்றினை = பசுங் கன்று உருவங்கொண்டு வந்த இராக்ஷதனை, எறிந்து = எடுத்து

வீசி, விளவின் = விளாமரத்தின், கனி = பழங்களை, உகுத்த = உதிர்த்த, திணி = பலம்பொருந்திய, கைத்தல = கையுடைய, கடன்மல்லையாய் = திருக்கடன்மல்லை எனும் க்ஷேத்திரனே! என்று = எப்பொழுதும், உனது = உம்முடைய, திருநாமம் = சகஸ்திரநாமங்களை, ஓது = துதிசொல்லும், வரம் = வரத்தை, எற்கு = எனக்கு, அருள் செய்வாய் = கிருபை செய்வாய், விரைந்தே = சீக்கிரத்தில்; என்றது. 62

விரிபுவன மிசையினி லுதித்துமட வஞ்சியர்கள்
 வேட்கையர லைக்குளாழ்ந்து
திரிஇதய மானலை யகற்றியுணர் நல்கியினி
 சிறியனைத் தொண்டுகொள்வாய்
அரிமரைக ளைத்தொழுவர் வனிதையர்கள் கரசரியி
 னமலைகொள் கடன்மல்லையாம்
புரியின்முனி புண்டரிகன் வாழ்த்தவிரு நயனம்வளர்
 புகழ்ப்பரம பதநாதனே.

இதன் பொருள் :

விரிபுவனம் = விசாலமுள்ள பூலோகத்தில், மிசை = மேல், உதித்து = ஜனனமெடுத்து, மடம் = இளம்பருவமுள்ள, வஞ்சியர்கள் = மாதர்களின், வேட்கை = விருப்பமாகிய, அரலைக்குள் = சமுத்திரத்தில், சூழ்ந்து = முழுகி, திரி = கெடும், இதய மானலை = மனமயக்கத்தை, அகற்றி = நீக்கி, உணர் = தெளிவாகிய அறிவை, நல்கி = கொடுத்து, இனி = இனிமேலாகிலும், சிறியனை = சிறியவனாகிய என்னை, தொண்டுகொள்வாய் = அடிமைகொள்ளவேண்டும், அரி = பயிர்களிலுள்ள, மரை = தாமரைகளை, களை = களைந்தெடுக்கப்பட்ட, தொழுவர் = உழவர்கள், வனிதையர்கள் = மாதர்கள், கரம் = கையிலுள்ள, சரி = பொன் வளையல்களின், அமலைகொள் = சத்தங்கள் கொண்ட, கடன்மல்லையாம் = திருக்கடன்மல்லையாகிய ஸ்தலத்தில், புரியின் = விருப்பமுள்ள, முனி = முனிவனாகிய, புண்டரிகன் = புண்டரீகன், வாழ்த்த = தோத்திரஞ்செய்ய, இரு நயனம் வளர் = இரண்டு கண் வளரப்பட்ட, புகழ் = புகழுள்ள, பரமபத நாதனே = வைகுந்தத்திற்கு நாயகனே! என்றது. 63

பரனேமு னங்கேக யன்சுதையின் வாய்மைகொடு
படரடவி புகுசெஞ்சிலைக்
கரனே பகீரதி யுதித்தபத பங்கயக்
கடவுளே செய்யவண்மகிழ்
வரனே மிகப்பாக வதரது குழாத்துடன்
வதியவரு ளீவாய்பசும்
புரனே திருக்கடன் மல்லைவாழ் கர்த்தனே
புனிதர்கா ணரியமுகிலே.

இதன் பொருள் :

பரனே=பரமாத்துமனே! முனம்=முன்னாளில், கேகயன் =கேகயதேசத்தரசன், சுதை = குமாரத்தியாகிய கைகேசி யின், வாய்மைகொடு=வார்த்தையைக்கொண்டு, படர்=பரந்த, அடவி=அரணியத்தில், புகு=சென்ற, செஞ்சிலை=செம்மை யாகிய கோதண்டம் என்னும் வில்லையுடைய, கரனே=அஸ்த முள்ளவனே! பகீரதி=கங்கை, உதித்த=பிறந்த, பதபங்கய =பாத தாமரை மலருள்ள, கடவுளே=பகவானே! செய்ய வள்=மகாலட்சுமி, மகிழ் = மகிழ்ச்சியுள்ள, வரனே = நாய கனே! மிக=அதிகமாக, பாகவதர்=உனது அன்பர்கள், குழாத்துடன்=கூட்டத்துடன், வதிய=வாசஞ்செய்ய, அருள் =கிருபை, ஈவாய் = கொடுப்பாய், பசும் = பசுமையான நிற முள்ள, புரனே=திருமேனியுள்ளவனே! திருக்கடன்மல்லை= திருக்கடன்மல்லைக் கோயிலில், வாழ்=வாழ்கின்ற, கத்தனே =கண்ணபிரானே! புனிதர்=பரிசுத்த குணமுள்ள பெரிய வர்களும், காணரிய=காணுதற்கு அருமையான, முகிலே=நீர் கொண்ட மேகம் போன்ற வடிவுள்ளவனே! என்றது. 64

முகிணகைப சுங்கழை புயங்குருதி வேனயன
முளரிவத் திரமலயச
மகின்மண மெறிச்சுரிய றெரிவைபுனை சிகழிகைக்
ககமுவகை பரவுவிமலா
எகினவர ணியனெடிய வுடன்மறலி செய்யகர
மெய்தியய ராதருணறுஞ்
சுகிர்தசன ரனவரத மருவிவளர் கடன்மல்லை
சுதரிசன முயர்பரமனே,

இதன் பொருள் :

முகிழ் = தாமரை முகிழைப்போலும், நகை = சிரித்தல், பசுங்கழை=பச்சை மூங்கிலைப்போலும், புயம்=தோள், குருதி வேல் = உதிரம் தோய்ந்த வேலாயுதம்போன்ற, நயனம்= கண், முளரி=தாமரை மலர்போலும், வத்திரம்=முகம், மலயசம் = சந்தனப்புகை, அகில் = அகில் புகையின், மணம்= வாசனை, எறி=வீசுகின்ற, சுரியல்=கூந்தலுள்ள, தெரிவை= ஆண்டாள், புனை=தொடுத்த, சிகழிகைக்கு=புஷ்பமாலைக்கு, அகம்=மனம், உவகை=சந்தோஷம், பரவு=மிகுந்த, விமலா =க[ர்]த்தனே ! எகினம்=அன்னவாகனத்தையுடைய, அரணியன்=பிரமதேவன், நெடிய=நீண்ட, உடல்=சரீரமுள்ள, மறலி=இயமன், செய்ய=சிவந்த, கரம்=கையில், எய்தி= அடைந்து, அயராது=துன்பப்படாது, அருள் =கிருபை செய்வாய், நறு=நன்மையுள்ள, சுகிர்தம்=தருமஞ்செய்யப்பட்ட, சனர்=செனங்கள், அனவரதம்=எப்பொழுதும், மருவி= வாசஞ்செய்து, வளர்=வளர்கின்ற, கடன்மல்லை=திருக்கடன் மல்லை, சுதரிசனம்=சக்கராயுதம் பிடித்த, உயர்பரமனே= பரமபுருஷனாகிய நாராயணனே! என்றது. 65

பரிமளம விந்தசும னசமலி கதுப்பு
 பரத்தையர்கண் மானலிலுரு
தரியநின் பொற்சரண மனவரத மும்பணிய
 வறிவுதந் தெனையாளுவாய்
விரிதிரை துளங்குநர லைத்தலம் விடுத்ததி
 விருப்பினொடு புட்கரற்கு
தெரிசன மளித்துவள மைக்குலவு கடன்மல்லை
 சினகரத் திலகுபொருளே.

இதன் பொருள் :

பரிமளம்=வாசனை, மலிந்த = அதிகரித்த, சுமனசம்= மலர்கள், மலி=மிகுதியாகத் தரித்த, கதுப்பு=கூந்தலுள்ள, பரத்தையர்கள் = வேசையர்கள், மானலில் = மயக்கத்தில், உரு =பொருந்தி அலையாமல், அரிய=சொல்லுதற்கு அருமையாகிய, நின் = உம்முடைய, பொற்சரணம் = பொற்பிரகாசமுள்ள திருவடியை, அனவரதமும்=எப்பொழுதும், பணிய= சேவிக்க, அறிவு = புத்தியை, தந்து=கொடுத்து, எனை=

என்னை, ஆளுவாய்=அடிமை கொள்ளுவாய், விரி=விரிவாக, திரை=அலைகள், துளங்கு=அசை(க்)கின்ற, நாலைத்தலம்= திருப்பாற்கடலினிடம், விடுத்து = விட்டு, அதி=அதிகமான, விருப்பினொடு=ஆசையினுடன், புட்கரற்கு=புண்டரீக முனிவருக்கு, தெரிசனம் அளித்து=பிரத்தியக்ஷமாய் சேவை சாதித்து, வளமை=பல வளப்பங்களுள்ள, கடன்மல்லை=திருக்கடன்மல்லை, சினகரத்து=திருக்கோயிலின்கண், இலகு=பிரகாசிக்கின்ற, பொருளே = தலைமையாகிய கடவுளே! என்றது. 66

பொருதொரு வருக்கொருவர் மாளுமா தூதனாய்
  புக்கஃகிகொள் கேதனனிடம்
திருகினெடு செஞ்சிலையன் மாடமதி லேயமுது
  செய்துவகை வீறுமமலா
குருகுமரு வித்தொழுதி செய்நறிய வல்லரி
  குலாவுதழை கோடரமலர்ப்
பெருமையுறு கடன்மல்லைத் தலசயன வதுலநின்
  பெட்புலவி யுறவருள்வையே.

இதன் பொருள்:

பொருது=உயுத்தஞ் செய்து, ஒருவர்க்கு ஒருவர்=ஒரு மனிதருக்கு வேறே ஒரு மனிதராய், மாளும்=மாண்டுவிட, தூதனாய்=தூது ஆளாக, புக்கி=அஸ்தினபுரம் சென்று, அகிகொள் கேதனன்=பாம்பைத் துவசமாகக் கொண்ட துரியோதனன், இடம்=இடத்தில், திருகு=வஞ்சனை, இல்= இல்லாத, நெடு=நீண்ட, செஞ்சிலையன் = செம்மையான வில்லுள்ள விதுரன், மாடம்=மாளிகையில், அமுது செய்து= போசனஞ் செய்து, உவகை = சந்தோஷம், வீறும்=அதிகரித்த, விமலா = கிருஷ்ணதேவனே! குருகு = பட்சிகள், மருவி=வாசஞ் செய்து, தொழுதிசெய்=சத்தமுள்ள, நறிய= வாசனை பொருந்திய, வல்லரி=பூங்கொத்துகள், குலாவு= குலாவிக் கொண்டிருக்கும், தழை=செழுமையுள்ள, கோடரமலர்=சோலைகள் மலர்ச்சியானது, பெருமையுறும்=மேன்மை பொருந்திய, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, தலசயன= நிலத்தில் சயனம் விளங்கும், அதுல=நிகரில்லாதவனே! நின்=உம்முடைய, பெட்புலவி=அன்புபொருந்தி, உற= வாசஞ்செய்ய, அருள்வையே=கிருபைசெய்வாய் என்றது. 67

அருவிசொரி வித்துரும மாதிரமெ னச்சிற
கவிழ்ப்பெரிய தார்க்கியன்வெரிந்
கருமைசெறி மரகத விலங்கலி னிவர்ந்துசுரர்
கலியினைய கற்றியருள்வோய்
ஒருமனது டன்றமிய னயர்வினை யொழித்துவகை
யுறவருளை வனையெண்ணன்கு
தருமமன வரதமு மலிந்தகடன் மல்லையிற்
றருக்குடன் மிளிர்ப்பிரமமே.

இதன் பொருள் :

அருவிசொரி = நீர் சுரந்து விழுகின்ற, வித்துருமம் = பவளம் போன்ற, மாதிரம் = பர்வதம் போலே, சிறகு = இறகுகளை, அவிழ் = விரிக்கப்பட்ட, பெரிய = பெரிதாகிய, தார்க்கியன் = கருடாழ்வான், வெரிந் = முதுகின்பேரில், கறுமை செறி = கறுப்பு மிகுந்த, மரகத[ம்] = பச்சை, விலங்கலின் = மலையென்ன, இவர்ந்து = ஆரோகணித்து, சுரர் = தேவர்கள், கலியினை = வருத்தத்தை, ஒழித்து = நிவர்த்தி செய்து, உவகை = சந்தோஷம், உற = அடைய, அருளை = கிருபையை, வனை = செய்வாய், எண்ணன்கு = முப்பத்திரண்டு, தருமம் = தருமங்கள், அனவரதமும் = எப்பொழுதும், மலிந்த = விசேஷமுள்ள, கடன்மல்லையில் = திருக்கடன்மல்லையில், தருக்குடன் = மனக் களிப்புடன், மிளிர் = பிரகாசிக்கின்ற, பிரமமே = ஸ்ரீமந் நாராயணனே! என்றது. 68

பிரசநனி யடர்வதுவை பரவுமுடி தொடையொண்
பிறங்கல்மொய்ம் பினில்ணிபரா
பரநிமல வற்புத மகரவெழி னிராமய
பனுகபண நிர்த்தவிமலா
இரவுபக லுனையிதய மறவாது சிந்தனைசெய்
யிணையில்வர மெற்குதவுவாய்
திரமகிழி னுடனெகின முறைகமல வாவிகள்
சிறந்தகடன் மல்லைபுரனே.

இதன் பொருள் :

பிரசம் = வண்டுகள், நனி = மிகுதியாக, அடர் = நெருங்கிய, வதுவை = பரிமளம், பரவு = பரவிய, முடி = துளப, தொடை = மாலை, ஒண் = அழகிய, பிறங்கல் = மலைபோன்ற,

மொய்ம்பினில் = திருத்தோளில், அணி = தரித்த, பராபர = கடவுளே! அற்புத = அதிசயமான, மகாவெழில் = மிகுந்த அழகு பொருந்திய, நிராமய = க[ர்]த்தனே! பஞக = விஷதந்தங் களுள்ள சர்ப்பத்தின், பணம் = படத்தில், நிர்த்த = நடனஞ் செய்யப்பட்ட, விமலா = கண்ணபிரானே! இரவு = இராத் திரியும், பகல் = பகலினும், உனை = உம்மை, இதயம் = மன மானது, மறவாது = மறதியில்லாமல், சிந்தனை செய் = தியானஞ் செய்யும், இணையில் = நிகரில்லாத, வரம் = வரத்தை, எற்கு = உமது தாசனுகிய எனக்கு, உதவுவாய் = தருவாய், திரம் = நிலை யாக, மகிழினுடன் = மகிழ்ச்சியுடன், எகினம் = அன்னப் பறவைகள், உறை = வாசஞ் செய்கின்ற, கமல வாவிகள் = தாமரைத் தடாகங்கள், சிறந்த = மிகுந்த, கடன்மல்லை = திருக் கடன்மல்லை, புரனே = க்ஷேத்திரனே! என்றது. 69

புருவதனு வனிதையர் மயங்கவுரு வாகிவெம்
போர்க்கிகல் களிற்றைவென்றும்
வெருவவரு சாடியையு தைத்துமல கையினுயிரை
வீக்கியுஞ் சூளகலவே
மருதிடை தவழ்ந்துவிளை யாடியும் வளர்ந்தவா
மாயையை யகற்றியருள்வாய்
தருவமர ருவணைதனை யளவுகடன் மல்லையிற்
றகைமையுட னுறையுமாலே.

இதன் பொருள் :

புருவம் = நுதல், தனு = வில்லைப் போன்ற, வனிதை யர் = மாதர்கள், மயங்க = ஆசைகொண்டு மயங்க, உருவாகியும், = உருவமாகியும், போர்க்கு = யுத்தத்திற்கு, இகல் = பல முடைய, களிற்றை = குவலயாபீடமென்னும் யானையை, வென் றும் = தந்தங்களை ஒடித்து மடித்தும், வெருவ = பயமடைய, வரும் = வந்த, சாடினை = சகடாசுரனை, உதைத்து = காலினு லுதைத்தும், அலகை = பூதகியின், உயிரை = பிராணனை, வீக் கியும் = நீங்கச் செய்தும், சூளகலவே = சாபம் நிவர்த்தியாக, மருதிடை = மருதமரத்தின் மத்தியில், தவழ்ந்து = உரலுடன் தவழ்ந்து, விளையாடியும் = விளையாட்டுகளைச் செய்தும், வளர்ந் தவா = வளர்ந்த கிருஷ்ணுவதாரனே! மாயையை = மயக்

கத்தை, அகற்றி = நீக்கி, அருள்வாய் = கிருபை செய்வாய், தரு = விருட்சங்கள், அமரர் = தேவர்கள் வசிக்கும், உவணை = தேவலோகத்தை, அளவு = அளாவும் வளமை பொருந்திய, கடன்மல்லை = திருக்கடன்மல்லை ஸ்தலத்தில், தகைமையுடன் = பெருமையுடன், உறையும் = சயனித்திருக்கும், மாலே = மகா விஷ்ணுவே! என்றது. 70

வேறு

மாலெ யிற்கண்விற் றபனன் மேவிய
  வண்டி ருக்கடன் மல்லை வாழ்பதிச்
சேல யிற்கருந் தாதார் பூவையைச்
  செப்பில் வைத்தமெய்த் தேவ னேமுனங்
கூல நற்றிறத் தோடு காத்தவிண்
  கோம னேயெனை யாத ரித்தருள்
கோலநத்துநே மிக்க ராவெனக்
  கோவர் போற்றுசெம் பாத நாதனே.

இதன் பொருள்:

மால் = பெருமையுள்ள, எயில்கண் = மதிலினிடத்தில், வில் = பிரகாசமுள்ள, தபனன் = சூரியன், மேவிய = தவழப்பட்ட, வண் = வளமை தங்கிய, திருக்கடன்மல்லை = திருப்பதியாகிய கடன்மல்லை, வாழ் = வாழ்கின்ற, பதி = எப்பொருட்கும் இறைவனே! சேல் = சேல் மீனையொத்த, அயில் = கூர்மை பொருந்திய, கருந்தார் = கறுத்த கண்களையுடைய, பூவையை = மகாலட்சுமியை, செப்பில் = மார்பில், வைத்திடும் = வைத்திருக்கின்ற, தேவனே = கடவுளே! முனம் = முன்னாளில், கூலம் = பசுக் கூட்டங்களை, நற்றிறத்தோடு = நல்ல பராக்கிரமத்துடன், காத்த = கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து இரட்சித்த, விண் = சுவர்க்கத்திற்கும், கோமனே = நாயகனே! எனை = என்னை, ஆதரித்து = ஆதரணை செய்து, அருள் = கிருபை செய்வாய், கோலம் = அழகிய, நத்து = பாஞ்சசன்னியம், நேமி = சக்கராயுதமும் தாங்கிய, கரா = கையுள்ளவனே, என = என்று, கோவர் = தேவர்கள், போற்று = தோத்திரஞ்செய்கின்ற, செம்பாத = சிவந்த திருவடியுள்ள, நாதனே = சர்வத்திற்கும் நாயகனே! என்றது. 71

நாத னேயரு விஞ்சை யைச்சிக
 ரத்தி வர்ந்திறைத் திட்ட நன்முனிக்
கேத மின்றிய பட்ட மீந்திடு
 மிணையி லாக்கடன் மல்லை பள்ளிகொள்
ஆதி யேவரன் றனைஇ லஞ்சியி
 லன்பு கொண்டரு ளங்க தத்துயில்
சோதி யேயடி யேனுக் கியாதொரு
 துன்பு றாதரு ளாற்ற வேண்டுமே.

இதன் பொருள் :

நாதனே = எப்பொருட்கும் நாயகனே, அரும் = அருமையாகிய, விஞ்சை = கல்வியை, சிகரத்து = சிகர கோபுரத்தில், இவர்ந்து = ஏறி, இறைத்திட்ட = தூற்றிய, நன்முனிக்கு = எம்பெருமானார்க்கு, ஏதமின்றிய = குற்றமில்லாத, பட்டம் = பதவியை, ஈந்திடும் = டுகொத்திடும், இணையிலா = ஒன்றும் சமமில்லாத—மகத்துவமுள்ள, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, பள்ளிகொள் = சயனங் கொண்ட, ஆதியே = ஆதிமூலனே ! வரன்றனை = பிரமதேவனை, இலஞ்சியில் = உந்திக் கமலத்தில், அன்பு கொண்டு = இஷ்டங் கொண்டு, அருள் = பெற்ற, அங்கதத்துயில் = ஆதிசேஷன் பேரில் நித்திரை செய்யா நின்ற, சோதியே = சோதிமயமானவனே ! அடியேனுக்கு = உமது அடிமையாகிய எனக்கு, இயாதொரு துன்புறாது = எந்த வருத்தமும் வந்து அணுகாது, அருள் = கிருபை, ஆற்ற வேண்டும் = செய்யவேண்டும், என்றது. 72

வேண்ட லொன்றுயான் மாடம் விண்ணுறு
 மேத குகடன் மல்லை வள்ளலே
தாண்ட லைக்கடல் சூழ்த லத்தினிற்
 சாற்று தோற்றமா மேழ்க்கு டாபரம்
பூண்ட லைப்புறு தாள்ச னிக்கினுன்
 பொற்பிர காசமி குத்த வெங்கணு
நீண்ட செங்கழ லுன்ன வேவர
 நேய மாய்த்தர லின்பு லாவியே.

இதன் பொருள் :

வேண்டல்=உம்மிடத்தில் இரத்தல், ஒன்று = ஒன்று, யான்=நான், மாடம்=மேன்மாளிகைகள், விண்ணுறும்= ஆகாயத்தை அளாவும், மேதகு = மேன்மை பொருந்திய, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, வள்ளலே = வரையாது கொடுப்பவனே! தாண்டு=தாண்டிவரும், அலை=அலைகளை யுடைய, கடல்சூழ்=சமுத்திரஞ் சூழ்ந்த, தலத்தினில்=பூலோ கத்தில், சாற்றும்=சொல்லப்பட்ட, தோற்றம்=ஜனனம், ஏழ்க்குள்=தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ் வன, தாவரம், என்னும் ஏழுக்குள், தாபரம்=சரீரம், பூண்டு =எடுத்து, அலைப்பு=அலைச்சல், உறாது=அடையாது, ஆள்= அடிமைகொள்வாய், ஜெனிக்கில்=பிறக்கில், உன்=உமது, பொன்=பொன்னைப்போலும், பிரகாசம்=ஒளிவு, மிகுத்த= மிகுந்த, எங்கணும் = எந்த இடமும், நீண்ட = நீட்சியுள்ள, செங்கழல்=சிவந்த திருவடியை, உன்னவே=தியானிக்கவே, வரம்=வரத்தை, நேயமாய்=இஷ்டமாய், தரல்=கொடுத்தல், இன்புலாவியே=இன்பம் பொருந்தியே; என்றது. 73

இன்னலைத்தரு வெம்ப வத்தினி
  லெய்தி யெய்த்தய ராது திவ்விய
மின்னமர்ந்தவை குந்த மீந்தருள்
  வெற்றி வால்வளைக் கைத்த லத்தனே
முன்ன ருந்திறற் பூத கிக்கடு
  முலைய ருந்திய மூர்த்தி யேயொளி
மன்னு செஞ்சிக ரித்தி ருக்கடன்
  மல்லை பாயலி லோங்கு தேவனே.

இதன் பொருள் :

இன்னலை=துன்பத்தை, தரும் = கொடுக்கும், வெம் பவத்தினில்=கொடுமையான சனனத்தில், எய்தி=அடைந்து, எய்த்து=இளைத்து, அயராது=வருந்தாது, திவ்விய=தேவர்க் குரித்தாகிய, மின்னமர்ந்த=மின்னற் பிரகாசம் பொருந்திய, வைகுந்தம் = பரமபதம், ஈந்தருள் = கொடுத்தருளவேண்டும்,

வெற்றி = ஜெயம் பெற்ற, வால் = மிகுந்த, வளை = சக்கராயுதந் தாங்கிய, கைத்தலைத்தனே = கையையுடையவனே ! முன்ன = நினைக்க, அரும் = அருமையாகிய, திறல் = பலமுள்ள, பூதகி = பூதகி என்னும் இராக்ஷதியின், கடு = விடமுள்ள, முலையருந்திய = முலையையுண்ட, மூர்த்தியே = கிருஷ்ணதேவனே! ஒளி = பிரகாசம், மன்னு = நிலைபெற்ற, சிகரி = கோபுரமுள்ள, திருக்கடன்மல்லை = திருக்கடன்மல்லை நிலமே, பாயல் = படுக்கும் இடமாகச் சயனித்து, ஓங்கு = உயர்ந்த, தேவனே = கடவுளே ! என்றது. 74

பாய ருத்திரைப் பவ்வ மாதிரர்
 பன்னு மாகடன் மல்லை யேந்தலே
தூய ராகுலந் தோற்றி யண்டர்பாற்
 சுவைய ளைக்கவர்ந் துண்ட வண்மையாய்
ஆய ராகுலத் தினைபு ரந்திடு
 மைய னேயெனை யாத ரித்தரு
ணேய ராகுலத் தினைய கற்றிடு
 நேமி யேமறை போற்று வள்ளலே.

இதன் பொருள் :

பாய் = பாய்தல், அரு = நீங்காத, திரை = அலைகளையுடைய, பவ்வம் = சமுத்திரம் சூழ்ந்த, மாதிரர் = பூமியிலுள்ளவர்கள், பன்னும் = துதிசொல்லுகின்ற, மா = இலட்சுமி வாசமாகிய, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, ஏந்தலே = பெருமையிற் சிறந்தவனே ! தூயரு = பரிசுத்தம் நீங்காத, குலம் = இராஜகுலத்தில், தோற்றி = அவதரித்து, அண்டர் = இயாதவர்கள், ஆகுலம் = பசுக்கூட்டங்களை, புரந்திடும் = மலையைக் குடையாகப் பிடித்துக் காத்த, ஐயனே = க[ர்]த்தனே, எனை = என்னை, ஆதரித்து = காப்பாற்றி, அருள் = அருளவேணும், நேயர் = அன்பர்கள், ஆகுலத்தினை = வருத்தங்களை, அகற்றிடும் = நிவர்த்திசெய்யும், நேமியே = சக்கராயுதமுடையவனே ! மறை = வேதங்கள், போற்று = துதிசெய்யப்பட்ட, வள்ளலே = வரையாது கொடுக்கப்பட்ட கண்ணனே ! என்றது. 75

வள்ள லேபணி யாத தீயர்பான்
 மருவி டாப்பொரு ளேத கைப்பெறு
தெள்ளு செந்தமிழ்க் குள்ளு கப்புறுஞ்
 செம்ம லேபடர் சித்த ருட்புரி
எள்ளி லெண்ணைபோ லெங்க ணுநிரம்
 பேந்த லேயிலாங் கலிப லம்விழத்
துள்ளு வாளையந் தித்த வேல்வைகண்
 டுஞ்சு பொற்கடன் மல்லை கத்தனே.

இதன் பொருள் :

வள்ளலே = வரையாது கொடுப்பவனே! பணியாத = வணங்காத, தீயர்பால் = கொடியவரிடத்தில், மருவிடா = சேராத, பொருளே = தலைமையானவனே! தகை(ப்)பெறு = பெருமைபெற்ற, தெள்ளு = தெளிவாகிய, செந்தமிழ்க்கு = செந்தமிழ்ப் பாடலுக்கு, உள் = மனம், உகப்புறும் = சந்தோஷமுண்டாகும், செம்மலே = எப்பொருட்கும் நாயகனே! படர் = பரவும்படியான, சித்து = அறிவு, அருட்புரிவாய் = கிருபை செய்வாய், எள்ளிலெண்ணைபோல் = எள்ளுக்குள்ளே எண்ணெய் கலந்து இருப்பதுபோல், எங்கணும் = எந்த இடத்தும், நிரம்பும் = நிறைந்த, ஏந்தலே = முதல்வனே! இலாங்கலி = தென்னையின், பலம் = கனி, விழ = விழும்படி, துள்ளும் = களிப்பினால் துள்ளுகின்ற, வாளை = வாளைமீன்கள், அந்தித்த = பொருந்திய, ஏல்வைகண் = தடாகங்கள், துஞ்சு = நிலைபெற்ற, பொற்கடன்மல்லை = அழகிய திருக்கடன்மல்லை, க[ர்]த்தனே = பகவனே! என்றது. 76

க[ர்]த்தனே னேயு னாமத்தை யோதிபொற்
 கழல்வ ணங்குவர்க் கரிலி லாப்பத
மத்தி ரிச்சுரர் போற்ற வீபர
 மாதம னேகடன் மல்லை பள்ளிகொள்
புத்த னேயுன தன்ப னல்லனாற்
 புந்தி யுற்றிடுங் குரவ னல்லன்மீ
சுத்த மொன்றிலாச் சேய னாகிலும்
 துனிவி லாப்பொறுத் தாளெம் மண்ணலே.

இதன் பொருள் :

கத்தனே = கடவுளே! உன் = உமது, நாமத்தை = திருநாமங்களை, ஓதி = ஸ்மரித்து, பொற்கழல் = அழகிய பாதங்களை, வணங்குவர்க்கு = சேவிப்பவர்க்கு, அரிலிலா = குற்றமில்லாத, பதம் = பரமபதம், அத்திரி = ஆகாயத்திலிருக்கும், சுரர் = தேவர்கள், போற்ற = புகழும்படிக்கு, ஈ = கொடுக்கும், பரமாத்துமனே = என்றும் அழிவில்லாத கடவுளே! கடன்மல்லை = திருக்கடன்மல்லை, பள்ளிகொள் = பூமியில் சயனங் கொண்ட, புத்தனே = பௌத்தனே! உனது = உம்முடைய, அன்பன் அல்லன் = பக்தியுடையவன் அல்லன், நற்புந்தி = நல்ல அறிவு, உற்றிடும் = பொருந்திடும், குரவன் = பெரியோனல்லன், மீ = மேலான, சுத்தம் = பரிசுத்தமானது, ஒன்றிலா = ஒன்றுமில்லாத, சேயனுகிலும் = சிறுவனுக இருந்தாலும், துனி = கோபம், இலா = இல்லாமல், பொறுத்து = கமித்து, ஆள் = அடிமை கொள்வாய், எம்மண்ணலே = எமது நாயகனே! என்றது. 77

அண்ண லுற்றபுட் கரனு மம்புய
  மடியி லர்ச்சனைக் குயில வூழ்த்தியே
திண்ண முற்றரி வனமி றைத்திடச்
  சிந்தை யிற்செருக் கொண்டு வந்திடுங்
கண்ண னேகடன் மல்லை மேவிய
  கமல மீந்தசெம் பாத னேபுயல்
வண்ண னேயுன தருளைச் சீர்த்தியை
  மாதி ரத்தில்யார் போற்ற வல்லரே.

இதன் பொருள் :

அண்ணல் = பெருமை, உற்ற = பொருந்திய, புட்கரனும் = புண்டரீகனும், அம்புயம் = தாமரைமலரை, அடியில் = பாதத்தில், அர்ச்சனை = அருச்சனை, குயில = செய்ய, ஊழ்த்தியே = நினைத்தே, திண்ணமுற்று = வலிமை பொருந்தி, அரி = சமுத்திரத்து, வனம் = நீரை, இறைத்திட = இறைக்க, சிந்தையில் = மனத்தில், செருக்கு கொண்டு = சந்தோஷங் கொண்டு, வந்திடும் = வந்த, கண்ணனே = கிருஷ்ணனுக அவதரித்தவனே! கடன்மல்லை = திருக்கடன்மல்லைப் பூமியில், மேவிய = சயனம் பொருந்திய, கமலம் = கங்கை நீரை, ஈந்த = தந்த,

செம்பாதனே = சிவந்த பாதமுள்ளவனே! புயல் = மேகம் போலும், வண்ணனே = திருமேனியுடையவனே! உனது = உம்முடைய, அருளை = கிருபையை, சீர்த்தியை = புகழை, மாதிரத்தில் = பூலோகத்தில், யார் = யாவர், போற்ற = துதிசெய்ய, வல்லர் = வல்லமையுடையவர்கள்; என்றது. 78

வல்ல னேமன மாயை நீங்கிட
வார ருட்செயு மாகர் தேவனே
சொல்ல னேகர்கள் புகழு மெந்தையே
தூரி யம்பல வேக ஊனத்திடு
மல்ல னேகநி றைந்த பொற்கடன்
மல்லை யாய்தரு வீழ வெய்சர
வில்ல னேபிறங் கருள்பொ ழிக்கடை
விழியை நோக்குவாய் தமியன் மீதிலே.

இதன் பொருள்:

வல்லனே = பராக்கிரமமுடையவனே! மனம் = மனத்திலுள்ள, மாயை = மயக்கம், நீங்கிட = நீங்கிப்போக, வார் = பெரிதாகிய, அருள் = கிருபை, செயும் = செய்யும், மாகர் = தேவர்க்கும், தேவனே = க[ர்]த்தனே! சொல் = புகழுடைய, அனேகர் = அனேகர்கள், புகழ் = துதி செய்யும், எந்தையே = எனது தந்தையானவனே! தூரியம் பலவே = வாத்தியம் அநேகமாகவே, கனைத்திடும் = ஒலித்திடும், மல் = வளமை, அனேகம் = மிகுதியாக, நிறைந்த = நிரம்பிய, பொற்கடன் மல்லை = அழகிய திருக்கடன்மல்லை உடையவனே! தரு = கிஷ்கிந்தையில் மராமரம் ஏழும், வீழ = விழும்படி, எய் = பாணம் எய்த, வில்லனே = கோதண்ட மென்னும் வில்லையுடையவனே! பிறங்கு = பிரகாசிக்கின்ற, அருள் பொழி = கிருபை பொழியப்பட்ட, கடைவிழியை = உமது கடைக்கண்களை, நோக்குவாய் = பார்ப்பாய், தமியன் மீதிலே = தனிமையாகிய என்மேல்; என்றது. 79

தமமி லாமனப் புட்க ரர்க்கெழுந்
தருளி யக்கடன் மல்லை சயனமேய்
சிமிலி யின்னவ் நீத யாப்புணுந்
தேவ னேசெக தலமெ லாந்துதி
சமமி லாதநின் னெட்டெ ழுத்தையே
சால்பு வங்கமென் றேபி டித்துமீ
தமைவி லாப்பவக் கடல்க டந்திட
வாவல் கொண்டன னுத ரிப்பையே.

இதன் பொருள் :

தமம்=இருள், இலா = இல்லாத, மனம் = மனதுள்ள, புட்கரர்க்கு = புண்டரீக மகரிஷிக்கு, எழுந்தருளிய = பாற் கடல் விட்டு வந்து சேவை தந்தருளிய, கடன்மல்லை=திருக் கடன்மல்லை க்ஷேத்திரத்தில், சயனமேய் = சயனங்கொண்ட வனே ! சிமிலியில் = உறியில் இருந்த, நவநீத யாப்புணும்= வெண்ணெய்க் கட்டிகளைப் புசித்த, தேவனே = கண்ண பிரானே ! செகதலமெலாம் = பூமியினிடமுழுதும், துதி = தோத்திரஞ் செய்யும், சமமிலாத=ஒன்றுஞ் சமானமில்லாத, நின்=உமது, எட்டெழுத்தை=அஷ்டாக்ஷரத்தை, சால்பு= மாட்சியுள்ள, வங்கமென்று = மரக்கலமென்று, பிடித்து= பிடித்துக்கொண்டு, மீது=மேல், அமைவிலா=அமைவில்லாத, பவக்கடல்=ஜெனன சமுத்திரத்தை, கடந்திட=தாண்டிட, ஆவல் கொண்டனன்=ஆசை கொண்டனன், ஆதரிப்பையே =ஆதரவு செய்வையே ; என்றது. 80

வேறு

ஆதன் மீண்டொரு தாப ரத்தி
  லடைந்த யர்ப்பணு காமலே
நீத யைக்குயி றிப்பு ரந்தரு
  ணிகரி லாக்கடன் மல்லையாய்
கோத ளத்தையெ றிந்து வெள்ளிற்
  குறும்ப லத்தையு குத்திடுஞ்
சூத மொய்க்கமழ் குல்லை மாலையை
  சூடு மற்புய கோவனே.

இதன் பொருள் :

ஆதன் = எனது பிராணன், மீண்டு=மறுபடியும், ஒரு தாபரத்தில்=ஒரு சரீரத்தில், அடைந்து=சேர்ந்து, அயர்ப்பு =வருத்தம், அணுகாமலே=சேராமலே, நீ தயைக் குயிறி=நீ கிருபை செய்து, புரந்தருள்=காத்தருளவேணும், நிகரிலா= நிகரில்லாத, கடன்மல்லையாய்=திருக்கடன்மல்லைத் தலசயனப் பெருமானே ! கோதளத்தை=பசுவின் கன்றை, எறிந்து= எடுத்து வீசி, வெள்ளில்=விளா மரத்திலுள்ள, குறும்பலத்தை

=சிறிய பழத்தை, உகுத்திடும் = உதிர்த்திடும், சூதம் = வண்டுகள், மொய் = மொய்க்கப்பட்ட, கமழ் = வாசனை வீசுகின்ற, துல்லை மாலையை = திருத்துளப மாலையை, சூடும் = தரிக்கும், மல் = பலம் பொருந்திய, புயம் = தோளையுடைய, கோவனே = முதல்வனே! என்றது. 81

கோத ரித்திடு மகப திப்பகை
 கொள்ள நென்னல்பொ றைக்கொடு
கோத ரித்திட வேய ளித்திடு
 கோம னேகடல் மல்லையாய்
கோத ரித்தழல் பானு நீர்மதி
 கோதை விண்டல மண்டலி
கோத ரித்தவ னேகிரு பைப்புரி
 கொற்ற புள்ளிறை யூர்தியே.

இதன் பொருள் :

கோ = வச்சிராயுதத்தை, தரித்த = கையில் பிடித்த, மகபதி = தேவேந்திரன், பகை = விரோதம், கொள்ள = கொண்ட பொழுது, நென்னல் = முந்நாளில், பொறைக்கொடு = கோவர்த்தன மென்னும் மலையைக் கொண்டு, கோ = பசுக்கூட்டம், தரித்திட = பூமியில் நிலைத்திருக்கும்படி, அளித்திடு = காத்திடும், கோமனே = சிறந்தவனே! கடன்மல்லையாய் = திருக்கடன்மல்லையென்னுந் திருப்பதியுடையவனே! கோது = குற்றங்களை, அரி = நீக்கும், தழல் = அக்கினி, பானு = சூரியன், நீர் = ஜலம், மதி = சந்திரன், கோதை = வாயு, விண்டலம் = ஆகாயம், மண்டலி = பூமி இவையெல்லாமாக, கோ = பிரகாசமாக, தரித்தவனே = அவதரித்தவனே! கிருபை(ப்)புரி = அடியேனுக்குக் கிருபை செய்வாய், கொற்றம் = வெற்றி பொருந்திய, புள்ளிறை = பட்சிராஜனாகிய கருடனை, ஊர்தியே = வாகனமாகக் கொண்டவனே! என்றது. 82

ஊர்த கைப்பெறு பணவ ராவினி
 லுற்றி டும்பர னேசுரர்க்
கோர்த கைப்பெறு சுதையை யீந்திடு
 மிறைவ னேகிளர் சுருதியின்
சீர்த கைப்பெறு முடிந டம்புரி
 தேவ னேயெனை யாளுவாய்
வார்த கைப்பெறு சிகர மார்கடன்
 மல்லை நற்குணக் குன்றமே.

இதன் பொருள் :

ஊர் = பரவும், தகைப்பெறு = அழகு பெற்ற, பணம்= படத்தையுடைய, அராவினில் = ஆதிசேஷன்பேரில், உற்றிடும்=பள்ளிகொள்ளும், பரனே=கர்த்தாவே! சுரர்க்கு= தேவர்க்கு, ஏர்தகைப்பெறு= அழகும் பெருமையும் பெற்ற, சுதையை=அமுதத்தை, ஈந்திடும் = கொடுத்திடும், இறைவனே =எப்பொருட்கும் முதல்வனே! கிளர் = பிரகாசிக்கின்ற, சுருதியின் =வேதத்தின், சீர்தகைப் பெறு=சிறப்பும் பெருமையும் பெற்ற, முடி = முடிவில், நடம்புரி = நிருத்தஞ் செய்யப் பட்ட, தேவனே = கடவுளே! எனை =என்னை, ஆளுவாய்= அடிமை கொள்ளுவாய், வார்தகைப்பெறு=நீட்சியும் அழகும் பெற்ற, சிகரமார் = சிகர கோபுரங்கள் பொருந்தியிருக்கும், கடன்மல்லை=திருக்கடன்மல்லை தலத்திற் சயனங் கொண்ட, நற்குணக்குன்றமே=நல்ல குணம் மலைபோலு மிகுந்தவனே! என்றது. 83

குணமி லங்கிய வன்பர் தங்குவை
குந்த மேவநி னைக்கில்கா
வணமி லங்கிய பொற்றி ருக்கடன்
மல்லை கண்வளர் மோகனை
மணமி லங்கிய குல்லை யந்தொடை
வாம னைக்குரை வாய்ந்தவா
ரணமி லங்கிய மஞ்செ னத்துயி
லுதை னைத்தொழு மின்னரோ.

இதன் பொருள் :

குணமிலங்கிய=நல்ல குணங்கள் பிரகாசிக்கும், அன்பர்= பாகவதர்கள், தங்கு=வாசஞ்செய்கின்ற, வைகுந்தமே=பரம பதம் பெற, நினைக்கில் = எண்ணில், கா = பூஞ்சோலைகள், வணம் இலங்கிய = வண்ணம் என்னும் அழகு விளங்கிய, பொன் = மகாலட்சுமி வசிக்கும், திருக்கடன்மல்லை = திருக் கடன்மல்லைப் பூமியில், கண்வளர்=யோகநித்திரை செய்யா நின்ற, மோகனை=மோக முள்ளவனை, மணம்=வாசனை, இலங் கிய=பிரகாசமுள்ள, குல்லை = திருத்துழாய், அந்தொடை= அழகிய மாலை, வாமனை = அழகுள்ளவனை, குரை = சத்தம்,

வாய்ந்த = பொருந்திய, வாரணம் = பாற்கடலில், இலங்கிய = பிரகாசமுடைய, மஞ்செனு = மேகம் போல, துயில் = யோக நித்திரை செய்யா நின்ற, நாதனை = நாயகனை, தொழுமின் = சேவியுங்கள்: அரோ—அசைச்சொல்; என்றது. 84

தொழு திடுஞ்சுனி தித்த ரும்முளை
தூய வீடணன் முதல்வர்க
ளழிவி லாவருள் பெற்று வாழ்குவ
தனையு ணர்ந்துவெ மிருளினை
யொழிவு செய்கடன் மல்லை யேந்தலை
யுன்னி டாதிரி சவமெனக்
கழிவு டன்னுல வுவதில் யாதொரு
கதியு ருதிது கருதுமின்.

இதன் பொருள்:

தொழுதிடும் = வணங்கிடும், சுனிதி = உத்தானபாதராஜன் மனைவி, தரும் = பெற்ற, முளை = புத்திரனுகிய துருவன், தூய = பரிசுத்தகுணமுள்ள, வீடணன் = வீபீஷணன், முதல்வர்கள் = முதலானவர்கள், அழிவு இலா = அழிவு இல்லாத, அருள் = கிருபை, பெற்று = கிடைத்து, வாழ்குவதனை = வாழுந் தன்மையை, அறிந்து = தெரிந்து, வெம்மிருளினை = வெவ்விய மயக்கத்தை, ஒழிவுசெய் = நீங்கச் செய்கின்ற, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, ஏந்தலை = தலசயனனை, உன்னிடா = தியானஞ் செய்யாமல், திரி = திரிகின்ற, சவமென = பிணம் போல, கழிவுடன் = மிகுதியாக, உலாவுவதில் = சஞ்சரிப்பதில், யாதொரு கதியும் = எந்த பதவியும், உருது = கிடைக்காது, கருதுமின் = நினையுங்கள்; என்றது. 85

கருத ருங்கடன் மல்லை வாழ்வுறு
காவ லாவெனை யாளெனப்
பெருகு மன்பினெ டனுதி னங்தொழு
தேத்தி டிற்பெரும் புன்கணுங்
கருகு தொண்ட ரெனத்தி கழ்ந்து
களிப்ப ணைந்துநல் விண்கதி
பருமு கப்புறு பேறு மன்னுவர்
பாய வல்வினை மாந்தரே.

இதன் பொருள் :

கருதரும் = சொல்லுவதற்கு அருமையான மகத்துவ முள்ள, கடன்மல்லை = திருக்கடன்மல்லையினிடத்து, வாழ்வுறும் = வாழ்க்கை பொருந்திய, காவலா = முதல்வனே! எனை = உன் தாசனுகிய என்னை, ஆள் என = அடிமை கொள்வாய் என்று, பெருகு = பெருகிய, அன்பினுடன் = பக்தியுடன், அனுதினம் = எப்பொழுதும், தொழுது = வணங்கி, ஏத்திடில் = தௌத்தியஞ் செய்திடில், பெரும் புன்கணும் = பெரிதாகிய துன்பங்களும், கருகும் = கருகி நீங்கிப் போகும், தொண்டர் = அடியார்கள், என் = என்ன, திகழ்ந்து = விளங்கி, களிப்பு = சந்தோஷம், அணைந்து = சேர்ந்து, நல் = நல்ல, விண்கதிபரும் = சுவர்க்க கதியுடையவரும், உகப்புறும் = சந்தோஷம் பொருந்தும், பேறு = இலாபமாகிய — பதவியை, மன்னுவர் = நிலையாகப் பெறுவர், பாய = பரவிய, வல் = வலிமையுள்ள, வினை = தீவினை செய்த மாந்தர்கள், என்றது. 86

மாந்தருக்க ணிறைந்த கோடர
மன்று பொற்கடன் மல்லையிற்
சார்ந்தருக்க னெனத்து ளங்கிடு
தாம ணைப்படர் பொன்னகர்
வாய்ந்த பொற்றரு நிலத்தி ணட்டிய
வள்ள லைத்துடி யெனஇடை
தேய்ந்த ருக்மணி காந்த னைத்துதி
செய்வ ரேதிகழ் பெறுவரே.

இதன் பொருள் :

மாந் தருக்கள் = மாமரங்கள், நிறைந்த = பூர்ணமாக இருக்கும், கோடரம் = மலர்ச் சோலைகள், மன்னு = மிகுந்த, பொன் = அழகிய, கடன்மல்லையில் = திருக்கடன்மல்லை ஸ்தலத்தில், சார்ந்து = புண்டரீக முனிவருக்கு ஸேவை சாதிக்க வந்து, அருக்கன் = சூரியன், என = என்ன, துளங்கிய = பிரகாசிக்கின்ற, தாமனை = மாலை உடையவனை, படர் = பரந்த, பொன்னகர் = சுவர்க்கலோகத்தில், வாய்ந்த = இருக்கின்ற, பொற்றரு = அழகிய பாரிசாத விருட்சத்தை, நிலத்தில் = சத்தியபாமை புழக்கடையில், நாட்டிய = நட்டு நிலைசெய்த, வள்ளலை = வரையாது கொடுக்கும் பகவனை, துடியென = உடுக்கை

போல, இடை = இடையானது, தேய்ந்த = சிறுத்த, ருக்மணி = உருக்குமணி தேவியின், காந்தனை = புருஷனை, துதி = தோத்திரம், செய்வரே = செய்யப்பட்ட அன்பர்களே, திகழ் பெறுவரே = பிரகாசம் அடைவர்; ஏ—ஈற்றசை, என்றது. 87

பெறுவ ரந்தனை வீற ளித்திடு
 பெட்பு றுங்கடன் மல்லைவாழ்
இறைவ வெவ்விய லுறும்வி ராதனை
 இகலு டன்வெலு நாதனே
அறுவ ரைக்கொடி தென்றகத்திய
 வருமு னித்திரள் காணரும்
சிறைது கிர்க்கலு ழக்கொ டிக்கர
 செம்ம லேயருள் கொண்டலே.

இதன் பொருள்:

பெறுவரந்தனை = அடியார்கள் பெறும் வரங்களை, வீற = பெருமை யடையும்படி, அளித்திடும் = கொடுத்திடும், பெட்புறும் = அன்பு பொருந்திய, கடன்மல்லையில் = திருக்கடன் மல்லை யுடையவனே, இறைவ = கத்தனே! வெவ்வியல் = கடூரமான காட்டில், உறும் = வாசஞ் செய்திருந்த, விராதனை = விராதனென்று பெயருள்ள இராட்சதனை, இகலுடன் = வலிமையுடன், வெலு = வென்ற, நாதனே = இராமஸ்வாமியே, அறுவரை = காமம்—குரோதம்—லோபம்—மோகம்—மதம்—மாச்சரியம் என்னும் ஆறு பேரையும், கொடிதென்று = கடூரமானது என்று, அகற்றிய = நீக்கிய, அருமுனித்திரள் = அருமையாகிய ரிஷிக் கூட்டங்கள், காணரும் = காண்பதற்கு அருமையான, சிறை = இறகுகள், துகிர் = பவளம் போன்ற, கலுழக் கொடி = கருடக் கொடி, கரம் = கையில் கொண்ட, செம்மலே = முதல்வனே! அருள் = கிருபை பொழியப்பட்ட, கொண்டலே = மேகம் போன்றவனே! என்றது. 88

கொண்ட பாற்கடல் போல வேயிரு
 குவல யத்திடை தேடியே
தண்ட லைப்புரி யின்ற தாற்புகழ்
 சார்தி ருக்கடன் மல்லையிற்
பண்ட கைப்புரை யடிய ரில்களே
 பாற்க டல்புரை யுறைவதால்
அண்டி யேதுயில் கின்றை யாதலின்
 அதனி னைச்சொல யாவரே.

இதன் பொருள்:

கொண்ட=நீ சயனங்கொண்ட, பாற்கடல்=பாற் சமுத்திரத்தை, போலவே=நிகராகவே, இரு=பெரிய, குவலயத்து=பூலோகத்து, இடை=மத்தியில், தேடியே=தேடிப் பார்த்து, தண்டலைகள்=சோலைகள் சூழ்ந்த, புரி=நகரங்கள், இன்றதால் = இல்லாமையினால், புகழ்=புகழ்ச்சி, சார்= சேர்ந்த, திருக்கடன்மல்லையில் = திருக்கடன்மல்லைப் பட்டணத்தில், பண் = இசையும், தகை = அழகும், புரை = ஒத்திருக்கும், அடியர்=பாகவதர்கள், இல்களே = வீடுகளே, பாற்கடல்=பாற்சமுத்திரம், புரை = சமானமாய், உறைவதால் = இருப்பதால், அண்டியே = அவ்விடத்தே சேர்ந்து, துயில்கின்றை = யோக நித்திரை செய்கின்றை, ஆதலின் = ஆதலினால், அதனினைச் சொல = அதற்குச் சமானம் சொல்ல, யாவரே = இயாவர்; என்றது. 89

சொல்லு மாதர மூன்றின் மேவி
  துளங்கு தெண்டிரை பூமியில்
அல்லு மெல்லு மிகுந்த தீவினை
  யாற்றி டாதுணர் நல்குவாய்
வில்லு மிழ்ப்புரி சைத்தி ருக்கடன்
  மல்லை வேட்புறு வித்தக
பல்லு யிர்க்கொரு தாயெ னக்கிளர்
  பரம தார்க்கிய வையனே.

இதன் பொருள்:

சொல்லும் = பெரியோர்கள் சொல்லப்பட்ட, ஆதரம்= ஆசை, மூன்றின் மேவி=மண்—பொன்—பெண் என்னும் மூன்றிலும் சிக்கி, துளங்கு = அசைகின்ற, தெண்டிரை= தெள்ளிய அலைகளையுடைய கடல் சூழ்ந்த, பூமியில்= பூவுலகத்தில், அல்லும்= இராத்திரியிலும், எல்லும் =பகலிலும், மிகுந்த=மிகுதியான, தீவினை=கொடிதான காரியங்களை, ஆற்றிடாது=செய்திடாது, உணர்=தெளிவு, நல்குவாய்= கொடுப்பாய், வில்லுமிழ்=பிரகாசத்தைக் கக்குகின்ற, புரிசை =மணிகள் பதித்த மதில்கள் சூழ்ந்த, திருக்கடன்மல்லை= திருக்கடன்மல்லை ஸ்தலத்தில், வேட்புறும் = விருப்பம்

பொருந்திய, வித்தக=கத்தனே! பல்லுயிர்க்கு=பல பிராணி களுக்கும், தாயென = தாயைப் போல, கிளர் = விளங்கிய, பரம=பரமனே,! தார்க்கிய வையனே = கருடாழ்வானை வாகனமாகவுடையவனே! என்றது. 90

வேறு

வையக மதிற்புகழு மாமகிமை சேது
மானகடன் மல்லைநில யத்தினிலி யங்குஞ்
சையபுய முற்றவசு தேவனிய நோன்பு
தன்னினுத யஞ்செய்நிதி யேசெய மணைந்த
வையமரும் வேல்விழியர் மானலினின் மேவி
மாழ்கலடை யாதுனது வாரிச மலர்போற்
செய்யசர ணத்தினை யனவரத முன்னத்
தீவிரமு டன்றருதி யருடயை சிறந்தே.

**இதன் பொருள்:**

வையகமதில்=பூலோகத்தில், புகழும்=புகழ்கின்ற, மா= பெருமையுள்ள, மகிமை சேது=மகத்துவம் பொருந்திய சேது, மான=சமானமுள்ள, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, நிலயத்தினில் = திருக்கோயிலில், இயங்கும் = வாசஞ்செய்யும், சையம்=பர்வதம் போலும், புயம்=தோளை, உற்ற=பொருந் திய, வசுதேவன் = வாசுதேவனென்னும் பெயருள்ள அரசன், நியம்=நியமமுள்ள, நோன்பு=விரதத்தில், உதயஞ் செய்மணியே = உதித்த மாணிக்கம் போன்ற, நிதியே= பொருளே, சயம்=வெற்றி, அணைந்த=சேர்ந்த, வை=கூர்மை, அமரும்=பொருந்திய, வேல்=வேலாயுதம் போலும், விழியர்= கண்களையுடைய மாதர்கள், மானலில்=மயக்கத்தில், மேவி= பொருந்தி, மாழ்கல் = வருத்தம், அடையாது = சேராது, உனது = உம்முடைய, வாரிசமலர்போல்=தாமரை மலரைப் போல, செய்ய=சிவந்த, சரணத்தினை=பாதங்களை, அனவரதம் =எப்பொழுதும், உன்ன=தியானிக்க, தீவிரமுடன்=சீக்கிரத் தில், தருதி=கொடுக்கவேண்டும், அருள்=கிருபையும், தயை =மன இரக்கமும், சிறந்தே=சிறப்பாகவே, என்றது. 91

தேக்கின் மிட றற்றுக வயற்கணுகள் வாளைச்
சீற்றமொடு பாய்வளமை யேற்றகடன் மல்லைப்
பூக்கமதில் புட்கர மகாவிருடி யேத்தப்
பொற்பினொடு மறிதுயிலை யாற்றுதிரு மாலே
நீக்கரிய வெம்பிழையி ழைத்தபுல மில்லா
நீசனெனி னுங்கருணை நெடிதுபுரி யன்பாய்
நோக்கியடி யேன்பவ மிரித்தருள் வியந்து
நூழின்முனம் வந்தவெண் வலம்புரியி னானே.

இதன் பொருள் :

தேக்கின் = பாக்கு மரத்தின், மிடறு = கழுத்து, அற்று = ஒடிந்து, உக = விழ, வயற்கண் = கழனியிடத்தில், உகள் = துள்ளிவிளையாடுகின்ற, வாளை = வாளைமீனானது, சீற்றமொடு = கோபத்தோடு, பாய் = பாய்கின்ற, வளமை = செழுமை, ஏற்ற = தகுதியுள்ள, கடன்மல்லை = திருக்கடன்மலை, பூக்கமதில் = நகரத்தில், புட்கர மகாவிருடி = புண்டரீக மகரிஷி, ஏத்த = தோத்திரஞ் செய்ய, பொற்பினொடு = அழகினுடன், அறிதுயிலை = இயாவும் அறிந்து கொள்ளும் நித்திரையை, ஆற்று = செய்கின்ற, திருமாலே = மகாலட்சுமியின் நாயகன் ஆகிய மகா விஷ்ணுவே, நீக்கரிய = நீக்குதற்கும் அருமையான, வெம்பிழை = கடூரமான குற்றத்தை, இழைத்த = செய்த, புலம் = தெளிவு, இல்லா = இல்லாத, நீசனினும் = புலையனானும், கிருபை = கிருபையானது, நெடிது = பெரிதாக, புரி = செய், அன்பாய் = ஆசையாய், நோக்கி = பார்த்து, அடியேன் = அடிமையாகிய என், பவம் = பாவங்களை, இரித்து = ஓடச் செய்து, அருள் = அருள்வாய், நூழின்முனம் = கஜேந்திரன் என்னும் யானையின் முன்னே, வந்த = வந்து இரட்சித்த, வெண் = வெள்ளை நிறமான, வலம்புரியினானே = பாஞ்ச சன்னியமுடையவனே ; என்றது. 92

புரியினுட னிறைஞ்சுசத வெட்டினில் மிகுத்த
பொன்பதியி தென்றுவணை வாழ்மாகர் பாசப்
புரியகல் விநோதர்புகல் கடன்மல்லை வாசா
போதமினி தாகவடி யேற்கருள் சினத்தன்
றரியுருவ மாகிவிற லசுரனைமுன் செற்ற
வாற்றலுறு மாதிரர்க ளேத்தியே வணங்கு
மரியபுகழ் வாய்சிகரி வீறுதிரு வெவ்வுள்
அன்புடன் விளங்கியுறை புங்கவர் பிரானே.

இதன் பொருள் :

புரியுடன் = ஆசையுடன், இறைஞ்சு = வணங்குகின்ற, சதவெட்டினில் = நூற்றெட்டினில், மிகுந்த = அதிகமான, பொன்பதியிதென்று = திருப்பதி இது என்று, உவணைவாழ் = சுவர்க்கலோகத்தில் வாழ்கின்ற, மாகர் = தேவர்கள், பாசப்புரி = பாசபந்தம், அகல் = நீங்கிய, விநோதர் = பெரியோர்கள், புகல் = சொல்லுகின்ற, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, வாசா = வாசஞ் செய்பவனே! போதம் = அறிவு, இனிதாக = இஷ்டமாக, அடியேற்கு = உமது அடிமையாகிய எனக்கு, அருள் = அருளுவாய், சினந்து = கோபித்து, அன்று = முன்னம், அரி = சிங்கத்தின், உருவாகி = உருவமாகி, விறல் = வலிமையுள்ள, அசுரனை = இரணியனென்னும் பெயருள்ள இராட்சதனை, முன்செற்ற = முன்னே கொன்ற, ஆற்றலுறும் = அறிவுள்ள, மாதிரர்கள் = தேவர்கள், ஏத்தியே = துதிசெய்தே, வணங்கும் = சேவிக்கும், அரிய = அருமையாகிய, சிகரி = சிகர கோபுரங்கள், வீறு = பெருமை பெற்ற, திருஎவ்வுள் = திரு எவ்வுள் நகரத்தில், அன்புடன் = ஆசையுடன், விளங்கி = பிரகாசித்து, உறை = இருக்கின்ற, புங்கவர் = உயர்ந்தவருக்கு, பிரானே = நாயகனே! என்றது. 93

புங்கமுனி புண்டரிக னின்னைவிழி காணப்
புட்கர குரைப்பரவை பெட்புட னிறைக்க
அங்கவன் விழைக்கக மகிழ்ந்தைய னுய்வந்
தண்புன லிறைத்துபி னருங்காட்சி தந்து
பங்கய பதத்தருகில் வைகென வுரைத்துப்
பள்ளிகொள் கடன்மல்லை பாயல்வளர் நாதா
துங்கசத கோடிசுட ரோரென விளக்குந்
தூயபத நேசமுட னெற்குதவு வாயே.

இதன் பொருள் :

புங்கமுனி = மேன்மையுள்ள முனிவனாகிய, புண்டரிகன் = புண்டரிகனென்னும் பெயரினன், நின்னை = உம்மை, விழி காண = கண்ணினால் தெரிசிக்க, புட்கரம் = நிறைவாகிய, குரை = சத்தம் பொருந்திய அலையுள்ள, பரவை = சமுத்திரத்தின் நீரை, பெட்புடன் = அன்புடனே, இறைக்க = நெடுங்காலம் இறைத்ததனால், அங்கு = அவ்விடத்தில், அவன் = அவனுடைய,

விழைக்கு = ஆசைக்கு, அகம்=மனம், மகிழ்ந்து = மகிழ்ச்சியடைந்து, அய்யனாய்=பிராமணனாக, வந்து=வந்து, அண்=பொருந்திய, புனல் = நீரை, இறைத்து = மாலையை வாங்கி இறைத்து, பின்=பின்பு, அருங்காட்சி=அருமையாக சேவை, தந்து=கொடுத்து, பங்கயம்=தாமரை ஒத்த, பதத்தருகில்=பாதங்களின் சமீபத்தில், வைகென = தங்கியிருக்கும்படி, உரைத்து = திருவாய் மலர்ந்தருளி, பள்ளிகொள் = சயனங் கொண்ட, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, பாயல்=நிலமே பாயலாக, வளர் = கண்வளர்கின்ற, நாதா = நாயகனே! துங்கம்=பரிசுத்தமுள்ள, சதகோடி = நூறுகோடி, சுடரோரென=சூரியர்கள் போல, விளங்கும்=பிரகாசிக்கும், தூய=பரிசுத்தமுள்ள, பதம்=பரமபதம், நேசமுடன்=அன்புடனே, எற்கு=எனக்கு, உதவுவாயே=தருவாய், ஏ—ஈற்றசை. 94

நேசமொடு பூதமுனி நீணில ரிறைஞ்ச
  நெய்தைமலி வண்குருகின் வீயினி லுதித்து
வாசமுறு தோமில்கடன் மல்லையர சேநின்
  வைனதேய ணுற்றபண வாளரவி னன்பாய்
தேசமரு முன்கருணை யம்பகமு நோக்கி
  சேயனித யக்கவலை தீர்த்தரு ளளிப்பாய்
மீசுர வுடுத்தவழ வோங்குபணி வெற்பின்
  மின்கொடியி னின்றவலர் மங்கைமகிழ் கோனே.

இதன் பொருள் :

நேசமொடு = அன்பினுடன், பூதமுனி=பூதத்தாழ்வார், நீணிலர் = நீண்ட பூமியிலுள்ளார், இறைஞ்ச = வணங்க, நெய்தைமலி=பெருமை மிகுந்த, வண்=வளமையுள்ள, குருகின் = குருக்கத்தியின், வீயினில் = புட்பத்தில், உதித்து=அவதாரம் செய்து, வாசமுறு=வாசம் பொருந்திய, தோமில்=குற்றமில்லாத, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, அரசே=முதல்வனே! நின்=உமது, வைனதேயனை=கருடாழ்வானை, கண்ணுற்ற=பார்த்த, பண=படத்தையுடைய, வாள்=ஒளிவுள்ள, அரவின்=பாம்பைப் போல, அன்பாய்= இஷ்டமாய், தேசு அமரும் = பிரகாசம் பொருந்திய, உன் = உமது, கருணை=கிருபை நிறைந்த, அம்பகமும் = நேத்திரமும், நோக்கி=பார்த்து, சேயன் = சிறுவனாகிய எனது, இருதயக்கவலை=

மனவருத்தங்களை, தீர்த்தருள்=நீக்கி கிருபை, அளிப்பாய்=தருவாய், மீசுரம் = அதிகமாக, உடுத்தவழ=நட்சத்திரங்கள் தவழும்படி, ஓங்கு = உயர்ந்த, பணிவெற்பில்=சேடமலையில் மின்கொடியின்=மின்னற்கொடிபோல, நின்ற=நின்ற திருக்கோலமா யெழுந்தருளிய, அலர்மங்கை=அலர்மேன்மங்கை, மகிழ்கோனே=மகிழ்ச்சியடையும் நாயகனே! என்றது. 95

மங்களவி யம்பரவை யார்ப்பென நிதந்திண்
 வண்மையுட னேதுழனி மேவுகடன் மல்லை
துங்கநில யத்தமுது துய்த்தமுகின் மானச்
 சோதிநய னம்வளர்கை தோடகவி நோதா
செங்கணெடு வானிருள் செறிந்தவுடல் காட்டி
 திண்மயிட மீதிலிய மன்கடுகி யேறி
அங்கர மதிற்படை பிடித்துவரும் வேளை
 யஞ்சலென நண்ணியெனை யாதரவு செய்யே.

இதன் பொருள்:

மங்கள இயம்=மங்கள வாத்தியம், பரவை=சமுத்திரத்தின், ஆர்ப்பென=சத்தம் போல, நிதம்=தினமும், திண்=பலமான, வண்மையுடன்=வளப்பத்துடன், துழனி=சத்தம், மேவு=பொருந்திய, கடன்மல்லை=திருக்கடன்மல்லை, துங்கம்=பரிசுத்தமுள்ள, நிலயத்து=திருக்கோயிலில், அமுது=நீரை, துய்த்த = உண்ட, முகில் = மேகத்தை, மான = நிகராய், சோதி=பிரகாசமுள்ள, நயனம் வளர்=கண்வளரா நின்ற, கை=அஸ்தம், தோடகம்=தாமரைமலர் போன்ற, விநோதா=மாயா விநோதங்கள் செய்பவனே! செங்கண் = சிவந்த கண்கள், நெடு = பெருத்த, வானிருள் = கறுத்த மேகம், செறிந்த=கங்குல் போல் செறிந்த, உடல்=சரீரம், காட்டி=காண்பித்து, திண்=வலிமையுள்ள, மயிடம்=எருமைக் கடா, மீதில்=மேல், இயமன்=எமதருமராஜன், கடுகி=சீக்கிரத்தில், ஏறி=ஏறிக் கொண்டு, அங்கரமதில்=அழகிய கையில், படை=சூலாயுதம், பிடித்துவரும்=பிடித்துக் கொண்டு வருகிற, வேளை=சமயத்தில், அஞ்சலென = பயப்படாதே என்று சொல்லி நண்ணி=என்னிடம் வந்து, ஆதரவு=ஆதரணை, செய்யே=செய்ய வேணும்; என்றது. ஏ—ஈற்றசை. 96

செய்யவள் விளங்குவயி னோங்குகடன் மல்லைச்
  சிந்தையுவ் கைப்பொலி வுடன்மருவி வீறும்
துய்யவிரு நான்கெனு மெழுத்தினி லடங்குஞ்
  சூட்சமிகு தூலபொருள் போலவே துவன்ற
பையகி மிசைத்திரு நடங்குயில் சரோசப்
  பாதமல ரன்புட னனாரதம் வணங்கி
மெய்யறிவி லாதசிறி யேற்குணர் வளித்து
  மேலவர் விரும்புபத பேறுதரு வாயே.

**இதன் பொருள் :**

செய்யவள் = மகாலட்சுமி, விளங்கு = பிரகாசிக்கின்ற, வயின் = வீடுகள், ஓங்கு = உயர்ந்த, கடன்மல்லை = திருக்கடன் மல்லையினிடத்து, சிந்தை = மனம், உவகை = சந்தோஷம், பொலிவுடன் = அதிகமாக, மருவி = பொருந்தி, வீறு = வீறிய, துய்ய = பரிசுத்தமுள்ள, இருநான்கெனும் = எட்டென்னும், எழுத்தினில் = அக்ஷரத்தினில், அடங்கும் = அடங்கியிருக்கின்ற, சூட்சம் = சிறிதாகவும், மிகு = மிகுந்த, தூலபொருள் = ஸரிதான வஸ்துவாகவும், துவன்ற = எங்கும் நிறைந்தவனே! பை = படத்தையுடைய, அகி = காளிங்கனென்னும் பெயரையுடைய பாம்பின், மிசை = மேல், திருநடம் = அழகிய நிருத்தம், குயில் = செய்த, சரோசம் = தாமரை மலர் போன்ற, பாத மலர் = திருவடி மலரை, அன்புடன் = இஷ்டத்துடன், அனாரதம் = சதாகாலமும், வணங்க = சேவிக்க, மெய் = உண்மையாக, அறிவிலாத = அறிவில்லாத, சிறியேற்கு = சிறியவனாகிய எனக்கு, உணர்வு = தெளிவு, அளித்து = கொடுத்து, மேலவர் = மேலான ஞானவான்கள், விரும்பும் = ஆசைப்படும், பதம் = வைகுந்த பதத்தே வசிக்கும், பேறு = இலாபத்தை, தருவாய் = கொடுப்பாய்: என்றது. ஏ — ஈற்றசை.

97

பேறுலவு வானவர்கு ழாம்பிறழ்த றுன்ன
  பேரிய லுறுங்குளிறு பாஞ்சசனி யத்தை
வீறுதுகிர் வாயிடை பொருத்தியொலி செய்த
  வித்தக வருந்தவ மகட்கரசன் விட்ட
சீறுவிடை யேழினையு மட்டதிறன் மொய்ம்போய்
  செவ்விய மகிழ்ந்துதமி யேற்கருள்செய் வாய்வின்
ணீறுபுனை பிஞ்சக னிரப்பினை யகற்றி
  நேயமுட னுண்டதகை யுற்றபெரு மானே.

இதன் பொருள் :

பேறு = சுவர்க்கப்பதவியாகிய பேறில், உலவு = வாசஞ் செய்கின்ற, வானவர்கள் = தேவர்கள், குழாம் = கூட்டம், பிறழ்தல் = நடுக்கம், துன்ன = அடைய, பேரியல் = பெருத்த அழகையுடைய, குளிறு = சத்திக்கின்ற, பாஞ்சசன்னியத்தை = சங்கை, வீறு = பெருமையுள்ள, துகிர் = பவளம் போன்ற, வாயிடை பொருத்தி = வாயினிடத்தில் பொருந்த வைத்து, ஒலி செய்த = தொனித்த, வித்தக = கண்ணபிரானே ! அருந் தவ = அரிதாகிய தவத்தையுடைய, மகட்கு = குமாரத்திக்கு, அரசன் = இராஜன், விட்ட = அனுப்பிய, சீறு விடை = சீறுகின்ற திறமுள்ள ரிஷபங்கள், ஏழினையும் = ஏழையும், அட்ட = வென்ற, திறல் = பராக்கிரமம் பொருந்திய, மொய்ம்போய் = புஜத்தையுடையவனே ! செவ்விய = அழகுள்ளவ! மகிழ்ந்து = உமது திருவுள மகிழ்ச்சி யடைந்து, தமியேற்கு = அடியேனுக்கு, அருள் செய்வாய் = கிருபை செய்வாய், வெண் = வெண்மையுள்ள, நீறு = விபூதியை, புனை = தரித்த, பிஞ்சகன் = சிவபெருமான், இரப்பினை = இயாசித்ததை, அகற்றி = நீக்கி, நேயமுடன் = அன்புடனே, ஆண்ட = ஆண்டு கொண்ட, தகையுற்ற = தயவுற்ற, பெருமானே = முதல்வனே ! என்றது. 98

உற்றபுக ழார்நெடிய தாணுவினை நென்னல்
ஓங்கிய வடற்கவிகை யாமென வெடுத்துப்
பெற்றமனி தர்க்கொரு வனுங்கலனு காமற்
பெட்புட னளித்தகடன் மல்லைவளர் கோவே
கற்றினை விரும்பிவரு கறவையது போல
காட்சிதர நீயெனை விரும்பிவிரை வாய்வந்
திற்றைதுய ரம்புரியும் வெம்பிணியை வீட்டி
இன்புற நலக்கருணை யைப்புரி யுவந்தே.

இதன் பொருள் :

உற்ற = பொருந்திய, புகழ் = புகழ்ச்சி, ஆர் = நிறைந்த, நெடிய = பெரிய, தாணுவினை = கோவர்த்தனமென்னும் மலையை, நென்னல் = முந்நாளில், ஓங்கிய = உயர்ந்த, அடல் = வலிமை பொருந்திய, கவிகையாமென = குடையாமென்று, எடுத்து = கரத்தினுல் எடுத்து, பெற்றம் = பசுக் கூட்டம், மனிதர் = மனிதர்க்கு, ஒரு அனுங்கமும் = ஒரு துன்பமும், அணுகாமல் = சேராமல், பெட்புடன் = அன்புடனே, அளித்த = இரட்

சித்த, கடன்மல்லை = திருக்கடன்மல்லை ஸ்தலத்தில், வளர் = கண் வளராநின்ற, கோவே = கத்தனே! கற்றினை = கன்றினை, விரும்பிவரு = விருப்பத்துடனே தேடி வருகின்ற, கறவை = பசு, அதுபோல் = அதைப்போல, காட்சிதர = சேவை சாதிக்க, நீயெனை = நீ என்னை, விரும்பி = ஆசை கொண்டு, விரைவாய் = வேகமாய், வந்து = என்னிடம் வந்து, இற்றை = இன்று, துயரம் = துன்பத்தை, புரி = செய்கின்ற, வெம்பிணியை = கடூரமான வியாதியை, வீட்டி = வென்று, இன்புற = இன்பம் பொருந்த, நற்கருணையை = நல்ல கிருபையை, புரி = செய்வாய், உவந்தே = சந்தோஷித்தே! என்றது. 99

வந்தமரர் போற்றுபுகழ் பொங்கிவளர் கங்கை
வழங்கினது மாநிலம ளந்தது முருத்தி
முந்துசக டன்னுயிர் தொலைத்தது நடித்து
மூரல்விட வரவின்மத நீக்கினது முன்றன்
தொந்தமுறு மன்பருண டப்பது மிகுந்த
தூயமுனி புட்கரம் வனைப்பது மெனக்குச்
சந்ததமு மேதுணையி ருப்பது மகத்துவந்
தங்குகடன் மல்லையரி பொன்னடிகள் மன்னே.

**இதன் பொருள்:**

வந்து = பூலோகத்திற்கு வந்து, அமரர் = தேவர்கள், போற்று = தோத்திரஞ் செய்யப்பட்ட, புகழ் = கீர்த்தி, பொங்கி = மிகுந்து, வளர் = வளர்கின்ற, கங்கை = கங்கா சலத்தை, வழங்கினதும் = கொடுத்ததும், மாநிலம் = பெருமை பொருந்திய நிலத்தை, அளந்ததும் = ஓரடியாக அளந்ததும், உருத்தி = கோபங் கொண்டு, முந்து = முன்னம், சகடன் = சகடாசுரன், உயிர் = பிராணனை, தொலைத்ததும் = ஒழியச் செய்ததும், நடித்து = நடனஞ் செய்து, மூரலில் = தந்தங்களில், விடம் = விஷமுள்ள, அரவின் = காளிங்கனென்னும் பாம்பின், மதம் = மதத்தை, நீக்கியதும் = நீங்கச் செய்ததும், உந்தன் = உம்முடைய, தொந்தம் = பற்று, ஊறும் = பொருந்திய, அன்பருள் = அடியார்கள் உள்ளத்தில், நடப்பதும் = சஞ்சரிப்பதும், மிகுந்த = மிகுதியான, தூய = பரிசுத்தமுள்ள, முனி = புண்டரிக முனிவர், புட்கரம் = தாமரை மலர், வனைப்பதும் = தரிப்பதும், எனக்கு = உமது தாசனாகிய இச் சிறுவனுக்கு, சந்ததமும் = சதாகாலமும், துணை = துணையாக, இருப்பதும் = இருக்

கின்றதும், மகத்வம்=பெருமை, தங்கு = தங்கியிருக்கின்ற, கடன்மல்லை = திருக்கடன்மல்லை, அரி = தலசயனப் பெருமாளின், பொன்=அழகு மிகுந்த, அடிகள் = பாதங்கள்; என்றது: மன்னே—ஈற்றசை. 100

## நூல் இயற்றியோர் பெயர்

### எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

சீர்திகழ் கடன் மல்லையிற் கடவுட்
சீர்த்திகேட் டவர்நனி வாழ்க
பார்திக ழிதனைப் படித்தவர் வாழ்க
பண்புசேர் பூசுரர் வாழ்க
நீர்திகழ் நல்லர்கு ழாங்களும் வாழ்க
நிகரிலா விபுலமும் வாழ்க
வார்திக ழுலகத் துயிர்களும் வாழ்க
வரதரா சக்கவி வாழ்க.

இதன் பொருள்:

சீர்=சிறப்பு, திகழ்=விளங்குகின்ற, கடன்மல்லை=திருக்கடன்மல்லை க்ஷேத்திரத்தின், சீர்த்தி=கீர்த்தி, கேட்டவர்=காதில் கேள்வியானவர்கள், நனி=மிகுதியாக, வாழி=வாழக்கடவர், பார்=உலகத்தில், திகழ்=விளங்குகின்ற, இதனை=இந்தப் பதிற்றுப்பத் தந்தாதியை, படித்தவர் = வாசித்தவர், வாழ்க=வாழக்கடவர், பண்பு=நல்ல குணம், சேர்=சேர்ந்த, பூசுரர் = பிராமணர், வாழ்க = வாழக்கடவர், நீர்திகழ்=நல்ல தன்மைகள் விளங்கிய, நல்லர்=சன்மார்க்கமுள்ளார், குழாங்களும் = கூட்டங்களும், வாழ்க = வாழக்கடவர், நிகரிலா=ஒன்றும் சமமில்லாத, விபுலமும் = உலகமும் [உலகத்துள்ளாரும்], வாழ்க=வாழக்கடவர், வார்திகழ் = அதிகமாக விளங்கிய, உலகத்து=உலகத்திலுள்ள, உயிர்களும் வாழ்க=பிராணிகளும் வாழ்க, வரதராசகவி = வரதராச னென்னும் பெயருள்ள புலவன், கவி=இந்தக் கவிதைகளும், வாழ்க=வாழக்கடவது—நீடூழியாக—என்றது. 101

## புண்டரீக முனிவர் விஷயம்

### கலி விருத்தம்

சொல்ல ருங்கடற் றோயம் பலதினம்
மல்லை கொண்டன் றிறைத்திடு புட்கரன்
துல்லி யப்பதத் தைத்தொழு மின்பவ
அல்லல் நீங்கி யவிர்பதம் புல்லவே.

இதன் பொருள் :

சொல்லரும்=சொல்லுதற்கு அருமையான விசாலமுள்ள, கடல்=சமுத்திரத்தின், தோயம்=நீரை, பலதினம்=அநேக நாள், மல்லைகொண்டு=மண்பாத்திரங் கொண்டு, அன்று=முன்னம், இறைத்திடு=இறைத்த, புட்கரன்=புண்டரீக முனிவன், துல்லியம்=தூய, பதத்தை=பாதங்களை, தொழுமின்=வணங்குங்கள், பவ= ஜனன, அல்லல்=வருத்தம், நீங்கி=நீங்கி, அவிர்பதம்=பிரகாசமான பதவி, புல்லவே=சேரவே— என்றது. 102

## திருக்கடன்மல்லைப் பதிற்றுப்பத் தந்தாதி

## முற்றும்

ஸ்ரீ ராமஜெயம்

# திருமழிசைப் பதிற்றுப்பத் தந்தாதி

(பத உரையுடன்)

## பாரங்குசர் விஷயம்

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

காராரும் பொழின்மழிசைச் சகநாதன் கழலிணையிற்
களிப்பு லாவிச்
சீராரும் பதிற்றுப்பத் தந்தாதிப் பாமாலை
சிறியேன் சூட்ட
தாராரும் வரைப்புயமே வுங்காரி யுடையநங்கை
தவத்திற் றோன்றும்
பேராருந் தூயபராங் குசனையென துளமதனிற்
பேணி வாழ்வாம்.

இதன் பொருள்:

காராரும் = மேகங்கள் தவழ்கின்ற, பொழில் = பூஞ் சோலைகள் சூழ்ந்த, மழிசை = திருமழிசை க்ஷேத்திரத்தில் வாசம் பொருந்திய, சகநாதன் = ஜெகநாதப் பெருமாள், கழ லிணையில் = இரண்டு பாதங்களில், களிப்பு = சந்தோஷம், உலாவி = பொருந்தி, சீராரும் = சிறப்புப் பொருந்திய, பதிற்றுப் பத்து = பத்துப் பத்து ஓரிசையாய்வரும், அந்தாதி = அந்தம் முதலாக வருகின்ற, பாமாலை = பாடலாகிய மாலை, சிறியேன் = சிறியவனாகிய யான், சூட்ட = தரிப்பதற்கு, தாராரும் = செங் குவளை மலர் மாலை தாங்கிய, வரை = மலை போலும், புயமேவு = தோள் பொருந்திய, காரி = காரி முதலியார்; உடைய நங்கை யம்மாள் இருவரும் செய்த, தவத்தில் = தவத்தினால், தோன்று = அவதரித்த, பேராரும் = கீர்த்தி பொருந்திய, தூய = பரிசுத்த முள்ள, பராங்குசனை = பராங்குசனென்னும் திருநாமமுடைய வனை, எனது = என்னுடைய, உளமதனில் = மனத்தின்கண், பேணி = விரும்பித் தியானித்து, வாழ்வாம் = வாழக்கடவேன் — என்றது.

## மாருதி துதி

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

சந்த வனஞ்சூழ் திருமழிசைத்
 தாமோ தரன்செம் மலர்ப்பதத்தில்
அந்த முடனே பதிற்றுப்பத்
 தந்தா திப்பாத் தொடைவனைய
விந்த நிகர்தோ ளிரவிகுல்
 வேந்த னிவர்வண் புயவனுமன்
கந்த முறுமம் புயமலரைக்
 கழலைக் கருத்தில் துதிபுரிவாம்.

இதன் பொருள் :

சந்தவனம் = சந்தவனச் சோலைகள், சூழ் = சூழ்ந்திரா நின்ற, திருமழிசை = திருமழிசை நகரத்தில் வசிக்கும், தாமோதரன் = ஜெகநாதப் பெருமாளினது, செம்மலர் = சிவந்த மலர் போன்ற, பதத்தில் = பாதங்களில், அந்தமுடனே = அலங்காரமாக, பதிற்றுப்பத்து = பத்து பத்து ஒரு பண்ணுக், அந்தாதி = பாட்டின் அந்தம் முதலாக, பா = பாடல், தொடை = பாமாலை, வனைய = தரிப்பதற்கு, விந்தம் = விந்தமலையை, நிகர் = சாமானமுள்ள, தோள் = புயத்தையுடைய, இரவிகுல = சூரிய குலத்திற் பிறந்த, வேந்தன் = இராமஸ்வாமியானவர், இவர் = ஆரோகணிக்கும், வண் = வளமை பொருந்திய, புயம் = தோளை யுடைய, அனுமன் = மாருதியின், கந்தமுறும் = வாசனையுள்ள, அம்புயமலர் = தாமரை மலர் போன்ற, கழலை = பாதங்களை, கருத்தில் = மனத்தில், துதிபுரிவோம் = தோத்திரஞ் செய்வோம் —என்றது. 2

## திருமழிசை ஆழ்வார் விஷயம்

### கலி விருத்தம்

சத்தி பாகன் றுதிமழி சைக்கண்ணர்
அத்தன் மீதிலந் தாதி யுரைத்திட
முத்தி சார முயற்சிசெய் வித்தருள்
பத்தி சாரன் பதத்தைப் பணிகுவோம்.

இதன் பொருள் :

சத்தி = பார்வதி தேவியின், பாகன் = ஓர் பாகனுகிய சிவ பெருமான், துதி = தோத்திரஞ் செய்யும், மழிசை = திருமழிசை நகரத்தின், கண் = இடத்தில், ஆர் = பொருந்தியிருக்கின்ற, அத்தன் = என் தந்தையாகிய — ஜெகநாத பெருமாளின், மீது = மேல், அந்தாதி = அந்தம் முதலாக வரும் செய்யுளாகிய நூலை, உரைத்திட = சொல்ல, முத்தி = மோக்ஷஸ்தலத்தை, சார = சேர்வதற்கு, முயற்சி = பிரயத்தினம், செய்வித்தருள் = செய்விக்கும் கிருபையுள்ள, பக்திசாரன் = திருமழிசையாழ் வார், பதத்தை = பாதங்களை, பணிகுவாம் = வணங்குவாம், என்றது. 3

நூல்

நீரார் சலசத் திருவடியென்
 நெஞ்சி லிருத்தி நிதமுமுன்றன்
பேரா யிரமு மெடுத்தோத
 பெருகு ஞான மருண்மழிசைப்
பேரார் தலத்தி லின்பமுளம்
 பிறங்குஞ் சுடரே செல்வமளிச்
சீரார் கமலத் திருமங்கைச்
 சிந்தைக் கிசைந்த செழுங்கரும்பே,

இதன் பொருள் :

நீரார் = நீர் நிறைந்த இடத்திலுள்ள, சலசம் = தாமரை மலர் போன்ற, திருவடி = அழகிய பாதங்கள், என் = என் னுடைய, நெஞ்சில் = மனத்தில், இருத்தி = இருக்கச் செய்து, நிதமும் = சதா காலமும், உன்றன் = உம்முடைய, பேரா யிரமும் = பெயராகிய சகஸ்திரநாமமும், எடுத்து ஓத = எடுத்து துதி சொல்ல, பெருகு = அதிகரிக்கும், ஞானம் = அறிவை, அருள் = எனக்குக் கொடுத்தருள்வாய், மழிசை = திருமழிசை யென்று, பேர் = கீர்த்தி, ஆர் = நிறைந்த, தலத்தில் = இடத் தில், இன்பம் = இஷ்டம், உளம் = மனத்தில், பிறங்கும் = மிகுந்த, சுடரே = பிரகாசமானவனே ! செல்வம் = செல் வத்தை, அளி = கொடுத்த, சீரார் = சிறப்பு பொருந்திய, கமலத் திருமங்கை = தாமரை மலரிற் பிறந்த மகாலட்சுமி, சிந்தைக்கு = மனத்துக்கு, இசைந்த = சம்பந்தமான, செழும் = வளமை

யுள்ள, கரும்பே = கரும்பைப் போலும் மதுர முள்ளவனே! — என்றது. 1

கரிசிற் பதிநூற் றெட்டின்மிகு
கடிசூழ் மழிசைப் பதியதனிற்
புரியோ டமருஞ் சகநாதா
பொலிவண் டுளபத் தொடையாயுட்
பரிவோ டடியேற் கருள்புரிவாய்
பைம்பொன் னவனைக் கீண்டவுகி
ரரியே யவிர்பன் னிருவர்புகழ்
அத்தா வுவணப் பரியோனே,

இதன் பொருள்:

கரிசில் = குற்றமில்லாத, பதி = திருப்பதி, நூற்றெட்டின் = நூற்றெட்டில், மிகும் = மிகுந்த, கடி = மதில், சூழ் = சூழ்ந்த, மழிசை = திருமழிசை, பதியதனில் = நகரத்தினில், புரி = விருப்பத்துடன், அமரும் = அமர்ந்து வசிக்கும், சகநாதா = ஜெகநாதப் பெருமாளே! பொலி = பிரகாசமுள்ள, வண்துளப = வளப்பம் பொருந்திய துளப, தொடையாய் = மாலையுடையவனே! உள்பரிவோடு = மனத்தில் ஆசையுடனே, அடியேற்கு = அடிமையாகிய எனக்கு, அருள் புரிவாய் = கிருபை செய்வாய், பைம் = பசுமை பொருந்திய, பொன்னவனை = பொன்னிறமுள்ள இரணியனை, கீண்ட = பிளந்த, உகிர் = நகமுள்ள, அரியே = நரசிங்க ரூபனே! அவிர் = பிரகாசிக்கும், பன்னிருவர் = பன்னிரண்டு ஆழ்வார்கள், புகழ் = தோத்திரஞ் செய்யும், அத்தா = பிதாவானவனே! உவணப் பரியோனே = கருடனை வாகனமாய்க் கொண்டவனே! என்றது. 2

பரிவோ டளவைப் பணிபரமன்
பலிதீர்த் தருளும் பகவனைவாற்
குரவை யகட்டிற் றுயில்கோவைக்
குடிஞை யிவற்குந் தேவைமழைப்
புரிசை மிசையார் திருமழிசைப்
புரியுட் பணிந்தஞ் சலிபுரிவோர்
பரம பதத்தி லெஞ்ஞான்றும்
பதங்க ளெனவே நிலவுவரே.

இதன் பொருள் :

பரிவோடு = அன்புடனே, அளவை = தினமும், பணி = வணங்கும், பரமன் = சிவபெருமான், பலி = இயாசித்ததை தீர்த்து = நிவர்த்தி செய்து, அருளும் = அருளிய பகவனை— ஸ்ரீமந் நாராயணனை, வால் = வெண்மையான, குரவை = பாற் கடலின், அகட்டில் = மத்தியில், துயில் = திருக்கண் வளரா நின்ற, கோவை = க[ர்]த்தாவை, குடிஞை = கருடப்பட்சியில், இவற்கும் = ஏறி நடத்தும், தேவை = தேவனை, மழை = மேகங் கள், புரிசை = மதிலின், மிசை = மேல், ஆர் = தவழப்பட்ட, திருமழிசை = திருமழிசை, புரியுள் = நகரத்தினுள்ளே, பணிந்து = வணங்கி, அஞ்சலி செய்வோர் = கும்பிடுவோர், பரம பதத்தில், = ஸ்ரீவைகுந்தத்தில், எஞ்ஞான்றும் = எந்நாளும், பதங்கனெனவே = சூரியனெனவே, நிலவுவரே = பிரகாசத் துடன் வாசஞ் செய்வார்கள்—என்றபடி. 3

நிலங்கா லெண்ணீர் நீர்பரிதி
நிகழ்த்துஞ் சசியாய் நிறையுயிராய்
இலங்குந் தேவே சிறைஞிமிறின்
இசையார் துடவைத் திருமழிசைத்
தலத்தின் மருவுஞ் சகநாதா
தண்டா மரைநேர் துவிபாதா
அலங்கார் குழையார் கழுமலினெஞ்
சணுகா துதவு பெருந்தகவே.

இதன் பொருள் :

நிலம் = பூமி, கால் = காற்று, எரி = அக்னி, விண் = ஆகா யம், நீர் = ஜலம், பரிதி = சூரியன், நிகழ்த்தும் = சொல்லும், சசி = சந்திரன் (இதற்கு) [இவற்றிற்கு], நிறை = குறை வில்லாத, உயிராய் = ஜீவனாக, இலங்கும் = விளங்குகின்ற, தேவே = கடவுளே ! சிறை = இறகுகளுள்ள, ஞிமிறின் = வண்டுகளின், இசையார் = ரீங்காரம் பொருந்திய, துடவை = சோலை சூழ்ந்த, திருமழிசை = திருமழிசை, தலத்தின் = க்ஷேத் திரத்தின், மருவும் = வாசஞ் செய்யும், சகநாத = ஜெகநாதப் பெருமானே! தண் = குளிர்ச்சி பொருந்திய, தாமரை = தாமரை மலர், நேர் = நிகரான, துவி = இரண்டு, பாதா = திருவடியுடைய வனே ! அலங்கு = பிரகாசம், ஆர் = நிறைந்த, குழை ஆர் = குண்டலமணிந்த மாதர்கள், கழுமலில் = மயக்கத்தில், நெஞ்சு =

மனம், அணுகாது = சேராது, உதவு = உதவி செய்வாய், பெருந்தகவே = பெரிதாகிய கிருபையே—என்றது. 4

தகமைப் பரவுஞ் சிகரியினிற்
 தரணி தவழு மழிசையினில்
திகழுற் றமருஞ் சகநாதா
 திறற்பஞ் சவரே வியதூதா
நிகமத் திலயம் புரிதாளா
 நிகரில் சதுமால் வரைதோளா
மகிழுற் றடியேன் றனையாள்வாய்
 மஞ்சா ராக மஞ்சோனே.

இதன் பொருள் :

தகமை = பெருமை, பரவு = பரவிய, சிகரியனில் = கோபுரத்தில், தரணி = சூரியன், தவழும் = தவழ்கின்ற, மழிசையினில் = திருமழிசை நகரத்தில், திகழ் = பிரகாசம், உற்று = பொருந்தி, அமரும் = பொருந்தியிருக்கின்ற, சகநாதா = ஜெகநாதப் பெருமானே ! திறல் = பராக்கிரமமுள்ள, பஞ்சவர் = ஐந்து பேர்கள், ஏவிய = போகச் செய்த, தூதா = தூதவனே, நிகமத்து = வேத முடிவில், இலயம் = கூத்து என்னும்—திருநடனம், புரிதாளா = செய்கின்ற பாதமுள்ளவனே! நிகரில் = என்றுஞ் சமான மில்லாத, சது = நான்காகிய, மால்வரை = பெரிய மலை போன்ற, தோளா = தோளையுடையவனே! மகிழுற்று = உமது திருவுளத் தில மகிழ்ச்சி பொருந்தி, எனை ஆள்வாய் = என்னை அடிமை யாகக் கொள்வாய், மஞ்சு = வலிமை பொருந்திய, ஆகம் = தேகம், மஞ்சோனே = மேகம் போன்றவனே!—என்றது. 5

மஞ்சு துயிலும் பொழிலினிமை
 மருவி நடஞ்செய் வளமழிசை
விஞ்சு தலத்தின் மிளிர்பொருளை
 விதுர னமுதுண் டருட்பரனை
பஞ்ச படைசேர் கைத்தலனைப்
 பரமன் பணியும் பார்த்திபனைச்
செஞ்ச மனமே யளவைதுதி
 செய்வாய் வினைவேர் கொய்வாயே.

இதன் பொருள் :

மஞ்சு=மேகங்கள், துயிலும்=நித்திரை செய்யாநின்ற, பொழிலில்=சோலையில், இமை=மயில்கள், மருவி = வாசமாயிருந்து, நடஞ்செய் = நிருத்தஞ் செய்யப்பட்ட, வளம் = செழுமையுள்ள. மழிசை = திருமழிசை, விஞ்சு = மிகுந்த, தலத்தில்=க்ஷேத்திரத்தில், மிளிர்=பிரகாசிக்கின்ற, பொருளை = தலைமையானவனை, விதுரன்=விதுர ராஜனிடம், அமுது= போஜனத்தை, உண்டு=புசித்து, அருள்=கிருபை செய்த, பரனை=கடவுளை, பஞ்ச படை=சங்கு—சக்கரம்—சார்ங்கம்—தண்டு—வாள் என்னும் ஐந்து ஆயுதங்களும், சேர்=சேர்ந்த, கைத்தலனை = கையையுடையவனை, பரமன்=சிவபெருமான், பணியும்=வணங்கும், பார்த்திபனை = முதல்வனை, செஞ்ச= செவ்வைப்பட, மனமே =நெஞ்சே, அளவை=தினந்தோறும், துதி=தோத்திரம் செய்வாய், வினைவேர் = தீவினையின் வேரை, கொய்வாயே=அறுப்பாயே—என்றது. ௬

செய்ய கருணைப் பொழிபுயலைத்
  திவளுங் கவுத்துவ மணியுரனை
மொய்யண் டுளப விலம்பகனை
  முனிவ ரிதயத் துறைமுதலை
வெய்ய தயித்திய ரைச்சவட்டி
  விண்ணோர்க் கருள்செய் வித்தகனை
வையம் பரவு மழிசையினில்
  வாழ்த்திப் பணிவாய் மடநெஞ்சே.

இதன் பொருள் :

செய்ய=செவ்வையாகிய, கருணை =கிருபை, பொழியும்= தரப்பட்ட, புயலை=மேகம் போன்றவனை, திவளும்=அசை(க்)கின்ற, கவுத்துமணி=கௌத்துவ மணி விளங்கிய, உரனை= மார்புள்ளவனை, மொய்=வண்டுகள், அண்டு=நெருங்கிய, துளப விலம்பகனை=திருத்துழாய் மாலையுடையவனை, முனிவர்=மகரிஷிகள், இதயத்து =மனத்தில்,உறை= இருக்கின்ற, முதலை= முதன்மையானவனை, வெய்ய=கடூரமான மனமுள்ள, தயித்தியரை = இராக்ஷதரை, சவட்டி = வென்று, விண்ணோர்க்கு =தேவர்களுக்கு, அருள்செய்=கிருபை செய்யப்பட்ட, வித்தகனை =கத்தாவை, வையம்=உலகத்தார் எல்லாம், பரவும்= சேவிக்கும், மழிசையினில்=திருமழிசை நகரத்தில், வாழ்த்தி=

துதி செய்து, பணிவாய்=வணங்குவாய், மடநெஞ்சே=அறி யாமைத் தன்மையுடைய நெஞ்சமே! என்றது. 7

மடவார் மயற்க ணணுகாமல்
வார முடனென் றனையாள்வாய்
குடவா ரணக்கைக் கோபாலா
கோதி லைவர்க் கனுகூலா
படவா ரகியிற் றிருநடஞ்செய்
பததோ டகப்பூ மாயவனே
வடவா லரிவண் பதம்விடுத்து
மழிசை நகரில் வளர்பொருளே.

இதன் பொருள்:

மடவார் = மாதர்கள், மயற்கண் = மையலினிடத்தில், அணுகாமல் = சேராமல், வாரமுடன் = அன்புடனே, என் றனை = என்னை, ஆள்வாய் = அடிமை கொள்வாய், குடவா ரணம்=குடம் போன்ற சங்கை, கை=கையிலே கொண்டு இருக்கும், கோபாலா = யாதவரிடத்தில் வளர்ந்தவனே! கோதில் = குற்றமில்லாத, ஐவர்க்கு=தருமராஜன் முதலிய ஐந்து பேருக்கும், அனுகூலா=சகாயமானவனே! படம்= படத்தை யுடைய, ஆர் = நிறைந்த, அகியின் = காளிங்க னென்னும் பாம்பின், திருநடஞ் செய்=அழகாக நிருத்தஞ் செய்த, பதம்=பாதம், தோடகப் பூ=தாமரை மலர், மாயவனே =மாயா விநோதனே! வடம்=ஆலிலை, வாலரி=வெண்மை யுள்ள பாற் சமுத்திரம், வண்=வளப்பமுள்ள, பதம்=பரம பதம், விட்டு=விடுத்து, மழிசை=திருமழிசை, நகரில்=பட்ட ணத்தில், வளர்=வளர்கின்ற, பொருளே = தலைமையான வனே! என்றது. 8

பொருதுந் தரங்கக் கலைபுனைந்த
பூவி னரர்விண் ணமரரயன்
எருதுந் தரனிந் திரனிறைஞ்ச
வெழிலார் மழிசைச் சினகரம்வாழ்
மருதுன் றளியார் வனமாலை
மருமச் சகநா தன்சரணங்
கருதுஞ் சனனக் கடல்கடக்க
கலமென் றகத்திற் கொள்ளுமினே.

இதன் பொருள் :

பொருதும்=மோதுகின்ற, தரங்கம் = அலைகளையுடைய சமுத்திரத்தை, கலை = வஸ்திரம் போல, புனைந்த=தரித்த, பூவில்=உலகத்தில், நரர்=மனிதர், விண்=சுவர்க்க லோகத்து, அமரர்=தேவர்கள், அயன்=பிரமதேவன், எருது = ரிஷப வாகனத்தை, உந்து=ஏறி நடத்தும், அரன் =சிவபெருமான், இந்திரன்=தேவேந்திரன், இறைஞ்ச=வணங்க, எழில் ஆர்= அழகு பொருந்திய, மழிசை சினகரம் வாழ்=திருமழிசைக் கோயிலில் வாழ்கின்ற, மரு=வாசனை, துன்னு=நெருங்கிய, அளி ஆர் = வண்டுகள் மொய்க்கின்ற, வனமாலை = திருத் துழாய் மாலை, மருமம்=மார்புள்ள, சகநாதன்=ஜெகநாதப் பெருமாளின், சரணம் = பாதங்களை, கருதும் = தியானம் செய்யும், சனனம் = பிறப்பாகிய, கடல் கடக்க = சமுத் திரத்தைத் தாண்ட, கலமென்று=மரக்கலமென்று, அகத்தில் =மனத்தில், கொள்ளுமினே =கொள்ளுங்கள் : என்றது. 9

மின்னேர் நுசுப்பு மிளிர்குயம்வார்
மேகங் கதுப்பு நடைபொலனர்
உன்ன மெனவு முளமுருகி
யுரைக்கும் புலவீர் திருமழிசை
தன்னி னிலவுஞ் சகநாதன்
சதங்கைச் சரணிற் சந்ததமும்
பொன்னங் கவியாம் பூமாலைப்
புனைமின் பரந்தா மம்புகவே.

இதன் பொருள் :

மின் ஏய்=மின்னலை யொத்த, நுசுப்பு=இடை, மிளிர்= பெருமை பொருந்திய, குயம்=தனபாரம், வார் மேகம்=நீர் கொண்ட மேகம், கதுப்பு=கூந்தல், நடை = நடையானது, பொலன் ஆர்=அழகு பொருந்திய, உன்னம்=எகினம், என வும்=என்றும், உளம்=மனம், உருகி=வருந்தி, உரைக்கும்= சொல்லும், புலவீர் = வித்வான்களே ! திருமழிசை = திரு மழிசை க்ஷேத்திரத்தில், நிலவும்=பிரகாசிக்கும், சகநாதன்= ஜெகநாதப் பெருமானினது, சதங்கைகள்=அழகை–ஒலியைக் காட்டும் சதங்கைகள் அணிந்த, சரணில் = பாதங்களில், சந்ததமும்=எப்பொழுதும், பொன்னம்=அழகிய, கவியாம்=

பாடலாகிய, பூமாலே=மலர் மாலை, புனைமின் =தரியுங்கள், பரந்தாமம் = வைகுந்தம், புகவே = போய் வாசஞ் செய்யவே; என்றது. 10

வேறு

புகர்முக மயிரா பதமிவர் புனிதன்
பொலனுறை திரிபுர மெரித்த
பகவனு மமல மழிசையம் பதிவாழ்
பண்ணவன் மலரடி துதித்த
தகவணி தால மிசையெடுத் தியம்பத்
தனியருள் பெற்றபா வலர்கள்
திகழணி தாமைந் தருநிதி சான்ற
சேணர னகர்விரும் பாரோ.

இதன் பொருள் :

புகர் முகம்=வெள்ளையாகிய, அயிராபதம்=அயிராபதத்தில், இவர்=ஏறி நடத்தும், புனிதன் =தேவேந்திரன், பொலன் =அழகு, உறை=இருக்கின்ற, திரிபுரம்=மூன்று பட்டணங்களையும், எரித்த=எரியச் செய்த, பகவனும்=சிவபெருமானும், அமலம்=அழகிய, மழிசையம்பதி = திருமழிசை நகரத்தில், வாழ்=வசித்திருக்கும், பண்ணவன் = மகாவிஷ்ணுவின், மலரடி = மலர் போன்ற பாதத்தை, துதித்து = தோத்திரஞ் செய்து, தகவு=தெளிவு, அணி=அணிந்து, தாலம்=பூமியின், மிசை=மேல், எடுத்து=எடுத்து, இயம்ப=சொல்ல, தனி= ஒப்பில்லாத, அருள்=கிருபை, பெற்ற=கிடைத்த, பாவலர்கள் =பாவில் வல்லமையுள்ளவர்கள், திகழ் = விளங்கிய, அணி தாம் =சமீபத்திலிருக்கும், ஐந்தரு=பஞ்சதருக்கள், நிதிசான்ற =பொருள் மிகுந்த தேவலோகம், அரன் = சிவபெருமான், நகர் = கைலையங்கிரி நகரத்தையும், விரும்பாரே=இச்சை வையார்கள்—என்றது—ஏ—ஈற்றசை, 11

விரும்புவ துளதொன் றியம்பிடக் கேள்யான்
விண்ணுல கினிலர சுறினும்
கருவமைந் துலகில் கழியுயி ராகி
கணிக்கரு நரகிடை யுறினும்
திருமரு வுரனே திகிரியார் கரனே
திருமழி சைபுரத் துறையும்
கருணைசேர் முகிலே கஞ்சமார் நினது
கழலிடத் தன்பருப் பொருளே.

**இதன் பொருள் :**

விரும்புவது = ஆசைப்படுகிறது, உளது = உள்ளது, ஒன்று = ஒன்று, இயம்பிட = சொல்ல, கேள் = கேட்க வேண்டும், யான் = நான், விண்ணுலகில் = சுவர்க்கலோகத்தில், அரசு = தேவேந்திரனது அரசில், உறினும் = இருந்தாலும், கருவமைந்து = தாயின் வயிற்றில் உருவம் பொருந்தி, உலகில் = உலகத்தில், கழி உயிராகி = மிகுந்த பிராணியாகி, கணிக்கரும் = எண்ணரும், நரகிடை = நரகினிடத்தில், உறினும் = இருந்தாலும், திரு = மகாலட்சுமி, மருவும் = வாசஞ் செய்யும், உரனே = மார்பையுடையவனே ! திகிரி ஆர் = சக்கராயுதம் பொருந்தியிருக்கும், முகிலே = மேகம் போன்ற திருமேனியுடையவனே! கஞ்சம் = தாமரை மலரை, ஆர் = பொருந்தும், நினது = உம்முடைய, கழலிடத்து = திருவடியிடத்தில், அன்பு = ஆசை, அறு = நீங்காத, பொருள் = வஸ்து ; என்றது. 12

அன்புல வடியா ரிதயம துறையும்
அமலனே யருமறை முடியிற்
கொன்பெறு மிலயம் புரிபத விகசக்
கொண்டலே வண்சிறை யெகினம்
இன்புடன் மருவுந் தண்மலர் வாவி
யிலங்கிய வளமழி சையினில்
தென்பொலிந் தொளிரும் மரகத மேனித்
தேவநின் சிறுவனுக் கருளே.

**இதன் பொருள் :**

அன்புலவு = அன்பு பொருந்திய, அடியார் = பாகவதர்கள், இதயம் = மனத்தில், உறையும் = வாசஞ் செய்யும், அமலனே = கடவுளே ! அருமறை = அருமையாகிய வேதத்தின், முடியில் = முடிவிலே, கொன்பெறு = பெருமை பெற்ற, இலயம் = திருநடனம், புரி = செய்யும், பத விகச = பாதங்கள் இரண்டுள்ள, கொண்டலே = மேகம் போன்றவனே ! வண்சிறை = வளமை பொருந்திய இறகினையுடைய அன்னம், இன்புடன் = இஷ்டமுடன், மருவும் = வாசஞ் செய்யும், தண் = குளிர்ச்சியுள்ள, வாவி = தடாகம், இலங்கிய = விளங்கிய, வளம் = செழுமை தங்கிய, மழிசையினில் = திருமழிசை க்ஷேத்திரத்தில், தென் = அழகு, பொலிந்து = பிரகாசித்து, ஒளிரும் = பிரகாசிக்

கும், மரகதமணி=பச்சை நிறமுள்ள, தேவ=தேவராஜனே! நின் = உமது, சிறுவனுக்கு, அருளே = கிருபை செய்வாய்—என்றது. 13

வனைகழற் சனகன் மிதுலையின் மருவி
வாரித ழித்தொடை சடிலன்
புனைசிலை யிறுத்த புயபரந் தாமா
புந்தியில் சிறுவனைப் புரப்பாய்
கனைகடற் றரங்க நிகர்த்தியங் குளிறுங்
கவின்றெரு மழிசையிற் கதிரார்
சினகர மதனிற் றிகழ்சக நாதச்
செம்மலே செய்யவம் பகனே.

இதன் பொருள்:

வனைகழல்=வீரக் கழலைத் தரித்த பாதமுள்ள, சனகன்=சனகமகாராசன், மிதுலையில் = மிதுலாபுரி பட்டணத்தில், மருவி=போய்த் தங்கி, வாரிதழித் தொடை=நீட்சி பொருந்திய கொன்றை மாலை தரித்த, சடிலன் = சடாபாரமுள்ள சிவபெருமானது, புனை = புதுமையான, சிலை = வில்லை, இறுத்த = ஒடித்த, புயம்=தோளினையுடைய, பரந்தாமா = ஸ்ரீ ராமஸ்வாமியே! புந்திஇல்=அறிவில்லாத, சிறுவனை=சிறியவனுகிய என்னை, புரப்பாய் = இரட்சிப்பாய், கனை=சத்திக்கின்ற, கடல்=சமுத்திரத்தின், தரங்கம்=அலையை, நிகர்த்து=ஒத்து, இயம்=வாத்தியங்கள், குளிறும்=சத்திக்கின்ற, கவின் =அழகுள்ள, தெரு=வீதிகளுடைய, மழிசையில்=திருமழிசை க்ஷேத்திரத்தில், கதிரார் = கிரணங்கள் பொருந்திய மணிகள் பதித்த, சினகரமதனில் = கோயிலினிடத்தில், திகழ் = பிரகாசமுள்ள, சகநாதா=ஜெகநாதப் பெருமானே! செய் அம்பகனே=சிவந்த கண்களையுடையவனே! என்றது. 14

அம்பண வடிவா யறலினைக் கவர்ந்த
வசுரனைக் கடிந்துல கிறைஞ்ச
உம்பரு மகிழப் புனல்நிலை யுறச்செய்
தோங்குமட் டாக்கரப் பொருளே
வம்பணி தனத்து மடந்தையர் மீதில்
மனமுறு தெனக்கருள் வளையார்
கம்பலைப் புடைசூழ் திருமழி சையில்வாழ்
கத்தனே கடிகொளத் திரனே,

**இதன் பொருள் :**

அம்பணம் = ஆமையின், வடிவாய் = உருவமாய் வந்து, அறலினை = பல தீர்த்தங்களை யெல்லாம், கவர்ந்த = கொள்ளை கொண்டு போன, அசுரனை = இராக்ஷதனை, கடிந்து = வென்று, உலகு = உலகத்திலுள்ள மனிதர்கள், இறைஞ்ச = வணங்கித் துதிக்க, உம்பரும் = தேவர்களும், மகிழ = சந்தோஷமடைய, புனல் = பலதீர்த்தங்களையும், நிலைசெய்து = நிலைப்படுத்தி, ஓங்கும் = உயர்வைப் பெற்ற, அட்டாக்கரம் = எட்டெழுத்தான, பொருளே = வஸ்துவானவனே! வம்பு = கச்சு, அணி = அணிந்த, தனத்து = தனபாரமுள்ள, மடந்தையர் = மாதர்கள், மீதில் = மேல், மனம் = நெஞ்சு, உறாது = பொருந்தாது, எனக்கு = எனக்கு, அருள் = கிருபைசெய்வாய், வளை ஆர் = சங்கங்கள் தவழப்பட்ட, கம்பலை = வயல்கள், புடை சூழ் = பக்கங்களில் சூழ்ந்திருக்கின்ற, திருமழிசையில் = திருமழிசைத் திருப்பதியில், வாழ் = வாழ்கின்ற, கத்தனே = கடவுளே! கடி கொள் = கூர்மை பொருந்திய, அத்திரனே = பாணங்களை யுடையவனே! என்றது. 15

அத்தியை யறலி விடுமிடங் கரினை
யவிர்தரு திகிரியா லகைத்த
வித்தக வமல வேயணை தோளார்
வேட்பெனும் புணரிவீ ழாது
சித்தமு முவந்து நளினத்தா டருவாய்
தேர்திரு மழிசையின் மதலைக்
கத்திகை மௌலி யரன்றுதி புரியுங்
கண்ணனே கண்குசே சயனே.

**இதன் பொருள் :**

அத்தியை = கஜேந்திரனென்னும் யானையை, அறலில் = நீரிலே இழுத்து, அடும் = போர் செய்கின்ற, இடங்கரினை = முதலையை, அவிர்தரும் = பிரகாசத்தைக் கொடுக்கும், திகிரியால் = சக்கராயுதத்தால், அகைத்த = அறுத்த, வித்தக = ஞான சொரூபமாகிய, அமல = கத்தனே! வேயணை = பச்சை மூங்கிலைப் போலும் திரண்ட, தோளார் = புயத்தையுடைய மாதர்கள், வேட்பெனும் = ஆசை யென்னும், புணரி = சமுத்திரத்தில், வீழாது = யான் விழாமற்படிக்கு, சித்தமும் = மன

மும், உவந்து=சந்தோஷித்து, நளின தாள்=தாமரை மலர் போன்ற திருவடியை, தருவாய்=கொடுப்பாய், தேர்=இரதம் நடத்துகின்ற வீதிகளுள்ள, திருமழிசையில் = திருமழிசை யென்னும் க்ஷேத்திரத்தில், மதலே=கொன்றை, கத்திகை= மலர் மாலையைப் புனைந்த, மௌலி = முடியினையுடைய, அரன்=சிவபெருமான், துதி=தோத்திரம், புரியும்=செய்யும், கண்ணனே = கிருஷ்ணனாக அவதரித்த கத்தனே! கண் = நேத்திரங்கள், குசேசயனே = தாமரைமலர் போன்ற வள்ளலே! என்றது. 16

சயந்தரும் பரிதி சார்ங்கம்வாட் சங்கு
தண்டுசெங் கரதலா மழிசைப்
புயலென விளங்கும் மாழையம் பரனே
புகழுல வைவருக் காக
பயந்தரு மரவத் துவசனல் லவையிற்
படர்ந்துவை யகந்தனைக் கேட்ட
வியன்பெறு முதலே யினிவரன் மறலி
மென்மலர்க் கரத்துறு தருளே.

இதன் பொருள் :

சயம்=வெற்றியை, தரும்=கொடுக்கும், பரிதி =சக்கரம், சார்ங்கம்=வில், வாள்=வாளாயுதம், தண்டு=கதை, சங்கு= பாஞ்சசன்னியம், செம் கரதலா=இவைகளைச் சிவந்த கையினி டமாகக் கொண்டவனே! மழிசை=திருமழிசை நகரத்தில், புய லென=மேகம் போல, விளங்கும் = பிரகாசிக்கும், மாழை= பொன்னாகிய, அம்பரனே =வஸ்திரமுள்ளவனே! புகழுலவு= கீர்த்தி பொருந்திய பஞ்சபாண்டவருக்காக, பயந்தரும்= பயத்தைக் கொடுக்கப்பட்ட, அரவம் = பாம்பை, துவசன்= கொடியாகக் கொண்ட துரியோதனன், நல்=நல்ல, அவையில் = சபையில், படர்ந்து=போய், வையகம்=ஐவர்க்கு உரிய பாதி பூமியை, கேட்ட = கொடுக்கும்படி கேட்டருளிய, வியன் = பெருமை, பெறு=பெற்ற, முதலே = முதன்மையானவனே! இனி = மேல், வரன் = பிரமதேவன், மறலி = இயமன், மென்=மெல்லிய, மலர்க் கரத்து=மலர் போன்ற கையினி டத்து, உறுது=அடையாது, அருளே=கிருபை செய்வாய்- என்றது - ஏ - ஈற்றசை. 17

மலரவண் மருவு மாடவீ திகண்மன்
மழிசையம் பதிப் பெரு மானே
இலகிய விரத்ன மௌலிசேர் சிரமும்
இயலுறு கவுத்துவ நிறமும்
பொலனுறு பிரச மேவுவண் டுளபப்
புயமலை மிளிரவந் தருள்வாய்
நிலம்பெற வைரோ சனனிடம் புக்க
நிமலவா மனவடி வினனே.

இதன் பொருள் :

மலரவள் = தாமரை மலரிலே பிறந்த மகாலட்சுமி, மருவும் = வாசஞ் செய்யும், மாடம் = மாளிகைகள், மன் = மிகுந்த, வீதிகள் = வீதிகளுள்ள, மழிசையம் பதி = அழகிய மழிசை நகர், பெருமானே = ஜெகநாதனே ! இலகிய = பிரகாசமுள்ள —இரத்தினங்கள் பதித்த, மௌலி சேர் = கிரீடம் தரித்த, சிரமும் = தலையும், இயல் = அழகு, உறும் = பொருந்திய, கௌத்துவம் = கௌத்துவாபரணம் விளங்கும், நிறமும் = மார்பும், பொலனுறு = அழகு பொருந்திய, பிரசம் = வண்டுகள், மேவு = பொருந்திய, வண் = வளமையுள்ள, துளபம் = திருத் துழாய்மாலை தரித்த, புயமலை = தோள் பர்வதம் போலும், மிளிர = பிரகாசிக்க, வந்து = அடியேன் முன் வந்து, அருள்வாய் = கிருபை செய்வாய், நிலம் = மூன்றடி மண், பெற = பெற வேண்டியதற்கு, வைரோசனன் = மகாபலிச் சக்கர வர்த்தியின், இடம் = இடத்திற்கு, புக்க = சென்ற, நிமல = தேவனே, வாமனம் = சிறிதாகிய, வடிவினனே = அன்று உருவமுள்ளவனே ! என்றது. 18

வாமன வுருவாம் பிரகலா தனன்மேல்
வஞ்சகன் சினமுட னுரைத்து
தீமன முடனே மதலையை யறைய
சீயமா யுதித்துநின் னுகிரால்
பாமர கனக னுரத்தினை வகிர்ந்த
பகவனே வயல்வளஞ் சால்பு
மாமழி சையில்வாழ் முகுந்தனே யெனையாள்
மாதவர்க் கரியமா தவனே.

இதன் பொருள்:

வாமனம்=சிறிதாகிய, உருவாம்=உருவமுள்ள, பிரகலாதனன் மேல் = பிரகலாத ஆழ்வான் பேரில், வஞ்சகன்= வஞ்சனையுள்ள இரணியன், சினமாய்=கோபமாய், உரைத்து =சொல்லடா வென்று சொல்லி, தீ=அக்கினி போலும், மனமுடன் = மனமுடனே, மதலையை = எதிரிலிருந்த தூணை, அறைய = மோத, சியமாய் = நரசிங்கமாக, உதித்து = அவதரித்து, நின் = உம்முடைய, உகிரால் = நகத்தால், பாமரம்= அறிவின்மையுடைய, கனகன் = இரணியன், உரத்தினை= மார்பை, வகிர்ந்த = பிளந்த, பகவனே = மகாவிஷ்ணுவே! வயல் = கழனியின், வளம்=வளமை, சால்பு = மிகுதியான, மா = பெருமையுள்ள, மழிசையில் = திருமழிசையில், வாழ்= வாழ்கின்ற, முகுந்தனே = முகுந்தனென்னுந் திருநாமனே! எனையாள் = என்னை அடிமை கொள்வாய், மாதவர்க்கும் = மகரிஷிகளுக்கும், அரிய = அருமையான, மாதவனே = கத்தனே! என்றது. 19

மாதிர மனைய புயவலிக் கஞ்சன்
  வரவிடு மக்குரூ ரன்பின்
ஏதமி லிரத மிவர்ந்துவந் தடர்ந்த
  விகலுறு மசுரரை யிகுத்து
சோதிகொள் மருப்புக் குவலயா பீடத்
  தோலுயிர் தொலைத்தருண் மிகுத்த
ஆதியே மழிசை யம்பதி யமரு
  மையனே கந்துதித் தோனே.

இதன் பொருள்:

மாதிரம்=மகாமேருவை, அனைய =சமானமுள்ள, புயம்= தோளின், வலி =பலம் பொருந்திய, கஞ்சன் = கஞ்சனென்னும் அசுரனால், வரவிடும்=அனுப்பப்படும், அக்குரூரன் பின்= அக்குரூரன் பின்னே, ஏதம் இல்=குற்றமில்லாத, இரதம்= இரதத்தை, இவர்ந்து=ஏறி வந்து, அடர்ந்து=நெருங்கி, இகலுறும்=போர் செய்த, அசுரரை=இராக்ஷதரை, இகுத்து= கொன்று, சோதி கொள் = பிரகாசங் கொண்ட, மருப்பு= கொம்பையுடைய, குவலயாபீடம் = குவலயாபீட மென்னும் பெயருள்ள, தோல்=யானையின், உயிர் =சீவனை, தொலைத்து

= நீங்கச் செய்து, அருள் மிகுத்த = கிருபை மிகுந்த, ஆதியே = ஆதிமூலமே! மழிசை = திருமழிசை, அம்பதி = அழகிய நகரத்தில், அமரும் = அமர்ந்து வாசஞ் செய்யும், ஐயனே = கடவுளே! கந்து = ஸ்தம்பத்தில், உதித்தோனே = நரசிங்கமாக உதித்த மாயவனே! என்றது. 20

வேறு

கந்த ரந்துயிற் காமழி சைக்கண்மைக்
கந்த ரத்தன் கமலன் கணிக்குசங்
கந்த ரத்திகி ரிக்கரக் காரணன்
கந்த பூங்கழல் பற்றுகல் னெஞ்சமே.

இதன் பொருள் :

கந்தரம் = மேகங்கள், துயில் = நித்திரை செய்யா நின்ற, கா = சோலை சூழ்ந்த, மழிசைக்கண் = திருமழிசை நகரினிடத்தில், மை = கறுத்த, கந்தரத்தன் = கழுத்தையுடையவன், கமலன் = தாமரை மலரில் பிறந்த பிரமதேவன், கணிக்கும் = எண்ணும், சங்கம் = பாஞ்சசன்னியம், தரம் = வலிமையுள்ள, திகிரி = சக்கரந் தங்கிய, கரம் = கையுள்ள, காரணன் = ஆதி காரணமானவன், கந்தம் = வாசனை தங்கிய, பூங்கழல் = தாமரை மலர்போன்ற திருவடியை, பற்று = விரும்பு, கல் = கல்லைப் போன்ற, நெஞ்சமே = மனமே—என்றது. 21

கனக னாகங் கடிந்தவ காத்தருட்
கனக மார்மழி சைக்க னுலகமோ
கனகன் றுல்விள வின்கனி சாடுதா
கனக மேந்தி நிரையளி கத்தனே.

இதன் பொருள் :

கனகன் = இரணியாசுரன், ஆகம் = மார்பை, கடிந்தவ = பிளந்தவனே! காத்து அருள் = இனி என்னை இரட்சித்து அருள வேண்டும், கனகம் = பொன், ஆர் = நிறைந்த மாளிகையுள்ள, மழிசை = திருமழிசை நகரத்தின்கண் இருப்பவனே! உலக = உலகங்களை, மோகன = மயக்கும் மாயனே! கன்றுல் = பசுவின் கன்றினால், விளவின் = விளாமரத்தின், கனி = பழங்களை, சாடும் = மோதியுதிர்த்த, தா = வலிமையுள்ள, கல் = கல்லுகள் நிறைந்த, நகம் = கோவர்த்தனமென்னும் மலையை,

ஏந்தி = குடையாகப் பிடித்து, நிரை = பசுக் கூட்டங்களை, அளி = இரட்சித்த, கத்தனே = பகவனே ! என்றது. 22

தனம டந்தை தரணி தகவுறுந்
தனம ணிச்சமு சாரக் கடற்பயந்
தனம லர்ச்சர ணீதரை வெண்ணெயோ
தனமு ணும்மழி சைப்பரந் தாமனே.

இதன் பொருள் :

தனம் = தனபாரமுள்ள, மடந்தை = மாதர், தரணி = பூமி, தகவுறும் = உரிமை பொருந்திய, தனம் = திரவியம், அணி = அழகிய, சமுசாரம் = சமுசாரமென்னும், கடல் = சமுத்திரத்துக்கு, பயந்தனம் = பயந்து வந்து அடைக்கலமானோம், மலர் = மலரையொத்த, சரண் = திருவடியை, ஈ = கொடுக்க வேண்டும், தரை = பூமி, வெண்ணெய் = வெண்ணெய், ஓதனம் = சாதமாக, உணும் = உண்ணும், மழிசை = திருமழிசை நகரத்துற்ற, பரந்தாமனே = ஸ்ரீமந் நாராயணனே ! என்றது. 23

தாம ரைத்தவி சார்ந்தொளி தங்குவே
தாம ழுக்கரன் சாற்றும ழிசைநா
தாம லர்ப்பதந் தந்தெனை யாளவா
தாம ணிப்புய மார்தக வாரியே.

இதன் பொருள் :

தாமரை = தாமரை மலர், தவிசு = ஆசனமாக, ஆர்ந்து = பொருந்தி, ஒளிதங்கு = பிரகாசந் தங்கிய, வேதா = பிரமதேவன், மழுக்கரன் = மழுவாயுதங் கொண்ட கரமுள்ள சிவபெருமான், சாற்று = துதி சொல்லப்பட்ட, மழிசை = திருமழிசை க்ஷேத்திரத்திலுற்ற, நாதா = சர்வத்துக்கும் நாயகனே! மலர்ப்பதந் தந்து = மலர் போன்ற திருவடி கொடுத்து, ஆள = அடிமை கொள்ள, வாதா = தருக்கமா? மணி = அழகிய, புயம் = தோள், ஆர் = பொருந்திய, தகவாரியே = கிருபா சமுத்திரமே! என்றது. 24

தகவி லாக நிருதரை வீட்டுமந்
தகவி லாழி தனிக்கதை சங்கநாந்
தகவி லார்சது கைத்தல வென்னையாள்
தகவில் சீர்மழி சைச்சக நாதனே,

இதன் பொருள்:

தகவு = ஒன்றுஞ் சமானம், இலா = இல்லாத, ஆகம் = தேகத்தையுடைய, நிருதரை = இராக்ஷதரை, வீட்டும் = வெல்லும், அந்தக = இயமனைப் போன்றவ! வில் = ஒளிவுள்ள, ஆழி = சக்கரம், தனி = ஒப்பற்ற, கதை = தண்டு, சங்கம் = பாஞ்சசன்னியம், நாந்தகம் = வாள், வில் = சார்ங்கம், ஆர் = பொருந்திய, சது = நான்கு, கைத்தல = கையினை யுடையவனே! என்னை = உமது அடிமையாகிய என்னை, ஆள் = அடிமை கொள்வாய், தகவில் = நிகரில்லாத, சீர் = சிறப்புப் பொருந்திய, மழிசை = திருமழிசைக்ஷேத்திரத்துற்ற, சகநாதனே = சகநாதப் பெருமாளே! என்றது. 25

சகத லத்திற் றயைசெய் மழிசைவா
சகத மேனடஞ் சால்செய் மதுரவா
சகத சானன் சாகக மோச்சுகீ
சகத னிப்படை சோரிசா ரங்கனே.

இதன் பொருள்:

சகதலத்தில் = பூலோகத்தின்கண், தயை செய் = கிருபை செய்வாய், மழிசை = திருமழிசை நகரில், வாச = வாசஞ் செய்பவனே! கதமேல் = காளிங்கனென்னும் பாம்பின் மேல், நடம் = திருநடனம், சால்செய் = மிகுதியாகச் செய்த, மதுர வாசக = மதுரமாகிய வசனமுள்ளவனே! தசானன் = பத்து முகமுள்ள இராவணன், சா = சாக, சகம் = பாணத்தை, ஓச்சு = பிரயோகஞ் செய்த, கீசகம் = குரங்குகளை, தனி = ஒப்பற்ற, படை = சேனைகளாய்க் கொண்ட, சோரி = இரத்தந் தோய்ந்த, சாரங்கனே = சார்ங்கமென்னும் வில்லையுடையவனே. 26

அரித மார்வளை யங்கனை யார்மயல்
அரித னிற்றுய ருற்றிடா தாண்டுவிண்
அரித ரைப்பய மார்வளி யுண்டுமிழ்
அரிதன் மாமழி சைக்க ணடைமினே.

இதன் பொருள்:

அரிதம் = பச்சை, ஆர் = நிறம் பொருந்திய, வளை = வளையலணிந்த, அங்கனையார் = மாதர்கள், மயல் = ஆசையாகிய, அரிதனில் = சமுத்திரத்தில், துயருற்றிடா = துன்பம் அடைந்து

வருத்தப்படாமல், ஆண்டு=என்னை ஆண்டு கொள்வாய், விண் =ஆகாயம், அரி=நெருப்பு, தரை=பூமி, பயம்=நீர், ஆர்= பொருந்திய, வளி = காற்று இவைகளை, உண்டு = புசித்து, உமிழ்=கக்கி யருளிய, அரிதன்=மகாவிஷ்ணுவின், மா=மகா லட்சுமியின் வாசம் பொருந்திய, மழிசைக்கண்=திருமழிசையி னிடத்தில், அடையினோ=சேருங்கள் என்றது. 27

அடைக்க லந்தவ ராம மழிசையாய்
அடைக்க லந்தெரி வைசெய்த பாதநின்
அடைக்க லந்தமி யேனினி யன்னைபால்
அடைக்க லந்தகர் அம்புத வண்ணனே.

இதன் பொருள் :

அடை கலந்த=இலைகள் கலந்த கிளை முழுதும் பொருந்தி யிருக்கின்ற, அராமம் = சோலை சூழ்ந்த, மழிசையாய் = திரு மழிசை நகரத்தை யுடையவனே! அடை=கனம் பொருந்திய, கல்=கல்லை, அம்=அழகிய, தெரிவை செய்த=அகலிகை யென் னும் பெண்ணாகச் செய்த, பாத=பாதமுள்ள கர்த்தனே! நின் =உமது, அடைக்கலம்=காப்புச் செய், தமியேன்=தனிமை யாகிய யான், அன்னை பாலடைக்கலம்=தாயினுடைய பாலடை பாத்திரத்தை, தகர்=நீக்குவாய், அம்புதம்=மேகம் போன்ற வண்ணனே=நிறத்தையுடையவனே! என்றது. 28

வண்ண மாட முறைமழி சைக்கண்மை
வண்ண மேய்சக நாத வரதயான்
வண்ண மார்பலம் வைக வருட்புரி
வண்ண மாதுக் குடையருள் வாமனே.

இதன் பொருள் :

வண்ணம்=அழகு பொருந்திய, மாடம்=மாளிகை, உறை =இருக்கின்ற, மழிசை=திருமழிசை நகரின், கண்=இடத்தில், மை=அஞ்சன, வண்ணம்=நிறம், ஏய்=ஒத்த, சகநாத=சக நாதனென்னும் திருநாம முள்ள, வரத = வரங்களைத் தரு பவனே! யான்=அடியேன், வண்ணம்—வண்=வளமை, அம் =அழகு, ஆர்=பொருந்திய, பதம்=பரமபதத்தில், வைக= தங்கி வாசஞ் செய்ய, அருள் = கிருபை, புரி = செய்வாய், வண்ணமாதுக்கு=வண்ண மகளென்று பெயர் பூண்ட துரோ

பதைக்கு, உடை=வஸ்திரம், அருள்=கொடுத்த, வாமனே= அழகுடையவனே! என்றது. 29

மன்ற லார்குரற் சானகி மல்குவா
மன்ற னிச்சர ணத்தைம ழிசைக்கண்
மன்ற ருக்கி யுரைப்பவ ரேமன்வீ
மன்ற னாற்றலை மாய்த்தருண் மேவுவார்.

இதன் பொருள்:

மன்றல் ஆர்=வாசனை பொருந்திய மலர் மாலை தரித்த குரல்=கூந்தலையுடைய, சானகி=சானகி பிராட்டி, மல்கு=சேரப்பட்ட, வாம=அழகு பொருந்தினவளே! தனி=ஒன்றும் சமமில்லாத, சரணத்தை = திருவடியை, மழிசைக்கண்=திருமழிசையினிடத்தில், மன் = மிகுதியாக, தருக்கி = சந்தோஷித்து, உரைப்பவர் = துதி சொல்லப்பட்டவர், ஏமன்=எம தருமராஜன், வீமன்=தாமரை மலரில் நிலையுற்று இருக்கும் பிரமதேவன், தன்=தன்னுடைய, ஆற்றலை=வலிமையுள்ள தொழிலை, மாய்த்து=ஒழித்து, அருள்=சகநாதப் பெருமாள் கிருபையை, மேவுவார்=பெறுவார்கள்—என்றது. 30

வேறு

மாயவல கைமுலைப்பால் மகிழுடனே மாந்தியுயிர்
சேயவிசும் பேறவருட் செய்துதிரு மழிசைவளர்
தூயநினைத் துதியாத சுதனெனினுங் கருணையுற்று
ஞாயிறென வேநிலவு நன்குபதம் நல்குவையே.

இதன் பொருள் :

மாயம் = மாயைகளைச் செய்யும், அலகை = பூதகியின், முலைப்பால் = முலைப்பாலை, மகிழுடனே = மகிழ்ச்சியுடனே, மாந்தி=குடித்து, உயிர் = பிராணன், சேய = விசாலமான இடமுள்ள, விசும்பு = சுவர்க்கலோகம், ஏற = அடைய, அருள் செய்து=கிருபை செய்து, மழிசைவளர்=திருமழிசையில் வளர்ந்திருக்கும், தூய=பரிசுத்த முள்ளவனே! நினை= உம்மை, துதியாத=தோத்திரஞ் செய்யாத, சுதனெனினும்= சிறுவனென்றாலும், கருணையுற்று = கிருபை பொருந்தி, ஞாயிறு எனவே=சூரியனைப் போலவே, நிலவு=பிரகாசம், நன்கு = மிகுதி உள்ள, பதம் = பரமபதம், நல்குவையே= கொடுத்தருள்வாய்—என்றது. 31

வையயிற்கண் மாதர்தன மானலுறு தேயருட்செய்
பையரவிற் றுயினீக்கிப் பண்ணைபுடை சூழ்மழிசை
மொய்யவிர்பைங் குல்லைதொடை மொய்ம்பொளிர்தா
[மோதரனின்
செய்யபத மேத்தாத சென்மரிடர் செறுக்காரே.

இதன் பொருள் :

வை = கூர்மையுள்ள, அயில் = வேல் போன்ற, கண் = கண்களையுடைய, மாதர் = மங்கையர்கள், தனம் = தன பாரத்தின், மானல் = மயக்கம், உறு = பொருந்தாது, அருள் செய் = கிருபைசெய்வாய், பை = படத்தையுடைய, அரவில் = பாம்பின் பேரில், துயில் = யோகநித்திரை செய்கின்றதை, நீக்கி = விட்டு, பண்ணை = வயல்கள், புடைசூழ் = பக்கங்களில் சூழ்கின்ற, மழிசை = திருமழிசை நகரையுடைய, மொய் = வண்டுகள் மொய்க்கின்ற, அவிர் = பிரகாசமுள்ள, பை = பசுமை நிறம் பொருந்திய, குல்லை = திருத்துழாய், தொடை = மாலை யணிந்த, மொய்ம்பு = தோள், ஒளிர் = விளங்குகின்ற, தாமோதர = சகநாதப்பெருமானே ! நின் = உம்முடைய, செய்ய = சிவந்த, பதம் = திருவடியை, ஏத்தாத = தோத்திரஞ் செய்யாத, சென்மர் = ஜெனனமுள்ள பிராணிகள், இடர் = பிறவித் துன்பத்தை, செறுக்கார் = ஒழிக்கார் ; என்றது — ஏ —ஈற்றசை.

32

செறிமதியஞ் சூழ்சிகரி சேர்மழிசை மாநகரில்
உறுநெடிய வாலயத்தி லோங்குதிரு மங்கையுடன்
குறியமுனி முதலாய குரவர்களேத் திருநான்குப்
பொறிமனுவே யடியனையாட் புயகவணைத்
[துயில்பரனே.

இதன் பொருள் :

செறி = நெருக்கமாக, மதி = சந்திரன், அம் = அழகுடனே, சூழ் = சூழ்ந்து செல்கின்ற, சிகரி = கோபுரங்கள், சேர் = சேர்ந்திரா நின்ற, மழிசை = திருமழிசை யென்னும், மா = பெருமையுள்ள, நகரில் = பட்டணத்தில், இறும் = பொருந்தி யிருக்கின்ற, நெடிய = பெரிதாகிய, ஆலயத்தில் = திருக்கோயிலில், ஓங்கு = உயர்வாகிய, திருமங்கையுடன் = திருமங்கைப் பிராட்டியாருடன் இருந்து, குறியமுனி = அகஸ்திய முனிவர்

முதலாய = முதலாகிய, குரவர்கள்=பெரியோர்கள், ஏத்து= தோத்திரஞ் செய்யும், இரு நான்கு =எட்டென்னும், பொறி= எழுத்தாகிய, மனுவே=மந்திரமே, அடியனை=உமது தாசனு கிய என்னை, ஆள் = அடிமை கொள்வாய், புயகம்=பாம்பாகிய ஆதிசேட, அணை = மெத்தையில், துயில்=திருக்கண் வளரா நின்ற, பரனே=கர்த்தனே! என்றது. 33

அணியளிக ளிசைபாட அவிரிமைக ணடமாடும்
மணியுலவு பூம்பொழில்சூழ் மழிசையம லாவரைநேர்
திணிபுயமேய் தனஞ்சயற்கு தேர்பரிதூண் டியவாயென்
பிணியொழித்தாண் டருள்புரியப் பெட்புலவெம் பெருமானே.

இதன் பொருள் :

அணி = ஒழுங்காக, அளி= வண்டுகள், இசை பாட= ரீங்காரஞ் செய்ய, அவிர் = பிரகாசிக்கின்ற, இமைகள் = மயில்கள், நடம் ஆடும் = கூத்தாடுகின்ற, மணி உலாவும்= அழகு பொருந்திய, பூம்பொழில்=மலர்ச் சோலைகள், சூழ்= சூழ்கின்ற, மழிசை=திருமழிசை நகரத்துற்ற, அமலா=ஜெக நாதப் பெருமாளே! வரை=மலையை, நேர்=சமானமுள்ள, திணி=பலம் பொருந்திய, புயம் ஏய்=தோளுள்ள, தனஞ் செயற்கு=அருச்சுனனுக்கு, தேர்=இரதத்தில் கட்டிய, பரி= குதிரைகளை, தூண்டியவா = நடத்தியவனே! என் = என் னுடைய, பிணி=வியாதியை, ஒழித்து=நீக்கி, ஆண்டு=ஆட் கொண்டு, அருள்புரி=கிருபை செய்வாய், பெட்பு = ஆசை, உலவு = பொருந்திய, எம்பெருமானே = எமது நாயகனே! என்றது. 34

மாயடவி தனின்மாய வடிவாளி யோச்சிமகிழ்
வானவவண் டிமிர்மழிசை வளர்பொருளே தாருலவும்
கானமருங் குழற் கமலைக் காதலுட னேவருடும்
ஞானமல ரடியடியே எண்ணவருள் நாரமைந்தே.

இதன் பொருள் :

மான்=மானாக வந்த மாரீச ராக்ஷதன், அடவிதனில்= காட்டினிடத்தில், மாய=இறக்க, வடி=கூர்மையுள்ள, வாளி= பாணங்கள், ஓச்சி = பிரயோகஞ் செய்து, உற்ற=மகிழ்ச்சி யுற்ற, வானவ = தேவனே! வண்டு = வண்டுகள், இமிர் =

ரீங்காரஞ் செய்கின்ற, மழிசை = திருமழிசை நகரத்தில், வளர் = வளர்கின்ற, பொருளே = தலைமையானவனே! தார் = பூமாலை, உலவும் = பொருந்திய, கானமரும் = வாசனை அமைந்த, குழல் = கூந்தலையுடைய, கமலை = திருமங்கைப் பிராட்டியார், காதலுடனே = ஆசையுடனே, வருடும் = தடவும்—பிடிக்கும், ஞானம் = ஞானத்தைத் தரும், மலரடி = மலர் போன்ற திருவடி, அடியேன் = உமது அடிமையாகிய யான், நண்ண = அடைய, அருள் = கிருபை செய்வாய், நார் = அன்பு, அமைந்தே = பொருந்தியே! என்றது. 35

நாரணனே வான்முகிலூர் நாயகனு நவிரகரன்
ஆரணநா ரதன்முதலா மருந்தவரு மடிவணங்கும்
பூரணனே மழிசைவளர் பொற்புயனே போற்றடியேன்
சீரணவு பாக்கியங்கள் சேரதிரு வருட்புரியே.

இதன் பொருள் :

நாரணனே = ஸ்ரீமந்நாராயணனே! வான் முகில் ஊர் = பெருமை பொருந்திய மேகத்தின்மேல் ஏறி நடாத்தும், நாயகனும் = இந்திரனும், நவிரம் = கபாலத்தை, கரன் = கையில் பிடித்த சிவபெருமான், ஆரணன் = பிரமதேவன், நாரதன் = நாரத முனிவன், முதலா = முதலாகிய, அருந்தவரும் = அரிதாகிய தவத்தைச் செய்யும் ரிஷிகளும், அடிவணங்கும் = திருவடியைச் சேவிக்கும், பூரணனே = எங்கும் நிறைந்திருப்பவனே! மழிசைவளர் = திருமழிசையில் வளரப்பட்ட, பொற்புயனே = அழகிய தோளையுடையவனே! போற்று = துதி செய்கின்ற, அடியேன் = அடிமையாகிய யான், சீர் = சிறப்பு, அணவும் = பொருந்திய, பாக்கியங்கள் = ஐசுவரியங்கள், சேர = சேரும்படி, திருவருள் = சிறந்த அருள், புரியே = செய்வாய்; என்றது - ஏ—ஈற்றசை. 36

புரிமுகத்திற் சோதிதவழ் புண்ணியமார் வண்மழிசை
சுரிமுகக்கை மணிவண்ணு துன்பமொழித் தேயாள்வாய்
அரியுருவாய்த் தமனியனை யற்றையுகி ராற்கீண்டி
சுரிகுழலா ணிலமங்கை துயரகற்றுஞ் சுடரோனே.

இதன் பொருள் ;

புரிமுகத்தில் = கோபுரத்தில், சோதிதவழ் = சூரியன் தவழப்பட்ட, புண்ணியம் = புண்ணிய பலன்கள், ஆர் = பொருந்

திய, வண் = வளமை தங்கிய, மழிசை = திருமழிசை நகரிலுற்ற, சுரிமுகம் = பாஞ்சசன்னியத்தையுடைய கையுள்ள, மணிவண்ணா = கரிய நிறமுடையவனே ! துன்பம் = என்னுடைய வருத்தத்தை, ஒழித்தே = ஒழியச் செய்தே, ஆள்வாய் = அடிமை கொள்வாய், அரியுருவாய் = நரசிங்கவுருவமாகி, தமனியனை = இரணியனை, அற்றை = அன்று, உகிரால் = நகத்தினால், கீண்டி = மார்பை பிளந்து, சுரி = சுழற்சியுள்ள, குழல் = கூந்தல் அமைந்த, நிலமங்கை = பூமிதேவியின், துயர் = வருத்தத்தை, அகற்றும் = நீங்கச் செய்யும், சுடரோனே = பிரகாசமானவனே ! என்றது. 37

சுடர்மௌலித் துரியனணி துனியுறவால் வளையூதி
வடவிலைக்கண் டுயிலமுதே வானுறுந் தமர்களுடன்
மடமுலவு மடியேனு மருவவருட் புரிசாந்தக்
கடமுலவு மழிசைவளர் காரணவா னதிபதனே.

இதன் பொருள் :

சுடர் = பிரகாசமுள்ள இரத்தினங்கள் பதித்த, மௌலி = கிரீடத்தையுடைய, துரியன் = துரியோதனன், அணி = படைவகுப்பு, துனி = துன்பம், உற = அடைய, வால் = வெண்மையுள்ள, வளை = பாஞ்சசன்னியத்தை, ஊதி = தொனித்து, வடவிலை = ஆலிலையில், கண் துயில் = நித்திரை செய்த, அமுதே = பெருமையுடையவனே ! வானுறும் = சுவர்க்க லோகத்தில் வாசஞ்செய்யும், தமர்களுடன் = சுற்றத்தாருடன், மடம் = அறிவின்மை, உலவு = பொருந்திய, அடியேனும் = அடிமையானும், மருவ = கூடிவாசஞ்செய்ய, அருள் = கிருபை செய், சாந்த = சந்தன, கடம் = காடுகள், உலவு = பொருந்திய, மழிசைவளர் = திருமழிசை நகரில் வளர்கின்ற, காரண = ஆதி காரணனானவனே, வானதி = ஆகாய கங்கை பிறந்த, பதனே = பாதமுள்ளவனே ! என்றது. 38

தனதங்க ரிணையகைத்து சால்புகழார் மழிசையினில்
சனகசுதை யுடன்மேவுஞ் சகநாத செஞ்சதமேய்
பனகவைரி மிசையிவர்ந்து பணியடியா ரகமெனுஞ்சு
முனசமுறை மாதவநின் மலர்ப்பதந்தந் தாண்டருளே,

இதன் பொருள் :

தனதன் = குபேரனுடைய, நகரினை = அளகைப் பட்டணத்தை, அனைத்து = கீழ்மைப்படுத்தி, சால்புகழ் = மிகுதியான புகழ்ச்சி, ஆர் = பொருந்திய, மழிசையினில் = திருமழிசைப் பட்டணத்தில், சனக = சனகராஜன், சுதையுடன் = புத்திரியுடன், மேவும் = பொருந்தியிருக்கும், சகநாதா = ஜெகநாதப்பெருமாளே ! செஞ்சதம் = சிவந்த இறகுகளை யுடைய, பணகவைரி = பன்னக வைரியாகிய கருடன், மிசை = மேல், இவர்ந்து = ஏறி வந்து, பணி = வணங்குகின்ற, அடியார் = பகாவதர்கள், அகமெனும் = மனமென்னும், சுமனசம் = மலரில், உறை = இருக்கின்ற, மாதவ = மாதவனென்னுந் திருநாமமுடையவனே ! நின் = உம்முடைய, மலர் பதம் = மலர் போன்ற பாதங்கள், தந்து = கொடுத்து, ஆண்டருளே = அடிமை கொண்டு ஆண்டருள்வாய் ; என்றது. 39

தந்திடையா ரைப்புகழுந் தமியேனு முந்தனிரு
கந்தமரை மலர்த்தாளைக் கருதவர மருள்புரிவாய்
சந்தமுறைப் பொதும்பரினில் தந்தாவ ளந்திரியும்
பந்திநிறை வளமழிசைப் பதிநிலவு பாற்கரனே.

இதன் பொருள் :

தந்து = இழை போன்ற, இடை = இடையானது, ஆர் = பொருந்திய மாதர்களை, புகழும் = புகழுகின்ற, தமியேனும் = தனிமையாகிய யானும், உன்றன் = உம்முடைய, இரு = இரண்டாகிய, கந்தம் = வாசனையுள்ள, மரை மலர் = தாமரை மலர் போன்ற, தாளை = திருவடியை, கருத = தியானஞ் செய்ய, வரம் = வரத்தை, அருள் புரிவாய் = கிருபை செய்வாய், சந்தம் = சந்தன விருட்சங்கள், நிறை = நிறைந்த, பொதும்பரினில் = சோலையினில், தந்தாவளம் = யானைகள், திரியும் = சஞ்சரிக்கின்ற, பந்தி = வரிசைகள், நிறை = நிறைந்த, வளம் = செழுமையுள்ள, மழிசை = திருமழிசை, பதி = நகரத்தில், நிலவும் = பிரகாசித்து இருக்கின்ற, பாற்கரனே = ஸ்ரீமந் நாராயணனே ! என்றது. 40

வேறு

கரனை வீட்டிய கடவுளைக் கௌத்துவங்
  கவினுறை யலர்மகளார்
உரனை வானவர் முதல்வனை முனிவரர்
  உள்ளம துறைவோனை
வரனை யீன்றருட் பரனுறை மழிசைவாழ்
  மாய னைப்பணிவோர்
விதுரனை யாரமு துண்டருள் சோதியின்
  தூய்பத மருவுவரே.

இதன் பொருள் :

கரனை = கரனென்னும் பெயருள்ள இராக்ஷதனை, வீட்டிய = சம்மாரஞ் செய்த, கடவுளை = ஸ்ரீராமஸ்வாமியை, கௌத்துவம் = கௌத்துவாபரணம், கவின் = அழகு, உறை = இருக்கின்ற, அலர்மகளார் = தாமரைமலரிற் பிறந்த மகாலட்சுமி பொருந்தியிருக்கும், உரனை = மார்பையுடையவனை, வானவர் = தேவர்கள், முதல்வனை = நாயகனை, முனிவரர் = மகரிஷிகள், உள்ளம் = மனத்தில், உறைவோனை = வசிப்பவனை, வரனை = பிரமதேவனை, ஈன்று = பெற்று, அருள் = கிருபை செய்த, பரன் = கர்த்தா, உறை = வாசஞ்செய்கின்ற, மழிசை = திருமழிசை, வாழ் = வாழ்கின்ற, மாயனை = மாயாவிநோதனை, பணிவோர் = வணங்குவோர், விதுரன் = விதுரனுடைய, ஆரமுது = மதுரம் நிறைந்த போசனத்தை, உண்டு அருள் = புசித்து அருள் செய்த, சோதியின் = திருமாலின், தூய் = பரிசுத்தமுடைய, பதம் = பதவியில், மருவுவர் = வாசஞ் செய்வார்கள் ; என்றது ; ஏ - ஈற்றசை : ஐ - சாரியை. 41

மருவ ருமலர்த் தாரணி வாசவன்
  மாமகஞ் செயவீசன்
எருதின் மீதிவர்ந் திகல்செய விந்திரன்
  நினதிணை யடிபேணக்
குருநி றைந்திய லார்திறல் நேமியாற்
  கோறவண் மலைமாதைந்
தருநி லத்தவ ரேத்திட வருள்தகை
  மழிசைதாமோ தரனே,

இதன் பொருள் :

மரு=வாசனை, அறு = நீங்காதிருக்கின்ற, மலர்த்தார்= மலர் மாலையை, அணி=தரித்த, வாசவன்=தேவேந்திரன், மா=பெருமையுள்ள, மகம்=யாகம், செய=செய்ய, ஈசன்= பரமசிவன், எருதின்= ரிஷப வாகனத்தின், மீது=மேல், இவர்ந்து=ஏறி, இகல் செய=உயுத்தஞ் செய்ய, இந்திரன்= இந்திரனானவன், நினது=உம்முடைய, இணையடி= இரண்டு பாதங்களை, பேண = விரும்பித் துதி செய்ய, குரு=நிறம், நிறைந்து=நிரம்பி, இயலார்=அழகு பொருந்திய, திறல் நேமி யால்=வலிமையுள்ள சக்கராயுதத்தால், கோற=கொல்ல— அதைக் கண்ட—, வண்=அழகிய, மலை மாது=மலையரசன் குமாரத்தியாகிய பார்வதி, ஐந்தரு நிலத்தவர்=பஞ்சதருக்கள் இருக்கும் நிலத்தவர்கள், ஏத்து = துதி செய்ய, அருள் = கிருபை செய்து எழுப்பிய, தகை=பெருமையுடைய, மழிசை= திருமழிசை நகரத்தில் வசிக்கும், தாமோதரனே =தாமோதர னென்னும் பெயருள்ளவனே ! என்றது. 42

தருநி ரம்பிய் வுத்தியா னம்புடை
சார்ந்தநன் மழிசையெனும்
திருந கர்பிரான் சேவடி மிசைதிகழ்
செயுளெனு மலர்தூவிக்
கரும கோததி யற்றிட வரமருள்
கத்தனே எனத்தொழுவோர்
பெருமை விஞ்சிய வைகுந்த பதவியில்
பெட்புடன் தேறுவரே.

இதன் பொருள் :

தரு=விருட்சங்கள், நிரம்பிய = நிறைந்திருக்கும், உத்தி யானம் = பூஞ்சோலைகள், புடை = நான்கு பக்கங்களிலும், சார்ந்த=சேர்ந்த, நல்=நல்ல, மழிசையெனும் = திருமழிசை யென்று சொல்லும், திருநகர்=அழகிய நகரத்துற்ற, பிரான் =நாயகன், சேவடி=சிவந்த பாதங்கள், மிசை=மேல், திகழ்= பிரகாசமுள்ள, செயுளெனும் = செய்யுளென்னும், மலர்= புஷ்பங்கள், தூவி=சொரிந்து, கரு=ஜனனமாகிய, மகோததி =சமுத்திரம், அற்றிட=நீங்கிட, வரம்=வார்த்தை, அருள்= கிருபை செய்வாய், கத்தனே = கடவுளே ! என = என்று சொல்லி, தொழுவோர் = வணங்குவோர், பெருமை=மகிமை,

விஞ்சிய = மிகுந்த, வைகுந்த பதவியில் = பரமபதத்தில், பெட்புடன் = அன்புடன், தேறுவர் = தங்கி வாசஞ் செய்வார்— என்றது; ஏ - ஈற்றசை. 43

தேறன் மன்னிய மலர்த்தட மழிசையில்
திகழுறு மெம்மானை
நாறும் வண்டுழா யிலம்பக நாதனை
நளிர்மலர் நனிதூவிக்
கூறு வாயக மேசிவ னயனுரை
கோமள மணிசெய்யாள்
வீறு மாபரந் தாமம தணுகியே
மேதகு வாழ்குவையே.

இதன் பொருள் :

தேறல் = தேன்கள், மன்னிய = பொருந்திய, மலர் = புஷ்பங்கள் நிறைந்த, தடம் = குளங்கள் சூழ்ந்த, மழிசையில் = திருமழிசை க்ஷேத்திரத்தில், திகழுறும் = பிரகாசம் பொருந்திய, எம்மானை = எமது கடவுளை, நாறும் = வாசனைவீசுகின்ற, வண் = வண்மையுள்ள, துழாய் = திருத்துளப, இலம்பகம் = மாலை புனைந்த, நாதனை = நாயகனை, நளிர் = குளிர்ச்சியுள்ள, மலர் = புஷ்பங்கள், நனி = மிகுதியாக, தூவி = சொரிந்து, கூறுவாய் = துதி சொல்லுவாய், அகமே = மனமே, சிவன் = சிவபெருமான், அயன் = பிரமதேவன், உரை = சொல்லும், கோமளம் = இளமையும், மணி = அழகையும் பெற்ற, செய்யாள் = மகாலட்சுமி, வீறும் = பெருமையுடன் வசிக்கும், மா = அழகு பொருந்திய, பரந்தாமம் = பரமபதம், அணுகியே = சேர்ந்தே, மேதகு = மேன்மையாக, வாழ்குவையே = வாழக் கடவாய், என்றது. ஏ - ஈற்றசை. 44

வைய கத்தினி லுதித்துழு வாஞ்சையில்
மாழ்கிய மடநெஞ்சே
மொய்யி னங்கள்பண் பாடவோ திமந்துயி
லுயர்வள மழிசையரி
தையல் பாகனு ரையந்த கைத்திடுந்
தாமனைத் தகைமேவும்
வெய்ய நெஞ்சகம் பத்தனை வீட்டிய
விண்டுவைப் பணிவாயே.

இதன் பொருள் :

வையகத்தினில் = உலகத்தினிடத்தில், உதித்து = பிறந்து, மூவாஞ்சையில் = மண் - பெண் - பொன் என்று சொல்லும் மூவாசையில், மாழ்கிய = வருந்திய, மடநெஞ்சே = அறிவின்மையான மனமே! மொய் = வண்டு, இனங்கள் = கூட்டங்கள், பண்பாட = இராகம் பாட, ஓதிமம் = அன்னங்கள், துயில் = நித்திரை செய்யாநின்ற, உயர் = உயர்வாகிய, வளம் = செழுமையுள்ள, மழிசை = திருமழிசை நகரத்து, அரி = செகநாதப் பெருமாள் என்னும் பெயருள்ளவனை, தையல் = பார்வதி தேவியின், பாகனுர் = பாகத்தையுடைய பரமசிவன், ஐயம் = பிச்சையை, அகைத்திடும் = நீங்கச் செய்த, தாமனை = பிரகாசமுடையவனை, தகை மேவும் = பெருமை பொருந்திய, வெய்ய = கொடுமையுள்ள, நெஞ்சம் = மனமுள்ள, கம் = தலைகள், பத்தனை = பத்து - என்னும் கணக்குள்ள இராவணனை, வீட்டிய = வென்ற, விண்டுவை = மகாவிஷ்ணுவை, பணிவாயே = வணங்குவாய் - என்றது ; ஏ - ஈற்றசை. 45

பணமு லாவரி முடிநட மிடுபத
  பண்பறு பற்றலர்மெய்
நிணமு லாவுவே னிருதரை வென்றிகொள்
  நேமிகைத் தலமுற்றோய்
மணமு லாவன தாமமொய்ம் பினிலணி
  மாயனே வான்மேவுங்
கணமு லாவுவ ளகஞ்செறி மழிசையிற்
  களிப்புட னமர்ந்தவனே.

இதன்பொருள் :

பணம் = படம், உலாவு = பொருந்திய, அரி = காளிங்கனென்னும் சர்ப்பத்தின், முடி = சிரசில், நடம் = திரு நடனம், இடும் = செய்த, பத = திருவடியுள்ளவனே! பண்பு = நற்குணம், அறு = நீங்கிய, பற்றலர் = சத்துருக்களை, மெய் = சரீரத்தின், நிணம் = மாமிசங்கள், உலாவு = பொருந்திய, வேல் = வேலாயுதமுள்ள, நிருதரை = இராக்ஷதரை, வென்றி கொள் = ஜெயங்கொண்ட, நேமி = சக்கராயுதம், கைத்தலம் = கையினிடத்தில், உற்றோய் = பிடித்திருப்பவனே! மணம் = வாசனை, உலா = பொருந்திய, வனம் = திருத்துழாய், தாமம் = மாலையை, மொய்ம்பினில் = தோளில், அணி = தரித்த, மாயானே = மாயை

யைச் செய்பவனே! வான் மேவும்=ஆகாயத்தில் காணப்படும், கணம்=நட்சத்திரங்கள், உலர்வும்=சஞ்சரித்துச் செல்லும், உவளகம்=மதில், செறி=மிகுந்த, மழிசையில்=திருமழிசை நகரத்தில், களிப்புடன்=சந்தோஷத்துடன், அமர்ந்தவனே! =பொருந்தியிருப்பவனே! என்றது. 46

அமர வாணனு யிரங்கர மகைப்பொழு
 தைங்கர னழல்கந்தன்
நிமல வாணகை மெல்லிய லேற்றவன்
 நீணிலத் திரிந்தோட
சமரி ழைத்திடு சார்ங்கனை மாமழி
 சைத்தனி மானமதில்
கமல பாதனைக் கண்ணுறிற் காமமாங்
 கடற்கரை காணுவரே.

இதன் பொருள் :

அமரம் = உயுத்தம் செய்யும், வாணன் = வாணாசுரன், ஆயிரம் = ஆயிரமென்னும் கணக்குப் பொருந்திய, கரம் = கைகளை, அகை=அறுத்த, பொழுது = காலம், ஐங்கரன் = விநாயகன், கந்தன் = சுப்பிரமணியன், அழல்=அக்கினி, நிமலம்=அழகிய, வாள்=ஒளி பொருந்திய, நகை=நகைத் தலையுடைய, மெல்லியல்=பார்வதியை, ஏற்றவன்=பாகத்தில் வைத்துக் கொண்ட சிவபெருமான், நீள்=நீண்ட, நிலத்து= பூலோகத்தில், இரிந்து=பயந்து, ஓட=ஓடும்படிக்கு, சமர்= உயுத்தம், இழைத்திடு=செய்திடும், சார்ங்கனை=சாரங்க மென்னும் வில்லையுடையவனை, மா=அழகிய, மழிசை=திருமழிசை நகரிலிருக்கும், தனி=நிகரில்லாத, மானமதில்=விமானத்தில், கமலம் = தாமரைமலர் போன்ற, பாதனை = திருவடியுடைய வனை, கண்ணுறில் = கண்களாரத் தரிசிக்கில், காமமாம்= ஆசையாகிய, கடல் = சமுத்திரத்தின், கரை = கரையை, காணுவரே=காண்பார்கள் - என்றது; ஏ - ஈற்றசை. 47

வரைநி கர்த்திய லார்புயப் பஞ்சவர்
 மணிமுடி பெறவெண்ணிக்
கரையில் தாரணி கலங்கிட வால்வளை
 கவிரிதழ் வைத்தூதும்

புரையில் செங்கரத் தாமரை மலரனே
　பொழின்மரு வியமழிசைத்
தரையின் மன்னிய தாமரை நயனனே
　தகவெனக் கருள்புரியே.

**இதன் பொருள் :**

வரை=மலையை, நிகர்த்து = நிகராகி, இயலார்=அழகு பொருந்திய, புயம் = தோளுள்ள, பஞ்சவர் = தருமராஜன் முதலிய ஐவர், மணிமுடி=இரத்தினங்கள் பதித்த கிரீடம், பெற=தரித்துக் கொள்ள, எண்ணி=நினைத்து, கரையில்= முடிவில்லாத, தார் = வெற்றிமாலை தரித்த, அணி=படை வகுப்பு, கலங்கிட=மனங்கலங்க, வால்வளை=வெண்மையுள்ள பாஞ்சசன்னியத்தை, கவிர்=முருக்கம்பூ போலும், இதழ்= இதழுள்ள வாயில், வைத்து = பொருத்தி, ஊதும் = ஊதி தொனி செய்த, புரையில்=குற்றமில்லாத, செங்கரம், சிவந்த கையானது, தாமரை மலரனே = தாமரை மலர் போன்ற வனே! பொழில்=அழகிய சோலைகள், மருவிய=பொருந்திய, மழிசை=திருமழிசை, தரையில் = பூமியில், மன்னிய=நிலை பெற்று இருக்கின்ற, தாமரை நயனனே = தாமரைமலர் போன்ற நேத்திர முடையவனே! தகவு = உமது கிருபை, எனக்கு = தாசனுகிய எனக்கு, அருள்புரியே = அருள் செய்வாய் - என்றது. 48

அருமை யாயவ தரித்திடு மழிசையாழ்
　வாரமர்ந் திசைபாட
அருணி றைந்துறை யுஞ்சக நாதனை
　யளவையும் பணியாத
இருள்நி றைந்தநெஞ் சகனினி யேதமுற்
　றிவ்வுல கயராமற்
பொருணி றைக்குரு வாகிவந் தருள்புரி
　பொற்கொடி கோமானே.

**இதன் பொருள் :**

அருமையாய்=சொல்ல அரிதாக, அவதரித்து=பிறந்து இருக்கும், மழிசை=திருமழிசை நகரில், ஆழ்வார்=பன்னிரு ஆழ்வார்கள், அமர்ந்து=அவ்விடத்தில் வந்து, இசை பாட= உமது புகழைப் பாட, அருள்=கிருபை, நிறைந்து=நிரம்பி,

உறையும் = இருக்கின்ற, சகநாதனை = ஜெகநாதப் பெருமானை, அளவையும் = தினந்தோறும், பணியாத = வணங்காத, இருள் = அஞ்ஞானமாகிய இருள், நிறைந்த = நிரம்பிய, நெஞ்சகன் = மனமுடையவன், இனி = இனிமேல், ஏதமுற்று = குற்றம் அடைந்து, இவ்வுலகில் = இந்த உலகத்தில், அயராமல் = வருத் தப்படாமல், பொருள் = சொற்பொருள், நிறை = நிறைந்த, குருவாகி வந்து = ஆசானாகி வந்து, அருள் புரி = கிருபை செய்வாய், பொற் கொடி = மகாலட்சுமியின், கோமானே = நாயகனே! என்றது. 49

கோம லிப்பிறை தவழெயில் மழிசையில்
குலவிய வையாநின்
தூம லிச்சத தளத்திரு வடிநிதந்
துதிசெய சிதமீவாய்
பூம லிப்பிர மன்பரன் விண்டலர்
பொற்பயி ராவதமேல்
தாம லிப்புனி தன்றொழ வாழ்ந்திடுஞ்
சவிகவுத் துவவுரனே.

இதன் பொருள்:

கோமலி = பிரகாச மிகுந்த, பிறை = சந்திரன், தவழ் எயில் = தவழ்ந்து செல்லும் மதில் - உயரமுள்ள, மழிசையில் = திருமழிசை க்ஷேத்திரத்தில், குலவிய = வாசஞ் செய்யும், ஐயா = ஐயனே! நின் = உம்முடைய, தூமலி = பரிசுத்த மிகுந்த, சததளம் = தாமரை மலர் போன்ற, திருவடி = அழகிய பாதங்களை, நிதம் = தினந்தோறும், துதி செய = தோத்திரஞ் செய்ய, சிதம் = அறிவை, ஈவாய் = கொடுத்தருள்வாய், பூமலி = தாமரைப் புட்பத்தில், மலி = மிகுதியாக வாசஞ் செய்யும், பிரமன் = பிரமதேவன், பரன் = பரமசிவன், விண்தலர் = சுவர்க்க தலத்தையுடைய தேவர்கள், பொற்பு = அழகை யுடைய, அயிராவதமேல் = அயிராவத மென்னும் வெள்ளை யானையின் பேரில், தா = தாவி ஏறி நடத்தும், புனிதன் = தேவேந்திரன், தொழ = வணங்க, வாழ்ந்திடும் = வாழ்ந்திருக் கின்ற, சவி = பிரகாசமுள்ள, கௌத்துவம் = கௌத்துவா பரணம் தங்கிய, உரனே = மார்பையுடையவனே! என்றது. 50

வேறு

உரமு றைத்திருவி ஞத வும்பர்தொழு
  முத்த மாமழிசை யுற்றுவாழ்
கரமு றைத்திகிரி வளைவி ஞந்தகவண்
  கதையெ னும்படைக ளைந்தையும்
கரமு றைக்குலவு கார ணகமலன்
  காளை கன்றினையொ ளித்திட
திரமு றைச்சிறுவர் கற்றெ னத்திகழ்செய்
  தேவ சேவைதரு சோதியே.

இதன் பொருள் :

உரம் = மார்பிலே, உறை = வாசமாயிருக்கின்ற, திருவின் = மகாலட்சுமியின், நாத = நாயகனே ! உம்பர் = தேவர்கள், தொழும் = வணங்கும், உத்தமா = உத்தம குணமுள்ளவனே ! மழிசை = திருமழிசை நகரத்தில், உற்று = பொருந்தி, வாழ் = வாழ்கின்ற, கரம் = கிரணங்கள், உறை = இருக்கின்ற, திகிரி = சக்கரம், வளை = பாஞ்சசன்னியம், வில் = சார்ங்கம், நாந்தகம் = வாள், வண் = வளமை பொருந்திய, கதை = தண்டு, எனும் = என்று சொல்லும், படைகள் = ஆயுதங்கள், ஐந்தையும் = ஐந்தென்னும் கணக்குள்ளதை, கரம் = கையில், உறை = இருக்க, குலவு = பொருந்திய, காரண = ஆதிகாரணமானவனே! கமலன் = தாமரைமலரில் பிறந்த பிரமதேவன், காளை = இயாதவர்களின், ஆண் = சிறுவர்களை, கன்று = பசுவின் கன்றுகளை, ஒளித்திட = மலைக்குகையில் - அடைத்து வைக்க, திரம் = நிலையாக, உறை = இருக்கிற, சிறுவர் = அந்த பிள்ளைகளைப் போலும், கற்றென = அந்த கன்றுகளைப் போலும், திகழ் = விளங்குபடி, செய் = செய்த, தேவ = தேவனே ! சேவை = யாவருக்கும் தரிசனம், தரும் = கொடுக்கும், சோதியே = பிரகாசமுடையவனே ! என்றது. 51

சோதி புள்ளரசின் மீது லாவுமது
  சூத் மச்சமுத லாகவீ
ருதி யாயென வழைக்கு மைந்தன்முன
  மான ரிப்படிவ மாகிவந்

தேதி யின்றிசன கன்னு டற்பிள
வியற்றி யேர்மழிசை மேவுவிண்
ணோதி பெற்றதிரு மங்கை நாதவெனை
யுற்ற துன்பம தகற்றுவாய்.

இதன் பொருள் :

சோதி = பிரகாசமுள்ள, புள்ளரசின் = பறவைகளுக்கு ராஜனாகிய கருடன், மீது = மேல் ஏறி, உலாவும் = எங்குஞ் சரிக்கின்ற, மதுசூத = மதுவென்பவனை சூது செய்து கொன்ற வனே ! மச்சம் முதலாக = மச்ச அவதாரம் ஆதியாக, வீறு = பெருமை பொருந்திய, ஆதியாய் = முதல்வனே! என = என்று, அழைக்கும் = கூப்பிட்ட, மைந்தன் = சிறுவனாகிய பிரகலாத ஆழ்வான், முனம் = முன்னே வந்து, ஆள் = ஆண்டு கொள், அரிப்படிவம் = நரசிங்க உருவம், ஆகி வந்து = எடுத்து வந்து, ஏதி = ஆயுதங்கள், இன்றி = இல்லாமல், கனகன் = இரணியன், உடற் பிளவு = சரீரத்தைப் பிளத்தலாகிய செயலை, இயற்றி = செய்து, ஏர் = அழகு பொருந்திய, மழிசை = திருமழிசை நகரில், மேவு = வாசஞ் செய்கின்ற, விண் = மேகம் போன்ற, ஓதி = கூந்தலை, பெற்ற = பெற்ற, திருமங்கை = மகாலட்சுமியின், நாத = நாயகனே ! எனை = என்னை, உற்ற = அடைந்த, துன்ப மது = வருத்தத்தை, அகற்றுவாய் = நீங்கச் செய்வாய் ; என்றது. 52

கற்றினக் குழுவைக் காத்தசெங் கமலக்
கண்ண வானவர்க ளேத்தவே
வெற்றி வீடணனை யன்பி லாண்டருளி
வெய்ய நெஞ்சட விராவணன்
செற்றி டச்செரு விளைத்த திணிடிறல்கொள்
சீத ராவடியர் பதின்மரும்
உற்றி றைஞ்சமழி சைக்க ணுலயம
துவண வொண்மையருள் கோலமே.

இதன் பொருள் :

கற்றினம் = பசுங்கன்றின், குழுவை = கூட்டங்களை, காத்த = இரட்சித்த, செங்கமல = சிவந்த தாமரை மலர் போன்ற கண்களை யுடையவனே ! வானவர்கள் = தேவர்கள், ஏத்த = தோத்திரஞ் செய்யவே, வெற்றி = ஜெயம் பொருந்திய,

வீடணனை=விபீஷண ஆழ்வானை, அன்பில்=கிருபையினால், ஆண்டருளி=ஆட்கொண்டு கிருபை செய்து, வெய்ய=கடூரமான, நெஞ்சு=மனமுடைய, அடல்=வலிமை பொருந்திய, இராவணன்=இராவணன் என்னும் இராக்ஷதன், செற்றிட=மடிய, செரு=உயுத்தம், விளைத்த=செய்த, திண்திறல்=பராக்கிரமம், கொள்=கொண்ட, சீதரா=சீதரனென்னுந் திருநாமம் பூண்டவனே! அடியர்=ஆழ்வார்கள், பதின்மரும்=பத்துப் பேர்களும், உற்று=பொருத்தமாக, இறைஞ்சி=வணங்கித் துதி செய்ய, மழிசைக் கண்=திருமழிசை யென்னும் நகரினிடத்தில், ஆலயம் அது=கோயிலில் தங்கும், உவணம்=உயர்வுள்ளவனே! ஒண்மை=அறிவை, அருள்=தருவாய், கோலமே=அழகாகவே, என்றது. 5

கோல மாகிமிட லிரணியாக் கதனைக்
 கோறியம் புவியைக் கொண்டுமா
சூல பாணிதொழ வாழு மாயமது
 சூத காமனை தரும்பரா
சீல கோசலை யளித்த ருட்சிறுவ
 செய்ய மாமழிசை மேவுமின்
நீல மேகமுறழ் தேக வென்னையருள்
 நீணி லத்தர்துதி வீமனே.

இதன் பொருள்:

கோலமாகி=சுவேத வராகமாகி, மிடல்=வலிமையுள்ள, இரணியாக்கதனை=இரணியாக்ஷதனை, கோறி=கொன்று, அம்புவியை=அழகிய பூமியை, கொண்டு=கொண்டு வந்தவனே! மா=பெருமை பொருந்திய, சூலம்=சூலாயுதத்தை, பாணி=கையிலே பிடித்த சிவபெருமான், தொழ=வணங்க, வாழும்=வாழ்கின்ற, மாய=மாயங்களைச் செய்பவனே! மதுசூத=மதுசூதனென்னும் பெயருள்ளவனே! காமனை=மன்மதனை, தரும்=பெற்ற, பரா=கர்த்தனே! சீலம்=பரிசுத்தமுள்ள, கோசலை=கௌசலை, அளித்தருள்=பெற்று வளர்த்த, சிறுவ=குமாரனாகிய இராமஸ்வாமியே! செய்ய=செவ்வையாகிய, மா=இலட்சுமீ பிராட்டி வாசஞ் செய்யும், மழிசை=திருமழிசையில் வசித்தல், மேவும்=பொருந்திய, மின்=மின்

னலைத் தருகின்ற, நீலமேகம் = கறுத்த மேகத்தை, உறழ் = சமானமுள்ள, தேக = சரீரம் உள்ளவனே! என்னை = அடியேனுக்கு, அருள் = கிருபை செய், நீள் = நீண்ட, நிலத்தர் = பூமியிலுள்ளவர், துதி = தோத்திரஞ் செய்யும், வீமனே = பட்சி ராஜனாகிய கருடனையுடையவனே! என்றது. 54

வீம னைத்தெ றெனக்க தத்துவசன்
விரிந திக்கண்வசி வைத்திடம்
பூமன் வண்டருரு வாயவ் வீமனுயிர்
பொன்றி டாதருள் புரிந்திடும்
கோம ளாமழிசை கோயி லிற்குலவு
கோம னேயெழில் குடத்தியர்
தோமி லாடைகவர் சூத வெற்கருள்செய
சோதை தந்தநவ நீதனே.

இதன் பொருள்:

வீமனை = வாயு பகவான் குமாரனை, தெற = கொல்ல, என = என்று, கதத்துவசன் = பாம்பைக் கொடியாகக் கொண்ட துரியோதனன், விரி = விரிவாகிய, நதி = ஆற்றுமடு, கண் = இடத்தில் வசி = வசியை நட்டு, வைத்திடம் = வைத்து இருக்கிற இடத்தில், பூ = மலரில், மன் = பொருந்தும், வண்டர் = வண்டின், உரு = வடிவமாய் — அவ் வசியினிடமிருந்து—, அவ் வீமன் = அந்த வீமசேனன், உயிர் = பிராணன், பொன்றிடாது = மாய்ந்திடாது, அருள்புரிந்திடும் = கிருபை செய்திடும், கோமளா = இளமையுடையவனே! மழிசை = திருமழிசை, கோயிலில் = கோயிலினிடத்தில், குலவும் = குலாவிக் கொண்டிருக்கும், கோமனே = முதன்மையானவனே! எழில் = அழகு பொருந்திய, குடத்தியர் = இயாதவ குல மாதர்கள், தோம் இல் = குற்றமில்லாத, ஆடை = வஸ்திரங்களை, கவர் = கொள்ளை கொண்ட, சூத = சூது செய்தவனே! எற்கு = எனக்கு, அருள் செய் = கிருபை செய்வாய், சோதை = அசோதைப் பிராட்டியார், தந்த = கொடுத்த, நவநீதனே = நவநீதமாகிய வெண்ணெய்யை யுண்டவனே, - என்றது. 55

நவமு லாவுவட மதுரைநா யகனை
நளிர்த ரங்கமக ராலயப்
புவன நாதமலர் புண்ட ரீகனரி
பொற்பு லாவுகை லைப்பரன்
தவமு லாவுமுனி வரர்த நைந்துதொழு
தகைமி குந்தமழி சைக்கணில்
பவன முற்றசெக நாத வெற்குனது
பாத பங்கயம ளிப்பையே.

இதன் பொருள் :

நவம் = புதுமை, உலாவு = பொருந்திய, வடமதுரை = வடமதுரைப் பட்டணத்திற்கு, நாயகனை = அரசு செய்தவனை, நளிர் = குளிர்ச்சி பொருந்திய, தரங்கம் = அலைகளையுடைய, மகராலயம் = சமுத்திரஞ் சூழ்ந்த, புவனம் = பதினான்கு புவனங்களுக்கும், நாத = முதல்வனே! மலர் = மலராகிய, புண்டரீகன் = தாமரை இடமாக இருக்கும் பிரமதேவன், அரி = இந்திரன், பொற்பு = அழகு, உலாவு = பொருந்திய, கைலை = கைலையங்கிரி வாசனாகிய பரமசிவன், தவமுலாவு = மகா தவ மகிமையுள்ள, முனிவர் = ரிஷிகள், நைந்து = நெருங்கி, தொழும் = வணங்கும், தகை = பெருமை, மிகுந்த = மிகுந்த, மழிசைக் கணில் = திருமழிசை நகரத்தின் கண், பவம் = திருக் கோயில், உற்ற = பொருந்திய, செகநாத = ஜெகநாதப் பெருமானே! எற்கு = உமது தாசனாகிய எனக்கு, உனது = உம்முடைய, பாத பங்கயம் = பாத கமலங்களை, அளிப்பையே = கொடுப்பாய்; என்றது. 56

அளிகண் மன்னுமலர் துடவை யார்மழிசை
யன்பு டன்வளரு மமலமா
வளிய றற்கனல்பு வனமும் விண்ணனையும்
வாரி யுண்டசக நாதனே
களிமி குந்தகதிர் மௌலி வேளனைய
காண்டி பன்றனது நண்பனே
நளிரு லாவவெனை யாட்கொள் வாய்வெளிறு
நத்து நேமிதிக ழத்தனே.

இதன் பொருள் :

அளிகள் = வண்டுகள், மன்னும் = மிகுதியாக மொய்த்திருக்கின்ற, மலர் = புட்பங்கள் நிறைந்த, துடவை = சோலைகள், ஆர் = பொருந்திய, மழிசை = திருமழிசையில், அன்புடன் = இஷ்டமுடன், வளரும் = வளர்ந்திருக்கின்ற, அமல = ஜெகநாதப் பெருமானே! மா = பெருமையுள்ள, வளி = காற்று, அறல் = நீர், கனல் = அக்கினி, புவனமும் = உலகமும், விண் = ஆகாயம், அனே = தயிர், வாரி = கைகளினல் வாரியெடுத்து, உண்ட = புசித்த, சகநாதனே = பூமிக்கு நாயகனே! களி = சந்தோஷம், மிகுத்த = மிகுதியான, கதிர் = கிரணங்களுள்ள, மௌலி = கிரீடத்தையுடைய, வேள் = மன்மதனை, அனைய = ஒத்த, காண்டிபன் = காண்டீபத்தையுடைய அருச்சுனன், தனது = தன்னுடைய, நண்பனே = சிநேகிதனே! நளிர் = பெருமை, உலாவ = பொருந்த, எனே = என்னை, ஆட்கொள்வாய் = அடிமைகொள்வாய், வெளிறு = வெண்மை பொருந்திய, நத்து = பாஞ்சசன்னியம், நேமி = சக்கராயுதம், திகழ் = பிரகாசமுள்ள, அத்தனே = கையுள்ள கத்தனே! என்றது. 57

அத்தி யின்திர ளடர்ந்து லாவுபொழி
லாரும் வண்மழிசை மேவிவாழ்
கத்த காரிய சுரற்கு கண்டனிக
டாட்ச கங்கைவரு பாதனே
சித்த சுத்தமுள வைண வர்க்குழு
தினம்ப ராவுபர வாஞ்சையாய்
பத்தி சாரரிசை பாட வாழவருள்
பாங்கு லாவுபிரக் கியாதனே.

இதன் பொருள் :

அத்தியின் = யானையின், திரள் = கூட்டங்கள், அடர்ந்து = நெருங்கி, உலாவு = சஞ்சரிக்கின்ற, பொழில் = பூஞ்சோலைகள், ஆரும் = நிறைந்த, வண் = வளமை பொருந்திய, மழிசை = திருமழிசை க்ஷேத்திரத்தில், மேவி = பொருந்தி, வாழ் = வாழ்கின்ற, கத்த = கத்தனே! காரி = காக்கை போன்ற, அசுரற்கு = இராக்ஷதனுக்கு, கண் = நேத்திரம், தனி = ஒன்று, கடாட்ச = கிருபை செய்தவனே! கங்கைவரு = ஆகாய கங்கை வந்த,

பாதனே=பாதத்தையுடையவனே! சித்தம்=மனம், சுத்தம் =பரிசுத்தம், உள = உண்டாயிருக்கின்ற, வைணவர் = பாகவதர், குழு=கூட்டம், தினம்=தினந்தோறும், பரவு=வணங்குகின்ற, பர=பரனே! வாஞ்சையாய்=ஆசையாய், பத்திசாரர் =திருமழிசையாழ்வார், இசை = நின் புகழை, பாட=பாடியதற்கு, வாழ்=வாழ, அருள்=கிருபை செய்த, பாங்குஉலாவு= அழகு பொருந்திய, பிரக்கியாதனே = கீர்த்தியை யுடையவனே! [என்றது.] 58

தனமி லங்குமட வார்கண் மானலினில்
சார்பு றுதெனைய ளித்திடுங்
கனக நாஞ்சில்திரு மழிசை மேவிவளர்
கமல வம்பகவி நோதனே
பனக ராசன்மிசை பள்ளி கொண்டமணி
பங்க யாசனைம ணாளனை
மனமு றத்துதிசெய் மாந்தர் தீவினையை
மாற்றி விண்ணுலகில் வாழ்வரே.

இதன் பொருள்:

தனமிலங்கு=தனபாரம் விளங்கிய, மடவார்கள்=மாதர்களின், மானலில் = மயக்கத்தில், சார்பு = ஆசையானது, உறுது=பொருந்தாது, எனை = என்னை, அளித்திடும் = காத்திடும், கனகம்=பொன்மயமாகிய, நாஞ்சில்=மதில் சூழ்ந்த, திருமழிசை=அழகிய-மழிசை நகரத்தில், மேவி=பொருந்தி, வளர் =வளர்கின்ற, கமல=செந்தாமரை மலர் போன்ற, அம்பகம் =நேத்திரம், விநோதம் = விநோதமுடையவனே, பனகம்= பாம்புகளுக்கு, இராசன் =அரசனாகிய ஆதிசேஷன், மிசை= மேல், பள்ளிகொள்=சயனங்கொண்ட, மணி=அழகிய, பங்கயாசனை=தாமரை மலரே ஆசனமாகவுடைய மகாலட்சுமியின், மணாளனை = நாயகனை, மனமுறை = பொருந்த, துதிசெய்= தௌத்தியஞ் செய்யும், மாந்தர்=மனிதர்கள், தீவினை=கொடிய வினைகளை, மாற்றி=நீங்கச் செய்து, விண்ணுலகில்=சுவர்க்க லோகத்தில், வாழ்வரே = வாழ்வார்கள்; என்றது; ஏ— ஈற்றசை. 59

வாழை வான்கமுகு மாபலா மருவு
மணியு லாவுதிரு மழிசையில்
ஆழி நாந்தக வளைக்க தைத்தனுசு
மணியு மத்தவடி யேனையாள்
வேழ மாமுகனும் வெற்றி வேலவனும்
விரிஞ்ச னும்விபுதர் கோனும்நீள்
வேழ வில்லனும ருக்க னுஞ்சிவனும்
வேட்புடன் துதிசெய் பகவனே.

**இதன்பொருள் :**

வாழை = வாழைமரம், வான் = பெருமை பொருந்திய, கமுகு = பாக்குமரம், மா = மாமரம், பலா = பலா மரம், மருவும் = நெருங்கியிருக்கும், மணி = அழகு, உலாவு = பொருந்திய, திருமழிசையில் = திருமழிசை க்ஷேத்திரத்தில், ஆழி = சக்கரம், நாந்தகம் = வாள், வளை = பாஞ்சசன்னியம், கதை = தண்டு, தனுசு = சார்ங்கம், அணியும் = தரித்த, அத்த = கையை யுடையவனே! அடியேனை = உமது அடிமையாகிய என்னை, ஆள் = ஆள்வாய், வேழம் = யானையின், மா = பெருமையுள்ள, முகனும் = முகமுள்ள விநாயகனும், வெற்றி = சூரர்களை வென்று வெற்றிபெற்ற, வேலவனும் = வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியனும், விரிசஞ்னும் = பிரமதேவனும், விபுதர் = தேவர்கள், கோனும் = அரசனாகிய தேவேந்திரனும, நீள் = நீண்ட, வேழம் = கரும்பு, வில்லனும் = வில்லாகக்கொண்ட மன்மதனும், அருக்கனும் = சூரியனும், சிவனும் = சங்கரமூர்த்தியும், வேட்புடன் = ஆசையுடன், துதிசெய் = தோத்திரஞ் செய்யப்பட்ட, பகவனே = மகாவிஷ்ணுவே! என்றது. 60

வேறு

பகலவனைப்புரை யிலகிய மாமணி
பதித்தவெ யின்மழிசை
ககமிசை யூர்புற மிகுசக நாதனை
கவினுற வேத்துவர்வான்
இகலிட பக்கொடி பகவனண் ணற்கரு
மியல்வை குந்தமதிற்
றகவுறு பன்னிரு வரினடி யைப்பணி
தாசர்க ளாகுவரே.

இதன் பொருள் :

பகலவனைப் புரை = சூரியனுக்குச் சமானமாக, இலகிய = பிரகாசிக்கின்ற, மாமணி = அழகிய இரத்தினங்கள், பதித்த = பொருந்திய, எயில் = மதில் சூழ்ந்த, மழிசை = திருமழிசை யுடையவனே! ககம் = கருடப்பட்சியின், மிசை = மேல், ஊர் = ஏறிநடத்தும், புரம் = வீரத்தையுடைய, மிகு செகநாதனை = யாவருக்கும் அதிகமான—ஜெகநாதப் பெருமானென்பவனை, ஏத்துவர் = தோத்திரஞ் செய்பவர், வான் = பெருமை, இகல் = வலிமையும் உள்ள, இடபக் கொடி = ரிஷபக் கொடியுடைய, பகவன் = பரமசிவன், நண்ணற்கு = போகிறதற்கு, அரும் = அருமையான, இயல் = அழகையுற்ற, வைகுந்தமதில் = வைகுந்த பதவியில், தகவுறும் = உரிமை யுடையவர்களாகிய, பன்னிருவர் = பன்னிரண்டு ஆழ்வார், அடியை = பாதங்களை, பணி = வணங்கும், தாசர்கள் = அடியார்கள், ஆகுவரே = ஆவார்கள், என்றது. ஏ - ஈற்றசை. 61

வரிசிறை ஞிமிறு செறிந்தம லர்க்கய
மன்னிய மாமழிசைப்
பரிவுட னமர்சக நாதனி ணைக்கழல்
பணிபவர் பஞ்சதருக்
கரசென வீறிவ ணண்டர்க ளுந்தொழு
மையனெ னத்திகழும்
வரனக ரத்திய லாரம ரீஇயளி
வைகுவர் மாமனமே.

இதன் பொருள் :

வரிசிறை = வரியுள்ள இறகு பொருந்திய, ஞிமிறு = வண்டுகள், செறிந்த = மிகுந்த, மலர்க்கயம் = மலர்கள் நிறைந்த தடாகங்கள், மன்னிய = மிகுந்திருக்கின்ற, மாமழிசை = அழகிய மழிசை நகரத்தில், பரிவுடன் = அன்புடன், அமர் = அமர்ந்து இருக்கின்ற, சகநாதன் = ஜெகநாதப் பெருமாள், இணை = இரண்டாகிய, கழல் = பாதங்களை, பணிபவர் = சேவிப்பவர்கள், பஞ்சதருக்கு = ஐந்தருக்களுக்கும், அரசென = இராஜனென, வீறு = பெருமையுள்ள, வண் = வள்மை பொருந்திய, அண்டர் களும் = தேவர்களும், தொழும் = வணங்கும், ஐயன் = கத்தன், என = என்று, திகழும் = விளங்கும், வரன் = பிரமதேவன், நகரத்து = நகரில், இயல் = அழகு, ஆர = நிரம்ப, மரீஇ = மருவி

இருந்து, அளி=அன்புடன், வைகுவர்=தங்கி வாசஞ் செய் வார்கள், மா மனமே=விருப்புள்ள மனமே! என்றது. 62

மனம்வா வியின்முளை வாசமு லாவிய
வனசன ரேயடியேன்
துனியற வேவிரை வினிலருள் புரிவாய்
துடியிடை சோமன்முக
வனிதைய ராவண வீதிக ணுற்றிட
மன்னர்பு யம்பொரலால்
நனிமணி சிந்தி துளக்கமி குந்தட
நணுமழி சைப்பரனே.

இதன் பொருள்:

மனம்=மனமென்னும், வாவியில்=தடாகத்தில், முளை= முளைத்த, வாசம்=வாசனை, உலாவிய=பொருந்திய, வனச னரே=தாமரை மலரே! அடியேன்=அடிமையாகிய—என், துனி=துன்பம், அற=நீங்க, விரைவினில்=சீக்கிரத்தில், அருள்புரி=கிருபை செய்வாய், துடி=உடுக்கை போன்ற இடையும், சோமன்=பூரணச் சந்திரனைப் போன்ற முகமுடைய, வனிதையர்=ஸ்திரீ சனங்கள், ஆவணம்=கடை வீதி, கண்=இடத்தில், உற்றிட=பொருந்திட, மன்னர்=அவ் விடத்தில் அரசர்கள், புயம்=தோள்கள், பொரலால்=படலால், நனிமணி=மிகுந்த இரத்தினங்கள், சிந்தி=சிதறி, துளக்க மிகும்=பிரகாச மிகுந்த, தடம்=வழி, நண்ணும்=பொருந்திய, மழிசை=திருமழிசை க்ஷேத்திரத்தில் வசிக்கும், பரனே= கத்தனே! என்றது. 63

பரவிய கதிரெறி மகுடமும் வான்செறி
பகலவ னெனகுழையும்
நிருதரை வென்றிகொ ணேமிவ லம்புரி
நீள்தனு திண்கதைவாள்
பொருசது கைத்தல மிசையி லிலங்கிட
பொற்சிறை வித்துருமக்
கருடனி வர்ந்தடி யேன்முன மவந்தருள்
கவின்மழி சைப்பொருளே.

இதன் பொருள் :

பரவிய = அதிகமுள்ள, கதிர் = கிரணங்கள், எறி = வீசுகின்ற, மகுடமும் = கிரீடமும், வான் = ஆகாயத்தில், செறி = மிகுந்த, பகலவனென = சூரியனென்று சொல்லும்படி, குழையும் = குண்டலமும், நிருதரை = இராக்ஷதரை, வென்றி கொள் = ஜெயங்கொண்ட, நேமி = சக்கராயுதம், வலம்புரி = பாஞ்சசன்னியம், நீள் = நீண்ட, தனு = சார்ங்கம், திண் = பலம்பொருந்திய, கதை = தண்டு, வாள் = வாளாயுதம், பொரு = பொருந்தும்படியாகிய, சது = நான்கு, கைத்தல = கையினிடத்தில், மிசையில் = மேல்; இலங்கிட = பிரகாசித்திட, பொற்சிறை = அழகிய சிறகு, வித்துருமம் = பவளம்போன்ற, கருடன் = கருடாழ்வான் பேரில், இவர்ந்து = ஆரோகணித்து, அடியேன் = என்னுடைய, முனம் = கண்முனம், வந்து = வந்து, அருள் = கிருபை செய்வாய், கவின் = அழகு பொருந்திய, மழிசை = திருமழிசைநகரில் விளங்கும், பொருளே = முதன்மையானவனே! 64

மழிசையின் மேவிய வான்றொடு சிகரம்
மாண்புடன் வைகியருட்
பொழிமுகி லேநர சிங்கபு யாசலம்
புகலரு திண்ணியனே
விழைவுட னென்முன நண்ணியெ வர்க்கு
மிகும்வர நல்குகடத்
திழிகுல நங்கைய ளித்தவி யற்கனி
யின்பொடு ணெம்மானே.

இதன் பொருள் :

மழிசை = திருமழிசை நகரத்தில், மேவிய = இருக்கின்ற, வான் = ஆகாயத்தை, தொடு = தீண்டுகின்ற, சிகரம் = கோயிலில், மாண்புடன் = பெருமையுடன், வைகி = தங்கியிருந்து, அருள் = கிருபை, பொழி = சொரியுகின்ற, முகிலே = மேகம்போன்றவனே! நரசிங்க = நரசிங்க அவதாரனே! புயாசலம் = தோளாகிய அசலம் (மலை), புகலரும் = சொல்லுதற்கு அருமையான, திண்ணியனே = பலம்பொருந்தினவனே, விழைவுடன் = ஆசையுடன், என் = என்து, முனம் = முன்னே நண்ணி = வந்து, எவர்க்கும் = எல்லோர்க்கும், மிகும் = மிகுந்த

வரம் = வரத்தை, நல்கு = கொடுப்பாய், கடத்து = காட்டினிடத்து, இழிகுல நங்கை = தாழ்வாகிய குல வேடப்பெண் சவரி இனிதுடன், அளித்த = கொடுத்த, இயல் = அழகிய, கனி = பழத்தை, இன்பொடு = இஷ்டத்துடன், உண்ட = உண்ட, எம்மானே = எனது கத்தனே! என்றது. 65

மாநில முண்டுமிழ் வாயம லாமணி
மாதிர ரிந்திர னும்
ஆனிவ ரத்தனு மாரண னுந்தின
மடிதொழ வேமழிசைப்
பூநில வுஞ்சக நாதவெ னக்கருள்
பொற்கிரி யொத்திலகும்
ஏனவு ருக்கொடு தமனிய நாட்டனை
யிகலுமி ராகவனே.

இதன் பொருள் :

மாநிலம் = பெரிய உலகத்தை, உண்டு = புசித்து, உமிழ் = உமிழ்ந்த, வாய் = வாயினையுடைய, அமலா = மகாவிஷ்ணுவே, மணி = அழகிய, மாதிரர் = தேவர்கள், இந்திரனும் = தேவேந்திரனும், ஆன் = இடபவாகனத்தையுடைய, அத்தனும் = பரமசிவனும், ஆரணனும் = பிரமதேவனும், தினம் = நாள்தோறும், அடிதொழவே = திருவடிவணங்கவே, மழிசை = திருமழிசை, பூநிலவும் = பூமியில் பிரகாசித்திடுகின்ற, சகநாத = ஜெகநாதப் பெருமானே, எனக்கு = அடியேனுக்கு, அருள் = கிருபைசெய்வாய், பொற்கிரி = பொன்மலையாகிய மக(ம்)மேருவை, ஒத்து = சமானமாகி, இலகும் = விளங்கும், ஏனம் = சுவேதவராகமாக, உருக்கொடு = உருவங்கொண்டு, தமனிய நாட்டனை = இரணியாக்கதனை, இகலும் = போர்செய்து சம்மாரஞ்செய்த, இராகவனே = இராகவனென்னுந் திருநாமங்கொண்டவனே! என்றது. 66

கவமென மந்தர வரைகொடு வால்கடல்
கடைதரு மந்நாளில்
நவமுறு மம்பண வுருகொடு நகமதை
நகுவெரி நேந்தியகே

சவமுகில் சேர்மதில் மழிசையு லாவிய
சயசக நாதமணி
துவசம் வியன்பெறு கலுழனை கைப்பிடி
சோதிசெய் திண்புயனே

**இதன் பொருள் :**

கவம்=மத்து, என = என்று சொல்லுவது, மந்தரம் = மந்தரமென்னும், வரை=மலையை, கொடு=கொண்டு, வால்= வெண்மையுள்ள, கடல்=சமுத்திரத்தை, கடைதரு = கடைந் திடும், அநாளில் =அந்ததினத்தில், நவமுறும் =புதுமையான, அம்பணம் = ஆமையினது, உருகொடு = உருவங்கொண்டு, நகமதை =மந்தரகிரியை, நகு=பிரகாசமுள்ள, வெரிந் =முது கில், ஏந்திய = தாங்கிய, கேசவ = கேசவனென்னுந் திரு நாமனே ! முகில்=மேகங்கள், சேர்=நெருங்கிச்செல்கின்ற, மதில் = மதிலுயரமுள்ள, மழிசை = திருமழிசை நகரத்தில், உலாவிய = பொருந்தி வாசஞ்செய்கின்ற, சயம் = வெற்றி யுள்ள, சகநாத=ஜெகநாதப்பெருமானே ! அணி=அழகு பொருந்திய, துவசம்=கொடியானது, வியன்பெறு = பெருமை பொருந்திய, கலுழனை =கருடனை, கைப்பிடி= அலங்காரமாகப் பிடித்த, சோதிசெய்=பிரகாசத்தைச் செய்கின்ற, திண் =பலம் பொருந்திய, புயனே =தோளையுடையவனே! என்றது. 67

புயலென நிலவிய தேகசரோருகப்
பூநிகர் பாதநனி
சயமுறை யைம்படை தங்கியல் கைத்தல
தசரத சுதவன்சக்
கயமுல வியமழி சைக்க ணிலங்கிய
காரண கங்கைதரன்
பயமத கற்றிய ருட்புரி புங்கவ
பாலனெ னக்கருளே.

**இதன் பொருள் :**

புயலென = நீருண்டமேகம் என்று சொல்லும்படியாய், நிலவிய =பிரகாசிக்கின்ற, தேக = சரீரத்தையுடையவனே !

சரோருகப்பூ = தாமரை மலரினை, நிகர் = நிகர்த்த, பாத =பாதங்களுள்ளவனே! நனி = மிகுந்த, சயம்உறை = வெற்றி தங்கிய, ஐம்படை = ஐந்து ஆயுதங்கள், தங்கு = தங்கியிருக்கின்ற, இயல் = அழகினையுடைய, கைத்தல = கையினையுடையவனே! தசரத = தசரத சக்ரவர்த்தியின், சுத = புத்திரசிகாமணியாகிய இராமஸ்வாமியே! வனசம் = தாமரைமலர் நெருங்கிய, கயம் = தடாகங்கள், உலாவிய = பொருந்திய, மழிசைக்கண் = திருமழிசை நகரினிடத்தில், இலங்கிய = பிரகாசிக்கின்ற, காரண = ஆதிகாரணனே! கங்கைதரன் = கங்காபவானியை சிரசிலேதரித்த சிவபெருமான், பயமது = பயத்தை, அகற்றி = நிவர்த்திசெய்து, அருட்புரி = கிருபைசெய்த, புங்கவ = உயர்வாகிய கத்தனே! பாலன் = உமதுபாலனாகிய, எனக்கு = அடியேனுக்கு, அருளே = கிருபைசெய்வாய்—என்றது. ஏ—ஈற்றசை. 68

பானிற வம்பணி லம்பணை யிற்செறி
  பாண்டரு வண்டுறைதார்
தேனிறை யும்மழி சைத்திணை யிற்றிகழ்
  சேர்செக நாதபிரான்
தூனிறை யும்பதத் தொண்டு புரிந்திடில்
  தோமகல் நெஞ்சகமே
வானிற மாயவன் மலரடி சேவைசெய்
  வைகுந்த பதமுறவே

**இதன் பொருள்:**

பானிறம் = பால்நிறமாகிய, அம்பணிலம் = அழகிய சங்குகள், பணையில் = கழனிகளில், செறி = மிகுந்தும், பாண் = இராகங்கள், தரும் = பாடுகின்ற, வண்டு = வண்டுகள், உறை = இருக்கின்ற, தார் = மலரினிடத்து, தேன் = தேன்கள், நிறையும் = நிரம்பியிருக்கின்ற, மழிசை = திருமழிசை, திணையில் = க்ஷேத்திரத்தில், திகழ்சேர் = பிரகாசம்பொருந்திய, செகநாதபிரான் = ஜெகநாதனென்னும் பெயருள்ள முதல்வன், தூ = பரிசுத்தம், நிறையும் = நிரம்பிய, பதம் = பாதங்களுக்கு, தொண்டு = அடிமை, புரிந்திடு = செய்திடு, நெஞ்சகமே = மனமே! வான்நிற = மேகம்போலும் நிறமுள்ள, மாயவன் = மாயைகள்

செய்யும் விஷ்ணுவின், மலரடி = தாமரை மலர்போன்ற திருவடி, சேவைசெய் = சேவைசெய்வாய், வைகுந்தபதம் = வைகுந்தமென்று சொல்லும் பதவியை, உறவே = பொருந்தி வாசஞ்செய்யவே—என்றது. 69

பதமுத வும்வயி னடர்மழி சைக்கணில்
  பண்புறு பாற்கரனை
சிதமுத வுந்திரு வாய்மொழி சீர்மறை
  செப்பி துதித்தறியாய்
கதமுடி தனில்கடி நட்டமி ழைத்திடு
  கமலம லர்ச்செறியம்
பதமுறு பரனினை யாள்குவ தெவ்வகை
  பன்னுவை மன்னகமே.

இதன் பொருள் :

பதம் உதவும் = பதமாகிய அன்னங்கள் தானங் கொடுக்கின்ற, வயின் = வீடுகள், அடர் = நெருங்கி யிருக்கின்ற, மழிசை = திருமழிசை, கணில் = இடத்தில் விளங்கிய, பண்புறு = நல்ல தயாள குணம் பொருந்திய பாற்கரனை = சூரியனைப் போலும் பிரகாசமுள்ளவனை, சித முதவும் = நல்ல ஞானத்தைக் கொடுக்கும், திருவாய் மொழி = ஆழ்வாராதியர் திருவாய் மலர்ந் தருளிய பிரபந்தம், சீர் = சிறந்த, மறை = வேதங்கள், செப்பி = வாயாரச் சொல்லி, துதித்து = தோத்திரஞ் செய்து, அறியாய் = அறிய மாட்டாய், கதம் = காளிங்க னென்னும் பாம்பின், முடி = சிரசில், கடி = அதிசயிக்க, நட்டம் = திருநடனம், இழைத்திடு = செய்திடு, கமல மலர் = தாமரை மலர், செறி = மிகுந்த, அம் = அழகிய, பதம் = பாதங்கள், உறும் = பொருந்திய, பரன் = கத்தன், நினை = உன்னை, ஆள்குவது = அடிமை கொள்ளுவது, எவ்வகை = எந்தவிதம், பன்னுவை = சொல்லுவாய், மன் = மயக்கம் நிலையுள்ள, அகமே = மனமே! என்றது. 70

வேறு

மன்னகிமி சைத்துயிலு மாயன்மகி ழாரும்
பொன்னமரு மாமழிசை புட்கரணி தோய்ந்தோர்
முன்னமகி ழுற்றுசக முதல்வன்முளை ரித்தார்
தென்னமரு மாவடியில் சேர்வரிது திண்ணம்.

இதன் பொருள் :

மன்னு = நிலைபெற்ற, அகி = ஆதிசேடனென்னும் பாம்பின், மிசை = மேல், துயிலும் = யோக நித்திரை செய்யா நின்ற, மாயன் = மகாவிஷ்ணு, மகிழ் = மகிழ்ச்சி, ஆரும் = பொருந்தும், பொன் = மகாலட்சுமி, அமரும் = அமைந்து இருக்கின்ற, மா = பெருமை தங்கிய, மழிசை = திருமழிசை க்ஷேத்திரத்திலுற்ற, புட்கரணி = திருக்குளத்து தீர்த்தத்தில், தோய்ந்தோர் = ஸ்நானஞ் செய்த பேர்கள், முன்னல் = மனம், மகிழுற்று = சந்தோஷமுற்று, சக முதல்வன் = சகநாதன், முளரி = தாமரை, தார் = மலர், தென் = அழகு, அமரும் = பொருந்திய, அடியில் = திருவடியினிடத்து, சேர்வர் = சேருவார்கள், இது திண்ணம் = இது சத்தியம் - என்றது. 71

திண்டிறல் தசானனனை சீற்றமுடன் வீட்டும்
விண்டமரு மாமழிசை மேவிதுதி செய்வோர்
அண்டருல கத்திறைவ ராகியக மேமைக்
கண்டனறி யாப்பதவி கண்ணிலவு வாரே.

இதன் பொருள் :

திண்டிறல் = பராக்கிரமமுள்ள, தசானனனை = பத்து முகத்தையுடைய இராக்ஷதனாகிய இராவணனை, சீற்றமுடன் = கோபத்துடன், வீட்டும் = சம்மாரஞ் செய்த, விண்டு = மகாவிஷ்ணுவான—சகநாதப் பெருமான், உறை = வாசஞ் செய்து இருக்கும், மா = அழகிய, மழிசை = திருமழிசை க்ஷேத்திரத்தில், மேவி = அவ்விடத்தில் பொருந்தி இருந்து, துதி செய்வோர் = தோத்திரஞ் செய்வோர், அண்டர் = தேவர்கள், உலகத்து = சுவர்க்க லோகத்து, இறைவனாகி = இறைவனாகிய தேவ இந்திரனாகி, அகமே = மனமே, மை = கறுத்த, கண்டன் = கழுத்துடையவனாகிய பரமசிவன், அறியா = அறியப்படாத, பதவி கண் = பதவியினிடத்தில், நிலவுவாரே = பிரகாசிப்பாரே! என்றது. 72

வாரிமிசை யஞ்சசி மணிக்கதிரு லாவும்
சீரிலகு செய்யமழி சைக்கணில் செறிந்த
ஏரிலகு குல்லைதொடை யீசவெனை யாள்வாய்
போரிலக ரக்கருயிர் பொன்றவிடு வாளா.

இதன் பொருள் :

வாரி = மதிலின் பேரில், மிசை = மேலாகிய, அம் = அழகிய, சசி = சந்திரன், மணி = மணிகள் போன்ற கிரணங்களையுடைய, கதிர் = சூரியன், உலாவும் = தவழ்ந்து செல்லுகின்ற, சீர் = சிறப்பு, இலகு = விளங்குகின்ற, செய்ய = செவ்வையாகிய, மழிசைக் கணில் = திருமழிசை க்ஷேத்திரத்தினிடத்தில், செறிந்த = மிகுந்த, ஏர் = அழகு, இலகு = பிரகாசிக்கின்ற, குல்லை தொடை = திருத்துழாய் மாலை, ஈச = சர்வேச்வரனே! எனையாள்வாய் = என்னை அடிமையாகக் கொள்வாய், போர் = யுத்தத்தில், இலகு = விளங்கும், அரக்கர் = இராக்ஷதர், உயிர் = பிராணன், பொன்ற = மடிய, விடு = விடுகின்ற, வாளா = வாளாயுதத்தையுடைய ஐயனே! என்றது. 73

விடையின்மிசை மேவுவிம லன்பலி யொழித்தா
லடையினிடை யிற்றுயிலு மத்தவயி லாரும்
படைவிழியர் மானலெனை பற்றற வளிப்பாய்
கடையகடு மாதிமழி சைக்கணுறை காரே.

இதன் பொருள் :

விடையின் = ரிஷப வாகனத்தின், மிசை = மேல், மேவும் = ஆரோகணிக்கும், விமலன் = சிவபெருமான், பலி = கபாலம் கையிலே கொண்டு இயாகஞ் செய்ததை, ஒழித்து = கபாலத்தைக் கைவிட்டு நீங்கச் செய்து, ஆல் = ஆலின், அடை = இலையின், இடை = மத்தியில், துயிலும் = யோக நித்திரை செய்யாநின்ற, அத்த = எனது தந்தையானவனே! அயில் = கூர்மை, ஆரும் = பொருந்திய, படை = வேலாயுதம் போலும், விழியர் = கண்களையுடைய மாதர்கள், மானல் = மயக்கம், எனை = என்னை, பற்று = பிடிப்பு, அற = நீங்க, அளிப்பாய் = கிருபை செய்து இரட்சிப்பாய், கடை = முடிவும், அகடு = மத்தியும், ஆதி = முதலும் ஆகிய கடவுளே! மழிசை = திருமழிசை க்ஷேத்திரத்தில், உறை = இருக்கின்ற, காரே = நீர் கொண்ட மேகம் போலுந் திருமேனியுடைய கத்தனே! என்றது. 74

உறையுளருளெந்தையுறு மன்பருளன் வாரி
அறையின்மிசை யம்பெறியு மையனையு முன்னற்
கறையின்முனி வோருறை கயங்கொண்மழி சைச்சேர்ந்
திறையடி பணிந்தவர்க ளேதமிறும் நெஞ்சே.

**இதன் பொருள் :**

உறையுள் = மோட்ச வீட்டை, அருள் = கொடுக்கும் தய வுடைய, எந்தந்தை = என் தகப்பனவன், உறும் = தன்னைச் சேர்ந்த, அன்பர் = அன்பையுடைய பாகவதர், உளன் = உள் ளத்தில் இருப்பவன், வாரி = சமுத்திரத்தின், அறையின் = அலைகளின், மிசை = மேல், அம்பு = அக்நியஸ்திரங்களை, எறி யும் = பிரயோகஞ் செய்யும், ஐயனை = ஸ்ரீ ராமஸ்வாமியை, முன்னல் = மனத்தினிடத்தில், கறையில் = குற்றமில்லாத, முனிவர் = மகரிஷிகள், உறை = வாசஞ் செய்கின்ற, கயங் கொள் = பெருமைகொண்ட, மழிசை = திருமழிசை க்ஷேத்தி ரத்தை, சேர்ந்து = அடைந்து, இறை = எப்பொருட்குமிறைவ னுகிய ஜெகநாதப் பெருமாளின், அடி = பாதகமலங்களை, பணிந்தவர்கள் = அன்புடன் சேவித்தவர்கள், ஏதம் = துன் பம், இறும் = நீங்கும், நெஞ்சே = மனமே! என்றது. 75

இறும்புமிகு மேல்வைபுடை யிவர்தன்மழி சைக்கண்
இறும்புதனு வன்றுனி யிருத்தசக நாதன்
புறம்புகலு வார்பொலி வுறுந்திருவை குந்தத்
துறும்பொறிய ருட்பெறுவ ருண்மைபுவி யீரே.

**இதன் பொருள் :**

இறும்பு = தாமரைமலர், மிகு = மிகுந்திருக்கின்ற, ஏல்வை = தடாகங்கள், புடை = நான்கு பக்கங்களிலும், இவர்தல் = பொருந்தி இருக்கின்ற; மழிசைக்கண் = திருமழிசை நகரிடத் தில், இறும்பு = மகாமேருவை, தனுவன் = வில்லாக வளைத்த பரமசிவன், துனி = பத்மாசுரனுல் வந்த துன்பத்தை, இருத்த = நிவர்த்தி செய்த, சகநாதன் = ஜெகநாதப் பெரு மாளினது, புறம் = வீரத்தன்மையை, புகலுவார் = துதி சொல்லுவார், பொலிவுறும் = பிரகாசம் பொருந்திய, திரு = இலட்சுமிகரம் பொருந்திய, வைகுந்தத்து = வைகுந்த ஸ்த லத்து, உறும் = பொருந்திய, பொறி = மகாலட்சுமியின், அருள் = கிருபாகடாட்சம், பெறுவர் = அடைவார்கள், உண்மை = இது நிச்சயம், புவியீரே = உலகத்திலுள்ள மனி தர்களே! என்றது. 67

உண்மைகுர வோர்துதி யுரைக்குமழி சைக்குள்
தண்மையுட னேநிலவு சால்புசக நாதன்
கண்மையக லத்துதிசெய் காமமுறு நெஞ்சே
வண்மையுறு வான்பதவி மன்னதரு(ம்) மாதோ.

**இதன் பொருள்:**

உண்மை = சத்திய நிலையுள்ள, குரவோர் = பெரியோர்கள், துதி = தோத்திரம், உரைக்கும் = சொல்லும், மழிசைக்குள் = திருமழிசை க்ஷேத்திரத்திற்குள், தண்மையுடனே = சாந்த குணத்துடனே, நிலவு = பிரகாசித்திருக்கின்ற, சால்பு = மேன்மையுடைய, சகநாதன் = ஜகந்நாதப் பெருமாளின், கண் = இடத்தில், மை = களங்கம், அகல = நீங்க, துதிசெய் = தோத்திரஞ் செய்வாய், காமம் = ஆசை, உறும் = பொருந்திய, நெஞ்சே = மனமே, வண்மை = கீர்த்தி, உறும் = பொருந்திய, வான் = உயர்வுள்ள, பதவி = வைகுந்த பதத்தை, மன்ன = நிலைபெற்றிருக்க, தரும் = கொடுக்கும், மாது; ஓ: அசைச் சொற்கள்; என்றது. 77

மாதவி வருக்கைநனி வான்கமுக ரம்பைச்
சூதமிகு சோலைபுடை சூழுமல நாதன்
பாதமல ருன்னுவர்கள் பாசவலை நீத்தே
ஏதமிலெம் மாநகரி லெய்திமகிழ் வாரே.

**இதன் பொருள் :**

மாதவி = குருக்கத்தி, வருக்கை = பலா, நனி = மிகுந்த, வான் = பெருமை பொருந்திய, கமுகு = பாக்குமரம், அரம்பை = வாழை, சூதம் = மாமரம், மிகு = மிகுந்த, சோலை = பூஞ்சோலைகள், புடை = நான்கு பக்கங்களிலும், சூழ் = சூழ்ந்திரா நின்ற, மழிசை = திருமழிசை க்ஷேத்திரத்துற்ற, நாதன் = ஜெகநாதப் பெருமாளினது, பாதம் = பாதங்கள், மலர் = தாமரை மலர் போன்றவற்றை, உன்னுவர்கள் = தியானிப்பவர்கள், பாசம் = ஆசையாகிய, வலை = வலையை, நீத்தே = களைந்து நிவர்த்திசெய்தே, ஏதம் = குற்றம், இல் = இல்லாத, எம்மான் = எமது நாயகனாகிய ஸ்வாமியின், நகரில் = வைகுந்த நகரில், எய்தி = அடைந்து, மகிழ்வாரே = மகிழ்ச்சி பெறுவார்கள், என்றது; ஏ—ஈற்றசை. 78

வாரிநிக ராகுசமு சாரவரி மாற்றப்
பாரின்மரு வும்மழிசை பஞ்சபடை மாயன்
வாரிசமு றழ்ப்பதம் மரக்கலமு துய்ய
சீரிதனை யுன்னுவைநின் செனனவிடர் தீர.

இதன் பொருள் :

வாரி = சமுத்திரத்துக்கு, நிகராகும் = சம்மாகும், சமு சாரம் = சமுசாரவாழ்க்கையாகிய, வாரி = கடலை, மாற்ற = நீக்குதற்கு, பாரில் = இந்த உலகத்தில், மருவும் = இருக்கின்ற, மழிசை = திருமழிசை க்ஷேத்திரத்துள் விளங்கிய, பஞ்சபடை = ஐந்து ஆயுதங்களை உடைய, மாயன் = மாயைகளை உண் டாக்கும் கர்த்தன், வாரிசம் = தாமரை மலரை, உறழ் = சமான முள்ள, பதம் = திருவடி, மரக்கலம் = மரக்கலமாகும், உய்ய = உயிர் வாழ்தற்கு, சீர் = சிறப்பு, இதனை = இவைகளை, உன் னுவை = யோசனை செய்(யுங்கள்) [வாய்], உன் = உம்முடைய, செனன இடர் = பிறந்து அடையும் துன்பம், தீர = நீங்கும் பொருட்டு, என்றது. 79

தீரவுவ ணன்முதுகில் சென்றிமைய ரோதம்
தீரவருள் செய்ததுறழ் சேயனிடர் நீத்தாள்
வாரமிசை வெண்டரளம் வைகிநில வைச்செய்
வாரமழி சைத்தலம் வயங்கமல தேவே.

இதன் பொருள் :

தீரம் = தைரியத்தையுடைய, உவணன் = கருடாழ்வான், முதுகில் = முதுகின்பேரில், சென்று = ஆரோகணித்துப் போய், இமையர் = இமையோராகிய தேவர்கள், ஏதம் = இரா க்ஷதரால் படும் வருத்தம், தீர = நீங்கும்படி, அருள்செய்தது = கிருபை செய்தது, உறழ் = ஒப்பாக், சேயன் = இச்சிறுவன், இடர் = பிறவித் துன்பத்தை, நீத்து = நிவர்த்தி செய்து, ஆள் = அடிமைகொள்வாய், வாரம் = நீர்க்கரையின், மிசை = மேல், வெண் = வெண்மைநிறமுள்ள, தரளம் = முத்துக்கள், வைகி = ஒதுங்கியிருந்து, நிலவைச்செய் = நிலவின் பிரகாசங் களைச் செய்யும், வார் = நீட்சியும், அம் = அழகையுமுடைய, மழிசை = திருமழிசை, தலம் = இடத்தில், வயங்கு = விளங்கி யிராநின்ற, அமலம் = அழகுபொருந்திய, தேவே = கடவுளே! என்றது. 80

### வேறு

தேமலர்ச் செறிவனத் திருமழி சைக்கண்வாழ்
பூமின்மா மின்றினம் போற்றவை கும்பரன்
நாமமா யிரநனி நாவினு லோதுவோர்
ஏமனம் புயனெழிற் கரமுறு ரிதயமே.

**இதன் பொருள் :**

தேம்=மதுரமுள்ள—தேனிறைந்த, மலர் = புட்பங்கள், செறி=மிகுந்த, வனம் = நந்தவனங்கள் சூழப்பட்ட, திருமழிசை=திருமழிசை நகரத்தின், கண்=இடத்தில், வாழ்=வாழும்படியானவன், பூமின்=பூமிப் பிராட்டியாரும், மா மின் = மகாலட்சுமி பிராட்டியாரும், தினம் = தினந்தோறும், போற்ற = தோத்திரஞ்செய்ய, வைகும் = வீற்றிருக்கின்ற, பரன் = கத்தன், நாமம்=உமது திருநாமங்கள், ஆயிரம்=ஆயிரத்தையும், நனி = மிகுதியாக, நாவினல் = தங்கள் நாவினுலே, ஓதுவோர் =தோத்திரஞ் செய்வோர், ஏமன் =எமதருமராஜன், அம்புயன் = அம்புயமாகிய தாமரை மலரிலுதித்த பிரமதேவன் இருவரின், எழில் = அழகையுடைய, கரம் = கையினிடத்து, உறூர்=அடையார், இதயமே=மனமே. என்றது. 81

இதழியார் சடிலனே ரிபமுக னயில்கரன்
கதழெரிக் கௌரிவா ணன்கைமா மழிசைமன்
கதிருறழ்த் திகிரியோச் சிக்கடிந் திடுமன்னுள்
எதிருறு திரிந்தன ரையமேன் மனிதரே.

**இதன் பொருள் :**

இதழி=கொன்றைமலர் மாலை, ஆர்=பொருந்திய, சடிலன்=சடாபாரத்தையுடைய பரமசிவன், ஏர்=அழகுடைய, இபமுகன்=யானை முகத்தையுடைய விநாயகன், அயில்=வேலாயுதத்தை, கரன் =கையிலே பிடித்த சுப்பிரமணியன், கதழ்வு=மிகுந்த, எரி=அக்கினி தேவன், கௌரி=பார்வதி தேவியம்மன், வாணன்=வாணசுரனுடைய, கை =ஆயிரம் கைகளின் பேரிலும், மா = இலட்சுமி வாசம் பொருந்திய, மழிசை=திருமழிசை நகரத்து, மன் =நிலைபெற்ற ஜெகநாதப் பெருமான், கதிர்=சூரியகிரணங்களை, உறழ்=சமானமுள்ள, திகிரி=சக்கராயுதம், ஓச்சி=பிரயோகஞ்செய்து, கடிந்திடும்=சங்கரித்திடும், அ நாள் = அந்த நாளில், எதிர் = நேரில்,

உருது = நிற்காமல், இரிந்தனர் = ஓடிப்போனார்கள், ஐயமேன் = சந்தேகம் என்னத்துக்கு, மனிதரே = உலகின் கணுள்ள மனிதர்களே ! என்றது. 82

மனமுனை யுவக்கவாய் வாழ்த்தவுஞ் சேகரம்
தினமடி வணங்கநின் சீர்செவி கேட்கவும்
கனவரந் தந்திட கலுழன்மேற் றோன்றுவாய்
கனமுறுந் திருமழி சைச்சக நாதனே.

இதன் பொருள் :

மனம் = என்னுடைய மனமானது, உனை = உம்மை [நினைத்து], உவக்க = சந்தோஷிக்க, வாய் = வாயானது, வாழ்த்த = தோத்திரஞ்செய்ய, சேகரம் = சிரசு, தினம் = நாள்தோறும், அடி = பாதங்களை, வணங்க = சேவிக்க, நின் = உம்முடைய, சீர் = சிறப்பை, செவி = காதானது, கேட்கவும் = கேட்கவும், கனம் = கனத்த [பெரிய], வரம் = வரத்தை, தந்திட = கொடுத்திட, கலுழன்மேல் = கருடாழ்வான் பேரில் வந்து, தோன்றுவாய் = சேவை சாதிப்பாய், தனமுறும் = திரவிய மிகுந்திருக்கின்ற, திருமழிசை = திருமழிசை நகரத்துற்ற, சகநாதனே = ஜெகநாதனென்னும் பெயரை யுடையவனே ! என்றது. 83

நாதவா னவர்தொழும் நளிர்கொள்பங் கேருகப்
பாதமெப் போழ்துமே பக்தியாய்ப் பணிவையேல்
வாதைநீத் தருள்புரி மழிசைமால் நெஞ்சமே
வாதம்வீ சிறகுவை னன்வெங்வந் தருள்வனே.

இதன் பொருள் :

நாத = சர்வத்துக்கும் நாயகனானவனே! வானவர் = தேவர்கள் வந்து, தொழும் = சேவிக்கும், நளிர்கொள் = குளிர்ச்சி கொண்ட, பங்கேருகம் = தாமரை மலர்போன்ற, பாதம் = பாதங்களை, எப்போழ்தும் = சதாகாலமும், பக்தியாய் = அன்புடனே, பணிவையேல் = வணங்குவையாகில், வாதை = துன்பங்கள், நீத்து = நீங்கச்செய்து, அருள்புரி = கிருபைசெய்யும், மழிசை = திருமழிசை க்ஷேத்திரத்து, மால் = மகாவிஷ்ணுவானவர், நெஞ்சமே = மனமே, வாதம் = காற்றுக்களை, வீசும் =

வீசுகின்ற, இறகு = சிறகினையுடைய, வைனன் = கருடாழ்வான், வெந் = முதுகின்பேரில், வந்து = வந்து, அருள்வனே = கிருபை செய்வன், என்றது: ஏ—ஈற்றசை. 84

வன்னிசோ லைகடொறு மறைபயின் மழிசைவாழ்
மின்னுயர் வாடக மென்கலை மேழகந்
தென்னுலா மகரகுண் டலமுறைச் செவிமரைப்
பொன்னுறைச் செப்பவென் புரையொழித் தருள்வையே.

இதன் பொருள்:

வன்னி = கிளிப்பிள்ளைகள், சோலைகள் தோறும் = பூஞ்சோலைகள் தோறும், மறை = வேதங்களை, பயில் = சொல்லும் வளமையுள்ள, மழிசை = திருமழிசை நகரத்தில், வாழ் = வாழ்ந்திருக்கின்றவனே! மின் = மின்னற் பிரகாசம், உயர் = உயர்ந்த, ஆடகம் = பொன்னாகிய, மென்கலை = மிருதுவான வஸ்திரம், மேழகம் = க்வசம், தென்னுலா = அழகு பொருந்திய, மகர குண்டலம் = மகர குண்டலங்கள், உறை = இருக்கின்றன, செவி = காது, மரை = தாமரை மலரிலுதித்த, பொன் = மகாலட்சுமி, உறை = இருக்கின்ற, செப்பம் = மார்பையுடையவனே! என் = என்னுடைய, புரை = குற்றங்களை, ஒழித்து = நீக்கி, அருள்வையே = கிருபை செய்வாய், என்றது: ஏ—ஈற்றசை. 85

வையகம் புகழறம் மருவுமெண் ணான்குமே
ஐயமில் லாமலே யன்புடன் செய்தொளிர்
மெய்யர்வாழ் மாளிகை வீதிமா மழிசையில்
ஐயனே பிறவியா மரலைநீத் தருள்வையே.

இதன் பொருள்:

வையகம் = உலகத்தோர், புகழ் = புகழும்படியான, அறம் = தருமங்கள், மருவு = பொருந்திய, எண்ணான்குமே = முப்பத்திரண்டுமே, ஐயம் = சந்தேகம், இல்லாமலே = இல்லாதபடிக்கு, அன்புடன் = ஆசையுடன், செய்து = குறைவின்றிச் செய்து, ஒளிர் = பிரகாசிக்கின்ற, மெய்யர் = பிராமணர்கள், வாழ் = வாழ்கின்ற, மாளிகை = வீடுகள், வீதி = தெருக்கள், மா = அழகு பொருந்திய, மழிசை = திருமழிசை நகரத்து, ஐயனே =

ஜெகநாதஸ்வாமியே! பிறவி = அடியேனுடைய சனனமாகிய, அரலை = சமுத்திரத்தை, நீத்து = நீக்கி, அருள்வையே = கிருபை செய்வாய், என்றது. 86

அரியசெந் நெற்குலை யம்பணத் தாறென
உரியநல் லெழிலுறு முயர்வள மழிசைவாழ்
அரிதநேர் மேனியாய் அறுபதம் பண்டரும்
பரிமளத் துளவணி பாலிப்பா யெந்தையே.

இதன் பொருள்:

அரிய = சொல்லுதற்கு அரிதாகிய, செந்நெற்குலை = செந்நெல் கதிர்கள், அம்பணம் = வாழையின், தாறென = குலைகளென்று சொல்லும்படி, உரிய = உரித்தாகிய, நல் = நல்ல, எழிலுறும் = அழகு பொருந்தும், உயர் = உயர்ந்த, வளம் = செழுமையுள்ள, மழிசைவாழ் = திருமழிசை நகரத்தில் வாழ்கின்ற, அரிதம் = மரகதம், நேர் = சமானமுள்ள, மேனியாய் = நிறத்தையுடையவனே! அறுபதம் = ஆறு கால்களுள்ள வண்டுகள், பண் = இசைகளை, தரும் = ரீங்காரஞ் செய்கின்ற, பரிமளம் = வாசனை பொருந்திய, துளவு = திருத்துழாய், அணி = மாலையை, பாலிப்பாய் = கொடுத்தருள்வாய், எந்தையே = என் தந்தையானவனே! என்றது. 87

எந்தையா யன்னையா யீசனாய் மாசில்வை
குந்தம்வாழ் மாயனாய் குருவுமா யாரணத்
தந்தமா யாதியா யகடுமா னவவருட்
சந்தன டவிமழி சைச்சக நாதனே.

இதன் பொருள்:

எந்தையாய் = என் தந்தையாகவும், அன்னையாய் = தாயாகவும், ஈசனாய் = சர்வேசனாகவும், மாசில் = குற்றமில்லாத, வைகுந்தம் வாழ் மாயனாய் = பரமபதத்தில் வாழ்ந்திருக்கும் மகா விஷ்ணுவாய், குருவுமாய் = ஆசாரியனாகவும், ஆரணத்து = வேதத்தின், அந்தமாய் = முடிவாய், ஆதியாய் = முதலாய், அகடுமானவ = மத்தியுமானவனே! அருள் = அடியேனுக்குக் கிருபை செய்வாய், சந்தனம் = சந்தன மரங்கள் நிறைந்த, அடவி = சோலைகள் சூழ்ந்த, மழிசை = திருமழிசை நகரத்தில் வசிக்கும், சகநாதனே = ஜெகநாதப் பெருமானே! என்றது.
88

தையலர் வார்தனச் சார்புகொண் டலையகத்
தொய்யல்தீர்த் துன்பதத் தோடகந் தந்தருள்
செய்யிலுன் னந்துயி றிருமழி சைக்கணார்
ஐயவைம் படைகரத் தத்தமா கதியனே.

**இதன் பொருள் :**

தையலர்=ஸ்திரீகளுடைய, வார்=கச்சணிந்த, தனம்= தனபாரத்தையுடைய, சார்பு=ஆசைப்பெருக்கம், கொண்டு= மனத்தில் கொண்டு, அலை=அலையும்படியான, அகம்=அகத் தில், தொய்யல்=துன்பம், தீர்த்து=நிவர்த்திசெய்து, உன்= உம்முடைய, பதம்=பாதமாகிய, தோடகம்=தாமரை மலர், தந்து=கொடுத்து, அருள்=கிருபை செய்வாய், செய்யில்= கழனியினிடத்தில், உன்னம்=அன்னங்கள், துயில்=நித்திரை செய்கின்ற, திருமழிசைக்கண் ஆர்=திருமழிசை சேத்திரத் தின்கண் பொருந்தி வசிக்கும், ஐய=ஐயனே! ஐம்படை= சங்கு-சக்கரம்-சார்ங்கம்-தண்டு-வாள்—என்னும் ஐந்து ஆயு தங்கள், கரத்து=கையினிடத்து[கொண்ட], அத்ததலைவனே! மாகதியனே=பெருமை பொருந்திய பரம பதத்தையுடை யவனே !என்றது.

89

கதமுடித் திகழ்புவிக் கணிலியற் குலவியெங்
குதலையா மிழிசொலைக் கொண்டருட் கோமளப்
பதுமைநா யகவரன் பழமறை முழுதுணர்
சதுமுகன் றொழுமழி சைத்திகழ்க் கடவுளே.

**இதன் பொருள் :**

கதம்=பாம்பாகிய ஆதிசேடன், முடி=ஆயிரஞ்சிரசின் பேரில், திகழ்=பிரகாசித்திருக்கின்ற, புவி=பூமியின், கண்= இடத்தில், இயல்=அழகு, குலவி=பொருந்தி, எம்=எமது, குதலையாம் இழிசொலை=தெரிந்தும் தெரியாமலும் வசனிக்கும் குற்றமுற்ற சொல்லையும், கொண்டு = நற்சொல்லென்றே மனதிற் கொண்டு, அருள்=இச்சிறுவனுக்குக் கிருபை செய்ய வேணும். கோமளம்=அழகுபொருந்திய, பதுமை=தாமரை மலரிலுதித்த மகாலட்சுமியின், நாயக=நாயகனே! அரன்= சிவபெருமான், பழமறை=பழமையாகிய வேதங்கள், முழுதும் =எல்லாம், உணர்=அறிந்த, சதுமுகன்=நான்கு முகத்தை யுடைய பிரமதேவன், தொழும்=வணங்கும், மழிசை=திரு

மழிசை க்ஷேத்திரத்தில், திகழ் = விளக்கமாக வதியும், கடவுளே = தேவராஜனே! என்றது. 90

வேறு

கடிகொண் மச்சவ தார போற்றிசெங்
 கமல நேத்திர போற்றி வான்மணிச்
சுடிகை தானவத் தலைவ னுக்கருள்
 சோதி வித்துரு மத்தை யேய்சிறைக்
குடிஞை மீதிவர்ந் தமரர் முன்னணி
 குறைக ணீத்தருட் குரிசில் போற்றிமாற்
படிவ னேமழி சைத்த லத்துறும்
 பண்ண வாமலர்க் கண்ண போற்றியே.

இதன் பொருள் :

கடிகொள் = பிரகாசங் கொண்ட, மச்சவதார = மச்ச உருவமாக அவதரித்தவனே! போற்றி = உம்மை வணங்குகின்றேன், வான் = பெருமை தங்கிய, மணி = நவரத்தினங்கள் பதித்த, சுடிகை = கிரீடத்தை, தானவர் = இராக்ஷதர், தலைவனுக்கு = விபீஷணாழ்வானுக்கு, அருள் = கொடுத்த, சோதி = பிரகாசமுள்ள ஸ்ரீராமஸ்வாமியே! வித்துருமத்தை = பவளத்தை, ஏய் = சமானமுள்ள, சிறை = இறகுகள் பொருந்திய, குடிஞை = பட்சியாகிய கருடாழ்வான் பேரில், இவர்ந்து = ஏறி, அமரர் = தேவர்கள், முனம் = முன்னே, நண்ணி = வந்து, குறைகள் = அவர்கள் மனவருத்தங்களை, நீத்து = நிவர்த்தி செய்து, அருள் = கிருபைசெய்யும், குரிசில் = பெருமையில் சிறந்தவனே! போற்றி = உம்மைத் தோத்திரஞ் செய்கின்றேன்; மால் = நீர் கொண்ட மேகம்போன்ற, படிவனே = வடிவத்தையுடையவனே! மழிசை = திருமழிசை, தலத்துறும் = க்ஷேத்திரத்தில் வாசஞ் செய்யும், பண்ணவா = இசை ஆசையுடன் பாடப்பட்ட, மலர் = தாமரை மலர் போன்ற, கண்ண = கிருஷ்ணனாக அவதரித்தவனே! போற்றி = உம்மை வணங்குகின்றேன், என்பது: ஏ — ஈற்றசை. 91

கண்டி கைப்புனை செப்பனே கொடுங்
 கஞ்ச னைக்கொலுங் கடவுள் போற்றிவால்
தெண்டி ரைச்சல திக்கண் மந்திரஞ்
 செவ்வி யார்வெரி நேந்து மம்பணத்
தண்ணல் போற்றியா வினம ளித்திடு
 மத்த போற்றிவெண் ணத்த நான்கிரு
கண்ண னைத்தருங் கஞ்ச நாபனே
 கவினு லாமழி சதிப போற்றியே.

**இதன் பொருள்:**

கண்டிகை = பதக்கங்கள், புனை = தரித்திருக்கின்ற, செப்பனே = மார்பையுடையவனே! கொடும் = கொடூர மனமுள்ள, கஞ்சனை = கஞ்சனென்னும் பெயருள்ள அசுரனை, கொலும் = சம்மாரஞ் செய்த, கடவுள் = கடவுளே! போற்றி = உம்மைத் துதி செய்கின்றேன், வால் = வெண்மை நிறமுடைய, தெண்டிரை = தெள்ளிய அலைகள் பொருந்திய, சலதி = பால் சமுத்திரத்தின், கண் = இடத்தில், மந்திரம் = மந்திர மலையானது மூழ்காமல், செவ்வி = அழகு பொருந்திய, ஆர் = நிறைவாக, வெரிந் = முதுகின் பேரில், ஏந்தும் = தாங்கிக் கொண்ட, அம்பணம் = ஆமை வடிவந் தாங்கிய, அண்ணல் = பெருமையுடையவனே! போற்றி = உம்மை வணங்குகிறேன், ஆவினம் = பசுக் கூட்டங்களை, அளித்திடு = இரட்சித்திடும், அத்த போற்றி = என் தந்தையானவனே! உம்மைத் தோத்திரஞ் செய்கின்றேன், வெண் = வெண்மையுள்ள, நத்தம் = பாஞ்சசன்னியம் கைத்தலத்திற் கொண்டவனே! நான்கு இரு = எட்டு, கண்ணனை = கண்களுள்ள பிரமதேவனை, தரும் = பெற்ற, கஞ்சநாபனே = தாமரை மலர் உண்டாகிய உந்தியை யுடையவனே! கவின் உலா = அழகு பொருந்திய, மழிசை = திருமழிசை நகரில் வதியும், அதிப = அதிபனானவனே! என்றது.

92

போற்றும் ஞானவ ராக ரூபனே
 பொற்பு வாமன போற்றி யாழியை
ஏற்ற மார்கரத் துற்ற மெய்யனே
 இணையி லாவிமை யவரை யாண்டிடும்

ஆற்றல் சேர்விசயன் சயந்தன் வச்சுவம்
விட்ட சாரதிவி தப்பினில்
தோற்ற:னீக்கியென் றனைய ருட்டிரு
சூழு மாமழி சைத்துன் னையனே.

**இதன் பொருள் :**

போற்றும்=யாவரும் துதி செய்கின்ற, ஞானம்=ஞானம் பொருந்திய, வாரக ரூபனே = சுவேதவராக ரூபமெடுத்தவனே! பொற்பு=அழகுடைய, வாமன=வாமனமானவனே! போற்றி=தோத்திரஞ் செய்கின்றேன், ஆழியை=திருவாழியாழ்வானை, ஏற்றம்=மேன்மை, ஆர்=பொருந்திய, கரத்து= கையினிடத்து, உற்ற = பிடித்திராநின்ற, மெய்யனே = உண்மையானவனே! இணையிலா = நிகரில்லாத, இமையவரை = தேவர்களை, ஆண்டிடும் = ஆண்டு கொள்ளும் பகவனே! ஆற்றல் சேர் = புஜபல பராக்கிரமம் பொருந்திய, விசயன் = அருச்சுனன், சயந்தனம் = இரதத்தில் பூட்டிய, அச்வம்=குதிரைகளை, விட்ட=நடக்கும்படி தூண்டிவிட்ட, சாரதி = பாகனே! விதப்பினில் = சீக்கிரத்தினில், தோற்றல் = ஜனனம், நீக்கி=நீங்கச் செய்து, என்றனை= என்னை, அருள் = கிருபை செய்து இரட்சிப்பாய், திரு = மகாலட்சுமி, சூழும்=சூழ்ந்திருக்கின்ற, மா=பெருமையுள்ள, மழிசை=திருமழிசை க்ஷேத்திரத்தில், துன்னும்=பொருந்திவாசஞ் செய்யும், ஐயனே=கத்தனே! என்றது. 93

துன்ன ரம்பைமேல் தோமில் குயிலினந்
துஞ்சு தூய்மழி சைக்குள் சோதிசெய்
பின்னை கொண்கனே போற்றி பீடுறும்
பீத காம்பர நடுபு னைந்தவ
மன்ன வன்வசு தேவன் மைந்தனே
வளைதொ னிந்தசெவ் வாய போற்றிபொற்
பன்ன காரிமே லிவர லோடிவர்
பரம மூர்த்தியெம் பெரும போற்றியே.

**இதன் பொருள் :**

துன்னு = நெருங்கிய, அரம்பை மேல் = வாழையின் பேரில், தோமில்=குற்றமில்லாத, குயில்=மேகத்தின், இனம்

=கூட்டம், துஞ்சு=நித்திரை செய்கின்ற, தூய்=பரிசுத்த முள்ள, மழிசைக்குள்=திருமழிசை க்ஷேத்திரத்துக்குள் வதியும், சோதி செய்=பிரகாசத்தைச் செய்கின்ற, பின்னை=மகாலட்சுமியின், கொண்கனே=நாயகனே! போற்றி=வணங்குகின்றேன், பீடு=பெருமை, உறும்=பொருந்திய, பீதகாம்பரம்=பொன் வஸ்திரம், நடு=இடையில், புனைந்த=தரித்தவனே! மன்னவன் = அரசனாகிய, வசுதேவன் = வசுதேவனது, மைந்தனே = புத்திர சிகாமணியே! வளை = பாஞ்சசன்னியத்தை, தொனித்த=சத்தந்தர ஊதிய, செவ்வாய் = சிவந்த வாயினையுடையனே! போற்றி=துதி செய்கின்றேன், பொன்=அழகிய, பன்னக அரி = கருடாழ்வான், மேல்=மேலே, இவரலோடு = ஆசையுடனே, இவர்=ஏறி நடத்தும், பரமமூர்த்தி=பரமமூர்த்தியாகிய, எம்பெரும=எமது பெருமானே! போற்றி = உம்மைப் புகழ்கின்றேன், என்றது; ஏ — ஈற்றசை. 94

பெருவ ரைப்புரைக் கரிம ருப்பொசிப்
 பெட்ப போற்றிவிண் ணுலகி யங்குமைந்
தருபு விக்கொடு நட்ட வொண்பரந்
 தாம போற்றிமுன் சரப ரூபமாய்
வருமர ன்றனைப் பிளவி யற்றுமா
 மாய வாணகச் சீய போற்றியான்
கருபு காதருட் காம ரார்திரு
 மழிசை வாழ்மணிக் கனக நாதனே.

**இதன் பொருள்:**

பெருவரை=பெரிதாகிய மலையை, புரை=சமானமுள்ள, கரி = குவலயாபீடமென்னும் யானையின், மருப்பு = கொம்பை, ஒசித்த = ஒடித்த, பெட்ப = ஆசையுடையவனே! போற்றி=உம்மை வணங்குகின்றேன், விண்ணுலகு =தேவலோகம், இயங்கும் = விளங்கியிருந்த, ஐந்தரு=பஞ்சதருக்களுள்ள காவிலிருந்த பாரிசாத விருட்சத்தை, புவி= பூலோகத்தில், கொடு=கொண்டு வந்து, நட்ட=நட்டிடும், ஒண்=அழகிய, பரந்தாம=பரந்தாமனே! போற்றி=துதி செய்கின்றேன், முன் = முன்னே, சரப ரூபமாய் = சரபப் பட்சி வடிவமாய், வரும்=வந்த, அரன்றனை=சிவபெருமானை,

பிளவு=இருபிளவாக, இயற்றிய=செய்த, மா=பெரிய, மா=மாயங்கள் செய்பவனே! வாள்=ஒளி பொருந்திய, நகம்=நகத்தையுடைய, சீய = நரசிங்கமானவனே! போற்றி = உம்மைப் புகழ்கின்றேன், யான்=நான், கரு=கருக் குழியில், புகாது = புகுந்து வருந்தாமல், அருள்=கிருபை செய்வாய், காமர் = அழகு, ஆர் = நிறைந்த, திருமழிசை = திருமழிசை நகரத்தில், வாழ் = வாழ்கின்ற, மணி=அழகிய, கனகம்=பொன்னாகிய, நாகனே=வஸ்திர முடையவனே! என்றது. 95

நாக மீதுகஞ் சிகையை வைத்தரு
  ளாத போற்றிமை திலியை நோக்குவெங்
காக சூரனோர் கண்ண கைக்கவே
  காது சாயகக் கருணை யம்புதி
மாக மேவுமா ளிகையு றுந்திரு
  மழிசை நாரண வாதி போற்றிவான்
மீக ருக்குப தேச தேசிக
  வேள்ச ரோருகன் றாதை போற்றியே.

**இதன் பொருள் :**

நாகம்=புன்னாக மரத்தின், மீது=மேலே, கஞ்சிகையை=யாதவ ஸ்திரீகளின் சேலையை, வைத்து=பொருத்தி, அருள்=கொடுத்த, நாத = நாயகனே! போற்றி = உம்மைத் தோத்திரஞ் செய்கின்றேன், மைதிலியை = சீதா பிராட்டியை, நோக்கு=நோக்கிய, வெங் காக சூரன் =கடூரமான காகரூப முள்ள—அசுரன், ஓர்கண்=ஒரு நேத்திரம், அகைக்கவே=நீக்கவே, காது = கொல்லும்படியான, சாயகம் = அம்பை யுடைய, கருணை=கிருபை, அம்புதி=கடலே, மாகம்=ஆகாயத்தை, மேவும் = அளாவிய, மாளிகை=வீடுகள், உறும் = பொருந்திய, திருமழிசை=திருமழிசை நகரத்துற்ற, நாரண=நாராயணனே! ஆதி = முதல்வனே! போற்றி = உம்மை வணங்குகின்றேன், வான்மீகருக்கு = வான்மீகனென்று பெயருள்ள முனிவனுக்கு, உபதேச = உபதேசஞ் செய்த, தேசிக = ஆசாரியனாக வந்தவனே! வேள் = மன்மதன், சரோருகன்=தாமரை மலரிலுதித்த பிரமதேவன், தாதை=தந்தையானவனே, போற்றி=உம்மைத் தோத்திரஞ் செய்கின்றேன், என்றது; ஏ=ஈற்றசை. 96

தாதி வர்ந்தபூஞ் சோலை சூழ்மழி
 சைக்க ணார்சக நாத போற்றிவிண்
ணாதி பூதமா யுலவு மாதவ
 ஆர ணங்களி னந்த போற்றிமை
யோதி தேவகி தந்த மைந்தனே
 யொண்மை யோருளத் தமரும் ஊக்கனே
கோதில் பத்திசா ரற்க ருட்புரி
 கொண்மு நாயினேன் காதல் தீர்ப்பையே.

இதன் பொருள் :

தாது = பூந்தாதுகள், இவர்ந்த = பொருந்திய, பூஞ்சோலை = புஷ்பவனம், சூழ் = சூழ்ந்த, மழிசைகண் = திருமழிசை நகரத்தின் கண், ஆர் = பொருந்தியிருக்கின்ற, சகநாத = ஜெகநாதப் பெருமானே! போற்றி = போற்றி செய்கின்றேன், விண் = ஆகாயம், ஆதி = முதலான, பூதமாய் = பஞ்ச பூதமாக, உலவும் = பொருந்திய, மாதவ = மாதவனென்னும் திருநாமமுடையவனே! ஆரணங்களின் = இருக்கு-யசுர்-சாமம்-அதர்வணம் என்னும் நான்கு வேதங்களின், அந்தம் = முடிவிலிருப்பவனே! போற்றி = உம்மை வணங்குகின்றேன், மை = நீர்கொண்ட மேகம்போல கறுத்த, ஓதி = அளகபாரத்தையுடைய, தேவகி = வசுதேவன்மனைவி, தந்த = பெற்ற, மைந்தனே = புத்திர சிகாமணியே! ஒண்மையோர் = அறிவுடைய அன்பர், உளத்து = மனத்தின் கண், அமரும் = அமர்ந்து வாசஞ் செய்யும், ஊக்கனே = உள்ளக் கிளர்ச்சியுடையவனே! கோது = குற்றம், இல் = இல்லாத, பத்திசாரற்கு = திருமழிசையாழ்வாருக்கு, அருள் = கிருபை, புரி = செய்ய, கொண்மூ = மேகம்போன்ற கத்தனே! நாயினேன் = நாய்போன்ற என்னுடைய, காதல் = உலக வாசையை, தீர்ப்பையே = தீர்த்து இரட்சிப்பாய், என்றது; ஏ—ஈற்றசை. 97

காத லைப்புவி யாள முன்னலிற்
 கருதி வேட்டிலன் ககன நாட்டையாள்
நாத னென்னவாழ் வீற வெண்ணிலன்
 நான்மு கன்றிரு நகரும் வேட்டிலன்

பூத நாதன்வெற் பகமும் வேட்டிலன்
 பொற்பு லாவுநின் பாதம் வேட்டனன்
வேத மோதைசேர் மழிசை மேவிய
 விமல வன்பர்நெஞ் சாரு மையனே.

**இதன் பொருள் :**

காது=மோதப்பட்ட, அலை = அலைகளையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த, புவி=உலகத்தை, ஆள = ஒரு குடைநிழலிலரசு செய்ய, முன்னலில் = மனத்தில், கருதி = நினைத்து, வேட்டிலன் = விரும்ப இல்லை, ககனம் = ஆகாயத்திலுள்ள சுவர்க்கலோகத்தை, ஆள்=ஆளப்பட்ட, நாதன்=தேவேந்திரன், என்ன = என்று சொல்லும்படி, வாழ் = வாழ்வு, வீற = பெருமை அடைய, எண்ணிலன் = நினைக்க இல்லை, நான்முகன்=நான்கு முகத்தையுடைய பிரமதேவன், திரு= அழகிய, நகரும்=நகரத்தையும், வேட்டிலன்=வாசஞ்செய்ய ஆசைகொள்ள இல்லை, பூதநாதன்=பூதகணங்களுக்கு எல்லாம் நாயகனுகிய-பரமசிவன் வாழும், வெற்பு=கைலையங்கரி, அகமும் = இடமும், வேட்டிலன் = வாழ்க்கைக்கு இச்சை கொள்ள இல்லை, பொற்பு=அழகு, உலாவு=பொருந்திய, நின் = உம்முடைய, பாதம் = திருவடியை, வேட்டனன்= வணங்குதற்கு ஆசைகொண்டனன், வேதம் = பிராமணர் வேதாத்தியயனஞ் செய்யும், ஓதம்=சத்தம், சேர்=சேர்ந்த, மழிசை=திருமழிசை நகரத்தில், மேவிய=வாசஞ் செய்கின்ற, விமல=கர்த்தனே ! அன்பர் = பாகவதர், நெஞ்சு=மனத்தின்கண், ஆரும் = பொருந்தி வசிக்கின்ற, ஐயனே = பகவனே ! என்றது. 98

ஆர ணத்தினுக் கறியொ ணுமலர்
 அடிய வைம்படைக் கைய வச்சிரன்
நார ணத்தின மேத்து தற்பரா
 நந்து றைப்பணை மழிசை நண்ணியப்
பூர ணக்கல சக்கு யத்திருப்
 பூம கள்வதி மார்ப போற்றிவால்
வார ணத்தன்மா வங்க வெற்பனும்
 வாழ்த்து மாதவ தேவ போற்றியே.

**இதன் பொருள் :**

ஆரணத்தினுக்கு = வேதங்களுக்கும், அறியொணு = அறிய ஒண்ணுத—அறியக் கூடாத, மலர் = தாமரை மலர் போன்ற, அடிய=திருவடியை யுடையவனே! ஐம்படை= பாஞ்ச சன்னியம்—திருவாழி—சார்ங்கம்—கதை—வாள் என்னும், ஐந்து=ஐந்து ஆயுதங்கள் தாங்கிய, கைய=கையை யுடையவனே! வச்சிரன்=வச்சிராயுதத்தையுடைய தேவேந்திரன், நார்=அன்பு, அண்ண=பொருந்த, தினம் = நாள் தோறும், ஏத்தும் = தோத்திரம் செய்யும், தற்பரா = கடவுளே! நந்து = சங்குகள், உறை = தவழ்கின்ற, பணை = கழனிகள் சூழ்ந்த, மழிசை=திருமழிசை நகரத்தில், நண்ணிய =வாசஞ் செய்கின்றவனே! பூரணம்=நிறைவாகிய, கலசம்= குடம்போன்ற, குயம் = தனபாரமுடைய, திரு = அழகிய, பூமகள் = தாமரைப் புஷ்பத்தில் பிறந்த—மகாலட்சுமியானவள், வதி = வாசஞ்செய்யும், மார்ப=மார்பையுடையவனே! போற்றி = உம்மைப் புகழ்கின்றேன், வால் = வெள்ளை நிறமுள்ள, வாணரத்தன் = அயிராவதமுடைய தேவேந்திரன், மா=பெருமை பொருந்திய, வங்கம் = வெள்ளியாகிய, வெற்பனும்=பர்வதத்திலிருக்கும்—சிவபெருமானும், வாழ்த்தும்= தோத்திரஞ் செய்யும், மாதவ = மாதவனென்னுந் திருநாமமுடையவனே! தேவ=தேவனே! போற்றி=தோத்திரஞ் செய்கிறேன், என்றது: ஏ—ஈற்றசை. 99

மாதி ரக்குர லோயு முன்னவண்
 வந்து வாரிடங் கரைய கைத்திடும்
ஆதி மூலமா மனக போற்றிபொன்
 னரண மேய்மழி சதிப போற்றியாழ்
மீதி லாவலா ஞதி மாதவர்
 வேட்கை யாய்த்தொழும் விண்டு போற்றியான்
பூதி யுற்றிடா தருள்செய் வாய்சகம்
 புகழு நீருறைப் பாதம் போற்றியே.

**இதன் பொருள் :**

மாதிரம்=கஜேந்திர னென்னும் யானையானது கூவிய, குரல்=குரலின் சத்தம், ஓயுமுன்=நிற்குமுன்னே, அவண்= அவ்விடம், வந்து = எதிரில் வந்து, வார் = நீரிலிருக்கின்ற,

இடங்கரை = ஆண்முதலையை, அகைத்திடும் = சங்கரித்திடும், ஆதிமூலமாம் = ஆதிமூலமாகிய, அனக = கத்தனே ! போற்றி = உம்மைப் புகழ்கின்றேன், பொன் = அழகு பொருந்திய, அரணம் = மதில், ஏய் = சூழ்ந்த, மழிசை = திருமழிசை நகரத்து வசிக்கும், அதிப = முதல்வனே ! போற்றி = உம்மை வணங்கு கின்றேன், யாழ்மீதில் = வீணையின்மேல், ஆவலாய் = ஆசை யாய்ப்பாடும் நாரதன், ஆதி = முதலான, மாதவர் = மகா தவ மகிமையுள்ள ரிஷிகள், வேட்கையாய் = விருப்பத்துடன், தொழும் = வணங்கும், விண்டு = மகாவிஷ்ணுவே, போற்றி = உம்மைத் தோத்திரஞ் செய்கின்றேன், யான் = நான், பூதி = நரகத்தில், உற்றிடாது = அடைந்திடாது, அருள் செய்வாய் = கிருபை செய்வாய், சகம் = உலகம், புகழும் = துதி செய்யும், நீருறை = நீராகிய கங்கை உதித்த, பாத = பாதமுடையவனே ! போற்றி = உம்மைத் தோத்திரஞ் செய்கின்றேன் — என்றது.

100

## வாழி [வாழ்த்து]

**அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்**

ஆரணங் கௌத்துவங் கொல்லை
யவிருமைம் படைய னந்தன்
சீரணி பதின்மர் வைன
தேயனல் லன்பர் செய்யாள்
ஏரணி மழிசை மேவு
மியல்சக நாதன் றுளில்
பேரணி பதிற்றுப் பத்தந்
தாதிபே ருலகில் வாழி.

**இதன் பொருள் :**

ஆரணம் = நான்காகிய இருக்கு – யசுர் – சாமம் – அதர் வணம் என்னும் வேதங்களும், கௌத்துவம் = கௌத்துவா பரணங்களும், துல்லை = திருத்துழாய் மாலையும், அவிரும் = பிரகாசிக்கின்ற, ஐம்படை = பஞ்சாயுதங்களும், அனந்தன் = ஆதிசேஷன், சீர் = சிறப்புள்ள, அணி = அழகிய, பதின்மர் = பதின்மர்களும், வைனதேயன் = கருடாழ்வான், அன்பர் = அடியார், செய்யாள் = மகாலட்சுமிப் பிராட்டியார், ஏர் அணி = அழகுபொருந்திய, மழிசை = திருமழிசை க்ஷேத்திரத்தில், மேவும் = வாசம் பொருந்திய, இயல் = அழகுடைய, சகநாதன்

=ஜெகநாதப் பெருமாள், தாளில் = திருவடியில், பேர் = கீர்த்தி, அணி = தரிக்கும், பதிற்றுப்பத்து = பத்து-பத்து ஓர் சந்தமாய் வரும், அந்தாதி = பாட்டின் முடிவை மறுபாட்டுக்கு முதலாய்ப் பாடும் பாடல், பேருலகில் = பெரிய உலகத்தில், வாழி = வாழக்கடவது, என்றது.

திருமழிசைப் பதிற்றுப்பத் தந்தாதி முற்றும்.

———;o;———

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# 9. திருஎவ்வுள் பதிற்றுப்பத்தந்தாதி

## சடகோபர் விஷயம்

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

### காப்பு

மாமருவு பூநிகிலம் வாழ்த்திவணங் குங்கனக
    வல்லி சேருங்
கோமருவு தேவெவ்வுள் வீரரா கவமாயன்
    குளிர்பொற் றாளிற்
றேமருவு பதிற்றுப்பத் தந்தாதித் தண்டமிழ்ப்பாத்
    தெரியற் சூட்ட
காமருவு தென்குருவைக் காவலனம் புயப்பாதங்
    கருது வோமே.

**இதன் பொருள் :**

மாமருவும்=பெருமை பொருந்திய, பூநிகிலம்=உலகமெல்லாம், வாழ்த்தி = தோத்திரஞ் செய்து, வணங்கும் = பணிகின்ற, கனகவல்லிசேரும்=கனகவல்லி யென்னும் பெயருடைய மகாலட்சுமி புணராநின்ற, கோமருவு = மலையையொத்த, தோள்=புயத்தினையுடைய, எவ்வுள்=திரு எவ்வுள் நகரத்திலுற்ற, வீரராகவ மாயன் = வீரராகவனென்னும் பெயரைக்கொண்ட மகாவிஷ்ணுவினது, குளிர் = குளிர்ச்சி பொருந்திய, பொன்தாளில்=அழகிய திருவடியில், தேமருவு =மதுரம் பொருந்திய, பதிற்றுப்பத் தந்தாதி=பத்து-பத்து செய்யுள் ஓர் பண்ணாக வருகின்ற அந்தாதி, தண்டமிழ்ப் பா = குளிர்ந்த தமிழ்ப் பாடலினால், தெரியல் சூட்ட=மாலைதரிப்பதற்கு, காமருவு=சோலைகள் சூழ்ந்த, தென்குருகை=அழகிய குருகாபுரியில் அவதரித்த, காவலன் = சடகோபரது, அம்புயப் பாதம் = தாமரை மலர் போன்ற சரணங்களை, கருதுவோம்=எப்பொழுதும் சிந்தனை செய்வோம், என்றது ; ஏகாரம்—ஈற்றசை.

## மாருதி விஷயம்

### அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

செயமேவு நிகும்பலையை யோர்கணத்திற் றபுத்திந்திர
　சித்தன் றன்னை
வயமேவு மிளையோன்முன் கொணராஞ்ச நேயனடி
　வணக்கஞ் செய்வாம்
இயமேவு மார்ப்புமிகு மெவ்வுளிரா க்வப்பெருமா
　னிணர டிக்கு
மயமேவு பதிற்றுப்பத் தந்தாதிப் பாமாலை
　வனைய மாதோ.

இதன் பொருள் :

செயமேவு = வெற்றிதரப்பட்ட, நிகும்பலையை = நிகும்பலை யென்னும் இடத்தில் ஓர் யாகத்தை, ஓர் கணத்தில் = ஒரு கணப்பொழுதில், தபுத்து = அழித்து, இந்திரசித்தன் தன்னை, = இந்திரசித்தென்னும்—இராவணன் மகனை, வயம் = வலிமை, மேவும் = பொருந்திய, இளையோன் முன் = இலட்சுமணப், பெருமான் முன்னில், கொணர் = கொண்டுவந்த, ஆஞ்சநேயன் = அஞ்சனை புத்திரன், அடி = பாதத்தை, வணக்கஞ் செய்வாம் = வணங்குவேன், இயம் = வாத்தியங்களில், மேவும் = உண்டாகின்ற, ஆர்ப்பு = சத்தங்கள், மிகும் = மிகுந்திராநின்ற, எவ்வுள் = திருஎவ்வுள் திருநகரத்தில் சயனங்கொண்ட, இராகவப் பெருமான் = வீரராகவப் பெருமாளினது, இணர் = மலர் போன்ற, அடிக்கு = திருவடிக்கு, மயமேவு = அழகு பொருந்திய, பதிற்றுப்பத் தந்தாதி = பத்து பத்து பாக்கள் ஓரிசையாய் வரும் அந்தாதி, பாமாலை = பாடலாகிய மாலை, வனைய = தரிப்பதற்கு: மாதோ—மாது, ஓ அசைநிலைகள். 2

துதிகவி முற்றும்

## நூல்

### அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

சீரார் சுவவு விபுதர்களுந்
　திறமே வியவா கண்டலனு
மேரார் நான்கு வத்திரனு
　மிருடிச் சாலி கோத்திரனு

நாரார்ந் தளவைப் பணிந்தேத்த
நலஞ்சே ரெவ்வுட் பதியினிலே
காரார் புயல்போல் விழிவளருங்
கண்ணா வடியேற் கருள்புரியே.

**இதன் பொருள் :**

சீர் ஆர்=சிறப்பு பொருந்திய, சுவவு=சுவர்க்கலோகத்துள்ள, விபுதர்களும் = தேவர்களும், திற மேவிய = பராக்கிரமம் பொருந்திய, ஆகண்டலனும்=இந்திரனும், ஏர் ஆர்=அழகு பொருந்திய, நான்கு வத்திரனும்=நான்கு முகத்தையுடைய பிரமதேவனும், இருடி சாலி கோத்திரனும்=சாலி கோத்திர மகரிஷியும், நார் ஆர்ந்து = அன்பு பொருந்தி, அளவை = தினந்தோறும், பணிந்து = வணங்கி, ஏத்த = தோத்திரஞ் செய்ய, நலஞ் சேர்=மங்களாகரம் பொருந்திய, எவ்வுள் பதியினிலே=திரு எவ்வுள் நகரத்திலே, கார் ஆர் புயல் போல்=நீர் கொண்ட மேகத்தைப் போல, விழிவளரும் = திருக்கண் வளராநின்ற, கண்ணா = கிருஷ்ணனாக அவதரித்த கர்த்தனே! அடியேற்கு=உன் தாசனாகிய எனக்கு, அருள்புரி=கிருபை செய்வாய்; ஏ—ஈற்றசை. 1

புரியே ராழித் தவர்தண்டுப்
பொலிநாந் தகங்கைத் தலத்துற்ற
அரியே நினைத்தோர் பவத்திமிர
மகற்றுங் கிரணச் சான்றோனே
வரியே பரவு குருக்கண்மட
மானார் மயநீர்த் தாட்கனகக்
கிரியேய்ப் பரிகம் விண்ணாரக்
கிளருந் திருவெவ் வுட்பரனே.

**இதன் பொருள் :**

புரி=பாஞ்சசன்னியம், ஏர்=அழகு பொருந்திய, ஆழி=சக்கரம், தவர்=சார்ங்கம், தண்டு=தண்டாயுதம், பொலி=பிரகாசிக்கின்ற, நாந்தகம் = வாள் என்னும் — பஞ்சாயுதங்களும், கைத்தலத்துற்ற = கையினிடமாகக் கொண்டிருக்கிற, அரியே=நாராயணனே! நினைத்தோர்=உம்மைத் தியானிக்சப் பட்டவர்கள், பவத்திமிரம்=ஜனனமாகிய இருளை, அகற்றும் = நீக்கப்பட்ட, கிரணம் = கிரணங்களையுடைய, சான்

ரூனே = சூரியனே ! வரியே = தேமல்களே, பரவு = படர்ந்திராநின்ற, குருக்கண் = தனபாரங்களையுடைய, மடம் = இளமைப் பருவத்தையும், மானூர் = மான் போன்ற சாயல்களுள்ள ஸ்திரீகள், மயல் = மயக்கத்தை, தீர்த்து = நீங்கச்செய்து, ஆள் = அடிமை கொள்வாய், கனகக்கிரி = பொன்மலையை, ஏய் = ஒப்பாகிய, பரிகம் = மதிலானது, விண்ணூர = ஆகாயத்தையளாவ, கிளரும் = விளங்குகின்ற, திரு எவ்வுள் = திரு எவ்வுளூரில் சயனித்திராநின்ற, பரனே = பரமாத்மனே ! என்றது. 2

பரவை யணைசெய் நாயகனைப்
 பார்த்தற் கருளுந் தாயகனை
குரவை பிணைத்த யாதவனைக்
 கோதி லெவ்வுண் மாதவனை
யரவை யணைகொள் நாரணனை
 யம்போ ருகக்கை வாரணனை
கரவை யகற்றி மடநெஞ்சே
 கருதிற் பதவி பெறுவாயே.

**இதன் பொருள்:**

பரவை = தென் சமுத்திரத்தில், அணை செய் = திருவணை கட்டிய, நாயகனை = சர்வேசுவரனை, பார்த்தற்கு = அருச்சுனனுக்கு, அருளும் = பகவற்கீதை யுபதேசித்தருளிய, தாயகனை = தாயின் மனம் போன்ற அன்பனை, குரவை = குரவைக் கூத்தாட, பிணைத்த = சேர்த்த, யாதவனை = யாதவர் இடத்தில் வளர்ந்தவனை, கோதில் = குற்றமில்லாத, எவ்வுள் = திரு எவ்வுள் நகரத்தில் வாசஞ் செய்யும், மாதவனை = வீரராகவப் பெருமானை, அரவை = ஆதிசேஷனை, அணை கொள் = பஞ்சணையாகக் கொண்ட, நாரணனை = ஸ்ரீமந் நாராயணனை, அம்போருகக்கை = தாமரை மலர் போன்ற அஸ்தமுள்ள, வாரணனை = சங்குடையவனை, கரவை = கபட வஞ்சனையை, அகற்றி = நீக்கி, மடநெஞ்சே = அறியாமைத் தன்மையுள்ள மனமே, கருதில் = நீ தியானஞ் செய்தால், பதவி = பரமபதத்தை, பெறுவாய் = சேருவாய் ; ஏகாரம் — ஈற்றசை. 3

பெறுதற் கரிய மெஞ்ஞானம்
 பெட்பி லளிக்கு மருண்மாலை
நறுமன் குல்லைத் தாரானை
 ஞாட்பர்ச் சுனன்றே ரூர்வோனைத்
தறுகட் கும்பி கோடொசித்த
 சர்வாத் மனைசெஞ் சிகரியிலிந்
துறும்வண் டிருவெவ் வுட்கோவை
 யுன்னித் துதிமின் இன்புறவே.

**இதன் பொருள் :**

பெறுதற்கு=பெற்றுக் கொள்ளுதற்கு, அரிய=அருமையாகிய, மெஞ்ஞானம்=பேரறிவை, பெட்பில்=அன்பினால், அளிக்கும்=கொடுக்கும், அருள்=கிருபையுள்ள, மாலை=மகாவிஷ்ணுவை, நறுமன்=வாசனை மிகுந்த, குல்லைத் தாரானை=துளபமாலையுடையவனை, ஞாட்பு = வலிமையுள்ள, அர்ச்சுனன்=அருச்சுனன், தேர் ஊர்வோனை=இரதம் நடத்திய கண்ணபிரானை, தறுகண் = அஞ்சாமையுடைய, கும்பி = குவலயாபீடமென்னும் யானையின், கோடு=கொம்பை, ஒசித்த =ஒடித்த, சர்வாத்மனை=எல்லா உயிர்களிலும் நிறைந்திருப்பவனை, செஞ்சிகரியில்=செம்மையாகிய கோபுரத்தில், இந்து= சந்திரன், உறும்=தவழ்ந்து போகிற, வண் =வளமை தங்கிய, திரு எவ்வுள் கோவை = அழகிய எவ்வுளூர் வீரராகவப் பெருமானை, உன்னி = தியானித்து, துதிமின்=தோத்திரஞ் செய்யுங்கள், இன்புற=பேரின்பத்தையடைய, ஏ—ஈற்றசை

4

மின்னற் சடலஞ் சதமென்றுள்
 வேட்கை மலியு மானிடர்காள்
கன்னற் புரைமென் மொழிக்கன்று
 கலிங்க மளித்த காதலனை
அன்னந் துயில மொய்த்திரள்பண்
 ணார்க்குந் திருவெவ் வுட்பொருளைப்
பன்னு மடியார் தாடொழுமின்
 பரம பதம்பெற் றுறைவீரே.

**இதன் பொருள் :**

மின்னல் = ஆகாயத்து மின்னலை, புரை = ஒத்த, சடலம் = சரீரம், சதம் என்று = நிலை என்று, வேட்கை = ஆசையானது, மலியும் = அதிகரிக்கும், மானிடர்காள் = மனிதர்களே! கன்னல் புரை = கரும்பைப் போலும் மதுரமான, மெல் = மெல்லிய, மொழிக்கு = வசனமுள்ள துரோபதைக்கு, அன்று = முன்னம், கலிங்கம் = வஸ்திரம், அளித்த = கொடுத்த, காதலனை = அன்புடையவனை, அன்னப்புள் = அன்னப் (புள்ளானது) [பறவையானது], துயில = நித்திரை செய்ய, மொய்த்திரள் = வண்டுக் கூட்டம், பண் = இராகங்களின், ஆர்க்கும் = சப்தமுள்ள, திருவெவ்வுள் = திரு எவ்வுளூரில் தங்கிய, பொருளை = பராபர வஸ்துவை, பன்னும் = அவனது திருநாமங்களை—ஸ்மரிக்கப் பட்ட, அடியார் = பாகவதரது, தாள் தொழுமின் = பாதங்களை சேவியுங்கள், பரமபதம் = வைகுந்தம், பெற்று = அடைந்து, உறைவீர் = அவ்விடத்தில் வாசஞ் செய்வீர், ஏ—ஈற்றசை. 5

உறைமுற் சிலையாற் றடுத்தாய
ருக்கம் புர(த்)[ந்]த மாட்சியனே
நறைமுண் டகநே ரட்சியனே
நண்ணன் பருக்குக் காட்சியனே
முறைசொற் கவிநின் செவியேற்றென்
முன்னிற் றேன்றி யருள்புரிவாய்
மறைமுன் னர்கள்சூழ் திருவெவ்வுள்
வாய்ந்து பிறங்கு மணிவணனே.

**இதன் பொருள் :**

உறை = பெரிய நீர்த்துளிகளை, முன் = முன்னே, சிலையால் = கோவர்த்தனமென்னும் மலையினால், தடுத்து = தடை செய்து, ஆயர் = யாதவர்கள், உக்கம் = பசுக் கூட்டங்களை, புரந்த = இரட்சித்த, மாட்சியனே = பெருமையுடையவனே! நறை = வாசனை பொருந்திய, முண்டகம் = தாமரையை, நேர் = சமானமான, அட்சியனே = நேத்திரமுடையவனே! நண்ணும் = உம்மைச் சேர்ந்த, அன்பருக்கு = பாகவதருக்கு,

நண்ணும்=உம்மைச் சேர்ந்த, அன்பருக்கு=பாகதவதருக்கு, காட்சியனே=சேவை சாதிப்பவனே! முறை=முறையாக, சொல்=சொல்லப்பட்ட, கவி=அடியேன் பாடலை, உன்= உம்முடைய, செவி=காதிலே, ஏற்று=கேட்டுக் கொண்டு, என்முன் =இச்சிறியவன் முன்னே, தோன்றி=பிரத்தியட்ச மாய், அருள் புரிவாய்=கிருபை செய்வாய், மறை=வேதங்களை, முன்னர்கள்=மனத்தில் கவன முள்ளவர்களாகிய பிராம ணர்கள், சூழ்=சூழ்ந்திருக்கப்பட்ட, திரு எவ்வுள்=சிறந்த எவ்வுளூரில், வாய்ந்து = சயன திருக்கோலம் பொருந்தி, பிறங்கும் = பிரகாசிக்கும், மணிவணனே = இருண்ட திரு மேனியை யுடையவனே! என்றது. 6

மணியும் மனவும் வாரமிசை
 வயங்கு முவள கஞ்சூழ்ந்த
அணியு மதன்கண் டூவியன
 மாரும் வளமெவ் வுட்பரிவாழ்ந்
தெணிய தருளு மைந்தருவே
 இசைக்க வரிய மலர்மருவே
பிணியை யொழித்தாண் டிடுமருந்தே
 பெட்பி னுடனீ வாய்சரணே.

இதன் பொருள் :

மணியும்=முத்துக்களும், மனவும்=சங்குகளும், வார மிசை=நீர்க் கரையின் பேரில், வயங்கும்=பிரகாசிக்கும், உவளகம் = தடாகம், சூழ்ந்த = பக்கத்திலிருக்கும், அணியும் = அலங்காரமும், அதன் கண் = அதனிடத்தில், தூவி = சிறகினையுடைய, அனமாரும் = அன்னப்பட்சிகள் நிறைந்திருக்கின்ற, வளம்=செழுமையுள்ள,எவ்வுள் புரி= திரு எவ்வுள் நகரத்தில், வாழ்ந்து=வாசஞ் செய்திருந்து, எணியது=யாவரும் நினைக்கப்பட்ட வஸ்துக்களை, அருளும்= கொடுக்கும், ஐந்தருவே=பஞ்சருவானவனே, எங்கும்=எவ் விடங்களிலும், துவன்ற=நிறைந்த, மலர் மருவே=மலரில் மணம் போல் கலந்திருப்பவனே! பிணியை=வியாதிகளை, ஒழித்து=நீங்கச் செய்து, ஆள்=என்னை அடிமை கொள்ளப் பட்ட, மருந்தே=அமுதே! பெட்பினுடன்=அன்பினுடன், ஈவாய்=கொடுப்பாய், சரணே=நின் திருவடி; என்றது. 7

சரணென் றடைவீ டணற்குமுனஞ்
சார்பா யருட்செய் ததுபோல
கருணைக் கடலே என்றுயரங்
கரச்செஞ் சுடரோன் முன்னனிமமேய்
முரணி னொடுதீர்த் தருள்செய்வாய்
முருகு மணிகட் கசிதப்பொன்
அரணஞ் சூழு மாண்பெவ்வுள்
ஆரு மதுல மாம்பொருளே.

இதன் பொருள் :

சரண் என்று=நின் சரணமே கதி யென்று, அடை= உமது இடம் வந்த, வீடணற்கு=விபீஷணருக்கு, முன்னம்= முந்நாளையில், சார்பாய் = அன்பாய், அருள் செய்தது போல=கிருபை செய்தது போல, கருணைக் கடலே=கிருபா சமுத்திரமே! என் துயரம்=என்னுடைய துன்பமானது, கரம்=கிரணங்களையுடைய, செம்=சிவந்த, சுடரோன் =சூரியன், முன் =முன்னே, இம மேய்=பனியைப் போல, முரணினொடு=வலிமை யுடனே, தீர்த்து=நீக்கி, அருள் செய்=கிருபை செய்வாய், முருகு=அழகிய, மணிகள் =இரத்தினங்கள், கசிதம்=பதித்த, பொன் =பொன்னினாற் செய்த, அரண்= மதிலானது, அம்=அழகுடனே, சூழும்=சூழ்ந்திரா நின்ற, மாண்பு = பெருமை பொருந்திய, எவ்வுள் = நகரத்தில், ஆரும் = தங்கியிருக்கின்ற, அதுலம் = நிகரில்லாத, பொருளே=பராபர வஸ்துவே! 8

பொருண்மன் னியநி கமவீறிற்
பொலிவா யாடற் குயின்றபதா
தெருளு லாவு பாகவதர்
சிந்தை சுமன சத்துறைவோய்
இருளை யொழித்தாள் மாமணிகள்
இலங்கு சிகரி யெவ்வுளுறைந்
தருண்மெய்ப் பெருக்க முடனன்பர்க்
களிக்க விமைக்கு மாரியனே.

**இதன் பொருள் :**

பொருள் = வேதார்த்தங்கள், மன்னிய = பொருந்திய, நிகமம் = வேதத்தின், ஈறில் = முடிவில், பொலிவாய் = பிரகாச மாய், ஆடல் = திரு நடனம், குயின்ற = செய்த, பதா = பாத முடையவனே! தெருள் = தெளிவு, உலாவு = பொருந்திய, பாகவதர் = வைணவர்கள், சிந்தை = மனமாகிய, சுமனசம் = மலரில், உறை வோய் = இருக்கப் பட்டவனே! இருளை = அஞ் ஞானமாகிய மயக்கத்தை, ஒழித்து = நீங்கச் செய்து, ஆள் = என்னை அடிமை கொள், மாமணிகள் = பெருமை பொருந்திய நவரத்தினங்கள், இலங்கு = பிரகாசிக்கின்ற. சிகரி = சிகர கோபுரங்களுள்ள, எவ்வுள் = திரு எவ்வுளூரில், உறைந்து = இருந்து, அருள் = கிருபை, மெய் = உண்மையான, பெருக்கத் துடன் = அதிகமாக, அன்பர்க்கு = தன்னிடத்தில் பக்தியுடை யவர்க்கு—அளிக்க—, இமைக்கும் = பிரகாசிக்கும், அரி யனே = மேன்மையுடைய கர்த்தனே! என்றது. 9

ஆரி யர்களந் தணர்மன்னர்
 அரும்வை சியர்சூத் திரரீட்டம்
வாரி யெனவே பணிந்தேத்த
 மாண்பெவ் வுளிற்கண் வளரதுலா
நீரி லெழுநுண் பவ்வமென
 நிகழ்பூ தியத்தைச் சதமுன்னி
பார்ரி லுஞற்று மறிவிலிக்கும்
 பதமீ வதுநின் கடனன்றே.

**இதன் பொருள் :**

ஆரியர் = மேலோர்கள், அந்தணர் = பிராமணர், மன்னர் = இராஜர், அரும் = அருமையான, வைசியர் = செட்டி கள், சூத்திரர் = சூத்திர சாதியரும், ஈட்டம் = கூட்டமாக, வாரி யெனவே = சமுத்திரம் போல, பணிந்து = வணங்கி, ஏத்த = தோத்திரஞ் செய்ய, மாண்பு = பெருமை பொருந்திய, எவ்வு ளில் = திரு எவ்வுள் நகரத்தில், கண் வளர் = யோக நித்திரை செய்யா நின்ற, வதுலா = நிகரில்லாதவனே! நீரிலெழும் = நீரில் உண்டாகின்ற, நுண் = சிறிய, பௌவ மென = நீர்க்குமிழியை, நிகழ = சமான முள்ள, பூதியத்தை = சரீரத்தை, சதமுன்னி =

நிலை யென்று நினைத்து, பாரில் = உலகத்தில், உஞற்றும் = சந்தோஷிக்கும், அறிவிலிக்கும் = அறிவில்லாத சிறுவனாகிய எனக்கும், பதம் = பரம பதம், ஈவது = கொடுத்து இரட்சிப்பது, நின் கடன் = உமது கடமை ; என்றது ; அன்று - ஏ அசை நிலைகள், 10

### எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

கடகவம் பரமெய்க் கம்பலை யணுக
கவின்பிர வாளவா யிணரில்
குடவளை பொருத்திப் பண்ணளித் தவனே
கோவல ரானிரை புரக்க
தடவிலங் கலைமுற் குடையென வேந்துந்
தற்பரா பிங்கலன் வாழும்
இடவள கையைநே ரெவ்வுணா யகனே
ஏதமெல் லாங்கமித் தருளே.

**இதன் பொருள் :**

கடக வம்பரம் = சேனா சமுத்திரமானது, மெய் = சரீரம், கம்பலை யணுக = நடுக்கம் உண்டாகும்படி, கவின் = அழகு பொருந்திய, பிரவாளம் = பவளம் போன்ற, வாய் இணரில் = திருவாய் மலரில், குடவளை = குடம் போன்ற சங்கை, பொருத்தி = வைத்து, தொனித்த = சப்த முண்டாக்கிய, மாதவனே = மகாவிஷ்ணுவே! கோவலர் = யாதவருடைய, ஆனிரை = பசுக் கூட்டங்களை, புரக்க = இரட்சிக்க, தடம் = பெரிய, விலங்குகளை = கோவர்த்தன மென்னும் மலையை, முன் = முந் நாளில், குடையென ஏந்தும் = குடையாகப் பிடித்தருளிய, தற்பரா = கடவுளே! பிங்கலன் = குபேரன், வாழும் = வாழ்கின்ற, இடம் = நகரமாகிய, அளகை = அளகாபுரியை, நேர் = நிகராகிய, எவ்வுள் = திரு எவ்வுளூரில் இருக்கும், நாயகனே = சர்வேச்வரனே! ஏதம் = யான் செய்த குற்றம், எல்லாம் = யாவற்றும், கமித்து = பொறுத்து, அருள் = கிருபை செய்வாய், என்றது ; ஏ - ஈற்றசை. 11

அருநெறி வாய்ந்துன் செய்யபங் கயத்தாள்
அன்புடன் றொழவரு டயங்கும்
கருநெறி நாப்பண் வைகிநோற் றலைச்செய்
கடிந்தவர் கட்சிகா மணியாங்
குருமைகொள் சாலி கோத்திர முனிக்கு
குணமுடன் தெரிசன மளித்துப்
பெருமைகொ ளெவ்வுட் கோயிலி லியங்கும்
பெட்புள வீரரா கவனே.

**இதன் பொருள் :**

அரும் = அருமையான, நெறி = ஞானமார்க்கத்தில், வாய்ந்து=பொருந்தி, உன்=உம்முடைய, செய்ய=சிவந்த, பங்கயம்=தாமரை மலர் போன்ற, தாள்=திருவடியை, அன்புடன்=பக்தியுடன், தொழ=சேவிக்க, அருள் = கிருபை செய்வாய், தயங்கு=பிரகாசிக்கின்ற, கருநெறி=அக்கினியின், நாப்பண்=மத்தியில், வைகி=தங்கி நின்று, நோற்றலை=தவத்தை, செய்=செய்யப்பட்ட, கடிந்தவர்=மகாரிஷிகள், சிகாமணியாம் = சிரோரத்தினம் போன்ற, குருமைகொள்=பெருமை கொண்ட' சாலி கோத்திர முனிக்கு = சாலி கோத்திர மகரிஷிக்கு, குணமுடன்=பண்புடன், தெரிசன மளித்து=சேவை சாதித்து, பெருமை கொள்=பெருமை கொண்ட, எவ்வுள்=திரு எவ்வுளூர் கோயிலில் இயங்கும், வீரராகவனே=வீரராக வனென்னும் திருநாமத்தை யுடையவனே! —ஏ— ஈற்றசை. 12

வீரவும் பலன்வான் மருப்பினை யிறுத்த
வித்தகா வான்றவே தத்தை
வாரமுற் றுணர்ந்த விருபிறப் பாளர்
மனக்கம லத்துறை முதலே
ஆரமேய் மூரற் கணிகையர் வேட்கை
யசடனை நின்பதத் திருத்தாய்
சாரமேய் கழைதேக் கெனவெழில் காட்டுந்
தண்பணை யெவ்வுளா ரமுதே.

இதன் பொருள் :

வீரம் = வீரத்தன்மையுள்ள, (உம்பலன் = குவலயாபீட மென்னும் யானையின்,) வால் மருப்பினை = வெண்மை பொருந்திய கொம்பை, இறுத்த = ஒடித்த, வித்தகா = ஞான சொரூபனாகிய கர்த்தனே! ஆன்ற = விரிவாகிய, வேதத்தை = வேதங்களை, வாரமுற்று = அன்புற்று, உணர்ந்த = அறிந்த, இருபிறப்பாளர் = பிராமணர், மனக்கமலத்து = இதய கமல மலரில், உறை = இருக்கின்ற, முதலே = எப்பொருட்கும் முதன்மை யானவனே! ஆரம் = முத்தை, ஏய் = ஒத்த, மூரல் = தந்த வரிசையுடைய, கணிகையர் = பரத்தையர் வேட்கை = விருப்பத்தையுடைய, அசடனை = நற்குணமில்லாத என்னை, நின் — உம்முடைய, பதத்து = பரமபதத்தில், இருத்துவாய் = தங்கும்படி செய்வாய், சாரம் = மதுரம், ஏய் = பொருந்திய, கழை = கரும்பானது, தேக்கென = பாக்கு மரம் போல், எழில் = அழகு, காட்டும் = காண்பிக்கும், தண்பணை = குளிர்ந்த கழனிகள் சூழ்ந்த, எவ்வுள் = திரு எவ்வுளூரில், ஆர் = பொருந்தியிருக்கும், அமுதே = பெருமையுடையவனே ஏ — ஈற்றசை. 13

ஆரமு தமரர்க் கன்றுநல் கியபொன்
 னம்பர தரவடி யார்க்கு
வாரமுற் றெளிதி லூழ்த்திய துதவு
 வள்ளலே தெள்ளுமா மறையோர்
சீரமர் திருவெவ் வுட்புரா திபநின்
 செய்யதோ டகமலர்க் கழலிற்
றூரருச் சனைசெய் தேத்திடா வெற்குன்
 றண்ணரு ளளிக்குநா ளென்றே.

இதன் பொருள் :

ஆர் = நிரம்ப, அமுது = அமிர்தத்தை, அமரர்க்கு = தேவர்களுக்கு, நல்கிய = கொடுத்த, பொன் = பொன்னாகிய, அம்பரதர = வஸ்திரந்தரித்தவனே,' அடியார்க்கு = அன்பரின் மேல், வாரம் = இஷ்டம், உற்று = பொருந்தி, எளிதில் = சுலபத்தில், ஊழ்த்தியது = அவர்கள் நினைத்ததை, உதவும் = கொடுக்கும், வள்ளலே = கொடையாளனே! தெள்ளும் = தெளிவாகிய, மா = பெருமை பொருந்திய, மறையோர் = பிரா

மணர், சீர் அமர்=சிறப்பாக அமர்ந்து வாழ்கின்ற, திரு எவ்வுள்=அழகிய எவ்வுளூர், அதிப=முதல்வனே! நின்= உம்முடைய, செய்ய=சிவந்த, தோடக மலர்=தாமரை மலர் ஒத்த, கழலில்=திருவடியில், தார்=புஷ்பங்களினால், அருச்சனை செய்து=அர்ச்சித்து, ஏத்திடா=தோத்திரஞ் செய்யாத, எற்கு=எனக்கு, உன்=உம்முடைய, தண்ணருள்=குளிர்ந்த கிருபை, அளிக்கும் நாள்=கொடுக்கும் நாள், என்று=எப்பொழுது? ஏ—ஈற்றசை. 14

என்றுநற் றவர்சூ ழெவ்வுள் நாரணனை
 யேந்தலைக் குல்லைகண் ணியனை
அன்றுநான் முகனைப் பயந்தவண் போகி
 லையனைக் கஞ்சன்முன் விடுத்த
கன்றுயிர் செகுத்த கள்வனைக் கமலக்
 கண்ணனைப் போற்றுமி னும்மைத்
துன்றுவெம் பிணிமால் வெய்யதீ வினைகட்
 சூழ்ந்திடா தகன்றிடு மன்றே.

**இதன் பொருள் :**

என்றும் = எப்பொழுதும், நற்றவர் = நல்ல தவத்ததை யுடைய ரிஷிகள், சூழ்=சூழும் மகிமையுள்ள, எவ்வுள்=திரு எவ்வுளூர், நாரணனை=ஸ்ரீமந் நாராயணனை, ஏந்தலை=பெருமையிற் சிறந்தவனை, குல்லை=திருத்துளபமானது, கண்ணியனை=மாலையாக வுடையவனை, அன்று=முன்னாளில், நான்முகனை = நான்கு முகத்தையுடைய பிரமதேவனை, பயந்த = பெற்ற, வண்=வளமை தங்கிய, போகில்=உந்திக் கமலத்தை யுடைய, ஐயனை=சுவாமியை, கஞ்சன்=கஞ்ச னென்னும் பெயரையுடைய அரசன், முன்விடுத்த=முன்னே அனுப்பிய, கன்று = கன்றின் வடிவங்கொண்டுவந்த இராக்ஷதன், உயிர்=பிராணனை, செகுத்த=அழித்த, கள்வனை=திருட்டுத் தனமுள்ள கிருஷ்ணனை, கமலம்=தாமரை மலர் போலும், கண்ணனை = நேத்திர முடையவனை, போற்றுமின் = தோத்திரஞ் செய்யுங்கள், உம்மை=உங்களை, துன்றும்=நெருங்கி உங்களை வருத்தும், வெம்பிணி = வெவ்விதாகிய கொடிய வியாதி, மால்=மயக்கம், வெய்ய = கடூரமான, தீவினை = கெட்ட காரியங்கள், சூழ்ந்திடாது=சேராது, அகன்றிடும்= நீங்கிப்போம். 15

அன்புகொள் ளெயின மாதுவெங் கானி
லளித்தவம் பலத்தினைத் துய்த்த
இன்புகொட் பரனை யாக்கவற் சனைப்பொன்
னிலஞ்சிசூ ழெவ்வுள்வா மனனைத்
துன்புகொள் ளார்வ மூன்றையுந் தபுத்து
தூயவை ணவர்தமை நிகர்த்து
தென்புகொள் வணங்கி துதித்திடிற் றினமே
சீர்கதி பெறுவைநீ மனமே.

**இதன் பொருள் :**

அன்புகொள்=உம்மிடத்தில் அன்பு வைத்திருந்த, எயின மாது=வேடப் பெண்ணாகிய சவரி, வெங்கானில்=கடூரமான காட்டில், அளித்த=கொடுத்த, அம்=அழகிய, பலத்தினை= பழவர்க்கங்களை, துய்த்த=உண்ட, இன்புகொள்=இஷ்டம் கொண்ட, பரனை=பரமாத்ம ரூபனை, ஆக்கம்=மகாலட்சுமி தங்கியிருக்கும், வற்சனை=மார்பையுடையவனை, பொன் இல ஞ்சி=அழகிய மதிலானது, சூழ்=சூழ்கின்ற, எவ்வுள் = திரு எவ்வுள்நகரத்துற்ற, வாமனனை = வாமனவதாரனை, துன்பு கொள் =துயரத்தைத்தருகின்ற ஆர்வம்= ஆசை, மூன்று= மண்—பெண்—பொன் என்னும் மூன்றையும், தபுத்து = நீக்கி, தூய=பரிசுத்தம் பொருந்திய, வைணவர்தமை = பாகவதர் தங்களை, நிகர்த்து=சமமாகி, தென்புகொள் = தென்பு உண்டாகி, வணங்கி=சேவித்து, துதித்திடில் = தோத்திரஞ் செய்திடில், தினமே=தினந்தோறுமே, சீர்கதி=சிறந்த பரம பதம், பெறுவை = சேருவை, நீ மனமே = மனமேநீ என்றது.

16

மனவுமின் மிடற்றூர் மையலிற் படிந்து
மாதிரத் தயர்மட நெஞ்சே
பனசவின் சுவைபாய்ப் பானல்சூ ழெவ்வுள்
பரனைவிண் டேவர்நா யகனை
வனசவம் பகனை நேமிகைத் தலனை
மாயனைப் பசியமே னியனை
கனவினு மறவா தேத்துநீ சனனக்
கடல்கடந் தரும்பதி யுறவே.

**இதன் பொருள் :**

மனவு = சங்கு போலும், மின் = பிரகாசமுள்ள, மிடற்றார் = கண்டத்தையுடைய மாதர்கள், மையலிற் = மயக்கத்தில், படிந்து = மூழ்கி, மாதிரத்து = உலகத்தில், அயர் = வருத்தமடைகின்ற, மடநெஞ்சே = அறியாமைத் தனமுள்ள மனமே! பனசம் = பலாக்கனியின், இன்சுவை = இனிமையான மதுரமுள்ள சாறுகள், பாய் = பாயப்பட்ட, பானல் = கழனிகள், சூழ் = சூழப்பட்ட, எவ்வுள் = திருஎவ்வுள் நகரிலுற்ற, பரனை = கர்த்தனை, விண் = சுவர்க்கலோகத்து, தேவர் = தேவர்களது, நாயகனை = சர்வேச்வரனை, வனசவம் பகனை = தாமரை மலர் போன்ற நேத்திரமுள்ள மாயனை, நேமி = சக்கராயுதம் பிடித்த, கைத்தலனை = கையுள்ளவனை, மாயனை = மாயா விநோத முடையவனை, பசிய = பசுமையாகிய, மேனியனை = திரு மேனியுடையவனை, கனவினும் = சொப்பனத்திலும், மறவாது = மறதியில்லாமற்படிக்கு, ஏத்து நீ = நீ தோத்திரஞ் செய்வாய், சனனக் கடல் = பிறவிச் சமுத்திரத்தை, கடந்து = தாண்டி, அரும் = அருமையாகிய, பதி உறவே = வைகுந்த நகரில் வாசஞ் செய்யவே! என்றது. 17

அருச்சுனப் பணிலம் பல்வலத் தடரு
மம்புய மீதினி லிலங்க
திருச்சொன்னக் கும்பத் தளையுறுந் தன்மைத்
திகழ்வள மெவ்வுளா திபனே
ஒருச்சென னமும்யா னினியெடா துன்ற
னெண்பதத் திருத்துவாய் வீசு
மருத்துழாய்ச் சயமன் னருமே தார
வாகுதற் பரபிரா மயனே.

**இதன் பொருள்:**

அருச்சுனம் = வெண்மையுள்ள, பணிலம் = சங்கு, பல் வலத்து = தடாகத்தில், அடரும் = நெருங்கியிருக்கின்ற, அம்புயம் = தாமரை மலரின், மீதினில் = மேலே, இலங்க = விளங்க, திரு = அழகிய, சொன்னகும்பத்து = பொற்குடத்தில், அளை = வெண்ணெய், உறுந் தன்மை = இருக்குந் தன்மையை, திகழ் = பிரகாசிக்கும், வளம் = செழுமையுள்ள, எவ்வுளாதிபனே = திரு எவ்வுளூரிலிருக்கும் முதல்வனே! ஒரு சனனமும் = இனியொரு பிறப்பும், யான் = நான், எடாமல் = எடுக்காமல்,

உன்றன் = உம்முடைய, ஒண் = அழகிய, பதத்து = பரம பதத்து, இருத்துவாய் = இருக்கும்படி செய்வாய், வீசும் = வீசுகின்ற, மரு = வாசனையுள்ள, திருத்துழாய் = அழகிய துளப, சயம் = மாலை, மன் ஆரும் = மிகுதியாக நிறைந்த, மேதாரம் = மலை போன்ற, வாகு = புயமுள்ள, தற்பர = தற்பரமாகிய, நிராமயனே = கடவுளே! என்றது. 18

மயக்கதி ரெறிக்குங் கௌத்துவ மலங்கும்
  மார்பனே பாரினிற் சிறியேன்
தியக்கமுற் றயரா துனதுதொண் டளவை
  செய்திட புந்திதந் திடுவாய்
இயக்கலி பாரா வாரம தடக்கு
  மெவ்வுண்மா நகர்தனிற் கிடந்த
செயக்கவின் முகிலே பத்தருக் கெளிதாய்ச்
  சேவைநல் கியகுணம் புதியே.

**இதன் பொருள் :**

மயம் = அழகிய, கதிர் = கிரணங்களை, எறிக்கும் = வீசுகின்ற, கௌத்துவம் = கௌஸ்துவாபரணம், அலங்கும் = அசையப்பெற்ற, மார்பனே = மார்பையுடையவனே! பாரினில் = உலகத்தில், சிறியேன் = சிறியவனாகிய நான், தியக்கமுற்று = யாதொரு காரியங்களிலும் தேங்கி, அயராது = வருந்தாமல், உனது = உம்முடைய, தொண்டு = அடிமைத்தொழில், அளவை = தினந்தோறும், செய்திட = செய்யும்படி, புந்தி = அறிவு, தந்திடுவாய் = கொடுத்திடுவாய், இயம் = வாத்தியங்களின், கலி = சத்தமானது, பாராவாரம் = சமுத்திரத்து அலைமுழக்கத்தை, அடக்கும் = அடங்கச் செய்யும், எவ்வுள் = திரு எவ்வுள், மாநகர் தனில் = பெருமையுள்ள நகரந்தன்னில், கிடந்த = சயன கோலங் கொண்ட, செயம் = வெற்றியும், கவின் = அழகும் பொருந்திய, முகிலே = கரியமேகம் போன்ற வடிவுள்ளவனே! பத்தருக்கு = அன்பர்களுக்கு, எளிதாய் = சுலபத்தில், சேவை நல்கிய = பிரத்யட்சமாகிய, குணம் புதியே = குணக்கடலே! என்றது. 19

புதியநற் பூவே பூவுறு முருகே
  புரையிலா ததிலுறு மணமே
வதியெழின் மணியே மணியினொண் ணொளியே
  வயங்கிய சுருதியின் பொருளே

விதிமதிச் சடில னுணரரும் மாய்கை
விரித்தத னுள்விளை யாடும்
அதிபனே திருவெவ் வுட்புரி கிடந்த
வையனே என்னையாண் டருளே.

**இதன் பொருள்:**

புதிய=புதிதாகிய, நற்பூவே=நல்ல மலரே, பூ உறும்=மலரில் பொருந்தியிருக்கும், முருகே = தேனே! புரையில்லாது=குற்றமில்லாது யாவரும் கொள்ள, அதில் உறும்=அதில் பொருந்திய, மணமே=வாசனையே, வதி எழில்=அழகு தங்கிய, மணியே = மாணிக்கமே, மணியில் = மாணிக்கத்தில், நண்ணு = பொருந்திய, ஒளிவே=பிரகாசமே, வயங்கி=பிரகாசிக்கின்ற, சுருதியின்=வேதத்தின், பொருளே=வேதார்த்தமே, விதி=பிரமதேவன், மதி=சந்திரனை, சடிலன்=சடாபாரத்தில் வைத்த சிவன், உணரரும்=அறிதற்கு அருமையான, மாய்கை=மாயங்கள், விரித்து=விரிவாக உண்டாக்கி, அதனுள் = அதனிடத்தில், விளையாடும் = விளையாடுகின்ற, அதிபனே=சர்வேச்வரனே, திரு எவ்வுள்=திருமகள் வாசம் செய்யும் எவ்வுள், புரி=நகரத்தில், கிடந்த=சயன கோலங் கொண்ட, ஐயனே = கர்த்தனே, என்னை = அடிமையாகிய என்னை, ஆண்டருள்=கிருபை செய்து இரட்சிப்பாய் என்றது. 20

**வேறு**

அரிய கந்தரு வச்ச யந்தன
மாரெ ழிற்பதங் கன்றி வட்கிள
ரிரிய வன்விருத் தப்ப டைக்கர
மேந்தி யேமறைத் தண்ணல் பஞ்சவர்க்
குரிய தண்மக ரால யப்புடை
யுலகு நல்கெவுட் புரிவி நோதனே
திரிம யக்கவே ரைக்க ளைந்துநின்
செய்ய தாடொழப் போத மீவையே.

**இதன் பொருள் :**

அரிய=சொல்லுதற்கு அரிதாகிய, கந்தருவம்=பச்சைக் குதிரைகள் பூட்டிய, சயந்தனம்=இரதத்தில், ஆர்=பொருந்தியிராநின்ற, எழில்=அழகுடைய, பதங்கன் = சூரியன், திவள்=அசைகின்ற, கிளர்=பிரகாசம், இரிய=கெடும்படி, வள்=கூர்மை பொருந்திய, விருத்தப்படை = சக்கராயுதம்,

கரம்=அஸ்தத்தில், ஏந்தி = தாங்கி, மறைத்து = மறையச் செய்து, அண்ணல்=பெருமையுள்ள, பஞ்சவர்க்கு=பஞ்ச பாண்டவருக்கு, உரிய = உரிமையாகிய, தண் = குளிர்ச்சி யுள்ள, மகராலயம்=சமுத்திரம், புடை=பக்கங்களில் சூழ்ந் திருக்கின்ற, உலகு=உலகத்தை, நல்கு=கொடுத்த, எவ்வுள் புரி = திருஎவ்வுள் நகரத்திலுற்ற, விநோதனே = மாயா விநோதங் காண்பிக்கப் பட்டவனே! திரி=மூன்றாகிய, மயக் கம் = மண் — பெண் — பொன் என்னும் ஆசையாகிய, வேரை=வேர்களை, களைந்து=வெட்டி, நின் = உம்முடைய, செய்ய=சிவந்த, தாள்=திருவடியை, தொழ=வணங்க, போ தம்=அறிவை, ஈவையே=கொடுத்தருள்வாய், என்றது. 21

போதி ருக்குநான் காசி யன்சமன்
  பொற்க ரீத்தய ராது றச்சதா
வோதி ருக்குமாண் புடைய சோதியை
  யூக்க னைப்பொலி வார்க வுத்துவம்
மாதி ருக்குலா வற்ச னைப்புயல்
  வண்ண னைப்புக ழெவ்வுண் மாயனைத்
தாதி ருக்கு வீக்கிச நத்தமா
  தரமு டன்றுதி யாற்று நெஞ்சமே.

இதன் பொருள்:

போது = தாமரைப் புட்பத்தில், இருக்கும் = வாசமாயி ருக்கும், நான்கு ஆசியன்=நான்கு முகத்தையுடைய பிரம தேவன், சமன்=இயமன், பொன்=அழகிய, கரத்து=கை யினிடத்தில், அயராது = வருந்தாது, உற = பதவியில் பொருந்தி இருக்க, சதா=எப்பொழுதும், ஓது இருக்கு = இருக்கு வேதத்தில் சொல்லப்பட்ட, மாண்பு = பெருமை யுடைய, சோதியை=மகாவிஷ்ணுவை, ஊக்கனை = உள்ளக் கிளர்ச்சியுடையவனை, பொலிவு ஆர்=பிரகாசம் பொருந்திய, கௌஸ்துவம் = கௌஸ்துவாபரணம், மா = பெருமை பொருந்திய, திரு=மகாலட்சுமி, குலாவு=வாசஞ் செய்யும், வற்சனை = மார்பனை, புயல்=நீர்கொண்ட மேகம் போலும், வண்ணனை=உருவத்தை உடையவனை, புகழ்=கீர்த்தி பொ ருந்திய, எவ்வுள் மாயனை=திருஎவ்வுளூர் வீரராகவனை, தா= வலிமையான, திருக்கு=குற்றங்களை, வீக்கி=நீங்கச் செய்து, சநத்தம்=சதாகாலமும், ஆதரமுடன்=ஆசையுடன், துதி= தோத்திரம், ஆற்று = செய்வாய், நெஞ்சமே = மனமே, என்றது. 22

மேதி னிக்குளின் புற்ற னூரதம்
  வேட்கை யாய்ப்பணிந் தேத்தின் மாந்தர்காள்
சோதி நின்றமா மணியெ னத்திகழ்
  தூய்வை குந்தமுற் றென்று றத்தரும்
போதி னிப்பிர சத்தை வண்டுணும்
  பொங்க ரெவ்வுண்மாற் பிஞ்ச கன்வரை
மாதி னுக்குரை நாமன் வாமனன்
  மாத வன்பரந் தாமன் பாதமே.

**இதன் பொருள் :**

மேதினிக்குள் = உலகத்தில், இன்புற்று = இன்பம் பொருந்தி, அனூரதம்=சதா காலமும், வேட்கையாய்=ஆசையாய், பணிந்து=சேவித்து, ஏத்தில்=தோத்திரஞ் செய்யில், மாந்தர்காள்=மனிதர்களே, சோதி=பிரகாசம், நின்ற=நிலை பெற்ற, மா=மகத்தாகிய, மணியென=மாணிக்கம் போல், திகழ்=ஒளிவு பொருந்திய, தூய்=பரிசுத்தமுள்ள, வைகுந் தம் = பரமபதம், பெற்று=சேர்ந்து, என்றும்=எப்பொழுதும், உற=வாசஞ்செய்ய, தரும்=கொடுக்கும், போது=புட்பத்தின், இனிப்பு=மதுரமுள்ள, இரசத்தை=தேனை, வண்டுணும்=வண்டுகள் குடிக்கின்ற, பொங்கர்=மரச்செறிவுள்ள, எவ்வுள் = திருஎவ்வுளூர், மால் =மகாவிஷ்ணு, பிஞ்ஞகன் = சிவபெருமான், வரை மாதினுக்கு=மலையரசன் குமாரத்தியாகிய பார்வதிக்கு, உரை = உபதேசஞ்செய்த, நாமன் = திருநாமத்தையுடையவன், வாமனன் = வாமனவதாரன், மாதவன் = மாதவனென்னும் பெயரினன், பரந்தாமன் பாதமே=பரந்தாமன் திருவடி — என்றது. 23

பரும ளச்சும னசவ லங்கலைப்
  பாங்கு டன்குழற் புனையு மாச்சியர்
இருகு றும்பொறை நேரு ராதர
  மேயு ரத்துற தழுவு மன்புறும்
ஒருகி ளைக்குழற் கொண்ட கொண்டலே
  ஓங்கு பத்திரச் செவ்வி துண்டமார்
குருகு துன்னுமுய் யான மெவ்வுள்வாழ்
  கோம னேசிறி யேற்க ருட்செயே.

இதன் பொருள் :

பரிமளம்=வாசனையுள்ள, சுமனசம்=மலரால் தொடுத்த அலங்கலை=மாலையை, பாங்குடன் குழற் புனையு மாய்ச்சியர்= அழகு பொருந்திய கூந்தலிற்றரிக்கும் யாதவஸ்திரீகள், இரு குறும் பொறை=இரண்டு பர்வதம், நேர் = சமமாக, உரா தரம்=கொங்கைகள், ஏய்=பொருந்திய, உரத்து=மார்பில், உற=பொருந்த, தழுவும்=அணைத்துக் கொள்ளும், அன்பு றும்=இஷ்டம் பொருந்திய, ஒருகிளைக்குரல்=ஒரு மூங்கிற் குழலை, கொண்ட=கரத்திலே பிடித்த, கொண்டலே=நீர் கொண்ட மேகம் போன்ற ரூபனே! ஓங்கு=உயர்ந்த, பத்தி ரம்=இறகு, செவ்வி=அழகிய, துண்டம்=மூக்கும், ஆர்= பொருந்திய, குருகு=பட்சிகள், துன்னும் = நெருங்கியிருக் கின்ற, உய்யானம்=சோலைகள் சூழும், எவ்வுள்=திரு எவ் வுள் நகரில், வாழ்=வாழ்கின்ற, கோமனே=தலைவனே, சிறியேற்கு=சிறியவனாகிய எனக்கு, அருள் செய் = கிருபை செய்வாய்; என்றது. 24

சிறைய டர்கலு ழத்து கிர்க்கரா
செய்ய வட்டழு வும்பு யாசலா
நிறைக திர்செறி மகர குண்டலா
நென்ன லாயர்கட் குற்ற வாதரா
மறைமு தற்பக வாவெ னத்துதி
வாஞ்சை பாகவ தற்க லாலெளி
திறைய யன்சுரர் காண லாகுமோ
எந்தை யாந்திரு வெவ்வுண் மாலையே.

இதன் பொருள் :

சிறை = சிறகுகள், அடர் = நெருங்கியிருக்கின்ற, கலுழன்=கருடனை, துகிற்கரா=கொடியாகக் கையில் கொண் டவனே! செய்யவள்=மகாலட்சுமியை, தழுவும் = தழுவிக் கொள்ளும், புயாசலா=புயம் மலையைப் போன்றவனே! நிறை=நிறைந்த, கதிர்=கிரணங்கள், செறி=மிகுந்த, மகர குண்டலா=மகர குண்டலத்தையுடையவனே! நென்னல்= முன்னாளில், ஆயர்கட்கு=யாதவர்களுக்கு, உற்ற = அன்பு பொருந்திய, ஆதரா=ஆதரவானவனே! மறை=வேதங் களுக்கு, முதல்=முதன்மையான, பகவா=பகவனே, என=

என்று, துதி=தோத்திரம் செய்யும், வாஞ்சை=மன இஷ்டத்தையுடைய, பாகவதற்கலால் = உம்மிடத்தில் அன்புடையவர்க்கு அல்லாமல்—மற்றவர்களுக்கு, எளிதில்=சுலபத்தில், இறை = சிவபெருமான், அயன் = பிரமதேவன், சுரர் = தேவர்கள், காணலாகுமோ=பார்க்கக் கூடுமோ, எந்தையாம்=என் தந்தையாகிய, திருஎவ்வுள் = அழகிய எவ்வுளூரில் விளங்கிய, மாலை = வீரராகவப் பெருமானை—என்றது—ஏ ஈற்றசை. 25

மாலை வீக்கியே யருள்ப தங்கனை
வைய மெங்கணு நிறைசர் வேசனை
சோலை சூழ்திரு வெவ்வுண் மாயனை
தோமில் வெண்ணிழு துண்ட வாயனை
வேலை யைக்கடந் தன்றி ராவணன்
வீட வெஞ்சர மெய்யு மையனை
காலை மாலையு மேத்தி நெஞ்சமே
கண்ண னற்பத மேவி யுய்வையே.

**இதன் பொருள் :**

மாலை = அஞ்ஞானமாகிய இருளை, வீக்கியே = நீங்கச் செய்து, அருள் = கிருபைகூரும், பதங்கனை = சூரியனை, வையம் எங்கணும் = பூவுலகத்தில் எந்த இடங்களிலும், நின்ற = பரவியிருக்கின்ற, சர்வேசனை = எல்லாவற்றுக்கும் கடவுளானவனை, சோலை=பூஞ்சோலைகள், சூழ் =சூழ்ந்திருக்கும், எவ்வுள்=திரு எவ்வுளூர், மாயனை=வீரராகவனை, தோமில்=குற்றமில்லாத, இழுது=வெண்ணெய், உண்ட = திருடியுண்ட, ஆயனை = ஆயர் குலத்தில் வளர்ந்தவனை, வேலை=சமுத்திரத்தை, கடந்து=தாண்டி, அன்று = முன்னாளில், இராவணன் = இராவணனென்னும் அசுரன், வீட= மரணமடைய, வெஞ்சரம்=கடூரமாகிய பாணங்கள், எய்யும்= பிரயோகஞ் செய்த, ஐயனை=சுவாமியை, காலை மாலையும் = உதயகாலத்திலும்—மாலைக்காலத்திலும், ஏத்தில் = துதிசெய்யில், நெஞ்சமே=மனமே, கண்ணன் நற்பதம்=கிருஷ்ணனைக அவதரித்தவனது நல்ல பதவி, மேவி = சேர்ந்து, உய்வையே=உயிர் வாழ்ந்திருப்பாய்—ஏ—ஈற்றசை. 26

மேவு மக்கர மெட்டி லேதிகழ்
விண்டு வேநினை யூழ்த்து மன்பர்கள்
நாவு றைசெழும் பிரம மேமிகு
ஞான வாரிநி வாத தீபமே
கோவு லாவிய நேமி வால்வளைக்
கொற்ற வாவெனை யாட்கொள் வாய்சிறை
மாவு றைந்திசை யார்க்கு மம்புய
வாவி சூழ்திரு வெவ்வுள் வாசனே.

**இதன் பொருள் :**

மேவும் = மகிமை பொருந்திய, அக்கரம் எட்டிலே = அஷ்ட அட்சரத்திலே, திகழ் = பிரகாசிக்கின்ற, விண்டுவே = மகாவிஷ்ணுவே, நினை = உம்மை, ஊழ்த்து = தியானிக்கப் பட்ட, அன்பர்கள் = அன்பையுடையவர்கள், நாவுரை = நாவி லேயிருக்கின்ற, பிரமமே = மந்திரமானவனே! மிகு = அதிக மாகிய, ஞானவாரி = ஞான சமுத்திரமே! நிவாத தீபமே = எப்பொழுதுங் கெடுதியில்லாத தீபம் போன்றவனே! கோ = பிரகாசம், உலாவிய = பொருந்திய, நேமி = சக்கரம், வால் = வெண்மையுள்ள, வளை = பாஞ்சசன்னியம்—உடைய, கொற் றவா = வலிமையுள்ளவனே! எனை ஆள் = என்னை அடிமை கொள்வாய், சிறை = இறகினையுடைய, மா = வண்டுகள், உறைந்து = இருந்து, இசை = இராகம் போல, ஆர்க்கும் = சப்திக்கும், அம்புயம் = தாமரை மலர்கள் நெருங்கிய, வாவி சூழ் = தடாகஞ் சூழ்ந்த, திரு எவ்வுள் = அழகு பொருந்திய எவ்வுளூரில், வாசனே = வாசஞ்செய்பவனே! என்றது 27

வாசு கிக்கட மாக மந்திர
மாதி ரங்கவ மாக நாட்டிவெண்
டேசு கோண்மக ரால யந்தனிற்
றேழு லாவமு தம்வ ரப்புரி
கேசு வாபவப் புரியு ருதுநின்
கிளர்ப தப்புரி புல்க நல்கருண்
மீச ரப்பன சப்பி ழிச்செறு
மேவு மெவ்வுளிற் றங்கு மங்குலே.

வாசுகி = வாசுகி என்னும் பாம்பானது, கடகமாக = கயிறாக, மந்தரம் என்னும் = மந்தரம் என்று சொல்லப்பட்ட, மாதிரம் = மலை, கவமாக = மத்தாக, நாட்டி = நிறுத்தி, வெண் = வெண்மையுள்ள, தேசுகொள் = பிரகாசம் கொண்ட, மகராலயந்தனில் = பால் சமுத்திரத்தில், தேம் = மதுரமுள்ள, அமுதம் = அமுதமானது, வரப்புரி = வரும்படி செய்த, கேசவா = கேசவனென்னுந் திருநாமமுள்ளவனே! பவப்புரி உறாது = ஜனனமாகிய கட்டுக்குள்ளாகாமல், நின் = உம்முடைய, கிளர் = ஒளிபொருந்திய, பதம்புரி = பாதத்தின் மிசை ஆசையானது, புல்க = பொருந்தியிருக்க, நல்கு அருள் = அருள் தருவாய், மீசரம் = அதிகமாக, பனசம் = பலாவின், பிழி = சாறுகள், செறு = வயல்களில், மேவும் = பாய்கின்ற, எவ்வுளில் = திருஎவ்வுளூரில், தங்கும் = இருக்கின்ற, மங்குலே = நீர் கொண்ட மேகம் போலும் வடிவனே! என்றது. 28

தங்க மேனி தீயனை சவட்டிய
 தற்ப ராபொது வேவி ளித்தமா
தங்க மார்வமு லாவி காந்தசெஞ்
 சக்க ராயுதா மேன்மை யாளர்வே
தங்க ளாவலுற் றோது மோதைவி
 சால்பெ வுட்பரா நின்ப தத்தில்யான்
தங்க நன்கருட் செய்கு வாயகந்
 தன்னி லாற்றலா மோத நண்ணியே.

**இதன் பொருள் :**

தங்கம் = உயர்ந்த பொன் போன்ற, மேனி = நிறமுள்ள தீயனை = கொடியவனுகிய இரணியனை, சவட்டிய = அழித்த, தற்பரா = கர்த்தனே! பொதுவே = பொதுவாகவே, விளித்த = ஆதிமூலமே என்று அழைத்த, மாதங்கம் = கஜேந்திரனென்னும் யானையை, ஆர்வம் = ஆசை, உலாவி = பொருந்தி, காத்த = இரட்சித்த, செஞ்சக்கராயுதா = சிறந்த சக்கராயுதனே! மேன்மையாளர் = பிராமணர்கள், வேதங்கள் = வேதங்களை, ஆவலுற்று = அன்புபொருந்தி, ஓதும் = வேத அத்யயனஞ் செய்யப்பட்ட, ஓதை = சத்தம், விசால்பு = அதிகமான, எவ்வுள் = திருஎவ்வுளூருடைய, பரா = கர்த்தனே! நின் = உம்முடைய, பதத்தில் = திருவடியின்கண், யான் =

நான், தங்க = தங்கியிருக்க, நன்கு = மிகுந்த, அருள்செய் = கிருபைசெய்வாய், அகந்தனில் = நின்மனத்தில், ஆற்றல் = மிகுந்த, ஆமோதம் = சந்தோஷம், நண்ணியே = பொருந்தியே! என்றது. 29

நண்ணு தற்கரும் பிரம மீயுமெந்
நாய காசது ராசி யன்சுரர்
கண்ணு தற்கரும் பிரம மேசெழுங்
கனலி நாப்பணிற் றங்கு மெய்த்தவர்
எண்ணு தற்கரும் பிரம நல்குமாண்
பெவ்வு ளாரண வென்றி றைஞ்சுவோர்
வண்ணு தற்கரும் பிரச வோதியர்
மருளி லாதுறை வார்ப தத்தரோ.

**இதன் போருள்:**

நண்ணுதற்கு = ஆன்மாக்களுக்குக் கிடைப்பதற்கு, அரும் = அருமையாகிய, பிரமம் = முத்தி, ஈயும் = கொடுக்கும், என் = எனது, நாயகா = நாயகனே! சதுர் = நான்கு, ஆசியன் = முகத்தையுடைய பிரமதேவன், சுரர் = தேவர்கள், கண் = நேத்திரமானது, நுதல் = நெற்றியிலுள்ள சிவபெருமானுக்கு, அரும் = அருமையாகிய, பிரமமே = மந்திரமே, செழும் = செழுமையாய் வளர்ந்தெரியும், கனலி = அக்கினியின், நாப்பண் = மத்தியினில், தங்கும் = தங்கிநிற்கும், மெய்த்தவர் = உண்மையாகிய தவத்தையுடையவர், எண்ணுதற்கு = நினைப்பதற்கு, அரும் = அருமையுள்ள, பிரமம் = தவப்பலனை, நல்கும் = கொடுக்கும், மாண்பு = பெருமை பொருந்திய, எவ்வுள் = திருஎவ்வுளூர், நாரண = நாராயண என்று, என்றும் = எந்நாளும், இறைஞ்சுவோர் = வணங்குவோர், வண் = அழகிய, நுதல் = புருவத்தையும், கரும் = கறுத்த, பிரசம் = வண்டுகள் மொய்க்கப்பட்ட, ஓதியர் = மலர் புனைந்த கூந்தலுள்ள மாதர்கள், மருள் = மயக்கம், இலாது = இல்லாது நீங்கி, உறைவார் = இருப்பார், பதத்து = பரமபதத்தில்; அரோ = அசைச்சொல். 30

வேறு

உறைவான வர்க்கிணையா யுய்திடலா மூப்பின்றி
நறைவார்கு ழற்கனக னகவல்லி நாயகனை
அறைவாச்சி யத்துழனி யாரெவ்வுள் மாயவனை
நிறைவாஞ்சை யாயிறைஞ்சி நெஞ்சேநீ துதிப்பாயால்.

**இதன் பொருள் :**

உறை = வாழ்நாள் மிகுந்த, வானவர்க்கு = தேவர்களுக்கு, இணையாய் = சமமாக, உய்திடலாம் = உயிர் வாழ்ந்திருக்கலாம், மூப்பு = விருத்தாப்பியம், இன்றி = இல்லாமல், நறை = அகிற்புகை சந்தனப்புகைகள் மணக்கும், வார் = நீட்சியுள்ள, கனம் = கரிய மேகத்தையொத்த, குழல் = கூந்தலையுடைய, கனகவல்லி = கனகவல்லி என்னும் பெயர்பெற்ற மகாலட்சுமியின், நாயகனை = புருஷனை, அறை = மோதப்பட்ட, வாச்சியத்துழனி = வாத்தியங்களின் சத்தமானது, ஆர் = குறைவில்லாது முழங்கப்பட்ட, எவ்வுள் = திருஎவ்வுள் க்ஷேத்திரத்தில் விளங்கிய, மாயவனை = வீரராகவப்பெருமானை, நிறை = நிறைந்த, வாஞ்சையுடன் = ஆசையுடன், நெஞ்சமே = மனமே, நீ = நீ, துதிப்பாய் = தோத்திரஞ் செய்வாய், ஆல்—அசை. 31

ஆலக்கு ழைத்துயின்ற வண்ணலையெவ் வுட்பரனைச்
சீலத்து டன்சநத்தஞ் சிந்தையினிற் றியானிக்கில்
ஞாலத்தி லாக்கநனி நண்ணியுறைந் தேயீற்று
காலத்தி னிற்பதவி கண்ணெவ்வ மேவுவரோ.

**இதன் பொருள் :**

ஆலக்குழை = ஆலந்தளிரில், துயின்ற = திருக்கண் வளர்ந்தருளிய, அண்ணலை = பெருமையுடையவனை, எவ்வுட்பரனை = திருஎவ்வுளூரில் இருக்கும் கர்த்தனை, சீலத்துடன் = பரிசுத்தமாகிய மனத்துடன், சநத்தம் = சதாகாலமும், சிந்தையினில் = மனத்தில், தியானிக்கில் = நினைக்கில், ஞாலத்தில் = பூவுலகத்தில், அக்கம் = அயிசுவரியம், நனி = மிகுதியாக, நண்ணி = பொருந்தி, உறைந்து = இருந்து, ஈற்று = முடிவு, காலத்தினில் = காலத்தில், பதவிகண் = பதவியினிடத்தில், எவ்வம் = களிப்பை, மேவுவர் = அடைவர் ; அரோ—அசைநிலை. 32

எவ்விடமு நின்புகழை யேத்தன்பர் பவவரிக்கு
நவ்வியெனப் பிறங்கெவ்வு ணுயகனே மானிடர்காள்
வெவ்விடரைத் தீர்த்துபெட மெஞ்ஞானத் தைத்துவலிற்
செவ்வியுட னல்கென்று சிந்தனைசெய் மின்னுவந்தே.

**இதன் பொருள் :**

எவ்விடமும் = எந்த இடங்களிலும், நின்புகழை = உம்முடைய கீர்த்தியை, ஏத்தும் = துதிசெய்யும், அன்பர்கள் = அன்புள்ள பாகவதர்கள், பவம் = ஜனனமாகிய, வரிக்கு = சமுத்திரத்துக்கு, நவ்வியென = மரக்கலம் போல, பிறங்கு = பிரகாசிக்கின்ற, எவ்வுள் = திருஎவ்வுளூரில் இருக்கும், நாயகனை = சர்வேச்வரனை, மானிடர்காள் = மாந்தர்களே! வெவ்விடரை = கடூரமான இடர்களை, தீர்த்து = நீக்கி, பெடம் = மிகுந்த, மெஞ்ஞானத்தை = நல்ல அறிவை, துவலில் = சீக்கிரத்தில், செவ்வியுடன் = அழகுடனே, நல்கென்று = கொடும் என்று, சிந்தனை = தியானம், செய்மின் = செய்யுங்கள், உவந்து = களிப்புற்று, என்றது. 33

தேக்கின்மிடற் றற்றுகக்கு சேசயச்சூ ழிக்கயன்மீன்
மீக்கதழ்வு டன்பாயும் வீறுதிரு வெவ்வுளினில்
ஊக்கமுட னேயுறையு மொண்வீர ராகவனே
நோக்கமதை யென்மீதில் நோக்காய ருட்டழைந்தே.

**இதன் பொருள் :**

தேக்கின் = பாக்கு மரத்தின், மிடறு = கழுத்து, அற்று = ஒடிந்து, உக = விழ, குசேசயம் = தாமரை மலருள்ள, சூழி = தடாகத்தில் வசிக்கும், கயல் மீன் = கயல் மீனனது, மீ = மேல், கதழ்வுடன் = வேகத்துடன், பாயும் = பாயும், வீறு = பெருமையுள்ள, திருஎவ்வுளினில் = திருஎவ்வுள் என்னும் க்ஷேத்திரத்தினில், ஊக்கமுடன் = உள்ளக்களிப்புடனே, உறையும் = இருக்கும், ஒண் = அழகிய, வீரராகவனே = வீரராகவனென்னும் திருநாமனே! நோக்கமதை = உமது கிருபா நேத்திரத்தை, என்மீதில் = என்பேரில், நோக்குவாய் = பார்த்தருளுவாய், அருள் தழைந்தே = கிருபை மிகுந்தே—என்றது. 34

தழைபத்தி ரச்சிகண்டி டையலர்கே சத்தினைவான்
மழையென் றகங்களித்து வாணிபுரி யெவ்வுளினில்
விழைவுடனே யக்கம்வளர் வேட்கையனே நாயேன்செய்
பிழைபொறைசெய் தாவலுடன் பேரருளைச் செய்வாயே.

**இதன் பொருள் :**

தழை = தழைந்த, பத்திரம் = சிறகினையுடைய, சிகண்டி = மயில், தையலர் = மாதர்களின், கேசத்தினை = அளகபாரத்தை, வான் = ஆகாயத்தில் சஞ்சரிக்கும், மழை = மழை மேகம், என்று = என்று, அகம் = மனம், களித்து = சந்தோஷம் அடைந்து, வாணிபுரி = கூத்தாடுகின்ற, எவ்வுளினில் = திரு எவ்வுள் நகரத்தில், விழைவுடனே = கலத்தலாக, அக்கம் வளர் = திருக்கண்வளராநின்ற, வேட்கையனே = ஆசையுடையவனே! நாயேன்செய் = நாய் போன்ற யான் செய்த, பிழை = குற்றங்களை, பொறைசெய்து = பொறுத்து, ஆவலுடன் = ஆசையுடன், பேரருளை = பெருத்த கிருபையை, செய்வாயே = செய்திடுவாய் — என்றது. 35

செய்யாள் வசிக்குதடச் செப்பனே நின்னடிமை
செய்யாத மையன்மனச் சேயனெனி னும்புரப்பாய்
மொய்யாம்ப றுய்த்துபண் முழக்கேல்வை யுஞ்சால
மொய்யாம்பற் சூழும்வன முதிரெவ்வுள் நாரணனே.

**இதன் பொருள்:**

செய்யாள் = மகாலட்சுமி, வசிக்கும் = வாசம் செய்யும் தடம் = விசாலம் பொருந்திய, செப்பனே = மார்பையுடையவனே! நினது = உம்முடைய, அடிமை = அடிமைத்தனம், செய்யாத = நின்பாற் செய்யாத, மையல் மனம் = மயக்கந் தங்கிய மனமுடைய, சேயனெனினும் = சிறுவனாக இருந்தாலும், புரப்பாய் = இரட்சிப்பாய், மொய் = வண்டுகள் ஆம்பல் = புட்பத்திலுள்ள மதுவை, துய்த்து = குடித்து, பண் = இசை, முழக்கும் = சப்திக்கின்ற, ஏல்வையும் = புட்கரணியும், சால = மிகுதியாக, மொய் = போர்க்குரிய, ஆம்பல் = யானைகள், சூழும் = சூழ்ந்திருக்கின்ற, வனம் = பூஞ்சோலைகள், முதிர் = முதிர்ந்த, எவ்வுள் = திருஎவ்வுளூர், நாரணனே = ஸ்ரீமந் நாராயணனே! என்றது. ஏ — ஈற்றசை. 36

நாரமுள் பவத்தினைப்போல் நண்ணியயாக் கைத்திரமாய்
வாரமுளத் திற்பரவி வாடவனி வேட்கைமறந்
தீரமுறுன் வாரிசத்தாள் இன்புடனெப் போழ்திறைஞ்சி
சீரமைய நன்கருட்செய் திருஎவுளூர் மாதவனே.

**இதன் பொருள் :**

நாரம்=நீரிலே, உள்=உள்ளே இருக்கின்ற, பவ்வம்= நீர்க்குழியைப்போல் — அதைப்போல — நண்ணிய=உண்டாயிருக்கின்ற, யாக்கை = சரீரம், திரமாய் = நிலையான தென்று, வாரம்=ஆசை, உளத்தில்=மனத்தில், பரவு= அதிகரித்து, வாடவனி=வாடும் அவனி—அதாவது--வருத்தப் படும் உலகத்தின், வேட்கை=விருப்பத்தை, மறந்து=மறந்து விட்டு, ஈரம் உறும்=அன்பு பொருந்திய, உன்=உம்முடைய, வாரிசத்தாள்=தாமரை மலர் போன்ற திருவடியை, இன்புடன் = இஷ்டத்துடன், எப்பொழுதும் = சதா காலமும், இறைஞ்சி = வணங்கி, சீர் = சிறப்பு, அமைய = பொருந்தி யிருக்க, நன்கு=உயர்வுள்ள, அருள்செய் =கிருபை செய்வாய், திரு = சிறப்புள்ள, எவ்வுள் = எவ்வுளூரென்னுந் தலத்தில் தங்கிய, மாதவனே =வீரராகவப்பெருமானே! 37

மாதவர்போற் றும்வெளிறு வலம்புரிவள் ளார்பரிதி
மாதவர்திண் கதைகட்கம் வாய்ந்தவிண்டைப் பாணியனே
ஓதவறி யாதவென்றன் உள்ளுஞற்ற வேயருள்வாய்
ஓதவரித் துஞ்சல்விட்டெவ் வுண்மருவுஞ் சுரர்கோவே.

**இதன் பொருள் :**

மா = மகத்தாகிய, தவர் = முனிவர்கள், போற்றும் = தோத்திரஞ்செய்யும், வெளிறு = வெண்மை பொருந்திய, வலம்புரி=பாஞ்சசன்னியம், வள்=கூர்மையுள்ள, ஆர் = வெற்றி நிறைவுற்ற, பரிதி=சக்கரம், மா=அழகிய, தவர்= சார்ங்கமென்னும் வில், திண்=வலிமை பொருந்திய, கதை = தண்டு, கட்கம்=வாள், வாய்ந்த = தங்கிய, இண்டை=தாமரை மலர் நிகர்த்த, பாணியனே = திருக்கரத்தையுடையவனே! ஓத =உம்மைத் துதிசெய்ய, அறியாத = தெரியாதவனாகிய, என்றன் =என்னுடைய, உள்=மனம், உஞற்ற = முயற்சி செய்ய, அருள்வாய் = கிருபை செய்வாய், ஓதவரி = அலைகளுள்ள சமுத்திரத்தில், துஞ்சல்=நித்திரை செய்வதைவிட்டு, எவ்வுண் மருவும்=திருஎவ்வுளூர் தலத்தில் வாசஞ்செய்யும், சுரர் கோவே=தேவர்களுக்கு நாயகனே! 38

கோகனகத் தாமமதிற் குலவியநால் வத்திரனுக்
கோகையுட னந்தணர்வாக் கோதிமமாய் வந்துரைத்த
சேகிலிகன் னற்கமுகஞ் செறியுமெவுட் பள்ளியனே
மாகருடப் பார்வையைப்போல் மைந்தன்மிசைப்
[பார்த்தருளே.

**இதன் பொருள் :**

கோகனகத் தாமமதில் = தாமரைப் புட்பத்தில், குலவிய = வாசஞ்செய்கின்ற, நால்வத்திரனுக்கு = நான்கு முகமுள்ள பிரமதேவனுக்கு, ஓகையுடன் = சந்தோஷத்துடன், அந்தணர் வாக்கு = வேதங்களை, ஓதிமமாய் = அன்னப்பட்சி வடிவமாய், வந்து உரைத்த = வந்து போதனை செய்த, சேகிலி = வாழை, கன்னல் = கரும்பு, கமுகம் = பாக்கு மரம், செறியும் = மிகுந்திருக்கின்ற, எவ்வுள் = திருஎவ்வுளூர் க்ஷேத்திரத்தில், பள்ளியனே = சயனங் கொண்டவனே! மா = அழகிய, கருடன் = கருடாழ்வானது, பார்வையைப்போல் = பார்வைபோல, மைந்தன் மிசை = உம்முடைய புத்திரனாகிய என்பேரில், பார்த்தருள் = கிருபைக்கண் நோக்குவாய் — என்றது : ஏ—ஈற்றசை. 39

பார்த்திவத்தி லுன்பதிகள் பன்னுசத வட்டமத்திற்
தீர்த்தமகி மைச்சிறந்த திருவெவ்வுட் சினகரத்திற்
கீர்த்திகிளர் முனிசாலி கோத்திரருக் காய்கிருபை
வாய்த்துவந்த தன்மையைப்போல் மதலைமுன்வந்
[தேயருளே.

**இதன் பொருள் :**

பார்த்திவத்தில் = உலகத்தில், நின் = உம்முடைய, பதிகள் = திருப்பதிகள், பன்னும் = சொல்லப்பட்ட, சதவட்டமத்தில் = நூற்று எட்டில், தீர்த்த மகிமை = விருதாபநாசனி தீர்த்தத்தின் பெருமையுள்ளது, சிறந்த = சிறப்புப் பொருந்திய, திருஎவ்வுள் = திருஎவ்வுளூர், சினகரத்தில் = கோயிலில், கீர்த்தி = புகழ்ச்சி, கிளர் = எங்கும் விளங்கிய, முனி = முனிவனாகிய, சாலி கோத்திரருக்காய் = சாலிகோத்திர னென்னும்

பக்தனுக்கு, கிருபை = அருள், வாய்ந்து = பொருந்தி, வந்த = சேவைசாதிக்க வந்த, தன்மையைப் போல் = குணத்தைப் போல, மதலை முன் வந்தேயருளே = இச்சிறுவன் முன்னே வந்து தரிசனம் கொடுத்து அருளவேண்டும் — என்றது : ஏகாரம்—ஈற்றசை. 40

வேறு

அருவிபாய்த ராதரத்தை யனையமொய்ம்பு தன்னிலே
மருவிநோத குல்லைதொங்கல் வனைபராவன் நோயினல்
வெருவிநின்ப தம்புகுந்தேன் விரைவிலஞ்ச லென்றுரை
தருவிசும்ப ளாவுமெவ்வு டாமமேவும் வாமனே.

இதன் பொருள் :

அருவிபாய் = மலையருவிகள் சொரிகின்ற, தராதரத்தை = பர்வதத்தை, அனைய = சமமான, மொய்ம்புதன்னிலே = திருத்தோளினிடத்து, மரு = வாசனை, விநோதம் = அதிகமாயுள்ள, குல்லை தொங்கல் = துளபமாலையை, வனை = தரித்திருக்கும், பரா = கர்த்தனே ! வன் = வலிமையுள்ள, நோயினல் = வியாதியினல், வெருவி = பயந்து, நின் = உம்முடைய, பதம் புகுந்தேன் = சரணுகதியடைந்தேன், விரைவில் = சீக்கிரத்தில், அஞ்சல் = பயப்படாதே, என்று உரை = என்று திருவாய், மலரவேண்டும், தரு = விருட்சங்கள், விசும்பு = ஆகாயமளவும், அளாவும் = உயர்ந்திருக்கின்ற, எவ்வுள் = திருஎவ்வுள், தாமம் = நகரத்தில், மேவும் = வாசம் பொருந்திய, வாமனே = அழகுள்ளவனே ! என்றது—ஏ—ஈற்றசை. 41

வாமமம்பி கைக்களித்த வன்றுதிக்கு மாட்சிமன்
நாம வெம்மிடங்க ரால்ந விந்தசிந்து ரத்தினை
சேமமுற்ற ளித்தவெவ்வு டேவனேவி தப்புடன்
மாமனத்தின் மோதம்வாய்ந்து வண்ணருட்செ
[யெண்மையே.

இதன் பொருள் :

வாமம் = இடப்பாகத்தை, அம்பிகைக்கு = பார்வதிக்கு, அளித்தவன் = கொடுத்தவனுகிய சிவபெருமான், துதிக்கும் = தோத்திரஞ்செய்யும், மாட்சிமன் = பெருமை மிகுந்த, நாம = திருநாமத்தையுடையவனே ! வெம் = கடூரமான, இடங்

கரால் = முதலேயினுல், மெலிந்த = வருத்தப்பட்ட, சிந்துரத்தினே = கசேந்திரனென்னும் யானேயை, சேமம் = மனத்தில் அன்பு கொண்டு, உற்று = அவ்விடம் வந்து, அளித்த = இரட்சித்த, எவ்வுள் = திருஎவ்வுள் நகரத்துற்ற, தேவனே = கர்த்தனே! விதப்புடன் = சீக்கிரத்தில், மா மனத்தில் = பெருமையுள்ள உமது மனத்தில், மோதம் = சந்தோஷம், வாய்ந்து = பொருந்தி, வண் அருள் செய் = மேன்மையான அருளேச் செய்வாய், ஒண்மையே = மிகுதியாய், என்றது. 42

ஒண்ணிலா சடைப்பிரானே யுற்றபிண்ட நீக்கினே
விண்ணியங்கு சுரரிடுக்கண் வீக்கியே புரந்தனே
உண்ணனி தியங்குமென்ற நோயொழிப்ப தருமையோ
எண்ணிய பொருட்களீயு மெவ்வுள்வாழ்க்கை யேந்தலே.

**இதன் பொருள்:**

ஒண் = அழகிய, நிலா = மூன்றும் பிறை, சடை = சடா பாரத்தில் தரித்த, பிரானே = சிவபெருமானே, உற்ற = அடைந்த, பிண்டம் = கபாலங்கொண்டு இரந்ததை, நீக்கினே = நீங்கச்செய்தனே, விண் = சுவர்க்கலோகத்தில், இயங்கு = வாசம்செய்கின்ற, சுரர் = தேவர்கள், இடுக்கண் = துன்பங்களே, வீக்கியே = நிவர்த்திசெய்து, புரந்தனே = இரட்சித்தாய், உள் = மனத்தில், நனி = மிகுதியாக, தியங்கும் = தியக்கம் கொள்ளும், என்தன் = என்னுடைய, நோய் = வியாதியை, ஒழிப்பது = நிவர்த்தி செய்வது, அருமையோ = அருமையான காரியமோ! எண்ணிய = நினேத்த, பொருட்கள் = பொருள்களே, ஈயும் = கொடுக்கும், எவ்வுள் = திருஎவ்வுள், வாழ்க்கை = நகருற்ற, ஏந்தலே = பெருமையிற் சிறந்தவனே! 43

தலேயலங்கு கங்கையிந்து தாதலர்ந்த மன்றன்ம
தலேயுலங்கல் வைத்தசெஞ்ச டைப்பிரான் வணங்குமேல்
தலேயலங்க னகதயைசெய் காமபால னுகிகைத்
தலேயுங்க வின்செயக்கொ டகைமையெவ்வுண் மாயனே.

**இதன் பொருள் :**

தலை = சிரசினிடமாக, அலங்கு = அசையப்பெற்ற, கங்கை = கங்காபவானி, இந்து = சந்திரன், தாது = புஷ்பத் தாதுகள், அலர்ந்த = மலரப்பெற்ற, மன்றல் = வாசனையுள்ள, மதலை = கொன்றை, அலங்கல் = மாலை, வைத்த = வைத்திருக்கும், செஞ்சடைப்பிரான் = சிவந்த சடையுள்ள பரமசிவன், வணங்கும் = பணியும், மேல் = மேலாகிய, தலை = இடத்தில், அலங்கும் = விளங்கும், அனக = கர்த்தனே ! தயைசெய் = அடியேனுக்குக் கிருபை செய்வாய்! காமபாலனுகி = பலபத்திரனுக அவதரித்து, கைத்தலை = அஸ்தத்தில், அலம் = கலப்பையாயுதம், கவின்செயக்கொள் = அழகு செய்யும்படி கொண்ட, தகைமை எவ்வுள் = பெருமை பொருந்திய திருஎவ்வுள் நகரத்தில் விளங்கிய, மாயனே = மகாவிஷ்ணுவே ! என்றது. 44

மாயையைப் படைத்தளித் தழிக்குமுன்றன் மாண்பினைச்
சேய்வணன் விகங்கவூர்தி சிந்துரத்த னுணர்வரோ
தூய்பராவு சுருதியோதை சூழுமெவ்வு ளுதனே
நோய்கள்வட்க நின்னருட்கண் ணோக்குவாயென் மீதிலே.

**இதன் பொருள் :**

மாயை = உலகத்தில் மாயங்களை, படைத்து = சிருஷ்டித்து, அளித்து = இரட்சித்து, அழிக்கும் = சம்மாரஞ்செய்யும், உன் தன் = உம்முடைய, மாண்பினை = பெருமையை, சேய் = சிவந்த, வண்ணன் = நிறத்தினையுடைய சிவபெருமான், விகங்கம் = அன்னப்பட்சியை, ஊர்தி = வாகனமாக ஏறிநடத்தும் பிரமதேவன், சிந்துரத்தன் = வெள்ளை யானையாகிய அயிராபதத்தில் ஏறி நடத்தும் இந்திரன், உணர்வரோ = அறிவரோ—அறியார், தூய் பராவு = பரிசுத்தம் மிகுந்த, சுருதி = வேதங்கள், ஓசை = வேதாத்தியனஞ் செய்யும் சத்தம், சூழும் = சூழ்கின்ற, எவ்வுள் = திருஎவ்வுளில் விளங்கிய, நாதனே = கர்த்தனே, நோய்கள் = வியாதிகள், வட்க = நீங்க, நின் = உம்முடைய, அருள் = கிருபை நிறைந்த, கண் = நேத்திரத்தை, நோக்குவாய் = பார்க்க வேணும், என்மீதிலே = என் மேலே ! என்றது. 45

மீதலத்த ளாவிலஞ்சி வீறுமெவ்வு ளூரினில்
காதலுற்று பள்ளிகொண்ட கருணையம்பு ராசியே
மாதலத்த யர்ந்திடாம லேயருள் வழங்குவாய்
சேதனர்க ணிக்கராசி லம்பில்வாழ்க தம்பமே.

**இதன் பொருள் :**

மீதலத்து = ஆகாயதலத்தை, அளாவு = உயர்ந்திருக்கும், இலஞ்சி = மதில், வீறும் = பெருமையுடைய, எவ்வுளூரினில் = திருஎவ்வுள் நகரத்தில், காதலுற்று = ஆசையுண்டாகி, பள்ளி கொண்ட = சயனகோலங் கொண்ட, கருணையம்புராசியே = கிருபா சமுத்திரமே! மாதலத்து = மகத்தாகிய உலகத்தில், அயர்ந்திடாமல் = வருத்தப்படாமல், அருள் = கிருபை, வழங்கு வாய் = கொடுப்பாய், சேதனர் = அறிவுடைய பாகவதர், கணிக்கும் = துதி செய்யும், அராசிலம்பில் = சேடமலையாகிய திருவேங்கடத்தில், வாழ் = வாழ்கின்ற, கதம்பமே = மேகம் போன்றவனே! 46

தம்பமாட் டுதித்துவெய்ய தமனியன் னுரம்பிளந்
தும்பருக்கு முதமளித்த வுண்மைபோல நாயினேன்
கம்பலைத்த விர்த்துநற் களிப்புநல்கு வாய்விளர்
பம்புசஞ்ச லங்குலாவு பண்ணையெவ்வுள் விண்டுவே.

**இதன் பொருள் :**

தம்பமாட்டு = தூணினிடமாக, உதித்து = அவதாரஞ் செய்து, வெய்ய = கொடிய மனமுடையவனாகிய, தமனியன் = தமனியமாகிய பொன்னிறமுள்ள — இரணியன் —, உரம் = மார்பை, பிளந்து = இருபிளவாகச்செய்து, — அவன் உயிரைப் போக்கி, உம்பருக்கு = தேவர்களுக்கு, முதம் = சந்தோஷம், அளித்த = கொடுத்த, உண்மைபோல = நிசத்தைப்போல, நாயினேன் = என்னுடைய, கம்பலை = துன்பத்தை, தவிர்த்து = நீங்கச் செய்து, நல் = நல்ல, களிப்பு = சந்தோஷம், நல்குவாய் = கொடுத்தருளுவாய், விளர் = வெண்மையானது, பம்பு = பரவிய, சலஞ்சலம் = வலம்புரிகள், குலாவு = தவழப் பட்ட, பண்ணை = கழனிகள் சூழ்ந்த, எவ்வுள் = திருஎவ்வுளூரில் தங்கிய, விண்டுவே = மகாவிஷ்ணுவே! என்றது — ஏ — ஈற்றசை. 47

விண்ணனைக்க ருஞ்சமன்கை மேவுபாசம் வீயவே
கண்ணனைத்து ழாயலங்கல் கர்த்தனைப்ப ணைக்குழல்
பண்ணனைச்சி றந்தவெவ்வுள் பள்ளிகொண்ட மரகத
வண்ணனைக்க ருத்துடன் வணங்கிபோற்றி செய்மினே.

இதன் பொருள் :

விண் அனை = கரிய மேகத்தை யொத்த, கரும் = வலிமையுள்ள, சமன் = இயமன், கை = கையிலே பிடித்திருக்கின்ற, பாசம் = பாசக்கயிறானது, வீயவே = தன்னிடம் வராது நீங்கும் பொருட்டு, கண்ணனை = ஆயர்பாடியில் வளர்ந்த கிருஷ்ணனை, துழாய் = திருத்துளப, அலங்கல் = மாலைதரித்த, கர்த்தனை = பகவானை, பணை = மூங்கிலால் ஆகிய, குழல் = புல்லாங்குழல் கொண்டு அளித்த, பண்ணனை = இசைப் பாட்டுடையவனை, சிறந்த = சிறப்புப் பொருந்திய, எவ்வுள் = திருஎவ்வுளூரில், பள்ளி கொண்ட = சேடசயனங் கொண்டருளிய, மரகத வண்ணனை = பசுமையான திருமேனியுடையவனை, கருத்துடன் = நல்கருத்துடனே, வணங்கி = சேவித்து, போற்றுமின் = தோத்திரஞ் செய்யுங்கள், ஏ—ஈற்றசை. 48

செய்யதுப்பு மாதிரத்தில் தேசுலாவு மரகதச்
சையநண்ணு மாட்சிபோல சால்புலாவு தார்க்கியன்
துய்யமாரு மபரமுந்தி தோன்றியென்னை யாட்கொள்வாய்
மெய்யர்பாக வதர்கள்சூழு மீளியெவ்வுள் நாதனே.

இதன் பொருள் :

செய்ய = சிவந்த, துப்பு = பவளம் போன்ற, மாதிரத்தில் = மலையில், தேசு = பிரகாசம், உலாவு = பொருந்திய, மரகதம் = பச்சை நிறமுள்ள, சையம் = பர்வதம், நண்ணும் = பொருந்திய, மாட்சிபோல = பெருமையைப்போல, சால்புலாவு = மேன்மை பொருந்திய, தார்க்கியன் = கருடாழ்வான், துய்யம் = பரிசுத்தம், ஆரும் = பொருந்திய, அபரம் = முதுகில், உந்தி = ஏறி, தோன்றி = பிரத்தியட்சமாய், என்னை = இச்சிறுவனை, ஆள்கொள்வாய் = அடிமையாகக் கொள்வாய், மெய்யர் = பிராமணர்கள், பாகவதர் = உமது அடியார்கள், சூழும் = சூழுகின்ற, மீளி = பெருமையுடைய, எவ்வுள் = திருஎவ்வுள் திருப்பதியிலுற்ற, நாதனே = எப்பொருட்கும் முதல்வனே! என்றது—ஏ—ஈற்றசை. 49

நாதனேபி றங்குகங்கை நன்குதித்த தோடகப்
பாதனேசு யோதனன்வல் படைகெடக் குயம்விடுஞ்
சூதனேயி றைஞ்சுமென்றன் துன்பொழித் தருள்செய்வி
நோதனேயி மைக்குமெவ்வு ளெச்சிவாழ னந்தனே

**இதன் பொருள் :**

நாதனே = சர்வேச்வரனே, பிறங்கு = பிரகாசிக்கின்ற, கங்கை = கங்கை நதி, நன்கு = சிரேஷ்டமாக, உதித்த = பிறந்த, தோடகம் = தாமரை மலர்போன்ற, பாதனே = திருவடியுடையவனே! சுயோதனன் = துரியோதனன், வல் = வலிமை பொருந்திய, படை = சேனைகள், கெட = கெடுதியுண்டாக, குயம் விடும் = தேரில் பூட்டிய குதிரையை நடத்தும், சூதனே = பாகனே! இறைஞ்சும் = உம்மைச் சேவிக்கும், என்றன் = என்னுடைய, துன்பு = வருத்தங்களை, ஒழித்து = நீக்கி, அருள்செய் = கிருபை செய்வாய், விநோதனே = மாயா விநோதனே! இமைக்கும் = பிரகாசிக்கும், எவ்வுள் = திருஎவ்வுளென்னும், நொச்சி = நகரத்தில், வாழ் = வாழ்கின்ற, அனந்தனே = சேடாம்ச முடையவனே! 50

## வேறு

நந்தைப் புரைகளன் வேசையர் பான்மயல் நாடாம
நந்தை ரியமுற் றுன்திரு வடிதொழ நன்கருள
நந்தைத் துதிதிரு வெவ்வுளில் காஞ்சன நங்கைத்த
நந்தைத் திடவணை மோகநி ராமய நாகரியே.

**இதன் பொருள்:**

நந்தை = சங்கை, புரை = நிகராகிய, களன் = கழுத்தினையுடைய, வேசையர் = பரத்தையர், பால் = இடத்தில், மயல் = ஆசை, நாடா = நாடாது, மனம் = மனம், தைரியமுற்று = தீரமுண்டாகி, உன் = உம்முடைய, திருவடி = அழகிய பாதங்களை, தொழ = சேவிக்க, நன்கு = நல்ல ஞானங்களை, அருள் = தருவாய், அனந்தை = உலகத்தோர், துதி = துதிசெய்யப்பட்ட, திருஎவ்வுளில் = அழகிய எவ்வுளூர் க்ஷேத்திரத்தில், காஞ்சன நங்கை = கனகவல்லி யென்னும் திருநாமம் பெற்ற

மகாலட்சுமியின், தனம்=தனபாரம், தைத்திட=மார்பிலே பொருந்தும்படி, அணை=சேரும்படியான, மோக நிராமய= மோகத்தையுடைய கடவுளே! நாகு = சங்கத்தையுடைய, அரியே=நரசிம்மமாய் அவதரித்தவனே! என்றது— ஏ — ஈற்றசை. 51

நாகத் தலனம் புயவா சத்தலன் ஞாட்புறுபி
நாகத் தனுசெங் கைத்தலன் முதலினர் நண்ணரியோய்
நாகத் தலையில் நடித்தவெ வுட்பதி நாளுஞ்சீர்
நாகத் தடியன்முன் வந்தருள் செய்மெய் நற்காரே.

**இதன் பொருள் :**

நாகம்=சுவர்க்க லோகம், தலன்=இடமாகக் கொண்ட இந்திரன், அம்புயம்=தாமரை மலர், வாசத்தலன்=வசிக்கும் இடமாகவுடைய பிரமதேவன், ஞாட்பு = பலம், உறு = பொருந்திய, பினாகத்தனு=பினாகம் என்னும் வில்லை, செங் கைத்தலன் = சிவந்த கையிலே வைத்திருக்கப்பட்ட சிவ பெருமான், முதலினர்=முதலிய யாவரும், நண்ணும்=வந்து சூழும், அரியே=மகாவிஷ்ணுவே! நாகத்தலையில்=காளிங்க னென்னும் பாம்பின் படத்தின் பேரில் நின்று, நடித்த= நிருத்தஞ் செய்த, எவ்வுட்பதி = திருஎவ்வுள் க்ஷேத்திரத் தனே! நாளும்=சதாகாலமும், உன் = உம்முடைய, சீர் = சிறப்பை, நா = நாவினாலே, கத்து = துதி செய்கின்ற, அடியன்=அடிமையாகிய எனது, முன்=முன்னே, வந்து = பிரத்தியட்சமாய், அருள்செய் = கிருபை செய்வாய், நல்=நல்ல, மெய்=சரீரம், காரே=மேகம் போன்ற திருமேனியனே! என்றது—ஏ — ஈற்றசை. 52

காவன னிப்பரி கந்திக ழளிகா மரப்பிண்டி
காவன் முற்றவி லங்கை யரக்கனை காதுமன
காவன மாலைய வெற்கருள் கஞ்சக் கயத்துவில
காவன மல்கு மெவுட்புரி கண்வளர் கனிவோனே.

இதன் பொருள் :

காவல்=ஒருவர் வராமல் காப்பதற்கு, நனி=மிகுதியாக, பரிகம்=ஏழு மதில்கள், திகழ்=சூழ்ந்து விளங்கும், அளி=வண்டுகள், காமரம்=இசை முழக்கம், பிண்டி=அசோகமர, கா=சோலை, வனம்=அழகுள்ள, இலங்கை=இலங்காபுரிக்கு, அரக்கனை = இராட்சதனாகிய இராவணனை, காதும் = சம்மாரஞ் செய்த, அனகா=கர்த்தனே! வனமாலைய=திருத்துளப மாலையுடையவனே! எற்கு = உமது தாசனாகிய எனக்கு, அருள் = கிருபை செய்வாய், கஞ்சம் = தாமரை நெருங்கிய, கயத்து=தடாகத்து, அலகா=நீங்காமலிருக்கும், அனம்=அன்னப் பறவைகள், மல்கும்=நிறைந்த, எவ்வுள் புரி=திருஎவ்வுள் நகரத்தில், கண்வளர்=யோக நித்திரை செய்யாநின்ற, கனிவோனே = இஷ்டமுடையவனே! என்றது—ஏ—ஈற்றசை. 53

கனகத் தலமுறை வாசவ னமரர் கவின்சதுமு
கனகமகிழ்ந்து புகழ்ப்பத நல்கி காத்தருள்க
கனகண மேவு மிலஞ்சி யெவுட்கண் ணகைலைக்
கனகரெ னக்கொ ளரன்பலி நீக்கிய கந்தரனே.

இதன் பொருள் :

கனகத்தலம்=பொன்னுலகமாகிய இடத்தில், உறை=இருக்கின்ற, வாசவன்=தேவேந்திரன், அமரர்=தேவர்கள், கவின்=அழகு பொருந்திய, சதுமுகன்=நான்கு முகத்தை யுடைய பிரமதேவன், அகம்=மனம். மகிழ்ந்து=மகிழ்ச்சியடைந்து, புகழ்=புகழும் பெருமையு முள்ள; பதம்=பரமபதம், நல்கி=அடியேனுக்குக் கொடுத்து, காத்தருள்=இரட்சித்தருள வேண்டும், ககலம் = ஆகாயத்திலிருக்கின்ற, கணம்=நட்சத்திரங்கள், மேவும்=நெருங்கும்—உயர்வாகிய—,, இலஞ்சி=மதில் சூழ்ந்த, எவ்வுள்=திருஎவ்வுளூரில் தங்கிய கண்ணா = கிருஷ்ணாவதாரனே! கைலை=கைலை யென்னும் பெயரையுடைய, கல் = பர்வதத்தை, நகர் = பட்டணமாக, கொள்=கொண்ட, அரன்=சிவபெருமானது, பலி=கபாலங் கொண்டு யாசித்ததை, நீக்கிய=நீங்கச் செய்து—இரட்சித்த—கந்தரனே = மேகம் போன்ற நிறத்தை யுடையவனே! என்றது : ஏ—ஈற்றசை. 54

கந்தர ணிச்செறி வானழல் காலுயி ராகியுல
கந்தர வுந்திம லர்ந்தவ கருணைசெய் வாய்நெஞ்சு
கந்தர ணத்திரு வெவ்வு டயங்குடை காஞ்சனநீள்
கந்தர சக்கய மின்புற நற்கதி தந்தவனே.

இதன் பொருள் :

கம் = நீர், தரணி = நிலம், செறி = மிகுந்த, வான் = ஆகாயம், அழல் = அக்கினி, கால் = காற்று, உயிராகி = உயிருக்குயிராகி நிறைந்து, உலகந்தர = பதினாலுலகங்களையும் சிருஷ்டி செய்விக்க, உந்தி = நாபிக்கமலம், மலர்ந்தவ = மலரும்படி செய்தவனே! கருணைசெய்வாய் = கிருபை செய்து அடியேனை இரட்சிக்கவேணும், நெஞ்சு = மனம், உகந்து = சந்தோஷித்து, அரணம் = நெடியமதில் சூழ்ந்த, திருஎவ்வுள் = திருஎவ்வுள் க்ஷேத்திரத்தில், தயங்கு = பிரகாசிக்கின்ற, உடை = வஸ்திரமானது, காஞ்சனம் = பொன்னைப் புனைந்தவனே! நீள் = நீண்ட, கந்து = தம்பத்திற்கட்டுதற் குரிய, அரசக்கயம் = அரசனாகிய யானை—கஜேந்திரன், இன்புற = இஷ்டம் பெருக, நற்கதி = பரமபதத்தை, தந்தவனே = கொடுத்தவனே! என்றது—ஏ—ஈற்றசை. 55

தந்தனை வற்றுண ராதுச கத்திற ருக்குலவி
தந்தனை நுண்ணிடை யார்மயல் சார்மன னேகமலந்
தந்தனை யாகியு யிர்க்குமி ளிர்பொன் றலைவனைப
தந்தனை நல்கு மெவுட்பர னைத்துதி சாற்றுவையே.

இதன் பொருள் :

தந்து = கல்விநூல், அனைவற்றும் = எல்லாம், உணராது = படித்து அறியாது, சகத்தில் = உலகத்தில், தருக்கு = அகங்காரம், உலவி = பொருந்தி, தந்து = பஞ்சுநூல், அனை = ஒத்த, நுண் = சிறுத்த, இடையார் = இடையுள்ள மாதர்கள், மயல் = மையல், சார் = சார்ந்த, மனனே = நெஞ்சமே, கமலம் = தாமரை மலர், தந்து = பெற்று, அனையாகி = அன்னையாகி, உயிர்க்கு = உலகத்திலுள்ள சகலமான உயிர்களுக்கும், மிளிர் = விளங்கிய, பொன் = மகாலட்சுமியின், தலைவனை = நாயகனை, பதம்தனை = பரமபதத்தை, நல்கும் = அன்பர்க்குக் காடுத்து இரட்சிக்கும், எவ்வுள் = திருஎவ்வுளூரில் தங்கிய, பரனை = பரமாத்ம ரூபனை, துதி = தோத்திரம், சாற்றுவையே = சொல்லுவாய், — என்றது. —ஏ—ஈற்றசை. 56

வையம் பெய்தெழு சாலமுன் வீழ்த்தி வயங்குமுல
வையம் புதல்வ னெழிற்புய மேவிய மாதவகௌ
வையம் பரமென வேதொனி யார்வாச் சியவெவ்வுள்
வையம் பரவ வரந்தர வந்துறை வித்தகனே.

**இதன் பொருள் :**

வை = கூர்மை பொருந்திய, அம்பு = பாணங்களை, எய்து = பிரயோகஞ் செய்து, எழு = ஏழாகிய, சாலம் = மராமரம், முன் = முன் நாளையிலே, வீழ்த்தி = விழும்படிக்குச் செய்து, வயங்கு = பிரகாசிக்கின்ற, உலவை = வாயுபகவான், அம் = அழகிய, புதல்வன் = புத்திரன், எழில் = அழகிய, புயம் = தோளில், மேவிய = ஆரோகணித்த, மாதவனே = ஸ்ரீராமஸ்வாமியாய் அவதரித்த கர்த்தனே! கௌவை = சப்திக்கின்ற அலைகளையுடைய, அம்பரம் = சமுத்திரம், எனவே = என்று சொல்லும்படியாகவே, தொனிஆர் = முழக்கம் பொருந்திய, வாச்சியம் = வாத்திய மிகுந்த, எவ்வுள் = திரு எவ்வுள் நகரில் இருந்து, வையம் = உலகிலுள்ளோர் யாவரும், பரவி = சேவித்துத் துதிப்பவர்க்கு, வரந்தர = அவர்கள் கேட்கும் வரங்களைக் கொடுக்கவும், வந்து = அந்நகரில் வந்து, உறை = இருக்கின்ற, வித்தகனே = கர்த்தனே! என்றது. 57

வித்துரு மத்திகழ் வாய்வே சையரை வியந்தனுப
வித்துரு கும்மன னேதுதி செய்வாய் வீமன்மரு
வித்துரு வற்குமுன் னண்ணி வரந்தரு வேந்தைபிற
வித்துரு சைத்தொலை யெவ்வுள்ப திப்பதம் வேட்புடனே.

**இதன் பொருள் :**

வித்துருமம் = பவளம் போன்ற, இதழ் = இதழ்களையுடைய, வாய் வேசையரை = வாயுள்ள பரத்தையர்களை, வியந்து = அவர்களைக் கண்டு அதிசயத்து, அனுபவித்து = புணர்ந்து, உருகும் = வருத்தப்படுகின்ற, மனனே = மனமே, துதி செய்வாய் = தோத்திரம் செய்வாய், வீமன் = பட்சிராஜனாகிய கருடாழ்வான் தோளில், மருவி = ஆரோகணித்து, துருவற்கு = உத்தானபாதன் குமாரனுக்கு, முன் = முன்னே, நண்ணி = பிரத்யட்சமாகி, வரம் தரும் = மகாமேருசிகரத்தில்

இருக்கும்படி வரங்கொடுத்த, வேந்தை=முதல்வனை, பிறவி= ஜனனமாகிய, துருசை=களிம்பை, தொலே=நிவர்த்தி செய்யும், எவ்வுள்=திருஎவ்வுளென்னும், பதி=திருப்பதியிலுற்ற வீரராகவன், பதம்=திருவடியை, வேட்புடனே = விருப்பத்துடனே, —என்றது. 58

பதமென வசுமதி துய்த்த நிராமய பாங்குபருப்
பதமனே யரியிலி வர்ப்பரி விடுபா காபரம
பதமுற வெற்கருள் வாய்கௌ தமபண் ணவருக்காய்
பதமலர்த் துகளாற் சதிதரு மெவ்வுட் பதிமாலே,

**இதன் பொருள்:**

பதம்என=சாதம் என்று சொல்லும்படி, வசுமதி=உலகமெல்லாம், துய்த்த=உண்டருளிய, நிராமய = கடவுளே! பாங்கு=அழகிய, பருப்பதம்=பர்வதத்தை, அனே=நிகராகிய, அரியில்=இரதத்தில், இவர்=கட்டியிருக்கின்ற, பரி=குதிரைகளே, விடும்=நடத்திய, பாகா = பார்த்தன் சாரதி, பரமபதம்=உமது வைகுந்தஸ்தலம், உற=என் சரம தசையில் கிடைக்க, எற்கு = தாசனுகிய இச்சிறுவனுக்கு, அருள் = அருள் செய்து இரட்சிக்கவேணும், கௌதமர் = கௌதமரென்னும் பெயரையுடைய, பண்ணவருக்காய் = மகரிஷிக்காக, பதமலர்=திருவடி மலர், துகளால் = தூள்களினுல், சதி=மனேவியை, தரும்=கொடுத்தருளிய இராமஸ்சுவாமி, எவ்வுள்பதி = திருஎவ்வுள் க்ஷேத்திரத்து, மாலே=வீரராகவனே —என்றது. 59

மாலிய ருந்திசை மதுர மேவிய வண்டுளப
மாலிய டைந்தவர் துன்பை யொழித்திடு மாட்சியனே
மாலியன் மேனிய வம்புய வாவி வயங்கெவ்வுள்
மாலியு னேப்படர் நற்புல மெற்கு மகிழ்ந்தளியே.

**இதன் பொருள்:**

மாலி=புட்பங்களிலுள்ள தேன்களே, அருந்து=பானஞ் செய்யப்பட்ட, இசை = இராகம் பாடப்பட்ட, மதுகரம்= வண்டுகள், மேவிய = மொய்த்திருக்கின்ற, வண்=வளம் பொருந்திய, துளபமாலி=திருத்துளப மாலேயுடையவனே! அடைந்தவர் = உம்மைச் சரணுகதியென்று அடுத்தவர்,

துன்பம்=பிறவி முதலிய துன்பங்களை, ஒழித்திடும்=நிவர்த்தி செய்யும், மாட்சியனே=பெருமையுடையவனே! மால்=நீர் கொண்ட மேகத்தை, இயல்=இயல்பாகிய, மேனிய=நிறத்தையுடையவனே! அம்புயம்=தாமரை மலர் நிறைந்திருக்கும், வாவி=தடாகங்கள், வயங்கு=பிரகாசிக்கின்ற, எவ்வுள்=திருஎவ்வுளில் விளங்கிய, மாலி = சூரியனே! உனைப்படர் = உம்மைச் சதாகாலமும் தியானஞ் செய்யும், நல்=நல்ல, புலம்= அறிவை, எற்கு=உமது அடிமையாகிய எனக்கு, மகிழ்ந்து= சந்தோஷமாய், அளி=கொடுத்தருள்வாய், என்றது—ஏ—ஈற்றசை. 60

வேறு

## கட்டளைக் கலிப்பா

அளியு லாவுநன் ளுண்மல ராசிய
 வாய்ச்சி யர்பிடி யற்கவர்ந் தேநறு
நளியு லாவுபுன் ளுகவ னத்தின்மேல்
 நன்கு டன்சிவ ணற்சகன் மோகனே
ஒளியு லாவுச லாகைக்கு யிற்றிய
 வுவள கச்சிறப் பாருந் திருவெவுட்
டளியு லாவுஞ் செயவீர ராகவா
 தாசன் றுன்பைக் கடிதொலைத் தாள்வையே.

**இதன் போருள்:**

அளி=வண்டுகள், உலாவும்=சஞ்சரிக்கின்ற, நல்=நல்ல, நாண்மலர்=அன்று மலர்ந்த புட்பம் போன்ற, ஆசியம்= முகத்தையுடைய, ஆய்ச்சியர் = யாதவகுல ஸ்திரீகள், பிடியல்=அவர் அவிழ்த்து வைத்த வஸ்திரங்களை, கவர்ந்து= திருடிக்கொண்டுபோய், நறும்=நல்ல, நளிஉலாவும்=பெருமை பொருந்திய, புன்னுகவனத்தின்மேல்=புன்னை மரத்தின் பேரில், நன்குடன்=அழகுடன், சிவணல்=பொருந்த வைத்த, சகன் மோகனே=உலகத்திலுள்ள ஆன்மாக்களுக்கு ஆசையுண்டாகச் செய்பவனே! ஒளியுலாவு=பிரகாசம் பொருந்திய, சலாகை=அகன்மணி, குயிற்றிய=பதித்த, உவளகம்=மதில், சிறப்பு=மேன்மை, ஆரும்=பொருந்தும், திருஎவ்வுள்=அழகிய எவ்வுளூரில், தளி=திருக்கோயிலில், உலாவும்=வாசஞ்

செய்திருக்கும், செயம் = வெற்றியுள்ள, வீரராகவா = வீரராகவ னென்னும் திருநாமனே! தாசன் = உனது அடிமையின், துன்பை = வருத்தங்களை, கடி = சீக்கிரத்தில், தொலைத்து = நிவர்த்தி செய்து, ஆள்வையே = ஆட்கொள்ளுவாய், ஏ—ஈற்றசை. 61

தொலைவி லாவிரு ணெஞ்சர்க்கு ழாத்துடன்
துன்னி வெம்பவத் தைக்குயி ராதுநன்
னிலையு லாவுநின் னன்பர் கணத்துடன்
நிலைய மீதில் வசிக்க வருட்சதா
அலைவி லாதிமைக் குந்திர தீபமே
அதுல மாம்பொரு ளேமறை யோர்விண்ணோர்
கலைவ லார்கள் பழிச்சுந் திருவெவுட்
கடிந கர்க்குட் சயனித்த விண்டுவே.

**இதன் பொருள் :**

தொலைவிலாத = எப்பொழுதும் நீங்காத, இருள் = மயக்கமுடைய, நெஞ்சர் = மனமுள்ளவர், குழாத்துடன் = கூட்டத்துடன், துன்னி = சேர்ந்து, வெம்பவத்தை = கொடிய பாவங்களை, குயிராது = செய்யாது, நல் = நல்ல, நிலைஉலாவு = நிலைமை பொருந்திய, நின் = உம்முடைய, அன்பர் = பாகவதர், கணத்துடன் = கூட்டத்துடன், நிலையம் = உலகத்தின், மீது = மேல், வசிக்க = வாசஞ் செய்ய, அருள் = கிருபை செய்வாய், சதா = எப்பொழுதும், அலைவிலா = அசை வில்லாமல், இமைக்கும் = பிரகாசிக்கும், திரம் = ஸ்திரமாக இருக்கும், தீபமே = தீபம் போலும் பிரகாசமுள்ளவனே! அதுலம் = ஒன்றையுஞ் சமம் சொல்லப் படாதபடி, ஆம் = இருக்கும், பொருளே = தலைமையானவனே! மறையோர் = வேதங்களை யோதும் பிரர்மணர், விண்ணோர் = தேவர்கள், கலைவல்லார்கள் = கல்விநூலில் வல்லவராகியவர்கள், பழிச்சும் = தோத்திரஞ் செய்யும், திருஎவுள் = அழகிய திருஎவ்வுள் என்னும், கடி = காவலுள்ள, நகர் = பட்டணத்தில், சயனித்த = சயன திருக்கோலங் கொண்ட, விண்டுவே = மகாவிஷ்ணுவே! என்றது : ஏ—ஈற்றசை. 62

விண்ணு றழ்க்கமு கேடக மம்பணம்
வேழ மிக்கு திருவெவுட் சும்மையில்
வண்ணு றும்பவ னத்தினிற் கொண்டல்போல்
மணிய னந்தன்மேற் கண்வளர் வேட்பனே

பண்ணு றுங்குரற் றேமொழி வஞ்சியர்
பாச முற்றனுங் காமற் சநத்தமுன்
கண்ணு றச்சிந்தை யெந்தனுக் கன்புடன்
கருத ருங்கிருபை செய்த ருள்வையே.

**இதன் பொருள் :**

விண் = ஆகாயத்தை, உறழ் = பொருந்த, கமுகு = பாக்கு மரம், ஏடகம் = தென்னை, அம்பணம் = வாழை, வேழம் = கரும்பு, மிக்கு = மிகுதியாய்ச் செழித்த, திருஎவ்வுள் = மகாலட்சுமி வாசஞ்செய்யும் எவ்வுள் என்னும் பெயருள்ள, சும்மையில் = நகரில், வண் = வளமை, உறும் = பொருந்திய, பவனத்தினில் = திருக்கோயிலில், மணி = இரத்தினத்தை யுடைய, அனந்தன்மேல் = ஆதிசேஷன் பேரில், கண்வளர் = திருக்கண்வளரா நின்ற, வேட்பனே = விருப்பத்தையுடைய கர்த்தனே! பண்உறும் = இசைப்பாட்டுப் பாடுவது போன்ற, குரல் = கண்டத் தொனியும், தேம் = தித்திப்புஉள்ள, மொழி = வசனமும், வஞ்சியர் = வஞ்சிக் கொடிபோலும் இடையுமுள்ள ஸ்திரீகள், பாசமுற்று = ஆசையிற் சிக்கி, அனுங்காமல் = வருத்தப்படாமல், சநத்தம் = எப்பொழுதும், உன் = உமது, கண் = இடத்தில், உற = பொருந்த, சிந்தை = மனம், என் தனக்கு = தாசனாகிய எனக்கு, கருதரும் = நினைக்க அருமை யாகிய, கிருபை செய்து = அருள் செய்து, அருள்வையே = கொடுப்பாய், என்றது. 63

அரலை சூழ்ந்த வனந்தையுள் ளோர்தமக்
கயர்வு செய்யும் பிணிக்குசஞ் சீவியாம்
இரவி யென்னத் திருவெவ்வுள் கோயிலில்
இலகுந் தூய விராகவ னேயன
வரத மேத்துமெய்ப் பாகவ தர்குழா
மாட்டி னிப்புடன் வைகியு றைந்திட
சரத மன்னு முணர்வெனக் கீகுவாய்
தயையு லாவகத் திற்கனி வண்ணியே.

**இதன் பொருள் :**

அரலை = சமுத்திரம், சூழ்ந்த = சூழ்ந்திருக்கப்பட்ட, அனந்தை = பூவுலகத்தில், உள்ளோர்கள் = இருப்பவர்கள், தமக்கு = தங்களுக்கு, அயர்வுசெய்யும் = துன்பம் உண்டாகச்

செய்யும், பிணிக்கு=வியாதிகளுக்கு, சஞ்சீவியாம்=சஞ்சீவி யுள்ள, இரவி என்ன=பர்வதம் போல, திருஎவ்வுள் கோயி லில் = அழகிய எவ்வுளூர் சந்நிதியில், இலகு = பிரகாசம் பொருந்திய, தூய=பரிசுத்தமுள்ள, இராகவனே=வீரராக வப் பெருமானே! அனவரதம்=சதாகாலமும், ஏத்தும் = உம்மைத் தோத்திரஞ் செய்கின்ற, மெய்=உண்மையான பக்திமார்க்கமுள்ள, பாகவதர் = அடியார்களது, குழாம் = கூட்டத்து, மாட்டு=கூடி, இனிப்புடன் = இஷ்டத்துடன், வைகி=தங்கி, உறைந்திட=இருந்திட, சரதம் = உண்மை, மன்னும் = நிலைபெற்று இருக்கும், உணர்வு = தெளிவு, எனக்கு = இச்சிறுவனுக்கு, ஈகுவாய் = தருவாய், தயை உலாவு=கருணையுள்ள, அகத்தில்=மனத்தில், கனிவு=இஷ்டம், அண்ணி=பொருந்தி, என்றது : ஏ—ஈற்றசை. 64

அண்டர் மாமந் திரந்தொறு மேவிதே
  மளைய விக்கவர்ந் துண்டு வரைகுழற்
கொண்டு காமரத் தைத்தருஞ் சித்திரக்
  கோவ லாகருந் தூவி மதுகரம்
மண்டு மன்றல ரூமலர்ப் பூங்கயம்
  வாய்ந்த வெவ்வுட் புரமிளிர் மாயனே
பண்டு யான்புரி தீவினை வீக்கியே
  பாங்கு லாவ வினியருள் பாலியே.

**இதன் பொருள் :**

அண்டர் = யாதவர்கள், மா = பெருமை பொருந்திய, மந்திரம் தொறும் = வாசஞ்செய்யும் வீடுகள் தோறும், மேவி = சென்று, தேம் = மதுரமுள்ள, அளை = தயிர், அவி = நெய், கவர்ந்து = திருடி, உண்டு = புசித்து ஆனந்தத்துடன், வரை குழல் = மூங்கிலால் செய்த புல்லாங்குழலை, கொண்டு = வாயி னிடமாகக் கொண்டு, காமரம் = இசைப் பாட்டை, தரும் = பாடுகின்ற, சித்திரம் = அழகு சிறந்த, கோவலா = யாதவகுல சிகாமணியே! கரும் = கரிய நிறமுள்ள, தூவி = இறகினை யுடைய, மதுகரம் = வண்டுகள், மண்டு = நெருங்கியிருக்கும், மன்றல் = வாசனை, அரூநீங்காது = இருக்கின்ற, மலர் = புட்பங்கள் நிறைந்த, பூம் = அழகிய, கயம் = தடாகங்கள், வாய்ந்த = பொருந்திய, எவ்வுள் = திரு எவ்வுள், புரம் = நகரத்தில், மிளிர் = பிரகாசித்திருக்கும், மாயனே = மாயா விநோதமுடைய வீரராகவப் பெருமானே! பண்டு = முந் நாளையிலே, யான் = அடிமையாகிய யான், புரி = செய்த,

தீவினை=கொடிதாகிய காரிய மெல்லாம், வீக்கி = நிவர்த்தி செய்து, பாங்கு உலாவ=அழகாகிய மெய்ஞ்ஞானம் விளங்க, இனி=இனியாகிலும், அருள் பாலியே=கிருபைதர வேணும், என்றது. 65

பால நவ்வியைப் பற்றிய பாணியான்
பலியொ ழித்து பகுக்கருஞ் சீர்தரும்
சீலம் வாய்ந்து மிளிர்கரு ணைம்புதி
சேயன் றுன்பினைத் தீர்த்தடி மைக்கொளாய்
கால மோர்ந்த விருபிறப் பாளருங்
கடவு ளர்த்திரள் மல்கித் துதிபுரி
கோல மேவுந் திருவெவ்வுட் கோயிலிற்
குலவு மேதகி ராகவ கோமனே.

இதன் பொருள் :

பாலம் = பரசும், நவ்வியும் = கலைமானும், பற்றிய= பிடித்து இருக்கின்ற, பாணியான் =கைத்தலத்தினையுடைய சிவபெருமான் அடைந்து இருந்த, பலி = யாசித்த தன்மையை, ஒழித்து= நீங்கச் செய்து, பகுக்க=பிரித்துச் செல்ல, அரும் = அருமையாகிய, சீர்தரும் = சிறப்பைக் கொடுத்து இரட்சிக்கும், சீலம்=பரிசுத்தமான சரித்திரம், வாய்ந்து= பொருந்தி, மிளிர் = பெருமையுள்ள, கருணை = கிருபை, அம்புதி=சமுத்திரம் போன்றவனே! சேயன்=இச் சிறுவன், துன்பினை=பிறவித் துன்பத்தை, தீர்த்து=நீங்கச் செய்து, அடிமை கொள்வாய் = உனது தாசனுக்கிக் கொள்வாய், காலம்=இறந்தகாலம் — நிகழ்காலம் — எதிர்காலம் என்று சொல்லப்பட்ட மூன்று காலங்களும், ஓர்ந்த=அறிந்த, இரு பிறப்பாளர்=பிராமணரும், கடவுளர்=தேவர்கள், திரள்= கூட்டங்கள், மல்கி = நெருங்கி, துதி = தோத்திரம், புரி= செய்யப்பட்ட, கோலமேவும் = அழகு பொருந்திய, திரு எவ்வுள் = அழகிய எவ்வுளூர், கோயிலில் = விசயகோடி விமானத்தில், குலவும் = பொருந்தியிருக்கும், மேதகு = மேன்மை தங்கிய, இராகவ=வீரராகவனென்னும் பெயரை யுடைய, கோமனே = முதன்மையானவனே! என்றது: ஏ—ஈற்றசை. 66

கோம ளச்சந் ததிவனை கோதினைக்
குணமு லாவனை முன்ன லுன் னுதுபோல்
நீம னத்தினில் யான்செய்த கோதினை
நினைந்தி டாது விழைந்தெனை யாள்சிறை
பூம ராளத் தொகுதிவண் பானலிற்
பொங்கு வண்மைத் திருவெவுட் பேடினிற்
சேம மன்னி வதிதவச் சாலிகோத்
திரருக் குண்மகிழ்ந் தேநண்ணு மையனே.

இதன் பொருள் :

கோமளம் = இளமை பொருந்திய, சந்ததி = புத்திரன், வனை = செய்த, கோதினை = குற்றத்தை, குணம் உலாவு = நல்ல குணம் பொருந்திய, அனை = தாயானவள், முன்னல் = மனத்திலே, உன்னுது போல் = நினையாது பாதுகாப்பது போல், நீ = உம்முடைய, மனத்தினில் = மனத்தில், யான் = தாசனாகிய யான், செய்த கோதினை = செய்த குற்றத்தை, நினைந்திடாது = கவனியாமல், விழைந்து = என்பேரில் இஷ்டம் வைத்து, ஆள் = அடிமை கொள்ளுவாய், சிறை = இறகானது, பூ = பொலிவுள்ள, மராளம் = அன்னப் பறவைகளின், தொகுதி = கூட்டங்கள், வண் = வளமை பொருந்திய, பானலில் = கழனியில், பொங்கும் = மிகுந்த, வண்மை = புகழுடைய, திருஎவ்வுள் = அழகிய எவ்வுள் என்னும், பேடினில் = பட்டணத்தில், சேமம் = இன்பம், மன்னி = நிலைபெற்று, வதி = வாசஞ் செய்த, தவ = தவத்தினையுடைய, சாலி கோத்திரருக்கு = சாலி கோத்திர மகரிஷிக்கு, உள் = மனம், மகிழ்ந்தே = சந்தோஷித்தே, நண்ணும் = பிரத்தியட்சமாகிய, ஐயனே = கர்த்தனே! 67

ஐய மற்றினி தேத்தி வணங்குவர்
அரந்தை நீக்கித் துவலி லருண்மிகப்
பெய்யு மாண்புக் கதம்பமே நாயினேன்
பிரமம் வீடுற நன்கரு ளாற்றுசொற்
பொய்யில் லாத விருபிறப் பாளர்கட்
பொலிவு ளப்பிர மத்தைக் குயின்றிடும்
வைய கம்புக ழுந்திரு வெவ்வுளில்
வாஞ்சை மேவு மிராகவ மாயனே.

**இதன் பொருள் :**

ஐயம் = சந்தேகம், அற்று = நீங்கி, இனிது = இஷ்டமாக, ஏத்தி = தோத்திரஞ் செய்து, வணங்குவர் = சேவிக்கும் பக்தியுடையவர், அரந்தை = துன்பங்களை, வீக்கி = நிவர்த்தி செய்து, துவலில் = சீக்கிரத்தில், அருள் = கிருபை, மிக = மிகுதியாக, பெய்யும் = பொழியப்பட்ட, மாண்பு = பெருமை பொருந்திய, கதம்பமே = மேகமே, நாயினேன் = நாய் போன்றயான், பிரமம் = மோட்சமாகிய, வீடு = வீட்டை, உற = சேர, நன்கு = மேன்மையாகிய, அருள் = கிருபை, ஆற்று = செய்வாய், சொல் = வசனமானது, பொய்யில்லாத = அசத்தியம் இல்லாத—சத்தியமுள்ள, இருபிறப்பாளர்கள் = பிராமணர்கள், பொலிவுஉள = பிரகாசம் உள்ள, பிரமத்தை = யாகத்தை, குயின்றிடும் = செய்திடும், வையகம் = உலகத்திலுள்ளோர், புகழும் = புகழும் மகிமை பொருந்திய, திருஎவ்வுளில் = சிறந்த எவ்வுளூர் க்ஷேத்திரத்தில், வாஞ்சை மேவும் = இஷ்டம் பொருந்திய, இராகவ மாயனே = வீரராகவனென்னும் பெயர் கொண்ட மாயாவிநோதனே! என்றது. 68

மாய னைக்கமைச் சீலந் தகைநெறி
வாய்மை யோங்கி வதியடி யார்கள்ச
காய னைப்பெடச் செவ்வி துவன் றபூங்
கனக வல்லி கருத்தி லுகந்தனை
நேய னைப்பணி லம்பரி திக்கர
நிமல னைச்சிறப் பார்திரு வெவ்வுள்வாழ்
தூய னைப்பணிந் தேத்திடி னெஞ்சமே
துன்பி யாவுந் தொழுதகன் றோடுமே.

**இதன் பொருள் :**

மாயனை = மகாவிஷ்ணுவை, கமை = பொறுமை, சீலம் = பரிசுத்தம், தகை = குணம், நெறி = நன்மார்க்கம், வாய்மை = சத்தியம், ஓங்கி = உயர்ந்து, வதி = தங்கிய, அடியார்கள் = பாகவதர்கள், சகாயனை = சகாயஞ் செய்யப்பட்டவனை, பெடம் = மிகுந்த, செவ்வி = அழகானது, துவன்ற = நிறைந்த, பூ = பொலிவுள்ள, கனகவல்லி = கனகவல்லி என்னும்

பெயருள்ள மகாலட்சுமி, கருத்தில் = தன்மனத்திலே, உகந்து = சந்தோஷித்து, அணை = புணர்கின்ற, நேயனை = நேசமுள்ள நாயகனை; பணிலம் = பாஞ்ச சன்னியம், பரிதி = சக்கராயுதம், கரம் = கையில் தாங்கிய, நிமலனை = கர்த்தனை, சிறப்பு = மேன்மை, ஆர் = பொருந்திய, திருஎவ்வுள் = அழகிய எவ்வுளூரில், வாழ் = வாழ்ந்திருக்கும், தூயனை = பரிசுத்தமுள்ள வீரராகவனை, பணிந்து = சேவித்து, ஏத்திடில் = தோத்திரஞ் செய்திடில், நெஞ்சமே = மனமே, துன்பம் = துன்பங்கள், யாவும் = எல்லாம், தொழுது = வணங்கி, ஓடும் = உன்னிடம் இராது ஓடிப்போகும்; என்றது. 69

ஓடம் விட்டகுக னண்பு பொங்கிய
  வூக்க னைத்துரு வன்றனக் கன்புடன்
கூட முற்று வனைத வுறவருள்
  கோம னைக்கடத் துற்ற சவரியின்
சேட முற்ற வமுதெனத் துய்த்தபொற்
  றிருதி மாலை யெவுட்கட் டயங்கிய
ஆட கக்கஞ் சிகையனை நெஞ்சமே
  ஆற்று வாய்துதி நின்பவ மாயவே.

**இதன் பொருள் :**

ஓடம் = நீர்மேலோடுகிற மரக்கலத்தை, விட்ட = விடுத்த, குகன் = குகனென்னும் பெயருள்ள வேடன், நண்பு = சிநேகம், பொங்கிய = அதிகமாயுள்ள, ஊக்கனை = மன மகிழ்ச்சியுடையவனை, துருவன் தனக்கு = உத்தானபாதன் புத்திரனுக்கு, அன்புடன் = இஷ்டத்துடன், கூடம் = மகமேரு உச்சியில், உற்று = தங்கி, வனைதல் உற = செவ்வையாக இருக்க, அருள் = கிருபைசெய்த, கோமனே = தேவ லோகத்துக்கும் அரசனானவனே! கடத்து = கானகத்தில், உற்ற = வாசஞ்செய்து இருந்த, சவரியின் = வேடப் பெண்ணின், சேடம் = உச்சிட்டம், உற்ற = பொருந்திய, அமுதென = அமுதமென்று, துய்த்த = புசித்த, பொன் திகிரி = பொற் பிரகாசமுள்ள சக்கராயுதம் பிடித்த, மாலை = மேகம் போன்ற திருமேனியுடையவனை, எவ்வுள் = திரு எவ்வுளூர், கண் = இடத்தில், தயங்கிய = பிரகாசிக்கின்ற,

ஆடகம்=பொன்னுகிய, கஞ்சிகை=வஸ்திரம் புனைந்தவனை, நெஞ்சமே = மனமே, ஆற்றுவாய் = செய்குவாய், துதி= தோத்திரம், நின் = உன்னுடைய, பவம் = ஜனனமானது, மாயவே=நீங்கவே! என்றது: ஏ—ஈற்றசை. 70

வேறு

மாயாதவர் குலமன்னவ மலிபல்பவம் வாய்ந்து
மாயாதரு வைகுந்தம் வழங்காய்திரு வெவ்வுள்
மாயாதவர் சார்ங்காகர வால்வாடி கரைத்த
மாயானைய னுங்கற்கெட வருமுட்பரி வோனே.

இதன் பொருள்:

மா = பெருமை பொருந்திய, யாதவர் = கோபாலர்களுடைய, குலம்=குலத்தில் வளர்ந்த, மன்னவ = முதன்மையானவனே! பல்=பலவாகிய, பவம்=பிறவிகள், வாய்ந்து= பொருந்தி, மாயாது = மரணமடையாமல், அரும் = அருமையாகிய, வைகுந்தம்=பரமபதத்தை, வழங்காய்=கொடுத்தருளவேண்டும், திருஎவ்வுள்=அழகிய எவ்வுளூர், மாயா=வீரராகவப் பெருமானே! * (தனு = வில்), சார்ங்கா = சார்ங்கத்தையுடையவனே! [சாரங்க மென்னும் வில்லையுடையவனே!] கரவால் = முதலையினுல், வாடி = வருந்தி, கரைத்த = ஆதிமூலமேயென்று (அழைத்த) [அழைக்கப்பட்ட] மா= பெரிய, யானை=கசேந்திரனென்னும் பெயருள்ள யானை, அனுங்கல்=வருத்தம், கெட=நீங்க, வரும்=யானைமுன் வந்த, உள் = மனம், பரிவோனே = அன்புடைய நாராயணு! என்றது; ஏ—ஈற்றசை. 71

பரியங்கடல் செய்தாய்படர் புறவுக்குளி ரங்கி
பரியங்களே பரநல்கிறை குலம்வந்தவ பாந்தட்
பரியங்கவை குந்தாபத பத்மந்தொழ வருளும்
பரியங்கதி மேன்மாளிகை பாங்காரெவுட் பரனே.

இதன் பொருள்:

பரி=கஞ்சனலனுப்பிய குதிரை வடிவாய் வந்த இராட்சதனை, அங்கு=ஆயர் பாடியில், அடல் செய்தாய்=சம்மாரஞ்

* "தனு" என்பது மூல பாடத்தில் இல்லை.

செய்தாய், படர்=துன்பத்துடன் வந்த, புறவுக்கு=புருவுக்கு, உள்=மனமானது, இரங்கி=இரக்கமுற்று, பரியம் = விலை, களேபரம்=சரீரத்தை, நல்கும்=திருப்திகரமாய்க் கொடுத்த, இறை=சிபி மகாராஜாவின், குலம்=வமிசத்தில், வந்தவ= இராமாவதாரஞ் செய்தவனே, பாந்தள் = ஆதிசேஷன் பரியங்கம் = கட்டிலாகவுடைய, வைகுந்தா = வைகுந்தத்தை யுடையவனே! பதம் = உமது திருவடியாகிய, பத்மம் = தாமரையை, தொழ=சேவிக்க, அருள் = அடியேனுக்குக் கிருபை செய்வாய், உம்பர்=தேவர்கள், இயங்கு=சஞ்சரிக்க, அதி மேல்மாளிகை = அதிக உயரமுள்ள உப்பரிகைகள், பாங்கு=அழகு, ஆர் = நிறைந்த, எவ்வுள் = திருஎவ்வுள் நகரத்தில் எழுந்தருளிய, பரனே = மகாவிஷ்ணுவே! என்றது. 72

பரவத்தன மிகைநல்கி பரிந்தேபொது மகள்பம்
பரவத்தனே குயமேவி படர்ந்தேயுழ லாவம்
பரவத்தவ ருட்பார்வைசெய் பனிவெண்பிறை வேணி
பரவத்தகை யெவ்வுட்புரி பைந்தார்வன ப்யனே.

இதன் பொருள் :

பரவ = அதிகமாகும்படி, தனம் = திரவியம், மிகை = மிகுதியாய், நல்கி=கொடுத்து, பரிந்தே = ஆசைகொண்டே, பொதுமகள் =பரத்தையர், பம்பரம்=பம்பரம்போல் திரண்டு, அத்தனே = செவ்வை பொருந்திய, குயம் = தனபாரத்தின் மேல், மேவி = அணைந்து, படர்ந்தே = துன்பப்பட்டே, உழலா = வருந்தாமல், அம்பரம் = வஸ்திரம், அத்தம் = பொன்னுகவுடையனே! அருள் பார்வை செய் = என்மீதில் கிருபா நோக்கஞ் செய்வாய், பனி = குளிர்ச்சி பொருந்திய, வெண் = வெண்மை தங்கிய, பிறை = சந்திரனை, வேணி = சடாபாரத்தில் தரித்த சிவபெருமான், பரவ = வணங்க, தகை = பெருமை மிகுந்த, எவ்வுள்புரி=திருஎவ்வுள் க்ஷேத்திரத்தில் தங்கிய, பைந்தார் = பசுமையுள்ள மாலையானது, வனம் = துளபத்தையுடைய, புயனே= தோளுள்ளவனே! 73

வனமேவுக வந்தன்புயம் வாட்டி சலதிப்பு
வனமேவுவர் துன்பைத்தெறு மாலேகிளர் மணிப
வனமேவுவ ணைத்தாவெவுண் மகிபாவம ரிற்க
வனமேவுப ரித்தூண்டிய வலவாவரு டகையே.

**இதன் பொருள்:**

வனம்=காட்டிலே, மேவும் வாசஞ்செய்த, கவந்தன் = உடற்குறைவுள்ள இராட்சதனை, புயம் வாட்டி = தோளை அறுத்துத்தள்ளி, சலதி = சமுத்திரஞ் சூழ்ந்த, புவனம் = உலகத்தில், மேவுவர் = இருப்பவர்கள், துன்பத்தை = வருத்தங்களை, தெறும் =நிவர்த்தி செய்த, மாலே = கர்த்தனே! கிளர் = பிரகாசிக்கின்ற, மணி = இரத்தினங்கள் பதித்த, பவனம் = மாளிகைகள், உவணை = தேவலோகத்தை, தாவும் = அளாவிய, எவ்வுள் = திருஎவ்வுளில் சயன கோலங் கொண்ட, மகிபா = மகிபனே! அமரில் = பாரத யுத்தத்தில், கவனம் = வேகத்தையுடைய, பரி = குதிரையை, தூண்டிய = நடத்திய, வலவா = பார்த்தசாரதி, அருள் தகையே = எனக்குக் கிருபை செய்வாய்—தயையுடனே, என்றது; ஏ —ஈற்றசை. 74

கைத்தங்கிப முன்வந்தருள் கருணாகர காதற்
கைத்தங்குனி டம்வந்துற கடையேற்கருள் வாய்கை
கைத்தங்கிள ராற்கான்புகு கழலாயுயர் வேணை
கைத்தங்கமு லாவெவ்வுள் கலிக்குஞ்சின கரனே.

**இதன் பொருள் :**

கை = துதிக்கை, தங்கு = தங்கியிராநின்ற, இபம்முன் = கஜேந்திராழ்வான் முன்னே, வந்து = நேரில் வந்து, அருள் = கிருபை செய்த, கருணாகர = கருணைக்கு முதற்பொருளே! காதல் = ஆசையை, கைத்து = வெறுத்து, அங்கு = பரம பதத்தில், உன் = உமது, இடம் = இடத்தில், வந்து உற = வந்திருக்கும்படி, கடையேற்கு = கடையேனாகிய எனக்கு அருள்வாய் = தயைசெய்வாய், கைகைதம் =, கைகேசியினுடைய, கிளரால் = சொல்லினால், கான்புகும் = காட்டிலே சென்ற, கழலா = திருவடியுடையவனே! உயர் = உயர்ச்சியுள்ள, வேணைகை = மதிலானது, தங்கம் = தங்கமயமாய், உலாவும் = பொருந்தியிருக்கும், எவ்வுள் = திருஎவ்வுள் நகரத்தில், கலிக்கும் = பிரகாசிக்கும், சினகரனே = திருக்கோயில் கொண்டவனே! என்பதாம். 75

கரனேயட லின்மாய்ந்திட கணையெய்திரு வெவுண
கரனேயட லார்கத்திகை கனுழாபர மதின
கரனேயடர் மகரக்குழை காதாமிகு கிருபா
கரனேயடி யேற்கின்றருள் கண்பார்த்திடு வாயே.

இதன் பொருள் :

கரனே = கரனென்னும் இராட்சதன் முதலினர், அடலில் = உயுத்தத்தில், மாய்ந்திட = இறந்திட, கணை = பாணங்களை, எய் = பிரயோகஞ் செய்த, திரு = அழகிய, எவ்வுள் = எவ்வுளென்னும் பெயரையுடைய, நகரனே = திருப்பதியுள்ளானே! அடல் ஆர் = வலிமை பொருந்திய, கத்திகை = துவசம், கலுழா = கருடாழ்வானைக் கொண்டவனே! பரம = கடவுளே, தினகரனே = சூரியனையே, அடர் = சமானமுள்ள, மகரக்குழை = மகரக்குண்டலந் தங்கிய, காதா = செவியுள்ள, கிருபாகரனே = கருணைக்கு ஆதியானவனே! அடியேற்கு = உமது தாசனாகிய எனக்கு, இன்று = இப்பொழுது, அருட் கண் = கிருபைக்கண், பார்த்திடுவாய் = பார்ப்பாய், என்றது. 76

கண்டங்கரி யான்றுன்பைய கற்றுங்கரு தன்பர்
கண்டங்கம லாநின்பதி கனிவுற்றருள் வாய்பண்
கண்டங்கனி வாய்வைத்துக னைத்தோய்திரு வெவ்வுட்
கண்டங்கதி வெட்புற்றுறை கதிர்வைப்பரி தியனே.

இதன் பொருள் :

கண்டம் = கழுத்து, கரியான் = கரிய நிறத்தையுடைய சிவபெருமான், துன்பை = கபாலங்கொண்ட வருத்தத்தை, அகற்றும் = நீக்கும்--கர்த்தனே! கருதும் = உம்மை நினைக்கும், அன்பர் = அடியார், கண் = இடத்தில், தங்கு = தங்கியிரா நின்ற, அமலா = பரிசுத்தமானவனே! நின் = உம்முடைய, பதி = பரமபதம், கனிவுற்று = இஷ்டம் வைத்து, அருள்வாய் = தருவாய், பண் = இராகம் பாடுகின்ற, கண் = மூங்கிற் குழலை, தம் = தம்முடைய, கனிவாய் = சிவந்த வாயினில் பொருத்தி, கனைத்தோய் = தொனியுடன் இராகம் பாடின கோபாலா! திருஎவ்வுள் = சிறந்த எவ்வுள் க்ஷேத்திரத்தை, கண்டு = பார்த்து, அங்கு = அந்த இடத்தில், அதிவேட்பு = அதிக விருப்பம், உற்று = பொருந்தி, உறை = இருக்கின்ற, கதிர் = கிரணங்களையுடைய, வை = கூர்மையுள்ள, பரிதியனே = சக்கராயுதனே! என்றது. 77

வைத்தந்தவி யமனென்கண் வரும்போதினில் கிருபை
வைத்தந்தச மயம்வைனன பரம்வந்தொளிர் நின்சே
வைத்தந்தருள் எவ்வுட்புரி மாலேமுன மதமா
வைத்தந்தமு றித்திண்டிறல் மருவுஞ்சுரர் கோவே.

**இதன் பொருள்:**

வை = கூர்மையுள்ள, தந்தம் = பற்களையுடைய, இயமன் = இயமனானவன், என்கண் = என்னிடத்தில், வரும் போதினில் = வரும் பொழுதினில், கிருபை வைத்து = கிருபை கூர்ந்து, அந்த சமயம் = அச்சமயத்தில், வைனன் = கருடாழ்வான், அபரம் வந்து = முதுகின் பேரில் ஏறிவந்து, ஒளிர் = பிரகாசிக்கின்ற, நின் = உம்முடைய, சேவை = தரிசனம், தந்து = கொடுத்து, அருள் = அருள் செய்வாய், எவ்வுட் புரி = திருஎவ்வுள் நகரத்துற்ற, மாலே = வீரராகவப் பெருமானே! முனம் = முன்னம், மதமாவை = மும்மதங்கள் பொழியப் பட்ட—குவலயா பீடமென்னும் யானையின், தந்தம் = கொம்பை, முறித்த = ஒடித்த, திண்திறல் மருவும் = பராக்கிரமம் பொருந்திய, சுரர் = தேவர்கள், கோவே = நாயகனே! என்றது. 78

கோவேந்தனெ றிற்சேரொளிர் குலம்வந்தினி தாய்விற்
கோவேந்திய ரக்கன்றனை கோறும்புனி தாநற்
கோவேந்தர் நெருங்கும்மெவுள் கோயிற்குடி கொண்ட
கோவேந்திழை மார்பாவருள் கோவென்மிசை நோக்கே.

**இதன் பொருள்:**

கோ = பிரகாசமுள்ள, வேந்தன் = சூரியனது, ஒளிர் குலம் = விளக்கமுள்ள வமிசத்தில், இனிதாய் = இஷ்டமாய், வந்து = அவதரித்து, விற்கோ = வில்லும் பாணமுங் கையிலே, ஏந்தி = பிடித்துக் கொண்டு, அரக்கன்தனை = இராவணன் முதலிய இராட்சதனை, கோறும் = சங்கரித்த, புனிதா = பரிசுத்தமானவனே! நற்கோ வேந்தர் = நல்ல இராஜாதி ராஜர்கள், நெருங்கும் = சேர்ந்திருக்கும், எவ்வுள் = திருஎவ்வுள் நகரில், கோயிலில் = திருக்கோயிலில், குடி கொண்ட = வாசம் பொருந்திய, கோ வேந்திழை = மகாலட்சுமி தங்கிய, மார்பா = மார்பனே, அருள் = கிருபையுள்ள, கோ = நேத்திரத்தை, என்மிசை = என்மீதில், நோக்கு = பார்ப்பாய்: என்றது; ஏ—ஈற்றசை.. 79

சையம்புய நாலைந்துள தருவன்றனை வெல்வி
சையம்புவி டுங்கேசவ தகையெவ்வுளின் முதிர்பச்
சையம்புநி காசத்தனு தாமோதர வெற்கிச்
சையம்புய விழியார்மிசை சாராதருள் புரியே.

**இதன் பொருள் :**

சையம் = மலைபோன்ற, புயம் = தோள்கள், நாலைந்துஉள = இருபதுள்ள, தருவன்றனை = இராவணனை, வெல் = வெல்லுந் தன்மையும், விசை = வேகமு முள்ள, அம்பு = பாணங்கள், விடும் = பிரயோகம் செய்த, கேசவ = கேசவனென்னும் திருநாமம் பெற்றவனே! தகை = பெருமை பொருந்திய, எவ்வுளில் = திருஎவ்வுளூரில், முதிர் = முதிர்ந்த, பச்சை = மரகத நிறமுள்ள, அம்பு = மேகத்தை, நிகாசம் = ஒப்பாகிய, தனு = திருமேனியுடைய, தாமோதர = தாமோதரனே! எற்கு = உமது தாசனுகிய எனக்கு, இச்சை = விருப்பம், அம்புயம் = தாமரை மலர் போலும், விழியார் = கண்களுள்ள மாதர்கள், மிசை = மேல், சாராது = நீங்கும்படிக்கு, அருள் புரியே = கிருபை செய்வாய், என்றது; ஏ—ஈற்றசை. 80

## வேறு

புரிமு கத்தில்வய மருவுமம் புதவழ்
பொலிவெ வுட்புரியி லிமிழ்துடன்
அரிமு கப்பதலை யெனதி ருக்கண்வளர்
அதுல னைத்தொழுதி னெஞ்சமே
சுரிமு கக்களறு ளார்விருப் பவலை
துறுமி டாதுசது வத்திரன்
கரிமு கத்தனடல் தாதை காணரிய
கவினு றும்பதவி யடைவையே.

**இதன் பொருள் :**

புரிமுகத்தில் = கோபுரத்தில், வயமருவு = நீருண்ட, அம்பு = மேகங்கள், தவழ் = நெருங்கிச் செலகின்ற, பொலிவு = பிரகாரமுள்ள, எவுள்புரியில் = திருஎவ்வுளூரென்னும் க்ஷேத்திரத்தில், இமிழ்துடன் = இனிமையுடன், அரிமுகம் = மரகதமுகத்து, பதலை = பர்வதம், என = என்று சொல்லும் படி, திருக்கண்வளர் = யோக நித்திரை செய்யாநின்ற,

அதுலனை = நிகரில்லாதவனை, தொழுதில் = சேவை செய்யில், நெஞ்சமே = மனமே, சுரிமுகம் = சங்கு போன்ற, களறுளார் = கண்டத்தையுடைய மாதர்களின், விருப்பவலை = ஆசையாகிய வலையில், துறுமிடாது = சேராது, சதுவத்திரன் = நான்கு முகத்தையுடைய பிரமதேவன், கரிமுகத்தன் = யானை முகத்தையுடைய விநாயகன், அடல் = பெருமை பொருந்திய, தாதை = தந்தையாகிய சிவபெருமான் இவர்கள், காணரிய = காண்பதற்கு அருமையாகிய, கவின் உறும் = அழகு பொருந்திய, பதவி = பரமபதத்தை, அடைவையே = சேருவாய், என்றது. 81

அடையும் வெம்மிடி மிறைப்பி ணிக்கொடுமை
யற்ற மூப்புநரை யீறில்வன்
படைக டங்கனச யத்தில் வெளவிவரு
பண்பி லாமறலி யோடுவான்
மடைய டைக்கவரு முழவர் தங்களை
மருட்டு வாளைவசி கம்பலைப்
புடையு டுத்ததிரு வெவ்வுண் மாவினடி
புட்க ரம்பணி பவர்க்கரோ.

**இதன் பொருள் :**

அடையும் = சேருகின்ற, வெம் மிடி = வெப்பத்தைத் தருகின்ற தரித்திரம், மிறைபிணி = வருத்தத்தைக் கொடுக்கும் வியாதிகளும், கொடுமை = கொடூரமும், அற்றம் = சோர்வும் தரப்பட்ட, மூப்பு = விருத்தம், நரை = உரோமம் வெளுத்தல், ஈறில் = முடிவு காலத்தில், வன் = வலிமையுள்ள, படை = சூலாயுதமும், கடம் = பாசக்கயிறும், கனம் = பாரமுள்ள, சயத்தில் = கையிலே, வெளவி வரு = பிடித்து வருகின்ற, பண்பிலா = இரக்க குணமில்லாத, மறலி = இயமன், ஓடுவான் = ஓடிப்போவான், மடை = வயலில் நீர் பாயும் வழிகளை, அடைக்க = கட்டுகிறதற்கு, வரும் = வருகின்ற, உழவர்தங்களை = உழவர்களை, மருட்டு = மயக்குவிக்கும், வாளை = வாளை மீன்களை, வசி = வாசஞ்செய்யும், கம்பலை = கழனிகள், புடை = பக்கங்களில், உடுத்த = சூழ்ந்திருக்கின்ற,

திருஎவ்வுள் = சிறந்த எவ்வுளூரில் விளங்கிய, மாலின் = வீரராகவப் பெருமாளினது, புட்கரம் = தாமரை மலர் போன்ற, அடி = திருவடியை, பணிபவர்க்கு = சேவிப்பவர்க்கு; அரோ—அசைச்சொல். 82

பணியி லங்குநிற னேவ ரைப்புரை
பயோதரக் கனக வல்லிசேர்
திணியி லங்குகுவ வுப்பு யாத்திரி
சிறப்பு லாவியக தம்பமே
பிணியி லாதுவசு மதிவ சித்துறபி
றங்க ருட்குயிறி யென்னையாள்
மணியி ராகமிகை யெற்று மந்திரம்
வயங்கு மெவ்வுள்சய சார்ங்கனே.

**இதன் பொருள் :**

பணி = கௌத்துவாபரணம், இலங்கு = பிரகாசிக்கின்ற, நிறனே = மார்பையுடையவனே! வரை = மலையை, புரை = சமானமுள்ள, பயோதரம் = தனபாரத்தையுடைய, கனக வல்லி சேர் = கனகவல்லி யென்னும் திருநாமத்தையுடைய— மகாலட்சுமி புணருகின்ற, திணி = வலிமை, இலங்கு = விளங்குகின்ற, குவவு = திரட்சியுடையதாகிய, புயாத்திரி = தோள் பர்வதம் போல, சிறப்புலாவிய = சிறப்புப் பொருந்திய, கதம்பமே = மேகம் போன்ற மேனியுடையனே! பிணி இலாது = வியாதியில்லாது, வசுமதி = உலகத்தில், வசித்து = வாசஞ்செய்து, உற = இருக்க, பிறங்கு = பிரகாசமுள்ள, அருள் குயிறி = கிருபைசெய்து, என்னை = உமது தாசனாகிய இச்சிறுவனை, ஆள் = அடிமை கொள்வாய், மணி = இரத்தினங்களின், இராகம் = நிறம், மிகை = மிகுதியாக, எற்றும் = எறிக்கும்படியான, மந்திரம் = வீடுகள், வயங்கு = ஒளிவு பொருந்திய, எவ்வுள் = திருஎவ்வுள் ஸ்தலத்தில் வசிக்கும், சயம் = வெற்றியுள்ள, சார்ங்கனே = சார்ங்க மென்னும் பெயரையுடைய வில்லுள்ளவனே! என்றது. 83

சயம லர்க்கண்வடி சம்பன் வெள்கநல்
தருக்குடன் மிடல ருசிலோச்
சயம லர்க்கவிகை யாயெ டுத்துநிரை
தனைபு ரத்துல குளோரதி

சயம லர்ச்சியுற வேச வைத்தவெவு
டாம சோதியுயர் நின்குசே
சயம லர்ச்சரண மளவை யேத்தவுணர்
தருகு வாயகமி தங்கியே.

**இதன் பொருள் :**

சயமலர்=மலர் போன்ற கையின், கண் = இடத்தில், வடி=கூர்மையுள்ள, சம்பன்=வச்சிராயுதத்தைக் கொண்ட இந்திரன், வெள்க=வெட்கமடைய, நல்=நல்ல, தருக்குடன்= களிப்பாக, மிடல்=வலிமை, அரு=நீங்காத, சிலோச்சயம் = கோவர்த்தனம் என்னும் மலையை, மலர்=பரந்த, கவிகை= குடையாக, எடுத்து=பிடித்து, நிரை = பசுக்கூட்டங்களை, புரந்து = இரட்சித்து, உலகுளோர் = உலகத்திலுள்ளோர் யாவரும், அதிசயம் = ஆச்சரியம், மலர்ச்சி = அதிகமாக, உறவே=பொருந்தவே, சவைத்த = செய்த, எவுள் = சிறந்த எவ்வுளென்னும், தாமம் = பட்டணத்தையுடைய, சோதி=வீரராகவப் பெருமானே! உயர்=மேன்மையுள்ள, நின் = உமது, குசேசய மலர் = தாமரை மலர் போன்ற, சரணம் = பாதத்தை, அளவை = தினந்தோறும், ஏத்த = தோத்திரஞ் செய்ய, உணர் = தெளிவாகிய ஞானத்தை, தருகுவாய் = கொடுப்பாய், அகம் = மனம், இதங்கி= இரக்கமுற்று; என்றது. 84

தங்க வம்பர மிமைக்க பூண்மறு
தயங்க வல்லிகை மிளிர்க்கமோ
தங்க லித்துதமி யேன்மு னண்ணிமன
தளர்வு நீக்கியினி தாள்விக
சங்க தித்தபரி கம்பு டைச்செறி
சரோரு கத்தடமெ வுட்டணிற்
சங்க மூட்கனி வுடன்ப ழிச்சவளர்
தகைமை யுற்றவருள் வாரியே.

**இதன் பொருள் :**

தங்க அம்பரம் = பொன் வஸ்திரம், இமைக்க = பிரகாசிக்க, பூண்மறு = கௌத்துவாபரணம், தயங்க = விளங்க, வல்லிகை = மகர குண்டலம், மிளிர்க்க = ஒளிவு தரவும், மோதம் = சந்தோஷம், கலித்து = மிகுத்து,

தமியேன் = தனியனுகிய என், முன் = முன்னே, நண்ணி = வந்து, மனம் தளர்வு = மனத்தில் உண்டாகிய தளர்ச்சியை, நீக்கி = நிவர்த்தி செய்து, இனிது ஆள் = இனிதாக அடிமை கொள்ளுவாய், விகசம் = மலர்ச்சியாக, கதித்து = பருத்து, பரிகம் = மதிலானது, புடை = பக்கங்களில், செறி = மிகுந்தும், சரோருகம் = தாமரை மலர்கள் நிறைந்த, தடம் = புஷ்கரணியு முள்ள, எவ்வுள் தனில் = திருஎவ்வுளூரில், சங்கம் = புலவர்கள், உள் = மனத்தில், கனிவுடன் = இஷ்டத்துடன், பழிச்ச = துதிசெய்ய, வளர் = திருக்கண்வளராநின்ற, தகைமை உற்ற = பெருமை பொருந்திய, அருள் வாரியே = கிருபா சமுத்திரமே! என்றது. 85

வார மேசிறிது இலாத நெஞ்சினன்
வனைந்த வெம்பிழையு ளூழ்த்திடா
தீர மேவிபுல நல்கி யென்றனையு
னிணைய டிக்கணிலை செய்குவாய்
ஏர ருதவர்கள் மல்கு செல்வநனி
யேயு மெவ்வுடளி மத்தியில்
பேர ருததட பணவ னந்தன்மிசை
பெட்பு டன்வளர்மு குந்தனே.

இதன் பொருள் :

வாரம் = உம்மிடத்தில் அன்பானது, சிறிது = கொஞ்சமும், இலாத = இல்லாத, நெஞ்சினன் = மனத்தை யுடையவனுகிய யான், வனைந்த = செய்த, வெம்பிழை = அதிகக் குற்றத்தை, உள் = மனத்தில், ஊழ்த்திடாது = நினையாமல், ஈரம் = அன்பு, மேவி = பொருந்தி, புலம் = அறிவை, நல்கி = கொடுத்து, என்தனை = என்னை, உன் = உமது, இணை = இரண் டாகிய, அடி = திருவடி, கண் = இடத்தில், நிலை செய்குவாய் = நிலைத்திருக்கும்படி செய்வாய், ஏர் = உழவுத்தொழில், அருதவர்கள், நீங்காதவர்கள், மல்கு = நெருங்கி, செல்வம் = அயிசுவரியம், நனி = மிகுதியாக, ஏயும் = பொருந்தியிருக்கின்ற, எவ்வுள் = திருஎவ்வுள், தளி = திருக்கோயில், மத்தியில் = நடுவில், பேர் = கீர்த்தி, அருத = நீங்காத, தடம் = படுத்த, பணம் = படத்தையுடைய, அனந்தன் மிசை = திருவனந் தாழ்வான் பேரில், பெட்புடன் = அன்புடனே, வளர் = கண் வளர்கின்ற, முகுந்தனே = வீரராகவப்பெருமானே! என்றது. 86

முகுந்த வென்றுனது திவ்ய நாமமதை
  முகரி மைப்பரவி யவிர்தமும்
மிகுந்த வன்பினுட னேப ழிச்சுவர்கள்
  மேவு பேறுசொல வல்லனே
உகுந்த ளச்சுமசு மாலி யைப்பருகி
  யுளையி டம்புரியு வளகமன்
தகுந்த கைத்தெகுளு மெவ்வுள் மாநகர்
  சநார்த்த னுவருள மைப்பையே.

**இதன் பொருள் :**

முகுந்த என்று = முகுந்தனே யென்று, உனது = உம்முடைய, திவ்யநாமம் அதை = தேவர்க்கு உரிய திரு நாமத்தை, முகரிமை = பேரறிவு, பரவி = அதிகரித்து, அவிர்தமும் = எப்பொழுதும், மிகுந்த = மிகுதியான, அன்பினுடன் = பக்தியுடன்; பழிச்சுவர்கள் = தோத்திரஞ் செய்பவர்கள், மேவும் = அடையும், பேறு = இலாபத்தை, சொல = சொல்ல, வல்லனே = வல்லமையுடையவனே, உகும் = சொரியப்பட்ட, தளம் = இதழுள்ள, சுமம் = புஷ்பத்தின், சுமாலியை = தேனை, பருகி = குடித்து, உளை = தொனிசெய்யும், இடம்புரி = சங்குகள் நிறைந்த, உவளகம் = தடாகஞ் சூழ்ந்து, மன் = அரசர்கள், தகுந்த = தகுதியாகிய, தகை = அன்பு, தெகுளும் = பெருகும், எவ்வுள் = திருஎவ்வுள், மாநகர் = பெரிய பட்டணத்துற்ற, சநார்த்தனு = வீரராகவ மாயனே! அருள் = கிருபை, அமைப்பை = செய்வாய் — ஏ — ஈற்றசை. 87

அமுதி லுற்றசிறு புற்பு தங்கிடையு
  மவய விச்சத மெனப்படர்ந்
திமிழ்து புல்லிபவ வினைக ழிக்குபிறி
  யரித றன்னுமட னெஞ்சமே
அமரி தந்தவகி படிக னைம்பொறிய
  மைந்த வற்சனையி மைச்செறி
தமனி யப்பிடிய லனையெ வுட்பரனை
  சாருவாய் துயரம் விளியவே.

**இதன் பொருள் :**

அமுதில்=நீரில், உற்ற = உண்டாகிய, சறு = சறிய, புற்புதம்=நீர்க்குமிழியை, கிடையும்=ஒத்திருக்கும், அவயவி= சரீரத்தை, சதமென =நிச்சய மென்று, படர்ந்து=நினைத்து, இமிழ்து=இஷ்டம், புல்லி=பொருந்தி, பவவினை=பாவமான காரியங்களை, கழி=மிகுதியாக, குயிறி=செய்து, இரிதல்= அச்சத்தை, துன்னும்=அடைந்த, மடம்=அறிவின்மையான, நெஞ்சமே=மனமே, அமரி=விடம் பொருந்திய, தந்தம்= பற்களையுடைய, அகி=காளிங்க னென்னும் பாம்பின் மீது, படிகனை = நிருத்தஞ் செய்தவனை, பொறி = மகாலட்சுமி, அமைந்த=தங்கியிருக்கின்ற, வற்சனை = மார்பனை, இமை= பிரகாசம், செறி = மிகுந்த, தமனியம் = பொன்னுகிய, பிடியலனை=வஸ்திரமுடையவனை, எவ்வுள் =திருஎவ்வுளூரில் தங்கிய, பரனை=பரமாத்தும ரூபனை, சாருவாய்=கூடுவாய், துயரம்=துன்பமானது, விளியவே=நீங்கவே; என்றது. 88

விளித்த பொங்கடி தனைப்பு ரந்ததுறழ்
 வீறு நின்றிரு வுளத்தினில்
அளித்த தைந்துதமி யேனை யஞ்சலென
 வாத ரித்தருள்ச வைத்திடாய்
களித்த ரும்படிவ சாலி கோத்திரர்
 கருத்து பாடவம லிந்திட
நளித்த யங்குதரி சனம ளித்தெவுள்
 நகர்த்த ளிக்குலவு செம்மலே.

**இதன் பொருள் :**

விளித்த=ஆதிமூலமென்று அழைத்த, பொங்கடிதனை = கஜேந்திரனென்னும் யானையை, புரந்த=காத்ததை, உறழ்= போல், வீறு=பெருமை பொருந்திய, நின் = உம்முடைய, திருவுளத்தினில்=மனத்தில், அளி = அன்பு, ததைந்து = பொருந்தி, தமியேனை=தனியனுகிய என்னை, அஞ்சல் என = பயப்படாதேஎன்று, ஆதரித்து=ஆதரணை செய்து, அருள்= கிருபை, சவைத்திடாய் = செய்திடுவாய், களித்து = சந்தோஷமடைந்து, அரும் = அருமையாகிய, படிவம் = தவத்தினையுடைய, சாலி கோத்திரர் = சாலி கோத்திர முனிவர், கருத்து =மனம், பாடவம்=சந்தோஷம், மலிந்திட=

அதிகரிக்க, நளி=பெருமை, தயங்கு=பிரகாசம்—உண்டாக, தரிசனம் அளித்து = சேவை சாதித்து, எவுள்=திருஎவ்வுள், நகர் = க்ஷேத்திரத்தில், தளி = திருக்கோயிலில், குலவு = குலாவிக் கொண்டிருக்கும், செம்மலே = எப்பொருட்கும் இறைவனே! என்றது. 89

செம்மை யுற்றசது வம்பல் மானவர்கள்
சேவை செய்துதுதி வனைஎவுள்
சும்மை யுள்விசய கோடி மானமதில்
சோதி சேடன்மிசை துயிலரி
அம்மை சிந்துர மியங்கு தாரடியே
ஞரதம் பணியு மன்பர்கள்
எம்மை யுட்டளரு ருமலெவ் வனமி
யைந்து நற்கதி வசிப்பரோ.

இதன் பொருள் :

செம்மை உற்ற=செவ்வையுள்ள, சதுவம்பல்=நான்கு திக்கிலுள்ள, மானவர்கள=மனிதர்கள், சேவை செய்து = சேவித்து, துதி=தோத்திரம், வனை = செய்யும், எவுள்= திருஎவ்வுள், சும்மையுள்=நகரில், விசய கோடி=விஜய கோடி யென்னும் பெயரையுடைய, மானமதில் = விமானத்தில், சோதி = பிரகாசம் பொருந்திய, சேடன் = ஆதிசேஷன், மிசை=மேல், துயில்=யோக நித்திரை செய்யா நின்ற, அரி= வீரராகவப் பெருமாளினது, அம்மை=அழகிய, சிந்துரம்= சிவந்த நிறம், இயங்கும்=விளங்கிய, தார் = மலர், அடி = திருவடி, அனாரதம்=எப்பொழுதும், பணியும் = வணங்கும், அன்பர்கள்=அன்புள்ள பாகவதர், எம்மையுள் = எடுத்த பிறப்பினுள்ளும், தளருருமல் = மனத் தளர்ச்சியில்லாமல், எவ்வனம்=சந்தோஷம், இயைந்து=அடைந்து—முடிவில்—, நல்கதி = நல்ல கதியாகிய — வைகுந்தத்தை அடைந்து, வசிப்பர்=வாசஞ் செய்வார்கள்; என்றது—ஏ—ஈற்றசை. 90

வேறு

வசிபஞ் சவசிச் சயபோற் றியிமை
மகரக் குழைசிர வணபோற் றிமணி
கசிதப் பதணத் திருவெவ் வுளெயிற்
காமர்ச் சயனத் தவபோற் றிநனி

யுசிதச் சதகோ டிகரன் றுருசை
 யொழியன் புளநா ரணபோற் றியெனுள்
நிசிவட் கவியந் தருள்செய் யரித
 நிறவத் திரியே யடல்புற் கலனே.

**இதன் பொருள் :**

வசி = கூர்மையுள்ள, பஞ்ச அசி = பஞ்சாயுதந்தாங்கிய, சயம் = கைத்தலனே, போற்றி = வணங்குகின்றேன், இமை = பிரகாசம் பொருந்திய, மகரக்குழை = மகர குண்டலத்தை யுடைய, சிரவணம் = செவியுள்ளவனே! போற்றி = உம்மைப் புகழ்கின்றேன், மணி = இரத்தினங்கள், கசிதம் = பதித்த, பதனம் = மதில் சூழ்ந்த, திருஎவ்வுள் = அழகிய எவ்வுள், எயில் = ஊரில், காமர் = அழகாக, சயனத்தவ = சயன கோலங் கொண்டவனே! போற்றி = உம்மை வணங்கினேன், நனி = மிக, உசிதம் = தகுதியான, சதகோடி = வச்சிராயுதந் தாங்கிய, கரன் = கையுள்ள இந்திரன், துரிசு = துன்பத்தை, ஒழி = ஒழித்த, அன்புள = அன்பு பொருந்திய, நாரண = ஆதிநாரயணனே! போற்றி = உம்மை வணங்குகின்றேன், என் உள் = என் மனத்திலுள்ள, நிசி = அஞ்ஞானமாகிய இருள், வட்க = நீங்க, வியந்து = சந்தோஷித்து, அருள்செய் = கிருபை செய்வாய், அரிதம் = பச்சை, நிறம் = நிறமுள்ள, அத்திரி = மலை போன்ற, அடல் = பெருமையுள்ள, புற்கலனே = சரீரமுடையவனே! என்றது. 91

கலபிக் கிடைதே வகிபெற் றவெழிற்
 கருணும் புதிபோற் றியளக் கர்வளை
தலமெச் செவுளா தவபோற் றிபணி
 தமியேற் கருண்மா தவபோற் றிமிடல்
உலவைச் சிறுகான் முளைமீ திலிவர்ந்
 துரமுற் றவபோற் றியணுக் கடலை
யலகுந் துனிவீக் கிநலந் தருவாய்
 அமலப் பரபோற் றிசிரந் தரமே.

**இதன் பொருள் :**

கலபிக்கிடை = மயில் போன்ற சாயலையுடைய, தேவகி பெற்ற = தேவகியம்மன்பெற்ற, கருணும்புதி = கிருபா சமுத்திரமே! போற்றி = உம்மை வணங்குகின்றேன்,

அளக்கர்வளை=சமுத்திரஞ் சூழ்ந்த, தலம்=உலக மெங்கும், மெச்சும் = மகிமைக்கு ஆச்சரியப்படுகின்ற, எவ்வுள் = திருஎவ்வுள் நகரத்தில் வசிக்கும், ஆதவம் = பிரகாச முள்ளவனே! போற்றி=உம்மைத் துதிக்கின்றேன், பணி = உம்மைச் சேவிக்கும், தமியேன் = தனியனுகிய எனக்கு, அருள் = கிருபை செய்யும்,மாதவ = மகாவிஷ்ணுவே! போற்றி = சேவிக்கின்றேன், மிடல் = பலம் பொருந்திய, உலவை = வாயுபகவான், சிறு = சிறுத்த, கான்முளை = புத்திரனுகிய அனுமார், மீது=தோள்மேல், இவர்ந்து=ஏறி; உரம் உற்றவ=சண்டை செய்ய வலிமை பொருந்தினவனே! போற்றி = உம்மைப் போற்றி செய்கின்றேன், அணுக்கள் தமை = உயிர்களை, அலக்கும் = வருத்துகின்ற, துனி = துன்பங்களை, வீக்கி=நிவர்த்தி செய்து, நலம்=நல்ல சுகத்தை, தருவாய்=கொடுத்தருள்வாய், அமலம்=மாசு இல்லாத, பர= பரமாத்துமனே! போற்றி = உம்மைத் துதி செய்கின்றேன், நிரந்தரமே=எப்பொழுதுமே! என்றது. 92

தரமொய்ச் செறிகுல் லையலங் கல்வனை
  தடமொய்ம் புளமா யவபோற் றிபயோ
தரமொய் குரல்வஞ் சியர்மாழ் கலுளஞ்
  சாரா துனையூழ்த் திடவாற் றுதரா
தரமொய்ம் புளசொன் னனைவீட் டிதபோ
  தனரா தியைகாத் தவபோற் றியுடல்
தரமொய்த் திரிசாந் தவனம் புடையிற்
  சார்எவ் வுள்கிரா மயபோற் றியரோ.

**இதன் பொருள் :**

தரம்=கூட்டமாக, மொய்=வண்டுகள், செறி=மிகுந்த, குல்லை=திருத்துழாய், அலங்கல்=மாலை, வனை = தரித்த, தடம்=மலை போன்ற, மொய்ம்புள = புயத்தையுடைய, மாயவ=மாயாவிநோதனே! போற்றி = வணங்குகின்றேன், பயோதரம் = கறுத்த மேகம் போன்ற, மொய்=நெருங்கிய, குரல்=கூந்தலையுடைய, வஞ்சியர்=வஞ்சிக் கொடி போலும் இடையுள்ள மாதர், மாழ்கல்=மயக்கம், உளம் = மனத்தில், சாராது=சேராது, உனை=உம்மை, ஊழ்த்திட = நினைக்க, ஆற்று=கிருபை செய்வாய், தராதரம் = மலை போன்ற,

மொய்ம்பு உள = வலிமையுள்ள, சொன்னனை = இரணியனை, வீட்டி = வென்று, தபோதனர்கள் = தவமே ஓதனமாகிய— சாதமாய்க் கொள்பவர், ஆதியை = முதலாயினவரை, காத்தவ = இரட்சித்தவனே! போற்றி = வணங்குகின்றேன், உடல் = சரீரம், தரம் = வலிமை பொருந்திய, மொய் = யானை, திரி = உலாவப்பட்ட, சாந்தவனம் = சந்தனச் சோலைகள், புடையில் = நான்கு பக்கங்களில், சார் = இடமுள்ள, எவ்வுள் = திருஎவ்வுள் நகரில் வசிக்கும், நிராமய = கர்த்தனே! போற்றி = உம்மைத் தோத்திரஞ் செய்கின்றேன்—அரோ = அசைநிலை.

93

மயமஞ் சுபுனைந் ததிருக் கனக
  வல்லிக் கிறைபோற் றியுவா கரைச
மயமஞ் சலெனச் சொலிநே மிவிடு
  மதர்வெவ் வுள்சநார்த் தநபோற் றிபதாம்
புயமன் னவபோற் றியினிக் கருவிற்
  புகுதா தெனைநின் பதம்வை சிமயப்
புயமன் னர்நெருங் கெழிலத் திகிரி
  புரியச் சுதபோற் றிநிரந் தரமே.

**இதன் பொருள் :**

மயம் = அழகு பொருந்திய, மஞ்சுபுனைந்த = ஆபரணங்களைத் தரித்த, திரு = மகாலட்சுமியாகிய, கனகவல்லிக்கு = கனகவல்லிப் பிராட்டிக்கு, இறை = நாயகனே! போற்றி = உம்மைப் புகழ்கின்றேன், உவா = கசேந்திர ஆழ்வான், கரை = ஆதிமூலமே என்று அழைக்கும், சமயம் = தருணத்தில், அஞ்சல் = பயப்படாதே, என்று = என்று, சொலி = சொல்லி, நேமி = சக்கராயுதத்தை, விடும் = பிரயோகஞ் செய்த, மதர் = களிப்புப் பொருந்திய, எவ்வுள் = திருஎவ்வுள் ஸ்தலத்தில் வசிக்கும், சநார்த்தன = திருமாலே! போற்றி = துதிசெய்கின்றேன், பதம் = திருவடி, அம்புயம் = தாமரை மலரை, அன்னவ = சமமானவ, போற்றி = தோத்திரஞ் செய்கிறேன், இனி = இனிமேல், கருவில் = கர்ப்ப வாசத்தில், புகுதாது = செல்லாது, எனை = என்னை நின்பதம் = உமது பரமபதத்தில், வை = வைத்தருள்வாய், சிமயம் = பர்வதம் போலும், புயம் = தோளையுடைய, மன்னர் =

அரசர்கள், நெருங்கு=நெருங்கிச் செல்லும் வீதி, எழில் = அழகுள்ள, அத்திகிரி = அத்திகிரி யென்னும் திருப்பதியில், புரி=விருப்பத்தையுடைய, அச்சுத = அச்சுதன் என்னுந் திருநாமத்தை யுடையவனே! போற்றி=துதிசெய்கின்றேன், நிரந்தரம்=எப்பொழுதும், என்றது. 94

மேவும் மறையோர்ந் துயர்வே தியர்கள்
வீறும் வயின்மன் னியவெவ் வுளினில்
தாவும் புகழங் கதமீ தினிலே
சயனங் கொளிரா கவபோற் றியடல்
கோவத் தனமேந் திகதம் பமிகு
கோபா லரைகாத் தகிருபா கரனே
சேவிக் குமெனக் கொருதுன் பணுகா
செய்நா ரணபோற் றிமுரா கரியே.

**இதன் பொருள் :**

மேவும்=பொருந்திய, மறை = நான்கு வேதங்களையும், ஓர்ந்து = வாசித்தறிந்து, உயர் = மேன்மையுடைய, வேதியர்கள்=பிராமணர்கள், வீறும்=பெருமை பொருந்தும், வயின் = மாளிகைகள், மன்னிய = மிகுந்திருக்கின்ற, எவ்வுளினில் = திருஎவ்வுள் நகரத்தில், தாவும் = பரவும் படியாகிய, புகழ் = கீர்த்தியையுடைய, அங்கதம் = அனந்தாழ்வான், மீதினில்=மேலே, சயனங்கொள்=சயன கோலங்கொண்ட, இராகவ = வீரராகவப் பெருமானே! போற்றி=தோத்திரஞ் செய்கின்றேன், அடல் = பலம் பொருந்திய, கோவத்தனம் = கோவர்த்தனம் என்னும் மலையை, ஏந்தி = குடையாகப் பிடித்து, கதம்பம் = பசுக் கூட்டம், மிகு=மிகுந்த, கோபாலரை=யாதவர்களை, காத்த= இரட்சித்த, கிருபாகரனே—கிருபை = அருள் செய்வதில், அகரம் = முதன்மையானவனே! சேவிக்கும் = உம்மை வணங்குகின்ற, எனக்கு=தாசனுக்கு, ஒருதுன்பு = ஒரு துன்பமும், அணுகா=சேராது, செய்=கிருபை செய்வாய், நாரண = ஸ்ரீமந் நாராயணா! போற்றி = தோத்திரஞ் செய்கின்றேன், முரகரியே=முரன் என்னும் இராட்சதனைச் சம்மாரஞ் செய்த மகாவிஷ்ணுவே! என்றது. 95

அரிதப் புரமே னியிரா கவனே
அடியே னைபிணித் தொடரா தருள் செய்
விரிசக் கரமுள் வடபத் திரமேல்
விழிதுஞ் சுநிரா மயபோற் றிவலம்
புரிதண் மலர்வா யிடவைத் தொலிசெய்
புருடோத் தமபோற் றிநினைப் பணிவோர்
துரிசைக் கெடும்எவ் வுளிருக் கையினிற்
சுகமே வியவா னவர்நா யகனே.

**இதன் பொருள் :**

அரிதம் = பச்சையாகிய, மேனி = திருமேனியுடைய, இராகவனே = வீரராகவப் பெருமானே! அடியேனை = உமது அடிமையாகிய என்னை, பிணி = எந்த வியாதியும், தொடராமல் = சேராமல், அருள்செய் = கிருபா நோக்கஞ் செய்வாய், விரி = பரந்த, சக்கரமுள் = பாற்கடலினுள்ளே, வடபத்திரமேல் = ஆலிலையின் பேரில், விழிதுஞ்சும் = யோக நித்திரை செய்யா நின்ற, நிராமய = கர்த்தனே! போற்றி = உம்மைத் துதிக்கின்றேன், வலம்புரி = பாஞ்சசன்னியத்தை, தண் = குளிர்ச்சி பொருந்திய, மலர் = மலர் போன்ற, வாயிடம் = வாயினிடம், வைத்து = பொருத்தி, ஒலிசெய் = தொனி செய்த, புருடோத்தம = மகாவிஷ்ணுவே! போற்றி = போற்றி செய்கின்றேன், நினை = உம்மை, பணிவோர் = வணங்குவோர், துரிசை = துன்பத்தை, கெடும் = நீக்கும் பெருமையுள்ள, எவ்வுள் = திருஎவ்வுள், இருக்கை = நகரில், சுகமேவிய = இன்பம் பொருந்தி வசிக்கும், வானவர் நாயகனே = தேவராஜனே! என்றது. 96

வாணிச் சகுனிக் கிறைபோற் றிநகு
மருவுந் தனவம் பரமா தவனே
ஞானிக் குரவோர் கள்கணிக் கரிய
நாதா சிறியேற் கருள்செய் துவளா
மேனிப் பெருகும் மிளிர்விக் கிரம
வீறும் பரிதிக் கரபோற் றிசுரர்
கோனிச் சையருந் தவெவுட் புரியிற்
குலவொண் மையபோற் றியனு ரதமே.

**இதன் பொருள் :**

வானி = விருதுக் கொடி, சகுனிக்கிறை = பறவைக்கு அரசனாகிய கருடாழ்வானையுடையவனே ! போற்றி = போற்றி செய்கிறேன், நகு = பிரகாசம், மருவும் = பொருந்திய, தனம் = பொன்னாகிய, அம்பரம் = வஸ்திரம் புனைந்த, மாதவனே = மாதவன் என்னும் திருநாமத்தையுடையவனே! ஞானி = மிகுந்த ஞானவான்கள், சூரவோர்களை = அறிவில் சிறந்த பெரியோர்கள், கணிக்கரிய = நினைப்பதற்கும் அருமையாகிய, நாதா = சர்வேசுவரா ! சிறியேற்கு = சிறியவனாகிய எனக்கு, அருள்செய் = கிருபை செய்குவாய், குவளை = நீலோற்பலம் போலும், மேனி = திருமேனி, பெருகும் = அதிகமாம், மினிர் = பிரகாசமுள்ள, விக்கிரம = திருவிக்கிரம ரூபனே ! வீறும் = பெருமையுள்ள, பரிதி = சக்கராயுதந் தாங்கிய, கரம் = கையினையுடையவனே, போற்றி = உம்மைத் துதிக்கின்றேன், சுரர் = தேவர்கள், கோன் = அரசனாகிய இந்திரன், இச்சை = விருப்பம், அருத – நீங்காத மகிமை பொருந்திய, எவ்வுள் = திருஎவ்வுள், புரி = நகரத்தில், குலவு = யாவருங் கொண்டாடப் பட்ட, ஒண்மைய = நன்மையுடையவனே ! போற்றி = வணங்கு கின்றேன், அனாதமே = எப்பொழுதுமே, என்றது. 97

அனிலத் துறவிக் கொருதா யெனவே
அமைதிச் செறிவா மனதம் பிதருங்
கனியன் பொடுதுய்த் தவபோற் றிமணிக்
கவின்மா டநெருங் குசுவர்க் கமுறை
புனிதன் றருகூ விரிமீ தில்வைகி
புல்லான் தசவா னனனை வீட்டும்
தனிவிற் கரபோற் றியெவுட் டளியில்
தங்கும் பரவருள் செய்முர கரியே.

**இதன் பொருள்:**

அனிலம் = பிறக்கும்படியான, உறவிக்கு = உயிர்களுக்கு, ஒருதாய் என = ஒருதாயைப் போல, அமைதி = மாட்சிமை, செறி = மிகுந்த, வாமன தம்பி தரும் = சிறிய உருவமுள்ள இலட்சுமணர் கொடுத்த, கனி = பழங்களை, அன்பொடு துய்த்தவ = ஆசையுடன் உண்டவனே! போற்றி = உம்மைத் தோத்திரஞ் செய்கின்றேன், மணி = இரத்தினங்கள் பதித்து,

கவின் = அழகு செய்யப்பட்ட, மாடம் = மாளிகைகள், நெருங்கு = நெருங்கியிருக்கின்ற, சுவர்க்கம் = தேவலோகத்தில், உறை = வாசஞ் செய்யும், புனிதன் = இந்திரன், தரும் = கொடுத்தனுப்பிய, கூவிரி மீதில் = தேரின் மேல், வைகி = தங்கி, புல்லான் = பகைவனாகிய, தசம் = பத்து ஆன, ஆனனனை = முகத்தையுடைய இராவணனை, வீட்டும் = சங்கரித்த, தனி = ஒன்றும் நிகரில்லாத, வில்கர = வில்லைக் கையிலே பிடித்தவனே! போற்றி = வணங்குகின்றேன், எவுள் = திருஎவ்வுளூர், தளி = திருக்கோயிலில், தங்கும் = தங்கியிருக்கின்ற, பர = கர்த்தனே! அருள்செய் = கிருபை செய்வாய், முரன் = முரன் என்னும் அசுரனைக் கொன்ற, அரியே = மகாவிஷ்ணுவே—என்றது. 98

முருகுச் செறிதண் பழனங் கடனின்
முதிர்சா லிகளோங் கெவுள்வாழ்க் கையனே
பெருகும் பதபங் கயபோற் றிமிளிர்
பெயர்மன் னியரா கவபோற் றிசெயிர்
திருகுக் கயமா கியதா னவரை
செற்றந் திறலா னனபோற் றிமனம்
உருகித் துதியெற் கருள்செய் யுவணை
யும்பர்க் கணநா டுதிநன் கிறையே.

**இதன் பொருள் :**

முருகு = தேன்கள், செறி = பரவும், தண் = குளிர்ச்சி பொருந்திய, பழனங்கள்தனில் = கழனிகளிடத்தில், முதிர் = முதிர்ந்த, சாலிகள் = பயிர்கள், ஓங்கு = உயர்ந்த, எவ்வுள் = திருஎவ்வுள் என்னும், வாழ்க்கையனே = க்ஷேத்திரத்தை யுடையவனே! பெருகும் = பூமியை ஓரடியாக அளக்க—பெருத்த, பதம் = பாதமானது, பங்கய = தாமரை மலர் போன்றவனே! போற்றி = வணங்குகின்றேன், மிளிர் = பிரகாசிக்கின்ற, பெயர் = திருநாமம், மன்னிய = மிகுந்த, ராகவ = வீரராகவ, போற்றி = தோத்திரஞ் செய்கின்றேன், செயிர் = கோபம், திருகு = வஞ்சனையுமுள்ள, கயம் = யானை யாகிய, தானவரை = இராட்சதரை, செற்ற = வென்ற, அம் = அழகும், திறல் = வலிமையுமுள்ள, ஆனன = சிங்கமே! போற்றி = புகழ்கின்றேன், மனம் = மனமானது, உருகி =

இளகி, துதிஎற்கு = துதிசெய்யப்பட்ட அடியேனுக்கு, அருள்செய் = கிருபை செய்வாய், உவணை = சுவர்க்க வாசராகிய, உம்பர் = தேவர்கள், கணம் = கூட்டங்கள், நாள் = தினந்தோறும், துதி = தோத்திரஞ் செய்யாநின்ற, நன்கு = அழகுள்ள, இறையே = கர்த்தனே! என்றது. 99.

நன்றக் கரமெட் டினிலே கிளரு
நளினச் சுமவித லையபோற் றிதடக்
குன்றுக் கவிகைச் சயபோற் றியெழில்
குலவுங் கௌசலை சுதபோற் றிவிரைந்து
இன்றென் பிணிபோக் கிவியந் தருள்வாய்
இலையா கில்கனிந் துபதந் தருவாய்
மன்றல் திருஎவ் வுளிருக் கையினில்
வளர்நா ரணபோற் றிநல்சீ ரடியே.

**இதன் பொருள்:**

நன்று = பெருமையைத் தரப்பட்ட, அக்கரம் எட்டில் = எட்டெழுத்தில், கிளரும் = பிரகாசிக்கும், நளினச் சுமம் = தாமரை மலருள்ள, இதலைய = உந்தியனே! போற்றி = உம்மை வணங்கினேன், தடம் = பெருமையுள்ள, குன்று = கோவர்த்தன மென்னும் மலையை, கவிகை = குடையாகப் பிடித்த, சயம் = கையையுடையவனே, போற்றி = துதிக்கின்றேன், எழில் = அழகு, குலவும் = குலாவுகின்ற, கௌசலை = தசரதன் (சிரேஷ்ட) [ஜேஷ்ட] பத்தினியின், சுத = புத்திரனாகிய இராமஸ்வாமியே! போற்றி = உம்மைத் தோத்திரஞ் செய்கின்றேன், விரைந்து = சீக்கிரத்தில், இன்று = இப்பொழுது, என்பிணி போக்கி = என்னுடைய வியாதியை நிவர்த்தி செய்து, வியந்து = அதிசயித்து, அருள் வாய் = கிருபை செய்வாய், இலையாகில் = இல்லையாகில், கனிந்து = இஷ்டமுடன், பதம் = பரமபதத்தை, தருவாய் = கொடுத்தருள்வாய், மன்றல் = நித்திய கலியாணம் விளங்கிய, திருஎவ்வுள் = மகாலட்சுமி வாசஞ்செய்யும் எவ்வுள், இருக்கையினில் = நகரத்தில், வளர் = வளர்தலையுள்ள, நாரண = ஸ்ரீ வீரராகவப் பெருமாளினது, நல் = நல்ல சீர் = சிறப்புப் பொருந்திய, அடி = பாதமலரை, போற்றி = வணங்குகின்றேன், என்றது: ஏ—ஈற்றசை 100

## (செய்யுள் 100.)

## (வாழி) [வாழ்த்து]

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

திங்கள்தவழ் புரிமுகங்கள் துறுமுதிரு வெவ்வுளிறை
  சிறப்பைக் கேட்கும்
துங்கவடி யவர்வாழ்க வாஞ்சையுட னனவரதந்
  துதிப்போர் வாழ்க
புங்கவிரு பிறப்பாளர் வாழ்கபுயல் கதிர்விதுவிண்
  புலவர் வாழ்க
தங்கரசர் வாழ்கவசு தைக்கிளரும் புற்கலன்கள்
  தழைத்து வாழ்க.

**இதன் பொருள்:**

திங்கள் = சந்திரன், தவழ் = தவழ்ந்து செல்லுகின்ற, புரிமுகங்கள் = கோபுரங்கள், துறுமும் = நெருங்கிய, திருஎவ்வுள் = திருஎவ்வுள் ஸ்தலத்தில் அனந்த ஆழ்வான் பேரில்—கண்வளரா நின்ற, இறை = பெருமை பொருந்திய வீரராகவப் பெருமாளினது, சிறப்பைக் கேட்கும் = சிறந்த புகழைக் கேட்கின்ற, துங்கம் = பரிசுத்தம் பொருந்திய, அடியவர் = பாகவதர்கள், வாழ்க = வாழக்கடவர், வாஞ்சையுடன் = அன்புடனே, அனவரதம் = எப்பொழுதும், துதிப்போர் வாழ்க = தோத்திரஞ்செய்பவர்கள் வாழக்கடவர், புங்கம் = உயர்வாகிய, இருபிறப்பாளர் வாழ்க = பிராமணர்கள் வாழக்கடவர், புயல் = மேகங்கள், கதிர் = கிரணங்களையுடைய சூரியன், விது = சந்திரன், விண் = சுவர்க்கலோகத்து, புலவோர் வாழ்க = தேவர்கள் வாழக்கடவர், தங்கு = உலகத்தில் தங்கியிருக்கின்ற, அரசர் = இராஜாக்கள், வாழ்க = வாழக்கடவர், வசுதை = பூமியினில், கிளர் = விளங்கிய, புற்கலன்கள் = பிராணிகள், தழைத்து = செழுமையுற்று, வாழ்க = வாழக்கடவன; என்றது.

அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

சாலி கோத்திர முனிவர் விஷயம்

சீர்பெறு முலகு ளோர்கள் செப்பரு மகிமை யேய்ந்து
பேர்பெறு மெவ்வு ளூரில் பின்னைகேள் வன்க டாட்சம்
ஆர்பெறு மிருடி யான அறிவுசாந் தம்வை ராக்யம்
தேர்பெறு சாலி கோத்ரர் சேவடி சிரமேற் கொள்வாம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருஎவ்வுட் பதிற்றுப்பத் தந்தாதி முற்றும்.

# 10. பாலையசுவாமிகள் பதிற்றுப்பத் தந்தாதி

## விநாயகர் துதி

### அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

சீரார் பொம்ம புரத்துவளர்
செல்வச் சிவஞா னியின்புயத்திற்
பாரோர் புகழு மொருபதிற்றுப்
பத்தந் தாதிப் படலைதனை
காரா வண்பு சொன்மலரா
நாவாங் கரத்தாற் றொடுத்தணியக்
காரார் பெருகு மும்மதத்துக்
களிற்றின் மலர்த்தாள் கருதிடுவாம். 1

## அப்பர், சுந்தரர், சம்பந்தர் மாணிக்க வாசகர் துதி

(வேறு சந்தம்)

### அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

அற்புதமெய்ச் சிவஞான வமிழ்துண்டு தமிழ்மறையிங்
களித்தோர் தாளுங்
கற்புணையாற் கருங்கடலைக் கடந்துபவக் கடல்கடந்தோர்
கழலு மேலாஞ்
சிற்பரனை நள்ளிருளிற் சிற்றிடைபால் தூதுசெலச்
செய்தோர் தாளும்
பொற்பொடிறை திருக்கரத்தாற் பொறிக்கும்வா
[சகர்தாளும்
போற்று வாமால். 2

## நூல்

### (வேறுசந்தம்)

### அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

பூவா முயனுந் துழாய்ப்புயனும்
  பொன்னுட் டிறையும் போற்றிசைக்கும்
தாவா வளஞ்சேர் மயிலவரை
  தனையு மெனையு மிடமடிமை
யாவா தரத்திற் கொண்டதிறல்
  அத்தா சித்தா பொம்மபுரத்
தேவா எங்கள் சிவஞானச்
  செல்வா சரணம் அருள்வாயே. 1

வாயே மயில மாநகரின்
  மருந்தைத் துதியா யெனதுமனப்
பேயே செல்வ நிலையதன்றப்
  பெம்மா னடிக்கே யன்புசெய்வாய்
நோயேழ் பவத்திற் புக்குழலும்
  உடலே நுந்தா மணிவிளக்காந்
தாயே யனையான் பொம்மபுரஞ்
  சார்வாய் பவம்போந் தவமாமே. 2

தவமாம் பெறும்பே றதனைநீ
  தாரா விடிலென் செய்கேனே
அவமாம் பவசா கரமதனில்
  அழுந்திச் சுழலு மடியேற்குச்
சிவயோ கங்கொண் டிலகுபர
  தேவே தெவிட்டாக் கனிரசமே
தவமார் மயில மீதுறையுந்
  தாதா சரணந் தருவாயே. 3

வாயால் நின்னைப் பலவாறு
  வழுத்து மடியார் வந்திறைஞ்சத்
தாயாய்க் கருணை யினிதுபுரி
  தலைவா திரைக்குட் டிரும்பாகி

ஓயா துழன்றே னினிச்சகிக்க
வொண்ணேன் தாள்தா மரையருள்வாய்
காயா வளஞ்சேர் மயிலமுறை
கருணைக் கடலே குணக்குன்றே. 4

குணமில் பிறவிக் கடல்கடந்து
கொடியே னுய்யும் நாளென்றோ
மணமார் கூந்தற் கோதையர்க்கு
வண்டுண் டயரு மருள்தவிர்வான்
பணைசூழ் தேமாஞ் சோலையின்கீழ்ப்
பண்பார் மஞ்ஞை நடநவிலும்
கணநா தர்கள்சூழ் மயிலம்வளர்
கண்ணே யின்னே கருணைசெய்யே. 5

செய்ய கரும்பின் சுவைரசமே
தெவிட்டா வின்ப வருட்கனியே
வெய்ய வினையேற் கருள்பரனே
வேதா வரிதற் கரியவனே
தையன் மயல்தீர்த் தடியேற்குன்
தாட்டா மரைகள் தலைக்களித்திட்டு
உய்யக் கருணை சுரந்திடுவாய்
உயர்வார் மயிலைப் பதியோயே. 6

பதிநா யகமே சிவக்கொழுந்தே
பணிந்து சிரமேற் கரங்குவித்துத்
துதியா தென்னே வாணாள்நான்
தொலைத்து மருண்டு திரிகின்றேன்
நதிசேர் சடையு மான்மழுவும்
நாடா தெவருங் கரந்துவந்த
விதிமா லரிய வருள்புரிவாய்
விமலா மயில விழுப்பொருளே. 7

விழுவார் தொழுவார் மெய்விதிர்த்து
வியந்து வியந்துன் திருநாமம்
எழுவா ரத்தாற் றோத்திரஞ்செய்து
எந்தா யெனக்கண் ணீர்சொரிய

வழுவா ராகி யுனதுபத
மடைந்துய்ந் தார்க ளடியர்போல்லேன்
வழுவார் மடவார் மயலழுந்தி
மகிழ்ந்தே திரிந்தின் றஞ்சினனே. 8

அஞ்சு பொறியின் வயமாகி
யந்தோ விந்த வகிலமதிற்
பஞ்சு படும்பா டியான்படவும்
பண்டே யெழுதி விட்டனையோ
விஞ்சை மிகுந்த சனகர்முதல்
விளங்கு நால்வர்க் கருள்பரனே
மஞ்சை யுலவு மயிலம்வளர்
வாழ்வே மறையா கமப்பொருளே. 9

பொருளே தமியே னின்னருளைப்
பொருந்தி வாழா திதுகாறும்
அருளே கொண்டு சுரிகுழலார்
மயலில் வீழ்ந்து கரைகாணேன்
அருளாய் மாலுக் கரியானே
அன்பர் மனத்து ளொளியானே
பொருளார் மயிலப் பதியானே
பொய்வா தனையை மறிப்பாயே. 10

வேறு

மறிதிரை கடல்சூழ் தரணிநல் வாஞ்சையின் மாயாமே
யறிதவர் கூட்டத் தணுகின னுய்ந்திட வருள்செய்வாய்
பொறிவளர் பொம்மைய பட்டின மேவிய புகழாளா
வறிதெனை விட்டிட லின்றிங் காட்கொள வல்லானே. 11

வலபமொ டிருமென வாழ்வு மெனக்கினி வந்தீவாய்
பலகலை ஞானமு மோனமு மிகவன் பர்க்கீவோய்
குலவளை தவழ்தண் கோட்டொளிர் முத்தங் குவைபொங்கும்
அலகில் வளஞ்செறி பொம்மைய பூம்பதி யம்மானே. 12

அம்மனை யாடுக டற்றிரை போல வலைப்புண்ட
வெம்மன வானர மென்று வயப்படு மெங்கோனே
யம்மக வேந்தனும் வந்து பணிந்திட வங்கத்தால்
வம்பவிழ் சோலைகள் சூழ்மயி லப்பதி வந்தோனே. 13

வந்துயர் புங்கவர் வந்தனை செய்திட மாடெல்லாம்
துந்துமி பொங்கி முழங்கிடு மயிலைத் தொல்லோனே
கொந்தமர் தண்டலை சூழ்தரு பெரம்ம புரக்கோவே
நந்துதல் தீர வெனக்கருள் செய்திடு நாளென்றோ. 14

என்றுய ரங்கிதண் மதியிவை முக்க ணெனக்கொண்டோய்
மன்றுயர் நீடு வலாரியொ டும்பர்கள் வாழ்வெய்த
குன்றுது ளைத்தொளிர் வேற்குக னைத்தரு கோவேயென்
புன்றுய ரறமயி லப்பதி யிறையே புரவாயே. 15

புரமவை மூன்றும் பொடிபட நகையருள் பேரேறே
அரகர வென்று பணிந்து வணங்கிட வன்பீந்தே
வரமிகு மன்பர் குழாத்திடை வைத்தெனை வாழ்வித்தோய்
திரமிகு மாமயி லப்பதி மேவிய செய்யோனே. 16

செய்தவ ரெய்திடு செம்பத வேதன் சிரமொன்று
கொய்தவ வந்தகன் வீழ வுதைத்த குணக்குன்றே
செய்யமர் தண்டலை செறிமயி லப்பதி சேர்ந்தோனே
வையக மீதருள் வந்து புரிந்திடு சுகவாரி. 17

வாரிதி சூழும் பாரினி தேத்தி மகிழ்வாத
வூரிறை வற்கன் றுயர்சிவ ஞான முணர்விக்க
வாரிய னுய்வந் தாண்டுகொ ளத்த னழன்மேனி
காரியல் கண்ட னிணையடி யல்லாற் கதியுண்டோ. 18

கதிர்மிகு வேல்விழி மாதர் மயக்கிற் கடமேவு
ததியுறு மத்தென வேசுழல் நாயேன் றனையாள்வாய்
பதிபசு பாச மெனப்படு பொருளே பரிவாகச்
சதிமுறை மயில்நட மிடுமயி லப்பதி தாதாவே. 19

தாதா மூவே ழுலகு மதித்திடு தற்பரனே
வேதா வனவுரு வாகிக் காணு வேணியனே
போதா குருவடி வாய்வந் தறநெறி போதித்தே
வாதார் மனவலி நீக்கருண் மாமயி லத்தரசே. 20

### வேறு

### எழுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

அறிவதற் கரிய பிரமமே யமுதே
அளப்பருங் குமுதநா யகனைச்
செறிதரப் பிணித்த சடையனே யுயிர்க்குத்
தேரொணாத் துணைவனே யமல
வெறிமலர்க் குழலார் மருட்டிடு மருட்டில்
வெருவிடும் பேதையேன் றனக்குப்
பிறிவறக் கலந்தின் றருள்செயாய் மயிலப்
பிறங்கல்மேல் தோன்றிய பொருளே. 21

பொருளென மடவார் புல்லிழை புகாத
புணர்முலைப் போகமே வேட்டு
மருண்மனத் தவனாய் மறலிதன் பாச
வயத்தனாய்க் கலங்குமுன் னுள்வாய்
அருளனே யடியா ரகத்தினி தகலா
வப்பனே வொப்புயர் வில்லாத்
தெருளனே மயில வரைச்சிவ ஞான
தேவனே யமலநா யகனே. 22

நாயக னெவைக்கு நீயெனி லாண்ட
நண்ணுறு பொருளெவற் றினுங்கீழ்
ஆயவ னடியே னுதலா னினது
நளினமென் மலர்ப்பதம் பெறுமு
பாயமொன் றறியே னென்னையோர் பொருளாய்
ஆண்டுகொண் டம்பொன்மே ருவினும்
மீயுயர் மயிலம் விளங்கிடத் தோன்றும்
வித்தகா நற்கதி யீவாய். 23

ஈரவ னெளிருஞ் சடையுமான் மழுவு
மேழையோர் பாகமும் போர்த்த
வாரண வுரியும் பாலலோ சனமு
மறைத்தொரு புராரியே யிலிங்க
தாரணம் பரித்து மயிலம்வீற் றிருக்குந்
தன்மைமெய்ஞ் ஞானியர்க் கன்றி
நாரணன் முதலோர் காணுதற் கெளிதோ
நவிலுதி கவலைகூர் நெஞ்சே. 24

நெஞ்சமே யுனையொப் பவரெனக் கில்லை
நிகழ்த்துமென் வாய்மொழி கேட்டி
பஞ்சின்மெல் லடியார் மயலிடை யழுந்திப்
பதைக்குத னீயினி யொழிந்து
கஞ்சனுக் கரிய கழலடிப் பிரானைக்
கனிவொடு மயிலத்திற் கண்டு
செஞ்சொலா லன்னா னுணர்ந்துப தேசத்
திருமொழி கொண்டுசெய் தொண்டே. 25

செய்களார் மயிலச் செல்வனே ஞானச்
செழுஞ்சுட ரகத்தொளி ரொளியே
யுய்வழி யிதுவென் றுணர்த்திட வந்த
வொருவனே யிருவினை மருந்தே
தையனற் பரவை யிலமதிற் சந்து
சார்ந்தமெய்த் தேசிக வடிவே
மெய்யனே யெனது பவமொசித் திடுவான்
விரைந்துநீ கருணைகூர்ந் தருளே. 26

அருளனே யண்ட பிண்டமாய் நின்ற
வத்தனே சுத்தமொன் றில்லா
மருண்மனத் தவனென் றுலகினில் வழங்கும்
வழக்கறுத் தென்றனை யாள்வாய்
இருளடர்ந் துயர்ந்து வானிடத் துலாவி
யெறிகதிர் வரவினை மறிக்கும்
பொருவுத லில்லாச் சோலைசூழ் மயிலப்
புராரியே கயிலைநா யகனே. 27

கயிலைமால் வரையை யெடுத்திடுங் கொடிய
கன்மனத் தசக்கிரீ வன்றான்
பயிலுநற் சாம கீதமே யோதப்
பண்புநோக் காதுமுன் னருளு
மெயிலவிர் மயில நகர்விளக் கான
வெந்தையே யென்னுள மறமே
பயில்கின்ற ததனால் நீயருள் புரிந்து
பரிந்தெனை யாள்கசீ மானே. 28

மானினேர் விழியார் மயலிடை மயங்கி
மற்றைநன் னெறியறி யாமே
கானவர் வலையிற் பட்டிடு மான்போற்
கலங்குமெற் குயர்பத மருள்வான்
தானுவந் தருளாற் றனதுதாண் மலரென்
றலைக்களித் தின்னருள் செய்தான்
வானுளோர் பரவு மயிலமா நகரான்
மற்றிதற் கறியன்கைம் மாறே. 29

மாறுகொண் டிடுமென் மனவலி மாற்றி
மாதரால் வருந்துயர் தேற்றி
நாறுபூங் கழலை நாடின னுய்ய
நாதனே யருளநா ளெதுவோ
வாறுகொண் டிடுஞ்செஞ் சடைமுடி யுடைய
வத்தனே கத்தனே யிந்நாள்
காறும்வீண் காலங் கழித்தன னடியேன்
காளைமீ தெழுந்தருள் பொருளே. 30

வேறு

பொருளே யிருட ரவிளங் கொளியே
பொன்னே சுடர்பொங் கிடுமா மணியே
அருளே யடியார் தொழுமற் புதனே
யமுதே யெனதா ருயிரின் றுணையே
தெருளே மறைகூ றிடுதே சிகனே
சிவனே யுலகா யிதமா னிடர்தம்
மருளா ருமனத் தணுகா தவனே
மயிலா சலமே வியசிற் சுகமே. 31

சுகமே யருள்வா ரிதியே யெனையித்
துன்பே யுறவைத் தனைநீ தியிதோ
வகமே வியவற் புதசற் குருவே
யருள்செய் திடுநா ளெதுவோ வறியேன்
றகைமே வியமா தவரெப் பொழுதுந்
தறிபோ லலையா துதயங் கிமிகு
மகமே புரிமா மயிலத் திறையே
வரையா தளிசெய் திடுசற் குணனே. 32

குணமே குடியா கியகொற் றவனே
கோதார் மயலென் றொழிவித் திடுவாய்
மணமார் தருசண் பகமா வனமும்
வளர்தெங் கவிர்வா ழைகள்சா ரலுறை
வணமே வியமா மயிலத் திறையே
வருதே சிகநா யகமா தவனே
கணமே னுநினற் புதமே னிதனைக்
கண்டோர் கள்தமக் கெதுகா ணரிதே. 33

அரிதே டுறவன் றரிதா னவனே
யரனே யெனதா ருயிரின் றுணையே
கரியீ ருரிமே லணிகண் மணியே
கருதார் புரநீ றெழுநின் றவனே
நரிகூ டலினற் பரிசெய் தவனே
நல்லார் மயலென் றொழிவித் திடுவாய்
வரிவேங் கைகள்சேர் மயிலா சலமேல்
வந்தாள் குருரா யசிகா மணியே. 34

சிகரக் கிரிமா துலனு கவளர்
செல்வா வெனையின் றுபுரந் தருளாய்
தகரப் பரிகொண் டருள்சண் முகனே
சந்தா னமெனக் கொளுமைம் முகனே
நகரெங் கணுநின் றுதொழும் பதியா
நவிலும் மயிலச் சிவமா தவனே
யகரப் பொருளா யவருட் கடலே
யத்தா வெனதுள் ளுறைமெய்ப் பொருளே. 35

மெய்யோ ருளமே வியவுத் தமனே
வேதா வறிதற் கரிதா னவனே
செய்யார் மயிலா சலசிற் சுகனே
சிவனே சிவஞா னமகா முனியே
மையார் குழன்மங் கையரா சையினை
வரையா மலுழன் றிடுவெற் கருள்நீ
செய்கூர் விழிமா மகளு யகனூர்
சிரமா லைமுடித் திடிசின் மயனே, 36

மயலார் பிரபஞ் சவனந் தனிலே
மனமா மதயா னைபுகுந் துலவிக்
கயல்வேல் விழிமா தரெனுந் தளையிற்
கட்டுண் டயர்கின் றதையென் சொலுவேன்
செயல்வே றுபுரிந் திடநா னறியேன்
சிறியே னைவிடுத் திடலஞ் சலெனு
மியலார் தருமா மயிலத் திறையே
யெந்தாய் சுகவீ டருள்தே சிகனே. 37

கனமா ருநின்மா மயிலப் பதியிற்
கடையே னுறினென் மையதற் குறுமோ
சினவே லுடையா னென்றீ மைசொலிச்
செய்யே லருளென் றுமறுத் திடுமோ
வனமா தவர்தாழ்ந் துதொழுங் குருவே
வந்துற் றவர்கட் கருளுந் தருவே
அனமார் வயல்சூழ் தருபொம் மபுரத்
தனகா வெனையாண் டருளார் வலனே. 38

வலமார் மழுமா னமர்செங் கரனே
வரனே மயிலா சலவித் தகனே
கலனுர் சிரமா லையெனும் பணிவோய்
கடையே னையளித் தருண்மெய்ப் பொருளே
நலமா கவடைந் தனனின் னடியே
நவைதீ ரவென்னுள் ளுறைநற் சுடரே
பலமா தவர்சூழ்ந் துவணங் கிடுமெம்
பரனே யிருண்மா சுதுறந் தவனே. 39

துறவோர் தொழுமா மயிலா சலனே
துன்பே செயுமா தர்மயக் கதனே
யறவே யறுத்தா ளுகவன் றியுமியான்
அடையா துமடைப் பணியாற் றுதுயர்
திறமா ருநின்னே வல்பணித் திடுக
செய்யோ யுயர்தே சிகசின் மயனே
பிறவா நெறியுய்த் திடவல் லவனே
பேரா யிரனே மறைநா வலனே. 40

வேறு

அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

நாலு மறைக்கும் பதினெட்டா
நவிலும் புராண மவைதமக்குஞ்
சீலயா நிறை கமங்களுக்குந்
தெளியாச் சமய கோடிகட்குஞ்
சாலு மயற்கு நாரணற்கும்
எட்டாத் தகையோய் சற்குருவாங்
கோல மெடுத்த கனகண்ணே
கொடியே னெனையாள் பராபரனே. 41

பரன்வாழ் கூடற் பாண்டியனார்
பரிசே ரென்று கொடுத்த பொருள்
திரளாற் றிருக்கோ யிற்பணிமுற்
செய்த வாத வூரர்தமக்
கருள்வா னன்று குருந்தடியில்
அமர்ந்தோ னின்றெற் கருள்புரிய
வரமார் மயில மாநகரில்
வந்தே காட்சி தந்தனனே. 42

தந்தேர் நுடங்கு மெல்லிடையார்
மையல் சார்ந்து தவமயங்கி
அந்தோ பவசா கரம்புகுந்திட்(டு)
அலமந் துழலுங் கொடியவனி
கந்தா மரைத்தாட் புணைபற்றிக்
கதியாங் கரையார்ந் திடக்கணித்தேன்
தந்தா வளஞ்சேர் மயிலநகர்
சதுரா வெனக்கின் றருள்வாயே. 43

அருள்வா ளுகி யெழுந்தருளி
யன்று வசவ தேவனுக்குந்
தெருளார் மருள சங்கரற்குந்
தெரித்த பொருளைத் தெரிவையர்பான்
மருண்மா சடைந்த மனவலியை
மாற்றி யடியே னடையும்வணங்
கருமால் வளஞ்சேர் மயிலமமர்
கண்ணே கனகண் ணேயருளே. 44

கண்ணே கண்ணி னொளிர்பாவாய்
கடையேன் புரியும் பெரும்பிழையை
யெண்ணா தடியே னிடரனைத்து
மின்னே களைந்திட் டாண்டருள்வாய்
பண்ணார் தமிழ்கேட் டுவப்பெய்தும்
பரனே நினது செவியதனில்
தண்ணார் மயில மாநகரோய்
தகாதோ வெனது மொழிகேட்க. 45

மொழியே கேட்(டு) [ட]ங் குவப்பெய்தி
முயன்றிங் குனது பணிசெய்தும்
வழிபட் டுய்ய வகையறியா
வன்கண் ணவனாய் மறலியின்வெம்
பழிகூர் பாசப் பிணிப்பினுக்குட்
பருவா னகமே திரியுமெனைக்
கழியா தருள்கூர்ந் தாட்கொள்வாய்
கனமார் மயிலப் பதியானே. 46

பதியோ ரெல்லாந் தொழுபரனே
பரமா னந்தச் சிவக்கொழுந்தே
துதியா துனது பெரும்புகழைத்
தொலைத்தே னந்தோ வீணாள்கண்
மதிசேர் சடையா யெனதுபவ
மாறும் வண்ண மருள்புரிவாய்
துதிசேர் மயிலைச் சிவஞானத்
துறவோ யுன்ற னடைக்கலமே. 47

கலனார் மடவார் மயல்செறிந்து
கடையேன் றுயர்கூர்ந் திடலழகோ
மலமா மெனதோ ராணவத்தை
மாய்த்தே யரிய தவப்பேற்றை
நிலமே லடியே னடையவருள்
நீதந் தருளு நாளுளதோ
தலமார் மயிலச் சிவஞான
தருமப் பதியே சரண்சரணே. 48

சரணந் துதித்திங் குய்யும்வண்ந்
 தாதா வின்றெற் கருளாயேல்
மரணம் பிறப்பென் றிவைமாய்க்க
 மாட்டே னவமே மாழ்குறுவேன்
புரண மறையின் முடிப்பொருளே
 பொல்லா மணியே போற்றுமெனக்
கரணப் புரிசைச் சூழ்மயிலத்
 தையா வருள்செய் மாதவமே. 49

தவமொன் றறியே னின்சரணஞ்
 சார்ந்த வடியார் தங்குழுவின்
நவமென் பதறக் கூடியுநான்
 அறியேன் சிறியே னுதவினெனன்
பவமெவ் விதமோ வொழிந்திடுங்கண்
 பார்த்தின் றருள்நீ புரிந்திடுவாய்
சிவமென் பொருளே பொம்மபுரிச்
 செல்வா போற்றி சிவகுருவே. 50

வேறு

கட்டளைக் கலித்துறை

போற்றி யேமறை யோதிடு ஞானிகள்
 புகழுஞ் சித்த ரிருடிகள் யாவரும்
ஏத்தி யேமதிக் குள்நினை யென்றும்வைத்
 இன்ப மெய்து மெழின்மயி லப்பதி
வீற்றிருக்கு மருட்குரு ராயனே
 மெய்ய னேசிவ ஞானம காமுனி
ஆத்தி மாலை யணிந்திடு மையனே
 அடிய னேன்பவம் போக்கிடு மாதியே. 51

ஆதி யேயரு ளர்கர னேகுரு
 வாகி வந்தெனை யஞ்சலென் றண்டிடுங்
கோதி லாதசு வைக்கரும் பேயருட்
 கொண்ட லேமயி லத்திருக் குன்றனே
ஓதி நான்மறை தேடி யுணர்கிலா
 வுணர்வி னுக்குணர் வாகி யுறைதரு
சோதி யேபதி யேகதி யீந்திடுஞ்
 சுத்த மெய்ச்சிவ ஞானநல் வெள்ளமே. 52

வெள்ள வேணிப் பெருந்தகைப் பித்தனே
வேதத் தூவொளி வேயீன்ற முத்தனே
வுள்ள மெய்ப்பொருள் கண்டிடு மன்பர்பால்
ஓங்கி வாழ்மயி லாசல வித்தகா
வள்ள லேமந்திர வாதியை மீனின்வாய்
வரவ ழைத்தநற் பாலைய வண்ணலே
யெள்ளு மெண்ணெயும் போல்நின்ற வெந்தையே
யிலகு மாநட மாடிடு மீசனே. 53

ஆடி யோடி யலைகின்ற வென்மன
மாங்கு ரங்கதை யென்வய மாக்குவாய்
நாடி னெங்குங் கிடைப்பருஞ் செல்வமே
நண்ணுமென் னுளக் கண்ணுள்ள தெய்வமே
கோடி மாதவர் சூழ்மயி லாசலக்
கொற்ற வாகுரு ராயசி காமணி
தேடி யேயெளி யேற்குநின் னின்னருள்
திகழு மாறின்று வீடருள் செய்திடே. 54

வீடு தந்தருள் வித்தக நின்மல
வேத நாயக வெந்தை தயாநிதி
நீடு கால்வெளி நீரங்கி மண்ணுமாய்
நின்ற பூரண னேயருள் நீதனே
பாடு மன்பர்க் கருள்சிவ ஞானியாம்
பண்ப னேயுயர் மாமயி லாசலத்
தோடு பொம்மைய வொண்பதி யும்வளர்
ஒருவ னேசிவ னேயெண் குணத்தனே. 55

அத்த னேயம லாவரு ளாளனே
அன்பு செய்யு மடியர்க் கருள்புரி
கத்த னேகயி லாயம னேயருட்
கண்ண னேமழு வாங்குற டேறிய
சித்த னேமயி லாசல மூர்த்தியே
செல்வ னேகுரு பாலைய வள்ளலே
நித்த னேகரு ணாகரத் தெய்வமே
நீர்மை தந்தெனை யாண்டிடு மாதியே. 56

ஆதி யந்தமி லாத பெரும்பொரு
ளாகி வந்த நிராமய நிர்க்குணக்
கோதி லாவமு தேயருட் கொண்டலே
கூர்த்த மெய்யறி வோருணு மின்பமே
நீதி யேசிவ ஞானப் பெருந்தகாய்
நின்ம லாவெழில் மாமயி லாசலச்
சோதி யேபர மானந்த போதனே
துங்க மாவருள் செய்திடு மெந்தையே. 57

எந்தை யேகுரு தெய்வமு நீயலால்
ஏழை யேற்கினி யேதுமொன் றில்லையான்
மைந்த ஞெ்சிறி யேனையு மின்றுநீ
வருக வென்றருள் வாய்மலர்ந் தாளுவாய்
கந்த வேன்மகிழ் மாமயி லப்பதி
கருது பொம்மைய வண்பதி நாயினேன்
சிந்தை யுங்குடி கொண்டநற் றேசிகச்
செல்வ னேயடி சேர்பத்தர் தெய்வமே. 58

பத்தர் சித்தர்கள் பன்முனி வோர்களும்
பணிந்து நின்று பழிச்சும் பராபர
வத்த நித்தவ காரவு காரமோ(டு)
அரும காரமு மாகிய வண்ணலே
சுத்த னேநடு வட்டமார் முச்சுழி
துரிய மேல்வெளிக் கப்பால் விளங்கிய
கத்த னேகரு ணாகர னேயுயர்
கடவு ளேமயி லாசல வப்பனே. 59

அப்பர் சுந்தர ராதியர்க் கந்தநாள்
அருள்கொ டுத்த வருஞ்சிவ மேயிந்நாள்
செப்பு மோர்சிவ ஞானியெ னும்பெயர்
திகழப் பூண்டெனைத் தேடியுய் யக்கொள்வான்
இப்பு விக்க ணெழுந்தன னென்னின்மற்
றென்னை யொப்பவ ரேவரு ரைத்திடீர்
கற்ப கத்தனிக் காவிடை வாழ்வுறுங்
கடவு ளீர்புவி யீர்திசை வாசரே. 60

## வேறு

வாசா திருச்சிற் றம்பலஞ் சுப்பிரமணியத்
தீசா குருராய சிகாமணி யெந்தையோனே
தேசார் மயிலாசல தேவர்கள் தேவவென்னைக்
கூசா துவந்தே யுனதாளெனக் கொள்ளுவாயே. 61

கொள்ளா யெனையாளென வோரருட் கொண்டலேசீர்
வள்ளா லடிதா முடியார்பெற வந்தவாழ்வே
கள்ளார் மலர்ச்சோலை குலாவிடு கச்சிவந்த
தெள்ளா ரமுதே சிவஞானியென் தேசுளானே. 62

ஆனேறிவந் தன்பரை யாட்கொளு மண்டர்வாழ்வே
தேனே மறைச்செம் பொருளாகமத் தேற்றமேயெங்
கோனே மயிலாசல வாசநிற் கூவினேன்முன்
ஏனே னெனவந் தருள்செய்குவை யெம்பிரானே. 63

பிரானே மடவார் மயலேசெறி பித்தனேன்முன்
வரேனென் றிடிலின்னருள் செய்திட வாழ்வனோநான்
அராவின் றொடையங் கணவன்பரை யாளவந்த
பரானந்த நற்சோதியி தோவருட் பண்புதானே. 64

தாளே வணங்காம லிவ்வையகத் தையலாரால்
நாளே யவம்போக்கி யுழன்றன னன்றியின்றி
வாளேர் விழிவேடர் குலப்பிடி வாழ்வுகந்த
வேளே யினிதார் மயிலாசல மேயகோவே. 65

கோவாகி யிருந்தர சாளக் குறிக்ககில்லேன்
மூவா முதலே புவிவிண்ணெனு முற்றும்வானத்
தேவா திபர்சூழ் மயிலாசலத் தேவநின்றாள்
ஆவா வெனக்கற் புதநாத வருளுவாயே. 66

வாயுன் புகழ்சொல்லி வழுத்தவும் வாழ்வித் தாள்வாய்
பாயண்ட சராசர மாகிய பண்டையோனே
மீயும்பர் தொழுமயி லாசல வித்தகாநல்
தாயுங் குருவாதியு மாகிய தன்மையானே. 67

ஆனந்தம னன்ப ரீட்ட மாவலோடு
ஞானந்திகழ் நாயினேன் கூட நயந்தருட்செய்
வானந்திரி யம்புத மார்மயி லாசலம்வாழ்
தேனண்ணித ழித்துணர் மாலைத் திவளுமார்பா. 68

மாரன்விடு வன்கணை யான்மெலி வம்பனேற்குப்
பேரன்பு கொண்டுன் னருளைப்பெறு பேறுமுண்டோ
சாரங்க மிடக்கரத் தேந்து தகைமையோனே
தேரன்மயி லாசல் தேவநின் சூழ்ச்சிதானே. 69

சூழ்ச்சித்திற லார்ந்திடு கச்சிவாழ் தொல்லையோனே
சேட்சென்றுனை யெங்கணுந் தேடி திரிதலானேன்
மாட்சித்தொழும் போர்துதி செய்திடும் வள்ளியோயுன்
காட்சியெனக் கீந்தெழி லார்கதி காணநோக்கே. 70

வேறு

கலி விருத்தம்

நோக்கு றுந்தவர் நோக்கிடு நோக்கனே
காக்க ணஞ்செறி கச்சிவாழ் கத்தனே
யாக்கை யான்மெலி வேனை யருளினாற்
காக்க வேண்டுங் கடனுனக் கல்லவோ. 71

அல்லி யந்தம ரைமக ரந்தத்தால்
அல்லி யைந்த பொதும்ப ரடர்கச்சி
பல்லி யஞ்செறி பாலைய வள்ளலே
வல்லி யைந்த தன்மையன் மாற்றுவாய். 72

மாற்று மென்பவ வன்பிணி யாவையுந்
தேற்று மேசிந்தை தேரு துழல்வனை
யாற்று மன்ப ரகத்தி லகன்றிடாத்
தோற்ற மேவிய கச்சியன் றெல்கழல். 73

தொல்லை மேனாள் இயமனைத் தொண்டற்கா
வல்லல் செய்த வணிமலர்த் தாள்கொடு
பல்லி யந்தொனி கச்சிய னேபடர்
அல்லல் நீக்கி யருள்பெறச் செய்திடே. 74

பெறுவ னோவுன தாரடி யார்பெறு
மறுமை யின்பய னாகு மறைப்பொருள்
உறுவர் வாழ்கச்சி யுத்தம தேசிக
சிறுமி யர்க்குச் செயும்பணி தீர்த்தினே. 75

தீர்த்த னேகச்சி வாழ்சிவ ஞானியே
மூர்த்தி தீர்த்தந் தலமெனு மூன்றையும்
பார்த்து மூழ்கிப் பணிந்திடர் யாவையுந்
தீர்த்தி டவருள் செய்திடல் வேண்டுமே. 76

வேண்டு நின்னடி யார்மேவ லின்றியே
மீண்டு மிக்குழன் றெய்த்தன னேமியிற்
காண்டி யென்று கடைக்கணி தத்தில்பார்
காண்ட மாவளக் கச்சியென் னப்பனே. 77

அப்ப னேயரு ளாரமு தேபெருஞ்
செப்ப மார்கச்சி வாழ்சிவ ஞானியே
துப்பு மாத்துயர் தோன்மலி யாக்கையின்
வெப்ப நீக்கியொண் வீடரு ளையனே. 78

வீடு தந்தருண் மெய்க்குரு தேசிக
கோடு கண்டுயில் கோகன கத்துழிப்
பீடு சேர்கயல் பாய்ந்த னைப்பெயர்ந்
தோடு றச்செய் கயக்கச்சி யொண்மையோய் 79

ஒண்கொள் வான்செய் யுழுநர்தம் பாடலின்
திண்கொ ளோதை செவிப்பட மேலுழும்
விண்கொ ளன்னங்கண் மீனினம் போலொளிர்
தண்கொண் மாவளக் கச்சித் தலைவனே. 80

வேறு

தலைவா விடையன் றனதுன் பகல
விலைகூ வியமே டமுயிர்த் திடவே
குலையார் வயற்கச் சியிலன் றருள்கூர்
நிலமே வியசத் தியநிர்க் குணனே. 81

குணபூ தரகுந் தர்மதிக் குறையாற்
பிணமா மெனப்பீ ழையுழந் தவர்கட்
குணர்வில் பிணமா விதுவென் றுபினவ்
வணமா வருள்கச் சியின்வாழ் பதியே. 82

பதியே குருரா யபரம் பரனே
மதியே யறுமா தர்மயக் கதனுல்
இதிபோ லலெகின் றவெனக் கருடி
துதியேய் நலைவாழ்ந் திடுதூ யவனே. 83

தூய்மைக் கணமா தவர்துன் பகல்செய்
நேயப் பதியே யிறையே நினதாள்
ஈயற் குளநா ளெதுவோ வறியேன்
சேய்மைப் புகழ்சேர்ந் திடுகச் சியனே. 84

கச்சிப் பதிமே வியகண் மணியே
கொச்சைக் கடையே னடியார் குழுவை
இச்சித் தனனிற் றையெனக் கருள்தேன்
நச்சுக் கழுநீர் தொடைநா வலனே. 85

வலனே சதுமா மறையின் முடிவார்
தலனே குருவா கியசான் றவனே
கலனோர் மினுரா வலகற் றியருள்
நலனேர் புகழ்கச் சிநகர்ப் பரனே. 86

பரனே யருபா லையபா வலனே
அரனே யெனதற் புதவா னவனே
வரதா பயமார்ந் திடுசெங் கரனே
தரமார் நலைசார்ந் திடுசங் கரனே. 87

சங்கத் தடமார் தருகச் சியில்வாழ்
மங்கைக் கொருபால் தருவா யெனையாள்
தங்கச் சிரமா லைதரித் தருளுஞ்
சங்கத் தவர்சூழ் தருநா யகமே 88

அகமே வியவற் புதசர்க் குருவே
தகையார் சிவஞா னதயா பரனே
மகமே புரிகச் சியின்மா தவனே
சகமா யைதணந் தருள்சங் கரனே 89

சங்கத் தவர்சூழ் தருகச் சியனே
இங்கிப் படிமே லுழலா துனது
தங்கப் பதமென் தலைவைத் தருள்வாய்
துங்கச் சிவமே சுயசோ தியனே. 90

**வேறு**

அனமார் நடைச்சி வழியே நடத்தி
யறிகின்ற மூடர் குழுவிற்
கனமாக வுய்த்து மயலார் கடற்கொள்
கடைகெட்ட மூட மனதால்
உனதாண் மலர்க்க ணகலாது நிற்கும்
உளமெய்து நாளு முளதோ
புனமேவு கச்சி நகர்வாழு ஞான
புரையற்ற முத்த வுருவே. 91

உருவாகி வந்து குருவா யெவர்க்கு
முலகோர்க ணின்று தொழவே
மருவாகி வேதப் பொருளாக மத்து
வழியார்ந்த நீதி நெறியின்
பொருளாகி நிற்றி யெனவே யுரைத்த
புகழார்ந்த மோன வடிவே
திருமேவு பொம்ம புரஞான தேவ
தெளிவார் தெளிந்த முதலே. 92

முத்திக்கு நல்ல வித்தாய் விளங்கி
மும்மூர்த்தி யாய முனைவோய்
சித்திக்கு நல்ல சத்தான தெய்வ
சித்தாகி நின்ற செயலோய்
தித்திக்கு நல்ல தேனூர்ந்த செல்வத்
தேசார்ந்த பொம்ம புரியோய்
முத்திக்கு நல்ல வழியீ தெனச்சொல்
முதியோ யெவர்க்கு முதலே. 93

முதலான வேத முடிவேயோர் பொம்ம
புரமேவி வாழு முனியே
இதமான பாத முடியேற வேற்றி
யெஞ்ஞான்று முந்த னருளே

பதகீத மான வடியர்க்கு நல்கிப்
பரமாகி நின்ற பழையோய்
இதமான தேது மிலையாகி நின்ற
வெனையேன்று கொள்ளு மிறையே. 94

இறையே யெவர்க்கு மெளிதாக ஞான
மினிதாய் வழங்கு குருவே
மறையா லெவர்க்கு முறையே வணங்கும்
வகைசற்று மென்னு ளறியேன்
நறையார் மலர்ப்பொன் னடிபூவின் மேவ
நாயேன் றனக்கு நவிலாய்
முறையா றெரிக்கு முதலே யெவைக்கு
முடிவே யென்னப்ப மயிலா. 95

என்கண்ணி டத்தி னகலாது நின்ற
வெந்தா யெவர்க்கு மினியோய்
வண்கண்ணர் காண வரிதாகி நின்று
மனமா சறுத்த முதலே
பொன்கண்ணி னின்ற வொளிபோலு நல்ல
போதின் மணக்கு மணமே
மன்கண்ணி னின்ற வொளியார்ந்த பொம்ம
புரமேவு மெங்க ளிறையே. 96

இறைவாழ்தென் றில்லை யணியார் மடத்துள்
இனிதா யமர்ந்து மிங்கு
முறைவாயென் னெஞ்சிற் சிவஞானி யாகி
யுருவா யமர்ந்த குருவே
பொறைதா னடைந்த பெரியோ ருரைத்த
பொருடான் கொலாமை யதனை
யறைவா யஞ்சீவ காருண்ய மொன்று
மருளாகி நின்ற வரசே. 97

அரசே நன்மாட மதுரா புரத்து
மரிதான காஞ்சி நகருங்
கரவா திருந்த காளத்தி யுஞ்சொல்
கண்டார் களிக்கு மடமாங்

குரவா யமர்ந்த குருவே யெனக்குள்
ஒளிவான ஞான குருவே
பரவும் படிக்கு ளினிதான வீசு
வரபத்தி யான பரனே. 98

பரனே சிறந்த சேயூர் வளங்கொள்
பனையூ ருயர்ந்த வருணை
வரனே தரும்வண் டிருவே ரகஞ்செல்
வாழ்வேத குன்ற மரிய
பரமா யமர்ந்த பழனிப் பதிக்குள்
பண்பா யமர்ந்த மடமாங்
குரமான பாச வைராக்கிய மொன்று
முருவாகி நின்ற பொருளே. 99

பொருளே யென்னுள்ள மடமாங் ககற்று
பொருளே யுனக்கு ளிடமாய்
அருளா யமர்ந்த மடமாங் கனேக
மாகப் பொலிந்த வரசே
மருளாங் கொழிக்கு மருளல்ல மன்றன்
மாயாப் பிரதாப முறநற்
பொருளாகு நல்ல சிவஞான மாகிப்
பொலிவாய் நிறைந்த பூவே. 100

(வாழி) [வாழ்த்து]

**எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்**

மருவளரு மலர்ப்பொழில்கண் மலியும் பொம்ம
மாநகரத் தினில்வதிந்த வண்மை ஞானம்
பெருகுதகை சிவஞான பால யப்பேர்
பெற்றபதிற் றுப்பத்தந் தாதி தன்னை
இருநிலத்தி லிதைப்படித்தோர் கேட்டோர் வாழி
யெழிலிரவி யிமகரன்விண் முகிலும் வாழி
அருமறையோர் பூதலத்துள் ளுயிரும் வாழி
அடியவர்கள் திருக்கூட்ட மமர்ந்து வாழி.

பாலையசுவாமிகள் பதிற்றுப்பத் தந்தாதி முற்றும்.

# 11. சித்திர வெண்பா வந்தாதி

அத்தி முகனே அறுமுகவன் துணைவா
வெற்றி விநாயகனே விண்ணப்பம்——நித்(தியமாய்) [த்தம்]
பரத்தி லடையாமல் பாழ்பொன் றுழு
மறித்தெட்டுட் சேரவே வை. 1

வைப்பா யிருதயத்தில் மாருத் தியானமது
செப்பாப் பொருளாந் திருவடியை—முப்பாழ்
கடந்தபொருள் மூலங் காரணமா மா(ய்)க்கினைமேல்
அடர்ந்துநடங் கண்டிருநீ யங்(கே) [கு]. 2

அங்கே யிருந்து அசையாமல் வாசிதனை
சங்குநா தத்திறுக்கித் தாக்கவே——யெங்கும்
பரவு மமிர்தம் பரத்தி னடிசேர்ந்து
யுருகிமன மங்கே யுறை. 3

உறைத்துப் பரத்தடியி லோங்கி யெழுப்பிப்
பிறித்தவரைக் கூடினாற் பேசுவார்——நிறைத்து
அடக்கமவு னத்தயிக் கம்பிரம மாய்
நடக்கு நடமிதுவே நாடு. 4

நாடு நடமிதுவே நாட்டஞ் சுழிமுனைமேல்
கூடுந் துவாதேசங் கோணாமல்——ஆடும்
அரியபொருள் காட்டு மன்னியமு முன்னியமாய்த்
தெரியுமவர் சிந்தையிலே சேர்ந்து. 5

சேரு மிருதலையிற் சிறந்தவொளி மாணிக்க
மாரு மறியா ரரவுதனை——நேரா
யிருபத்தோ ராயிரத்தோ டறுநூறுந் தானே
பருவத்தா லும்முயங்கிப் பார். 6

பார்க்குமிட முக்கோணம் படர்தீயு மோர்தலையா
மார்க்குந் தெரியாது வம்பரத்தில்——சேர்க்குங்கால்
வாசி யறிந்து மருவுமிட மோதலையாற்
றேசிகனார் சொன்னார் திறம். 7

திறத்திறமாய் நின்ற திருவடியிற் சேர்ந்துருகிக்
குறைத்ததலை நாலிற் கூடினல்——மறைத்தவிருள்
வெருவி யோடு யிரவிமதி யொன்றாய்க்
குருவடியைக் காட்டுங் குறி. 8

குறித்த வுபதேசங் கூடுவார் மெய்ஞ்ஞானி
மறித்த மவுன மருவார்——திறத்தைக்கேள்
இருவினையுஞ் சஞ்சிதமு மெரித்து வெளியாக்கித்
திருவடியிற் சேருஞ் செயல். 9

செயலறிந்து யீராறிற் சேருங் கலைநான்கு
மயல்பெரிய சோமனுள் வளருமே——இயல்பாகச்
சோடசமாய் நின்று சொரியு மமுதகலை
நாடகமாம் பாதமே நம்பு. 10

நம்பியிரு நெஞ்சமே நாடுமிடம் வேறில்லைச்
செம்பவளப் பொற்பாதஞ் சேரவே——உம்பர்
காணு நடனங் கருத்திற் றெரிசனமாந்
தோணுமற் றோணுஞ் சுடர். 11

சுடர்கொடி பானுமதி சூழ்ந்துகலந் தொன்றாய்ப்
படர்தீப மாகியே பத்துஞ்—சடமதுவா
யிருநான்கு நான்கு யேகமா யொன்றாகக்
குருபாதங் கண்டவரே கூறு. 12

குறியான முப்பாழ் கூடி முதற்பாழில்
பறியாமல் நின்று பதியாகும்——நெறியாய்ப்
பத்துநூ றுயிரமாய்ப் பாங்காய் வளருமே
சித்தெட்டு மான திறம். 13

திறமான காயந் திரண்ட நடுவணையி
லுறவாகுஞ் சோதிமுடி யுன்னியே——திறமா
யிருந்தவிடங் காய யிறவாம லேயிருக்கு
மறிந்ததனை யுற்றே யறி. 14

அறியா மறையை யறியும் பெரியோர்கள்
குறிசேரு மாக்கினையிற் கூடியே——நெறியா
யிருந்த யிடங்காட்டு மிறந்த விடமவிடம்
அருந்தவற்று ரிறவா ரறி. 15

அறிய அறிவே ஆக்கி யழித்துவிடுங்
குறியார் குலத்தில் கூடிடார்——(பிறி)பிறிந்து
வோடி யலுத்தலுத்து வொன்றுமற் போனவரைத்
தேடிப்பார்த் திறுகச் சேர். 16

சேர நிதிவிகற்பஞ் சேர்ந்த சமாதியிலே
யாரு மடைவ தரிதாகும்——பூரை
போகாமற் கூடிப் புணர்ந்தாரைப் பூசிக்கச்
சாகா ரொருநாளுந் தான். 17

தானந்த மான தலமறிந்து நோக்கினன்
மோனந்த வாரியிலே மூழ்குவார்——ஆன
பனிரண்டு மோடிப் பகலிரவாய் நிற்கு
மினியவரைக் காட்டி யிரு. 18

இருப்பா ரிரவுபகல் இல்லா விடத்தில்
தரிப்பார் மலர்நாலுஞ் சாத்துவார்——கருப்பாய்ந்த
ஊன்வீடு சென்றுபுகா ருத்தமர்கள் பெற்றநிலை
தானமுத முண்ட தவம். 19

தவத்தோ ருடல்கோவில் தங்குமுயிர் சிவனும்
அவத்தோ ரறியா ரவர்பெருமை——சிவத்தில்
அயிக்கியபா ரானந்த ரென்றுமழியாத வீடுபெற்றால்
மயக்க மறுத்த மனம். 20

மனமே செனனமர ணத்திலே நுழைத்து
மனமே வழிதிகைத்து மாண்டதே——மனமே
அற்றதலை பொருதி அவர்சில ளுயிருந்து
சித்தசித்தி யாகுஞ் சிவம். 21

சிவமான சித்து சேருமனக் குளிகை
யுவமான மில்லா வொளிபெறுமே——கவனங்
கொண்டிடத்திற் கொண்டுபோய்க் கூட்டியருள் [சேர்க்குங்
கண்டிடத்திற் கண்டு களி. 22

களியாத மூடர் கரையேற மாட்டார்
அளிசேரும் பொற்பாத மண்டிடார்——வெளிபாய்ந்து
முப்பாழுந் தாண்டி முடிந்த பொருளறிந்தால்
தப்பாது மந்திரத்தின் சார்பு. 23

சார்பாகு மோரெழுத்துச் சஞ்சிதத்தை வேராறுக்குங்
கோர்வாம் பிராரத்தக் குறைதீர்க்குஞ்—சோர்பான
ஆகாமி யம்போக்கு மறுகுருனி சேரும்
வேகாத தலையின் விதி. 24

விதிமாலுந் தேடி மேலா முடியடியைக்
கதிசேரப் பார்த்தவர்கள் காணார்——துதிசெய்து
வொன்றாகக் காண்பார்க ளூமையெழுத் துணர்ந்தோர்
கண்டார் திருவடியின் காட்சி. 25

காட்சிகண்ட முத்தர் கதிர்மதியு மக்கினியு
மாட்சிபெற்ற வீட்டி லடைகுவார்——சூட்சிகொள
அம்பரத்தி லம்பரங்கொண் டாடி யிடுநடன
மும்பர்களுங் காணாத வுண்மை. 26

உண்மைகண்ட நெஞ்சே யோடி யொடுங்குவதுந்
தன்மைபடும் பரத்தின் றாள்சேர்ந்து——செம்மை
யசையா திருந்து வதிலைக் கியமாகி
யிசையோ டிருப்பதுவே மெய். 27

மெய்யாப் பிரணவத்தை மேவிப் புணர்வோர்க்கு
அய்யமறுத் தானந்த மாக்குமே——உய்ய
மனஞ்சென் றடைந்து மாறாத் தியானமா
யினஞ்சேர்ந்து நின்ற யிடம். 28

இடமான மூலத் தெழுந்த சுடராகிக்
குடவயற னின்ற குறைகேளு——அடைய
விழுங்கி வரும்பிறவி வேராறுத்து விட்டான்
அழுங்காத அத்தி முகன். 29

(குருவே துணை.)

சித்திர வெண்பா வந்தாதி முற்றும்.

அந்தாதிக் கொத்து; இரண்டாம் பாகம் முற்றும்.

# திருவரங்கத் தந்தாதி உரை: பிற்சேர்க்கை, திருத்தங்கள்

பக்கம் : 73.

[காப்பு : என்ற தலைப்பின் கீழ் உள்ள " ஓராழி வெய்யவன் " என்னும் பாட்டுக்கு உரை.]

"என்றது' ஒற்றை வண்டித் தேரையுடைய சூரியன் சுற்றப்பட்ட உலகமேழும் விசுவாசமாகித் தோத்திரம் பண்ணுகின்ற சீரங்கத்தையுடைய பெருமாள் கறுத்த கடல் போலும் நிறத்தையுடையவன் அந்தாதியாகிய பிரபந்தத்தைக் காப்பாரைச் சொல்லுமிடத்துச் சிறப்புப் பொருந்தின மோதிரத்தையுடைய அழகிய கையிலே தங்கப் பிரம்பு கொண்ட சேனைமுதலியாரு முனையுடைய சக்கரமுஞ் சங்குஞ் சிறந்த தடியும் வாளும் வில்லும் என்றவாறு.

வண்டி..............தேரென்றதும் காப்பாரைக் காப்பென்றது மாகுபெயர். மண்ணுலகேழுந் தொழுமெனவே விண்ணுலகேழுந் தொழுமெனவாம், 'ஒருமொழி யொழிதன் னினங் கொளற் குறித்' தென்பதினால். சிறப்புடைய மோதிரமாவது முத்திரை மோதிரம். 'பைம்பொ னாழி தொட்டான் படை காட்டி' என்றார் சிந்தாமணியிலும்.

அந்தாதியாவன முற்பாட்டினுடைய கடையிற் பாட்டது எழுத்தாலுஞ் சீராலு மசையாலு மடியாலும் தொடையிற் சீராலும் அந்தாதிக்கப்படும். அவற்று ளிந்தப் பிரபந்தம் எழுத்து முதலிய மூன்றந்தாதியும் வந்தவாறு ஆங்காங் குணர்க. இது நிலைவாழ்த்து; அலங்காரஞ் சொற்பின் வருநிலை".

| பக்கம் | வரி | |
|---|---|---|
| 75 | 29. | " பூவிலிருக்கும் இடையாகிய நூலையுடைய " என்று வாசிக்க. |
| 77 | 21. | " வட்டான முலையுங் கிளிபோலு மினிய " என்று இருக்க வேண்டும். |
| ,, | 23. | " காரிய மாகிற நரகத்தை விலகுகிறவ ராவீர் " எனப் படிக்கலாம். |
| ,, | 26. | " அஞ்சாயுதத்தை யுடையவன் திருவடியிலே தெண்டன் பண்ணுவீராக " |

78 10. "நாங்களரங்கனுன் சரணுக் கன்றிக் காண்கைக்கு" என்று படிக்கலாம்.

„ 25. "அம்மையுடையவனே! என்பதற்குப் பின்பு, "மகரவடிவான குண்டலத்தையுடையவனே" என்று சேர்த்துப் படிக்கவும்.

79 12. "இரப்பான துன்பத்தை யிடபத்தனை சிவனுக்குத் தீர்த்தவனே" என்று வாசிக்க.

80 16. "தயிர்போலு மருளடையும் நோ வாறுகிலே னென முடிக்க."

„ 24. "துவாரகையிலுள்ள வரசித் தேவிமா ரெட்டுத் தேவியருடைய இதயத்தைக் கிரகிக்கும்"

„ 29. "சே(ற்)[த்து]'மாவி லகப்பட்ட வீயைப்போல"

„ 33. "கெற்ப கோளகையிலே"

82 15. "சென்ம" மென்றதனை நீக்கிப் படிக்க.

„ 18. 'அரியது கேண்மோ' வெனவும் வருவன காண்க.

83 27. "சே (ற்) [த்] மா பகைத்து கண்களொடுங் கானனமா முன்னே" என்று வாசிக்க.

84 பாட்டு 20 இதன் பொருள்:

**"நந்த மரங்கனை—என்பது'**

கெட மாராமர மேழும் ஒலியாநின்ற பெரிய கடல் பயப்பட வம்புவிட்ட நம்முடைய சீரங்க நாதனை நினைவாயாக; மனமே! பாவங்கெடும்; முழங்கையிலே வளை யமையாநின்ற பெண்களால் வரு மயக்கந்தீரும். வரும் நற்கதி யான பரமாகாயம். உறவான அவ்விடத்தில் எல்லார்க்கும் நரகம் வாராதென்றவாறு.

நெஞ்சே யரங்கனைப்பற்று, வினை நையும், மயம் போம்; நமக்கு நற்கதியான வின்பம் வரும்; அனைவருக்கு நரகில்லை யெனமுடிக்க.

நமக்கு என வருவிக்க (த்) தமரனைவர்க்கும் அவரிருக்கு மிடத்து நரகில்லை யென்க. நரகம் என்பது துன்பக்குறிப்பு."

85 22. "என்னுடைய மனத்தையுடையா னென்ற வாறு ; எழுவாய் பயனிலே செவ்வு ; கோபித்தவ னரங்கனெனக் காண்க. வாணனை யங்கை யில்லாதபடி செற்றவென மொழி மாறுக."

87 2. விசாரியாதவன் ; என்பதற்குமேல் " தண்மை யானவன் " எனச் சேர்க்கவும்.

89 32. 'வரசர் சுற்றப்'

91 3. "அடியார் மனத்து ஆவாகனத்தரென மொழி மாற்றுக. பறவை யென்றது கெருடன் ; அவரால் பிறருக்கு உபகாரமென்பது குறிப்பு.

91 18. "பரிசுத்தையும்" எனப் படிக்க.

92 17. "உருகாத செய்யை ஆயர் மனையிலே"

93 2. "எழுவாய் பயனிலே செவ்வு ; உலகீர்! அவனுஞ் சமுத்திரங் கடவான் "

94 21. "ஆனேனென ஆக்கம் வருவிக்க" என்பதற்கு மேல் " ஆசை மிகுதியால் என்னைப் பிறப்பி யாமல் வீடுதா என்பது குறிப்பு ; கடலெனப் பொதுப்படக் கூறாது, உப்புக் கடலைக் கூறினது, காட்சிப் பொருளாற் கருத்துப் பொருட்குவமை கூறுதல் வழக்கு" என்று சேர்த்துப் படிக்க.

99 பாட்டு 47 இதன் பொருள் :

"பதக்க மலங்கலணி—என்பது,

பதக்க மாபரணமும் மாலையும் அணிந்த மார்வையுடையவனே ! காவேரியின் மூழ்கித் தேவலோக நீரான கெங்கை பாவத்தைத் தீர்க்குஞ் சீரங்கத்தை யுடைய(வ)ானே ! ஆனை யான் வெள்ளானையைச் சிங்காரித்து நடத்துவித்தோனை விந்திரனும், சிவனும், பிரமனுங் காண வெளியாய் ! உன்னுடைய

பாத தாமரையைத் தாசனுன என்னுடைய தலையிலே எப்போது தருவது, என்றவாறு. பாலிப்ப தென்றெனை மாறுக. மற்ற முறை நின்றபடி. எழு(மை)மையும், என்முன் வந்து அவாநிலையுங் கூட்டுக. இந்நாள் அருள்வ னென்க. கூறினுந் தேறுவ னென்பது குறிப்பு. விரைவாய் அருள் என முடிக்குதலு மாம்."

111. 14 'இ ர ா ம ா னு ச மிதனுளடங்கும்' ? என்று படிக்கலாம்.

122. 8 'சே (ற்) [த்] மாவும்' என வாசிக்கலாம்.

„ 24. 'ஒரு எழுத்து'

124. 8 "அகங்காரமு மகானுமான" என்று படிக்கவும்.

125. 31 ஆம் வரி தொடக்கத்திலிருந்து 37 ஆம் வரி முடிவுவரை உள்ளவற்றை [ ] இவ்வாறன கோடுகளுக்கிடையில் அமைத்துப் படிக்கவும்.

# செய்யுள் முதற்குறிப்பு

## அகராதி

[எண் : பக்கவெண்]


அகங்கரை யார்கலி 66
அகத்திய னஞ்சக் 65
அகமேவிய 357
அகலத் தனிமை 48
அகலாக் கொடிய 52
அங்கஞ்சத்திக்கு 45
அங்காக்கைக்கே 123
அங்காப் பரவரை 41
அங்கே யிருந்து 361
அஞ்சக் கரத்தலை 84
அஞ்சத்தனத்த 70
அஞ்ச வீட்டம் 154
அஞ்சு பொறியின் 342
அடியவ ராகவும் 102
அடியவரை யுவந் 30
அடைக்கலந் தவராம 218
அடைக்கலந் 83
அடைந்த பேரொளி 5
அடையப்பன் 87
அடையலா ணுகரிகக் 66
அடையும் வெம்மிடி 321
அடையைவ ரைவர் 33
அடைவு செயும் 159
அணியத்தந் 48
அணியளிக ளிசை 221
அணைந்திடு மனே 155
அண்டமடங்கலை 100
அண்டர் மா 310
அண்ண னுற்ற 180
அத்தத்தை 66
அத்தனு மன்புள 102
அத்தனே யமலா 352
அத்தனை யத்தனை 44
அத்தனை வேதனை 85
அத்தி முகனே 361
அத்தியின்திர ளடர்ந்து 237
அத்தியை யறலில் 211
அத்திரங் காயமென 94
அந்தக ராசலம் 106
அந்தகரைக் கடிந்தார் 69
அந்தப் புரத்திட 44
அப்பர் சுந்தர ராதியர்க் 353
அப்பனே 356
அமர வரம்பையில் 89
அமரரை மால் 48
அமரவாண னுயிரங் 229
அமலா தனிகைவரை 54
அமுதிலுற்ற 325
அம்பண வடிவாய் 210
அம்பலத்தன் 44
அம்புவிலங்கை 91
அம்மனை யாடு 342
அய்ய மின்றிச் 16
அய்யானந் 64
அரங்காது வார்கணை 82
அரசே நன்மாட 359
அரசே பழனியில் 18
அரிக்கிடை யானயன் 44
அரிதத்தினைக் 69
அரிதப் புரமேனி 332
அரிதமார்வளை 217
அரிதா மரைக்கணம் 82
அரிதேடுற 347
அரிய செங்நெற்குலை 255
அரியயன் றேடும் 14
அரவத் தத்தைக் 45
அரவலர் வேணியன் 24
அரலை சூழ்ந்த 309
அரிய கந்தருவச் 283
அரிவா ணுதற்கண் 19
அருக்கன லங்கைச் 43
அருச்சுனப் 281
அருண்மிகு 149
அருநெறி 277
அருமையா யவதரித்திடு 230
அரும்பாக வதரிக்கும் 116
அருவாயசம் 33
அருவிசொரி 172
அருவிபாய் 299
அருளத்தனைப் 1
அருளளித் தெப்போது 58
அருளனே 345
அருளிலே நனைந்தேன் 16
அருள் பொழியுநற் 45

அருள்வானுகி 349
அரைக்கலை வேலை 68
அலமருங் கோகனகஞ் 48
அலரி நனந்தலை 62
அலையும் வஞ்சமு 5
அல்லியந்த மரை 355
அவலக் குறும்பி 53
அழுந்தினேன் 7
அளிகண் மன்னு 236
அளித்தாரை 44
அளியனந்தங் 65
அளியு லாவு 307
அறிந்து தணிகாசலன் 49
அறிய அறிவே 363
அறியா மறையை 362
அறிவதற் கரிய 344
அறிவது சிவத் 7
அறுகுதலைப்பெய் 107
அறை குகையிற் 56
அற்புதமெய்ச் 339
அனங்கனை 45
அனந்தனந் 67
அனமார் நடைச்சி 358
அனிலத் துறவிக் 333
அன்பரவையினைப் 35
அன்புகொள் 280
அன்புல வடியார் 209
அன்றரசர் 157
அன்றுலமருந் 45
அன்று பூதரங் 11
அன்றே யடைய 123
ஆகமதிக்கு 101
ஆகமரத்த 48
ஆகுவ தீதென் 10
ஆக்கணங் 64
ஆக்குவித்தார் 88
ஆங்கார மாமின்னைத் 123
ஆசு கவிக்கு 107
ஆசையனந்தந் 66
ஆடியோடி 352
ஆடுமுன்னீர் 116
ஆண்டாலங் காயக் 70
ஆதவனந்தரம் 86
ஆதன் மீண்டொரு 182
ஆதியந்த மிலாத 353
ஆதியே 351
ஆமா றளிப்பதனை 52
ஆமையி னுகஞ் 48
ஆய்ந்தறிவினர் 145
ஆவாகனத்த ரடியார் 90
ஆரணங் கற்றிடச் 64
ஆரணங் கௌத்துவங் 265
ஆர ணத்தினுக் 263
ஆரத்த னங்கணற் 48
ஆரத்த னங்கரும் 101
ஆரமு தமரர்க் 278
ஆராதனஞ் செய்து 85
ஆரியர்க ளந்தணர் 279
ஆரும் பரவுஞ் 72
ஆரபகைஞ ராரினியர் 56
ஆரவரைக் கும்பனுக்கு 25
ஆலுமொரு 57
ஆளாக வந்த 90
ஆளாவாய் 5
ஆறக்கர 45
ஆறத்த னந்தன 64
ஆன தன்மையில் 4
ஆனந்தம னன்பரினீட்டம் 355
ஆனந்த மான 33
ஆனமருங் கொடியான் 44
ஆனவரம்பை 29
ஆனன மஞ்சுங் 48
ஆனனனுகத் 65
ஆனேறி வந்தன்பரை 354
ஆன்றமை சார் 33
இசைத் தெனைக் 68
இடமான மூலத் 364
இடராக வந்தெனை 93
இடர்வந்த 20
இடவமலைக்கும் 91
இடுவதே யிகழ்ச்சி 15
இடைக்கால னன்றுய்ய 47
இதழியார் சடிலனே 252
இதுநலமோ 50
இந்தா ரிதழி 32
இந்திரியத் 70
இரங்க வலைக்கும் 40
இரவரவிந்தன் 40
இரவலராகி 31
இரவியைக் குடையாய்ச் 136
இருக்கந்த 34
இருக்கு மந்தத்தில் 92

| | |
|---|---|
| இருளுந் துறக்கமும் | 38 |
| இலங்கயிலைத் | 40 |
| இலங்கையி லாதரன் | 85 |
| இளமுருகா | 24 |
| இருந்தை யிலங்க | 92 |
| இருப்ப யோகச் | 17 |
| இருப்பாரிரவு | 363 |
| இருவினையும் | 8 |
| இளவேலணி | 18 |
| இறும்புயிகு | 249 |
| இறையே யெவர்க்கு | 359 |
| இறைவாழ்தென் | 359 |
| இனனந்தி யங்கி | 61 |
| இன்பம் பொருந்தி | 37 |
| இன்றனந் தானங் | 71 |
| இன்ன லைந்தரு | 174 |
| ஈரவ னொளிருஞ் | 344 |
| உகமுடிவில் | 139 |
| உடையநனைப் | 9 |
| உணர்ந்தொருக்காற் | 47 |
| உண்மை கண்ட நெஞ்சே | 20 |
| உண்மை குரவோர் | 251 |
| உதித்த கிருபை | 3 |
| உயர்தவத்தி னாலிவ் | 51 |
| உயர் வானவர்க் | 296 |
| உயித்தியராவின் | 26 |
| உரமுறைத் திருவி நாத | 232 |
| உருவாகி வந்து | 358 |
| உரைப்பதற்கு | 51 |
| உரையாய் | 3 |
| உலகினிருமைப் | 49 |
| உவக்குமெழில் | 55 |
| உளமானது | 18 |
| உள்ளத் தியானந் | 23 |
| உறைத்துப் | 361 |
| உறைமூற் சிலையாற் | 272 |
| உறையு ளருளெந்தை | 248 |
| உற்ற சதுமாமறை | 133 |
| உற்ற புகழார் | 195 |
| உன்னா நற்குன் | 57 |
| ஊர்தகைப் பெறு | 183 |
| எண்ணமுறு நெஞ்சகமே | 55 |
| எந்தையா யன்னையாய் | 256 |
| எந்தை யென்னையு | 17 |
| எந்தையே குரு | 353 |
| எம்பிரானே | 9 |
| எல்லா வளமு மிசைத் | 49 |
| எவ்விடமு மின்புகழை | 292 |
| எழுத வரிய | 35 |
| எனக்குன் னிருபதத்தை | 53 |
| என்கண்ணிடத்தி | 359 |
| என்பரிவை | 56 |
| என்று நற்றவர் | 297 |
| என்றுய ரங்கி | 343 |
| என்ன பயன் | 50 |
| ஏகன மானன | 24 |
| ஏதிக்க னாகிலை | 68 |
| ஏந்தலா யுதித்தே | 139 |
| ஏறுங் கரியும் | 96 |
| ஏற்றமுந் | 3 |
| ஏற்றாத வம்பலங் | 40 |
| ஐய மருந்திவை | 83 |
| ஐய மற்றினி | 312 |
| ஐயனுக்கு | 6 |
| ஒண்கொள் வான்செய் | 356 |
| ஒண்ணா தடங்குஞ் | 4 |
| ஒண்ணிலா | 297 |
| ஒழியென் பரிவை | 31 |
| ஓடம் விட்ட | 314 |
| ஓதிமஞ் சங்கம் | 43 |
| ஓது மமரர்க்கா | 51 |
| ஓம்புந் தணிகைவரை | 53 |
| ஓயாமற் பற்பலவா | 55 |
| ஓரா தெழுதினேன் | 12 |
| ஓராழி வெய்யவன் | 73 |
| கச்சிப்பதி | 357 |
| கஞ்சத்த னாக்கரி | 63 |
| கடக வம்பர | 276 |
| கடக்கரிதா | 14 |
| கடமலிக் குஞ்சரம் | 142 |
| கடமலை யத்த | 43 |
| கடம்பொழிவெங் | 133 |
| கடலினிற் றரங்கங் | 147 |
| கடலைக் கடைந்து | 19 |
| கடவிகட | 36 |
| கடனந்தி னாகத் | 62 |
| கடனுனக் கன்றே | 57 |
| கடிகொண் மச்சாவதார | 257 |
| கடிக்கயி றுனயக் | 6 |
| கடிக்கும் பணிநஞ்சு | 95 |
| கட்டு விட்டுமெய் | 17 |
| கணக்காக நாய்கள் | 62 |

கணக்கி லிருவினையாற் 58
கணங்கொள் படர் 56
கண்ட கனாவின் 95
கண்ட நவத்தை 46
கண்டங் கரியான் 318
கண்டலங் காரளகங் 111
கண்டலங் கானற் 65
கண்டனந் தந்தஞ் 41
கண்டிகைப் புனை 251
கண்டிகை யத்திரி 69
கண்டுலக வாழ்வைக் 52
கண்டேன் சிவகிரியைச் 8
கண்ணனந் தங்கரன் 64
கண்ணாறு மாறுங் 26
கண்ணா னந்தத்துளி 46
கண்ணிய புட்கரற் 151
கண்ணே கண்ணினொளிர் 350
கதமு டித்திகழ் 256
கதியெமக்கு 52
கதிர்மிகு வேல்விழி 343
கத்தனேயருட் 151
கந்த நாயகன் 17
கந்த நானக் 151
கந்தரங் கானந்தனிற் 62
கந்தரணிச்செறி 301
கந்தரந்துயிற் 215
கந்தனஞ் சங்கங் 63
கந்தன் றமையனற் 39
கந்தா வெமக்குதவி 21
கமலங் குவளை 109
கம்பத்துடை யதிரக் 57
கயவனம் பானந்துடன் 46
கயிலைமால் வரையை 345
கரத்தரிக் கங்கணங் 60
கரந்தந்தந் தந்திர 68
கரவா மலகம் 47
கரனாந் தகனெழிற் 69
கரனே யடலின் 317
கரனை வீட்டிய 225
கராசல மூலமெனு 34
கராத்திரி யாலைச்சிலை 46
கரிசிலரி வதனமுங் 162
கரிசிற்பதி நூற்றெட்டின் 202
கருதருங்கடன் 185
கருதிற் றணிகைக் 53
கருத்தமராது 46
கருத்தனங் 26
கருத்தே விதனந் 34
கரும்பாலை 30
கர்த்தனே 179
கலக மனந்தன 43
கலக்கூழை 94
கலபிக் கிடை 328
கலனார் மடவார் 350
கலையாதரிக்கும் 41
கல்லாரம் போது 41
கவமென மந்தர 243
களியாத மூடர் 363
கள்ளியங் கானனை 71
கற்கரி யாயிரஞ் 69
கற்க வணங்கை 46
கற்றடங் காரகங் 64
கற்றினக் குழுவைக் 233
கற்றின மாயவை 108
கனக சிகர 24
கனகத் தலமுறை 303
கனகத் திலயம் 41
கனகந் தரத்தினஞ் 68
கனகவி மானம் 108
கனக னாகங் 215
கனமாருமின் 348
கனிக்காவி 41
கனிந்துருகி 54
கனியிலை சருகுங் 16
கன்றிக் கலங்கலை 63
காங்கைய னம்மை 26
காட்சி கண்ட 364
காத்தன னங்கியர்க் 63
காணக்கிடைக்குமோ 51
காணிக்கை 70
காணுகிலீ ரந்தோ 56
காத லைப்புவி 262
காதலை யானின்றனக் 62
காதலை வாரிமண் 112
காதிக் கரியனைய 64
காமனத்தால் 109
காயங் கலைய 63
காரக்க னஞ்சினை 63
கார னருண 34
காரனையானை 63
காராரும் பொழின் 199
காரானந் திக்கக் 70

காரிகை யாதிய 65
காரிய ரத்தன் 70
காலருந்தும் புயங் 41
காலனஞ்சம் 29
காவல ராயுல 26
காவலனிப் 302
காவியம் போதிக்கு 41
கிரிவரு மைக்கணி 46
கீரங்கனி 70
குணக்கதி காரன் 35
குணபூதர குந்தர் 357
குணமான கந்தகிரி 20
குணமிலங்கிய 184
குணமில் பிறவிக் 341
குணமேகுடி 347
குமரன் றிருமகன் 12
குருதந்தை 57
குருமந்தன் 24
குவலயஞ் சூழ்கடல் 119
குளப்படி செய்யடிகிற் 119
குறித்த வுபதேசங் 3
குறியான 362
குறியானைச் செங்கண் 120
கூரணி மான 25
கூற விரும்பலை 30
கேடில்லாச் 8
கேழல ராளஞ் 69
கைக்குஞ்சரம் 78
கைத்தங்கிய 317
கைத்தந்தி நேயர் 65
கைப்பிடித்துக் 142
கையிலே கயிறெடுத்துப் 10
கையிலே வெண்ணெய் 7
கொண்ட பாற்கடல் 187
கொள்ளாயெனை 354
கொற்ற வருணனை 59
கொற்ற விசயனுக் 166
கோகனகத் 295
கோட்டானைச் 25
கோதரித்திடு 183
கோமலிப்பிறை 231
கோமளச் சந்ததி 312
கோயிற் புறஞ் சூழ்ந்து 7
கோலமாகி 234
கோவாகியிருந் தரசாளக் 354
கோவேந் தனெழிற் 319
சகதலத்திற் 217
சக்கரஞ் சக்கரங் 67
சங்கங் கலங்கலை 33
சங்கங் களங்கமுனிக் 60
சங்கத்தடமார் 357
சங்கத் தமரர் 115
சங்கத்தவர் 358
சங்க முகந்த 45
சங்கரியக்க 61
சடிலங் கடந்தந்த 68
சத்திக் கரத்த னகச் 60
சத்திபாகன் 200
சத்தியத் தன்மய லற்ற 25
சத்திரங் காளங் 70
சந்தத் தனத் 61
சந்த வலம்புரி 28
சந்தவனஞ் சூழ் 00
சந்தனந் தாதலர் 65
சந்திர னுகந்தென் 68
சயந்தரும் பரிதி 212
சயமலர்க்கண் 322
சரக்கணங் காரளகர் 67
சரணந் துதித்திங் 351
சரணென் றடை 274
சரவண லோசன 25
சரிதங்கை 69
சலஞ்சலஞ் 65
சலந்தர னுகந் 60
சலம் பயந்தான் 45
சாகைக்குந் தத்துத் 114
சாரங்கஞ் 60
சாரு மிருவினைகள் 54
சார்கதியைக் 50
சார்பாகு மோரெழுத்து 364
சாறுமுன தடியார் 58
சாற்று மிடமும் 50
சிகரக்கிரி 347
சிகரசங் காரர் 71
சிக்கத் தனங்க டிறக்கின்ற 62
சிதம்பர வாதி 40
சித்தத்தை 40
சித்தறை யாரத்தனே 66
சிந்தனை யாகத் 59
சிந்தா குலமுய்ய 124
சிந்து வனைக்குழை 39
சிவமான சித்து 363

சிறையடர் 286
சிற்றம் பலத்தை 41
சினத்தாசை 29
சீதரன் பூமகள் 73
சீரார் சுவவு 268
சீரார் பொம்மபுரத்து 339
சீர்தந்த 24
சீர்திகழ் 179
சீர்பெறு மூலகுளோர்கள் 337
சீர்மேவு தொண்டர் 126
சுகமேது வந்த 50
சுகமேயருள் 346
சுடர் கொடி 362
சுடர் மௌலித் 223
சுரதத் துவகை 33
சூழைந்து வேடர் 52
சூழ்ச்சித்திற லார்ந்திடு 355
செங்குவளை 32
செஞ்சித் தவிக்கும் 29
செந்தாதியா னந்தணர்க் 71
செப்புந்தன் 49
செம்மலாயுத ஞகி 140
செம்மை யுற்ற 327
செயக் கந்தன் 36
செயமேவு 268
செயலறிந்து 362
செயலைக் கணங் 66
செய்களார் மயிலச் 345
செய்தவ ரெய்திடு 343
செய்தற் கரை 29
செய்யகடன் 154
செய்ய கருணைப் 205
செய்ய கரும்பின் 341
செய்ய துப்பு 300
செய்யவளை 74
செய்யவள் 194
செய்யாள் வசிக்குதடச் 293
செய்வளை 27
செல்வரை யோதன 40
செறிமதியஞ் 220
சென்மந் தரங்கம் 97
சேதாரங் காரகஞ் 71
சேய்வடிவு 156
சேர நிருவிகற்பஞ் 363
சேருமிருதலையிற் 361
சையம்புய 320
சொல்லருங் கடல் 198
சொல்லு மாதர 188
சொல்லும் தணிகைச் 51
சொல்லுவீர் ஞான 7
சோதி புள்ளரசின் 232
சோதியனே 135
சோதியுரு வாகி 167
தகமைப் பரவுஞ் 204
தகர னலங்க 61
தகவி லாக 216
தக்கமலங்கட்டளை 45
தக்க னகத்தினடல் 61
தகையிலைக் கண்டகர் 67
தங்கச் சினகர 62
தங்கந் தனங்கள் 59
தங்கமேனி 289
தங்கவம்பர 323
தடித்துங்களை 25
தத்து வந்து 16
தந்தத்தை யாரஞ் 65
தந்த மரிக்கும் 47
தந்த மலைக்கு 75
தந்தறிந்த 141
தந்தனஞ் சங்கை 60
தந்தனை வற்றும் 304
தந்திடையாரைப் 224
தந்தேர் நுடங்கு 349
தமமிலாமனப் 181
தம்பமாட் டுதித்து 299
தரங்கனந்தார 60
தரணியனைய 61
தரமொய்ச்செறி 329
தரிக்கனந் தங்கலை 61
தருக் காவலா 76
தருசிரம்பிய 226
தருவா ரிருசரணந் 18
தலையலங்கு 297
தலையிலங்காபுரஞ் 77
தலைவா விடையன் 356
தவத்தோ ருடல் 3-3
தவமாம் பெறும் 340
தவமொன் 351
தவராக வக்கணை 112
தழைபத்திரச் 292
தளராக் கதிநிறை 61
தனக்கடங் 67

| | | | |
|---|---|---|---|
| தனக்கா வணங்கினர் | 46 | திறத்தத்தை | 24 |
| தனக் கிரங் | 71 | திறத்திறமாய் | 362 |
| தனதா கறு | 24 | திறமான | 362 |
| தனத நகரினை | 223 | தினகரனந்த | 59 |
| தனத்தலங்கார | 59 | தினகரனூர் | 96 |
| தனத்தன் | 154 | தீத்தகை யானச்சி | 66 |
| தனமடந்தை | 216 | தீரத் தரங்கப் | 124 |
| தனமாதர் | 75 | தீரவுவணன் | 251 |
| தனமிலங்கு மடவார் | 238 | தீர்த்தனே | 356 |
| தனையனை யானறங்களை | 67 | துரந்தலை | 28 |
| தாணின்றி | 161 | துலங்காதவரந் | 31 |
| தாணுவென நின்றைதரவு | 58 | துணையாக | 10 |
| தாதா மூவேழுலகு | 343 | துறவோர் | 348 |
| தாதா வடியிணை | 12 | துன்னரம்பைமேல் | 259 |
| தாதிவர்ந்த | 262 | தூய்மைக்கண | 357 |
| தாமரைத் தவிசார்ந்தொளி | 216 | தெய்வப் புலமைத் | 37 |
| தாமரை மாத்திரை | 114 | தென்னயன் | 72 |
| தாமே தனிமுதலாய்ச் | 8 | தென்னவன் | 35 |
| தாம்பிர வத்திர | 25 | தேக்கா ரகினிறை | 68 |
| தாம்பிறவி | 50 | தேக்கின் மிடற்றுக | 190 |
| தாயாகித் தந்தையாய்த் | 54 | தேக்கின் மிடற் | 292 |
| தாரணி தானவன் | 76 | தேசிகன் வடிவாய்ச் | 15 |
| தாரணியைப் | 132 | தேமருவருக்கை | 155 |
| தாரா கணமண் | 113 | தேமலர்ச்செறி | 252 |
| தாளத் தனத்தத்தை | 77 | தேயத் தியங்கி | 62 |
| தாளே வணங்காமலிவ் | 354 | தேவரு மூவரும் | 9 |
| தானந்தமான | 363 | தேறன் மன்னிய | 227 |
| தானந்தியாகம் | 113 | தையலர் வார்தனச் | 256 |
| தானவரை | 51 | தொடங்கினே னவனருளைப் | 11 |
| தானெனும் | 4 | தொலைவிலாவிரு | 308 |
| தான்புரியுமெவ் | 50 | தொழுதிடுஞ் சுனிதி | 185 |
| திகிரியெனும் | 131 | தொல்லை மேனு ளியமனைத் | 355 |
| திங்கள் தவழ் | 336 | தோற்ற சமணேரைத் | 8 |
| திண்டிறல் தசானனனை | 247 | தோற்றிய காலை | 127 |
| திண்ணியவளைத் | 158 | நகமுண்டகம் | 118 |
| தித்திக்கத் தேயென | 71 | நங்காயங் | 67 |
| திரம்போக | 31 | நண்ணியம் | 34 |
| திருகாலை யம்புய | 39 | நண்ணுதற் கரும் | 290 |
| திருக்கா விரிக்கும் | 96 | நந்தமரங்களை | 84 |
| திருக்குமரன் | 27 | நந்தன னந்தன | 69 |
| திருக்குள வனலனை | 27 | நந்தைப்புரை | 301 |
| திருக்கையஞ் | 27 | நம்பியிரு | 362 |
| திருத்துடை யார்புனை | 33 | நரகந்தரம்புவி | 84 |
| திருநாண் மடந்தை | 39 | நரை மாத்திரை | 28 |
| திருமாலை யாண்டான் | 73 | நல்லனஞ்சார் | 67 |
| திருவரங்கா | 74 | நவமுலாவுவட | 236 |

| | |
|---|---|
| நற்ற வருக்கையா | 47 |
| நன்றக்கர மெட்டினிலே | 335 |
| நன்றி யனந்தம் | 31 |
| நன்று நன்றுநீ | 5 |
| நாகத் தலனம் | 302 |
| நாகமீது | 261 |
| நாகமு மாகமு | 37 |
| நாடு நடமிதுவே | 361 |
| நாடும் புவிபுனல்தீ | 54 |
| நாட்டகத்தே | 67 |
| நாத வானவர் | 253 |
| நாதனே யரு | 176 |
| நாதனே | 301 |
| நாதா திருத்தணிகை | 55 |
| நாயக னெவைக்கு | 344 |
| நாயகனே | 8 |
| நாயகன் | 14 |
| நாரணனே | 222 |
| நாரமுள் | 293 |
| நாலுமறைக்கும் | 349 |
| நாவுயிருங் | 13 |
| நானென்றுங் | 56 |
| நிகழ்த்துந் தணிகை | 50 |
| நிசமாகிய | 11 |
| நித்திலனனங் | 68 |
| நிலங்கா லெரிவிண் | 203 |
| நிலவலர் | 31 |
| நிலைநின்ற | 19 |
| நினையாரினை யகனே | 69 |
| நினைவா யுணர்வாய் | 55 |
| நின்ற திகம்பர | 13 |
| நின்றவன் | 27 |
| நீதகரை யும்பர்க் | 29 |
| நீரார் சலசத் | 201 |
| நீருங்களை | 31 |
| நெஞ்சமேயுனை | 345 |
| நெஞ்சறிய | 156 |
| நேசமொடு | 192 |
| நேசித்த சொல் | 18 |
| நேமனமுடன் | 158 |
| நேரப் பெறுவதற்குன் | 55 |
| நோக்குறுந்தவர் | 355 |
| பகலவனைப் புரை | 239 |
| பகலுமிரவும் | 55 |
| படநாகத் தந்தரமீதிற் | 99 |
| படைசூழ சுரேசரை | 2 |
| பணவாளரவின் | 125 |
| பணமுலாவரி | 228 |
| பணியிலங்கு | 322 |
| பணியு மன்பர்க் | 56 |
| பண்டாலங்காய | 26 |
| பதக்கமலங்கள் | 97 |
| பதஞ்சலிக்கும் | 42 |
| பதமுதவும் | 246 |
| பதமென | 306 |
| பதி நாயகமே | 341 |
| பதியே குருராய | 357 |
| பதியோரெல்லாங் | 350 |
| பதவி தந்த | 16 |
| பத்தர்சித்தர்கள் | 353 |
| பரதமா மயிலா | 15 |
| பரமபதம் | 8 |
| பரவிய கதிரெறி | 241 |
| பரவையி லன்னகட் | 100 |
| பரனே சரவணேற்பவனே | 2 |
| பரனே சிறந்த | 360 |
| பரனே முனங் | 170 |
| பரனே யரு | 357 |
| பரன்வாழ் கூடற் | 349 |
| பரவத்தன மிசை | 316 |
| பரவை யணை | 270 |
| பரிந்தெனை நீ | 55 |
| பரிமள மலிந்த | 171 |
| பரியங்கடல் | 315 |
| பரிவோ டளவை | 202 |
| பருமனச் சுமன | 285 |
| பவமலை யுருவா | 15 |
| பவளவரைக் | 24 |
| பறந்தந்தரந்தனிற் | 28 |
| பாணிச்சடை | 17 |
| பாதகங் கைக்கும் | 99 |
| பாயருத்திரைப் | 178 |
| பாய் மரத்திலிட்ட | 9 |
| பாரங் கரம் | 27 |
| பாரமுதா மெவ்விடத்தும் | 57 |
| பாரமல் நீ யிப்படி | 51 |
| பாரில் வாழ்க்கையும் | 17 |
| பார்க்குமிட முக்கோணம் | 361 |
| பார்த்திவத்திலுன் | 295 |
| பார்வனம் | 35 |
| பாலநவ்வியைப் | 311 |
| பால ளக்கரிற் | 136 |

பாலன்முறைக் காய்ச் 58
பாலே மொழியிழை 12
பாவைக்கு 19
பானத் தரியயன் 42
பானிற வம்பணிலம் 245
பிரசநனி 173
பிராணதத்துவனே 6
பிரானே மடவார் 354
புகர்முக மயிராபதம் 208
புகலிடமும் 10
புகழப் பணியக் 35
புங்கமுனி 191
புதிய நற்பூவே 282
புயலென நிலவிய 244
புரமவை 343
புரிமுகத்தில் 320
புரிமுகத்திற் 222
புரியினுட னிறைஞ்சு 190
புரியே ராழித்தவர் 269
புருவதனு 174
புலம்பக ராகிய 30
புறவதை யுளித்தோன் 147
புனக்கவலை 28
பூரணத்திலே 6
பூவா முயனுங் 340
பெருமாங் கன்னி 3
பெருமான் றணிகைப் 50
பெரும்படி தன்னிற் 30
பெருவ ரைப்புரைக் 260
பெறவே யழிவில்லா 18
பெறுதற் கரிய 271
பெறுவரந்தனை 187
பெறுவனே
பேறுலவு 194
பையிலத்தி மூளை 98
பொங்கு கடலினலை 128
பொயிராவண 26
பொருண் மன்னிய 274
பொருதுந் தரங்கக் 206
பொரு தொருவருக் 172
பொருவடி வேலன் 29
பொருளென மடவார் 344
பொருளே தமியேன் 342
பொருளே யிருடீர 346
பொருளே யென் 360
பொன்மருவு 128
போக்கு வரவும் 2
போதிருக்கு நான் 284
போற்றித் தணிகைப் 52
போற்றியே 351
போற்றும் ஞான 258
மகந்தக்கன் 32
மகரந்த காதலை 103
மங்கள வியம் 193
மஞ்சங் கவலை 30
மஞ்சுதுயிலும் 204
மடவார் மயற்கண் 206
மணியும் மனவும் 273
மணிவாசற் றூங்க 110
மணவாள ரரவிந்தை 73
மணிவிளக்கைச் 7
மதிக்க வலைப்புண்ட 80
மதியினுலோ 49
மதியினிமைப் போதும் 51
மயக்கதி ரெறிக்கும் 282
மயமஞ்சு 330
மயலார் பிரபஞ்ச 348
மயிற் பரியான் 1
மருங்காளை 42
மருவண்டருத 30
மருவமரு நினதிண்டைக் 163
மருவளரு மலர்ப் 360
மருவரு மலர்த் 225
மலரவண்மருவு 213
மலருந்திமேல் 110
மலர்வாய் பொழில் 52
மலையத்தனை 39
மலையாற் றலைமிகும் 32
மல்லன்மலர்ச் 167
மழிசையின் மேவிய 242
மறவஞ்சி 31
மறிதிரை கடல் 342
மற்கடந்தாவ 43
மனமுனை யுவக்க 253
மனமே செனன 363
மனமே பிரவஞ்ச 53
மனமேயினி 18
மனம் வாவியின்முளை 241
மனவுமின் 280
மனையந்தக நல்கு 43
மன்ற நிருபர் 168
மன்றலார் குரற் 219

| | |
|---|---|
| மன்ருடி யானந்த | 42 |
| மன்னகி மிசைத் | 246 |
| மன்னுபுகழ் | 165 |
| மாண்புபெறத் | 53 |
| மாதங்கத் தானை | 79 |
| மாதம் பத்துக் | 105 |
| மாதவர் போற்றும் | 294 |
| மாதவி வருக்கை | 250 |
| மாதிரக் குரலோயுமுன் | 264 |
| மாதிரத் தரு | 153 |
| மாதிரமனைய | 214 |
| மாநில முண்டுமிழ் | 243 |
| மாந்த ருக்கள் | 186 |
| மாமருவு | 267 |
| மாயடவி தனின் | 221 |
| மாயனைக் கமைச் | 313 |
| மாயவலகை | 219 |
| மாயவுழை | 164 |
| மாயனே யடியார் | 143 |
| மாயாதவர் தலைவா | 118 |
| மாயாதவர் | 315 |
| மாயையைப் | 298 |
| மாரன்விடுவன் | 355 |
| மாவி யருந்திசை | 309 |
| மாலெயிற் கண் | 175 |
| மாலைக் கல்லார | 81 |
| மாலை மிகிக்குஞ் | 42 |
| மாலையுறழ்க் | 129 |
| மாலை வீக்கியே | 287 |
| மாவடுக் கண்டனை | 43 |
| மாறன் பராங்கதி | 73 |
| மாறு கொண்டிடுமென் | 346 |
| மாற்று மென்பவ | 355 |
| மானத்து வண்டல் | 122 |
| மாணு கவரு | 117 |
| மானிடராக | 81 |
| மானினேர் | 346 |
| மானெனும் | 7 |
| மிகத் தானவர் | 36 |
| மின்னற் சடலஞ் | 271 |
| மின்னேர் நுசுப்பு | 207 |
| மீளியுடனே | 163 |
| மீதலத்து | 299 |
| முகத்தவல்லி | 6 |
| முகிலினந் தவழ | 146 |
| முகிணகை பசுங்கழை | 170 |
| முகுந்த வென்றுனது | 325 |
| முதலாய சவுந்தரி | 21 |
| முதலான வேத | 358 |
| முதலினிடையிற் | 54 |
| முதலைவெண் | 145 |
| முதனுகர் வாழச் | 30 |
| முத்திக்கு நல்ல | 358 |
| முருகுச் செறிதண் | 334 |
| முன்பந் தனைதவிலா | 32 |
| முன்னவனு நீயாய் | 51 |
| மெய்யாப் | 364 |
| மெய்யிற் பிறவியி | 12 |
| மெய்யோருள | 347 |
| மேகந்தவழ் | 17 |
| மேதினிக்குளின் | 285 |
| மேருவை வலமா | 14 |
| மேவு முப்புரி | 5 |
| மேவு மக்கரம் | 288 |
| மேவும் மறையோர்க் | 331 |
| மேவலாருக்கும் | 17 |
| மைக்கண்டனைய | 44 |
| மொழியே கேட்டுங் | 350 |
| மொழிவன்னி | 33 |
| யானைக் கண்டங்கரி | 59 |
| வகைதுகை யோராது | 58 |
| வசிபஞ்ச வசிச் | 327 |
| வடமலை தென்மலை | 106 |
| வடம்பணி பூண்ட | 26 |
| வணங்கடியார்தம் | 25 |
| வணங்கரியான் | 111 |
| வணநிலாவு | 152 |
| வண்டமருங் குழலாய் | 47 |
| வண்டாருஞ் | 36 |
| வண்ணங் கலிவஞ்சி | 117 |
| வண்ணமாட முறை | 218 |
| வந்தமரர் | 196 |
| வந்தம ராமுழுத் | 42 |
| வந்தயர்த்தும் | 153 |
| வந்தனை யேற்றனை | 79 |
| வந்து பிறந்துழலு | 54 |
| வந்துயர் புங்கவர் | 343 |
| வம்பர்புரி | 55 |
| வப்பவிழ்க்கும் | 139 |
| வயங்குமணி | 134 |
| வரிசிறை ஞிமிறு | 240 |
| வருந்துவரைப் பட்ட | 80 |

| | | | |
|---|---|---|---|
| வருமாதவ னன்று | 47 | வாராயென | 57 |
| வரும்பத்தரை | 36 | வாரிதி சூழும் | 343 |
| வரும் பருந்தும் | 27 | வாரிநிகராகு | 251 |
| வரைநிகர்த் தியலார் | 229 | வாரிமிசை யஞ்சசி | 247 |
| வரைகுழற் | 159 | வாரியற்றன | 152 |
| வரைபலப் பல | 137 | வாரும் பிறைமதி | 11 |
| வரையரையன் | 34 | வாழைவான் கமுகு | 239 |
| வரையாழி வண்ணர் | 103 | வாழ்வினைச் சதமெனும்படி | 4 |
| வரைவி லரிவை | 32 | வாழ்வினைச் சிறப்பென்று | 144 |
| வலபமொ டிருமென | 342 | வானந்தியா னயனங் | 34 |
| வலமார் மழு | 348 | வானரம் பைக்குவை | 43 |
| வலனே சதுமறை | 357 | வானாடு தேவர் | 28 |
| வல்லமை யிருந்தென்ன | 20 | வானிச் சகுனிக் | 332 |
| வல்லனே | 181 | விடத் தேரை | 121 |
| வழியென் றறி | 18 | விடம் படாதினிய | 20 |
| வளங்கொண்ட | 52 | விடையின் மிசை | 248 |
| வளைக்குழை யானந்தி | 39 | விண்ணனைக் | 300 |
| வள்ளலே | 179 | விண்ணுறழ்க் | 308 |
| வனத்துச் சிலம்பி | 120 | விதிமாலுந்தேடி | 364 |
| வனப்புற்ற கத்தன் | 47 | வித்துருமத் | 305 |
| வனமேவு | 316 | விரிபுவன மிசை | 169 |
| வனைகழற் சனகன் | 210 | விரும்புவதுள தொன்று | 208 |
| வன்னி சோலை | 254 | விலங்க லனந்தம் | 24 |
| வாகைக் குமரன் | 28 | விழுங்கூன் றசைச் | 122 |
| வாசாதிருச் | 354 | விழுவார் தொழுவார் | 341 |
| வாசுகிக் கடமாக | 288 | விளங்குமதி | 130 |
| வாமன வுருவாம் | 213 | விளித்த கடம் | 160 |
| வாமனைக் கனகப்புரி | 138 | விளித்த பொங்கடி | 326 |
| வாயால் நின்னைப் | 340 | விறல் வேலுடைக் | 57 |
| வாயுன் புகழ் | 354 | வீடு தந்தருண் | 356 |
| வாயே துதிக்க | 3 | வீடு தந்தருள் | 352 |
| வாயே மயில | 340 | வீணி லேபல | 16 |
| வாய்க்கு மரிக்கும் | 42 | வீமனைத் தெறெனக் | 235 |
| வாய்ந்திடு பிறங்கு | 157 | வீரவும் பலன் | 277 |
| வாய்புதைத்துக் | 53 | வெஞ்சினங் | 28 |
| வாரண மெனுமற் | 149 | வெயிலரைக் | 23 |
| வாரதே கருமம் | 6 | வெயில் வாகனத்தன் | 34 |
| வாரமம்பிகைக் | 296 | வெலசங் களையுற | 29 |
| வாரமே சிறிது | 324 | வெள்ள வேணிப் | 352 |
| வாராக வாமனனே | 104 | வேட வனிதை | 32 |

| | |
|---|---|
| வேண்ட லொன்றுயான் | 176 |
| வேண்டு நின்னடியார் | 356 |
| வேத முதல்வா | 2 |
| வேதனத்துறு | 150 |
| வேதனை விஞ்சிய | 13 |
| வேந்தனே கடப்ப | 7 |
| வேலனை மந்திர | 13 |
| வேளைவந்தடி | 4 |
| வைகுந்தம் போருகம் | 105 |
| வைகுந் தனையுந் | 47 |
| வைத்தந்த | 319 |
| வைத்தலை வேலை | 42 |
| வைப்பா யிருதயத்தில் | 361 |
| வையகத்தினிலுத்து | 227 |
| வையக மதிற்புகழும் | 189 |
| வையகம் புகழறம் | 254 |
| வையங்கதிர் | 27 |
| வையம் புகழ்பொய்கை | 73 |
| வையம் பெய்தெழு | 305 |
| வையயிற்கண் | 220 |


Nuri Press, Ltd., Madras.13,

# பிழையுந் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 11 | வெழுத் | வெளுத் |
| 23 | 3 | வெயில்வரைக் | வெயிலவரைக் |
| ,, | 4 | பயில்வரைக் | பயிலவரைக் |
| ,, | 5 | யயில்வரைக் | யயிலவரைக் |
| ,, | 6 | மயில்வரைக் | மயிலவரைக் |
| 73 | 17 | பெருமான் | பெருமாள் |
| 78 | 3 | தலையிலங்காதரம் | தலையிலங்காபுரம் |
| 79 | 15 | யுவந்தாறருளிலவை | யுவந்தாற்றுளில் வை |
| ,, | 24 | பிடவை | "புடைவை" என்றிருக்கலாம் |
| 80 | 9 | நினைவான் | நினைவான |
| 81 | 28 | பிறத்தலரிது | பிறக்கவரிது |
| 83 | 11 | வழுதப்பனே | வழுத[வ]ப்பனே |
| ,, | 23 | யாகம் | பாகம் |
| 85 | 2 | நீங்கிக் | நீங்கக் |
| 87 | 25 | தரங்க | தாங்க |
| ,, | 26 | தன்மை தென்பது | தன்மைய தென்பது |
| 88 | 14 | னரக | னகர |
| 89 | 4 | அறிவென்றூர் | ஆரறிவென்றூர் |
| 91 | 29 | பரிசுத்தையு | பரிசுத்தையும் |
| 95 | 14 | சத்திய | சத்தியம்; |
| 96 | 12 | தீர்காற் | தீக்காற் |
| 104 | 11 | சொல்லேனனெ | சொல்லேனென |
| ,, | 12 | முடிக்கத் | முடிக்க |
| 109 | 13 | கண்களன் | கண்களென் |
| ,, | 16 | குவளை றெண்டரா | குவளையுண்டான் றெண்டரா |
| ,, | 18 | பூவுங் | பூவும் |
| ,, | 21 | மசிழ்ச்சி | மகிழ்ச்சி |
| ,, | 29 | மின்னுதியுடன | மின்னுதியுடன் |
| ,, | 33 | தானனக்குங் | தானளக்குங் |
| 110 | 16 | மெசெரித் | மெய்செரித் |
| 111 | 8 | வார்த்தையான் | வார்த்தையான |
| ,, | 19 | டாகன் | டாகனன் |
| ,, | 32 | கவரிதழ் | கவிரிதழ் |
| ,, | 16 | வானரவு | வாளரவு |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 112 | 4 | உதடு | உதடும் |
| ,, | 11 | மயக்கத் | மயக்கந் |
| ,, | 13 | வைத்துண் | வைத்துண்டு |
| ,, | 24 | குரங்குகன் | குரங்குகள் |
| 113 | 3 | வக்கணி | வக்கணை |
| 122 | 24 | ஒத்து | ஒரு |
| 123 | 19 | யாரறியா | யாரறிஞ |
| ,, | 24 | காட்டிலேன் | காட்டிலே |
| 125 | 2 | மலை | அலை |
| ,, | 9 | என்றூர். பிறரும் | என்றூர் பிறரும். |
| 127 | 2 | லடிலாசிரிய | லடியாசிரிய |
| 143 | 1 | திருக்ககடன் | திருக்கடன் |
| 149 | 19 | கோஷ்ட | கோஷ |
| 165 | 15 | பதைத்த | படைத்த |
| 199 | 2 | திருமழிசை | 8 திருமழிசை |
| ,, | 4 | பாரங்குசர் | பராங்குசர் |
| 203 | 16 | லெண்ணீர் | லெரிவிண் |
| 208 | 26 | நீதி | நிதி |
| 267 | 13 | குருவை | குருகை |
| 115 | 8 | தன்னமை யானவரும் | தன்னடிமை யானவரும் |
| 121 | 7 | சுபமாகுஞ் | சுகமாகுஞ் |